# மீண்டும் ஜீவனோடு

பாகம் – 3




சகோ. யூஜின் பர்ன்ஸ்

# மீண்டும்

# ஜீவனோடு

பாகம் – 3

சகோ. யூஜின் பிரின்ஸ்

*"என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்." (சங்கீதம் 27:10)*

# அத்தியாயம் – 24

ஃபிரெட்டின் வீட்டிற்கு அவனுடைய அம்மாவை அழைத்து வருவதற்காக லெவ், ஹான்ஸை ஏற்பாடுசெய்திருந்தான். க்ரெட்ச் க்ருபருக்கும், அவருடைய மகனிற்கும் இடையிலான முதல் சந்திப்பானது, தர்மசங்கடத்தையே இருவருக்கும் ஏற்படுத்தியது. தனது மகனை அணைக்க வேண்டுமா அல்லது "ஹலோ" என்று மட்டும் கூறினால் போதுமா என்பதை அறியாதவராக, கதவுகளுக்கு அருகில் கண்களில் கண்ணீர் வழிந்தோட, தனது மகனுக்கு முன்பாக அவர் நின்றுகொண்டிருந்தார். ஃபிரெட் கைகளைத் தனது தாயிடமாக நீட்டினார் மற்றும் அவரது கண்கள், அவரது தாயினுடைய கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தன. பின்பு குனிந்து தரையையே பார்த்தவாறும், தனது தாயின் கைகளைப் பிடித்தவாறும் நின்றுகொண்டிருந்தார்.

"க்ரெட்சன் உள்ளே வாருங்கள்" என்று அந்தச் சூழ்நிலையில் இருந்து அவர்களை விடுவிக்க எண்ணி, அவரை வீட்டிற்குள் அழைத்துச் செல்வதற்காக லெவ் இடையில் பேசினான்.

"ஹலோ நன்றி" என்று க்ரெட்சன் பதிலளித்தார். லெவ் அவர்களை சமையலறையில் இருந்த மேசைக்கு அழைத்துச்சென்றான். கட்டுப்படுத்த இயலாத உணர்ச்சிப் போராட்டங்கள் நிறைந்த கணங்கள் மத்தியில் அவரால் பேசமுடியாமல் இருந்தபோதிலும், இடையிடையே உயிர்த்தெழுதலின் தேநீரைச் சிறிது குடித்தவாறு க்ரெட்சன், ஃபிரெட்டிடம் தன் இருதயத்தில் இருந்ததை மனம் திறந்து பேசினார்.

"நான் உனக்கு நிறைய வலிகளையும், துன்பத்தையும் கொடுத்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். உன்னைக் கருவில் கலைக்காது, பெற்றெடுக்க வேண்டும் என்று நான் எடுத்த அந்த ஒரு முடிவிற்காக மட்டுமே நான் வருத்தப்படவில்லை" என்று க்ரெட்சன் கூறினார்.

ஃபிரெட்டின் தந்தை தன்னை விட்டுப் பிரிந்த பிற்பாடு, அவரது வாழ்வில் தொடர்ந்து நடந்த போராட்டங்களையும், விவாகரத்தினால் உண்டான பயத்தைப் பொருட்படுத்தாது குழந்தையைப் பெற்றெடுப்பதில் அவருக்கு இருந்த மன உறுதியையும் பற்றி விளக்கினார். அவருடைய தாய் மற்றும் தந்தையின் அறிவுரையை எதிர்த்து க்ரெட்சன் கல்லூரியிலிருந்து வெளியேறினார். அவருக்கு ஒரு மதுபானக் கடையில், பணிப்பெண் வேலை கிடைத்தது. குழந்தை பிறந்த பிறகு அவரால் அந்த வேலையையும் தக்கவைத்துக்கொள்ள இயலவில்லை. அதனால் அவர் தான் குடியிருந்த வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

"உதவுவதற்கு யாரும் இல்லாமலும், எங்குச் செல்வது என்று தெரியாமலும் நான் தெருவில் நின்றுகொண்டிருந்தேன். அப்போதுதான், நான் ஒரு கடிதம் எழுதி உன்னையும், அந்தக் கடிதத்தையும் ஓர் அனாதை இல்லத்தின் வாசலில் போட்டேன். அந்தக் கடிதத்தில் என்னுடைய நிலைமையையும், என்னால் முடியும் தருவாயில் உன்னை அழைப்பதற்கு வருவதாகவும் குறிப்பிட்டிருந்தேன். ஏதாவது விபரீதம் நடந்தாலோ அல்லது என்னால் வர இயலாது போய்விட்டாலோ, அந்தக் கடித்ததை உன்னிடம் கொடுக்குமாறும், நான் அவர்களிடம் கேட்டிருந்தேன். ஆனால் என்னால் ஒருபோதும் உன்னிடம் திரும்பிவர முடியாமலேயே போய்விட்டது" என்றார்.

"எந்தக் கடிதமும் நான் பெற்றுக்கொள்ளவில்லை" என்று மேசையின் மீது இணைத்து வைத்திருந்த தன் கரங்களைப் பார்த்தவாறு ஃபிரெட் மெதுவாகக் கூறினார்.

"நான் பல வீடுகளுக்கு அனுப்பப்பட்டேன். எந்த ஒரு வீட்டிலும் நீண்ட நாட்களாகத் தங்கவில்லை. நான் அவர்களுக்குப் பிரச்சனைக்குரியவனாகவே இருந்தேன். பெரும்பாலான வீடுகளில் என்னை வெளிநபர் போலவே நடத்தினர் என்று நான் நினைக்கிறேன். இதற்கு அடையாளமாகத் தழும்புகளையும் நான் பெற்றுக்கொண்டேன்."

தன்னை இழிவாக நடத்திய தருணங்களைக் கொண்ட காட்சிகள் நினைவிற்கு வரவே, தனது தோள்பட்டைகளையும், முன்னங்கைகளையும் ஃபிரெட் தடவிப்பார்த்தார்.

“இறுதியாகப் போதுமான அவமானங்களைப் பெற்றுக்கொண்ட பிறகு, நான் அவர்களது வீட்டிலிருந்து ஓடினேன். தெருவில் அனாதையாக நின்றுகொண்டிருந்தேன். பின்பு நான் தேசிய ஜனநாயகக் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்தேன். அவர்கள், என்னை அவர்களில் ஒருவராகவே நடத்தினார்கள். பின்பு இராணுவத்தில் சேர்ந்தேன். எருசலேமிற்கு எதிரான இறுதிப் படையெடுப்பில், என்னால் முடிந்தளவு யூதர்களைக் கொலைசெய்வதற்காகக் காத்திருந்தேன். ஆனால் நான், லெவ்வின் ஜீவனை எடுப்பதற்கு முன்பாகவே, அவர் என்னுடைய ஜீவனை எடுத்துவிட்டார். இப்போதோ இந்த யூதனுடைய நண்பனாகப் போரே இல்லாத உலகில் நான் என்னைக் காண்கிறேன். எனது தழும்புகள் குணமாகிவிட்டன. என்னுடைய பச்சைக்குத்தல்கள் (Tattoo) கூட மறைந்து போய்விட்டன. முதன்முறையாக எனக்கென்று ஒரு வீடு இருக்கிறது. என் மீது அக்கறை கொண்ட நண்பர் இருக்கிறார். இப்போது நான், என் தாயான உங்களையும் சந்தித்துவிட்டேன்” என்று தொடர்ந்து பேசமுடியாமல் ஃபிரெட் கதறி அழுதார்.

“நீங்கள் என்னைத் தூக்கியெறிந்து விட்டதாக நான் நினைத்தேன். ஆனால் நீங்கள் எப்படிப்பட்டவர், எதற்காக என்னை விட்டுச்சென்றீர்கள் என்பதை அறிந்த பிறகு ஆச்சரியப்படுகிறேன்” என்றார்.

“உன்னைத் தேடுவதை நான் ஒருபோதும் நிறுத்தியதில்லை. இறுதியாக உன்னுடன் இருக்கிறேன். தேவனுக்கு நன்றி” என்று கூறிய க்ரெட்சனால் மேலும் தொடர முடியவில்லை.

ஃபிரெட் தன்னுடைய நாற்காலியைத் தனது தாயின் நாற்காலிக்கு அருகில் இழுத்து அமர்ந்தார். பின்பு அவர் மேல் சாய்ந்து கொண்டு, அவரை அணைத்தவாறு கண்ணீரோடு அமர்ந்திருந்தார்.

## க்ரெட்சன் மற்றும் பிரெட், லெவ்வைப் பற்றி அறிந்துகொள்ளுதல்

இது ஃபிரெட்டினுடைய வீடு என்பதை அறிந்து க்ரெட்சன் மகிழ்ந்தார்.

“என் அருமை ஃபிரெட், எனக்கென்று ஒதுக்கப்பட்ட நிலம் இருக்கிறது. என்னுடைய தேவைக்கான ஜீவனளிக்கும் மரங்களை நடுவதற்கான பசுமை வீடும் கட்டப்பட்டு வருகின்றது. எனது வீடு இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. கட்டி முடிப்பதற்கு இன்னும் ஒரு மாதகாலம் எடுக்கலாம்” என்றார்.

“உங்கள் வீட்டினைக் கட்டி முடிப்பதற்கு நான் உதவுகிறேன், அம்மா. உங்கள் வீடு கட்டி முடியும் வரை நீங்கள் இங்கு வந்து, என்னுடன் தங்குவதற்கு உங்களை நான் வரவேற்கிறேன். லெவ்வும், அவருடைய மற்ற நண்பர்களும் எனக்காக இந்த வீட்டைக் கட்டினார்கள்” என்றார்.

“உங்களது ஜனங்களைக் கொல்வதற்கு முயன்ற ஒருவருக்காக உங்கள் நேரத்தையும், உழைப்பையும் கொடுப்பதற்கு நீங்கள் ஏன் விரும்பினீர்கள் லெவ்?” என்று க்ரெட்சன் வினவினார். இதை அறிந்துகொள்வதற்கு அவர் ஆர்வமாக இருந்தார்.

“ஃபிரெட்டும், நானும் எருசலேமைக் கைப்பற்றுவதற்கான போரில், எதிர்ரெதிர்த் தரப்பில் போரிட்டோம். நான் உயிர்த்தெழுந்தப் பிறகு, எங்களுக்கு எதிரானப் பிரிவில் ஃபிரெட் இருந்ததை அறிந்துகொண்டேன். வானத்தில் மதில்போல மிதந்துகொண்டிருந்த ஹெலிகாப்டர்களிலிருந்து வீசப்பட்ட குண்டுகள் என்னைத் தாக்குவதற்கு முன்பாக, நான் வீசிய குண்டு ஒன்று ஃபிரெட்டைத் தாக்கியது என்பதையும், சில மணித்துளிகள் இடைவெளியில் தான், நாங்கள் இருவரும் மரித்தோம் என்பதையும் அறிந்துகொண்டேன். ஜெர்மனியில் அறிவியல் நிறுவனத்தில் தங்கியிருந்தபோது, என்னால் ஃபிரெட்டின் வீட்டைக் கட்டுவதற்கு உதவ முடியுமா என்பதைக் குறித்து விசாரித்தேன். எனக்கு இந்த வீட்டினைக் கட்டுவதற்கான அனுமதி கிடைத்தது. கட்டுமான வேலையிலிருந்த இன்னும் சில இளைஞர்கள் எனக்கு உதவினார்கள். அவர்கள் மிகச்சிறந்த வேலை ஆட்கள்” என்று லெவ் கூறினான்.

“நானும் ஒரு வருட காலம் கடினமாக முயன்று படித்தால், அறிவியல் நிலையத்தில் பணிபுரிவதற்கான தகுதியைப் பெறுவேன் என்று லெவ் கூறியிருக்கிறார்” என்ற கூடுதல் தகவலையும் ஃபிரெட் தன் தாயினிடம் தெரிவித்தார்.

“லெவ் உன்னிடம் கூறினார் என்றால், நீ படிக்கத் தொடங்குவது நல்லது. ஏனென்றால் லெவ்தான் அறிவியல் நிறுவனத்தின் செயல்பாட்டுத் தலைவர் என்றும், இந்த வேலையைச் செய்வதற்காக, அவர்கள் இதுவரையிலும் பெற்றிராத மிகச் சிறந்ததொரு பொக்கிஷமாக லெவ் இருக்கிறார் என்று ஹான்ஸ் என்னிடம் கூறினார்” என்று க்ரெட்சன் கூறினார்.

“லெவ், என்னை அங்கு அழைத்துச்சென்றார். ஆனால் அறிவியல் நிறுவனத்தின் முழு நடவடிக்கைகளுக்கும் அவர்தான் பொறுப்பு என்பதை அவர், என்னிடம் தெரிவிக்கவில்லை. ஒவ்வொருவரும், அவருடைய பதிலுக்காக ஏன் காத்திருக்கிறார்கள் என்று நினைத்தேன். அவர் தன்னுடைய காரை, தலைமை நிர்வாகியின் கார் நிறுத்தும் இடத்தில் நிறுத்தினார். பின்பு நான் அவரைத் தலைமை அலுவலகத்தில் பார்த்தேன். ஆனால் தலைமை நிர்வாகியின் இடத்தை, அவர் சில நிமிடங்கள் பயன்படுத்துவதைப் போல என்னிடம் காட்டிக்கொண்டார். இவை அனைத்தும் அவர் எவ்வளவு சிறந்த மனிதர் என்பதையே காட்டுகிறது, அம்மா. அவர் உண்மையிலேயே மிகச்சிறந்த மனிதர்” என்று ஃபிரெட் கூறினார்.

காலைவேளை முடிந்தது. தான் சில தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்று லெவ், அவர்களிடம் கூறிவிட்டு விடைபெற்றான். ஃபிரெட்டும், அவனது தாயும் தனிமையில் உரையாடுவதற்கு இடம் கொடுப்பதற்காகவே லெவ் அவ்வாறு செய்தான். சிறிதுதூரம் நடந்துவிட்டு, லுட்விக் எவ்வாறு இருக்கிறார் என்பதைப் பார்ப்பதற்குச் செல்லலாம் என்று லெவ் நினைத்தான். லுட்விக் மனச்சோர்வில் இருப்பதை லெவ் அங்குச் சென்றதும் அறிந்துகொண்டான். லுட்விக் ஊன்றுகோலுக்குச் சுற்று வட்டாரத்தில் விசாரித்தாரா? என்று லெவ் கேட்டான். அவர் யாரிடமும் விசாரிக்கவில்லை என்பது தெரிந்தது. லெவ் உடனே தொலைபேசியை எடுத்து ஒரு நபருக்கு அழைத்தான். இரண்டு ஊன்றுகோல்களை வைத்திருக்கும் நபரைக் கண்டுபிடித்தான். மகிழ்ச்சியுடன் ஒன்றைக் கொடுப்பதற்கு அவர் முன்வந்தார். லெவ் அதனை அவரிடம் சென்று வாங்கிவிட்டு, அதை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதனைக் காட்டுவதற்காக, மறுபடியும் லுட்விக்கினுடைய வீட்டிற்கு வந்தான். அந்த நிகழ்வு லுட்விக்கினுடைய நாளைப் பிரகாசமாக்கியது. அவருக்குத் தேவையான உணவு இருக்கிறதா என்பதைச் சரிபார்த்தான். அவர் சாப்பிடவில்லை என்பது தெரிந்தது. லெவ் கூடையை எடுத்துக்கொண்டு பழ மரங்கள் அடங்கிய பசுமை வீட்டுக்குச் (Hot House) சென்று, சில ஏதேன் பழங்களை அதில் நிரப்பினான். பழங்களையாவது சாப்பிடுவார் என்று எண்ணினான். மேலும் லெவ், லுட்விக்கிடம், ஜான் இப்போது நலமாக இருக்கிறார் என்றும், அருகிலேயே ஜான் வசிப்பதால் ஏதாவது உதவி தேவைப்பட்டால் அவரை அழைக்குமாறும் கூறினான்.

“நான் இந்த நிலையில் இன்னும் ஒரு வாரகாலம் இருக்க வேண்டியிருக்கிறது, ஆனால் ஜான்னால் எப்படி நன்றாக இருக்க முடியும்?” என்று லுட்விக் கேட்டார்.

“உங்களிடம் நடந்த உண்மைகளை, மறைக்காமல் முற்பிதாவாகிய சாராளிடம் கூறச் சொன்னேன் அல்லவா?” என்று லெவ் வினவினான்.

“சரி, நான் மறைத்துக் கூறியவற்றை எவ்வாறு சாராள் அறிந்துகொண்டார்” என்று லுட்விக் கேட்டார்.

“சுலபம்! உங்களுடைய கால் செயலிழந்து போவதற்குக் காரணமாயிருந்த, உங்களுடைய நடவடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்த, அதே தேவதூதன்தான், நீங்கள் சாராளிடம் கூறிய எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தார். கிறிஸ்துவுக்கும் அனைத்தும் தெரியும். நீங்கள் கூறியதை சாராள் அவர்களிடம் சரிபார்த்தபோது, நீங்கள் அனைத்து உண்மைகளையும் கூறவில்லை என்பதைத் தெரிந்துகொண்டார். ஜான் உண்மையைக் கூறினார். ஆனால் நீங்கள் உண்மையைக் கூறவில்லை. உண்மையை மறைத்துத் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைத்தீர்கள். பக்கவாதத்தில் பாதிப்படைந்திருப்பது எவ்வளவு கடினம் என்பதை நான் என்னுடைய அனுபவத்திலிருந்து அறிந்துகொண்டேன். ஒரு மணி நேரத்தில் நீங்கள் குணமடைந்திருக்கலாம். ஆனால் நீங்கள் தவறான காரியத்தைச் செய்துவிட்டு, அதை மறைப்பதற்குப் பொய்சொல்லலாம்

என்று நினைத்தீர்கள். இனி அவ்வாறு செய்வது வேலைசெய்யாது லுட்விக். இது இஸ்ரயேல் தேசம் அல்ல. ஆனால் இத்தேசத்தை இப்போது கிறிஸ்து ஆட்சிசெய்கிறார். எதையும் தன் கண் கண்டபடியும், தன் காது கேட்டபடியும் கிறிஸ்து நியாயந்தீர்க்க மாட்டார். அவர் நீதியாய் நியாயந்தீர்ப்பார்" என்று லெவ் கூறினான்.

"எவ்வளவு நேரம் நீங்கள் கை செயலிழந்த நிலையில் இருந்தீர்கள்" என்று லுட்விக் கேட்டார்.

"ஒரு மணி நேரம் மட்டுமே, ஏனென்றால் நான் முழு உண்மையையும் கூறிவிட்டேன் மற்றும் எனது பழைய நண்பன் ரூபன், நான் ஆத்திரமடையும் அளவிற்குக் கடுமையாக நடந்துகொண்டான். ஆனால் இப்போது ரூபனும், நானும் நல்ல நண்பர்கள். காரியங்கள் மாறிவிட்டன. எதிரியை வெல்வதற்கான சிறந்த வழி, அவனுடைய நண்பனாக மாறுவதுதான் என்றான். உங்களுக்கு ஒன்று தெரியுமா? ஃபிரெட்டைக் கொன்றவன் நான்தான். நாங்கள் போர்க்களத்தில் ஒருவருக்கு ஒருவர் எதிரெதிராகப் போர்புரிந்தோம். நான் இறப்பதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்புதான் நான் அவரைக் கொன்றேன். நீங்கள் அதற்கு மறுநாள் இறந்திருக்க வேண்டும் அப்படித்தானே, அந்த அனுபவம் எப்படி இருந்தது?" என்று லெவ் கேட்டான்.

"என்னால் அதை விவரிக்க இயலாது லெவ், மற்றவர்களைப் போலவே அந்த நாள் சிறந்ததொரு நாளாக இருக்காது என்று நானும் உணர்ந்தேன். அந்த நாள் மிகவும் இருளாகவும், அமைதியாகவும் இருந்தது. விசேஷமாக அந்த நாளை மோசமாக்கியது என்னவென்றால், அதற்கு முந்தையநாள் நாங்கள் வெற்றிபெற்றிருந்ததுதான். அடுத்தநாள் காலையில் நாங்கள் யூதர்களைச் சுழற்றி அடிப்போம் என்பது போல்தான் முதலில் தோன்றியது. முந்தைய நாளின் இரவில் எங்கள் தளபதிகள் நம்பிக்கையுடன் இருந்தனர். ஆனால் மறுநாள் காலையில் நாங்கள் வெளியேறுவதற்கான கட்டளை வந்த சிலமணி நேரத்திற்குள்ளாகவே அனைத்து நவீனத் தகவல் தொடர்பு சாதனங்களும் நிறுத்தப்பட்டன. எங்கள் தளபதிகள் தங்களது கட்டளையை மாற்ற வேண்டியிருந்தது. அவர்கள் நாங்கள் திரும்பிவரக் கட்டளையிட விரும்பினர். ஆனால் அவர்களால் தகவல்தொடர்பைப் பெறமுடியவில்லை. மிகவும் குழப்பமாக இருந்தது. நாங்கள் பயத்தில் நடுங்கிக் கொண்டிருந்தோம். காற்றில் மரணவாசம் இருந்தது. மரணம் எங்களுக்கு மிக அருகாமையில் இருப்பதுபோல் தோன்றியது. திடீரென்று வானம் பிரகாசமாகியது. இவைகள்தான் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது" என்றார்.

"நீங்கள் என்னிடம் சொன்னதைத்தான் மற்றவர்களும் என்னிடம் உறுதிப்படுத்தினார்கள். ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்றால், அந்த நாளில் ஒரு யூதன்கூட மரிக்கவில்லை. நான் அந்த நாளிற்கு முன்னதாகவே, உங்கள் தேசத்தை எதிர்க்க முயன்றபோது மரித்தேன். இந்நிகழ்வு உங்களுக்கு வேறு எதையேனும் உணர்த்தவில்லையா? அந்த நாளில் உங்களை எதிர்த்துப் போரிட்டது தேவன் என்பதை உங்களால் உணரமுடியவில்லையா? தேவனோடு போட்டியிட்டு வெற்றிபெற முடியாது என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? ஏன் இன்னும் அவரோடு போட்டியிட முயல்கிறீர்கள்" என்று லெவ் கேட்டான்.

"இதனைப் பற்றி யூகிப்பதற்கான அறிவு எனக்கு குறைவாகத்தான் இருந்தது லெவ். நான் குழந்தையாக இருந்ததில் இருந்தே, யூதர்களை வெறுப்பதற்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறேன் என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? எனது பெற்றோர்கள், யூதர்கள் மீதான வெறுப்பினை எனக்குள் புகுத்தியிருக்கிறார்கள். தேவாலயங்களும்கூட தேவனுடைய மகிமைக்காக, எருசலேம் யூதர்களின் கைகளிலிருந்து கைப்பற்றப்பட வேண்டும் என்று கூறியிருந்தனர். நான் எவ்வளவு முட்டாளாக இருந்திருக்கின்றேன் என்று நினைத்தவாறே இங்கு அமர்ந்திருக்கிறேன். யூதர்களை வெறுப்பதற்கு எனக்கு இந்த உலகில் எந்த ஒரு தனிப்பட்ட காரணமும் இல்லை. வெறுப்பானது கட்டாயப்படுத்தப்பட்டு எனக்குக் கற்பிக்கப்பட்டிருப்பது மட்டுமே இதன் காரணம். பாலஸ்தீனியர்களுக்கும், யூதர்களை வெறுப்பதற்குக் கற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. நானும் அவர்களைப்போலவே இருக்கிறேன். யூதர்களைக் கொல்வதன் மூலமாக, அவர்களில் யாருக்காவது மரணம் நேரிட்டால், அவர் பரலோகம் செல்வார் என்று அவர்களுக்கு கற்பிக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தும் பொய்கள்தான். தேவன் ஏன் இந்தப் பொய்களைத் தடுத்து நிறுத்தவில்லை?" என்று கேட்டார்.

லுட்விக் பேசுவதை நிறுத்தியதால், லெவ் பதிலளிக்கத் துவங்கினான். "தேவன் இஸ்ரயேலின் சார்பாகப் போரிட்ட நாளே அவர் அனைத்துப் பொய்களையும், வஞ்சனைகளையும் தடுத்து நிறுத்தின நாள். தேவன் மனுக்குலத்திலிருந்து தாம் தேர்ந்தெடுக்கும் பரிசுத்தவான்கள், கிறிஸ்துவுடன் இணையும் நாள் வரும்வரை காத்திருந்தார். தேவன் நினைத்திருந்தால் மனிதர்களைத் தீமைசெய்வதிலிருந்து தடுத்து நிறுத்தியிருக்கமுடியும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? கண்டிப்பாக அவரால் தடுத்து நிறுத்தியிருக்கமுடியும். உங்களுக்கு அவர் என்ன செய்திருக்கிறார் என்று யோசியுங்கள். அவர் மனுக்குலத்தையும், சாத்தானையும் அவர்களது மனதில் இருப்பதைக் காட்டுவதற்கு அனுமதித்தார். அநீதி மற்றும் வஞ்சகத்துடன் இணைந்து பெருமையும், தவறான எண்ணங்களும் பூமியில் பரவலாகச் செயல்படுவதற்கு அவர் அனுமதித்தார். அந்த நாட்கள் இப்போது கடந்துவிட்டன. உங்களுக்கு முன்பாக இரண்டு பாதைகள் இப்போது இருக்கிறது. ஒன்று மேல்நோக்கி உங்களை தேவனுக்கு நேராக வழிநடத்தும் பாதை, மற்றொன்று கீழ்நோக்கி உங்களை மரணத்திற்கு நேராக வழிநடத்தும் பாதை. எதைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை நீங்கள்தான் உங்கள் மனதில் தீர்மானிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை நான் இராஜாவுக்கும், நீதிக்கும் சேவைசெய்வதில் உறுதியாக இருக்கிறேன்" என்று லெவ் கூறினான்.

லெவ், லுட்விக் வலுவாக எதிர்க்க முற்படுவாரோ என்று பயந்தான். அதனால் சற்றுநேரம் பேசுவதை நிறுத்தினான். நீண்ட அமைதி அங்கே நிலவியது.

இறுதியாக லுட்விக், "லெவ், என்னை மன்னித்துவிடுங்கள்" என்றார். "பாவத்தின் பழைய எஜமான் இன்னும் என் மனதினைக் கட்டுப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது என்பதைத் தவிர, வேறு எந்த ஒரு காரணமும் உங்களைக் காயப்படுத்துவதற்கு என்று என்னிடம் இல்லை" என்றார். "நீங்கள் ஃபிரெட்டிற்கு உதவினீர்கள் என்றும், அதைச் செய்யவேண்டிய அவசியம் உங்களுக்கு இல்லை என்றும், நீங்கள் ஒரு சிறந்த மனிதர் என்றும் ஃபிரெட் என்னிடம் கூறினார். ஆனாலும் நான் உங்களை வெறுத்தேன், ஏனென்றால் வெறுப்புணர்வுக்கும், தவறான எண்ணங்களுக்கும் சிறிதளவாவது மதிப்பு இருக்கும் என்று எண்ணும் அளவிற்கு நான் முட்டாளாக இருந்திருக்கிறேன். என்னிடமிருந்த வெறுப்புணர்வு என்னை ஒரு முறை கொன்றுவிட்டது. இப்போதும் நான் அதே அருவருப்பான குழிக்குள்ளேயே இருக்கிறேன். உண்மையிலேயே, நான் உங்களிடம் மன்னிப்புக்கேட்கிறேன், எனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதைப் பெறுவதற்கு நான் தகுதியானவன்தான், உங்களிடம் ஒன்றை இப்போது என்னால் உறுதியாகக் கூறமுடியும். இனி ஒருபோதும் நான் வெறுப்புணர்வு மற்றும் தவறான எண்ணங்களைக் கொண்ட சிந்தைக்கு இணங்குபவனாக இருக்கமாட்டேன். எனக்கு ஊன்றுகோலையும், உணவினையும் எடுத்துவந்து கொடுத்ததற்காக நன்றி! நாம் இருவரும் நண்பர்களாக கைகளைக் குலுக்கிக்கொள்ளலாமா, லெவ்?" என்று கேட்டார்.

"இந்த நாள் எனக்கு மறக்கமுடியாத நாள், ஃபிரெட்டும், அவருடைய தாயாரும் இறுதியாக இணைந்துவிட்டார்கள் மற்றும் என்னுடைய எதிரியாக இருந்த நீங்கள் இன்று என்னை நண்பனாக ஏற்றுக்கொண்டீர்கள், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். சரியான வழியிலிருந்து பின்வாங்காதிருங்கள். சில குரல்கள் உங்களை வெறுப்புணர்விற்கும், அற்பமானவைகளுக்கும் அழைக்கும், ஆனால் இராஜா உங்களுக்கு அன்பின் வழியைக் காட்டியுள்ளார்" என்றான்.

ஃபிரெட், அவருடைய தந்தையுடன் இணைய வேண்டியிருந்தது. லெவ், ஃபிரெட்டினுடைய தந்தையான அர்னால்டு க்ரூபரை மறுநாள் காலையில் அழைத்துப் பேசினான். அவரது மகனான ஃபிரெட்டைச் சந்திப்பதற்கு நேரத்தை உறுதிப்படுத்திக் கொண்டான். அர்னால்டு தனக்குச் சொந்தமாக வாகனம் வைத்திருப்பதாகவும், காலை 10 மணி அளவில் ஃபிரெட்டின் வீட்டில் சந்திப்பதாகவும் கூறினார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## லுட்விக் அறிக்கையிடுதல்

மறுநாள் காலையில் வழிபாட்டுத் தளத்திற்கு வருபவர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருந்ததை லெவ்வால் காணமுடிந்தது. எல்லாவற்றையும்விட ஜானும், லுட்விக்கும் வழிபாட்டிற்கு வந்திருப்பதைக் கண்டு லெவ் மகிழ்ச்சியடைந்தான். அன்றைய வழிபாடு ஃபிரெட்டினுடைய மனதிற்கு அர்த்தம் உடையதாகத் தோன்றியது, ஏனென்றால் தான் இழந்திருந்த அன்பான நண்பர்களை அவன் மீண்டும் பெற்றுக் கொண்டான். சாட்சி அளிப்பதற்கான நேரம் வந்தபோது, லுட்விக் தனது ஊன்றுகோலைப் பிடித்தவாறு எழுந்து நின்று, அவர் தனது

நடக்கைகளுக்காக மன்னிப்புக் கேட்டார். உண்மையை வெளிப்படையாகக் கூறாமல் இருந்ததால், அவரது தண்டனைக் காலத்தை அவரே அதிகமாக்கிக் கொண்டதையும் ஒப்புக்கொண்டார்.

"நான் தேசிய ஜனநாயகக் கட்சியின் உறுப்பினராக இருந்தேன். இஸ்ரயேலின் மீதான படையெடுப்பின்போது நான் மரித்தேன். எங்களது தளபதிகள் முந்தைய நாளின் இரவு வரையிலும் மிகவும் நம்பிக்கையோடு இருந்தனர். ஆனால் மறுநாள் காலையில் அனைத்து தகவல்தொடர்புகளும் நிறுத்தப்பட்டன. நிலைமை மோசமாவது போல் தெரிந்தது. நாங்கள் திரும்பிச் செல்ல விரும்பினோம், ஆனால் எங்களால் திரும்ப முடியவில்லை, ஏனென்றால் மேலதிகாரிகளின் கட்டளைக்குக் கீழாக நாங்கள் இருந்ததால், அவர்கள் அனுமதி தரும் வரையிலும் எங்களால் திரும்ப முடியாது. மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதை எங்களால் உணரமுடிந்தது. திடீரென்று வானம் பிரகாசமானது. இவைகள்தான் என் நினைவில் இருக்கின்றன" என்றார்.

லுட்விக் பேசுவதை நிறுத்திவிட்டு, தன் கண்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தார். அன்று ஒரு யூதர்கூட மரிக்கவில்லை என்று நான் அறிந்துகொண்டேன். தேவன் இஸ்ரயேலின் சார்பாகப் போரிட்டார். நான் உயிர்த்தெழுந்து வந்த பின்பும்கூட, தேவனோடு போரிடுபவனாகவே இருந்திருக்கிறேன். என்னுள் நடந்துகொண்டிருக்கும் போரில், எனக்கு நானே கட்டளையிட்டுக் கொண்டிருக்கிறேன். பழைய உலகில் இருந்ததைப்போலவே, புதிய வாழ்க்கையிலும் நான் மோசமானவனாகவே இருக்கிறேன். நான், லெவ் ஆரோனை உதைக்க முயன்றேன், அதனால் உடனடியாக என்னுடைய கால் செயலிழந்துவிட்டது. நான் உடல் ரீதியாக குணமடைவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள் ஆகும். ஆனால் என்னுடைய சிந்தையிலிருக்கும் பிரச்சனைகளில் இருந்து இப்போதுதான் நான் மீண்டு வந்துகொண்டு இருக்கிறேன்" என்றார்.

லுட்விக்கின் கண்கள் கூட்டத்தில் லெவ்வைத் தேடின. அவைகள் லெவ்வைக் கண்டறிந்து அவரை நேருக்கு நேராக உற்றுநோக்கியவாறு, "இறுதியில் என்னுடைய கால் செயலிழந்துவிட்டது, இந்த உலகில் யூதர்களை வெறுப்பதற்கு எந்த ஒரு தனிப்பட்ட காரணமும் எனக்கு இல்லை. வெறுப்பானது எனக்குள் ஊட்டப்பட்டிருக்கின்றது. என்னுடைய இருதயத்தில் இருக்கும் வெறுப்பானது விஷம் போன்றது. இதனால் மற்றவர்கள் பாதிப்படைவார்கள் என்று தெரிந்தே, நான் வெறுப்பினை என்னுள் வைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் அது அன்பினை வெளிப்படுத்தும் என்னுடைய குணலட்சணத்தினை மெதுவாகக் கொன்றுகொண்டிருக்கின்றது என்பதை உணர்கிறேன். இப்போது என்னைக் கொன்றுகொண்டிருந்த வெறுப்பிலிருந்து விடுதலைப் பெற்றுவிட்டேன் என்று என்னால் உணரமுடிகிறது."

லுட்விக்கின் குரல் நடுங்கியது. கடினமாக முயற்சிசெய்து தொடர்ந்து அவர் பேசினார். "லெவ் மற்றும் ஃபிரெட்டின் மூலமாக என்மீது அன்புகாட்டியதற்காக, நான் மேசியாவிற்கு நன்றிகூறுகிறேன். இந்தப் புதிய தொடக்கத்தைக் கொடுத்ததற்காக தேவனுக்கும் நன்றிகூறுகிறேன்" என்றார்.

லுட்விக்கின் சாட்சியானது ஒவ்வொருவராலும் வரவேற்கப்பட்டது. அவர் ஒரு கலகக்காரராகவே இதுவரையிலும் இருந்துகொண்டிருந்தார். புதிய யுகத்தில் பழைய போதனைகளோடு வாழ முயன்றுகொண்டிருந்தார்.

அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களில் சிலர் இதுவரையிலும் தீமைசெய்வதற்கான உடனடி விளைவினைப் பார்த்ததில்லை. லுட்விக்கின் சாட்சியானது அவர்களுடைய இருதயங்களில் தேவனுக்கான பயத்தை உண்டாக்கியது.

வழிபாட்டு ஆராதனை முடிந்த பிறகு ஜானும், லுட்விக்கும் லெவ்விடமாக வந்து அவனுடைய கரங்களைப் பற்றி மென்மையாகக் குலுக்கினார்கள். இந்தத் தருணம் நெகிழவைக்கும் தருணமாக இருந்தது. ஏனெனில் முன்பு அவர்கள் இருவரும் லெவ்வை அடிக்க முயற்சித்திருந்தார்கள். இந்தக் குறுகிய காலத்தில் எத்தகையதொரு மாற்றத்தை தேவன் இவர்கள் மனதில் உண்டாக்கியிருக்கிறார். ஃபிரெட் மற்றும் லெவ் தாங்கள் அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிடுவதாகக் கூறினார்கள். ஆனால் ஊன்றுகோலின் உதவி இருப்பதால் சமாளிக்க முடியும் என்று லுட்விக் கூறிவிட்டார்.

அதனால் ஃபிரெட்டும், லெவ்வும் ஃபிரெட்டினுடைய தந்தை அர்னால்டு க்ரூபர் வருவதற்கு முன்பாக வீட்டிற்குத் திரும்பினார்கள்.

## அர்னால்டு க்ரூபர் தன் மகனைச் சந்தித்தல்

ஃபிரெட் உண்மையிலேயே அவரைச் சந்திப்பதற்கு அதிக ஆர்வத்தோடு இருக்கவில்லை.

"ஒருவர் தன்னுடைய சொந்த தந்தையாலேயே கைவிடப்படும் போது அவருக்குள் ஏற்படும் உணர்வு எவ்வாறு இருக்கும் என்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள், என்னை பாரமாகக் கருதி, விட்டுச் சென்றீர்கள் என்பதைத் தெரிந்துகொள்வது எனக்கு எவ்வாறு இருந்திருக்கும் என்பது உங்களுக்குப் புரிகிறதா? இந்தச் சம்பவம் எனக்குள் ஏற்படுத்திய வலியைப்பற்றி உங்களால் உணர்ந்துகொள்ள முடியுமா?" தனக்கு எதிராக அமர்ந்திருந்த அந்த மனிதரை நோக்கி ஃபிரெட்டின் குரல் உயர்ந்து கேள்விகளை எழுப்பியது. பின்னர் அவரது குரல் உடைந்தது.

அர்னால்டு அந்த இளைஞன் கூறிய வார்த்தைகளை கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரது கண்களிலும் நீர் நிரம்பியது. பல்வேறு குடும்பங்களின் மத்தியிலிருந்து ஃபிரெட்டிற்கு ஏற்பட்டிருந்த கடினமான வாழ்க்கையையும், அதன் பிறகு அவர் தெருவிற்கு வந்ததையும், பின்னர் நியோ நாசியான அவரது வாழ்க்கையைப் பற்றியும் ஃபிரெட் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

ஃபிரெட் மற்றும் அர்னால்டைத் தனிமையில் விட்டுவிடும்படியாக, லெவ் சிறிதுதூரம் நடைபயிற்சி மேற்கொள்ளப் போவதாகக் கூறிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறினான். லெவ் வீட்டிற்குத் திரும்பியதும் தேநீர் மற்றும் சிற்றுண்டி தயாரிப்பதற்காக நேராகச் சமையலறைக்குள் சென்றான். லெவ் அவர்களது உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்தான். ஃபிரெட்டினுடைய குரல் கோபத்தை வெளிப்படுவதிலிருந்து மாறி, தனக்கு ஏற்பட்ட காயங்களையும், மனவேதனைகளையும் வெளிப்படுத்தத் தொடங்கியிருந்தது. அர்னால்டு, ஃபிரெட் பேசும்போதெல்லாம் அமைதியாகவே இருந்தார். அவ்வப்போதான அவரது பதிலளித்தலும்கூட சுருக்கமாகவும், ஒரே சீரான குரலிலும் இருந்தது.

இரண்டு கோப்பை உயிர்த்தெழுதலின் தேநீரை லெவ் கொண்டு வந்தான். அப்போது அர்னால்டு சம்மதம் தெரிவிப்பதுபோல் தலையை ஆட்டுவதை லெவ் கவனித்தான். மிகுதியான உணர்ச்சியுடன், அவர் தன் குரல் நடுங்கியவாறு, "நீ கூறுவது சரி ஃபிரெட், நான் உன்னைத் தோற்கச் செய்துவிட்டேன். ஒரு தந்தையாக நான் உனக்கு அவசியமாகத் தேவைப்பட்டேன், ஆனால் உன்னை விட்டுப் பிரிந்துசெல்லும் வழியை நான் தேர்ந்தெடுத்து விட்டேன். முழுமையான சுயநலமுள்ள ஒரு மனிதனாகவே நான் இருந்திருக்கிறேன். பிற பெண்கள் மீது ஆர்வம் கொண்ட மனிதனாகவும் இருந்திருக்கிறேன். என்னுடைய சுய உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பவனாகவே இருந்திருக்கிறேன். நான் என் வாழ்க்கையில் எந்த ஒரு குறிக்கோளும் இல்லாமலேயே இருந்திருக்கிறேன். குழந்தை பெற்றுக்கொள்ளாமல், என் மனைவி என்னோடு வாழ்வதற்குச் சம்மதித்தால், நான் அவளோடு வாழத் தயாராக இருந்தேன். நான் செய்த எல்லாவற்றிற்காகவும் மிகவும் வருந்துகிறேன்" என்று கண்ணீரோடு கூறினார்.

மதுபானத்திற்கும், காம உணர்ச்சிக்கும் அவர் அடிமையாயிருந்த காரியமானது, ஒருநாள் அவர் தற்கொலை செய்துகொள்ளும்படியாக, ஒரு பாலத்தின் மேல் வந்து நிற்கும் அளவிற்குக் கொண்டு வந்தது என்று அர்னால்டு கூறினார்.

"நான் அப்போது வேலை இல்லாமல் இருந்தேன். எனக்கு நண்பர்களும் இல்லை. நான் எல்லாவற்றையும் இழந்திருந்தேன். நான் பாலத்தின் மேலிருந்து குதிக்கப் போகும் வேளையில், என் அருகில் ஒரு கார் வந்து நின்றது. ஒருவர் அதிலிருந்து இறங்கி வந்து என்னிடம் பேசினார். என்னால் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை."

"இறுதியில் நான் அவரை அடையாளம் கண்டுகொண்டேன், அவர் லூட்ஸ் ஸ்மிட். நான் பணி நீக்கம் செய்தவர்களில் அவரும் ஒருவர். நான் அவரைப் பணியிலிருந்து நீக்கியதற்காக, அவர் என்னிடம் நன்றி கூறினார். அவர் என்னை தவறான வழியிலிருந்து மாற்றிவிடுவாரோ என்ற பயத்தில்தான், நான் அவரைப் பணிநீக்கம் செய்திருந்தேன். என்னுடைய செயலானது அவருடைய

வாழ்க்கையில் மிகச்சிறந்த விஷயங்கள் நடப்பதற்கு வழிவகுத்ததாக என்னிடம் கூறினார். மதுபானம் அருந்துவதை விட்டுவிடுவதாக நான் ஒப்புக்கொண்டால், அவர் எனக்கு வேலைவாங்கிக் கொடுப்பதாகவும் கூறினார். அவர் என்னை ஒரு விடுதியில் சேர்த்துவிட்டு, நான் உடுத்துவதற்குத் தேவையான சில நல்ல ஆடைகளையும், ஒரு வார உணவிற்குப் போதுமான பணத்தையும் எனக்குக் கொடுத்து உதவினார். அந்த நிமிடங்கள் தான் ஃபிரெட், நான் மரியாதைக்குரிய வாழ்க்கையை வாழத் தொடங்குவதற்கான நிமிடங்களாக இருந்தன'' என்றார்.

அர்னால்டு தன் கண்களை மூடி அழுதார். அவர் அழுததில் அவரது உடல் குலுங்கியது. ஃபிரெட் தன்னுடைய கைகளை இறுக்கி மூடியவாறும், பற்களைக் கடித்தவாறும் அமர்ந்திருப்பதை லெவ் கண்டான். அவனால் தனது தந்தையை அணைத்து ஆறுதல் அளிப்பதற்கு முன்வர முடியவில்லை என்பதை லெவ் அறிந்துகொண்டான்.

''என்னை மன்னித்து விடுங்கள், நான் வீட்டிற்குச் செல்ல விரும்புகிறேன். நாம் - நாம், நாம்... பிறகு பேசலாம்'' என்று கூறியவாறு அர்னால்டு எழுந்தார். தன்னுடைய கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தவாறு நடக்க ஆரம்பித்தார்.

ஃபிரெட் தனது கைகளை அவரிடமாக நீட்டினான். தர்ம சங்கடமான சூழ்நிலையில் கைகளை நீட்டி இருந்தபோதிலும், அவரையும் அறியாமல் தனது தந்தையின் கைகளை இறுக்கிப் பிடித்துக் குலுக்கினார். பின்பு பின்புறமாகத் திரும்பி நின்றுகொண்டார்.

அர்னால்டு கதவுகளுக்கு அருகில் சென்றபோது ஃபிரெட், ''நன்றி அப்பா'' என்றார்.

அர்னால்டு தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டியிருந்ததால், தன்னையும் மறந்து வீட்டைச் சுற்றிலும் நடந்து கதவின் அருகே வந்தார். தனது மகன் தன்னை அப்பா என்று அழைத்ததைக் கேட்டவுடன் திணறினார். சுவற்றில் மாட்டியிருந்த கண்ணாடிக்கு அருகில் வந்தபோது, அதில் தன் உருவத்தைப் போலவே இருந்த தனது மகனின் பிம்பத்தைப் பார்த்தார். மிகுந்த உணர்ச்சிப் பெருக்கினால் தனது கரங்களால் தனது மகனின் கேசத்தைக் கோத வேண்டும் என்பது போன்ற உணர்வு தனக்குள் பொங்கி வருவதை உணர்ந்தார். அப்போது கண்ணாடியில் தனது மகன் கதவைத் திறந்தவாறு தன்னை வழி அனுப்புவதற்காக நிற்பதைக் கண்டு, விறுவிறுவென்று கதவை நோக்கி நடந்துசென்றார். ''நான் உன்னை நேசிக்கிறேன் ஃபிரெட், நீ ஒரு மனிதனாக வளர்ந்து நிற்பதைக் கண்டு நான் வியக்கிறேன்'' என்று கூறியவாறு நடந்தார்.

## நினைவலைகள்

ஜெர்மனி முழுவதிலும் வீசத் தொடங்கியிருந்த இதமான வசந்தகாலத் தென்றலை அனுபவித்தவாறு லெவ்வும், ரெபெக்காளும் ஒன்றாகப் பேசிக்கொண்டே நடந்தனர். சூரியன் பிரகாசமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. வானம் அடர் நீலநிறத்தில் காட்சியளித்தது. குளிர்ந்த மாலை வேளையிலான அவர்களது சீரான நடைபயிற்சியானது புத்துணர்ச்சி அளிப்பதாக இருந்தது. ஜான் மற்றும் லுட்விக்குடன் ரெபெக்காளைச் சந்திக்க வைப்பதற்காகவே, லெவ் அவர்கள் இருவரும் செல்லும் வழிபாட்டுச் சேவைக்கு, இவர்களும் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தான். மேலும் ஃபிரெட் மற்றும் அர்னால்டுடனான முதல் சந்திப்பின்போது நடந்தவைகளை ரெபெக்காளுடன் பகிர்ந்துகொள்ளவும் லெவ் விரும்பினான்.

''இது மிகவும் கடினமான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தருணமாகவே லுட்விக்கிற்கு இருந்தது. இன்று காலையில் வழிபாட்டுச் சேவையில் நான் அவரைச் சந்தித்தபோது அவரிடம் காணப்பட்ட மாற்றத்தை, அவர் பெற்றுக்கொள்வதற்கு அவருக்கு நிறைய தைரியம் தேவைப்பட்டிருக்கும்'' என்று லெவ் கூறினான்.

அவர்கள் இருவரும் உயர்ந்து மெலிந்திருந்த மனிதனான லுட்விக், எழுந்து தேவாலயத்திற்கு முன்பு சென்று சாட்சி கூறிய விதத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

இரும்பினால் செய்யப்பட்ட பெஞ்சுகள் போடப்பட்டிருந்த இடத்தை இருவரும் நடந்தவாறே கடந்துசென்றனர்.

"இங்கு சிறிது நேரம் உட்காரலாம் லெவ்" என்று கூறியவாறு ரெபெக்காள் பெஞ்சை நோக்கி நடந்தாள். இருவரும் அருகருகே அமர்ந்தனர். லெவ் தன்னுடைய கரங்களை ரெபெக்காளின் தோள்களைச் சுற்றிப் பிடித்தவாறு அமர்ந்தான். ரெபெக்காள் அவன் மீது சாய்ந்தவாறு அமர்ந்தாள். அது அவனுடைய நட்பிற்கு நன்றிதெரிவிப்பது போன்றதான உணர்வினை வெளிப்படுத்துவதுபோல் இருந்தது.

பெர்லினில் அவர்கள் இருக்கப்போகும் இந்தக் கடைசி மாதத்திலும், அதன் பிறகும் கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் வழிநடத்துதல்களின்படி இன்னும் வேறு என்னென்ன சவால்களை, அவர்கள் சந்திக்கவேண்டி வருமோ என்பதைக் குறித்தும் லெவ் ஆச்சரியப்பட்டான். லெவ் அவனது அடுத்த பணிக்காக ஜெர்மனியிலிருந்து, பிரான்சுக்கு நேரடியாக செல்லயிருக்கிறான். ரெபெக்காள் முற்பிதாக்களைச் சந்தித்து, அவர்கள் அவளுக்குத் தரும் அடுத்த பணியைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும் சில நாட்கள் இஸ்ரயேலில் தங்கவேண்டியதிருக்கும்.

* * *

**"ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தார்." (யூதா 1:14, 15)**

# அத்தியாயம் - 25

பிரான்ஸ் ஸ்லீச்சர் ஏற்கெனவே தயாரிப்பில் இருந்த விமானங்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார்.

"இந்த விமானங்களை ஆவிக்குரிய வல்லமைகளால் பாதுகாக்க முடியும் என்றால், நாம் ஏன் உற்பத்தித் தளத்தில் ஏற்கெனவே தயாரிப்பில் இருக்கும் விமானங்களை செய்து முடிக்கக் கூடாது? இப்போது செயல்பாட்டில் இருக்கும் இன்னும் சில விமானங்களும் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று உங்களுக்குத் தோன்றவில்லையா? நியாயமாக நடந்துகொள்ளுங்கள்" என்று தனது கைகளை மேலும் கீழும் அசைத்தவாறு தனது எண்ணங்களை லெவ்விடம் நேரடியாகவே அவர் வலியுறுத்தினார். சிவந்திருந்த பிரான்ஸின் முகத்தை லெவ் பார்த்தான். பழைய உலகின் வழிகளில் அவர் எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கிறார் என்பதை, அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. விமானத் தொழிற்சாலைகளையும், கனரக தானியங்கி இயந்திரத் தொழிற்சாலைகளையும் மாற்றி அமைப்பதற்காக லெவ், பிரான்சிற்கு வந்திருந்தான். புதிய கண்டுபிடிப்பானது தண்ணீரை, ஆக்சிஜன் மற்றும் ஹைட்ரஜனாக மாற்றும் திறனுள்ளதாக இருந்தது. மேலும் இந்தக் கண்டுபிடிப்பு தற்போது உபயோகத்தில் இருக்கும் ஜெட் விமானங்கள் மற்றும் உயர் ஆற்றல் கொண்ட இயந்திரங்களை இயக்குவதற்கான புதிய எரிசக்தியாகச் செயல்படுகிறது. ஹைட்ரஜனை எரிசக்தி மின் கலங்களில் எளிதாகப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க முடியும் என்பதால், ஒவ்வொரு இயந்திரத்தின் உள்ளிருக்கும் எரிபொருள் இயந்திரமும் மின்சார சக்திக்கு மாற்றப்படும். ஆனால் பிரான்ஸ் ஸ்லீச்சர் கையாளும் நிறுவனமானது பழைய தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக பெரிய அளவிலான தொகையை முதலீடு செய்துள்ளது மற்றும் அவர்கள் இன்னும் லாபம் ஈட்டும் மனநிலையிலேயே இருந்தனர். புதிய அறிவியலானது பாதுகாப்பையும், தரத்தையும் உறுதியாக அளிக்கும். மேலும் இதனைக் குறித்த விளக்கக் காட்சியானது அங்குப் பணி புரிபவர்களால் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் நிர்வாகத்தினரிடம் இருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

"சுற்றுச்சூழல் காரணிகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும். பழைய விமானங்களால், புதிய உலகின் சுற்றுச்சூழல் தரநிலைகளை எட்ட முடியவில்லை. சுற்றுச்சூழல் தரங்களைப் பொறுத்தவரையிலும், பாதுகாப்பைப் பொறுத்த வரையிலும் இந்த விமானங்கள் பின்தங்கியுள்ளன" என்று லெவ் கூறினான்.

ஒரு மாதத்திற்கு முன்பாக லெவ் தனது விளக்கக் காட்சிகளைக் கொடுத்தபோது பிரான்ஸ் வெளிப்படுத்திய முகபாவனைகளை லெவ் நினைத்துப் பார்த்தான். ஆலையில் பணிபுரிபவர்களும், பிரான்ஸும் கூட லெவ் கூறியதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். விமானம் தரையிறங்கும் வேலையில் இயந்திரக் கோளாறினால், அரிதான விபத்துக்கள் ஏதாவது ஏற்பட்டால், சிறிய ஹைட்ரஜன் தொட்டி வெளியேறி எவ்வாறு விபத்தினைத் தடுக்கும் என்பதைக் குறித்து லெவ் விவரித்த போது பிரான்ஸின் முகம் பிரகாசமாக மாறியதை லெவ் கண்டான். புதிய முறையில் இருந்த மேன்மையினை அறிவு ரீதியாக பிரான்ஸ் ஏற்றுக்கொண்டது லெவ்விற்குத் தெரியும். ஆனால் உடனடியாக அவருக்குள் சில தொடர்ச்சியான குழப்பங்கள் எழுந்தது. குழப்பம் அடைந்திருந்த அவர் பதட்டத்துடன் தன்னுடைய பேனாவால் நோட்டுப் புத்தகத்தின் மீது வேகமாக தட்ட ஆரம்பித்தார். அவரது தலை இருபுறமும் அசைந்தவாறு இருந்தது. அவரது பதவியையும், அதிகாரத்தையும், இலாபத்திற்கான நம்பிக்கையையும் இழந்து, இந்தப் புதிய முறையினால் கிடைக்கப்பெறும் நன்மைகளை ஏற்றுக்கொள்ளுவதற்கு அவர் தயாராக இல்லை.

இந்த அதிர்ச்சியினை பிரான்ஸ் எளிதாகக் கடந்துபோவதற்கு ஏதுவான அனைத்து முயற்சிகளையும் லெவ் மேற்கொண்டான். லெவ் அவரையோ அல்லது அவருடைய பொருட்களையோ, அலுவலகத்தில் இருந்து அகற்றிவிடாது பார்த்துக்கொள்வதில் கவனமாக

இருந்தான். அவரது அறைக்கு எதிர்அறையை லெவ் எடுத்துக்கொண்டான் மற்றும் தனது அறைக் கதவில் "செயலாக்கத்துறை" என்று மட்டுமே எழுதப்பட்ட பலகையைத் தொங்கவிட்டான்.

## பழையவற்றை நீக்க வேண்டிய நேரம்

எப்போதுமே ஒரு குறிப்பிட்ட அளவிலான ஜனங்கள் லெவ்வின் அலுவலகத்திற்கு வரத்தொடங்கினர். ஜனங்களுடைய கேள்விகளுக்கு, லெவ் அவர்களைப் பொறுப்புடன் கையாண்டு ஏற்ற பதில்களையும், அறிவுறுத்தல்களையும் அளித்ததால் உண்டான திருப்தியில் உற்சாகமாக அவர்கள் வெளியேறுவதை பிரான்ஸ் எரிச்சலோடு கவனித்துக் கொண்டிருந்தார். அப்போதெல்லாம் தனது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் அழுத்தத்தைக் குறைப்பதற்காக, தன்னுடைய பேனாவின் பின்பொத்தானை தொடர்ந்து அழுத்தி "கிளிக்" என்ற சத்தத்தை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார்.

மற்றொரு நாள் லெவ், அவருடைய அலுவலக அறைக்குள் நுழைந்தபோது, பிரான்ஸின் பேனாவில் இருந்து வந்த கிளிக் சத்தமே லெவ்வை வரவேற்றது. "அனைத்து தளத்திலும் உள்ள பழைய உற்பத்திச் செயல்பாடுகளை அகற்றுவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகலாம், பிரான்ஸ்?" என்று லெவ் கேட்டான்.

"பார்க்கிறேன்" என்று பிரான்ஸ் தனக்குள்ளாகவே முணுமுணுத்தார். தன்னுடைய நோட்டுப் புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டியவாறும், தனது பேனாவை அழுத்திச் சத்தம் எழுப்பியவாறும் பக்கங்களைப் பார்வையிட்டார். "இது சற்றுக் கடினமான வேலை என்று உங்களுக்குத் தெரியும்தானே, சரியாகத் தேவைப்படும் நாட்களைக் கூற எனக்குச் சிறிது அவகாசம் தேவை" என்றார்.

லெவ் அவருடைய மேசையை நெருங்கி தனது முழுப் பளுவையும், தனது கைகள் தாங்குமாறு வைத்துக்கொண்டு மேசையின் மீது குனிந்தவாறு நின்றான்.

"பிரான்ஸ் இன்னும் இரண்டு நாட்களில் புதிய விமானங்களைச் செய்வதற்கான பல்வேறு உதிரி பாகங்களை இறக்குமதி செய்யவேண்டியதன் அவசியம் நம்மிடம் உள்ளது. தனித்தனி பாகங்களை ஒன்றாக இணைக்கும், புதிய விமான உற்பத்திக்கான தொடக்க வேலையை ஆரம்பித்துவிடலாம். ஆனால் நம்மிடம் பாதி செய்துமுடிக்கப்பட்ட நிலையில் பழைய விமானங்கள் இன்னும் இருக்கின்றன. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான யோசனை ஏதாவது உங்களிடம் உள்ளதா?" என்று கேட்டான்.

"இம்பாசிபிள்" என்ற வார்த்தையைக் குறைவான சத்தத்தில் தொடர்ச்சியற்ற நடையில் முணுமுணுத்தவாறு, "எஸ்" என்ற சத்தத்துடன் சரியாக பிரெஞ்சு மொழியின் உச்சரிப்புடன் அழுத்திக் கூறினார். சிறிது காலம் அவகாசம் தேவைப்படுவதாலும், வேலைசெய்வதற்கு உகந்த வானிலை மாற்றம் ஏற்பட்டால் நன்றாக இருக்கும் என்பதாலும், நாம் கோடையின் நடுப்பகுதி வரை காத்திருப்பது நலமாக இருக்கும் என்பது போன்ற ஓர் ஆலோசனையை பிரான்ஸ் அளித்தார்.

"இவ்வாறு செய்வதால் அதிக அளவிலான பழைய விமானங்களின் உதிரிப் பாகங்களைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்" என்று கூறிவிட்டு சற்று நிறுத்தி, "பில்லியன் கணக்கான யூரோக்கள், இந்தப் பழைய விமானங்களைத் தயாரிப்பதற்கு என்று முதலீடு செய்யப்பட்டுள்ளன என்று தெரியும்தானே" என்ற நொண்டிச் சாக்கையும் சேர்த்துக் கூறினார்.

புதிய செயல்முறையினால் பெறப்போகும் நன்மைகள் மற்றும் பழைய பொருட்களை மறுசுழற்சி செய்வதற்கான, புதிய பூமியின் உத்திகள் முதலியனவற்றைப் பற்றி அவர்கள் மேற்கொண்ட பலமணி நேர விவாதங்களும், ஏன் பழைய வழிமுறைகளை அகற்ற வேண்டியதன் அவசியத்தைக் குறித்து ஏனோக்குடன் மேற்கொண்ட விவாதமும் கூட, பிரான்ஸினுடைய மனதில் அவர் கொண்டிருக்கும் கருத்துக்களைச் சிறிய அளவில் கூட மாற்றம் செய்வதற்குப் பயன்படவில்லையே என்று எண்ணி லெவ் பெருமூச்சு விட்டான்.

"உங்களுக்கு இரண்டு நாட்கள் அவகாசம் இருக்கிறது, பிரான்ஸ், இரண்டு நாட்களே" என்றான்.

லெவ் அலுவலகத்தை விட்டு வெளியேறும்படிக்குத் திரும்பினான். பேனாவைக் கிளிக் செய்யும் சத்தம் திடீரென்று நின்றதைக் கவனித்தான்.

"பலவந்தமாகச் செய்யும்படியாக நெருக்கப்படும் காரியங்கள், செயல்படுவதை நிறுத்திவிடும், பழைய உலகின் பேனாக்களைப் பயன்படுத்துவது கூட இனி ஏற்றுக்கொள்ளப்படாது என்று நினைக்கிறேன்" என்று எரிச்சலோடு பிரான்ஸ் முணுமுணுத்தார். அவர் தனது பேனாவை தன்னுடைய நோட்டுப் புத்தகத்தில் பலமாகக் குத்துவாள் கொண்டு வெட்டுவது போல் ஓங்கி அடித்தார். அதனால் பேனாவிலிருந்து கசிந்த கருப்பு மையானது, புதிதாகக் கஞ்சிப்போட்டு இஸ்தரி செய்யப்பட்டிருந்த அவரது வெள்ளை நிறச் சட்டையிலும், அவரது நோட்டுப் புத்தகத்திலும் கருப்புப் புள்ளிகளை அள்ளித் தெளித்தன. இதனை லெவ் கவனித்தான்.

லெவ், அந்த மாநிலத்தின் நிர்வாக இயக்கத் தலைவரான திரு. வெர்ணர் கோல்டனை அழைத்துப் பேசினான். பிரான்ஸ் இந்த வழிமுறைகளுக்கு இணங்குவதற்காகத் தன்னைப் புதியவராக மாற்றிக்கொண்டு நேர்மையுடன் நடந்துகொள்ள முயல்கிறார் என்று திரு. வெர்ணர், லெவ்விடம் கூறியதைக் கேட்ட பிறகு, லெவ் மிகவும் ஆச்சரியம் அடைந்திருந்தான். பிரான்ஸ் அதற்கு ஒரு மணி நேரத்துக்கு பின்பு ஒரு தீர்க்கமான திட்டத்தோடு, அவரின் அலுவலகத்திற்குள் நுழைந்தார்.

"பாதி பொறுத்தப்பட்ட நிலையில் இருக்கும் விமானங்களை இன்னும் ஓரிரு நாட்களில் அகற்றி விடுவேன். அவைகளை அகற்றுவதற்கு ட்ரக்குகள் வருவதற்கான ஏற்பாடுகளையும் செய்திருக்கிறேன். எனவே புதிய விமானங்களை உற்பத்தி செய்வதற்கானத் தளங்கள் நம்மிடம் உள்ளன" என்றார்.

"சிறந்த வேலை செய்துள்ளீர்கள் பிரான்ஸ்" என்று லெவ் உண்மையான நன்றியுடன் பிரான்ஸைப் பார்த்துப் புன்னகைத்தான்.

பிரான்ஸ் ஸ்லீச்சர் மனதில் இருப்பதை அறியும் நோக்கத்தோடு, அவரின் கண்களை லெவ் உற்றுப்பார்த்தான். லெவ்வின் பார்வை கருப்புப் புள்ளிகளை அள்ளித் தெளித்திருந்த பிரான்ஸின் வெள்ளை நிறச் சட்டையில் விழுந்தபோது, ஏதோ ஓர் இனம்புரியாத உணர்வு அவருக்குள் வரவே, மறுபுறமாகத் திரும்பி பிரான்ஸ் ஸ்லீச்சர் அறையை விட்டு வெளியேறினார்.

சட்டையில் சிதறியிருந்த மையானது நடக்கப்போகும் ஏதோ ஒன்றைக் குறித்து முன்னறிவிக்கும் அடையாளமாக இருந்தது. தன்னுடைய வீட்டை நோக்கி விரக்தியோடு சிந்தித்தவாறே, வேகமாக லெவ் நடந்துசென்றான். இந்த வாரத்தில் நிகழ்ந்தவைகளால் அவனது சிந்தை பாரமானதுபோல் இருந்தது. அதனால் நேரடியாக முற்பிதாக்களைத் தொடர்பு கொள்வதற்காக, அவனுடைய பாக்கெட்டில் வைத்திருந்த கைத்தொலைபேசியை வெளியே எடுத்தான்.

"கூடாத காரியம்" என்று தனது அடிக்குரலில் கூறியவாறு, தொலைபேசியில் எண்களைத் தட்ட ஆரம்பித்தான். "புதிய திராட்ச ரசத்தைப் பழைய துருத்திகளில் வார்ப்பது கூடாத காரியம், இது கூடாத காரியம்" என்று எண்ணியவாறு, லெவ் நேரடி அழைப்புப் பொத்தானை அழுத்தினான். உடனடியாக முற்பிதா ஏனோக்கு தொடர்புக்குள் வந்தார்.

## முற்பிதாவாகிய ஏனோக்கின் உற்சாகமூட்டுதல்

"ஷாலோம் லெவ்" என்றதொரு குரல் அன்பாக அவனை வரவேற்றது. ஏனோக்கின் குரலைக் கேட்ட உடனே ஒரு புத்துணர்ச்சி, அவனது இருதயத்திற்குள் நுழைவதுபோல் அவன் உணர்ந்தான்.

"ஷாலோம் ஏனோக்கு அவர்களே, காரியங்கள் இங்கு கரடுமுரடாக இருப்பதுபோல் தெரிகிறது" என்று சொல்லிவிட்டு லெவ் சற்று நிறுத்தினான். பின்பு ஒரு சிறிய இடைவெளிக்குப் பிறகு, தன்னுடைய மனதில் இருப்பதை எல்லாம் கொட்டித் தீர்த்தான்." கெர்ஹார்டு ஃப்ரூனிங் என்ற ஒருவர் இன்று அலுவலகத்தில் இருந்து தனக்கு உடல்நலம் சரியில்லை என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஏதேன் பழத்தை அவருடைய உணவாக அவர் எடுத்துக்கொள்வதால், உடல்நலக் குறைவு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை அல்லவா? நான் பிரான்ஸிடம் "அவருக்கு என்ன ஆயிற்று" என்று கேட்டபோது, அவர் ஃப்ரூனிங்கிற்குத் திடீரென்று கடுமையான கை வலி ஏற்பட்டதாகவும், அதனால் அவர் சென்றுவிட்டதாகவும் கூறினார். கெர்ஹார்டு ஃப்ரூனிங் கணிணியின்

உள்ளமைப்பில் விபரங்களை ஏதாவது மாற்ற முற்பட்டாரா? என்று நான் பிரான்ஸிடம் நேரடியாகக் கேட்டேன். அவரது கை செயலிழந்துவிட்டது அப்படித்தானே, திரு. ஃப்ரூனிங் என்ன செய்து கொண்டிருக்கிறார்? என்பதைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா? என்றும் பிரான்ஸிடம் கேட்டேன். எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது என்று பிரான்ஸ் என்னிடம் பதில் உரைத்தார். பின்பு மெல்லிய குரலில் இங்கிருப்பவர்கள் மிகவும் பிடிவாதமானவர்கள், உங்களது புதிய செயல்முறை எவ்வாறு வேலை செய்யப்போகிறது என்று எனக்குத் தெரியவில்லை" என்றார்.

லெவ் மீண்டும் சற்று நேரம் பேசுவதை நிறுத்திவிட்டு சற்று யோசித்தான். நான் முட்டாள்தனமாக பேசுவதைப் போல் உணர்கிறேன். உங்களுக்குத்தான் நடந்தவை அனைத்தும் தெரியும்தானே. இன்று மதியம் அவர்கள் இருவரும் உங்களைத் தொடர்புகொண்டு பேசுவதற்கு நான் ஏற்பாடு செய்திருந்தேன் அல்லவா? லெவ் தன்னுடைய கீழ் உதட்டைக் கடித்தவாறு, பின்பு ஏனோக்கின் பதிலுக்காகக் காத்திருந்தான்.

"இது உங்களுக்கான கடினமான நேரம், ஆமாம் லெவ். எனக்கு அனைத்தும் தெரியும், மிகவும் முக்கியமாகக் கிறிஸ்துவிற்கும், அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கும் அனைத்தும் தெரியும். உங்களுடைய கற்பனைக்கும், விழிப்புணர்விற்கும் அப்பாற்பட்ட வகையில் நீங்கள் பராமரிக்கப்படுகிறீர்கள். கண்களுக்குத் தெரியாத ஆவிக்குரிய வல்லமைகளின் செயல்பாடுகள் இருக்கும் புதிய உலகத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் லெவ்" என்றார்.

லெவ் சில அடிகள் மெதுவாக நடந்தான். பின்பு ஒரு நிதானமான வேகத்தில் நடக்க ஆரம்பித்தான், ஆனாலும் அவனது இதயத்துடிப்பு இன்னும் குறையாமல் இருந்தது.

"நீங்கள் கூறுவது உண்மை என்று எனக்குத் தெரியும். பிரான்ஸ் உங்களைப் பிடிவாதமான யூதன் என்று கூறினார் மற்றும் நான் கெர்ஹாரிடம் அவருடைய கையை மீண்டும் செயல்படச் செய்வதற்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்று கூறியபோது, அவர் என்னிடம் என்ன கூறினார் என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்று யூதர்களான நீங்கள் நினைக்கிறீர்கள். ஏன் உடல்நலக்குறைவுள்ள மனிதர் வீட்டிற்குச் செல்ல அனுமதி வழங்கக் கூடாதா?" என்று கேட்டார்.

லெவ் மீண்டும் சற்று நேரம் அமைதியானான். அவனது இருதயம் கோபத்தில் இன்னும் வேகமாகத் துடித்தது. ஏனோக்கு எந்தப் பதிலும் சொல்லாமல் இருந்ததால் தொடர்ந்து பேசுவதற்குத் தயக்கமாக இருந்தது. அமைதியானது சிறிது நேரம் நீடித்து பின்பு, தர்ம சங்கடமான அமைதியாக மாறியது.

"ஏனோக்கு என்னை மன்னித்து விடுங்கள், நான் மனித இயல்புகளினால் ஆட்கொள்ளப்பட்டு விட்டேன். பழைய பழக்கவழக்கங்கள் என்னுள் இன்னும் ஆழமாகப் பதிந்துள்ளன. கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாக, செங்கடல் இரண்டாகப் பிரிந்ததை நான் பார்த்திருக்கிறேன். மன்னாவிற்காக இஸ்ரயேலர்கள் புகார் செய்ததைப் போலவே, இப்போது நானும் உங்களிடம் புகார் செய்கிறேன்" என்றான்.

"நீங்கள் ஒரு விசித்திரமான இடத்தில் புதிய சவால்களுடன் இருக்கிறீர்கள். நீங்கள் கடினமாக உழைப்பதால் உங்கள் நலனையும் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் லெவ். அப்போதுதான் உங்களால் சவால்களைச் சந்திக்கத் தயார் நிலையில் இருக்க முடியும். தங்களுடைய ஊழியத்தின் நிமித்தமாக தனிமையில் வசிப்பவர்கள் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்களோடு நீங்கள் உங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள; ஒருவரோடோருவர் தொடர்பில் இருப்பது நல்லது, அப்போது தான் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளலாம்" என்றார்.

தனது பரபரப்பான வருகைக்குப் பின்னர், இப்போது லெவ் சற்று ஓய்ந்திருக்கையில்தான், முதன்முறையாக அவன் தனிமையில் இருப்பதை உணர்ந்தான். உயிர்த்தெழுந்ததில் இருந்து முதன்முறையாக அவனும், ரெபெக்காளும் வெவ்வேறு பணியினைச் செய்வதற்காகப் பிரிந்திருப்பதை அவன் உணர்ந்தான். அது அவனுக்குள் எத்தகையதொரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் இப்போது அவனால் உணரமுடிந்தது மற்றும் அவன் பழக்கமாக்கிக் கொண்டிருந்த ஜெபிப்பதையும், தியானிப்பதையும் கூடச் செய்வதற்கு நேரம் இல்லாது வேலையில் ஈடுபட்டிருப்பதையும் அவனால் உணரமுடிந்தது.

"நன்றி ஏனோக்கு அவர்களே, என்னுடைய சவால்களை எதிர்கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது என்று நினைக்கிறேன்" என்றான்.

"ஏனோக்கு, ஷாலோம் லெவ்" என்றார்.

"ஷாலோம் ஏனோக்கு அவர்களே" என்று லெவ் மறுமொழியாக மெதுவாகக் கூறியவாறு, தன்னுடைய நடையை வேகப்படுத்தினான். தேவனுடனும், சக மனிதர்களுடனுமான தன்னுடைய தொடர்பை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவனாக நடந்தான்.

## தொலைந்துபோன குழந்தை

"உங்களைப் பார்த்தால், உங்களுக்கு ஏதோ உதவி தேவைப்படுவதைப் போல் தோன்றுகிறது. நீங்கள் விரும்பினால் உங்களது வீட்டிற்கு உங்களை நான் அழைத்துச் செல்கிறேன்" என்று பயந்திருந்த பெரிய விழிகளைக் கொண்ட சிறுமியிடம் லெவ் தனது விருப்பத்தைக் கூறினான். வேறு என்ன கூறுவது என்று அவனுக்குத் தெரியவில்லை.

சிறுமி தனது தலையை வேகமாக ஆட்டி மறுப்பு தெரிவித்தாள்.

"பெயர் தெரியாத நபரிடம் பேசக்கூடாது" என்று சிறுமி கூறினாள். தெருவிளக்கு அவளது முகத்தில் பட்டதால் அவளது முகம் பிரகாசமாக இருந்தது. அதனால் அவள் கண்களில் கண்ணீருடன் பதிலளிப்பதை லெவ்வால் காண முடிந்தது.

"சரி, நீங்கள் கூறுவது உண்மைதான். ஆனால் உங்களைப் போன்ற சிறு பெண் இரவு நேரத்தில் தனியாக வெளியில் இருக்கக்கூடாது. நீங்கள் உங்கள் அம்மா, அப்பாவுடன் வீட்டில் இருப்பதை விட்டுவிட்டு ஏன் வெளியே வந்தீர்கள்?" என்று கேட்டான்.

"மிஸ்டர் நான் தொலைந்து விட்டேன். என் வீட்டிற்குச் செல்லும் வழி எனக்குத் தெரியவில்லை" என்று சிறுமி பதிலளித்தாள்.

சிறுமி தனது சிறு கையை அவனிடமாக நீட்டினாள். அவன் குனிந்து அதைப் பற்றிக் குலுக்கினான். சிறுமி தன்னுடைய கழுத்தைத் தன்னால் முடிந்தவரை பின்புறமாகச் சாய்த்து, லெவ்வைப் பார்ப்பதற்கு வசதியாக வைத்துக்கொண்டு நின்றாள்.

"நீங்கள் உயரமாக இருக்கிறீர்கள்" என்றாள்.

"ஆமாம், நான் சற்று உயரம்தான்" என்று கூறிச் சிரித்துவிட்டு, அவள் அருகில் மண்டியிட்டு சிறுமியை நேராகப் பார்க்கும் படியாக லெவ் நின்றுகொண்டான்." கிறிஸ்துவும், அவருடைய அபிஷேகம் பண்ணபட்டவர்களும் உங்களைக் கவனித்துக் கொண்டிருப்பதால், இந்த உலகில் உங்களுக்கு எவரும் தீங்கிழைக்க இயலாது, உங்களுக்கு இது தெரியும்தானே? என் பெயர் லெவ்" என்றான்.

"என் பெயர் ரூத். எனக்கு பூனைக் குட்டிகள் மிகவும் பிடிக்கும்" என்று சிறுமி கூறினாள்.

நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு அந்தச் சிறுமி, லெவ் அவளது பெற்றோரை அழைப்பதற்குச் சம்மதித்தாள். அவன் சிறுமியை தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றான். லெவ், சிறுமிக்குச் சில ஏதேன் பழங்களையும், ஏதேன் தேநீரையும் சாப்பிடுவதற்குக் கொடுத்தான். பிறகு அவன் "டௌவ் லவ்ஸ்" சேவை நிலையத்தைத் தொடர்புகொண்டு காணாமல்போன குழந்தை கண்டுபிடிக்கப்பட்டுவிட்டதாகவும் மற்றும் சிறுமியை அவளது வீட்டிற்கு அழைத்துச்செல்வதற்கு லெவ் தயாராக இருப்பதாகவும் கூறினான். சிறிது நேரத்திற்குப் பிறகு பயந்துபோய் இருந்த பெற்றோர், சிறுமி பாதுகாப்பாக இருக்கிறாள் என்பதைக் கேட்டு நிம்மதி அடைந்திருப்பதாக சேவை நிலையத்தின் தலைவர் அவனிடம் கூறினார். அவர் லெவ்வை யார் என்பதையும், முற்பிதாக்களுடன் லெவ்விற்குத் தொடர்பு இருப்பதையும் கருத்தில் கொண்டு, அந்தச் சிறுமியை அவளது வீட்டில் விட்டுவிடும்படியாகவும், சிறுமியின் வீட்டிற்குச் செல்வதற்கான வழியையும் சேவை நிலையத்திலிருந்து லெவ்விற்குக் கூறினார்.

"சரி, ரூத் வா நாம் உனது வீட்டிற்குச் செல்லலாம்" என்றான்.

ரூத் சோபாவில் பாதி தூக்கத்தில் அமர்ந்திருப்பதை லெவ் கண்டான்.

"எனக்கு அந்தப் பழம் பிடித்திருக்கிறது" என்று அவள் பாதித் தூக்கத்தில் கூறினாள்.

"நீங்கள் இதற்கு முன்பாக இதைச் சாப்பிட்டதில்லையா?" ஏதேன் பழத்தை அனைவருக்கும் வழங்கும் திட்டமானது, இன்னும் இவர்களது வீட்டைச் சென்றடையாததைக் கண்டு ஆச்சரியத்தோடு லெவ் கேட்டான்.

"இந்தப் பழம் அற்புதங்களைச் செய்யும் வல்லமை பெற்றது என்றும், நோய்வாய்ப்பட்டு இருப்பவர்களை இப்பழம் குணப்படுத்தும் என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். எனது சகோதரிக்கு இந்தப் பழம் தேவைப்படுகிறது. ஏனென்றால் அவள் நோய்வாய்ப்பட்டு இருக்கிறாள். ஆனால் அனைவருக்கும் போதுமான அளவு பழம் இல்லாததால் எங்களுக்குக் கிடைக்கவில்லை, ஏனென்றால் யூதர்கள் நியாயமில்லாமல் நடந்துகொள்கிறார்கள்" என்றாள்.

ரூத் தன்னுடைய கோட்டை அணிந்துகொள்வதற்கு உதவியவாறு லெவ், தனது புருவத்தை சுளித்து யோசித்தான். பின்பு கார் இருக்கும் இடத்திற்குச் செல்வதற்காக, அவளைத் தூக்கிக் கொண்டான். லெவ் கேள்விகளைக் கேட்பதும், ரூத் அதற்கான பதில் அளிப்பதுமாக இருவரும் பேசிக் கொண்டே சென்றனர். மெதுவாக ஒரே சீரான வேகத்தில் லெவ் காரைச் செலுத்தினான்.

"திரு.லெவ், யூதர்கள் என்பவர்கள் யார்?" என்று ரூத் கேட்டாள்.

"யூதர்கள் என்பவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபை கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு தாத்தாவாகக் கொண்டிருப்பவர்கள்" என்று லெவ் பதிலளித்தான்.

"யாக்கோபு, பாறையின் மீது தூங்கினவர் தானே?" என்று ரூத் மீண்டும் கேட்டாள்.

"ஆம், அவர்தான்" என்று லெவ் மீண்டும் பதிலளித்தான்.

"யாக்கோபு, தேவ தூதர்கள் ஏணியில் ஏறுவதையும், இறங்குவதையும் கண்டார் தானே" என்று ரூத் மீண்டும் கேட்டாள்.

"ஆம், சரிதான். நீங்கள் யாக்கோபைப் பற்றி அதிகமாகத் தெரிந்துவைத்துள்ளீர்களே" என்றான்.

"என்னுடைய அப்பா யூத ஜனங்கள் நியாயமில்லாமல் நடந்துகொள்வார்கள் என்றும், முற்பிதாக்களும் நியாயமில்லாமல்தான் நடந்துகொள்கிறார்கள் என்றார்" என்று சிறுமி கூறினாள்.

தனது காரை அவர்களது வீட்டிற்கு முன்பாக நிறுத்தியவாறு லெவ் அவளைப் பார்த்தான். "சில நேரங்களில் ஜனங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள மாட்டார்கள். நான் உனது அப்பா, அம்மாவிடம் பேச விரும்புகிறேன். என்ன நடந்துகொண்டிருக்கிறது என்றும், ஏன் உங்களுக்கு இன்னும் ஏதேன் பழம் கிடைக்கவில்லை என்றும் அறிய விரும்புகிறேன்" என்றான்.

"நீங்கள் நியாயமானவர் திரு. லெவ்" என்று கூறியவாறு சிறுமி தன் கரங்களை நீட்டி லெவ்வின் கரத்தைப் பிடித்துக்கொண்டாள். கற்களால் ஆன நடைபாதையில் இருவரும் அவளது வீட்டை நோக்கி நடந்தனர். அவர்கள் பாதி வழியில் நடந்துகொண்டிருந்தபோதே, அவர்களது வீட்டின் கதவு திறந்தது. மிகவும் பதட்டமடைந்திருந்த பெற்றோர்கள் இருவரும் தங்களது மகளைப் பார்ப்பதற்காக விரைந்து ஓடி வந்தனர்.

## ரூத் தனது வீட்டிற்குத் திரும்புதல்

அலெக்ஸ் மற்றும் கேத்தரின் லெவ்வை அன்புடன் வரவேற்று, பாசத்துடன் உபசரித்தனர். அவர்களது பெயர்கள் அவனைத் திகைக்கச் செய்தன. லெவ் ஏற்கெனவே இவர்களின் பெயர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான்.

"கேத்தரினும், நானும் சண்டையிட்டுக் கொண்டிருக்கையில் அவளைக் கவனிக்க முடியாமல் போனதால், ரூத் முன்பக்கமாகவிருந்த கதவின் வழியாக வெளியே போயிருக்கலாம்" என்று அலெக்ஸ் கூறினர்.

"ரூத்தை எங்களிடம் திரும்ப அழைத்து வந்ததற்காக நன்றி" என்றனர்.

"ரூத்தை, இங்கு அழைத்து வரும் வாய்ப்புக் கிடைத்ததில் நான் மகிழ்கிறேன் மற்றும் அவள் யாக்கோபைக் குறித்ததான நிறைய விஷயங்களை அறிந்திருக்கிறாள்" என்றான்.

"ஏசா, யாக்கோபை வெறுத்தார். ஆனால் பின்னர் இருவரும் நண்பர்களானார்கள்" என்று ரூத் தன்னுடைய கருப்பு, வெள்ளை நிறங்களைக் கொண்ட பூனைக்குட்டியோடு தரையில் அமர்ந்து விளையாடியவாறு கூறினாள்.

"உங்களுக்கு இன்னும் ஏதேன் பழம் கிடைக்கவில்லை என்றும், உங்களுக்கு நோய்வாய்ப்பட்ட ஒரு மகள் இருப்பதாகவும் ரூத் என்னிடம் கூறினாள். உங்கள் பங்கு ஏதேன் பழத்தை, உங்கள் குடும்பம் ஏன் இன்னும் பெறவில்லை என்று எனக்குப் புரியவில்லை. நான் மறுசீரமைத்துக் கொண்டிருக்கும் இடமான விமானத் தொழிற்சாலையில் ஏற்படுத்தும் மாற்றங்களிலும் கூட, ஒவ்வொருவரும் கவனிக்கப்படுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் தேவையானவைகள் வழங்கப்படுகின்றன" என்றான்.

"ஆம், கார்மலினா எங்களது மூத்த மகள். அவள் இதயக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு பதின்ம வயதுப் பெண். தூங்குவது மட்டுமே அவளால் செய்ய முடிந்த ஒரே வேலை. அவளை நினைத்தால் எனக்குக் கவலையாக இருக்கிறது" என்று கேத்தரின் கூறினார்.

அலெக்ஸின் கோபமானக் குரல் கேத்தரின் பேசுவதை நிறுத்தியது.

"இதற்காகவே நாங்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தோம். புதிய அமைப்பு முறையானது கொண்டு வந்திருக்கும், அனைத்து வியப்பான காரியங்களையும் நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் சாப்பிடுவதற்கே பணம் இல்லாமல் தான் இருக்கிறோம். அவர்கள் என்னை உங்களுடைய விமானத் தொழிற்சாலைக்குச் சென்று கேட்கச் சொல்கிறார்கள். முற்பிதாக்களின் ஆளுகையின் கீழ் நாங்கள் எப்போதுமே நியாயமாக நடத்தப்படுவோம் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் சூழ்நிலைகள் அப்படியாக இல்லை" என்றார்.

லெவ் அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, தனது காரை நோக்கி ஓடினான். பின்பு கைநிறைய உணவுப் பொருட்களுடன் திரும்பினான்.

"ஏதேன் தேநீரை கார்மலினாவினால் முடிந்த அளவிற்கு குடிப்பதற்குக் கொடுங்கள். ஏதேன் பழத்தையும் தினமும் ஒன்று சாப்பிடக் கொடுங்கள். அவளது உடல் நலத்தில் கூடிய விரைவில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். இனிமேல் உங்களுக்கு ஏதேன் பழம் கிடைக்கும் படியாகப் பார்த்துக் கொள்கிறேன்" என்றான்.

கேத்தரின் தேநீரைத் தயார் செய்வதற்காகச் சமையல் அறைக்கு விரைந்தார்.

அலெக்ஸ், லெவ்வை ஆச்சரியத்தோடு பார்த்தார். "யார் நீங்கள்?" அவர் குரல் கிட்டத்தட்ட பயபக்தியுடன் காணப்பட்டது.

"என் பெயர் லெவ் ஆரோன். பழைய உலகில் இருந்த பேராசை என்ற குணலட்சணத்தினால் உண்டான விசித்திரமான தனிப்பண்புகளை, இந்தப் புதிய உலகின் அமைப்பிலிருந்து எடுத்துப்போடுவதற்கு உதவுவதற்காக இங்கு அனுப்பப்பட்டிருக்கிறேன். உங்களுக்கானச் சொந்த வீடு கட்டி முடிக்கப்படும் வரையிலும், நீங்கள் ஆறு மாத காலத்திற்கான வேலை நீக்க ஊதியத்தைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் ஒதுக்கீடு மூலமாக, அதுவும் கார்மலினாவின் உடல்நலக் குறைவைக் கருத்தில் கொண்டு விசேஷ முதன்மை ஒதுக்கீடு மூலமாகத் தேவையான அளவு ஏதேன் பழத்தை, இந்த நேரத்தில் நீங்கள் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். இதுவே முற்பிதாக்களுக்கும், ஐரோப்பிய தேசங்களுக்கும் இடையிலான ஒப்பந்தம்" என்றான்.

"நான் உங்களிடமும், உங்கள் ஜனங்களிடமும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன், லெவ். நான் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அறிவேன். ஆனால் சில கடின இருதயம் கொண்ட யூதர்கள் எப்படியோ, உயர் அதிகாரத்தில் இருந்து கொண்டு ஆளுவதற்கு ஊடுருவி மாற்றம்

செய்துவிட்டார்களோ என்று நினைத்தேன், அதனால் யூத ஜனங்கள் மீது நான் கோபமடைந்திருந்தேன்" என்றார்.

"திரு.லெவ்வின் கொள்ளு, கொள்ளு, கொள்ளு, கொள்ளு தாத்தா ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்கள் ஆவர். திரு.லெவ் மிகவும் நல்லவர் அப்பா" என்று ரூத் கூறினாள்.

அலெக்ஸ் தனது மகளின் அருகில் மண்டியிட்டு அமர்ந்து அவளது முகத்தைத் தன் கைகளால் ஏந்தியவாறு, இருவரது கண்களும் நேரடியாகச் சந்திக்கும்படியாக அமர்ந்தார்.

"அப்பா சில தவறான விஷயங்களை உனக்குக் கூறியிருக்கிறேன். யூத ஜனங்களும், முற்பிதாக்களும் கூட நம்மை நியாயமாகத்தான் நடத்துகின்றார்கள். ஆனால் இன்னும் சிலர் தங்களுக்கானப் பாடங்களைக் கற்றுக் கொள்ளவில்லை. அதனாலேயே கார்மலினாவின் உடல் நலம் தேறுவதற்கு நமக்குத் தேவையான ஏதேன் பழங்கள் கிடைக்காமல் போய்விட்டது. ஆனால் இப்போது திரு.லெவ் இங்கே இருப்பதால் காரியங்கள் சரியாகிவிடும்" என்றார்.

"எனக்கு திரு.லெவ்வைப் பிடிக்கும்" என்று திரும்பி லெவ்வைப் பார்த்தவாறு ரூத் பதில் அளித்தாள்.

அன்பினையும், உண்மையினையும் வெளிப்படுத்துவதற்கு இந்தக் குழந்தையின் இருதயம் எவ்வளவு திறந்ததாக இருக்கிறது என்பதைக் கண்ட லெவ்வின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"எனக்கும் உன்னைப் பிடிக்கும் ரூத், மன உளைச்சல் மிகுந்த இந்த நாளை நீ பிரகாசமாக்கி விட்டாய்" என்றான்.

அப்போது கேத்தரின் அறைக்குள் நுழைந்தார். ஒருவிதமான நிம்மதி அவரது முகத்தில் தென்பட்டது.

"அலெக்ஸ், கார்மலினாவின் நிறத்தில் முன்னேற்றம் தெரிகிறது" என்று அலெக்ஸின் காதில் அனைவரும் கேட்கும்படியாகக் கிசுகிசுத்தாள்.

ரூத் தன் அம்மாவிடம் ஓடி, அவளது அம்மாவின் கரங்கள் தனது கரங்களை இணைக்கும் படியாக அடித்தாள். "கார்மலினாவால் நாளை என்னோடு விளையாட முடியும், சரிதானே அம்மா" என்று கேட்டாள்.

கேத்தரின் கண்களில் கண்ணீர் வழியப் புன்னகைத்தவாறு "சரிதான், நாளை இல்லை என்றாலும் விரைவில் விளையாடுவாள்" என்றார்.

அலெக்ஸை அடுத்த நாள் ஆலையில் வந்து தன்னைச் சந்திக்குமாறும், அதற்கான ஏற்பாட்டைத் தான் செய்வதாகவும் லெவ் கூறினான். நீங்கள் அங்கு வந்தால்தான் என்னால் அநேக விஷயங்களைச் சரி செய்யமுடியும் என்றும் கூறினான். அப்பாவி மக்கள் அநியாயமாக நடத்தப்படுவதை உணர்ந்ததால் லெவ்வின் கோபம் அதிகரித்திருந்தது, அதற்கும் மேலாக யாரோ ஒருவரின் பேராசையின் காரணமாக முற்பிதாக்கள் தவறாகக் கருதப்பட்டு வருவது அவனது கோபத்தை மேலும் அதிகரித்தது. லெவ், பிரான்சு நாட்டிற்கு வந்தவுடன் நிறுவனத்தின் நிதி நிலைமையைச் சரிசெய்யாமல் இருந்தது, இவ்வாறு நடந்ததற்கான காரணமாக இருந்திருக்குமோ என்றும் யோசித்தான்.

லெவ், தனது பார்வையை அலெக்ஸிடம் இருந்து கேத்தரினிடமும், பின்பு ரூத்திடமும் திருப்பினான். ரூத் தன் தாயின் அருகில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தாள்.

"என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை, அலெக்ஸ்" என்று லெவ் கூறினான்.

கேத்தரின் ஏதோ சொல்வதற்கு முனைவதுபோல் தனது வாயினைத் திறந்தார், பின்பு எதுவும் கூறாமல் தூங்கிக்கொண்டிருந்த தனது மகளைத் தனது கரங்களால் ஏந்துவதற்கு ஏதுவாக

மண்டியிட்டுக் கொண்டு, அவளைத் தூக்கித் தன்னோடு அணைத்தவாறு தன் நினைவுகளைத் தொலைத்தவளாக அப்படியே அமர்ந்தார்.

## பதிவேடுகளைச் சரிசெய்தல்

இரவு நேரத்தின் நல்ல தூக்கத்தினாலும், வேதாகமத்தைப் படிப்பதற்கும், தியானிப்பதற்கும் நேரம் ஒதுக்கியதினாலும், உற்சாகமான காலை வழிபாட்டுச் சேவையினாலும் லெவ் புத்துணர்ச்சிப் பெற்றான். தன்னுடைய பாதையில் வரவிருக்கும் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்குப் போதுமான அளவு தயாராக இருப்பதுபோல் உணர்ந்தான். ஆலையில் தனது அறையின் மேசையில் இருந்த தொலைபேசியை எடுத்து திரும்பவும் ரெபெக்காளைத் தொடர்புகொள்ள முயன்றான். ஆனால் ரெபெக்காளுடன் இணைப்புக் கிடைக்கவில்லை. அவளிடம் கூறுவதற்கு நிறையக் காரியங்கள் இருந்தன, இருப்பினும் பேசமுடியாமல் இருப்பதை எண்ணிச் சோர்வுக்குள்ளாவதற்கு நேரம் இல்லாத வகையில், அன்றைய நாளின் நிகழ்வுகள் அவனுக்கு உணர்வுப்பூர்வமாக அமைந்தன.

அலெக்ஸ் அவனது அலுவலகத்திற்கு வந்தான். அதன்பிறகு, லெவ் கணக்குப் புத்தகக் காப்பாளர் மரியான் கெஸ்ட்டால்டை, கடந்த சில மாதங்களில் செலுத்த வேண்டியிருந்த பணத்தைக் கணக்குப் பார்ப்பதற்காகத் தன்னுடைய அறைக்கு வருமாறு அழைத்தான். அலெக்ஸ் தனது குடும்பத்திற்கு உண்டான அவல நிலையைக் குறித்து விவரித்தபோது, அசௌகரியத்தை ஏற்படுத்தும்படியான உரையாடல் அவர்களுக்கிடையே எழுந்தது மற்றும் லெவ், மரியானிடம் நிறுவனத்தின் கொள்கைகள் குறித்த கேள்விகளை எழுப்பினார்.

"மரியான், நீங்கள் இந்த விஷயத்தில் என்னிடம் முழுமையான உண்மையுடன் இருக்க வேண்டும். நிறுவன நிதியுடன் விளையாடும் நாட்கள் முடிவுக்கு வந்துவிட்டன. நிறுவன ஒப்பந்த விதிமுறைகளின்படி, பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்து தங்களது செலவிற்கானப் பணத்தைச் சம்பாதிக்கும் நாள் வரையிலும், அதாவது ஆறு மாதக் காலம் வரையிலும் அவர்களுக்கான ஊதியம் வழங்கப்பட்டு இருக்க வேண்டும். நீங்கள் இதனை நன்கு புரிந்துகொண்டு உள்ளீர்களா?" என்று லெவ் கேட்டான்.

முதலில் மரியான் அந்தக் கேள்விக்குப் பதில் கூறுவதைத் தவிர்த்துவிட்டு, லெவ் தன்னை எதைச் செய்யக் கூறினாரோ அதனையேதான் செய்ததாகச் சாதித்தார். இறுதியில் கதறி அழுதவாறு பிரான்ஸும், கெர்ஹாட்டும் இணைந்து செயல்பட்டு, தன்னை ஒப்பந்தத்தை மாற்றி அமைக்க வலியுறுத்தியதாகக் கூறினார். அவளது பங்காகக் கூடுதல் பணம் கொடுப்பதற்கு அவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் கூறினார்.

அலெக்ஸின் குடும்பத்திற்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, அலெக்ஸிற்குக் கொடுக்கவேண்டிய பணத்தை அவரிடம் சரிபார்த்துக்கொள்ளுமாறு மரியானையிடம், லெவ் கூறினான். அவருக்கானப் புதிய வீட்டைக் கட்டுவதற்காக, லெவ் நில அளவை அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு பேசினான். அவர்கள், பசுமை வீடானது ஒருங்கிணைப்பதற்குத் தயார் நிலையில் இருப்பதாக அவனிடம் கூறினார்கள். அலெக்ஸ் குடும்பத்தினர், அவர்களது பங்கு ஏதேன் பழங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளை லெவ் உறுதி செய்துகொண்டான். அவர்களது ஏதேன் மரங்கள் கனிகொடுக்கத் தொடங்கும் வரையிலும், அவர்களுக்கான ஏதேன் பழங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினான். பின்பு லெவ், அலெக்ஸ் உடன் மதிய உணவினை உட்கொண்டான்.

அலெக்ஸ், லெவ் அவர்களது குடும்பத்திற்குச் செய்த அனைத்து உதவிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். மறுசீரமைப்பின் வேலையில் தானும் உதவுவதற்கு விரும்புவதாகவும் லெவ்விடம் கூறினார்.

"நீங்கள் ஏன் உங்கள் நண்பர்களை அழைத்து, பல கட்டடக் குழுக்களை ஒன்றிணைத்து ஒரு குழுவை உண்டாக்கக் கூடாது? அநேகப் பசுமை வீடுகள் ஒருங்கிணைப்பதற்குத் தயார் நிலையில் இருக்கின்றன மற்றும் எந்தவொரு பிரச்சனை ஏற்பட்டாலும் ஏதேன் மரத்தினைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். கட்டடத் தொழில்நுட்பங்களைக் குறித்ததான அறிவுறுத்தல்களைப் பெற்ற பிறகு, நீங்கள் குழுவாக இணைந்து ஒருவருக்கொருவர் உதவி செய்து

உங்கள் புதிய வீடுகளைக் கட்டி முடிக்கலாம். உங்கள் மரங்கள் பழங்களை உற்பத்திச் செய்யத் தொடங்கியவுடன் நீங்கள் தன்னிறைவு பெற்று விடுவீர்கள்" என்று லெவ் கூறினான்.

"முற்பிதாக்களின் நியாயமான முடிவுகளின் மீது யாருக்காவது தவறான அபிப்ராயம் இருந்தால் நான் நிச்சயமாக அவற்றைச் சரி செய்வேன்" என்று புறப்படுவதற்காக எழுந்தவாறே அலெக்ஸ், லெவ்விற்கு உறுதியளித்தார். "எனக்கு இன்னும் புரியாத காரியங்கள் இருந்தாலும் கூட, நான் மேசியாவை முழுமையாக நம்பத் தொடங்கிவிட்டேன். மிக்க நன்றி லெவ், நன்றி கூறுதல் மட்டும் போதாது" என்றார்.

பிரான்ஸ் மற்றும் கெர்ஹார்டைப் பணிநீக்கம் செய்யுமாறு வெர்னர்கார்டனிடம், லெவ் கூறினான். இருவரையும் அழைத்து முற்பிதாக்களுடன் அவர்கள் தொடர்புகொள்ள வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தினான். கெர்ஹார்டு அடக்கிவைத்திருந்த கோபத்தில் "எனக்கு முந்தைய உலகமே பிடித்திருந்தது. யூதர்களான நீங்கள் அனைத்தையும் கைப்பற்றிவிடலாம் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

* * *

***"முரட்டாட்டமுள்ள புத்திரருக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் என் வாக்கைக் கேளாமல்..." (ஏசாயா 30:2)***

# அத்தியாயம் - 26

புயல் சற்று தணிந்தபோது, பிரான்சு நாட்டில் தனது இரண்டாம் கட்ட வேலையைத் தொடங்குவதற்கு லெவ் தயாராக இருந்தான். தானியங்கி (Automotive) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களிடம், அவர்களது வேலையைக் குறித்தான குறிப்புகளைக் கொடுத்துக்கொண்டிருந்தான். லெவ் வண்டியின் வேகத்தைக் குறைக்கவேண்டியதன் அவசியத்தையும், மனிதச் செயல்பாட்டிற்கு முன்பாகத் தானாகவே இயங்கி ஓட்டத்தை நிறுத்தும் தொடர்பில்லாத இயங்கும் உந்து கருவியை (anti-contact sensor) பொருத்த வேண்டியிருப்பதன் அவசியத்தையும் விளக்கினான். பாதுகாப்பிற்கான புதிய வழிமுறையும், சுற்றுச்சூழல் தொடர்பான புதிய வழிமுறையும் நல்ல வரவேற்பைப் பெறவில்லை. அதிவேக விரைவுச்சாலையில் வேக வரம்புகள் தொடர்பாக விவாதம் ஏற்பட்டது.

உயரமான பொன்னிறக்கேசம் கொண்ட இளவயது ஆடவர் ஒருவர் லெவ்வினது விளக்க உரையைக் குறுக்கிட்டார். "நான் எங்குச் செல்கிறேன் என்பதைத் தெரிந்துகொள்ளவும், செல்லும் இடத்திற்கு விரைவாகச் செல்லவேண்டும் என்றும் நான் விரும்புகிறேன்" என்றான்.

அறை முழுவதும் சிரிப்பொலி நிரம்பியது, அனைவரும் கரவோசை எழுப்பினார்கள். லெவ்வும் அவர்களுடன் சேர்ந்து சிரித்தான்.

"ம்ம்.. என்னால் உங்களுக்குள் இருக்கும் வேகத்தை உணரமுடிகிறது. நித்திய காலம் வாழ்வதற்கான வாய்ப்பு நமக்கு இருப்பதால், நாம் செல்ல விரும்பும் இடத்திற்குச் செல்வதற்குத் தேவையான காலங்கள், இந்தப் புதிய பூமியில் நமக்கு இருக்கும்" என்று லெவ் பதில் அளித்தான்.

மீண்டும் சிரிப்பொலியும், கரவோசையும் அறையை நிரப்பியது.

"பாதுகாப்பு என்பது பேச்சு வார்த்தைக்கு உட்பட்டது அல்ல" என்று கூறியவாறு லெவ் தனது பேச்சினைத் தொடர்ந்தான். "வேறு ஏதாவது கேள்விகள் இருக்கிறதா?" என்று தனது விளக்க உரையை முடிக்கும் தருவாயில் கேட்டான்.

அதே இளவயது ஆடவர் மீண்டும் தனது கரங்களை உயர்த்தினார். "எனக்கான சொந்த வீடு கட்டிமுடிக்கப்பட்டவுடன், நான் இங்குத் தொடர்ந்து பணிபுரிவேனா என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கான வீடு கட்டிமுடிக்கப்பட்டவுடன் எனது ஊதியம் நின்றுவிடும். எனது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு அது உதவாது இருக்கும், இந்தக் கார்களைத் தயாரிப்பதில் நான் ஏன் தன்னார்வத் தொண்டு செய்ய முன் வரவேண்டும். இதிலிருந்து எந்தப் பயனும் என்னால் பெற்றுக் கொள்ள முடியாதபோது நான் ஏன் என் மூளையைக் கசக்கி, எனது உடலை வருத்தி வேலை செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

அறை முழுவதிலும் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். அதனால் அறை முழுவதிலும் சத்தம் உண்டானது. சிலர் லெவ்வை ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் பேசினார்கள்.

"எல்லாவற்றிற்கும் மேலாக, பார்ப்பதற்கு நிறைய இடங்களும், ஓய்வெடுப்பதற்குக் கடற்கரையும், உடல்நலம் பலப்படுவதற்காக ஏறுவதற்கு மலைகளும் உள்ளபோது, நான் ஏன் இந்த வேலைப் பளுவைச் சுமக்கவேண்டும்?" என்று அந்த இளைஞன் சக ஊழியர்களின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பும் வகையில் தனது குரலை உயர்த்திப் பேசினான்.

"ஏனென்றால் இவைகளை விட வாழ்வின் மிகச்சிறந்த அனுபவங்களை நீங்கள் இழக்க நேரிடும்" என்று தனது குரலை உயர்த்தி லெவ் பதிலளித்தபோது அறை முழுவதும் அமைதியானது". அன்பு என்றால் என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு நீங்கள் தவறிவிடுவீர்கள். மற்றவர்களுக்கான வீடுகளைக் கட்டுவதற்கு உதவும்போதும், அன்புக்குரியவர்கள் உயிர்த்தெழுந்து வருகையில், அதற்காக அவர்களது குடும்பத்தினர்கள் தயார் ஆகுவதற்கு உதவும்போதும் இருப்பதைப் போன்றதான மகிழ்ச்சியை நான் வேறு எதிலும் பெற்றதில்லை. நீங்கள் ஏறி இருக்கும்

எந்த மலையையும் விட, ஏறுவதற்கு மிகச் சவாலான மலை இருக்கிறது. எவரெஸ்ட் சிகரத்தில் ஒருவர் ஏறுவதை விட, இப்படியானக் காரியங்களைச் செய்வதற்கு அதிக துணிச்சலும், மனோதைரியமும் தேவைப்படுகின்றது. இவைகளைச் செய்வது உற்சாகமானதும் கூட. இது பாவம், மரணம், பலவீனம், பகைமை, சுயத்தைச் சார்ந்திருத்தல் போன்ற தடைகளைக் கொண்ட மலைத்தொடர் ஆகும். நீங்கள் கடற்கரையில் ஓய்வெடுப்பதற்கு உங்களுக்கு நித்தியகாலங்கள் இருக்கிறன. ஆனால் இப்படியானக் காரியங்களைச் செய்வதற்கு ஆயிரம் வருடத்திற்கும் குறைவான வருடங்களே உள்ளன" என்றான்.

அறைமுழுவதும் மீண்டும் கரவோசை எழும்பியது. மேலும் தொழில்நுட்ப வளர்ச்சியின் உயரத்தில் இருக்கும் இந்த நேரத்தில், அதற்காகத் தங்களது நன்றியுணர்வைச் செலுத்த வேண்டுமா அல்லது அதற்குப் பதிலாக தங்களது வாழ்க்கையை எளிதாகவும், பொழுதுபோக்காகவும் வாழ்வதற்கான இரண்டாவது விருப்பத்தினைத் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ற குழப்பத்தில் இருந்த பெரும்பாலானவர்களை லெவ் கண்டான். குரல் எழுப்பிய அந்த இளைஞன், லெவ்வினுடைய கருத்துகளால் பிரிவினையையும், இடையூறினையும் உண்டாக்கும் நோக்கத்தில் மீண்டும் தொடர்ந்தான்.

"கடற்கரையில் ஓய்வெடுக்கும் செயலானது என்னைச் சோர்வடையச் செய்யக்கூடும், இதற்கே நித்தியகாலங்கள் வழிவகுக்கும் என்று நான் நினைக்கிறேன்" என்று மீண்டும் உரத்த குரலில் கூறினான்.

லெவ், அந்த இளைஞனை நோக்கி சில அடிகள் எடுத்துவைத்தான். அறை மீண்டும் நிசப்தமானது. "உங்களுக்கு நான் ஒன்றை அறிவிக்க வேண்டியிருக்கிறது" என்று லெவ் தீவிரமானக் குரலில், கடுமையாகக் கூறினான். பின்பு குரல் கொடுத்த அந்த இளைஞனை நேராகப் பார்த்தான், பின்னர் அவனது பார்வை கூடியிருந்தவர்கள் பக்கம் திரும்பியது.

"இந்த வேலையில் ஈடுபட விருப்பம் இல்லாதவர்கள், இந்த வேலையிலிருந்து நின்று விடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொருவரும் தங்களுக்குப் போதுமான அளவு வசதிகளைப் பெற்றுக்கொண்ட பிறகு, ஒரு நாளிற்கு ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்கள் வேலை செய்வதே போதுமானதாக இருக்கும் மற்றும் விடுமுறைகளும், சுற்றுலாச் செல்வதற்கான நேரங்களும் கூட நிறைய இருக்கும். ஆனால் மாறுதல் நடந்து கொண்டிருக்கும் இந்த நாட்களில் ஒவ்வொருவரும் கூடுதல் நேரம் வேலைசெய்வது அவசியம். இந்த வேலையைத் தொடர்வதற்கு உங்களுக்கு விருப்பம் இல்லையென்றாலோ, நீங்கள் இன்னமும் வார ஊதியத்தைச் சார்ந்திருப்பவராக இருந்தாலோ, உங்களுக்குப் பணிநீக்க ஊதியமானது முழுமையாக வழங்கப்படும். உங்களுக்குத் தேவையானவைகளை நீங்கள் பெற்றிருந்தால் எந்த ஊதியமும் கொடுக்கப்படாது. இப்போது செய்யும் கூடுதல் வேலைக்கான கூடுதல் ஊதியம் கொடுக்கப்படாமல் இருப்பதில், திருப்தியடையாமல் இங்கு வேலை செய்வதை விட இப்போதே வேலையிலிருந்து நின்று விடுவதையே நான் விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும், உற்பத்தியில் ஈடுபடுவதற்கும், தேவையானவைகளைச் செய்ய உடன்படுவதற்குத் தயாராக இருப்பவர்கள் மட்டுமே, இங்கு வேலைசெய்வதற்கு வரவேற்கப்படுகிறார்கள். வேலை நீக்க ஊதியத்தைப் பெற விரும்புபவர்கள் என்னுடைய அலுவலகத்திற்கு வரலாம்" என்று லெவ் கூறினான்.

குரல் கொடுத்த இளைஞன் வேலையிலிருந்து வெளியேறுவதற்குச் சம்மதித்தான். மேலும் இருவர் அவனைப் பின்தொடர்ந்தார்கள். "வாழ்த்துக்கள்" என்று கூறியவாறு லெவ் தனது இறுதிவிடையைக் கொடுக்கும்படியாக, அவனிடமாகத் தனது கரங்களை நீட்டினான். அந்த இளைஞன் லெவ்வைப் புறக்கணித்து "நாங்கள் கடற்கரையில் நிம்மதியாக ஓய்வெடுப்போம். உங்களுக்குக் கிடைக்கும் புகழுக்காக நாங்கள் ஏன் வேலைப் பளுவினையும், பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாவிட்டாலும் நாங்கள் நிம்மதியாகவே கடற்கரையில் ஓய்வெடுப்போம்" என்று சொல்லி வெளியேறினான்.

## கிளர்ச்சியாளர்களின் இராஜினாமா

லெவ் மற்றுமொரு விளக்கக் காட்சியினை ஊழியர்களுக்குக் கொடுத்த பிறகு, தனது அலுவலகத்திற்குத் திரும்பினான். அங்கே வேலையில் இருந்து வெளியேற விருப்பம் தெரிவித்திருந்த மூன்று ஆடவர்கள் வரவேற்புப் பெண்ணிடம், தாங்கள் பெற்றுக்கொண்ட ஊதியத்

தொகையைக் குறித்து விவாதித்துக் கொண்டிருந்ததை லெவ் கண்டான். அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த ஊதியக் காசோலையுடன், அவர்கள் திரும்பி வந்திருந்தனர். அவர்கள் லெவ் ஆரோனைச் சந்திக்க விரும்புவதாகவும் கோரிக்கை விடுத்துக் கொண்டிருந்தனர்.

"நீச்சலில் தீவிர ஆர்வம் காட்டிய அந்த இளைஞரின் பெயர் என்ன?" என்று லெவ் மேசையில் இருந்த பெண்ணின் காதில் கிசுகிசுப்பாகக் கேட்டான்.

"அவர் ஒரு நயவஞ்சகர், அவரின் பெயர் பியாரி காஸ்கன்" என்று அந்தப் பெண்மணி கூறினார்.

லெவ் தனது தலையைச் "சரி" என்பது போல் ஆட்டியவாறு, பியாரியை நோக்கி நடந்தான்.

"கூட்டத்தில் இருந்து வெளியேறுவதற்கு முன்பு நீங்கள் கூறியதைக் குறித்து நான் குழப்பம் அடைந்துள்ளேன். நீங்கள் செய்யும் வேலைக்கு, நான் எவ்வாறு புகழினைப் பெற்றுக் கொள்வேன் என்பதை உங்களால் விளக்க முடியுமா?" என்று லெவ் கேட்டான்.

பியாரி அந்தக் கேள்விக்கானப் பதிலை முழுவதுமாகப் புறக்கணித்தார். "உங்களது புதிய கார்கள் நன்றாக இருக்கலாம், ஆனால் இன்னும் சில வருடங்களில் எங்களாலும் இதைப்போல் உற்பத்தி செய்யமுடியும். எங்களுக்குத் தேவையாக இருப்பது எல்லாம் ஜீவன் அளிக்கும் இந்த ஜீவ விருட்சம்தான். எங்களுடைய மற்றப் பிரச்சனைகளை எல்லாம் நாங்களே சரிசெய்து கொள்வோம். ஆனால் யூதர்களான நீங்கள் உங்களுடைய அதிகாரத்திற்குக் கீழாக, நாங்கள் வருவதற்காகவே இந்த ஜீவ விருட்சத்தை சாக்காகப் பயன்படுத்துகிறீர்கள். உங்களுடைய மேலான நிர்வாகம் எங்களுக்குத் தேவையில்லை" என்றார்.

பியாரியின் குரலில் கிண்டல் தெரிந்தது.

"இந்த உலகினை உண்மையாக ஆட்சிசெய்வது யார் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று லெவ் கேட்டான்.

"உங்களுடைய பதில் என்ன என்று எனக்குத் தெரியும், நீங்கள் கிறிஸ்து என்று தானே கூறப் போகிறீர்கள்? அதைத்தானே கூறப் போகிறீர்கள்? அப்படித்தானே? எங்களுக்கு எப்படிக் கிறிஸ்துவைத் தெரியும்? நாங்கள் அவரைப் பார்க்கவா செய்திருக்கிறோம்? அவர் எங்களுடன் பேசி இருக்கிறாரா என்ன? இந்த முற்பிதாக்கள் அறிவுக் கூர்மையில் சிறந்தவர்கள் என்பது உறுதிதான். ஆனால் அதற்காகக் கிறிஸ்து உங்களிடம் மட்டும் ஏன் பேசவேண்டும்? எங்களிடம் ஏன் பேசக்கூடாது?" என்று கேட்டார்.

"நீங்கள் இதற்கானச் சாட்சியினைக் கண்டு கொண்டிருக்கிறீர்கள். குருடர்கள் பார்வை அடைகிறார்கள், செவிடர்கள் கேட்கிறார்கள், மரித்தோர் உயிர்த்தெழுகிறார்கள். நீங்கள் சற்றுக் கவனமாகப் பேச வேண்டும், பியாரி. கிறிஸ்துவின் வல்லமையை மறுப்பது போன்றதான வார்த்தைகளைப் பேசுவதால் நீங்கள் ஆபத்தில் இருக்கிறீர்கள்" என்றான்.

"எங்களுக்கான காசோலையை மின்னஞ்சல் செய்யுங்கள். இந்த யூதர்களின் சதித்திட்டத்தில் இணைய நாங்கள் விரும்பவில்லை. உயிர்த்தெழுதலின் வல்லமையை ஏற்றுக் கொள்ள வேண்டிய எந்த அவசியமும் எங்களுக்கு இல்லை. எனக்கு ஏதோ செய்வது போன்று இருக்கின்றது, சோர்வாக இருக்கிறது" என்று கூறிய பியாரியின் குரல் திடீரென்று நின்றது.

பயத்துடன் அவர் தன் தொண்டையைப் பிடித்தவாறு அருகில் இருந்த நாற்காலியை நோக்கிச் சென்று அமர்ந்தார். அவரது நெற்றி முழுவதும் வியர்வைத் துளிகளால் நிறைந்திருந்தன.

"பியாரி என்ன ஆயிற்று? நன்றாகத்தானே இருக்கிறீர்கள்?" என்று பியாரியின் நண்பர்களில் ஒருவர் அக்கறையோடு கேட்டார்.

"அவரால் பேச முடியாது. அவர் ஏற்கமறுத்த கிறிஸ்து, அவருடைய வல்லமையைப் பியாரி அனுபவித்து உணர்ந்துகொள்வதற்காக இதை அனுமதித்திருக்கிறார்" குடிப்பதற்குத் தண்ணீர்

கொடுத்தவாறு லெவ் கூறினான். "அவருடைய கீழ்ப்படியாமையின் நிமித்தமாக அவர் தனது குரலை இழந்து விட்டார்" என்றான்.

லெவ், முற்பிதாக்களின் தொலைபேசி எண்ணை ஒரு காகிதத்தில் எழுதி, பியாரியை அக்கறையோடு விசாரித்த அவரது நண்பரிடம் அதைக் கொடுத்து, என்ன நடந்ததோ அதை அப்படியே பியாரியை எழுதச் சொல்லுமாறும், பின்பு முற்பிதாக்களைத் தொடர்புகொண்டு எந்த முற்பிதா தொடர்பில் இணைகிறாரோ, அவரிடம் பியாரி எழுதியதை வாசித்துக் காட்டுமாறும் கூறினான். பின்விளைவினைப் பற்றியும், அதற்கான தீர்வைப் பற்றியும் முற்பிதா உங்களுக்கு விளக்குவார் என்றான்.

"பியாரிக்கு உங்கள் உதவி தேவை. தயவுகூர்ந்து அவரின் வீட்டிற்கு அழைத்துச்சென்று உடனடியாக முற்பிதாக்களைத் தொடர்புகொள்ளுங்கள்" என்று பதட்டத்தோடு தனது நண்பனைப் பார்த்துக்கொண்டிருந்த இருவரிடமும் லெவ் கூறினான். பின்பு அவர்களது காசோலைகளை அவர்களின் கையில் கொடுத்தான். அவர்கள் அலுவலகத்தில் இருந்து வெளியேறுவதை லெவ் அமைதியாக நின்று பார்த்துக்கொண்டிருந்தான்.

## ரக்கூன்கள்

பல மாதங்களும், வாரங்களும் கடந்தன. மனிதர்களால் இயக்கப்படும் தானியங்கி வாகனங்களில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தைக் கண்டு லெவ் மகிழ்ந்தான். ஹைட்ரஜன் எரிபொருள் செல்களே வாகனங்களில் மின்சார இயந்திரங்களை இயக்கும் சக்தியாகச் செயல்பட்டன. இம்முறையை எதிர்க்கிறவர்களாக இருந்த பியாரியையும், அவரது நண்பர்களையும் எண்ணி லெவ் வியப்படைந்தான். பியாரி, தனது நண்பர் ஒருவர் மூலமாக தொலைபேசியில் லெவ்விடம் மன்னிப்புக் கேட்டிருந்தான்.

"அன்புள்ள திரு. லெவ் ஆரோன், என்னுடைய நடத்தைக்காக மன்னிப்புக் கேட்க விரும்புகிறேன். நான் புரிந்துகொள்ளாமல் கிறிஸ்துவின் வல்லமையை அவமதித்தேன், உங்களையும் அவமதித்தேன். நான் இப்போது புரிந்துகொள்ள முயல்கிறேன். மற்றவர்கள் கூறுவதைத்தான் இப்போது என்னால் கேட்கமுடியும். இன்னும் அதிகமான வேகம் இருப்பது கூடுதல் மகிழ்ச்சியைக் கொடுக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஒருவேளை நான் அதை லாப நோக்கத்திற்காகச் செய்யமாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். மேலும் வேகமாகச் சென்றாலும் பாதுகாப்பான வழியை என்னால் கண்டறிய முடியும், எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள். மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியிருந்தார்.

மறுசீரமைப்பு மற்றும் புத்துருவாக்கம் ஆகியவற்றினைச் சிறப்பாக்குவதற்கானத் தேவைகளைக் கருத்தில்கொண்டு, பொழுதுபோக்குடன் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, வேகம் நிச்சயமாகப் பொருத்தமான முன்னுரிமை கொண்ட ஒன்றாக இல்லை என்றும், வேகத்துடன் கூடிய பொழுதுபோக்கை உருவாக்குவது என்பது சரியல்ல என்றும் லெவ் கருதினான். பியாரி இப்போது வரையிலும் எந்த ஒரு வேலையிலும் தன்னார்வத் தொண்டு புரிவதற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. அவர் "சாகச விரும்பிகள்" (Edgers) (சாகச செயல்களில் ஈடுபடுவோர்) என்று தங்களுக்குத் தாங்களே பெயரிட்டுக்கொண்டு செயல்படும் ஒரு குழுவில் பியாரி இணைந்து விட்டதாக லெவ் கேள்விப்பட்டிருந்தான்.

"சாகச விரும்பிகள்" (Edgers) என்பவர்கள் பொதுவாக சர்ஃபிங், பனிச்சறுக்கு, மலை ஏறுதல் போன்ற விளையாட்டுகளில் அதிக நாட்டம் கொண்டவர்கள். இவைகள் நல்லதுதான். ஆனால் மறுசீரமைப்பின் ஆரம்பக் காலக்கட்டத்திலேயே சுயத்திற்கு மகிழ்ச்சி தரும் காரியங்களுக்கான தேவையினைக் கண்ணோக்குவது என்பது சுயநலமான முயற்சியே ஆகும். "ஒன்றை இழந்தால்தான் மற்றொன்றை பெற்றுக்கொள்ள முடியும்" என்பதை அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. மனித இயல்பானது பல நேரங்களில் ரக்கூன்களைப் (Racoon) போன்றே உள்ளன. ரக்கூன்கள் பொதுவாகப் பாட்டிலின் உள்ளே உள்ள ஆப்பிளை எடுப்பதற்காக, தன்னுடைய கால்களைப் பாட்டிலின் வாய்ப்பகுதியின் உள்ளே விட்டு முயற்சிசெய்யும். பாட்டிலின் வாய்ப்பகுதியானது அதன் கால்களும், ஆப்பிளும் சேர்ந்து வெளிவருவதற்குப் போதுமான அளவில் இல்லாதபோதும், ரக்கூன்கள் அதை எடுப்பதற்கு முயற்சிசெய்யும். ஆனால் அவைகளுக்கு

இருக்கும் ஒரே வழி ஆப்பிளை எடுப்பதற்கு அவைகள் மேற்கொள்ளும் முயற்சியை விட்டுவிட்டுச் செல்வதே ஆகும். இந்தப் புதிய பூமியிலும் கூட இன்னும் சிலர் மகிழ்ச்சியுடனும், உல்லாசமாகவும் பொழுதைக் கழிப்பதற்கு விரும்புகின்றனர். அவர்களால் அதை எளிதில் விட முடிவதில்லை.

பியாரி, ஃப்ரான்ஸ் மற்றும் கெர்ஹார்டு மூவரும் தங்களது சொந்த விருப்பங்களுக்காக மற்றவர்களுடைய பாதுகாப்பைக் கருத்தில்கொள்ளாமல் செயல்பட விரும்புவது லெவ்விற்கு ஆச்சரியமாக இருந்தது. ஆயிரம் வருட அரசாட்சியின் முடிவில் இருக்கும் ஆடுகள் அவைகள் செய்த தவற்றிற்காக தண்டிக்கப்படுவது மட்டுமல்லாது, அவைகள் மற்றவர்களோடு அன்போடு நடந்துகொள்வதைக் கருத்தில்கொள்ளாமல் இருந்தாலே தண்டிக்கப்படும். மற்றவர்கள் மீது அன்பு செலுத்தும் உயர்ந்த வாழ்க்கை முறையை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளாத எவராலும், நித்திய ஜீவனைப் பரிசாகப் பெறும் வாழ்க்கையைப் பாராட்டவோ, அனுபவிக்கவோ முடியாது. "உன்னிடத்தில் அன்புகூருவது போல பிறரிடத்திலும் அன்புகூருவாயாக" என்ற தெய்வீகத் தரநிலையை, முக்கியமாக இருதயத்தைச் சீர்திருத்தம் செய்யாத எவரும் பெற்றுக்கொள்ள முடியாது.

பியாரி, ஃப்ரான்ஸ் மற்றும் கெர்ஹார்டுக்கு என்ன ஆயிற்று? அவர்கள் தேர்ந்தெடுத்த பாதை வெறுமையானது என்று உணர்வதற்குப் பதிலாக, அவர்கள் அதிக தலைக்கனம் பிடித்தவர்களாக ஆகிவிட்டிருப்பதை எண்ணி லெவ் ஆச்சரியப்பட்டான். அவர்கள் தங்களது இயல்பினை மாற்றிக் கொள்வதற்கு முயலாவிட்டால் பாடம் கற்றுக்கொள்வதற்கு, அவர்களுக்கு அதிக நாட்கள் எடுக்கும் என்றும் நினைத்தான்.

* * *

*"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்." (ஏசாயா 40:31)*

# அத்தியாயம் - 27

"நான் இந்த முன்மொழிதலைக் கோரவில்லை, ஏனென்றால் என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளால் நான் காயமடைந்து இருக்கிறேன். நான் மகிழ்ச்சியுடன் சேவைசெய்வதற்கு இருந்தாலும், என் நண்பர்களின் வீடான இங்கும் காயப்படுத்தப்படுவேனோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது."

தனது மெல்லிய குரலில் பரிதாபத்தைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில், சிறிய தேவாலயமான டௌவ்லோஸின் தேவாலயத்தில் அமர்ந்திருந்த பார்வையாளர்களிடம், லூயிஸ் விக்னெட் பேசிக்கொண்டிருந்தார். அவரது கை விரல்கள், அவரது வார்த்தைகளைப் பிரதிபலிக்கும் விதமாக அழகாக அபிநயம் காட்டிப் பேசின. இது வழிபாட்டாளர்களால் நிரம்பியிருந்த அந்த அறையில் கண்களுக்குத் தெரியாத ஓர் ஓவியத்தை, லூயிஸ் அவர்களுக்கு முன்பாக உருவாக்குவதுபோல் இருந்தது. லூயிஸ் விக்னெட்டிடமிருந்து தன்னுடைய பார்வையை விலக்கமுடியாது, லெவ் அவரையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன், அவருடைய செய்கையினால் ஈர்க்கப்பட்டிருந்தான். லூயிஸ் விக்னெட்டைக் குறித்து விவரிப்பதற்கான சிறந்த வார்த்தையானது "வெறுமை" என்பதாகவே இருக்கும் என்று லெவ் உணர்ந்துகொண்டான்.

லூயிஸ் விக்னெட்டினுடனான முதல் சந்திப்பானது, லெவ்விற்குச் சங்கடத்தையே ஏற்படுத்தியது. அவர் லெவ்வை அளவுகடந்த விதத்தில் புகழவும், பாராட்டவும் செய்தார். அது லெவ்விற்கு அவர் தன்னைத் தண்ணீருக்குள் மூழ்கடிப்பது போன்றதான உணர்வைத் தந்தது.

வழிபாடு முடிந்ததும், லூயிஸ் விரைவாக லெவ்விற்கு அருகில் வந்தார். மிக நெருங்கிய நட்புறவிற்குள் இருக்கிறவர்கள் என்று மற்றவர்கள் எண்ணும் அளவிற்கு நெருங்கி நின்று, லெவ்வின் தோள்களின்மேல் லூயிஸ் தனது கைகளைப் போட்டுக்கொண்டார்.

"திரு. லெவ் ஆரோன் அவர்களே, நீங்கள் டௌவ்லோஸ்ஸில் செயல்படும் மிகப்பெரிய விமானத் தொழிற்சாலை வளாகத்தில் பொறுப்பாளர் பதவியில் இருக்கிறீர்கள். உங்களது தோள்களில் எவ்வளவு பெரிய பொறுப்புச்சார்ந்த சுமை இருக்கிறது மற்றும் புனித பூமியான இஸ்ரயேலில் இருந்து முற்பிதாக்களின் வழிநடத்துதலுக்கு இணங்கி, நீங்கள் இங்குப் பணியாற்ற வந்துள்ளீர்கள். இப்போது உங்கள் நண்பராக உங்களுக்கு அருகில் நான் நின்று கொண்டிருப்பது எனக்கு மரியாதைக்கூறிய செயலாக இருக்கிறது" என்று கூறியவாறு விக்னெட், லெவ்வின் முதுகில் தட்டினார். அவர் அந்தப் பகுதியில் இருந்த பழைய உலகின் பெரிய தேவாலயங்களில் ஒன்றில் போதகராகப் பணிபுரிந்தவர். அவர் அங்குப் பணிபுரிந்த நாட்களில், அவரது பிரசங்கமானது அதிகம் விரும்பிக் கேட்கப்படும் ஒன்றாக இருந்தது என்பதையும், மேய்ப்பனாக அவருக்கிருந்த திறமையானது அவரைப் பிரபலமாக்கி இருந்தது என்பதையும் லெவ் புரிந்துகொள்ளும்படியாக லூயிஸ் தெளிவாகப் பேசினார். இரக்கத்துடன் பாவமன்னிப்பிற்காக அறிக்கையிடுவோர்களைக் கேட்பதற்கானப் பொறுப்பினை அவர் ஏற்றுக்கொண்டிருந்தார்" என்றும் கூறினார்.

நாட்கள் கடந்தபோது, லூயிஸ் விக்னெட்டினால் வடிவமைக்கப்பட்டு, மெருகேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் செயல்களை லெவ்வால் காணமுடிந்தது. அவைகள் புதிர் துண்டுகளைப்போல ஒன்றோடு ஒன்று இணைந்து ஒரு வடிவத்தை லெவ்விற்குக் காட்டின. லூயிஸ் விக்னெட் சில தனிநபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுடைய வாழ்க்கையையும், அவர்களுக்கு இருக்கும் போராட்டங்களையும் தெரிந்துவைத்துக்கொண்டு, பின்பு அவர்களைத் தன்வயப்படுத்தும் நோக்கத்தோடு அவர்களிடம் சென்று அவர்களைக் குறித்துப் புகழ்ந்து பேசுவார். பின்பு மெதுவாக அவர்களிடம் தனது முன்னாள் வழிபாட்டுச் சேவையில், தான் செய்திருந்த சாதனைகளைக் கூறத் தொடங்குவார். அமைதியாகவும், சிரமமின்றியும் இவ்வாறாகச் செயல்களைச் சரியானக் கலவையில் வடிவமைத்தார். அதன் பலனாக, அவர்கள் தாங்களாகவே முன்வந்து தலைமைப் பொறுப்பைத் தனக்கு வழங்குவதற்கானத் தருணத்திற்காகக் காத்துக்கொண்டிருந்தார். லெவ் இதனை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருந்தான்.

லுயிஸ் எதிர்பார்த்திருந்த தருணம் வந்தது. தேவாலய உறுப்பினர்கள் ஓர் அவசரக் கூட்டத்தைக் கூட்டினார்கள். லெவ் கண்களை மூடி பெருமூச்சு விட்டான்.

தனது உண்மையான வேண்டுகோளை விடுப்பதற்காக பெண்மணி ஒருவர் எழுந்து நின்றார்.

லூயிஸ் விக்னெட் போதகராகத் தன்னைப் பற்றிய சில விஷயங்களை மறைத்து வைத்திருக்கிறார். அந்த விஷயங்களை எப்போது, எவ்வாறு வெளியே கொண்டுவர வேண்டும் என்று லெவ்விற்குத் தெரியவில்லை.

லெவ் சிறிதுநேரம் உரையாடல்களைக் கவனித்தான். பின்னர் தனது சொந்தக் கருத்துக்களைத் தெரிவித்தான்.

"லூயிஸ் விக்னெட் திறமையான மனிதர்தான், ஆனால் இப்போது நமது வழிபாட்டுச் சேவையின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் ஜான் ரெயின் ஹார்ட்டை பணியிலிருந்து நீக்குவதற்கான, எந்த ஒரு சரியான காரணத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. லூயிஸ் எருசலேமைக் கைப்பற்றுவதற்கான போரில், உங்கள் படைகளை அனுப்புவதற்கு மிகவும் கடினமாக உழைத்தார் என்பது எனக்குத் தெரியவந்தது. அவர் இதைப் பற்றிப் பேசுவதையோ அல்லது அவர் செய்த பெரிய தவறுக்குப் பொறுப்பேற்றுக் கொண்டதையோ நான் பார்த்ததே இல்லை" என்றான்.

லூயிஸ் அமைதியாக இருக்கும்படி தன்னைக் காத்துக்கொள்வதற்கு போராடிக் கொண்டிருப்பதை லெவ்வால் பார்க்கமுடிந்தது. அவருக்கு ஏற்பட்டிருந்த கோபத்தை, அவருடைய கழுத்து நரம்புகள் சிவந்திருந்ததிலும், அவரது குரலில் தெரிந்த லேசான நடுக்கத்திலும், அவரது கைகள் லேசாக நடுங்கியதிலும் காணமுடிந்தது.

லூயிஸ் விக்னெட் பதிலளிக்கத் தொடங்கினார்.

"லெவ், தனது முன்னோர்களின் பின்னணியை மறந்துவிட்டாரோ? அவர்கள் எவ்வாறு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, அன்பின் கிறிஸ்துவைக் கொன்றார்கள் என்பதை மறந்துவிட்டாரோ? நிச்சயமாக அது ஒரு மிகப்பெரிய தவறு. அதனை நாங்கள் இலவசமாக மன்னித்துள்ளோம். அப்படியிருக்கையில் ஏன் என்னுடைய தவறு மட்டும் இப்போது உங்களுக்கு முன்பாக வைக்கப்பட வேண்டும்? தவறுசெய்வது மனித குணம், மன்னிப்பது தேவகுணம் அல்லவா?" என்றார்.

லெவ் மறுபடியும் தனது கருத்தைத் தெரிவித்தான்.

"இந்த முடிவு ஒரு பெரிய தவறாக இருக்கும் என்றே நான் நினைக்கிறேன். லூயிஸ் விக்னெட்டிற்கு ஆதரவு அளிப்பது சரியா அல்லது அவருக்கு எதிராக நிற்க வேண்டுமா என்பதைத் தெரிந்துகொள்ளும் நேரம் இதுவல்ல. தேவனுக்கு முன்பாக நாம் ஒவ்வொருவரும் ஒன்று நிற்க வேண்டும் அல்லது விழ வேண்டும். நாம் நமது ஆவிக்குரிய நிலையிலிருந்து விழாமல் நம்மைக் காத்துக்கொள்ளும் விஷயமாகவே இது இருக்கிறது. இவரை நாம் ஒருவரும் இதுவரை அறிந்ததில்லை. கடந்த இரண்டு வாரங்களாகத்தான் இவர் நம்முடன் இருக்கிறார். அவர் பணிபுரிந்த தேவாலயத்தில் அவரை வழிபாட்டுத் தலைவராகப் பணியாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதாலேயே, அவர் அங்கிருந்து வெளியேறி இருக்கிறார். இவைகள் எல்லாம் நமக்குத் தெரியாது. இப்போதைக்கு இந்த முடிவைத் தள்ளிப்போடலாம் என்று நான் நினைக்கிறேன். அப்போதுதான் நம்மால் இதைக் குறித்து தீர விசாரிப்பதற்காக போதுமான நேரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்" என்றான்.

"லெவ் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்த கேள்விக்கு, நான் பதில் அளிக்கலாமா?" என்று கூறியவாறு லூயிஸ் விக்னெட் தொடர்ந்தார். நான் அந்தச் சபையினரிடம் மிகவும் கடுமையான மற்றும் அன்பற்ற மனப்பான்மையைக் கண்டேன். இதுவே நான் அங்கிருந்து வெளியேறியதற்குக் காரணம். இப்போது இங்கே ஒரு நியாயமான காரணமும் இல்லாமலேயே நான் துன்பப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிவிட்டு லூயிஸ் சற்று நேரம் பேசுவதை நிறுத்தினார். பின்பு தீவிரமான மற்றும் பரிதாபமான குரலில், "நான் இந்த வேட்பு மனுவில் இருந்து

என்னுடைய பெயரைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே உங்களுடைய விருப்பம் என்றால், நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்'' என்றார்.

வாக்களிப்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது லூயிஸ் பெரும்பான்மையைப் பெற்றார்.

ஜான் ரெயின்ஹார்ட், தனது இடத்திலிருந்து எழுந்து மேடைக்குச் சென்று லூயிஸிடமாக தன்னுடைய கைகளை நீட்டினார். ''வழிபாட்டுச் சேவைத் தலைவர் என்ற பதவியைத் தற்காலிகமாக விட்டுக் கொடுப்பதே சிறந்தது என்று நான் நம்புகிறேன். நமக்குத் தேவையான வழி எதுவோ அதையே நம் இருவருக்கும் வழங்கி தேவன் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' என்றார்.

ஜானின் இரண்டு கைகளையும் பற்றியவாறு அவரை நேரடியாகப் பார்த்தார். ''உங்களது பதவி விலகுதலுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். உங்களுடைய நேர்மையான சேவைக்கு நன்றி'' என்றார். பின்பு தனது கைகளை உயர்த்தியவாறு சபையினரை நோக்கித் திரும்பினார். அவரது கண்கள் சபையினரை உற்றுநோக்கின. தனது கைகளை உயர்த்தியவாறே ''எனக்கு வாக்கு அளித்தவர்களுக்கும், எனக்கு எதிராக வாக்கு அளித்தவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று அனைவரையும் கவரும் வகையில் அறிவித்தார்.

லூயிஸின் தலைமையின் கீழ் சேவை தொடர்ந்தது. புதிய வழிபாட்டுச் சேவை தலைவரின் போதகத்தைக் கேட்ட லெவ்வின் மனம் கனத்தது. லூயிஸ் நன்றி உணர்வை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடுவதற்காக அழைப்பு விடுத்தார். ஒவ்வொரு பாடலுக்குப் பிறகும் சுருக்கமாகப் பேசினார்.

தலைமைப் பொறுப்பை லூயிஸிற்கு வழங்கவேண்டும் என்று முதலில் கூறிய பெண்மணி எழுந்து நடந்து சென்று சபையினருக்கு முன்பாக நின்றார்.

''இந்த அற்புதமான தலைவருக்கு நாம் வாய்ப்பளித்ததற்காக, நான் மிகவும் நன்றி உள்ளவளாக இருக்கிறேன். நாம் அனைவருமே தவறுகள் செய்திருக்கிறோம், நானும் தவறுகள் செய்திருக்கிறேன். இந்தப் புதிய தொடக்கத்திற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன்'' என்றார்.

''நன்றி சகோதரி, நாம் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தேவனே நமது தந்தை, நாம் அவருடைய சந்ததி. உண்மையிலேயே அவர் நமக்குப் புதிய தொடக்கத்தைக் கொடுத்திருக்கிறார்'' என்று லூயிஸ் கூறினார்.

## டாம்சிங், விக்னெட்டிற்கு எதிராகச் சவால் விடுதல்

லெவ்விற்கு அறிமுகம் இல்லாத இரண்டாவது நபர் எழுந்தார். நெரிசலாக இருந்த அந்த அறையின் பின்புறத்தில், அவர் இருந்த இடத்திலிருந்தே பேசினார். அந்த நபரின் சாட்சியத்திற்கு ஒப்புதல் கூறும் விதமாக லூயிஸ் விக்னெட் தனது தலையினை அசைத்தார்.

''என் பெயர் டாம் டான்சிங்'' என்று அவர் தொடங்கினார்.

லூயிஸ் பதற்றத்துடன் இருமினார். மேலும் அவரது முகம் வெளிரியது.

''நானும் ஒரு மதகுருவாகவே இருந்தேன். ஒருவேளை மதகுருவான விக்னெட் என்னை நினைவில் வைத்திருக்கலாம்.'' டாம் டான்சிங், விக்னெட்டை நேராகப் பார்த்தார். விக்னெட் அவரது பார்வையைத் தவிர்க்க விரும்பியவறாக, மறுபடியும் இருமியவாறு தரையையே பார்த்துக்கொண்டிருந்தார்.

''நான் செய்த வஞ்சனையான செயலுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ள நான் விரும்புகிறேன். நான் மிகப்பெரிய, வளம்வாய்ந்த சபையில் மதகுருவாக இருந்தேன். அங்குச் சபை அங்கத்தினர்கள் எதைக் கேட்பதற்கு விரும்புவார்களோ, அதையே நான் அவர்களுக்குப் போதித்தேன். பொறுப்புக்களைச் செய்வதில் ஓர் அரசியல்வாதியாகவே செயல்பட்டேன் என்பதைக் கூறுவதற்கு நான் வெட்கப்படவில்லை. கிறிஸ்துவைப் பிரதிநிதியாகக் கொண்டுச் செயல்பட வேண்டும் என்ற

அமைப்பிற்குள்ளாக நான் கட்டப்பட்டு இருந்தாலும், நான் கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் கூறுவதற்கு வெட்கப்படுகிறேன். நான் ஒரு கிறிஸ்துவன் என்று உரிமைப் பாராட்டினேன், ஆனால் கிறிஸ்துவுடன் நேரம் செலவிடுவதற்கு எனக்கு நேரமே இருந்ததில்லை.''

''நான் போதித்தவைகளை நானே நம்பவில்லை. அன்பான தகப்பன், அவிசுவாசிகள் அனைவரையும் நரகத்திற்கு அனுப்புவார் என்று நான் போதித்தது, என் மனசாட்சியை எப்போதும் அழுத்திக் கொண்டிருந்தது. இதைவிட மிகப் பெரிதான இரட்சிப்பின் திட்டத்தைத் தேவன் நிச்சயமாகக் கொண்டிருப்பார் என்று என் மனதில் ஏதோ ஓர் இடத்தில் தோன்றிக் கொண்டுதான் இருந்தது. மேலும் இஸ்ரயேலுக்கு எதிரானப் படையெடுப்பில், இஸ்ரயேலுக்கு ஆதரவாக நிற்பதற்கு எனக்கு தைரியம் இல்லை, ஏனென்றால் புனித பூமியைக் கைப்பற்றினால், தேவாலயத்திற்கு அரசியல் ஆதாயம் கிடைக்கும் என்று நான் நினைத்திருந்தேன். எனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கானவர்களை மரணத்திற்குள் அனுப்பினேன். தேவாலயத்தில், நான் வகித்திருந்த பதவியையும், திருச்சபையின் நலனையும் பாதுகாப்பதற்காகவே அவ்வாறு செய்தேன்'' என்றார்.

டாம் டான்சிங் தனது சாட்சியினைத் தொடர்ந்து கூறியபோது, லூயிஸிற்கு அசௌகரியமாக இருந்தது. அவரது மனம் அமைதியற்று இருப்பதைத் தெளிவாகக் காணமுடிந்தது. நன்கு தேர்வு செய்யப்பட்ட அவரது வார்த்தைகளுக்கு ஏற்ப அபிநயம் காட்டிய அவருடைய மென்மையான விரல்கள், இப்போது பதட்டத்தோடு அவரது கழுத்துப் பகுதியையும், தலையின் பின் பகுதியையும் சொரிந்துகொண்டிருந்தன.

''இஸ்ரயேலுக்கு எதிரான படையெடுப்பில் மற்ற நாடுகளுக்கு நேர்ந்த கதி, வெளியரங்கம் ஆனபோது, ஒரு பொதுவான பீதி எங்களது ஜனங்களை ஆட்கொண்டது. ஜனங்களின் ஆத்திரத்தினால் சட்டம், ஒழுங்கு கலைக்கப்பட்டன. நான் கோபம் அடைந்திருந்த கூட்டத்தினரால் மரணம் ஏற்படுவதற்கு ஏதுவான வகையில் தாக்கப்பட்டேன். என் மேல் பரிதாபப்பட்ட ஒரு முதியவர், என்னை அவரது வீட்டிற்குத் தூக்கிச்சென்றார். பல மாதங்களாக நான் எனது பழைய ஆரோக்கியத்தைப் பெறும்வரையிலும், அவரால் பராமரிக்கப்பட்டேன். நான் பழைய நிலைக்குத் திரும்பியபோது, எனக்கு மிகப்பெரிய தாடி வளர்ந்திருந்ததால், பலரால் என்னை யார் என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போயிற்று. இவ்வாறே என்னுடைய சக நண்பர்களுக்கு ஏற்பட்ட நிலையிலிருந்து நான் தப்பித்தேன். என்னுடைய காயங்கள் குணமாகிவிட்டன. நான் இப்போது ஏதேன் பழத்தை உட்கொள்ளுவதால் முழுவதுமாகக் குணமடைந்துவிட்டேன். என்னுடைய அனைத்துத் தழும்புகளும் மறைந்துவிட்டன. நான் எப்போதும் கேட்கும் வாழ்க்கையை விட, இந்தப் புதிய வாழ்க்கை மிகச்சிறந்தததொரு வாழ்க்கையாக இருக்கிறது. இந்தப் புதிய தொடக்கத்திற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.'' அவரது உணர்ச்சிகளை அவரால் கட்டுப்படுத்த முடியாததால், அவரது குரல் உடைந்து ஒலித்தது. ''நான் இப்போது மன்னிக்கப்பட்டதாக உணர்வதால், நான் என்னுடைய பழைய புகழையும், செல்வாக்கையும் இழந்துவிட்டதாக நினைக்கவில்லை. இதுவரை நான் கடந்துவந்த நாட்களிலேயே, இப்போதுதான் முழுமையாக ஜீவனோடு இருப்பதாக உணர்கிறேன். கிறிஸ்துவுக்கு அர்ப்பணிப்பு செய்வதற்காகவே ஜீவனுடன் இருக்கிறேன்'' என்றவாறு டாம் தொடர்ந்தார்.

டாமிற்கு எழுந்து நின்று கைத்தட்ட வேண்டும் என்ற தனது உணர்வினைக் கட்டுப்படுத்திக் கொண்டு லெவ் சிரித்தான். டாம் மற்றும் லூயிஸிற்கு இடையிலான வேறுபாடு மிகப்பெரியதாக இருந்தது. டாம் அமர்ந்தவுடன் அறை முழுவதிலும் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் ஓசையைக் கேட்கமுடிந்தது.

இன்னமும் தன்னுடைய கழுத்தைச் சொறிந்தவாறு, ''நாம் எழுந்து ஸ்தோத்திரப் பாடலைப் பாடிய பிற்பாடு, ஜெபத்துடன் இந்த வழிபாட்டை முடித்து பிரிந்துச்செல்லலாம்'' என்று லூயிஸ் கூறினார்.

புல்லாங்குழலும், பியானோவும் அனைவரும் நன்கு அறிந்திருந்த ஒரு பாடலை இசைக்கத் தொடங்கின. அதனோடு சில நிமிடங்களில், சில குரல்கள் இணைந்து பாடத் தொடங்கின. லூயிஸ் பிரசங்க மேடையின் பின்னால் இருந்த இருக்கையில் அமர்ந்தார். பொது ஜனங்களின் கவனம் தன் மீதிருந்து திசைதிருப்பப்பட்டதில் அவர் நிம்மதியாக இருப்பதுபோல் லெவ்விற்குத் தோன்றியது.

பாடல் முடிந்தவுடன் லெவ் அறையின் பின்பக்கத்தை நோக்கி விரைந்தான். அநேகர் டாமைச் சூழ்ந்திருந்ததால், அவர்களிடம் இருந்து டாமின் கவனத்தைத் தன் பக்கம் திசைதிருப்புவதற்காக "டாம்" என்று லெவ் சத்தமாக அழைத்தான். உறுதியானப் பார்வையை வெளிப்படுத்திக் கொண்டிருந்த, பெரிதான பழுப்பு நிறக் கண்களைக் கொண்டிருந்த மனிதரின் முன்பாக வந்து நின்றவாறு, அவரிடமாக லெவ் தனது கரங்களை நீட்டினான். "தேவன் உங்களை ஆசீர்வதிப்பார், உங்களது சாட்சி என்னுடைய ஜெபத்திற்கான பதிலாக இருந்தது" என்றான்.

லெவ்வின் கைகுலுக்கல், இருதயப்பூர்வமாக ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளுவதற்கு வழிவகுத்தது. லெவ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவனைப் பற்றியதான பின்னணியைச் சுருக்கமாக அவரிடம் கூறினான். பின்பு இருவரும் நீண்ட காலமாகவே ஒருவருக்கொருவர் தெரிந்தவர்கள் போலப் பேசத் தொடங்கினர்.

"நீங்கள் பரலோகத்தில் இருப்பதற்குப் பதிலாக, பூமியில் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தீர்களா?" என்று கேட்டபோது, தன்னையும் அறியாமல் தான் நினைத்ததை நேரடியாக டாமிடம் கேட்ட, தனது ஒளிவுமறைவற்ற தன்மையைக் கண்டு லெவ் ஆச்சரியமடைந்தான்.

"நான் பூமியில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படவில்லை. "கர்த்தாவே, கர்த்தாவே என்று என்னை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள், பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" என்ற வசனமானது, உண்மையில் பழைய உலகில் எனக்கு மனக்கலக்கத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. நான் இதுவரை கற்பனைசெய்து பார்த்திராத விதத்தில் கிறிஸ்துவை அறிந்துகொண்டேன் என்பது மட்டுமே எனக்குத் தெரியும் மற்றும் எனது மிகப்பெரிய கனவானது நனவாகிவிட்டது போல் உணர்கிறேன். ஆனால் எனக்குப் பயமாக இருக்கிறது" என்று கூறியவாறு டாம் தனது பார்வையை லெவ்விடமிருந்து விலக்கி, அறையின் எதிர்புறமாக இருந்தப் பகுதியில் தன்னிடம் வருபவர்களிடம் பேசிக்கொண்டிருந்த லூயிஸிடம் செலுத்தினார். பின்பு "இன்னும் கனவு உலகிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் சிலர் இருக்கிறார்கள், நான் கண்டிப்பாக லூயிஸிடம் பேசவேண்டும்" என்று கூறினார். லெவ்வும், லூயிஸ்ஸும் அங்கு நின்றுகொண்டிருந்த வழிபாட்டாளர்களைக் கடந்து நடந்துசென்றனர்.

"ப்ரதர் லூயிஸ்" என்று மென்மையாக அழைத்தவாறு, டாம் அவரிடம் தனது கைகளை நீட்டினார். லூயிஸ் முதலில் திகைத்தார், பின்பு குழம்பவும், பயப்படவும் தொடங்கினார். அவர், டாம் டான்சிங்கின் முகத்தோற்றத்தில் இருந்து, அவரது எண்ணங்களைப் புரிந்துகொண்டார். பின்னர் தனது கைகளைப் பின்னால் கட்டியவாறு நின்றுகொண்டு, தன்னை நோக்கி நீட்டப்பட்டிருந்த டாம் டான்சிங்கின் கைகளைப் பார்த்தார். டாம், லூயிஸின் தோள்கள் மீது தனது கரங்களைப் போட்டார்.

"ப்ரதர் லூயிஸ், என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? முன்பு நீங்கள் என்னைப் பார்த்தபோது நான் இருந்ததை விட, இப்போது நான் நன்றாக இருக்கிறேன் என்று எனக்குத் தெரியும். முன்பே நாம் இருவரும் நிகழப்போகும் மற்றொரு பிரெஞ்சுப் புரட்சியைப் பற்றியும், அதனால் நமக்குள் ஏற்பட்ட பயத்தைப் பற்றியும் பேசியிருக்கிறோம். அப்புரட்சியானது அன்று நம்முடைய கண்களுக்கு முன்பாகவே நடந்தது" என்று டாம் கூறினார்.

லூயிஸ்ஸின் கண்கள் அகல விரிந்தன. தனக்குச் சாதகமாக நாடகத்தை அரங்கேற்ற முடியும் என்று எண்ணியவராக, அவர் தனது கைகளில் அபிநயம் பிடித்துப் பேசுவதைத் தொடர்ந்தார். "நிச்சயமாக, நன்கு ஞாபகத்தில் இருக்கிறது. நீங்கள் ஒரு சிறந்த வழிபாட்டுத் தலைவர், என்னைக் கவர்ந்தவர்களில் ஒருவர்" என்று கூறிய லூயிஸ்ஸின் குரல் அமைதியாகவும், உறுதியாகவும் இருந்தது.

"ஒரு போதகராக நான் என் சபைக்குத் துரோகம் செய்திருக்கிறேன்" என்று கூறிய டாம்சிங்கின் வார்த்தைகள் உறுதியானவைகளாக இருந்தன. இன்னும் அறையில் இருந்த சிலரின் கவனத்தையும் ஈர்த்தன.

"நீங்கள் அவசியமானதொன்றையே செய்தீர்கள். நாம் இருவருமே செய்ய வேண்டுவதற்கு அவசியமானவற்றையே செய்தோம். முரண்பாடானக் காரியங்களுக்கு நாம் எதிரானவர்களாகவே

இருந்தோம். நாம் இணைந்தே செயல்பட்டோம் மற்றும் நாம் செய்வதற்கு அவசியமானவற்றையே செய்தோம்" என்று லூயிஸ்ஸின் குரல் உறுதியோடு ஒலித்தது.

"உலகத்தின் அரசியல் விளையாட்டை நாம் ஆடினோம். நாம் நமக்கே பொய்யராக இருந்தோம். நம்முடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த ஜனங்களுக்கும் நாம் பொய்யராகவே இருந்தோம். மேலும் நாம் "யூத இன வெறுப்பு" (anti semetic) எதிர்ப்பை ஊக்குவித்தோம். என் தேவாலய அமைப்பிற்குச் சேவைசெய்வதற்குப் பதிலாக, தேவனுக்குச் சேவைசெய்திருந்தால் ஒருவேளை நான் தாக்கப்பட்டிருக்கமாட்டேன்" என்று டாம் கூறினார்.

"நீங்கள் என்ன கூறுகிறீர்கள் பிரதர் டாம்? நீங்கள் அன்பற்றவராக இருக்கிறீர்கள். காட்டுமிராண்டித்தனமான ஜனங்கள், உங்களுடைய இருப்பிடத்திலிருந்து உங்களைக் கொடூரமாக இழுத்துச்சென்று துன்புறுத்தியதுபோல, என்னையும் துன்புறுத்தியிருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள் போல் தெரிகிறதே!" என்று கூறியவாறு லூயிஸ் தனது கழுத்துப் பகுதியில் சொரிய ஆரம்பித்தார்.

"நீங்கள் அங்குதான் இருந்தீர்கள் அல்லவா?" என்று லெவ் சட்டென்று வினவினான்.

"அதற்கென்ன அநேகர் அங்கு இருந்தார்களே!" என்று லூயிஸ் பதிலளித்தார்.

"உங்கள் சகோதரரை அவர்கள் மரணத்திற்கேதுவாகத் துன்புறுத்தியபோது எதுவுமே செய்யாமல் நீங்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்" என்று லெவ் கூறினான்.

"நான் என்ன செய்திருக்க வேண்டும், நான் டாமிற்கு ஆதரவாக நின்று, அவருக்கு நேர்ந்த நிலையை நானும் பெற்றிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா லெவ்?" என்று லூயிஸ் கேட்டார்.

லெவ் சிறிது இடைவெளி விட்டு மீண்டும் பேசத் தொடங்கினான். "ஆதரவாக இருப்பதற்குப் பதிலாக நீங்கள் ஓடி ஒளிந்து கொண்டீர்கள். உங்கள் பெயரை மாற்றிக்கொண்டு ஒரு சாதாரண மனிதன் போல வேடமிட்டுக் கொண்டீர்கள். பொது ஜனங்களின் கண்களில் படாமல், மறைத்து வைத்திருந்த பணத்தைத் திருடிச்சென்று கருப்புச் சந்தையில் இருந்து உணவினை வாங்கிச் சாப்பிட்டீர்கள்" என்றான்.

"இக்காரியங்களெல்லாம் நடந்து முடிந்தவைகள். கடந்த காலத்தில் இருந்து சகதியை எடுத்து வந்து, என் முகத்தை அதில் வைத்து அழுத்துகிறீர்கள், இது தேவபக்தியற்றச் செயல். நிச்சயமாகக் கிறிஸ்து செய்வதைப் போன்றச் செயல் அல்ல" என்று லூயிஸ் கூறினார்.

"உண்மையான பிரச்சனை என்னவென்றால், உங்களது தற்போதைய மனநிலைதான் பிரதர் லூயிஸ் அவர்களே. நான் என் மனதை மேசியாவிடம் திறக்கும் வரையிலும் கடந்த காலத்தின் அழுக்குகள் என்னோடு ஒட்டிக்கொண்டுதான் இருந்தது. அதைப் பற்றி யாராவது ஒருவர் என்னோடு பேசி இருந்தாலும், பேசி இருக்காவிட்டாலும், நான் முன்பு அழுக்காகவே இருந்தேன். இப்போது நான் முன்பு போல் கோபம் கொள்வதில்லை, நான் கிறிஸ்துவை மற்றவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கு முன்பு, அப்படியானதொரு வாழ்கையை நான் வாழ வேண்டும் என்று எனக்குத் தெரியும். பிரசங்கிக்க விரும்பும் எவருக்கும் இதே கொள்கை பொருந்தும் என்று நான் நினைக்கிறேன்" என்று டாம் அக்கறையோடும், உறுதியோடும் பதிலளித்தார்.

அடுத்தடுத்த வாரங்கள் வேகமாகக் கடந்தன. லெவ்வும், டாமும் விரைவிலேயே நண்பர்கள் ஆனார்கள். மேலும் லெவ், டாமிற்கு தானியங்கி வாகனத் தொழிற்சாலையில் (Automobile) மேற்பார்வையாளராகப் பணிபுரியும் வாய்ப்பை வழங்கினான். தொழில்நுட்பத்தை விரைவில் கற்றுக் கொள்ளும் டாமினுடைய திறனிலும் மற்றும் மனித உறவுகளின் உயர்ந்த பண்புகளை விரைவில் புரிந்துகொள்ளும் அவருடைய திறனிலும், லெவ் உறுதியான நம்பிக்கைகொண்டிருந்தான். மேலும் அங்குப் பணிபுரிபவர்கள் டாமையும், அவருடன் நட்புடன் இருப்பதையும் விரும்பினார்கள்.

மூன்று தொழிற்சாலைகளும் சிறப்பாகச் செயல்பட்டன. லெவ் அங்கு தனது தேவை குறைந்து வருவதை உணர்ந்துகொண்டான். லூயிஸ், டௌலோஸ் என்ற மற்றொரு பகுதியில்

செயல்பட்டுக் கொண்டிருந்த தேவாலயத்தில், ஒரு சிறிய குழுவினருக்குப் போதகராகத் தொடர்ந்து பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அவர் முன்பாகப் பெற்றிருந்த சேவையை இழந்திருந்தது லெவ்விற்குத் தெரியவந்தது. எந்தவொரு மாற்றமும் அவரிடம் தெரிவதாக ஒருவரும் கூறவில்லை. பிரான்ஸுடன் பணிபுரிந்த கணக்குப் புத்தக் காப்பாளரான மரியான், தன்னால் செய்ய முடியும் என்று அவர் எண்ணும் எந்த வேலையிலும் தன்னை ஆர்வத்துடன் இணைத்துக் கொண்டார். தனது பதவியை இழந்து ஒரு சாதாரணமான தொழிலாளி நிலைக்குத் தாழ்த்தப்பட்டதன் நிமித்தமாக பிரான்ஸ் கடந்த சில மாதங்கள் கவலையுற்று இருந்ததை லெவ், மரியானிடமிருந்து தெரிந்து கொண்டார். ஆனால் அவர் தனது சகோதரியின் உயிர்த்தெழுதலின் தேதியைக் கேள்விப்பட்டதன் பிற்பாடு, அவருடைய உயிர்த்தெழுதலுக்குத் தேவையான வேலைகளைச் செய்வதற்குத் தயாரானார். பிரான்ஸின் சகோதரி பதின்ம வயது உடையவராக இருந்தபோதே, மரித்து இருந்தார்.

"ஒருநாள் நான் பிரான்ஸ் சிரிப்பதைப் பார்த்தேன், அவர் அன்பினால் உண்டாகும் அல்லது அன்பு உண்டாக்கும் உற்சாகத்தை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டார் என்று நான் நம்புகிறேன்" என்று மரியான் கூறினார்.

இறுதியில் பிரான்ஸ், லெவ்வைத் தொடர்புகொண்டு, தனது மனப்பூர்வமான மன்னிப்பைக் கோரினார். அவரது தங்கையின் உயிர்த்தெழுதலைக் குறித்து உற்சாகம் அடைந்து இருப்பதையும், அவர் தன்னார்வத் தொண்டு செய்ய முன்வந்திருக்கும் மற்ற திட்டங்களைக் குறித்து உற்சாகம் அடைந்திருப்பதையும் லெவ்வால் உணரமுடிந்தது.

ஒரு சோகமான உணர்வு லெவ்வை ஆட்கொண்டிருப்பதை அவனால் உணரமுடிந்தது. பிரான்சு நாட்டில் லெவ்வினுடைய வேலை முடிவுபெறும் தருணம் வந்துவிட்டதை அவனால் அறிய முடிந்தது. அங்கிருந்த ஜனங்கள், அவனுடைய மற்றொரு குடும்பமாக மாறி இருந்ததைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். முதலில் இந்தப் பணியை அவன் ஏற்க மறுத்திருந்தது, அவனுடைய நினைவிற்கு வந்தது, ஆனால் இப்போது அங்கிருந்து கிளம்புவதற்கு அவனுக்கு மனம் வரவில்லை.

மூன்று புதிய திட்டத்தின் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்களும் ஒன்றாகக் கூடியிருந்தனர். லெவ் மிகுந்த மகிழ்ச்சியுடனும், கவலையுடனும் அவர்களுக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான்.

"உங்கள் ஒவ்வொருவருடனும் வேலைசெய்தது எனக்கு மகிழ்ச்சியை அளித்தது. காரியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து வேலைசெய்தோம் மற்றும் புதிய உற்பத்தியினைத் தொடங்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்தே பாடுபட்டோம். இந்தத் திட்டப்பணியை செயல்படுத்துவதற்கான கடினமானச் சூழலிலும் கூட, நீங்கள் நேரத்தைப் பொருட்படுத்தாமலும் மற்றும் களைப்பைப் பொருட்படுத்தாமலும் அயராது உழைத்தீர்கள். ஏதேன் பழம் உங்களுக்கு ஆற்றலை வழங்கியது உண்மைதான், ஆனால் கிறிஸ்துவின் மீதும், சக மனுக்குலக் குடும்பத்தின் மீதும் உங்களுக்கு இருந்த அன்பே, உங்களது ஆற்றலை நாம் வாழும் இந்த உலகத்தின் சுற்றுச் சூழலை தூய்மையானதாகவும், பாதுகாப்பானதாகவும் வைத்திருக்க உதவும் இந்தத் திட்டப் பணியில், உங்களை நீங்கள் ஈடுபடுத்திக் கொள்ளக் காரணமாக அமைந்தது. இப்போது நீங்கள் உங்கள் சொந்த குடும்பத்தினரின் உயிர்த்தெழுதலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் உங்களின் அன்புக்குரியவர்களின் உயிர்த்தெழுதலுக்கு உதவுகிறீர்கள். உங்களுக்கு முன்பாக உதவி தேவைப்படும் தருவாயில் இருப்பவர்களை நீங்கள் தேடிக் கண்டுபிடிப்பதையும், அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதையும் நான் பார்த்திருக்கிறேன். நீங்கள் அன்புக்கு உடனடியாகக் கட்டுப்படுவதையும் பார்த்திருக்கிறேன். அர்ப்பணிப்பு மற்றும் பலி போன்ற இத்தகைய ஆவியினையே, கிறிஸ்து இந்த உலகத்தை மீண்டும் பரதீசாக மாற்றுவதற்குப் பயன்படுத்துவார்" என்று கூறி லெவ் தனது உரையை முடித்தான்.

லெவ் சமுத்திரம் போல் திரண்டு இருந்த ஜனங்களின் முகங்களைப் பார்த்தான். அவர்களின் முகங்கள் கண்ணீராலும், சந்தோஷத்தாலும் நிறைந்திருந்தது. அன்பும், சந்தோஷமும் அவனை ஆட்கொள்வதுபோல் லெவ் உணர்ந்தான்.

* * *

***"பரிமளதைலமும் சுகந்ததூபமும் இருதயத்தைக் களிப்பாக்குவதுபோல, ஒருவனுடைய சிநேகிதன் உட்கருத்தான ஆலோசனையினால் பாராட்டும் இன்பமானது களிப்பாக்கும்."***
**(நீதிமொழிகள் 27:9)**

# அத்தியாயம் – 28

வீட்டிற்குப் புறப்பட்ட லெவ்வின் இருதயம் மிகுந்த மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. அவனது குடும்பம் விலையேறப்பெற்ற பொக்கிஷமாக அவனுக்கு இருந்தது. லெவ் இஸ்ரயேலில் தரையிறங்கியவுடன், மீண்டும் தங்களுடைய புனித தேசத்தில் தான் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான் - அவனுடைய முற்பிதாக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்து மரித்த இடம் - இப்போது அவர்கள் மீண்டும் இங்கு வாழக்கூடிய இடம். இயேசு நடமாடிய இடம் - தேவன் மனுக்குலத்திற்குக் கொடுத்த மிகப்பெரிய பொக்கிஷம். தனது இருதயம் ஏன் மிகுந்த மகிழ்ச்சியினால் நிறைந்திருக்கிறது என்பதை லெவ் அறிந்திருந்தான். இந்தப் புனிதமான தேசத்தைப்போன்று, வேறு எந்த ஒரு தேசமும் தேவனின் கரத்தால் தொடப்படவில்லை.

லெவ் விமானத்திலிருந்து இறங்கியதும், தனது குடும்பத்தினரைச் சந்திக்கப்போகிறோம் என்று எதிர்பார்த்திருந்தான், ஆனால் லெவ்வின் குடும்பத்தினர் யாரும் அங்கு வந்திருக்கவில்லை. ஒருவேளை அவர்கள் மிகுதியான அலுவல்களில் இருக்கலாம் என்று அவன் நினைத்தான். அவன் தனது உடைமைகளை எடுக்கும்போது, அவனால் தனது கண்களையே நம்பமுடியவில்லை - அங்கே முற்பிதாவாகிய ஏனோக்கு! நின்றுகொண்டிருந்தார். பரிசுத்தத்தின் உண்மையான அழகை அவர் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். ஏனோக்கு, தனது கைகளை விரித்து லெவ்வைத் தழுவிக் கொண்டார்.

"நல்லது லெவ், உங்களது பணியைச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளீர்கள். உங்களைச் சந்திப்பதற்கு இங்கு வர வேண்டாம் என்று நான்தான், உங்களது குடும்பத்தினரிடம் கூறினேன். இப்போது நீங்கள் என்னுடன் புனித நகரத்தில் உள்ள நமது அலுவலகத்திற்கு வரவேண்டி இருக்கும். முதலில் நமது குழுவினரை நீங்கள் சந்திக்க வேண்டும். உங்களின் பயணத் தகவல்களைக் குறித்து விளக்கம் அளிப்பதற்காக அல்ல. உங்களது வேலையைப் பற்றிய அனைத்துக் காரியங்களும் எங்களுக்குத் தெரியும், அதனைப் பற்றி எங்களிடம் உள்ள அனைத்தும் நல்ல அறிக்கைகளே. நீங்கள் இராஜாவுக்கு நன்றாகச் சேவை செய்துள்ளீர்கள்" என்று ஏனோக்கு கூறினார்.

"குறிப்பாக ஐரோப்பாவில் நீங்கள் மேற்கொண்ட பணியைக் குறித்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அங்கு யூதர்களின் மீதான வெறுப்பு இன்னமும் எஞ்சியிருப்பதை நாங்கள் அறிவோம். இந்த வெறுப்பு என்பது பெரும்பாலான ஜனங்கள் தங்கள் இருதயங்களில் சுமந்து கொண்டிருக்கும் சாதாரணமான தவறான எண்ணங்களைப்போல் அல்ல, ஆனால் இந்த வெறுப்புணர்வு என்பது அவர்களின் வீடுகளிலும், தெருக்களிலும், பள்ளிகளிலும் மற்றும் தேவாலயங்களிலும் மிகவும் கவனமாகக் கற்பிக்கப்பட்ட ஒன்றாகும். ஒரு முழு இனத்தையுமே அழிப்பதில் ஒருவர் ஈடுபடுவது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. ஆயினும் இரத்த ஆசையுள்ள வெறித்தனமானவர்களால், இந்த யூத எதிர்ப்பானது பின்வந்த சந்ததிகளுக்கு முறையாகக் கடத்தப்பட்டு இருந்தது. ஐரோப்பாவின் மரண முகாம்களில் என்ன நடந்தது என்பதைக் கண்டு முற்பிதாக்கள் அதிர்ச்சியடைந்தனர்" என்றவாறு முற்பிதாவாகிய ஏனோக்கு தொடர்ந்து பேசினார்.

"உங்களை எங்களின் தூதராக அனுப்பியது, உங்களின் தொழில்நுட்பத் திறமைக்காக மட்டுமல்ல. உங்களைப் போன்றே திறமையுள்ளவர்கள் அல்லது உங்களைவிட அதிக திறமை உள்ளவர்கள் வேறு சிலர் இருக்கிறார்கள். லெவ், எதிர்ப்புகள் மற்றும் தவறான எண்ணங்களைச் சமாளிப்பதற்கானதொரு தனித்துவமானத் திறனை நீங்கள் காட்டியதால்தான் நாங்கள் உங்களை அனுப்பினோம். தொழில்நுட்ப மாற்றங்களைச் செய்வதற்கு எங்களுக்கு ஒரு நபர் தேவை - அது முக்கியமானதும்கூட. ஆனால் எங்களுக்கு மிகவும் முக்கியமானது, பகையுணர்வு நிறைந்தச் சூழலில் திறம்படச் செயல்படும் உங்களது திறமையே ஆகும். யூதர்களின் மீது வெறுப்பைக் காட்டுவதற்குக் கற்பிக்கப்பட்டிருந்த ஜனங்களின் மரியாதையை உங்களால் பெறமுடிந்தது. இதை விட, லெவ், எதிரிகளை நண்பர்களாக மாற்றும் வரை நீங்கள் பொறுமையாக இருந்தீர்கள்.

அதைத்தான் நாங்களும் விரும்பினோம் - நாங்கள் எதிர்பார்த்ததைவிட நீங்கள் சிறப்பாக அதனைச் செய்தீர்கள். நல்லது லெவ், சிறப்பாக முடித்துள்ளீர்கள்" என்று ஏனோக்கு தொடர்ந்தார்.

"நீங்கள், உங்களது குடும்பத்தினருடன் ஒரு வார காலம் ஒன்றாகச் செலவிடலாம்" என ஏனோக்கு அறிவுறுத்தினார். "அந்த ஒரு வாரத்தை நீங்கள், உங்கள் சகோதரர் ஜேக்கால் வழிநடத்தப்படும் தீவிரக் கற்றல் திட்டத்தில் செலவிடுவீர்கள். அதனால்தான் நான் உங்களை அழைப்பதற்கு வந்தேன் - எனவே உங்களின் புதிய வேலையைச் செய்வதற்கு நீங்கள் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதை, இந்த ஒரு வாரத்தில் கற்றுக்கொள்ளலாம் என்று ஜேக் நினைக்கிறார். இந்தத் திட்டத்தில் தொடர்ச்சியானதொரு கற்றல் செயல் தேவைப்படுகின்றது, படிப்படியாகக் கற்றுக்கொள்ளும்போதுதான், அவைகளைத் தேவையான நேரத்தில் பயன்படுத்த முடியும்" என்றார்.

## ஓர் அன்பின் விருந்து

ஏனோக்கு, விளக்குகள் அணைக்கப்பட்டிருந்த ஓர் அலுவலக அறைக்குள் லெவ்வை அழைத்துச்சென்றார், அறைக்குள் நுழைந்ததும் அவர் சுவிட்சைப் போட்டார். லெவ்வை ஆச்சரியமும், மகிழ்ச்சியும் அடையச் செய்யும்படியாக, அவனது முழுக் குடும்பமும் அங்கு இருந்தனர். முன்னதாகவே இஸ்ரயேலுக்குத் திரும்பியிருந்த ரெபெக்காள், ஓடிச்சென்று லெவ்வின் தோள்களில் சாய்ந்துகொண்டாள். ரெபெக்காளைத் தொடர்ந்து ஜேக், ரேச்சல், அன்யா, அரியேல் மற்றும் அன்னா ஆகியோரும் லெவ்வைத் தழுவிக்கொண்டனர். மேலும், லெவ்வின் எதிர்பாராத மகிழ்ச்சிக்குக் காரணமாக ஆலன் மற்றும் ஆனி அங்கு இருந்தனர். இதனைத் தவிர வேறு எது இனிமையாக இருக்க முடியும்? என்று லெவ் நினைத்தான்.

"தேவன் குடும்பங்களின் தேவனாய் இருக்கிறார், நாம் அனைவரும் ஆபிரகாமின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். உங்களது அன்பின் விருந்திற்கு இரண்டு மணி நேரங்கள் எடுத்துக் கொள்ளலாம். பின்னர் ஜேக் மற்றும் லெவ் எங்களின் குழுவைக் கட்டாயமாகச் சந்திக்க வேண்டும். நீங்கள் அனைவரும் குடும்பமாக இருப்பதாலும், நீங்கள் நம்பகமானவர்கள் என்பதாலும், இங்கே நீங்கள் விருந்தினர்களாக இருக்கிறீர்கள். இப்போது நீங்கள் சாப்பிடலாம், மேஜையில் பழங்கள், பல்வேறு விதமான பழச்சாறுகள் மற்றும் ஏதேன் கேக்குகள் உள்ளன. நீங்கள் அனைவரும் இந்த மரியாதைக்குத் தகுதியானவர்கள்தான்" என்று முற்பிதாவாகிய ஏனோக்கு கூறினார்.

"இராஜா அளித்துள்ள இவ்விருந்தை நாம் மகிழ்ந்து அனுபவிப்போம்" என்று ஆலன் கூறினான்.

"நல்ல யோசனை, ஆலன்" என்று லெவ் கூறினான்.

அரியேல், ஆரோன் ஆகியோர் உணவு மற்றும் அவர்களுக்குக் கிடைத்த ஐக்கியத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தனர். தன்னுடைய பெற்றோர்களுடன் அங்கு இருப்பது என்பது வார்த்தைகளில் சொல்லமுடியாத அளவிற்கு ஆசீர்வாதமாக இருப்பதாக லெவ் உணர்ந்தான்.

லெவ் அங்கிருந்த அனைவரின் அனுபவங்களையும் கேட்பதற்கு விரும்பினான்.

"பிரேசிலில் உள்ள இந்தியப் பழங்குடியினருடனான உனது அனுபவம் எவ்வாறு இருந்தது என்பதை நீ சுருக்கமாகச் சொல்ல வேண்டும் ஆனி" என்று லெவ் கேட்டான்.

## அமேசானின் தேவதை

"சரி, லெவ் மாமா. வீட்டை விட்டுப் புறப்படும்போது, நான் எந்த ஒரு அனுபவமும் இல்லாத பெண்ணாக இருந்தேன். இப்போது அநேக அனுபவங்களுடன் முதிர்ச்சி உள்ளவளாகத் திரும்பி வந்திருக்கிறேன். உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு அதிகமாக வாழ்ந்து பழகியவர்களைவிட, அங்கிருக்கும் ஜனங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆசீர்வாதங்களைப் பாராட்டுகிறார்கள். போதுமான அளவு உணவு மற்றும் வசதியான வசிப்பிடம் என்பது அவர்களின் கனவுகளுக்கு அப்பாற்பட்டது. வாழ்நாள் முழுவதும் உணவுக்காகவும், தங்குமிடத்திற்காகவும் போராடிய சமூகம் அவர்களுடையது" என்றாள்.

"ஜீவனுக்கான மரங்களும், அழகான குளிரூட்டப்பட்ட வீடும் அவர்களுக்கு சொர்க்கம் போன்று இருந்தது. மேற்கத்திய நாடுகளாலும் மற்றும் மாயமந்திர வித்தைகளை உள்ளடக்கிய மதத்தாலும் அவர்கள் சுரண்டப்பட்டு இருந்தனர். மேலும், அறியாமை மற்றும் மூடநம்பிக்கையால் ஆளப்பட்டிருந்தார்கள். இப்போது கானா ஜனங்கள் கற்றுக்கொண்ட உண்மைகள், இருள் சூழ்ந்திருந்த இடத்தில் யாரோ ஒருவர் ஏற்றிவைத்த விளக்கைப்போன்று இருக்கிறது" என்றாள்.

"அவர்கள் புதிய மற்றும் பழைய (இரண்டு) உலகத்தின் பழக்கவழக்கங்களுக்கும் இடையே மாட்டிக் கொண்டிருந்தனர். அவர்களின் அரசியல் சூழ்நிலைகள் ஏற்றுக்கொள்ள முடியாதவைகளாகும். தகவல் யுகத்தில் அவர்களால் போட்டியிட முடியவில்லை மற்றும் பழைய வாழ்க்கைமுறை அதிகக் கடினமாகவும், ஏற்றுக்கொள்ள முடியாததாகவும் மாறியது. சிறந்த சூழ்நிலையில்கூட, காட்டில் வாழ்வது என்பது எளிதானதாக இருக்கவில்லை. அங்கு நோய், அசுத்தமான நீர், சுகாதார நிலைமைகளின் பற்றாக்குறை இருக்கின்றது. நவீனத் தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான ஆசீர்வாதங்கள் எதுவுமே நடைமுறையில் அங்கு இல்லை" என்றவாறு ஆனி தொடர்ந்தாள்.

"ஜீவனுக்கான மரங்கள் நடப்பட்ட பிறகே, நான் இங்கு புறப்பட்டு வந்தேன். ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கான நிலமும், ஏதேன் மரங்களும் கொடுக்கப்பட்டபோது, அவர்களின் வாழ்க்கைமுறை மாறியது. அவர்கள் ஏதேன் பழத்தை உண்ணத் துவங்கியவுடன், அவர்களின் ஆரோக்கியம், வலிமை மற்றும் உயிராற்றல் மலர்ச்சியடையத் துவங்கியது. அவர்களின் சிந்தை அதிவேகமாக மேம்பட்டதால் மிகவும் நம்பமுடியாத மாற்றம் ஏற்பட்டது. இப்போது அவர்கள் எவ்வளவு புத்திசாலிகளாய் இருக்கிறார்கள் என்று நீங்கள் நம்பமாட்டீர்கள். முற்பிதாக்களால் வழங்கப்படும் கற்றல் நிகழ்ச்சிகளைப் பார்த்து மெய்மறந்து இருக்கிறார்கள்."

"கானா ஜனங்கள் இப்போது சரீரப்பிரகாரமாக வளர்ந்திருக்கிறார்கள். அவர்களில் அதிகமானோர் முன்பு மிகவும் குட்டையாக இருந்தனர், ஆனால் இப்போது அவர்களும் மற்றவர்களுக்குச் சமமாக வளர்ந்திருக்கிறார்கள். அவர்களின் குறைபாடுகள் மறைந்து, அவர்கள் அழகான மனிதர்களாக மாறி வருகிறார்கள். அவர்கள் தங்களது பழமையான வாழ்க்கை முறையிலிருந்து முன்னேறி இப்போது மேம்பட்ட வளர்ச்சியைப் பார்ப்பது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர்கள் கணினி யுகத்தில் உள்ளனர், தொழில்நுட்பம் இப்போது அவர்களுக்கு எந்த ஒரு பயத்தையும் ஏற்படுத்தவில்லை" என்று ஆனி கூறினாள்.

லெவ், தனது உடல் மெய்சிலிர்ப்பதை உணர்ந்தான். இப்போது ஒரு வாலிபப் பெண்ணாக ஆனி வளர்ந்திருக்கின்ற போதிலும், அமேசானின் தேவதையைப் பற்றிக் கதையைப் போலக் கூறிக்கொண்டிருந்தாள். இந்தியப் பழங்குடியினர் ஆனியை நேசிப்பதை லெவ் கேள்விப்பட்டிருந்தான். அவள் அன்பைக் கொடுத்து, அன்பைப் பெறுபவளாக இருந்தாள். அன்பால் ஜனங்களிடம் சேர முடியாவிட்டால், வேறு எது ஒன்றாலும் அவர்களிடம் சேரவே முடியாது.

## அரியேல் மற்றும் அன்னா ஆரோன் அவர்களின் அறிக்கை

அரியேல் தனது தொண்டையைச் செருமினார். "நல்லது மகனே, உயிர்த்தெழுந்து வந்ததற்குப் பின்பு, இந்த வாழ்க்கைமுறைக்குப் பழக்கப்படுவதற்கு எனக்கு ஒரு வாரம் ஆனது. இந்த ஆசீர்வாதங்கள் ஒரு கற்பனைக் கதையினைக் கேட்கும்போது பெறும் அனுபவத்தைப் போன்று இருந்தது. இதனை நாம் அனுபவித்தாலும் கூட, கண்களை மூடினால் எங்கே இந்த அற்புதமானக் கனவு திடீரென்று மறைந்துவிடுமோ என்று நான் பயந்தேன். நான் ஜீவனுக்குத் திரும்பி வருகையில், நீங்கள் அனைவரும் அங்கு இருந்தது எனது வருகையை எளிதாக்கிவிட்டது. எனது புலன்களை என்னால் நம்ப முடியாதபோது, நான் உங்களை நம்பினேன். நீங்கள் அங்கு இருப்பது உண்மையானது என்பதை நான் அறிந்தேன். புதிய உலகில், வாழ்க்கையின் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள அது எனக்கு உதவியது" என்று அரியேல் கூறினார்.

"லெவ், நீ திரும்பி வந்தபோது என்ன செய்தாயோ, அதைத்தான் நானும் செய்தேன். இந்தத் தகவல் உலகில் காரியங்கள் எப்படி நடைபெறுகிறது என்று அறிந்துகொள்வதில் நான் கவனம் செலுத்தினேன். அறிவுறுத்தல் திட்டங்கள் (instructional programs) மிகவும் கருத்தைக் கவரும் வண்ணம் உள்ளதை நான் கண்டேன், அது புதிய உலகத்தில் உள்ள தகவல்களுக்கு என்னை இழுத்துச்சென்றது. கற்றல் என்பது எப்போதுமே அவ்வளவு எளிதாக இருந்ததில்லை. என்னால்

இவ்வளவு விஷயங்களைச் சிந்தையில் வைத்துக்கொள்ள முடிந்ததை எண்ணி ஆச்சரியப்பட்டேன். சில மாதங்களுக்குள்ளாகவே என்னால் இந்த உயரிய தொழில்நுட்ப உலகிற்குள் வரமுடிந்தது. மற்றொரு விஷயம் லெவ், நான் பெற்ற புதிய புரிதலுடன் வேதாகமம் படிப்பதைப் புதுப்பித்துள்ளேன். என் வாழ்க்கையில் முதல்முறையாக, உலகத்திற்கும், எனக்குமான தேவனின் திட்டம் என்ன என்பதை நான் அறிந்துகொண்டேன். மதத்தைப் பற்றிய குழப்பம் நீங்கியது. நான் எப்போதுமே தேவனை நேசித்தேன், ஆனால் அவருடைய சிந்தையும், திட்டமும் எனக்கு மறைக்கப்பட்டிருந்தது" என்று அரியேல் கூறினார்.

"எனது பெற்றோர்கள் திரும்பி வருவதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்யலாம் என்று அண்மையில்தான் முற்பிதாக்கள் கூறினர். உனது அம்மா, ரேச்சல், ஜேக் மற்றும் நான் அனைவரும் எனது பெற்றோர்கள் திரும்பி வருவதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டு வருகிறோம். இன்னும் சில வாரங்கள்தான் உள்ளன, நாங்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம். நாசிக்கள், யூதர்களை எரித்துக் கொல்லுவதற்குத் தொடங்குவதற்கு முன்பு, ஐரோப்பாவிலிருந்து இஸ்ரயேலுக்குச் சென்ற அதிர்ஷ்டசாலிகளில் எனது கொள்ளுத்தாத்தாவும், கொள்ளுப்பாட்டியும் அடங்குவர். இந்த நிலத்தைக் கட்டி எழுப்புவதற்கு, அவர்கள் கடுமையாக உழைத்தனர். எனது கொள்ளுத்தாத்தா 1948-ஆம் ஆண்டு நடந்த போரில், இஸ்ரயேலுக்கு எதிராக நூற்றுக்கு - ஒருவர் என்ற மோசமான சூழ்நிலை இருந்தபோதும் போராடினார். ஆனாலும் இஸ்ரயேல் அந்தப் போரில் வெற்றிபெற்று சுதந்திர நாடாக மாறியது. வெறுக்கப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் என்னவென்று என் பெற்றோர்கள் மற்றும் கொள்ளுத் தாத்தா, பாட்டி இருவருக்குமே நன்கு தெரியும். ஐரோப்பாவிலிருந்து யூதர்கள் தப்பியோடுகையில்தான், அரபு உலகம் யூதர்களைக் கடலுக்குள் விரட்ட காத்திருந்தது என்பதையும், அவர்கள் யூதர்களாக இருந்ததால் மட்டுமே வெறுக்கப்பட்டார்கள் என்பதையும் தெரிந்துகொண்டனர். ஆனால் இப்போது முற்பிதாவாகிய ஆபிரகாம் அவர்கள், எருசலேமில் அதிகாரத்தில் இருப்பதையும், முழு உலகமும் ஆபிரகாமின் சந்ததியினரிடமிருந்து வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாடுவதையும் கண்டால், அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்காது" என்று அப்பா தொடர்ந்து பேசினார்.

"அம்மா, இப்போது உங்கள் முறை, உங்களின் அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்" என்று லெவ் கேட்டான்.

அன்னா தொடர்ந்தார். "சரி லெவ், இதைப் போன்றதொரு நாள் வரப்போகிறது என்று யாராவது என்னிடம் முன்பு சொல்லியிருந்தால், நான் அதை ஒருபோதும் நம்பியிருக்கமாட்டேன். நான் முன்பு இருந்த பழைய உலகத்தின் போக்கு அழிந்துக்கொண்டிருக்கிறது. அது தானாகவே விரைவாக அழிய முடியாது. அதை அழிப்பதற்கானச் செயல்முறையை ஜனங்கள்தான் விரைவுபடுத்த வேண்டும் - ஜீவனுக்குத் திரும்பியதிலிருந்து, நான் ஒருபோதும் இவ்வளவு திருப்தியாக இருந்ததில்லை. ஏதேன் பழத்தை உண்ணும்போது, நம் நரம்புகளில் ஜீவநாடி தெரிகின்றது. பாவம் மற்றும் மரணத்தினுடைய அழிவின் தடங்கள் மெதுவாக நம்மை விட்டு வெளியேறுகின்றன. எனது முந்தைய வாழ்க்கையில், நான் ஒருபோதும் ஆரோக்கியமாக இருந்ததில்லை. எந்த விதமான நோயும், வலியும் இல்லாத உலகில் வாழமுடியும் என்று நான் கனவில்கூட நினைத்ததில்லை. திடீரென்று நாம் மரணத்தில் இருந்தும், மரித்துக் கொண்டிருப்பதில் இருந்தும் விடுவிக்கப்பட்டோம்" என்றார்.

"எனது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் புத்திசாலித்தனமாகவும், அழகாகவும் இருக்கிறார்கள். இப்போது அப்பாவின் பெற்றோர்கள் திரும்பிவர இருக்கிறார்கள். விரைவில் என்னுடைய பெற்றோர்கள் திரும்பி வருவார்கள். நாங்கள் ஏற்கெனவே அவர்களின் வீட்டைச் சுற்றி, தேவையான மரங்களை நட்டுவிட்டோம். நம்முடைய முற்பிதாவான ஆபிரகாம், இவ்வுலகில் மீண்டும் இளவரசராகப் பணிபுரிகிறார் என்பது, என் வாழ்வில் சந்தோஷம் தரக்கூடியதொன்றாகும். ஆதாமும், ஏவாளும் இறுதியாகத் திரும்பி வரும் வரையிலும் நாம் ஓய்வெடுக்க மாட்டோம். அது தேவனுடைய இரக்கத்திற்கான வெற்றி!"

"நான் ஒரு துணிக்கடையில் வேலை செய்கிறேன், அங்கு துணி நெய்யப்பட்டு, பின்பு ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. கணினிகள் மற்றும் இயந்திரங்கள் தானாகவே பெரும்பாலான வேலைகளைச் செய்யும் அளவுக்கு, உயர்தரமான தொழில்நுட்பத்தினைக் கொண்டுள்ளன. உயிர்த்தெழுந்து வருபவர்களுக்கு ஆடை வழங்குவது ஒரு மிகப்பெரிய திட்டமாகும். இப்போது நம்மிடம் உள்ள துணிகள் சுருக்கம் இல்லாதவைகளாகும். ஜீவனுடன் இருப்பவர்களுக்கும், மீண்டும் ஜீவன் பெற்று வருபவர்களுக்கும் தேவையான ஆடைகளைத் தினமும் நாங்கள் அனுப்புகிறோம்.

எங்களின் பணி எளிதானது, ஏனென்றால் நாம் முன்பு செய்ததுபோல, இப்போது எங்களிடம் பல வேறுபட்ட அளவுகள் - குட்டையான அல்லது உயரமான மற்றும் பருமனான அல்லது ஒல்லியான - இப்படிப் போன்ற பலவித அளவுகள் எல்லாம் இல்லை. இப்போது ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறது. இறுதியில் என் ஜெபங்களுக்கானப் பதில் கிடைத்துவிட்டது" என்று அன்னா கூறினார்.

## அன்யா

லெவ், அன்யாவைப் பார்த்தான். "உனது வாழ்வில் என்ன நடந்து கொண்டிருக்கிறது, அன்யா?" என்று லெவ் கேட்டான்.

"என்னைக் கொலைசெய்தவருக்கு ஏதாவது உதவிசெய்ய முடியுமா என்பதைக் கண்டறிய நான் நிறைய விசாரணைகளை மேற்கொண்டேன், லெவ். நான் ரேச்சல் மற்றும் ரெபெக்காளிடம் இதனைப் பற்றிக் கலந்து ஆலோசித்தேன். இது ஒரு நல்ல யோசனை என்று அவர்களும் நினைத்தார்கள். எனவே நாங்கள் முற்பிதாக்களின் உயர்விரைவுச் செய்தித் தொடர்பை (hotline) ஆலோசனைப் பெறுவதற்காக அழைத்தோம்" என்றாள்.

"முற்பிதாவாகிய லேயாள் எனது அழைப்பிற்குப் பதிலளித்தார். மேலும் எனது மரணத்திற்குக் காரணமான ஹமாஸ் பயங்கரவாதிகளில் ஒருவருக்கு தற்போது ஜீவனுடன் இருக்கும் உறவினர்கள் யாரும் இல்லை, எனவே நான் அவருக்கான வீட்டைக் கட்ட முடியும் என்றும், அவர் திரும்பி வருவதற்கான பொறுப்பினை நான் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் எங்களிடம் கூறினார். அவர்கள் மீது எனக்குக் கோபமோ, பயமோ இல்லை, பரிதாபம்தான் வருகிறது. அவர்களின் வெறுப்பு, அன்பாக மாறுவதைப் பார்ப்பதற்கான ஆசை மட்டுமே உள்ளது. முற்பிதாவுடனான எனது உரையாடல் எனது அன்பை, குறிப்பாக எதிரிகளிடம் காட்டுவதற்கு உதவியாக இருந்தது."

"முற்பிதாவாகிய லேயாள், எனக்கு நல்லதொரு ஆலோசனையை வழங்கினார். அபு முகமதுவிற்கான இடத்தினைக் கண்டறிவதற்காக, நான் பாலஸ்தீனத்திற்குச் சென்றேன். அவரைக் குறித்த காரியங்களை ஆராய்வது என்பது ஓர் அற்புதமான அனுபவமாக இருந்தது. பல இளம் பாலஸ்தீனியர்களைப் போலவே, அவரது தாயும் அவரை ஒரு முகாமில் வளர்த்திருந்ததை நான் கண்டுபிடித்தேன். அவர் குரானை மனப்பாடம் செய்யவும், யூதர்கள் மற்றும் மேற்கத்திய நாடுகளை வெறுப்பதைக் கற்றுக்கொள்வதற்காக மட்டுமே பள்ளிக்குச் சென்றிருந்தார். என்மீது கொலைவெறி தாக்குதலில் ஈடுபடும்போது அவரின் வயது பதினெட்டு. யூதர்களைக் கொல்வதில் அவர் உண்மையாக இருந்ததிநிமித்தம், சொர்க்கமும், கன்னிகைகளும் கிடைக்கப் பெறுவார் என்று அவருக்கு வாக்களிக்கப்பட்டு இருந்தது."

"பின்னர் அபு இஸ்ரயேலில் ஒரு பேருந்தில் தற்கொலைக் குண்டு தாக்குதல் நடத்த முயன்றார். அவர் ஒரு பயங்கரவாதி என்று பஸ் டிரைவர் சந்தேகித்ததால், அவரை பஸ்ஸில் ஏற விடாமல் தடுத்தார். அப்போது குண்டு வெடித்ததில் அபு மட்டும் கொல்லப்பட்டார். சொர்க்கத்தில் இருக்கும் எழுபத்திரண்டு கன்னிப் பெண்களுக்குப் பதிலாக, நான் அவருக்கு வாழ்த்து தெரிவிக்கும்போது அபு என்ன நினைப்பார் என்பதைக் குறித்து நான் ஆச்சரியப்படுகிறேன்" என்றவாறு அன்யா தொடர்ந்தாள்.

"அபு ஜீவனுக்குத் திரும்பி வரும்போது, நானும் உங்களுடன் இருக்க விரும்புகிறேன். அதற்கான தேதி இப்பொழுதே உனக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதா?" என்று லெவ் கேட்டான்.

"அவருக்கான வீட்டை நாங்கள் எவ்வளவு விரைவாகக் கட்ட முடியும் என்பதைப் பொறுத்தே அது உள்ளது. ரேச்சலும், உங்கள் நண்பர்களும் எனக்கு உதவுகிறார்கள், ஆனால் அந்த இடம் வெகு தொலைவில் இருப்பதால், அங்குச் செல்வதற்கே அதிக நேரம் ஆகின்றது. இப்போதில் இருந்து இன்னும் சில மாதங்கள் ஆகும் என்று நான் நம்புகிறேன். நாங்கள், உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம், லெவ். நீங்கள் என்னுடன் இருந்தால் நன்றாக இருக்கும்" என்று அன்யா பதிலளித்தாள்.

## ரேச்சல்

பின்னர் லெவ், ரேச்சலை அவளது அனுபவங்களைப் பகிர்ந்துக் கொள்ளும்படிக் கேட்டான். "ஆனி வீட்டை விட்டுச் சென்றுவிட்ட பின்பு, எனக்கான சொந்த வீட்டைக் கட்டுவதற்கான நேரம்

வந்துவிட்டது. நமது பழைய குடியிருப்புகளை விட இப்புதிய குடியிருப்புகள் மேம்படுத்தப்பட்டதாய் உள்ளதால், எனக்கு ஒரு புதிய வீடு இருப்பது நல்லது என்று ஜேக் நினைத்தார். அதனால் ஜேக்கும், உங்களின் பெற்றோர்களும் எனக்கானச் சொந்த வீட்டினைக் கட்டுவதற்கு உதவினார்கள். இப்போது ஜேக்கின் இடத்திற்கு அருகிலேயே, எனக்குச் சொந்தமாக அழகான வீடு உள்ளது" என்று ரேச்சல் கூறினாள்.

"நானும், லெவ்வின் வழியைப் பின்பற்றி, மாலை வேளைகளில் கற்றுக்கொண்டிருக்கிறேன். நான் எனது படிப்பினை ஆவிக்குரிய வகையிலும் மற்றும் பூமிக்குரிய வகையிலுமாக விஷயங்களைப் பிரித்து கற்றுக்கொள்ள முயற்சிக்கிறேன். தேவனின் மனதை அறிய முயற்சிப்பது என்பது மனிதனின் உன்னதமான நோக்கமாகவும், மிகவும் பலனளிப்பதாகவும் இருக்கின்றது. நானும், அன்யாவுடன் அரேபியாவுக்குச் சென்று, அபுவிற்கான திட்டங்களில் உதவினேன். அபுவின் வீட்டிற்கான வேலைகள் செய்யத் துவங்கும்போது, நானும் அவர்களோடு சென்று உதவுவேன் என்று நம்புகிறேன்" என்றாள்.

கடைசியாக லெவ், "நான் ஒரு வாரத்திற்கு, ஜேக்கின் வீட்டில்தான் தங்கப்போகின்றேன். அதனால் அவர் என்ன செய்கிறார் என்று நான் அவரிடம் கேட்கப் போவதில்லை. மனதைக் கவரும் வகையிலான ஆராய்ச்சியினை, அவர் அறிவியல் மையத்தில் செய்துகொண்டு இருக்கிறார் என்று நான் கேள்விப்பட்டேன். இந்த வாரம் நானும் அதனைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். பின்னர் நான் வேறு எங்கேனும் அனுப்பப்படுவேன். இருப்பினும், இராஜாவின் சேவையில் எப்படி, ஏன், எப்போது, எங்கே என்று யாரும் ஒருபோதும் கேட்பதில்லை" என்று கூறினான்.

## ரெபேக்காள்

லெவ், ரெபெக்காளிடம் அவளின் அனுபவங்களைச் சொல்லும்படிக் கேட்டான். "நான் ஐரோப்பாவில் மிகவும் அற்புதமாக நேரத்தைச் செலவழித்தேன். லெவ் சந்தித்தது போலான சிரமங்கள் எதையும் நான் சந்திக்கவில்லை. வியத்தகு மாற்றங்களுக்கு அனைவரும் நன்றி தெரிவித்தது போலத்தான் எனக்குத் தோன்றியது. சில திட்டங்களில் ஒருங்கிணைப்பாளராக நான் பணியாற்றினேன். திரும்பவும் செய்வதற்கு அவசியமில்லாத வேலைகளைத் தவிர்ப்பதற்காக, எல்லா வேலைகளையும் எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது பற்றியத் தெளிவானக் காட்சியை மனதில் பெற முயற்சிக்கும்போது, அது அதிகமாகப் பிரயாணம்செய்வது மற்றும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்வது போன்றவைகளுக்கு குறிப்பாக உட்படுத்தியது" என்று அவள் விளக்கினாள்.

"எல்லோரிடமிருந்தும் எனக்கு ஒத்துழைப்பு கிடைத்தது. யூதன் என்ற முறையில் எனக்கு எதிராக ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே வெறுப்பைக் காட்டினர். பின்பு அவர்கள் என்மேல் கொண்டிருந்த வெறுப்பு விலகியது. எல்லா இடங்களிலும் நீதி மேலோங்கி இருந்ததைக் கண்டு நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருந்தேன், தெரியுமா! நான் அந்த ஜனங்கள் அனைவரையும் நேசிப்பதற்குக் கற்றுக்கொண்டேன். அவர்களை விட்டுப்பிரிவது எனக்குக் கடினமாக இருக்கும் என்கிற அளவுக்கு அவர்கள் என் மீது கனிவையும், அன்பையும் பொழிந்தார்கள்" என்று ரெபெக்காள் கூறினாள்.

## ஆலனின் கானா அறிக்கை

லெவ், கடைசியாக ஆலனிடம் அவனுடைய அனுபவங்களைப் பற்றிக் கேட்டான்.

"நல்லது, இந்தப் பூமியில் நான் அதிகம் யோசிக்காத, தொலைதூர இடமாக கானா இருந்தது. இருப்பினும், இப்போது நான் அங்கு அனுப்பப்பட்டதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கானாவின் ஜனங்கள் புதிய யுகத்திற்குள் நுழைய ஆர்வமாக இருந்தனர். அவர்களுடைய வாழ்க்கை எல்லா வகையான பிரச்சனைகளாலும் நிறைந்திருந்தது-குறிப்பாக வறுமையால் நிறைந்திருந்தது. பெரும்பாலான ஜனங்கள் தண்ணீர் வசதி இல்லாததால், சுகாதாரமின்றிக் குடிசைகளில் வாழ்ந்தனர். இருப்பினும், நிலம் மிகவும் விளைச்சல் தரும் ஒன்றாக இருந்ததால் அவர்களுக்குப் பசி ஒரு பிரச்சனையாக ஒருபோதும் இருந்தது இல்லை" என்று ஆலன் கூறினான்.

"அப்பாவுக்கு இருந்த பிரச்சனைகள் எதுவும் எனக்கு இல்லை. அனைவருமே வேலை செய்து இந்தத் திட்டத்தை முடிக்க ஆர்வமாக இருந்தனர். எனக்கு இருந்த ஒரே பிரச்சனை

என்னவென்றால், கொஞ்சமேனும் ஓய்வெடுப்பதற்காக, ஜனங்களை அவர்களது வீட்டிற்கு அனுப்புவதுதான். அவர்களுக்கிருந்த உற்சாகம் குறையாமல், அயராது உழைத்தார்கள். எனது மிகப்பெரிய கவலை என்னவென்றால், இந்த ஜனங்கள், நமது மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கையாளுவதற்கு மிகவும் பின்தங்கியிருந்தனர். மேம்பட்ட தொழில்நுட்பத்தை அவர்களுக்கு எளிதாகப் பழக்குவதற்கு நான் தவறிவிட்டேனோ! என்று நான் வருந்துகிறேன். இந்த ஜனங்கள் ஜீவ விருட்சத்திலிருந்து கனிகளை மிக விரைவாகவே சாப்பிட ஆரம்பித்தனர். அதன் விளைவாக அவர்கள் புத்திசாலிகளாய் மாற ஆரம்பித்து இருந்தனர். அவர்கள் கற்றுக்கொள்வதற்கு ஆர்வமாக இருந்தார்கள். எதையாவது அவர்கள் புரிந்துகொள்ளாதபோது, அதைப் பற்றி வெளிப்படையாகக் கேட்டனர். தங்களுக்குத் தெரியாத எதையும் அவர்கள் அறிந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை" என்று ஆலன் தொடர்ந்து பேசினான்.

"காரியங்களை எளிதாகப் புரிந்துகொள்ளுவதற்கு, சில தவறுகளை உடனடியாகச் சரிசெய்யும்படியான அறிவுறுத்தல்கள் அவர்களுக்கு உதவியது. அவர்களில் சிலர், நான் கொண்டிருந்ததைவிட சிறந்த யோசனைகளுடன் இருந்ததை மிக விரைவிலேயே நான் கண்டுகொண்டேன். தொழிற்சாலை இப்போது அதன் முழு உற்பத்தியையும் செய்கின்றது. அதன் திறனை மேலும் அதிகரிக்கச் சிறிய மாற்றங்கள் மட்டுமே தேவை. நிச்சயமாக, எங்களது இந்த வெற்றியின் பெரும்பகுதிக்கு இஸ்ரயேலிடமிருந்து, நாங்கள் பெற்றுக்கொண்ட இயந்திரங்களே காரணமாக இருந்தது. இயந்திரத்தின் பாகங்களை ஒன்றுசேர்த்து மின்சாரத்துடன் இணைத்தப் பிறகு, அது தனது உற்பத்தியைச் செய்யத் தொடங்கியது" என்றான்.

## நேரம் முடிந்துவிட்டது

குடும்பத்தில் உள்ள அனைவரின் அனுபவங்களையும் கேட்டாகிவிட்டது. இப்போது லெவ்வின் அனுபவத்தைக் கூறுமாறு அனைவரும் ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். லெவ், அவனுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டது அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்தது.

முற்பிதாக்களாகிய உல்தாள், சாரா, எலியா மற்றும் யோவான்ஸ்நானன் ஆகியோருடன் ஏனோக்கு நுழைந்தபோதுதான், லெவ் தனது அனுபவங்களைப் பகிர்ந்து முடித்தான்.

"இராஜாவுக்கு நீங்கள் செய்த சேவைகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, இந்தச் சிறிய கூட்டத்திற்கு நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம். நீங்கள், அவருக்கு நன்றாகச் சேவை செய்தீர்கள். அதற்காக நாங்கள் அனைவரும் நன்றி கூறுகிறோம். எவ்வாறாயினும், நமது பணி இன்னும் ஆரம்ப நிலையில்தான் உள்ளது. மேலும் நீங்களும், மற்றவர்களும் இராஜாவின் சேவையில் இன்னும் தொடர வேண்டும். ஒவ்வொரு காரியத்திலும் அதன் இலக்கை நாம் அடைந்துவிட்டால், ஓய்வெடுக்கவும், இளைப்பாறவும் நேரம் கிடைக்கும். உயிர்த்தெழுதலின் முதல் கால் நூற்றாண்டு மிகவும் பரபரப்பு மிகுந்ததாக இருக்கும். போரையும், பிரச்சனைகளையும் உண்டாக்கியவர்களைக் கட்டிடம் கட்டுபவர்களாகவும், தோட்டக்காரர்களாகவும், விவசாயிகளாகவும் மாற்றுவது கடினம். ஆனால் இது சிறப்பாக நடந்து வருகிறது. ஒவ்வொரு தேசங்களும் இப்போது நம்முடன் இணையத் தொடங்கி உள்ளனர். ஜனங்கள் ஒருவரையொருவர் நேசிப்பதற்கு நீண்ட காலங்கள் எடுக்கும், ஏனெனில் அது ஒரு கடினமானப் பணியாக இருக்கும்" என்றார்.

நேரம் முடிந்துவிட்டது என்று ஏனோக்கு அறிவித்தார். அப்போது அவர், "உங்களிடம் இன்னும் ஒரு கேள்வி உள்ளது, ரெபெக்காள். நீங்கள் சியாட்டிலுக்குச் சென்று அங்கு லெவ்வுடன் இணைந்து வேலை செய்வீர்களா?" என்று ஏனோக்கு வினவினார்.

"ஆம், ஏனோக்கு அவர்களே, நான் நிச்சயமாகப் போகிறேன்!" என்று ரெபெக்காள் மகிழ்ச்சியுடன் பதிலளித்தாள்.

## இல்லம், மீண்டும் இனிய இல்லத்திற்குத் திரும்புதல்

சில மாதங்கள் மட்டும் தங்குவதற்கு இடம் தேவைப்பட்ட ஒருவருடன், லெவ் தனது வீட்டினைப் பகிர்ந்துகொண்டார். மற்றொருவருடன் வீட்டினைப் பகிர்ந்து கொள்வதனை லெவ் கற்றுக்கொண்டான். அப்துல் ஹசாத், சவுதி அரேபியாவைச் சேர்ந்தவர். ஜேக் பணிபுரிந்த நிறுவனத்திலிருந்து கணினி உற்பத்திக்கான திட்டங்களை, தனது சொந்த நாட்டிற்குக் கொண்டுச் செல்வதற்கு அவருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அப்துல் மிகவும் புத்திசாலி. யூத மக்கள் மீது,

அவரின் சொந்த ஜனங்கள் கொண்டிருந்த பொதுவான எண்ணங்களை விட, வித்தியாசமான எண்ணங்களை அப்துல் கொண்டிருந்தார்.

லெவ் வீட்டிற்குத் திரும்பியபோது விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. இரவு வெகுநேரம் ஆனபோதிலும், அப்துல் தொலைக்காட்சியில் கல்விக்கான இணையதள பக்கத்திலிருந்து படித்துக் கொண்டிருந்தார். அவர் லெவ்வை அன்புடன் வரவேற்றார். மேலும் அவரது வீட்டில் தங்கி இருப்பதற்காகவும் மன்னிப்புக் கேட்டார். அப்துல், தனது வீட்டில் தங்கியிருப்பது தனக்கு பாக்கியம் என்றும், அவர் விரும்பும் வரையிலும் அங்குத் தங்கியிருக்க அவரை வரவேற்பதாகவும் லெவ் உறுதியளித்தார். படுக்கையறை புதிய விரிப்புகளுடன் தயாராக இருப்பதாக அப்துல், லெவ்விடம் கூறினார். பகல் நேரத்தில் தான் மேற்கொண்ட பயணங்களால் சோர்வடைந்திருந்ததால், உடனடியாகத் தூங்கச் செல்வதற்கு லெவ் தயாரானதால், அப்துலிடம் மன்னிப்புக் கேட்டான்.

தான் விழித்தபோது, அப்துல் முன்பே எழுந்திருந்து, அன்றைய தினத்திற்கானப் பழங்களைப் பறித்து, அதிலிருந்து புதிய பழரசம் தயாரித்திருந்ததை லெவ் கவனித்தான். லெவ் விரைவாக உடை அணிந்து, சமையலறையில் அப்துலைச் சந்தித்து, அவரது உதவிக்கு நன்றியினைத் தெரிவித்தான்.

"இது எனக்குக் கிடைத்தச் சிலாகியம், லெவ். நேற்றிரவு நீங்கள் மிகவும் சோர்வடைந்துபோய் விட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஐரோப்பாவில் நீங்கள் செய்த உயரிய வேலைகளைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். நீங்கள் அந்த ஜனங்களிடம், உங்களை பிரியமுள்ளவராக வெளிக்காட்டி, அன்பாக நடந்துகொண்டீர்கள். உங்களைப் புகழ்ந்து பேசும் வார்த்தைகள் மட்டுமே எங்களை வந்தடைந்தன. எப்படியிருந்தாலும், நீங்களும், நானும் இப்போது கர்த்தராகிய கிறிஸ்துவிடம் நமது முழங்கால்களை மடக்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். யூதர்களின் மீதான வெறுப்புணர்வை, எனக்கு ஊட்டி வளர்த்திருந்தார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும், லெவ். அது ஒரு கண்மூடித்தனமான வெறுப்பு, அதில் உண்மையும், நியாயமும் இல்லை. நாங்கள் இறுதியாக உண்மையைக் கற்றுக்கொள்ளும்போது, அந்த வெறுப்பு இப்போது அவ்வளவு அசிங்கமாக எங்களுக்குத் தெரிகிறது." அவரது பழரசக் கோப்பையை உயர்த்தி, "நாம் இருவரும் இராஜாவுக்குச் சேவை செய்வதற்கு இணைந்திருப்பதால் அன்போடும், நட்போடும் இதனைப் பருகலாம்" என்று அப்துல் கூறினார்.

"ஆமாம், இராஜாவின் சேவையில் அன்போடும், நட்போடும்" என்று லெவ் தனது கோப்பையை உயர்த்தினான்.

அப்துலும், லெவ்வும் இணைந்து, பழைய நண்பர்களை வாழ்த்துவதற்கும், புதியவர்களைச் சந்திப்பதற்காகவும் விரைவாக தேவாலயத்திற்கு வந்தனர். போதகர், தேவனுடைய வார்த்தையை நன்கு விளக்கிக் கூறுபவராக இருந்தார், அவர் கூறும் விளக்கத்தைக் கேட்பது மகிழ்ச்சியாக இருந்தது.

## மீண்டும் வேலைக்குத் திரும்புதல்

காலை உணவுக்குப் பிறகு, அவர்கள் ஜேக்கின் கல்வி நிறுவனத்திற்குச் சென்றனர். சவுதி அரேபியாவிற்குக் கொண்டுச்செல்வதற்காக, அப்துல் அங்கு மேம்பட்ட அறிவியலைக் கற்றுக்கொண்டார். அவரது தேசம் எண்ணெய் ஏற்றுமதியால் அவ்வளவாக பலன் பெறவில்லை. இப்போது இஸ்ரயேலில் இருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும் புத்துருவாக்கத் திட்டத்தில் அவரது தேசம் ஆர்வமுள்ள உறுப்பினராகிவிட்டது.

லெவ், முழுச் செயல்பாட்டையும் மறுபார்வையிடுவதற்குச் சிறிது நேரம் செலவிட்டான். பின்னர் கனரக அறிவியல் பகுதிக்குச் சென்றான். இப்பகுதி எதிர்-பொருளைச் (anti-matter) சேகரித்து வைத்து, அதனை ஆற்றல்மிக்க ஆதாரமாகப் பயன்படுத்துவதில் ஒரு முன்னேற்றத்தைக் கண்டிருந்தது. இது அணு ஆற்றலைப் பயன்படுத்துவதை விட, தொழில்நுட்ப ரீதியாக மிகவும் மேம்பட்டதாக இருந்தது. எதிர்-பொருளைச் (anti-matter) விண்வெளித் தொழில் சிறந்ததொரு உந்து சக்தியாக, நீண்ட காலங்களுக்கு மிகப்பெரிய அளவிலான ஆற்றலை உற்பத்திச்செய்யும் தனித்துவமான திறன்கொண்டதாக உள்ளது. சரியாகக் கையாளப்பட்டால் இது மிகவும்

பாதுகாப்பானது, ஆனால் சரியாகப் பயன்படுத்தப்படாவிட்டால் அதிகத் தீங்கு விளைவிக்கக் கூடியதாக இருக்கும்.

ஜேக், எதிர்-பொருளைப் (anti-matter) பாதுகாப்பதற்கான தொழில்துறைத் தேவைகளைக் கற்று, பின்னர் அதனை காற்று மற்றும் விண்கலம் (ரோவர்) ஆகியவற்றில் உந்து சக்தியாகப் பயன்படுத்துவதற்குத் தயார்படுத்தினார். அதனைப் பெரிய அளவில் உற்பத்திச் செய்வதற்குக் கிளைகள் தேவைப்படும். இதன் ஒரு பகுதியே அவருக்கு வழங்கப்பட்ட பணியாக இருந்தது. அது எவ்வாறு உற்பத்திச் செய்யப்படுகிறது என்றும், போதுமான அளவுகளில் எதிர்-பொருளைப் (anti-matter) பெறுவதற்குத் தேவையான வசதிகளை அவர் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் இஸ்ரயேலில் சிறிய ஆலை ஒன்றை வைத்திருந்தனர். அந்த ஆலை எதிர்-பொருள் (anti-matter) உற்பத்திச் செய்வதற்காகச் செயல்பட்டது. ஆனால் இந்தப் புதிய ஆற்றலைப் பயன்படுத்தக் கூடிய சோதனை இயந்திரங்களில் மட்டுமே எதிர்-பொருள் (anti-matter) போதுமான அளவு உற்பத்திச் செய்யமுடியும்.

ஆலன், அவர்கள் எதிர்-பொருள் (anti-matter) பாதுகாக்கப் பயன்படுத்திய முறைகளைப் பற்றி விளக்கினான். அதைத் திறமையாக உற்பத்திச் செய்யும் முறையை அவர்கள் கண்டுபிடிக்கும் வரை, எதிர்-பொருள் (anti-matter) பெறமுடியாத ஒன்றாகவே இருந்தது. இப்போது அவர்கள் அதைப் போதுமான அளவில் உற்பத்திச் செய்ய முடியும். அது விமானப் போக்குவரத்தில் புரட்சியை ஏற்படுத்தும். அதிர்ஷ்டவசமாக லெவ், எதிர்-பொருள் (anti-matter) பற்றின அறிவியலைக் குறித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை. ஆனால் அதைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை அவர் பின்பற்ற வேண்டும். இருப்பினும், அதைக் கையாள்வதில் உள்ள ஆபத்துகளையும், அப்படி ஆபத்துகள் ஏற்படும் பட்சத்தில் அதனை எவ்வாறு பாதுகாப்பாகக் கொண்டுச் செல்வது என்பதைப் பற்றியும் லெவ் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

இது ஒரு தீவிரமானக் கற்றல் அனுபவமாக இருந்தது. அதிர்ஷ்டவசமாக, ஜேக் இதில் சிறிது காலம் பணிபுரிந்தார். மேலும் சில சாதனைகளையும் புரிந்திருந்தார். லெவ்வின் கேள்விகளுக்கான பதில்களை ஜேக் அறிந்திருப்பது மட்டுமல்லாமல், லெவ் கற்றுக் கொண்டவைகளை, சரியாகத்தான் புரிந்துகொண்டுள்ளாரா என்பதைச் சோதிக்க லெவ்விடம் கேள்விகளைக் கேட்பதன் மூலம் அவரது புரிந்துகொள்ளுதலை விரிவாக்க முடிந்தது. லெவ்வின் மனம் அடிப்படைக் கருத்துகளைப் புரிந்துகொள்ளவும், ஏராளமான தகவல்களை நினைவில் வைத்துக்கொள்ளவும் போதுமான அளவு விழிப்புடன் இருந்தது. ஜேக் என்ன கற்பிக்கிறார் என்பதை லெவ் நன்றாகப் புரிந்துகொண்டான்.

## ஈகிள் விங்

அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டதால், அந்த வாரம் விரைவாகச் சென்றிருந்தது. அவர்கள் விமானத்தின் முன்னோடி உற்பத்தியாளரைத் தேர்ந்தெடுத்திருந்தனர். இப்போது அவ்விடத்தை ஈகிள்விங் என்று அழைக்கிறார்கள். உண்மையில், இந்த நிறுவனம் சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே எதிர்-பொருள் (anti-matter) பற்றின அறிவியலில் முன்னோடியாக இருந்தது. ஆனால் அதைத் தயாரிப்பதில் ஒரு சாதனையை அவர்களால் நிகழ்த்த முடியவில்லை, அதனால் அம்முயற்சி தோல்வி அடைந்துவிட்டது. எதிர்-பொருள் (anti-matter) உருவாக்கும் இஸ்ரயேலின் திறனில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டபோது, அதனை உடனே கற்றுக்கொள்வதற்கு ஆர்வமாக இருந்தனர்.

திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத்தான் சியாட்டில் நகருக்குச் செல்லவேண்டும் என்பதை லெவ் அறிந்திருந்தான். ஈகிள்விங் தொழில்துறை வளாகம் தொடர்ந்து தக்கவைக்கப்பட்டு இருந்தது. இருப்பினும், அதன் நிறுவனக் கட்டமைப்பு, உலக சமூக சேவை மையமாக மாறியிருந்தது. அவர்கள் ஐரோப்பாவில் லெவ்வின் வெற்றியைப் பற்றி அறிந்துகொண்டு, தங்களின் திட்டத்திற்கு வந்து வழிகாட்டி உதவுமாறு லெவ்வை வரவேற்கும் செய்தியை அனுப்பியிருந்தனர். ஈகிள்விங்கில் இருந்தவர்கள் அந்தத் திட்டத்தைத் தொடர ஆர்வமாக இருந்தார்கள் என்பதைக் காட்டும் விதமாக அன்பான அணுகுமுறையை வெளிப்படுத்தினார்கள்.

இஸ்ரயேலில் இருந்து கிளம்புவதற்கான நேரம் வந்தபோது, லெவ் தனது இருதயத்தில் ஒரு போராட்டத்தை உணர்ந்தான். இருப்பினும், இந்த முறை ரெபெக்காள் தனது பக்கத்தில் இருப்பதால் காரியங்கள் எளிதாக இருக்கும் என்று எண்ணினான்.

ஆலன் தனது பெற்றோரை விமான நிலையத்திற்கு அழைத்துச் சென்றான். பழைய உலகில் இருந்த குண்டுவீசும் விமானங்கள் போலத் தோற்றமளித்த, எண்ணூறு இருக்கைகளைக் கொண்ட விமானத்தைக் கண்டு லெவ் வியந்தான். ஏதேன் தேநீர் மற்றும் பழரசங்கள் பானங்களுக்கான வகைகளாகக் கொடுக்கப்பட்டது. வருகைபுரியும் பயணிகள் உற்சாகமாகப் புறப்பட்டுச் செல்லும்படி அவர்களைத் தயார்படுத்துவதற்கு ஏதேன் பழங்கள் உதவுகிறது என்று ரெபெக்காள் பாராட்டினாள். வாழ்க்கை மிகவும் எளிமையாகவும், இயல்பானதாகவும் இருந்தது.

* * *

***"கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்." (ஏசாயா 40:31)***

# அத்தியாயம் - 29

புதிய உலகின் விமானத்தினுடைய என்ஜினின் மெல்லிய ஓசை, ரெபெக்காளுக்கு இதமான உணர்வைத் தந்தது. அவள் கண்களை மூடி அமர்ந்திருந்தாள். இஸ்ரயேலில் அவர்கள் இருந்தது குறுகிய காலமேயானாலும், அந்நினைவுகளைப் பற்றிய எண்ணங்கள் அவளுக்கு ஆறுதலைத் தந்தது. இப்போது அவள், லெவ்வுடன் சியாட்டிலுக்குச் சென்றுகொண்டு இருக்கிறாள்.

இஸ்ரயேலுக்குத் திரும்பி அங்கே அவர்கள் தங்கியிருப்பதை, அவள் உணர்ந்து உள்வாங்குவதற்கு முன்பே காலம் முடிந்துவிட்டாலும், அது அவர்களுக்கு மகிழ்ச்சியையே கொடுத்திருந்தது. தன் பெற்றோர்களை நம்பி, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பண்ணைகளில் உள்ள ஏதேன் மரங்களை வளர்ப்பதில் அவர்களுக்கு உதவியவாறே, அந்த நாட்களைப் புத்துணர்ச்சியோடு கழித்திருந்தாள். லெவ், ஜேக்குடன் இணைந்து எதிர்-பொருள் (anti-matter) குறித்துக் கற்றுக்கொண்டிருந்தான். அவளுடைய குடும்பத்துடன் ரெபெக்காள் செலவிட்ட நேரம் அவளுக்கு மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் இருந்தது, ஏனென்றால் தேவனின் வழிநடத்துதல் அவர்களின் முகங்களைப் பிரகாசமாக்கி இருந்தது தெளிவாகத் தெரிந்தது. அதுமட்டுமல்லாமல், இஸ்ரயேல் ஜனங்கள் ஜீவனுக்குத் திரும்புவதையும் மற்றும் மறுசீரமைப்பின் வேலைகளும் பிரமாண்டமானதாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதையும் அவள் கண்டாள்.

அன்னா உயிர்த்தெழுதல் கேக்கின் கடைசித் துண்டை, அரியேலுக்குக் கொடுத்தார். அப்போது அவர்களின் கலகலப்பான உரையாடல் மற்றும் சிரிப்பைக் குறுக்கிடும் வகையில், ரெபெக்காளின் பாதுகாப்பான தொலைபேசி ஒலித்ததில், அவள் எவ்வளவாக திடுக்கிட்டாள் என்பதையும் அவள் நினைவுகூர்ந்தாள்.

எனது அன்பானவர்களே முற்பிதாவாகிய ஏனோக்கு அழைக்கின்றார். "என் வீட்டில் ரெபெக்காள் இருக்கும்போது, ஏனோக்கு அவர்கள், அவளை அழைப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது" என்று அன்னா கூறினார். முற்பிதாக்களில் ஒருவர், தனது குடும்ப உறுப்பினர்களில் ஒருவரைத் தன் முன்னிலையில் அழைத்ததன் பெருமையில் அன்னாள் மூழ்கிவிட்டார்.

"அவள் வெட்கப்படுகிறாள்" என்று ரெபெக்காளின் முகம் சிவந்திருந்ததைக் கண்டு ரேச்சல் கிண்டல் செய்தாள். இப்படியான பாராட்டுக்களின்போது எப்போதும் வெட்கப்படுவது என்பது ரெபெக்காளுக்குச் சங்கடமானதொன்றாக இருந்தது."

ரெபெக்காள் சிரித்துக்கொண்டே, அவள் கவனத்தைத் திசைதிருப்பும் பின்னணிச் சத்தங்களை நிறுத்துவதற்காகத் தன் கைகளால் சைகைகாட்டினாள்.

"ரெபெக்காள், வாஷிங்டனில் உள்ள சியாட்டிலில் எதிர்-பொருள் (anti-matter) குறித்த திட்டத்தை மேற்பார்வையிடுவதற்கு, லெவ்வை நாங்கள் தேர்ந்தெடுத்துள்ளோம் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஐரோப்பாவில் இருக்கும்போது அங்குள்ள ஜனங்களுடனும், அவர்களின் உணர்வுகளுடனும் பணியாற்றி உள்ளீர்கள், அதில் உங்களது சிறந்த திறனையும் காட்டியுள்ளீர்கள். மேலும் உங்களுக்குக் காரியங்களை வெற்றிகரமாக முடிப்பதற்கானத் திறமையும், ஏதேன் மரங்களை வளர்த்துவது குறித்த அடிப்படை அறிவும் உள்ளது. பசுமை வீடுகள் குறித்த திட்டங்களை மேற்பார்வையிடவும், ஏதேன் பழ விநியோகத்தை நிர்வகிக்கவும் மற்றும் பணியாளர்களை மேற்பார்வையிடவும் நீங்கள், லெவ்வுடன் வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்" என்று கூறியவாறு ஏனோக்கு அவர்கள் பேசுவதை நிறுத்தினார். "சற்று இடைவெளி விட்டு நீங்கள் இந்தப் பணிகளை ஏற்றுக்கொள்வதற்குத் தயாரா?" என்று அவர் கேட்டார்.

"ஆமாம், நான் இதனை மகிழ்ச்சியாகவும், கனமிக்கதொன்றாகவும் கருதுகிறேன், ஏனோக்கு அவர்களே" என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

சிடாக் - SEATAC (சியாட்டில் - டகோமா பன்னாட்டு வானூர்தி நிலையம் (Seattle–Tacoma International Airport)

முற்பிதாக்களால் கொடுக்கப்பட்டிருந்த புதிய அதிகாரத்திற்கு இணங்க எருசலேம் வரைக்கும் வந்த நாடுகளில், அமெரிக்கா முதன்மையானதாக இருந்தது. இஸ்ரயேலுடன் இணக்கத்திற்குள் வரலாம் என்று முடிவெடுப்பதற்கு முன்பு, பல மாதங்கள் அந்தத் தேசத்தில் மழைப்பொழிவு இல்லாமல் இருந்தது. முன்பு வல்லரசு என்று அறியப்பட்டிருந்த ஒரு தேசம், பல ஆண்டுகளாகத் தன்னை நம்பி தனக்குக் கீழே இருந்த தேசமான இஸ்ரயேலுக்குச் செல்வது கடினமாக இருந்தது. இறுதிப் படையெடுப்பிற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் திருப்பத்திற்காக, பலர் இஸ்ரயேலைக் குற்றம் சாட்டினர். மேலும் அமெரிக்கா இஸ்ரயேலைக் கைவிட்டதும் ஒரு காரணமாகும். மேலும் இனி வல்லரசு என்ற ஒன்று இல்லை, ஒரு நாட்டின் கட்டுப்பாட்டின் கீழ் இனி எதுவும் இருக்கப்போவதும் இல்லை. முன்பு இருந்த நியூ ஜெர்சியைவிடப் பெரியதாக இல்லாத ஒரு தேசமான இஸ்ரயேலுக்கு, உதவி மற்றும் வழிகாட்டுதலைப் பெறுவதற்காக வருமாறு அமெரிக்காவிற்கு அறிவுறுத்தப்பட்டது. விழுங்குவதற்குக் கடினமான மாத்திரையைப் போன்று, ஏற்றுக்கொள்வதற்கு அது கடினமானதொன்றாகவே அவர்களுக்கு இருந்தது.

இருந்தபோதிலும், இஸ்ரயேலுடனும், முற்பிதாக்களுடனும் இணக்கத்திற்குள் வருவதே சரீர ரீதியிலும், ஆவிக்குரிய ரீதியிலும் வாழ்வதற்குச் சாத்தியமான ஒரே வழி என்று பலர் நம்பினர். அப்படியான நம்பிக்கைக்குள் வந்தவர்களுள் ஆக்னஸ் வாட்ஸ்சும் ஒருவர். அவரும், அவரது கணவர் ஸ்காட்டும் சிடாக் விமான நிலையத்தில் ரெபெக்காளையும், லெவ்வையும் சந்தித்து ஈகிள்விங்கிற்கு அருகிலுள்ள ஒரு உணவு விடுதிக்கு அழைத்துச்சென்றனர்.

"இஸ்ரயேலுக்கு எதிராகத் தரையிறங்கிய படைகள் அனைத்தும் அழிக்கப்பட்ட பின்பு, இஸ்ரயேலினுடைய வெற்றி அதிசயிக்கத்தக்க விதமானது என்பது தெளிவாகத் தெரிந்தது. மேலும் நான் புதிய இராஜாவுக்கு மண்டியிட்டு பணிந்துகொள்ளத் தயாராக இருந்தேன். கிறிஸ்துவைத் தேடுகிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால் பொதுவாக மதத்தால் சோர்வடைந்து, அக்கறையற்றவர்களாகப் பலர் உள்ளனர். உங்களது செய்தி அவர்களில் எவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எனக்குத் தெரியவில்லை. ஈகிள்விங் ஜனங்கள் எவ்வாறு பதிலளிப்பார்கள் என்பதைப் பார்க்க ஆர்வமாக உள்ளேன்" என்று ஆக்னஸ் குறிப்பிட்டார்.

"நான் எப்படிப் பதிலளிப்பேன் என்பதைப் பார்க்கவும் ஆக்னஸ்சும் ஆர்வமாக இருக்கிறார்" என்று அவரது கணவர் ஸ்காட் வெறுமையின் தொனியில் கூறினார். "அப்படியாக" சோர்வடைந்து, அக்கறையற்றிருப்பவர்களில் "நானும் ஒருவன்" என்று அவர் கிண்டலான தொனியில் கூறினார்.

"மதத்தினாலும் சோர்வடைந்திருக்கலாம் மற்றும் அக்கறையற்றத் தன்மையினாலும் சோர்வடைந்திருக்கலாம்". ரெபெக்காள், பின் இருக்கையில் இருந்த ஸ்காட்டைப் பார்த்துக் கூறியவாறே, அவரை மிகவும் கடினமானவராகவும், கசப்பானவனாராகவும் மாற்றியது எது என்று யோசித்தாள்.

## ஏதேன் பழத்தை ஒதுக்கிடுதல்

"உங்கள் அனைவருக்கும் விருந்து ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என்று ரெபெக்காள், அதிகாலையிலேயே ஈகிள்விங்கின் ஆண்கள் மற்றும் பெண்கள் கூடியிருந்த பெரிய கூட்டத்தினரிடம் அறிவித்தாள். பார்வையாளர்களில் பலர் சலிப்புற்று, தங்களின் சலிப்பினைக் கூடக் காட்டாதவர்களாகவும், எவ்வித உணர்வும் இன்றி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் இந்த நிலை, ரெபெக்காளுக்கு, முழுவதும் தளர்ந்து, வாடிப்போன, மெல்லிய காகிதத்தைப் போன்று தோற்றமளித்த இலைகளால் நிரம்பியிருந்த செடிகள், அந்த அறை முழுவதிலும் நிறைந்திருப்பதுபோல் இருந்தது.

"உங்களில் எத்தனை பேர் ஏதேன் பழத்தை முன்பு ருசித்திருக்கிறீர்கள்?" என்று ரெபெக்காள் கேட்டாள். சிலரின் கைகள் உயர்ந்தன. "எத்தனை பேர் ஏதேன் பழத்தை ருசித்ததில்லை?" என்று கேள்வி எழுப்பியவாறு பார்வையாளர்களை ரெபெக்காள் ஆராய்ந்தாள்.

அதிக எண்ணிக்கையிலான கைகள் இப்போது உயர்ந்திருந்தன. "இன்று காலையில் எத்தனை பேர் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கே விரும்பவில்லை?" என்று ரெபெக்காள் கேட்டாள்.

"எங்களுக்கு எங்களது காபி வேண்டும்" என்று ஒரு குரல் பதிலளித்தது.

"இனிமேல் காபி இல்லை என்கிறார்கள். இதில் இஸ்ரயேல் எங்களுக்கு உதவமுடியுமா?" என்று மற்றொரு குரல் கேள்வி எழுப்பியது, அதைத் தொடர்ந்து அநேகருடைய சிரிப்பொலி எழுந்தது.

ரெபெக்காளும் சிரித்தாள். ஆர்வத்தினால் அக்கணநேரத்தில் உண்டான உற்சாகம், தொடரும்படிக்கு ஊக்கமளித்தாள்.

"ஆமாம், இஸ்ரயேலால் உதவமுடியும். அறையின் பின்புறத்தில் நீங்கள் சூடான தேநீர் மற்றும் பழங்களைக் காணலாம். தேநீர் அருந்துவதும், பழங்களைச் சாப்பிடுவதும் உங்களின் முதல் பணியாகும், பிறகு அதைப் பற்றிப் பேசுவோம். உங்களுக்கு இருபத்தைந்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன" என்று ரெபெக்காள் கூறினாள்.

ரெபெக்காளும் அவர்கள் இருந்த அறையின் பின்புறத்திற்குச் சென்று, அவர்களுக்குப் புத்துணர்வு அளிப்பதற்கென்று வைக்கப்பட்டு இருந்தவைகளை, ஜனங்களுக்குப் பரிமாறியபடி அவர்களுக்கு வாழ்த்துக் கூறினாள். ரெபெக்காள் மீண்டும் அவர்களை அழைத்தபோது, அனைவரும் அவரவர் இருக்கைகளுக்குத் திரும்பிவந்தனர். அவர்கள் முகத்தில் பெரிய முன்னேற்றத்தைக் கண்டு, ரெபெக்காள் புன்னகைத்தாள்.

"இப்பொழுது நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?" என்று ரெபெக்காள் கேட்டாள்.

"நான் எழுப்பப்பட்டதாக உணர்கிறேன்!" என்றது ஒரு குரல்.

"நான் உண்மையில் வேலைக்குச் செல்லவேண்டும் என்று உணர்கிறேன்" என்று மற்றொரு குரல் கூறியது.

"அது என்ன?" என்று மூன்றாவது குரல் கேள்வி எழுப்பியது.

ரெபெக்காள் புன்னகைத்தவாறே ஏதேன் பழத்தின் உற்பத்தி மற்றும் தன்னுடைய பெற்றோர் வளர்க்கும் மரப் பண்ணைகள், மரக்கன்றுகள், செடிகள் மற்றும் பழங்களின் ஏற்றுமதி, இப்போது பூமியில் உள்ள ஒவ்வொரு தேசத்தையும் சென்றடைவது ஆகியவற்றைப் பற்றி விளக்கினாள்.

"இதற்கு முன்பு, ஏதேன்பழம் நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மட்டுமே கிடைத்தது, ஆனால் விரைவில் இந்தப் பரிபூரண ஊட்டச்சத்து இஸ்ரயேலில் இருந்து, அதனைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் கிடைக்கும். இன்று முதல், இந்தப் பழங்கள் உங்களுக்கு அனுதினமும் வழங்கப்படும். மேலும் உயிர்த்தெழுதல் தேநீரையும், நீங்கள் தினமும் பெற்றுக்கொள்வீர்கள், ஏனென்றால் நீங்கள் இங்குச் செய்யும் வேலை முழு மனதுடன் நுட்பமாகவும், துல்லியமாகவும் இருக்க வேண்டும். மனித உடலில் ஏதேன் பழத்தினால் உண்டாகும் விளைவுகள் அளவிடற்கரியது. எவ்வளவு விரைவாக உங்களது உணவுத் திட்டத்தில் இந்தப் பழத்தைச் சேர்த்துக் கொள்கின்றீர்களோ, அவ்வளவு விரைவாக மரணம் மற்றும் சீரழிவின் செயல்முறைகள் முடிவடையும். பல மாதங்களில் உங்களின் மனம் ஒரு "மேதை நிலையை" அடைந்துவிடும்.

கரவொலி அந்த அறையை நிரப்பியது.

"நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குச் சொந்தமான பசுமை வீடுகளைக் கட்டுவதற்கு, தேவையானப் பயிற்சியையும், உதவியையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். இந்த மரங்களுக்குத் தேவையானப் பராமரிப்பைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் நான் உங்களுக்குக் கற்பிப்பேன். ரெபெக்காள் தனது பார்வையாளர்களை ஆராய்ந்தாள். மேலும் கூட்டத்தினரிடையே தென்பட்ட புதிய வாழ்க்கைக்கான அடையாளங்கள் மற்றும் அவர்கள் காட்டிய ஆர்வத்தின் அறிகுறிகளால் மகிழ்ச்சியடைந்தாள்.

ரெபெக்காள் தனது இருக்கையில் அமர்ந்தபோது, சந்தோஷமான கைதட்டல்களைப் பெற்றுக் கொண்டாள். ஸ்காட் வாட்ஸ் பார்வையாளர்களிடமிருந்து எழுந்து மேடைக்குச் சென்றார்.

"ஒருவேளை ஏதேன் பழம் எங்களின் அனைத்து விதமானப் பிரச்சினைகளையும் தீர்க்கும்" என்று அவர் வேடிக்கையாகக் கூறினார். "நன்றி, ரெபெக்காள் இந்த அதிசயமான பழத்தினால் உண்டாகும் நன்மைகளினால் நாங்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறோம்" என்று அவர் தனது பேச்சினைச் சற்று நிறுத்தினார்.

"நாங்கள் மேற்கொள்ளும் திட்டம் மிகப்பெரிய ஒன்று, அத்திட்டம் விண்வெளித் துறையில் புரட்சிகரமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தும், ஏனெனில் இது மனிதகுலத்திற்குச் சுத்தமானக் காற்றையும் மற்றும் பாதுகாப்பான விமானப் பயணத்தையும் வழங்கும்" என்று ரெபெக்காள் கூறினாள்.

உண்மையில் எந்த ஒரு தவறையுமே கண்டறிய முடியாதபடி இருந்த இத்திட்டங்களால் ஸ்காட் ஈர்க்கப்பட்டு இருப்பதையும், அது அவரை உத்வேகமடையச் செய்திருப்பதையும் ரெபெக்காளால் பார்க்கமுடிந்தது. இது திட்டத்தினை எதிர்ப்பதிலிருந்து அவரை மாற்றி, அதனை ஆதரிக்கச்செய்தது. ஆனால் ஏதேன் பழத்தினால் உண்டாகும் வல்லமைகளை அவரால் நம்ப முடியவில்லை. அவருடைய நம்பிக்கை, அவர் பெற்றுக்கொள்ளப்போகும் அனுபவத்தால் வேரூன்றிவிடும் என்று ரெபெக்காள் எண்ணினாள்.

"இந்த வேலையில் ஈடுபடுவோர், தங்களின் முழு நேரத்தையும், முயற்சியையும் கொடுக்க வேண்டும். மேலும் இந்தத் திட்டத்திற்கு யாராவது தங்களின் முழு அர்ப்பணிப்பைக் கொடுக்க விரும்பவில்லை என்றால், தயவுசெய்து இங்கிருந்து அவர் வெளியேறலாம்" என்று அவர் மீண்டும் இடைநிறுத்தினார். யாரொருவரும் தங்களின் இருக்கையிலிருந்து எழவில்லை என்பதைக் கண்டு, ஸ்காட் தனது உரையினைத் தொடர்ந்தார்.

## லெவ்வை அறிமுகப்படுத்துதல்

"இப்போது நான் உங்களுடைய புதிய மேற்பார்வையாளரை உங்களுக்கு அறிமுகப்படுத்தப் போகின்றேன். இஸ்ரயேலைப் பூர்வீகமாகக் கொண்ட முற்பிதாக்களால் அனுப்பப்பட்ட திரு. லெவ் ஆரோன் அவர்கள். இவர் "ஈகிள்விங் திட்டத்தின்" தலைமை மேற்பார்வையாளராக இருப்பார்" என்றார்.

மேடையில் ஸ்காட் நின்ற இடத்திற்கு லெவ் வந்தபோது, மற்றொரு முறை கைதட்டல் சத்தம் ஒலித்தது. லெவ் இந்தத் திட்டத்திற்குத் தேவையான அர்ப்பணிப்பையும், இத்திட்டத்தில் உள்ள ஆபத்துகள் மற்றும் திட்டத்தின் ஒவ்வொரு காரியங்களிலும் கவனம்கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் விவரித்தான்.

"எனது ஒப்புதலைப் பெற்ற பின்பே, இத்திட்டத்தின் ஒவ்வொரு வேலைகளையும் செய்யவேண்டும். இந்தத் திட்டத்தின் வேலைகளில் ஓர் உயரிய ஒழுக்கம் இருக்கவேண்டும். நாம் எந்தத் தவறுகளையும் செய்யாதிருப்பதற்கும், ஒழுங்குகளை மீறாதிருப்பதற்கும் கவனமாய் இருப்போமாக. எல்லாவற்றையும் ஒரு முறைக்கு இரண்டு முறை சரிபார்க்கவும். நாம் புதிய மற்றும் நம்ப முடியாதளவில் உள்ள வல்லமையுள்ள அதிகாரங்களுடன் தொடர்புகொள்ளப் போகிறோம். கிறிஸ்துவினுடைய கண்ணுக்குத் தெரியாத வல்லமைகளால் நாம் பாதுகாக்கப்பட்டாலும், அவர்களின் தலையீட்டை தேவையற்றதாக மாற்றாதபடிக்கு, நம்முடைய பெலத்திற்கு உட்பட்டு நாம் செய்யும் அனைத்துக் காரியங்களிலும் முடிந்த அளவிற்கு பொறுப்புடன் செயல்படுவோமாக" என்று லெவ் அவர்களுக்கு அறிவுறுத்தினான்.

லெவ், மேடையின் மேல் சாய்ந்தவாறு, இருபுறமும் உள்ள கம்பிகளின் விளிம்புகளைத் தன் இரு கைகளாலும் பற்றி நின்றுகொண்டிருந்தான். அவன் மிகுந்த உற்சாகத்தோடும், தீவிரத்தோடும் இருந்ததை ரெபெக்காள் பார்த்தாள். எதிர்-பொருள் (anti-matter) உற்பத்திச் செய்யப்படும் தொழிற்சாலையைக் கட்டுவதற்கான பொதுத் திட்டத்தையும், எதிர்-பொருள் (anti-matter)-ன் பயன்பாட்டினைக் குறித்தும் மற்றும் அதன் அடிப்படைக் கொள்கைகளைக் குறித்தும் அவன்

திறமையாக விவரித்தான். இது லெவ்விற்கு திருவிழாவில் விலங்குகளின் மேல் சவாரி செய்வது போல இருந்தது. மேலும் அவனுக்கு எதிர்-பொருள் (anti-matter) பற்றின விஷயத்தில் ஒத்துப்போகாதவர்களுக்கு எதிராகச் சவாரிசெய்வதுபோல இருந்தது. அவனின் முழுப் பலத்தோடும் பற்றிக்கொள்ளாவிடில் விழுந்துவிடுவான் என்று எண்ணினான். இந்தத் திட்டத்தின் மகத்தான தன்மைகள் மற்றும் அதன் சாத்தியக்கூறுகள் பார்வையாளர்களைக் கவர்ந்ததாகத் தோன்றியது. மேலும் இந்தச் சேவையின் ஒரு பகுதியாகத் தானும் பங்களிக்கும்படி, தன்னிடம் கேட்கப்பட்டதற்காக ரெபெக்காள் நன்றியுள்ளவளாக உணர்ந்தாள். சிற்றுண்டிச்சாலையில் கிடைக்கும் ஏதேன் பழத்துடன் மதிய உணவு இடைவேளைக்கான நேரத்தை லெவ் அறிவித்தான், அதைத் தொடர்ந்து வீடியோ விளக்கக் காட்சிகளைக் கொண்ட மற்றொரு சந்திப்பும் இருந்தது.

நட்பான தொழிலாளர்களின் குழு மதிய உணவு சாப்பிட்ட பின்பு, பல புதியவர்களுடன் அறிமுகமான பிறகு, ரெபெக்காள் பசுமை வீடுகளின் மாதிரியைக் காட்டவும், அது ஈகிள்விங்கில் வசிக்கும் ஜனங்களுக்கு வழங்குவதற்கான ஏற்றுமதியினைச் செய்வதற்கும் ஏற்பாடு செய்தாள்.

அவள் புறப்படும்போது, ஸ்காட் அவளைக் கூப்பிட்டார். ஒருபுறம் நகைச்சுவையாகவும், மறுபுறம் இகழ்ந்தும், "யாரேனும் ஒருவராவது ஏதேன் பழத்தினால் சோர்ந்துபோக முடியுமா? என்று நான் ஆச்சரியப்படுகிறேன்" என்று கூறினார்.

ரெபெக்காள் அவரைத் திரும்பிப்பார்த்து, "அதனை நீங்களே அனுபவித்துப் பார்ப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன்" என்று புன்னகையுடன் பதிலளித்தவாறே நடந்தாள்.

## ஏதேன் பழத்தினால் உண்டாகும் மூளையின் திறன்

லெவ் உடனடியாக ஈகிள்விங்கில் உள்ள ஆலையின் மேற்பார்வையாளர்களுடன் இணைந்து அதற்கான திட்டங்களிலும், விவாதங்களிலும் நேரத்தைச் செலவிட்டான். அதே நேரத்தில் ரெபெக்காள் புதிய ஏற்பாட்டிற்கு ஒத்துப்போகாதவர்கள் மீது தனது கவனத்தைச் செலுத்தினாள். கேள்விக்கு இடமில்லாத வகையில் கிறிஸ்துவே இப்பூமியின் அதிகாரியாக இருக்கிறார் என்பதை முழுமையாக ஏற்றுக்கொள்ளாததால், பலர் இன்னும் தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியங்களுக்கு ஏற்ப வாழவில்லை. ஒவ்வொருநாள் இடைவேளையின் போதும், உணவு பரிமாறும் மேசையின் அருகே ரெபெக்காள் நின்றுகொண்டு, ஒவ்வொரு நபரின் பெயரினைக் கூறி அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லி, அவர்களுக்கான உயிர்த்தெழுதல் தேநீரை ஊற்றிக்கொடுப்பாள். மதிய உணவு நேரத்தில், அவள் சிற்றுண்டிச் சாலையில் தேநீர் மற்றும் பழங்கள் பரிமாற உதவிக்கொண்டிருந்தாள்.

"ஜோஷ்! காலைப்பொழுது எப்படிச் சென்றது? காபி தேவை என்று இன்னும் நீங்கள் உணர்கிறீர்களா?" என்று ரெபெக்காள் கேட்டாள்.

ரெபெக்காளிடம் வெளிப்பட்ட கனிவுடன் கூடிய நட்பு மற்றும் அவரது பெயரை நினைவில் வைத்திருக்கும் திறனைக் கண்டு ஜோஷ் பிரம்மிப்படைந்தார். உணவினைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருப்பவர்களுக்குச் சற்று தள்ளி நின்றவாறு, வரிசையில் வரும் ஒவ்வொருவரையும் அவர்களின் பெயருடன் அழைத்து, அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான சில முக்கியக் குறிப்புகளைக் கொடுத்தவாறு, ரெபெக்காள் அவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதை ஜோஷ் கேட்டுக்கொண்டிருந்தார்.

"பெட்டி, உங்கள் தந்தை எப்படி இருக்கிறார்?"

"ஜான், உங்கள் மகளின் உயிர்த்தெழுதலின் தேதியைக் கவனித்தீர்களா? அது விரைவில் வர இருக்கின்றது" என்று ரெபெக்காள் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தாள்.

"தாங்கள் விரும்பியதைச் செய்யும் இளைய தலைமுறையினர்" என்ற அடைமொழியின் கீழ் தனது சக ஊழியர்கள் அழைக்க, மிகவும் இலகுவாக நடந்து ஜோஷ், தான் வழக்கமாக அமரும் மேசையில் அமர்ந்தார். அவர்கள் முழுமையான மருத்துவத்தைப் பரிந்துரைப்பது, விலங்குகளுக்கான உரிமைகள் பற்றின காரியங்களுடன், அக்குழுவில் உள்ள அனைவருமே வெவ்வேறு விஷயங்களில் உயரிய பன்முகத்தன்மை கொண்டவர்களாக இருந்தனர்.

“அவள் ஒரு ரோபோவாக இல்லாவிட்டாலும்கூட, அவளுக்கு அனைத்துக் காரியங்களையும் எளிதாக நினைவில் வைக்கக்கூடிய நினைவாற்றல் உள்ளது. அவள் நினைவில் வைத்திருக்கும் பெயர்கள் மற்றும் ஜனங்களின் வாழ்க்கையைப் பற்றிய விவரங்களை நீங்கள் நம்ப மாட்டீர்கள். இது நம்பமுடியாத ஒன்று” என்று அவர் கிசுகிசுத்தார்.

“இது ஒருவித விசித்திரமானக் காரியம் என்று நான் நினைக்கிறேன். இங்கே ஏதோ ஒரு விசித்திரமானக் காரியம் நடந்துகொண்டிருக்கிறது... அது சூழ்ச்சியாகவோ அல்லது வேறு என்னவாகவோ வேண்டுமானாலும் இருக்கலாம்” என்று லெனார்ட் கூறினார்.

“அப்படி இல்லை லெனார்ட், ரெபெக்காள் மிகவும் நேர்மையாகத்தான் அப்படிச் செய்துகொண்டிருக்கிறாள்” என்று ஜோஷ், ரெபெக்காளை ஆதரித்தார்.

“நாம் ஏன் ரெபெக்காளைச் சோதித்துப் பார்க்கக்கூடாது?” என்று சிவப்பு நிற முடி மற்றும் பெரிய பச்சை நிறக் கண்களைக் கொண்ட ஓர் இளம் பெண் கேட்டாள்.

“சரி, க்வென். ரெபெக்காளைச் சோதித்துப் பார்க்கலாம்” என்று ஜோஷ் கூறினார். க்வென் மேசையிலிருந்து எழுந்து, ரெபெக்காளிடம் சென்று, அவளை அவர்கள் அமர்ந்திருந்த மேசையில் அமர வருமாறு வரவேற்றார்.

ரெபெக்காளும், க்வெனும் அவர்களது மேசையை நோக்கி நடந்து வருகையில், லெனார்ட் ஒரு டிரம்ஸ்சை இசைப்பது போல சைகை செய்தவாறு, விழாவினை நடத்துபவரைப் போன்று, போலியான குரலில் “நீங்கள் எப்போதும் சந்திக்க விரும்பும் மிகவும் திறமையான பெண்ணான ரெபெக்காள் ஆரோனை அறிமுகப்படுத்துகிறோம்” என்று அறிவித்தார்.

ரெபெக்காள், க்வெனின் அருகே அமர்ந்தவாறு, ஜோஷைப் பார்த்து புன்னகைத்தாள்.

“ஏதேன் பழத்தினால் உண்டாகும் நீண்டகால விளைவுகளைப் பற்றி நீங்கள் சந்தேகம் கொண்டிருப்பதாக நான் எண்ணுகிறேன், லெனார்ட். நீங்கள் ஏன் சிந்தியாவிடம் கேட்கக்கூடாது? அவளுடைய சகோதரனுக்குக் கடுமையான ஆஸ்துமா இருந்தது; மூன்று மாதங்களுக்கு முன், அவருக்கு நிமோனியா காய்ச்சலும் ஏற்பட்டது. அது அச்சுறுத்தும் படியாக இருந்தது. ஆனால் ஏதேன் பழம் மற்றும் தேநீர் கொடுக்கப்பட்ட பிறகு, அவர் அந்த அறிகுறியிலிருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டார் என்று ரெபெக்காள், லெனார்டிடம் கூறினாள்.

லெனார்ட் வெளிப்படையாகவே தனது அதிர்ச்சியைக் காண்பித்தார். அவளுக்கு அவனுடைய பெயர் தெரிந்திருந்தது மற்றும் அவளுக்கு அவர்களைக் குறித்த நிறைய விஷயங்களும் தெரிந்திருந்தன.

“அப்படியானால் அவன் பெயர் என்ன?” என்று தொலைதூர மேசையில் அமர்ந்திருந்த ஒருவரைத் தோராயமாகக் காட்டி லெனார்ட் சவால் விடுத்தார்.

“அவரின் பெயர் ஜெரால்ட். மேலும் அவருக்குக் கிரேசி என்ற சகோதரியும் உள்ளார்” என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

“மேலும் அவளைப் பற்றி வேறு என்னென்ன தெரியும்?” என்று லெனார்ட் கேட்டார்.

“அவர் பெயர் கோனி. அவர் புவியியலில் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்” என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

“676-இன் வர்க்கமூலம் என்ன?” பின் பாக்கெட்டில் இருந்து கால்குலேட்டரை வெளியே எடுத்தபடி ஜோஷ் கேட்டான்.

“26.”

"7,777- இன் வர்க்கமூலம் என்ன?"

ரெபெக்காள் இடையே நிறுத்தினாள்.

"ம்ம்ம்' உங்களால் பதிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை!" என்று லெனார்ட் தனக்கு எதிரே இருந்த ரெபெக்காளைச் சுட்டிக் காட்டினார். அவரது குரல் திருப்தியுடன் இருந்தது.

"88.1873" என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

ஜோஷ் தனது கைகளால் காதினைத் தேய்த்தவாறு அதிருப்தியை வெளிப்படுத்தினார். "உங்களது இந்த அறிவுக் கூர்மைக்கு ஏதேன் பழம்தான் காரணம் என்று கூறுகிறீர்களா?" என்று ரெபெக்காளிடம் வினவினார்.

"நிச்சயமாக. பழைய உலகில் நான் கலையில் நிபுணத்துவம் பெற்றிருந்தேன். நிச்சயமாக அது கணிதத்தோடு தொடர்புடையது அல்ல. உண்மையில், நான் ட்ரிக்கினாமென்டிரியில் "சி" கிரேடு எடுப்பதற்குக் கூடப் போராடினேன்.

"அப்படியானால், நீங்கள் ஒருபோதும் நோய்வாய்ப்பட்டதே இல்லையா?" என்று கேட்டார்.

"இல்லை, நான் நோய்வாய்ப்பட்டதே இல்லை. உண்மையில், இஸ்ரயேலின் மீதான படையெடுப்பிற்குப் பிறகு, தேசத்தினைக் கிறிஸ்து அரசாட்சி செய்வதால், இந்தப் பரிசுத்த பூமியில் யாரும் கொல்லப்படுவதோ அல்லது காயப்படுத்தப்படுவதோ இல்லை" என்று ரெபெக்காள் விளக்கினாள்.

க்வென் அக்கருத்திற்கு இசைந்து தனது தலையை அசைத்தார். "உண்மையில், கிறிஸ்துவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த அனைத்து நாடுகளிலும் இவ்வாறே நடந்து கொண்டிருக்கிறது. நான் எப்பொழுதும் இரங்கல் பக்கங்களைப் படிப்பேன். நாங்கள் இராஜாவின் அரசாட்சியின் கீழ் வந்ததிலிருந்து அப்படியான பெயர்கள் எதுவும் அங்கு இல்லை. இது வளிமண்டலத்தில் உண்டான ஒருவிதமான மாற்றம், தற்காலிகமான சில அதிசய நிகழ்வுகள் என்று சிலர் ஊகிக்கிறார்கள்" என்று க்வென் மேலும் கூறினார்.

"ஏதேன் பழம்தான் இதற்குக் காரணம். ஏதேன் பழம் ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியாக விநியோகிக்கப்படவில்லை என்றாலும், கிறிஸ்துவுக்கும், அபிஷேகம் செய்யப்பட்டவர்களுக்கும் இப்பழம் யாருக்கு மிகவும் தேவைப்படுகிறது என்பது தெரியும். தேநீர் மற்றும் பழங்கள் ஒவ்வொரு நபரையும் அடைவதற்கு அவர்கள் வழியைத் தருகிறார்கள். உண்மையில் அவர்கள் மரணத்தின் அனுபவங்களில் இருந்து காப்பாற்றப்படுவார்கள்" என்று ரெபெக்காள் கூறினாள்.

"இதனை நம்புவதற்குக் கடினமாக உள்ளது" என்று க்வென் கூறினார்.

என் மகளுக்காக தேவன் ஏன் நிற்கவில்லை?

"அப்படியானால், தேவன் மிகவும் வல்லமை உள்ளவராக இருந்தால், அவருக்கு இந்தத் திறமைகள் அனைத்தும் இருந்தால், மனித வரலாற்றில் உள்ள அனைத்து மரணங்களையும், துன்பங்களையும் அவர் ஏன் முதலில் அனுமதித்தார்?" என்று ஜோஷ் எதிர்த்துக் கேள்வி எழுப்பினார்.

"மாசுற்ற மருத்துவ ஊசி, சரியாக அப்புறப்படுத்தப்படாததால், அது தற்செயலாக படுக்கையில் விழுந்து எனது மகளைக் குத்தியது. அதனால் அவளுக்கு எய்ட்ஸ் வைரஸ் தொற்று ஏற்பட்டது. இது நடந்து வருடங்கள் ஆன பின்பு, அவள் மெலிந்து போகத் தொடங்கினாள். கிண்டல் மற்றும் சவாலுடன் கூடிய ஒரு பழக்கமான குரல் அவர்களுடனான உரையாடலில் இணைந்தது. அவர்கள் அமர்ந்திருந்த மேசைக்கு ஒரு மேசை தள்ளி நின்றவாறு, ரெபெக்காளின் புத்திசாலித்தனத்தினைச் சோதிப்பதற்காக எழுப்பப்படும் கேள்விகளை ஸ்காட் கேட்டுக் கொண்டிருந்தார்.

"சர்வ வல்லமையுள்ள தேவன் அவ்வளவு திறமையுள்ளவராக எனக்குத் தெரியவில்லை. இந்தக் காரியத்தில் அவருடைய இரக்கமும், வல்லமையும் எங்கே போனது?" என்று ஸ்காட் கேள்வி எழுப்பினார்.

"என்னை மன்னிக்கவும், ஸ்காட். நீங்கள் பெற்றிருந்த அந்த வலி மிகுந்த அனுபவத்திற்காக நான் வருந்துகின்றேன். உங்கள் மகள் இன்னும் நான்கு மாதங்களில் உயிர்த்தெழுப்பப்படுவாள். அவள் நல்லதொரு ஆரோக்கியத்துடன் எழுப்பப்படுவாள். நமது மனுக்குல வரலாற்றில், நாம் பெற்றுக்கொண்ட அனைத்துத் துன்பங்களுக்குமான இறுதி விளைவு என்னவென்றால், பரிபூரணமான பூமியில் ஒரு பரிபூரண வாழ்க்கையுடன், தேவனுடனும், கிறிஸ்துவுடனும் மற்றும் முழு மனுக்குல குடும்பத்துடனும் ஓர் அற்புதமான உறவினைக் கொண்டிருப்பதே ஆகும்" என்றாள்.

"என் மகளைப் பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்? நாம் முன்பு பேசும்போதுகூட, நீங்கள் இதைப் பற்றி என்னிடம் குறிப்பிடவில்லையே" என்று ஸ்காட் கேட்டார்.

ஜோஷ் உரையாடலை, முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கும்படிக்குத் தன் பேச்சினைத் திசைதிருப்பினார்.

"முதலிலேயே மனுக்குலத்தின் துன்பங்களை அகற்றிவிட்டு, நேரடியாகப் பரிபூரண நிலைக்கு ஏன் கொண்டு வந்திருக்கக் கூடாது?" என்று அவர் கேள்வி எழுப்பினார். ஜோஷ் தனது நாற்காலியில் மீண்டும் சரிந்தமர்ந்தார். கைகளை மடித்து வைத்தவாறு, கால்களை நேராக நீட்டியபடி ஒரு காலின் மீது மற்றொரு கால் இருக்கும்படி குறுக்காக வைத்திருந்தார்.

தன்னைச் சுற்றிலும் இருந்த பார்வையாளர்களின் கூட்டம் அதிகரித்ததை ரெபெக்காள் திடீரென்று உணர்ந்தாள். இவர்களிடையே நடக்கும் உரையாடலைச் சிரமப்பட்டாவது கேட்க வேண்டும் என்பதற்காக மதிய உணவு அறையில் இருந்தவர்களில் பெரும்பாலானோர் மிகவும் அமைதியாக இருந்தனர். அந்த நேரத்தில் மதிய உணவு இடைவேளை முடிந்தது என்பதைக் குறிக்கும்படியாக மணி ஒலித்தது.

ஜோஷ் எழுந்து கைகுலுக்கும் படி தனது கரங்களை நீட்டினான்.

"நன்றி, ரெபெக்காள். நீங்கள் என்னைச் சிந்திக்க வைக்கிறீர்கள். இது எனக்குப் பிடித்திருக்கிறது. நான் புரிந்துகொள்வதற்கு நிறைய இருக்கின்றது, எனவே நாம் மீண்டும் பேசலாம்" என்றார்.

"இது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, ஜோஷ். உங்களுக்கான பசுமை வீட்டினை நிறுவுவதற்கு, நான் வரும்போது நாம் மேலும் பேசலாம்" என்று ரெபெக்காள் பதில் அளித்தாள்.

இதுவரையிலும் கேட்டுக் கொண்டிருந்த அவர்களது உரையாடல் மற்றும் அவர்களின் பசுமை வீடுகளைக் குறித்த திட்டங்கள், அதனைப் பற்றிய சுருக்கமானக் கருத்துகள், அதனோடு தொடர்புடைய கேள்விகள் மற்றும் இனிமேல் சந்திக்கப்போகும் சவால்களைக் குறித்து அறிந்துகொள்வதற்காக ரெபெக்காளைப் பலர் அணுகினர். ரெபெக்காள் தன் காலெண்டரை எடுத்து, அவர்களைச் சந்திக்கப்போகும் நேரங்களைப் பற்றிக் குறித்துக்கொண்டாள்.

ஸ்காட் அந்த அறையின் கடைசியில், வெளியே செல்வதற்கான வாயிலுக்கு மிக அருகில் போய் நின்றுகொண்டிருந்தார். அங்கே இருந்து அவர் ரெபெக்காளை உற்றுப்பார்த்தார், அவரது முகம் வேதனையான தோற்றத்தை வெளிப்படுத்தியது, ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதைக் காட்டும் விதத்தில் தனது தலையை அசைத்தார். பின்னர் அவர் அறையை விட்டு வெளியேறினார்.

## ஓர் ஆவிக்குரிய வனாந்தரம்

ரெபெக்காள் மற்றும் லெவ் கலந்துகொண்ட முதல் வழிபாட்டுச் சேவைக்குக் குறைந்த அளவிலேயே ஜனங்கள் வந்திருந்தாலும், ஆராதனை உத்வேகம் அளிக்கக்கூடிய வகையில் இருந்தது. மற்றவர்களைக் குறித்த ரெபெக்காளினுடைய விசாரணைகள், பலர் தங்களுடைய சொந்த வீடுகளில் தனிப்பட்ட விதத்தில் வேதத்தை வாசித்து வழிபடுகிறார்கள் என்ற உண்மையை

வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தது. முந்தைய பழைய உலகத்தில் அவர்கள் பெற்றிருந்த தேவாலய முரண்பாடுகள் குறித்த அனுபவத்தின் காரணமாக, இப்போது ஒழுங்கமைக்கப்பட்ட எந்த ஒரு தேவாலய வழிபாட்டிலும் பங்கெடுப்பதற்கு விருப்பமின்றி இருந்தனர். ஆனால் தைரியமாகக் கலந்து கொண்டவர்கள், வழிபாட்டிற்குப் பின்பான நேரத்தில் ஒவ்வொருவருக்கும் பகிர்ந்துகொள்வதற்கென தங்களது அனுபவங்கள், வசனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கேள்விகள் இருந்தன. எண்ணிக்கையில் குறைவானவர்களாக இருந்தாலும், தங்களது இருதயத்திலிருந்து தேவனைத் துதித்துப் பாடினர். ரெபெக்காளும், லெவ்வும் தங்களுடைய அனுபவங்களையும், தங்களது சேவையினால் உண்டான சிலாக்கியங்களைப் பற்றியும் விரிவாக அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டியிருந்தது. இஸ்ரயேலிலுள்ள வாழ்க்கை முறையைப் பற்றியும், தாங்கள் நேரடியாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர். குறிப்பாக உயிர்த்தெழுதலைக் குறித்து உண்டான அதிசயம் மற்றும் ஏதேன் பழத்தின் அற்புதமான குணப்படுத்தும் பண்புகளால் ஜனங்கள் ஈர்க்கப்பட்டிருந்தனர். இதனைக் குறித்த காரியங்கள் ஜனங்களுக்குள்ளே பரவத் தொடங்கியது. ஒவ்வொரு நாளும் வழிபாட்டிற்கு வரும் ஜனங்களின் எண்ணிக்கை சிறிது சிறிதாக அதிகரித்தது.

ஜனங்களுடன் பழகுவதில் ரெபெக்காளிற்கு இருந்த அனுபவம், ஈகிள்விங் ஜனங்களுக்கு அவள் திரையிடப்பட்டுக் காட்டியச் சுருக்கமான விளக்கக் காட்சிகளில் பிரதிபலித்தது. விழிப்புடனும், ஆர்வத்துடனும் அறை முழுவதும் நிறைந்திருந்த ஜனங்களிடம் அவள் பேசினாள். பசுமை வீடுகளைக் குறித்த திட்டங்கள் மற்றும் அது தொடர்பாக எழக்கூடிய கேள்விகள் அல்லது ஈகிள்விங்கினுடைய தனிப்பட்ட பிரச்சனைகள் தொடர்பாக ஒவ்வொரு தனிநபருடனும் சந்திப்பதற்கான தனது விருப்பத்தை மீண்டும் ரெபெக்காள் அறிவித்தாள்.

“இங்குள்ள பலருடன் நேரத்தைச் செலவிடுவது எனக்கு உற்சாகமாக உள்ளது, ஆனாலும் தனிப்பட்ட முறையில் இங்குள்ள ஒவ்வொருவருடனும் நேரத்தைச் செலவிடும் வரை எனது மகிழ்ச்சி முழுமை அடையாது” என்றாள்.

அவளின் உண்மையான ஆர்வத்தால் அங்கிருந்தவர்கள் திருப்தியடைந்து, தங்களது கரவொலியை எழுப்பினர். அவர்கள் மனதார ரெபெக்காளைப் பாராட்டினார்கள்.

“இப்போது உங்களிடம் ஒரு கேள்வி. உங்களில் எத்தனை பேர் அனுதினமும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஏதேன் பழம் மற்றும் தேநீரால் மகிழ்ச்சியடைகிறீர்கள்?” என்று ரெபெக்காள் தெளிவாகவும், ஆர்வத்துடனும் கேள்வி எழுப்பினாள்.

”ஏதேன் பழத்தின் பாடிபில்டர்கள்!” என்று அவர்களை ஜோஷ் அழைத்தார்.

ரெபெக்காள் அவரைப்பார்த்து புன்னகைத்தாள். பிறகு தன்னைச் சுற்றியிருந்த பார்வையாளர்களிடம் கருத்துக்களைக் கேட்டாள்.

“ஒவ்வொரு நாளின் காலையிலும், உங்களில் எத்தனை பேர் வழிபாட்டு ஆராதனைகளில் கலந்துகொள்கிறீர்கள்?” என்று ரெபெக்காள் மீண்டும் கேட்டாள்.

பின்வரிசையில் இருந்து இரண்டு கைகள் மட்டுமே உயர்ந்தன. பட்டுப்போன மரக்கன்றுகளினுடைய தோற்றம் மீண்டும் ரெபெக்காளின் நினைவுக்கு வந்தது. அவர்களின் சரீரப்பிரகாரமான ஆற்றல் பற்றாக்குறைக்கு ஏதேன் பழத்தினால் எளிதில் சிகிச்சை அளித்துவிடலாம், ஆனால் ஆவிக்குரிய அக்கறையின்மை அவர்களுக்கு ஒரு சவாலாகவே இருக்கும் என்று எண்ணினாள்.

“நீங்கள் தேவனைத் தொழுதுகொண்டு, ஒவ்வொரு நாளும் அவருடைய வழிகளைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், நீங்கள் ஓர் ஆவிக்குரிய பாலைவனத்தில் வாழ்கிறீர்கள்” என்று ரெபெக்காள் சொன்னாள். அந்த அரைநொடியில் அவளது கண்கள் ஸ்காட்டின் கண்களைத் தொட்டன. அவளை நோக்கிய அவரது நொடிப்பொழுதான பார்வையும் சவால்விடும் வண்ணமாக இருந்தது. பின்னர் அவர் தனது பார்வையை வேறுபுறமாக விலக்கிக்கொண்டார்.

‘‘மேலான விஞ்ஞானம் என்பது தேவனையும், அவருடைய குமாரனையும் பற்றி அறிகிற அறிவே ஆகும். தேவனை அறிவதே நித்திய ஜீவனாம். ஏதேன் பழம் மற்றும் அதன் குணப்படுத்தும் ஆற்றல்மிக்கப் பண்புகளானது, தேவனுடைய மற்றும் கிறிஸ்துவினுடைய அன்பு மற்றும் அவர்களுடைய ஏற்பாட்டினால் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் உங்களுக்குச் சரீரப் பிரகாரமான ஆரோக்கியம் மட்டுமே இருந்தாலும் - அதுவும் முழுமையான சரீர ஆரோக்கியம் இருந்தாலும்கூட, தேவனுடனும், கிறிஸ்துவுடனுமான தனிப்பட்ட உறவை நீங்கள் இழக்கிறீர்கள் என்றால், நீங்கள் முழுமையான ஜீவனை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை’’ என்று ரெபெக்காள் கூறினாள்.

மீண்டும் ரெபெக்காளின் கண்கள் ஸ்காட்டின் கண்களைச் சந்தித்தன. இம்முறை அவர் தனது பார்வையை ரெபெக்காளிடமிருந்து விலக்கிக்கொள்ளவில்லை.

‘‘நீங்கள் ஒவ்வொருவருமே, உங்கள் இருப்பிடங்களுக்கு அருகில் நடைபெறும் வழிபாட்டு ஆராதனையைக் கண்டறிந்து, ஒருமுறை அங்குச் செல்வதற்கு முயற்சிக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன், ஷாலோம்’’ என்று ரெபெக்காள் தனது உரையை முடித்தாள்.

அங்குச் சிறிதுநேரம் அமைதி நிலவியது, பின்னர் ஒருவர் கைதட்டினார். அவரைத் தொடர்ந்து மற்றொருவர் தனது கரவொலியை எழுப்ப, அங்கிருந்த மற்ற அனைவருடைய கைதட்டல் சத்தங்களால் அறை நிரம்பியிருந்தது.

காலை நேர இடைவேளையின்போது, ரெபெக்காள் வழக்கமாகத் தான் நிற்கும் இடத்தில் நின்றுகொண்டு, உயிர்த்தெழுதல் தேநீரை அங்கிருந்தவர்களுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள். அங்கு உணர்ச்சிவசப்பட்ட நிலையிலிருந்த ஓர் இளம் பெண்ணை ரெபெக்காள் கவனித்தாள். ஈகிள்விங் வணிக வளாகத்தில் உள்ள புதிய அலுவலகத்தின் வரவேற்பாளரான ரூத் என்செல் தான் அவர் என்று ரெபெக்காள் உடனடியாக அடையாளம் கண்டுகொண்டாள். அவர் ஜோஷுடன் பேசிக்கொண்டிருந்தார். ஜோஷ், ரெபெக்காளை நோக்கித் தன் கைகளை நீட்டினார். அந்தப் பெண் விரைவாகத் தனது தலையை அசைத்தார். ரெபெக்காள் ஆழ்ந்த மூச்சை இழுத்துவிட்டு, வேலையின் இடையே வெளியேறுவதற்காக மன்னிப்பைக் கேட்டவாறு, தன்னிடமிருந்த பெரிய தேநீர்க் கோப்பையை லெனார்டிடம் கொடுத்துவிட்டு, அவர்களை நோக்கி நடந்தாள்.

‘‘காலை வணக்கம், ஜோஷ்’’ என்று ரெபெக்காள் அவரிடம் கூறினாள்.

‘‘ஷாலோம், ரெபெக்காள்’’ என்று ஜோஷ் வேகமாகப் பதிலளித்துவிட்டு, அதே வேகத்துடனே அங்கிருந்து வெளியேறினார்.

## புற்றுநோய் கசப்பான ஓர் இருதயத்தை விட்டுச் செல்லுதல்

ரூத் என்செல், இதுவரையிலும் ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வம் காட்டவில்லை. அவர் எப்பொழுதும் ஒழுங்காகவும், பெருந்தன்மை உள்ளவராகவும் இருந்தார். ஆனால் தேவன் மற்றும் கிறிஸ்துவின் மீதான பக்தியை, ஏதோ ஒரு போலியான கெட்ட பழக்கமாக அவர் எண்ணிக்கொண்டார். ரெபெக்காள், ரூத் என்செல்லிடம் பேசிய சில சந்தர்ப்பங்களில், அவர் ஆவிக்குரியவைகளில் அனலின்றி (பனிக்கட்டி போல குளிர்ச்சியாக) இருப்பதைத் தெரிந்துகொண்டாள்.

‘‘இறந்து பல வருடங்கள் கழித்து மீண்டும் ஜீவன் பெற்று வருவது எப்படி இருக்கும் தெரியுமா?’’ என்று ரெபெக்காள், ரூத்திடம் கேள்வி எழுப்பினாள்.

அதற்கு ரூத் ‘‘எனக்கு எப்படித் தெரியும்? எனக்குத் தெரிந்தது என்னவென்றால் நானும், என் தம்பியும் குழந்தையாக இருக்கும்போதே எங்களது தந்தையை இழந்தோம். அந்த நாள்தான் என் வாழ்வின் மிகச் சோகமான நாள், ஏனென்றால் நான் என் தந்தையை மிகவும் நேசித்தேன். அவரை இழந்த விஷயத்தில் அன்றிலிருந்து நான் மனக்கவலையுடன் இருக்கிறேன். எங்களது சிறிய குடும்பத்தினை அவர் மிகவும் மகிழ்ச்சியாக வைத்துக்கொண்டார். எங்களின் சிறுசிறு பிரச்சனைகளுக்கும், தேவைகளுக்கும்கூட அவர் எப்போதும் எங்களுக்குத் துணையாக இருந்தார். நான் அவரது அன்பில் வாழ்ந்துகொண்டிருந்தேன். அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார், அது

எல்லாவற்றையும் மாற்றிவிட்டது. அதிகமான வலி அடிக்கடி ஏற்பட்டதால், அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். கடைசியில் அவர் ஒன்றுமில்லாமல், மரித்துப்போவதைக் கண்டு என் இதயம் உருக்குலைந்து விட்டது. என் அப்பாவை எங்களிடமிருந்து அழைத்துச் சென்றதற்காக நான் தேவனை வெறுத்தேன். அவர் பரலோகத்தில் இருப்பதாக என்னிடம் சொன்னார்கள். என் அப்பா, இங்கே எங்களுக்கு மிகவும் தேவைப்படும்போது தேவன் ஏன் அவரை பரலோகத்திற்கு அழைத்துச் சென்றார்? தேவனுக்கு எல்லாம் இருக்கும்போது - அவர் ஏன் என் அப்பாவை அங்கு அழைத்துச் செல்லவேண்டும்? என்று ரூத் கேட்டார்.

"குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக என் அம்மா வேலைக்குச் செல்ல வேண்டியிருந்தது" என்று ரூத் தொடர்ந்தார். "எனது தாய்க்கு அந்த நாளில் என்ன வேலை கிடைத்ததோ அதை அவர் செய்ய வேண்டியிருந்தது. அவ்வேலை அதிக வருமானத்தைக் கொடுக்கவில்லை. நாங்கள் எங்களது வீட்டை இழந்தோம். என் அம்மாவின் மருத்துவத்திற்காகச் செலவழிக்க வேண்டியிருந்தது. நாங்கள் மிகவும் ஏழ்மையாக இருந்ததால், நாங்கள் மிகவும் மோசமானச் சுற்றுப்புறத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. என் அம்மா எங்களுக்கு ஒரு கதாநாயகியைப் போல இருந்தார். எங்களுக்கான உணவினைக் கொண்டு வருவதற்காக, அவர் நீண்ட நேரம் வேலை செய்தார். படிப்படியாக எனது தாய்க்கு ஒரு நல்ல வேலை கிடைத்தது, ஆனால் வறுமை என்றால் என்ன என்பதை நாங்கள் அதற்கு முன்பாகவே கற்றுக்கொண்டோம். பள்ளியின் சிற்றுண்டிச்சாலையில் மதிய உணவு வாங்குவதற்குக்கூட, சில நாட்கள் எங்களிடம் பணம் இருந்ததில்லை. நாங்கள் எங்களுக்குப் பசி இல்லை என்பதுபோல் பாசாங்கு செய்வோம். என் சகோதரனும், நானும் உதவி கேட்க மிகவும் வெட்கப்பட்டுக் கொண்டு இருந்தோம்" என்றார்.

"இவை எல்லாவற்றையும் தேவன் தான் உங்களுக்கு ஏற்படச் செய்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா, ரூத்?" ரெபெக்காள் கேட்டாள்.

ரெபெக்காளின் கேள்வியினால் அவள் திடுக்கிட்டாள்.

"இப்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, உங்களது தந்தையை மீண்டும் உயிர்ப்பிக்க நீங்கள் தயாராகி வருகிறீர்களா? உங்களது குழந்தைப் பருவத்திலேயே நீங்கள் உங்கள் தந்தையை இழந்திருந்ததை, அது கொஞ்சம், கொஞ்சமாக ஈடுசெய்யத் தொடங்கும் அல்லவா?" என்று ரெபெக்காள் தொடர்ந்தாள்.

## தேவனின் ஆசீர்வாதம் துவங்குகிறது

"ஆமாம், இவ்விரண்டு விஷயங்களிலும் நான் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வேன் என்று எனக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால் உயிர்த்தெழுதல் கண்டிப்பாக நடக்கும் என்பதை நம்புவதற்கு எனக்குக் கடினமாக இருக்கிறது, ரெபெக்காள். ஆனாலும் நானும், எனது தம்பியும், என் உறவினர்கள் சிலரும் என் தந்தைக்கான வீட்டைக் கட்ட உதவுகிறோம். நாங்கள் ஏற்கெனவே அவருக்குத் தேவையான மரங்களையும் நட்டுவிட்டோம். ஒருவேளை இதுவரையிலும் நான் இழந்தவைகளை, தேவன் எனக்கு ஈடுகட்டலாம். ஆனால் அப்படிப்பட்ட கண்ணோட்டத்தில் நான் நினைத்துப் பார்த்ததே இல்லை. எனது தந்தையை திரும்பப்பெறுவது மிகவும் சிறப்புவாய்ந்ததொரு விஷயமாக இருக்கும். இருப்பினும், நான் இனி முன்புபோல அவருக்குச் சிறுமியாக இருக்க மாட்டேன். அது பெரிய விஷயமாக இருக்காது என்று நினைக்கிறேன்" என்று ரூத் கூறினார்.

"நீங்கள் எப்போதும் உங்களது தந்தைக்குச் சிறுமியாகத்தான் இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். உங்களது தந்தை உங்களோடு இல்லாதிருந்த காலங்களே, அவர் திரும்பி வருவதை உங்களுக்கு இனிமையாக்கும். உங்களுக்குத் தெரியும் ரூத், தேவனுடைய வழிகள் செம்மையானவைகள். மனிதனுடைய வழிகள்தான் செம்மையானவைகளாக இல்லை. "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார் இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை: முந்தினவைகள் ஒழிந்துபோயின" என்று தேவன் வாக்குறுதி அளித்திருக்கிறார். தேவன் ஒருபோதும் மனிதனுடைய கண்ணீரை எண்ணாமல் இருந்ததில்லை. "கண்ணீர் யாவையும் துடைப்பதாகவும்" மற்றும் ருசிபார்த்த தீமையின் விளைவுகளினால் உண்டான பாரங்களிலிருந்து திருப்புவதாகவும் தேவன் நமக்கு வாக்களித்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, யாரொருவரும் கைவிடப்பட மாட்டார்கள்" என்று ரெபெக்காள் கூறினாள்.

"நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையை அடைவதற்கு, சில காலம் தீமையின் ஆட்சியை அனுமதிக்க தேவன் முடிவு செய்திருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். அது எவ்வளவு விலையுயர்ந்ததாக இருக்கும் என்பதையும், எவ்வளவு பெரிய துன்பத்தை ஏற்படுத்தும் என்பதையும் தேவன் அறிந்திருந்தார். அவர் தீமையினைக் கட்டளையிடவில்லை, ஆனால் அவர் அதனை அனுமதித்தார். பாவம் செயல்படத் துவங்கினால், அது எவ்வளவு கொடிதானது என்பதைத் தேவன் மட்டுமே அறிந்திருந்தார். இது பரலோகத்தில் அவர் சார்பில் இருந்த தூதர்களுக்கும் கூடத் தெரியாது. மனித வரலாற்றில், இந்தக் குறுகிய ஆறாயிரம் ஆண்டு பாவத்தின் காலத்தில் இரத்த ஆறுகள் ஓடின. மேலும் சுமார் முப்பது பில்லியன் ஜனங்கள் மரித்துப்போயுள்ளனர். மனுக்குலம் அனுபவித்த அனைத்து துன்பங்களின் மொத்த எண்ணிக்கையை விட, இறுதியான முடிவு பெரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வரவில்லை என்றால், தேவன் இந்தத் தீமையின் அனுபவங்களை ஒருபோதும் அனுமதித்திருக்க மாட்டார். இதனை நீங்கள் நம்புகிறீர்களா, ரூத்?" என்று ரெபெக்காள் கேட்டாள்.

"மரிப்பது என்பது இனி இயற்கையானச் செயல் அல்ல என்பது உங்களுக்குத் தெரியுமா? ஏதேன் பழத்தை உண்பவர்கள் தங்களது இளமைக்குத் திரும்புகிறார்கள், நோய் மற்றும் துக்கம் ஏற்கெனவே கடந்து சென்றுக்கொண்டிருக்கிறது. இதற்கான ஆதாரங்கள் நம்மைச் சுற்றிலும் இருந்தாலும், நாம் அதனைக் காணாததுபோல் இருக்கிறோம்" என்று ரெபெக்காள் தொடர்ந்தாள்.

"கிறிஸ்துவின் ஆட்சியை உங்களுக்கு முன்பே ஏற்றுக்கொண்டு இருக்கும் இஸ்ரயேலில், பலரின் பெற்றோர்கள் மற்றும் தாத்தாகள், பாட்டிகள் மீண்டும் ஜீவனுடன் வாழ்கிறார்கள். நாம் நேசிப்பவர்களை மரித்தோரிலிருந்து எழுப்புவது என்னவென்று எனக்குத் தெரியும். லெவ், என் முன்னாள் கணவர். எருசலேமைக் காப்பாற்றும் போரில் மரித்தார், இப்போது உயிர்த்தெழுப்பப்பட்டுள்ளார். நான் உங்களிடம் கட்டாயம் சொல்ல வேண்டும் ரூத். உங்கள் அப்பா திரும்பி வரும்போது அவருக்கு இருக்கும் மிகப்பெரிய பிரச்சனை, அவர் இறந்ததிலிருந்து இப்போது வரை உள்ள இந்தக் கால இடைவெளிக்கு அவரைப் பொருந்தச் செய்வதுதான். லெவ் திரும்பி வந்தபோது நீண்ட நேர உறக்கத்திலிருந்து எழுந்து வந்ததைப் போல உணர்ந்தார். அதிர்ஷ்டவசமாக, இது ஒரு கனவு அல்ல என்பதை உறுதிப்படுத்த லெவ்வைச் சுற்றி அவனது அன்பான குடும்பம் இருந்தது. லெவ்வின் மனது இந்தக் கால இடைவெளிக்கு ஏற்ப பொருந்துவதற்கு ஒரு வாரம் ஆனது" என்று ரெபெக்காள் கூறினாள்.

"உங்களின் அனுபவங்களையும், தேவனுடைய அற்புதமான வாக்குத்தத்தங்களையும் கேட்டதில் மிகவும் உற்சாகமாக இருக்கிறது, ரெபெக்காள், யூதர்களை எப்போதும் மத வெறியர்கள் என்று நான் நினைத்திருந்தேன். நீங்கள் மற்றும் லெவ் இருவரும், ஜனங்களை அற்புதமான வழியில் கையாண்டு கொண்டிருப்பதை நான் அறிவேன்; நீங்கள் எப்போதும் அன்பாகவும், புரிந்துகொள்ளக் கூடியவராகவும் இருக்கிறீர்கள். நீங்கள் கடுமையான வார்த்தையை உபயோகித்ததையோ அல்லது குரலை உயர்த்திப் பேசியதையோ நான் கேள்விப்பட்டதில்லை. உங்களிடம் உள்ள இந்தக் குணலட்சனத்தால், நான் கவரப்பட்டுள்ளேன். இருப்பினும், இங்கேயிருக்கும் எங்களில் பலர் மத விஷயங்களில் உங்களிடமிருந்து விலகியிருக்கிறோம்" என்றவாறு ரூத் தொடர்ந்தார்.

"என்னுடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கியதற்காக நன்றி, ரெபெக்காள். நீங்கள் கூறியவைகள் அனைத்தும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. அதுமட்டுமில்லாமல், எனக்கு இப்போது உண்மையில் ஒரு சோதனையையும் கொடுத்துள்ளீர்கள். என் கண்களுக்கு முன்னே மாபெரும் நாடகத்தின் அர்த்தம் வெளிப்படுத்தப்படுவதைப் பார்க்காது, நான் கண்களை மூடிக்கொண்டிருக்கிறேன். பாதுகாப்பான விமானப் பயணத்திற்கான புதிய ஆற்றல் மூலத்தை உற்பத்திசெய்வதன் ஒரு பகுதியே இங்கு நாங்கள் செய்யும் பணியும்கூட என்பதை இப்போது நான் காண்கிறேன். நன்றி, ரெபெக்காள். என் வாழ்க்கையில் முதன்முறையாக என் இருதயத்தில் உள்ள கசப்பின் வேர்கள் என்னை விட்டு வெளியேறுகின்றன" என்று ரூத் கூறினார்.

"உங்களுக்குத் தெரியும் ரூத். நீங்களும், நானும் தொடர்ந்து கீழ்ப்படிந்து இருந்தால், நம் அன்புக்குரியவர்களுடன் சில வருடங்கள் மகிழ்ச்சியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், சமாதானமாகவும், ஒற்றுமையாகவும் நித்தியத்திற்கும் இருக்க முடியும். ரூத், உங்கள் தந்தைக்கு வீடு கட்டுவதில், ஏதேனும் சந்தேகம் இருந்தால் என்னை அழையுங்கள். ஏற்கெனவே பல வீடுகளைக் கட்டின அனுபவங்களை நான் பெற்றுள்ளேன். இங்கு மரங்கள் ஏராளமாக இருப்பதால், நீங்கள் சற்றுப் புதிய வடிவமைப்புகளுடன் உங்களுக்கான வீட்டினைக் கட்டலாம். இஸ்ரயேலில் இவ்வளவு

மரங்கள் இல்லாததால் பழைய வடிவமைப்பிலேயே கட்டியுள்ளோம். எங்களின் ஆலோசனைகளின்படிச் செய்வதால் நேரத்தை மிச்சப்படுத்தலாம். உங்களின் அன்பானவர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்வதால், உங்களது துக்கத்திலிருந்தும் விரைவில் விடுபடலாம். ஜனங்களுக்காக வீடு கட்டுவதை நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் இங்கு வந்திருக்காவிட்டால், இதே வேலையைத்தான் இஸ்ரயேலில் செய்துகொண்டு இருந்திருப்போம்" என்று ரெபெக்காள் கூறினாள்.

ரூத்துடனான இந்த உரையாடலின் நிமித்தம் ரெபெக்காள் மகிழ்ச்சியடைந்தாள், ஏனென்றால் ஜனங்கள், கிறிஸ்துவின் வல்லமையை அனுபவிக்கத் தொடங்கும்போதும், தங்களுடைய அன்புக்குரியவர்கள் உயிர்த்தெழுப்பப்படும்போதும், அவர்கள் கிறிஸ்துவை உணர்ந்துகொள்வதற்கான அனுபவமாக இருக்கும் என்ற அவளது எண்ணத்தை நிரூபிப்பதுபோல் இருந்தது. ரூத்துடனான இந்த உரையாடலில் ரெபெக்காளுக்கு ஒரு பெரிய ஆறுதல் கிடைத்தது. லெவ் செல்லும் தேவாலயத்திற்கு அருகிலேயேதான் ரூத் இருக்கின்றாரா என்று ரெபெக்காள், ரூத்திடம் கேட்டாள்.

"ஆமாம், வழிபாட்டினைப் பற்றி நான் நல்ல செய்திகளைக் கேட்டிருக்கிறேன். ஆனால் நான் என் வாழ்நாள் முழுவதும் தேவனை விட்டுப் பிரிந்து வாழ்ந்துகொண்டிருக்கிறேன். நான் அதை மாற்ற வேண்டும் என்று நினைக்கிறேன். தேவனுடைய வல்லமையை நம் கண்களால் காண்பதால், நம்புவதற்கு இனிமேல் விசுவாசம் தேவையில்லை. தேவனையும், கிறிஸ்துவையும் தவிர வேறு யாரால் மரித்தவர்களை மீட்டெடுக்க முடியும்?" என்று ரூத் கேட்டாள்.

"நிச்சயமாக எந்த ஒரு மனித சக்திக்கும் இத்தகைய காரியத்தைச் செய்வதற்குத் திறனில்லை. ஏதேன் மரங்களின் வல்லமையை நானும் பார்த்திருக்கிறேன். ஏதேன் பழத்தினை உண்டு வருவதால் மட்டுமே, நான் ஆரோக்கியமாகவோ அல்லது என் மனம் பிரகாசமாகவோ உணரவில்லை. மாறாக இவை அனைத்தும் கிறிஸ்துவின் மகா பெரிய வல்லமையால் செய்யப்படுகின்றன என்பதை நான் அறிவேன். எனக்குள் ஒரு பிடிவாதமான காரியம் இருந்தது. நான் தேவனையும், கிறிஸ்துவையும் என் வாழ்க்கையிலிருந்து உறுதியாக விலக்கி வைத்திருந்தேன். என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடியாததால் அல்ல. இஸ்ரயேலிடமிருந்து உதவிபெறுவதற்குச் செல்ல விரும்பாத பிடிவாதக்காரர்களில் நானும் ஒருத்தி. வறட்சி எங்களைப் பேரழிவிற்கு உட்படுத்தும் நிலையில் இருந்ததால், நான் முற்பிதாக்களின் அதிகாரத்தின் கீழ் வர வாக்களித்தேன். எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் முழங்காலில் நின்றோம். இருப்பினும், கிறிஸ்துவை சேவிக்காமல், அவருடைய ஆசீர்வாதங்களைப் பெறலாம் என்று நினைத்தேன். எனது எதிர்ப்பின் தன்மையில் நான் உறுதியாக இருந்தேன், ரெபெக்காள். இருப்பினும், நான் தீமைக்குப் பதிலாக நன்மையையே பெற்றிருக்கிறேன். என்னைக் குறித்து நான் வெட்கப்படுகிறேன்" என்று ரூத் கூறினார்.

"நாளைய தினத்தின் வழிபாட்டு ஆராதனையில் உங்களைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன், ரூத். நாங்கள் மிகச்சிறிய அளவிலான எண்ணிக்கையிலேயே வழிபாட்டினைத் துவக்கினோம். ஆனால் ஜனங்கள் இதுவரையிலும் தாங்கள் பெற்றுக்கொண்ட எல்லா நன்மைகளுக்காகவும், இப்போது பெற்றுக்கொண்டிருக்கிற நன்மைகளுக்காகவும் தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும் நன்றிசொல்லுவதற்கு அதிகமானோர் விரும்புவதால், எண்ணிக்கையில் அதிகமான ஜனங்கள் இப்போது வழிபாட்டிற்கு வருகிறார்கள். கிறிஸ்து மரித்து, நமக்காக மீட்கும் விலையைக் கொடுக்காமல் இருந்திருந்தால், நாம் அனைவரும் நம் பாவங்களிலேயே இன்னமும் இருந்திருப்போம் என்பது உங்களுக்குத் தெரியும்" என்று ரெபெக்காள் கூறினாள்.

"நாளை வழிபாட்டிற்கு நான் வருவேன், ரெபெக்காள். என்னைப் போன்ற பிடிவாதக்காரரிடம் பேசுவதற்கு, மிகுந்த வேலைகள் நிறைந்துள்ள உங்களின் கால அட்டவணையிலிருந்து நேரத்தை ஒதுக்கியதற்கு நன்றி. என் தந்தை திரும்பி வருகிறார் என்ற அறிவுதான் என்னை உற்சாகப்படுத்தியுள்ளது. நான் தேவனுடன் சண்டையிடுவதை நிறுத்திவிட்டு, தேவனையும், கிறிஸ்துவையும் வழிபடத் தொடங்கவேண்டும். ஆம், நான் வழிபாட்டில் கலந்துகொள்வேன். என்னைபோல் மறைந்திருக்கிற வேறு யாரேனையும் கண்டறிந்தால், அவர்களையும் அழைத்து வர முடிந்தால், அழைத்துவருவேன். நான் நீண்ட காலமாக தேவனுடன் சண்டையிட்டு வருகிறேன். ஆனால் இப்போது அவருடைய செட்டைகளின் கீழ் வருவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்" என்று ரூத் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

ரெபெக்காள் தன் மனதின் பாரம் குறைந்தவளாக வேலைக்குச் சென்றாள். ஜனங்கள் கிறிஸ்துவின் கிருபையை அதிகமாகப் பெற்று, அவருடைய வல்லமையை அதிகமாகக் காணும்போது, அவருடன் நெருங்கிய உறவிற்குள் வருவார்கள் என்று ரெபெக்காள் உறுதியாக நம்பினாள்.

* * *

***"வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்; அவர் பாதங்களின் கீழ் காரிருள் இருந்தது."***
***"இருளைத் தமக்கு மறைவிடமாக்கினார்; ஆகாயத்துக் கார்மேகங்களைத் தம்மைச் சூழக் கூடாரமாக்கினார்."***
***"உயரத்திலிருந்து அவர் கைநீட்டி, என்னைப் பிடித்து, ஜலப்பிரவாகத்திலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்." (சங்கீதம் 18:9, 11, 16)***

# அத்தியாயம் - 30

மதிய உணவினை அடர்ந்த கருஞ்சிவப்புக் கேசம் கொண்டிருந்த ஆடவர்க்கு அருகில் அமர்ந்து உண்பதற்காக, அவர் அமர்ந்திருக்கும் இடத்தை நோக்கி, "ஸ்காட்" என்று அழைத்தவாறு ரெபெக்காள் விரைந்தாள். அவர் அருகில் அமர்ந்து பெருமூச்சு விட்டவாறு, "ஸ்காட், வழிபாட்டுச் சேவைக்கு வருவதற்கு உங்களைத் தடைசெய்வது எது?" என்று கேட்டாள்.

"இப்போதெல்லாம் வழிபாட்டுச் சேவையானது தேவபக்தியுள்ளவர்களால் நிரம்பத் தொடங்கி இருக்கின்றது. ஈகிள்விங்கில் பணிபுரியும் தொழிலாளர்கள் உட்பட அநேகர் கலந்துகொள்கின்றனர்." ரெபெக்காளின் கேள்வியானது நேரடியானதாகவும், அக்கறைகொண்டதாகவும், தெரிந்துகொள்ள விரும்பும் ஆர்வத்துடன் கேட்கப்பட்டது போலவும் இருந்தது. அவளது உண்மையான அன்பினை, ஸ்காட் மதிக்கவேண்டிய கட்டாயத்திற்குள் இருந்தார். அவருக்கு வேறொரு இடத்திற்குச் சென்று அமர வேண்டும் போல் இருந்தது, ஆனால் அத்தகைய அவமதிப்பிற்குரிய செயலைச் செய்ய அவர் விரும்பவில்லை.

"வழிபாட்டுச் சேவையை அவ்வளவு அவசியமானதொன்றாக நான் கருதவில்லை. எனக்கு ஏதேன் பழம் இருக்கிறது, பிறகு எதற்கு நான் வழிபாட்டுச் சேவைக்குச் செல்லவேண்டும் என்று நினைக்கப்போகிறேன்" என்று பதிலளித்தார்.

"நீங்கள் மகிழ்ச்சியாகத் தான் இருக்கிறீர்களா, கூறுங்கள்?" என்று ரெபெக்காள் வினவினாள்.

ஸ்காட் ஆழ்ந்த பெருமூச்சு விட்டார். தன்னுடைய கரங்களைத் தனது நெற்றியின் மீது வைத்துத் தடவியவாறு, "ரெபெக்காள் என்னிடம் கேள்விகள் கேட்பதில், நீங்கள் சோர்வடைந்து போவது இல்லையா?" என்று கேட்டார்.

"உங்களிடம் ஏதேன் பழம் இருக்கிறது என்பது சரிதான், அது உங்களுக்கு ஆரோக்கியத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும். ஆனால் "மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஏதேன் பழத்தை உட்கொள்வது என்பது நீங்கள் தேவ வார்த்தையின் படியாக வாழமுடியாமல் போவதைச் சரிசெய்யாது. தேவவார்த்தையின் படி எப்படி வாழ வேண்டுமோ, அப்படியே நீங்கள் வாழவேண்டும் என்பதையே நான் விரும்புகிறேன்" என்றாள்.

ஸ்காட் தனது விரல்களால் தேநீர் கோப்பையின் பக்கவாட்டில் தடவியவாறே அமர்ந்திருந்தார். பின்பு...

"அப்படியானால் என்னிடம் சொல்லுங்கள் ரெபெக்காள், இத்தகைய ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்கு, இவ்வளவான ஞானமும், திறமையும் கொண்டிருக்கும் தேவன் ஏன் இத்தனை நாட்கள் காத்திருந்தார்? புதிய உலகிற்கான ஏற்பாடுகளைக் கிறிஸ்துவின் மரணம் சம்பவித்த உடனடியாகவே அவர் ஏன் ஏற்படுத்தவில்லை?" என்ற அவரது குரலில் கிண்டல் தெரிந்தது.

"தேவன், லூசிபரை அழியாமையோடு சிருஷ்டித்து இருந்தால் என்ன நடந்திருக்கும்?" என்று ரெபெக்காள் கேள்வி எழுப்பினாள்.

"அவர் இந்தப் பிரபஞ்சத்தில் அழிக்கவே முடியாத ஒரு தீய சக்தியாக இருந்திருப்பார். நான் கேட்ட கேள்விக்கும், நீங்கள் கேட்ட கேள்விக்கும் எந்த சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லையே?" என்று ஸ்காட் கேட்டார்.

"எனக்கும் சில நிமிடம் அவகாசம் தாருங்கள் ஸ்காட்" என்று ரெபெக்காள் சிரித்தவாறு கூறினாள்.

"மிகச்சரியாக இதற்காகவேதான் தேவன் லூசிப்பரை மட்டுமல்ல, எந்த ஒரு ஜீவனையும், தம்முடைய குமாரனையும்கூட அழியாமையோடு சிருஷ்டிப்பதைத் தேர்ந்தெடுக்கவில்லை. அழியாமை என்பது குணாதிசயத்தில் எந்த ஓர் ஒழுக்கக்கேடும் தன்னிடம் இல்லை என்பதை நிரூபிக்கும் ஒருவருக்கே கொடுக்கப்படும் ஒரு நிலையாகும். அவ்வாறு ஒருவர் இருக்கும்போது அழியாமை என்பது பாதுகாப்பான ஒன்றாகவே இருக்கும்" என்றாள்.

"அதனால்?" என்று ஸ்காட் கேட்டார்.

"பாவமானது இந்த உலகத்தில் அதிக அளவில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் போதே, இந்த உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனுக்குலத்திலிருந்து தெய்வீகக் குடும்பத்தின் அங்கத்தினர்களை உருவாக்குவதற்குத் தேவன் எண்ணினார் மற்றும் அவர்கள் முழுமையாக நன்கு சோதிக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் விரும்பினார். தங்களது வாழ்க்கையை முழுமையாகக் கிறிஸ்துவினிடத்தில் அர்ப்பணித்தவர்களாக அவர்கள் இருப்பார்கள். மேலும் அவர்கள் சோதிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டப் பிறகு அவர்களுக்கு அதற்கான பரிசாக, அழியாமையைக் கொடுப்பதற்கு தேவன் விரும்பினார். அவர்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள். அபிஷேகம் பண்ணப்பட்டவர்களை, இந்தச் சிறுமந்தை வகுப்பாரைப் பரிசோதிப்பதற்கே இவ்வளவு காலம் எடுத்தது" என்றாள்.

## சிறுமந்தை வகுப்பாருக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது

"சிறுமந்தை வகுப்பாருக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது, ஆனால் அவர்களுடைய தேர்ந்தெடுப்பிற்கு, இவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது என்பது எனது வாழ்க்கையில் எனக்கு எவ்வளவு பெரிய விளைவுகளை ஏற்படுத்தியது என்பது தெரியுமா? சிலர் பரலோகம் செல்லவேண்டும் என்பதற்காக, நான் ஏன் என் மகளை இழக்கவேண்டும்?" என்று ஸ்காட் கேட்டார்.

"தேவனுடைய அன்பு மற்றும் ஞானமானது சுயாதீனத்தை அனுமதித்ததாலேயே, நீங்கள் உங்கள் மகளை இழந்தீர்கள். ஆதாம் கீழ்ப்படியாமையைத் தேர்ந்தெடுத்ததாலேயே தேவன் அதிக விலைகொடுத்து நம்மை மீட்டார். உங்கள் மகள் மீண்டும் ஜீவனோடு வாழவேண்டும் என்பதற்காகவே அவ்வாறு செய்தார், நித்தியத்திற்கும் வாழ்வதைத் தேவன் சாத்தியமாக்கி உள்ளார். தேவன் தமது குமாரனையே கொடுத்திருக்கிறார். கொடிய குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனையான, சிலுவை மரணத்தின் மூலமாகக் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு மரித்தார். உங்களுக்காகவும், உங்களது மகளுக்காகவும் மரித்திருக்கிறார்."

ரெபெக்காள் சிறிது நேரம் அமைதியானாள். பின்பு பெருமூச்சு விட்டவாறு "தேவன் இவ்வளவு காலம் காத்திருந்திருக்காவிட்டால் நீங்கள் பிறந்திருக்கவே மாட்டீர்கள், உங்கள் மகளும் பிறந்திருக்கவே மாட்டாள். இந்தப் பூமி நிரப்பப்படும் வரை தேவன் காத்திருந்தார். அதனாலேயே இப்பொழுது நீங்கள் இருவரும் பூமியில் நித்திய ஜீவனுடன், பில்லியன் கணக்கான மற்றவர்களுடனும் இணைந்து கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றுள்ளீர்கள்" என்றாள்.

"அவர்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள், நான் இங்கே பூமியில் இருக்கிறேன். அவ்வாறு இருக்கும்போது, அவர்களால் எந்தவிதமான உதவியை எனக்கு அளிக்கமுடியும்" என்று ஸ்காட் கேட்டார்.

"ஏற்கெனவே அவர்கள் உங்கள் சார்பாக முடிவுகளை எடுத்திருக்கின்றனர். அவர்களது வல்லமையானது கண்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களுடைய வாழ்க்கையில், அவர்களுடைய ஞானம் மற்றும் அன்பினால் ஏற்படும் மாற்றங்களை அதிகமதிகமாக உணரமுடியும். அவர்களது வாழ்க்கை வரலாறுகள் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் ஆவணங்கள்" என்ற தலைப்பின் கீழ் இணையத்தில் இருக்கின்றன" என்று ரெபெக்காள் கூறினாள்.

ஸ்காட் சில நிமிடங்கள் அமைதியாக இருந்தார். "எனக்கு என் மகள் மரித்தபோது எவ்வாறு இருந்தது என்று உங்களுக்குத் தெரியாது ரெபெக்காள்" கண்ணீர் துளிகள் அவரது கண்களில் திரண்டன. "அவள் மரிப்பதை நான் பார்த்தேன் ரெபெக்காள். என்னால் எதுவுமே செய்ய

முடியவில்லை. எனக்குப் போதுமான அளவு விசுவாசம் இருந்தால் மட்டுமே, அவள் குணமாகுவாள் என்று என் கிறிஸ்தவ நண்பர்களில் சிலர் என்னிடம் கூறினார்கள்" என்றார்.

"நல்லது செய்யவேண்டும் என்று நினைத்து, உண்மையில்லாத ஒன்றை சிலர் உங்களிடத்தில் கூறியிருக்கின்றனர். நிரந்தரமாக குணப்படுத்த வேண்டும் என்பதுதான் தேவனின் விருப்பமாக எப்போதும் இருக்கிறது. சிறந்ததொரு நன்மையைக் கொடுப்பதற்கு அவர் எப்போதும் தடையாக இருந்ததில்லை. உங்கள் மகள், மீண்டும் திரும்பி வரும்போது நீங்கள் எவ்வாறு உணர்வீர்கள் என்று யோசியுங்கள், ஸ்காட்" என்று ரெபெக்காள் கூறினாள்.

மணி ஒலித்தது. ஸ்காட் எழுந்து நின்றார். அவர்களது வேலையிடத்தை நோக்கி இருவரும் அமைதியாக நடக்க ஆரம்பித்தனர்.

## தேவன் மீதான அன்பைவிட தொழில்நுட்பத்தின் மீதான அன்பு

சியாட்டிலில் எதிர்-பொருள் (anti-matter) திட்டத்தினை மேற்பார்வையிட்டபோது, லெவ் மிகவும் வித்தியாசமானதொன்றினை உணர்ந்தான். அங்கிருந்த பணியாளர்கள் மிகுந்த ஆற்றலுடன் பணிபுரிவதைக் கண்டு வியந்தான். நாம் செய்த வேலையைச் சரியாகச் செய்துள்ளோமா என்று ஒருமுறையோ அல்லது பலமுறையோ சோதித்துப்பார்ப்பது கடினமானதொன்றாக இருக்காது என்பது லெவ் அறிந்ததே. ஏனென்றால் சோதித்துப்பார்த்தல் என்பது மிகவும் அவசியமான ஒன்று. செய்யும் பணியின் ஒரு பாகமாகவே அது திகழ்கிறது என்றே லெவ் எண்ணினான்.

அவனது உற்சாகத்தினைக் குறைத்த ஒரு விஷயம் என்னவென்றால், அவனுடைய வேலை இடத்தில் பணிபுரிபவர்களில் சிலர், தேவன் மீதான அன்பு மற்றும் சகப் பணியாளர்களுக்கு உதவிசெய்தல் ஆகியவற்றினால் ஊக்கப்படுத்தப்படுவதற்குப் பதிலாக, தொழில்நுட்பத்தின் மீதான அன்பின் காரணமாக ஊக்கப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்ற உண்மையே அவனது மன உளைச்சலுக்குக் காரணமாய் இருந்தது. அவர்கள் காரியங்களை ஆவிக்குரியக் கண்ணோட்டத்தில் பார்க்காமல், தொழில்நுட்ப அறிவினைக் கொண்டு மட்டுமே பார்த்தனர். இந்தத் திட்டம் ஆரம்பித்த முதல் மாதத்திலேயே, ஒன்றுக்கும் மேற்பட்ட முறை லெவ் இதனை ரெபெக்காளிடம் தெரிவித்திருந்தான்.

"அவர்கள் பணியில் ஏற்படும் சவால்களை விரும்புகிறார்கள். அவர்கள் உற்சாகத்துடன் பணிபுரிவதற்குக் காரணமாய் இருக்கும் தேவனுடைய வல்லமையைப் பார்ப்பதற்குத் தவறுகிறார்கள். ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் காரியங்களைப் பார்க்காமல், தொழில்நுட்ப அறிவினால் மட்டுமே காரியங்களைப் பார்க்கின்றனர். தங்களது பணியில் அவர்களுக்கு உதவியாக இருக்கும் தேவனின் வல்லமையை அவர்கள் உணர்ந்தால் மட்டுமே, அவர்களால் சாகசம் நிறைந்த இந்தப் பணியின் தீவிரத்தை முழுமையாக அனுபவிக்க முடியும். அவர்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் தேவனின் வல்லமை செயல்படுகிறது என்னும் யதார்த்தத்தை அவர்கள் காணத்தொடங்கின பிறகே, உண்மையிலேயே ஜீவனோடு இருப்பது என்றால் என்ன என்பதை அவர்களால் உணர்ந்துகொள்ள முடியும்" என்றான்.

சில நாட்கள் கடந்து சென்றபோது, அங்குப் பணிபுரிந்தவர்களின் அணுகுமுறையில் படிப்படியாக மாற்றத்தை லெவ் காண ஆரம்பித்தான். அதனால் அவனது உற்சாகம் அதிகமானது, அதனை ரெபெக்காள் ரசித்தாள். "தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள், தேவனுடைய வல்லமையை உணரத் தொடங்கிவிட்டார்கள். உண்மையிலேயே உணரத் தொடங்கிவிட்டார்கள்" என்று லெவ் தனது அலுவலக அறையில் முன்னும் பின்னும் நடந்தவாறும், தன் கைகளை அசைத்து சைகை காட்டியவாறும் கூறினான்." அவர்கள் நடந்து கொண்டிருப்பவைகளைக் காணத் தொடங்குகிறார்கள், தேவனுடைய வல்லமை, அவர்கள் மீதான அவருடைய அன்பு மற்றும் அவருடைய அன்பைத் தங்களுடைய பணியின் மூலமாகவும், தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் மூலமாகவும் காணத் தொடங்குகிறார்கள். இவை அனைத்தையும் மற்றவர்களுக்குக் கடந்துபோகச் செய்வது, அவர்களுக்குக் கிடைத்த சிலாக்கியமாகவும் உணருகிறார்கள். நீதியின் சூரியனின் ஒளிக்கதிர்கள் எல்லா இடங்களிலும் பிரகாசிக்கின்றன. அவர்களது கண்களில் தெரியும் வெளிச்சத்தைப் பார்! நீ ஜோசைக் கவனித்தாயா? ஜோஸ் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார். சிடுமூஞ்சி லியோனட், இப்போது இரக்கமிகுந்த லியோனட்டாக மாறிவிட்டார். மேலும் ரூத் மற்றும் ஸ்காட்டையும் பார்" என்று லெவ் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தான்.

தொழிற்சாலைக் கட்டிடம் விரைவாகக் கட்டிமுடிக்கப்பட்டது. அனைத்து உதிரிப் பாகங்களையும் ஒன்றிணைக்கும் பணியானது சீராக நடந்திருந்தது. போதுமான அளவு எஞ்சியிருந்த பாகங்கள் இருந்ததால், அந்தத் திட்டத்தின் இரண்டாவது கட்டமானது தொடங்கியது. வெப்ப அதிகரிப்பு எதுவும் ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, இரண்டாவது கட்டமானது கவனமாகக் கண்காணிக்கப்பட்டது. ஒரு கிராம் அளவுகளைக் கொண்ட எதிர்-பொருளைப் (anti-matter) பிரித்தெடுக்கும் வேலையானது மூன்றாம் கட்டத்தில் நடைபெறும்.

லெவ், தனது பணிப்பிரிவின் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கும் எண்கள் மற்றும் விவரக் குறிப்புகளைச் சோதிப்பதற்கும், மறுபரிசோதனை செய்வதற்கும் தானே நேரில் சென்றான். இந்தச் செயல்முறை, கட்டுப்பாட்டை மீறாமல் இருப்பதை உறுதிசெய்ய, லெவ் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தான். திட்டத்தின் இறுதி நாட்களில் அவசரகாலத்திற்கான நடைமுறைகளை லெவ் மேற்கொண்டான். சென்சார் அபாய சமிக்கையை ஒலிக்கச் செய்தால், பணியாளர்கள் அதற்கு ஏற்றவாறு எவ்வாறு செயல்படவேண்டும் என்பதையும் விளக்கினான்.

இறுதியில் எதிர்-பொருள் (anti-matter) முதன் முதலாகத் தயாரிக்கப்போகும் அந்த நாள் வந்தது. அந்த நாளின் செயல்முறையில் சம்பந்தமில்லாத அனைவரும் பணியிலிருந்து அனுப்பப்பட்டனர். ஆலையைச் சுற்றிலும் இருக்கும் சுற்றுவட்டாரப் பகுதிகளின் அனைத்து நடவடிக்கைகளும் (வேலைகளும்) நிறுத்தப்பட்டு இருந்தன. எதிர்-பொருள் (anti-matter) செயல்முறைப்படுத்தப்படுவதற்குத் தயார்நிலையில் இருப்பதை லெவ், ஏனோக்கிடம் தெரிவித்தான். ஏனோக்கின் பதில் அந்தப் பெரிய ஆலையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் கேட்கவேண்டும் என்பதற்காக லெவ், வானொலியில் ஏனோக்கின் பதிலை ஒலிபரப்பினான்.

"லெவ்விற்கும், ஈகிள்விங்கிள் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஷாலோம் உங்களோடு தேவன் இருக்கிறார். நம்முடைய ஆவிக்குரியப் வல்லமைகள் இந்தச் செயல்பாட்டினைக் கண்காணித்து வருகின்றனர். அவர்களும் அங்கே உங்களுடன் இருப்பார்கள். பணியாளர்கள் யாராவது ஏதாவது தவறுசெய்தால், யார் ஒருவருக்கும் எந்தவிதத் தீங்கும் ஏற்படுவதற்கு, நம்முடைய ஆவிக்குரிய வல்லமைகள் விடமாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். நீங்கள் வேலையைத் தொடங்கலாம்" என்றார்.

சிறிது நேரத்தில் தொலைபேசி மணி ஒலித்தது. முதல் எதிர்-பொருள் (anti-matter) துகள்கள் சேகரிக்கப்பட்டதாக அறிவிப்பு வந்தது. லெவ் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். அவனது சந்தோஷத்தை அவனால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. தன்னுடன் பணிபுரிந்தவர்கள் ஒவ்வொருவரிடமும் ஓடிச்சென்று, அவர்களைத் தழுவி இதனைத் தெரிவித்தான்.

ஏனோக்குடனான உற்சாகமான, சுருக்கமான உரையாடலுக்குப் பிறகு லெவ், ரெபெக்காளைத் தேடிச்சென்றான். அவளது அலுவலக அறையில் அவளைச் சந்தித்தான். அவளது தோள்களைப் பிடித்து நின்றவாறு, அவளது கண்களை உற்றுப்பார்த்தான்.

"இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் நீயும் ஒரு முக்கியப் பங்கு ஆற்றியிருக்கிறாய் ரெபெக்காள். இந்த ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு ஏதேன் பழங்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல், இவர்களின் மனதினையும் ஊக்கப்படுத்தி உள்ளாய். மனுக்குலத்திற்கான உடல் ஆரோக்கியத்தையும் மற்றும் பூமிக்குரிய தேவைகளைத் தாமதமின்றியும், பற்றாக்குறையின்றியும் பூர்த்திச்செய்வதற்கு உதவிகரமாக இருக்கும் தொழில்நுட்பமானது இப்போது நம்மிடம் உள்ளது. அநேகப் பாவங்களோடு உயிர்த்தெழுப்பப்படப் போகும் ஜனங்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்ற இந்த மிகப்பெரிய சவாலில் கவனம்செலுத்துவதற்கு, இந்த எதிர்-பொருள் (anti-matter) முற்பிதாக்களுக்கு உதவிகரமாக இருக்கும். நன்றி ரெபெக்காள், தேவனுக்கும் நன்றி" என்றான்.

## ஈகிள் விங்கிலிருந்து புறப்படுதல்

ஈகிள்விங்கிலிருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகளை லெவ்வும், ரெபெக்காளும் செய்திருந்தனர். ஈகிள்விங்கின் குடியிருப்பாளர்களால் நிறைந்திருந்த ஓர் அறையில் அமைக்கப்பட்டிருந்த சிறிய மேடையில், அவர்களுக்கு முன்பாக லெவ்வும், ரெபெக்காளும், ஸ்காட்வாட்சும் நின்றுகொண்டிருந்தார்கள். தங்களுடைய குடும்ப உறுப்பினர்களில் ஒருவராக

மாறியிருந்த ஈகிள்விங்க் குடியிருப்பாளர்களிடம் இருவரும் உரையாற்றினர். இவர்களும், ஈகிள்விங்கின் குடியிருப்பாளர்களும் ஒன்றிணைவதற்கு வழிகாட்டியாக இருந்த கிறிஸ்துவிற்கும், அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுக்கும் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தனர்.

லெவ் மைக்கில் பேசிக்கொண்டிருந்தபோது, ரெபெக்காள் கடந்த வருடத்தில் நடந்தவைகளை மறுபடியும் நினைத்துப்பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்ல மெல்ல ஸ்காட்வாட்ஸ் சத்தியத்தினை ஏற்றுக்கொள்ளும் புதிய மனதினை உடையவராக மாறினார். தனது மகளின் உயிர்த்தெழுதலின் நாளை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அந்த எதிர்பார்ப்பின் தருணங்கள் அவருக்கு மகிழ்ச்சியை அளித்திருந்தன. வழிபாட்டுச் சேவைக்கும் வரத் தொடங்கியிருந்தார். ஆனால் முதலில் சற்று அமைதியானவராகவே காணப்பட்டார் மற்றும் எப்போதும் கடைசி வரிசையிலேயே சென்று அமருவார். அவரும், அக்னெஸூம் அவர்களுடைய மகளுக்கான வீட்டினைக் கட்டுவதற்காக உற்சாகத்துடனும், களைப்பின்றியும் வேலைசெய்தனர். ஸ்காட்டின் மகள் உயிர்த்தெழுந்த நாளிலிருந்து, அவருக்குள் உண்டாயிருந்த மாற்றம், எப்போது ரெபெக்காளுடைய நினைவிற்கு வந்தாலும், அவள் தனக்குத்தானே சிரித்துக்கொள்வாள். நம்முடைய அன்புக்குரியவர்கள் உயிர்த்தெழும்போது, அவர்களுடன் இருப்பது என்பது ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தகுந்த வளர்ச்சியை எட்டுவதற்கு வழிவகுப்பதாக இருக்கும். பெரும்பாலானோருக்கு இந்நிகழ்வு வாழ்க்கையை மாற்றக்கூடிய நிகழ்வாகவே இருக்கும்.

இப்போது அந்தப் பகுதியில் உயிர்த்தெழுந்து வருவோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. கிறிஸ்துவினுடைய இரக்கத்தையும், அவருடைய அன்பின் வல்லமையின் ஆழத்தையும், அங்கிருந்தவர்கள் அதிகமாக உணரத் தொடங்கியிருந்தனர். அதனால் பெரும்பாலானோர் கிறிஸ்துவின் வல்லமையை அதிகமாகப் பாராட்டத் தொடங்கியிருந்தனர். மற்றவர்களுக்குக் கடுமையாகத் தீங்கிழைத்திருந்தவர்கள், உயிர்த்தெழுதலின் செயல்முறையில் எந்தவொரு மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளவில்லை. முழுமையாக வெளிப்படப்போகும் ஒவ்வொரு பாவகரமான செயலிலிருந்தும் தப்பிச்செல்வதற்கு வழியும் இல்லை. ஒளிந்துகொள்வதற்கு இடமும் இல்லை. ஆனால் அவர்களுக்கும் கிறிஸ்துவின் இரக்கம் உள்ளது. கூறப்போனால், பழைய வாழ்க்கையில் தங்களுக்குத் தீங்கு விளைவித்தவர்களை நேரில் சென்றுப் பார்ப்பதற்கு, அநேகர் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பார்த்து ரெபெக்காள் ஆச்சரியப்பட்டிருந்தாள். பணம், அரசியல், செல்வாக்கு, உடல் வலிமை, உணர்ச்சித் தூண்டுதல் ஆகிய இவைகளைத் தவறான முறையில் பயன்படுத்துதல் என்பது புதிய பூமியில் இனி எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. ஏனெனில் அனைவருக்கும் அனைத்தும் சமமானது என்ற உயிர்த்தெழுதலின் கொள்கையானது குன்றுகளைச் சமதளத்திற்கும், பள்ளத்தாக்குகளை உயரத்திற்கும் கொண்டுவரும் ஏற்றத்தாழ்வற்ற பணியைத் தொடர்ந்து செய்தது. "இப்போது பயன்பாட்டில் இல்லதாது," "தொன்மையானது" என்றெல்லாம் கருதப்பட்டு வந்த வேதாகமத்தில் உள்ள வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றங்களை, ஜனங்கள் தங்களது சொந்த வாழ்க்கையில் இப்போது நிறைவேறி வருவதைக் கண்ணாரக் கண்டு வருகின்றனர். அதனை அனுபவிப்பதை உணர்ந்தும் வருகின்றனர். அதனால் வேதாகமமும் ஒருவகையான உயிர்த்தெழுதலைப் பெற்றிருக்கிறது என்று ரெபெக்காள் எண்ணினாள்.

லெவ் தனது உரையை முடிவிற்குக் கொண்டு வந்தான். "ஸ்காட், நான் கிளம்பும் இந்த நேரத்தில், நீங்கள் என் பதவியை ஏற்றுக்கொள்ள நான் விரும்புகிறேன்" என்றான்.

ஸ்காட், லெவ்வினுடைய தோள்களைச் சுற்றி தன் கைகளைப் போட்டவாறு, மைக்கின் அருகில் வந்து நின்று பேசத்தொடங்கினார். "நான் கனப்படுத்தப்பட்டிருக்கிறேன், லெவ். உங்களுடைய தொழில்நுட்ப அறிவுத் திறனுக்கும் மற்றும் தேவன் மீதான தீவிரமான அன்பிற்கும், எங்களால் போதுமான அளவு நன்றியினைத் தெரிவிக்க இயலாது. ரெபெக்காள் நீங்கள் எங்கள் மீது காட்டிய அன்பிற்கும், சகிப்புத்தன்மைக்கும் நாங்கள் எவ்வளவு நன்றிசெலுத்தினாலும் ஈடாகாது" என்று ஸ்காட், ரெபெக்காளிடம் திரும்பியவாறு கூறினார். "நானே என்னைக் கைவிட்ட போதிலும்கூட, நீங்கள் என் மீதான உங்களது முயற்சிகளைக் கைவிடவே இல்லை" என்றார். பின்பு தனது தலையை லெவ்வின் புறமாகத் திருப்பி லெவ்வைப் பார்த்துவிட்டு, பின்பு பார்வையாளர்களைப் பார்த்தார். "நீங்கள் இருவரும் ஜீவனுடன் இருப்பது என்றால் என்ன என்பதன் உண்மையான அர்த்தத்தை நாங்கள் உணர்ந்துகொள்ள உதவினீர்கள்" என்றார். பார்வையாளர்கள் கரவோசை எழுப்பினார்கள்.

அடுத்ததாக ரெபெக்காள் பேசினாள். "உங்கள் முன்பாக வந்து நான் நின்ற முதல் நாள், எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. நீங்கள் அனைவரும் களைப்புடன் காணப்பட்டீர்கள். முழுவதும் தளர்ந்து, வாடிப்போன, காகிதத்தைப் போன்று தோற்றமளித்த இலைகளால் நிரம்பியிருந்த செடிகளைப்போன்று இருந்தீர்கள். மேலும், காபி இல்லை என்று நீங்கள் ஏங்கியிருந்தீர்கள். இப்போது உங்கள் அனைவரின் முகமும் புத்துணர்ச்சியுடன் காணப்படுகிறது." உணர்வுகளைக் கட்டுப்படுத்தமுடியாமல் ரெபெக்காளின் குரல் நடுங்கியது. "இப்போது உங்களில் அநேகர் தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையின்படியும் வாழ்வதற்கு ஆரம்பித்திருக்கிறீர்கள். புதிய வாழ்க்கையையும், ஊக்கப்படுத்தலையும், இருதயம் குணமடைதலையும், கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களிடமிருந்து நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் ஒவ்வொருவரையும் நேசிக்கிறேன். உங்கள் வாழ்க்கையில் ஒருவராக நான் இருக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைக் கனம்பொருந்திய தொன்றாகவே நான் கருதுகிறேன்" என்றாள்.

லெவ், மைக்கிற்கு அருகில் வந்து நின்றவாறு "ஏதேன் பழம்" என்று சத்தமாகக் கூறியவாறு கைகளைத் தட்டினான். ரெபெக்காளின் கண்களிலிருந்து கண்ணீர் திரண்டு வழிந்தது. லெவ்வின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர், ஈகிள்விங்கின் குடும்பத்தினரைச் சரியாகப் பார்க்கவிடாது மங்கலான வண்ணங்களும், வடிவங்களும் நகர்வதைப் போன்றதானக் காட்சியைக் கொடுத்தது. அது அவனது பார்வையை மங்கலாக்கியதால், அவன் தனது கண்ணீரைத் துடைத்தான். இப்போது ரூத் மற்றும் என்செல் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. லியனார் குவான் மற்றும் அக்னெஸ் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தனர். பின்பு அறை முழுவதிலும் நின்றுகொண்டிருந்த ஈகிள்விங்கின் குடும்பத்தினரை லெவ் கண்டான். புனித இடமான இஸ்ரயேலிலிருந்து வந்திருந்த இந்தத் தூதர்களுக்காகத் தங்களது இருதயத்திலிருந்து நன்றியைத் தெரிவிக்கும் வகையில் அவர்கள் கரவோசை எழுப்பினர்.

## நன்கு செய்யப்பட்ட வேலை

அவர்களது விமானம் "பென்குரியன்" விமான நிலையத்தில் தரை இறங்கியதிலிருந்தே அவர்கள் மகிழ்ச்சியை உணரத் தொடங்கினர். இந்த மகிழ்ச்சியானது விமான நிலையத்தில் அவர்களுக்காகக் காத்திருந்த ஜேக் மற்றும் ரேச்சலைக் கண்டபோது இன்னும் அதிகமானது. அவர்கள் முகத்தில் வழிந்த கண்ணீர், மகிழ்ச்சியினால் புன்னகையாக மாறியது.

ஏனோக்கும், அவர்களுடன் இணைந்து இருவரையும் வரவேற்க விமான நிலையத்திற்கு வந்திருந்தார். விமான நிலையத்திலிருந்து நேரடியாக முற்பிதாக்களின் அலுவலகத்திற்கு, அவர்கள் இருவரையும் அழைத்துச்சென்றனர். இது லெவ்வையும், ரெபெக்காளையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. நீண்ட நடைபாதையைக் கடந்து ஓர் அலுவலக அறைக்குள் இருவரும் அழைத்துச் செல்லப்பட்டனர். இருட்டாக இருந்த அந்த அறைக்குள் இருவரும் நுழைந்தவுடன், அங்கிருந்த விளக்குகள் ஒளிர்ந்தன. லெவ்வும், ரெபெக்காளும் அதிர்ச்சியுடனும், ஆச்சரியத்துடனும் நின்றுகொண்டிருந்தனர். ஏனெனில், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அந்த அறையில் அவர்களை வரவேற்பதற்காகக் காத்திருந்தனர். அனைவரும் மரத்தினால் செய்யப்பட்டிருந்த நீண்ட மேசையைச் சுற்றிலும் அமர்ந்தனர். முற்பிதாக்களாகிய யோவான்ஸ்நானனும், சாராளும், அவர்களுக்கு ஏதேன் பழங்களையும், ரொட்டிகளையும் பரிமாறினார்கள். வாடிய மரக்கன்றுகளை உயிர்ப்பித்ததற்கு வாழ்த்துக்கள் ரெபெக்காள். எதிர்-பொருள் (anti-matter) திட்டத்தை வெற்றிகரமாகத் தொடங்கியதற்கு வாழ்த்துக்கள் லெவ் என்று முற்பிதாவாகிய ஏனோக்கு, அவர்களது தேநீர்க் கோப்பையில் தேநீரை ஊற்றியவாறு இருவரிடமும் கூறினார். நீங்கள் அனைவரும் விரும்பி மேற்கொள்ளும் சேவைகளுக்காக, உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றியினைத் தெரிவிக்க நாங்கள் விரும்பியதாலேயே, உங்கள் அனைவரையும் இங்குக் கூடிவரச் செய்தோம். லெவ் மற்றும் ரெபெக்காளைத் தவிர, அங்கிருந்த மற்றவர்களுக்கு அவர்களுடைய அடுத்தப் பணி என்ன என்பது தெரிவிக்கப்பட்டிருந்தது. "லெவ் மற்றும் ரெபெக்காளின் சேவையில் அவர்களுக்கான புதிய வாய்ப்பினைப் பற்றிக் கூறுவதற்கு ஒரு வாரத்திற்குள்ளாக அவர்களை எங்களது அலுவலகத்திற்கு வரச்சொல்லுவோம். அதுவரையிலும் ஷாலோம் கிறிஸ்து மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளானார்" என்று முற்பிதா ஏனோக்கு கூறினார். மூன்று முற்பிதாக்களும் அறையை விட்டு வெளியேறினர். அரியேல் எழுந்து நின்று, வானத்தை நோக்கி அண்ணாந்துப் பார்த்து, தனது கைகளைப் பரலோகத்திற்கு நேராக உயர்த்தி நன்றி செலுத்தினார். "கர்த்தாவே இந்த நேரத்திற்காக நாங்கள் நன்றி கூறுகிறோம், ஜீவனுக்காக நன்றி கூறுகிறோம்.

இந்தப் புதிய தொடக்கத்திற்கான ஆசீர்வாதங்களுக்காகவும், மேலும் அதனை ஒவ்வொரு தலைமுறையும் தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கும் நன்றி கூறுகிறோம். இங்கிருக்கும் எங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட வாய்ப்பிற்காகவும், இரக்கத்திற்காகவும், மகிழ்ச்சிக்காகவும் கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் நாமத்தில் நன்றிகளை ஏறெடுக்கிறோம்" என்றார்.

ஒவ்வொருவரும் நன்றியுணர்வினால் நிறைந்திருந்தனர். சில மணித்துளிகள் அமைதியாக இருந்தனர். ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அனைவரும் இப்போது ஒரே இடத்தில் கூடியிருக்கின்றனர் என்ற நிஜத்தை உள்வாங்குவதற்கு முயன்றனர்.

"நாம் இப்போது சாப்பிடலாமா" என்று தனது கைகளிலிருந்த பழரசக் கோப்பையை உயர்த்திப் பிடித்து, அதில் தட்டியவாறு ஆனி கூறினாள்.

கோப்பை "க்ளிங்" என்ற ஓசையை எழுப்பியது. பிறகு ஒவ்வொருவரும் "ரொட்டியை உண்ணலாம்" என்று கேட்கத் தொடங்கினர். அதன் பிறகு தொடர்ந்த உரையாடல் முடிவு பெறவில்லை. அனைவரும் சகஜமாகப் பேசத்தொடங்கினர். இரண்டு அல்லது மூன்று பேர் இணைந்து, ஒரே நேரத்தில் கேள்விகளைக் கேட்டனர். அதனைத் தொடர்ந்து அனைவரும் சிரித்தனர். பின்பு தங்களில் ஒருவர் முதலில் பேசுவதற்கு இடம்கொடுத்து மற்றவர்கள் பேசாமல் இருக்கலாம் என்று ஒவ்வொருவரும் தங்களுக்குள்ளாகவே எண்ணிக்கொண்டதால், ஒருவருமே பேசாமல் அமர்ந்திருந்தனர். இதனால் யார் முதலில் பேசப்போகிறார் என்று ஒருவருக்கும் தெளிவாகத் தெரியவில்லை. அவர்கள் அனைவரும் தங்களது எண்ணங்களை எண்ணி மீண்டும் சிரிப்பதற்கு அது வழிவகுத்தது. இறுதியாக ஒவ்வொருவராகத் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளலாம் என்று முடிவெடுத்தனர்.

## புதிய பூமியில் தங்களது அடுத்தப் பணிக்கான எதிர்பார்ப்பு

ஏனோக்கின் அலுவலகத்தில் லெவ், ரெபெக்காளுக்கு அருகில் நாற்காலியின் கைகளைத் தனது விரல்களால் தட்டியவாறு அமர்ந்திருந்தான். அதேவேளையில் முற்பிதாக்களாகிய ஏனோக்கும், யோவான்ஸ்நானனும், அவர்களுக்கு மறுபுறத்தில் அமர்ந்து தங்களுக்குள்ளாக உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடைய கடந்தவார அனுபவமானது, சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்வதிலும், குடும்பத்தினருடன் சேர்ந்து இளைப்பாறுவதிலும், உரையாடுவதிலும் நேரம் போனதே தெரியாமல் போயிருந்தது.

"நீங்கள் இருவருமே சிறப்பாகச் செய்துள்ளீர்கள்" என்று முற்பிதா ஏனோக்குத் தொடங்கினார். "இனியும் தொழில்நுட்பத்தில் மாற்றங்களைப் பெற எங்களுக்கு உங்கள் இருவரில் யாருடைய உதவியும் தேவைப்படலாம் லெவ். அது அவசியமானதும் கூட. ஆனால் சாதகமற்றச் சூழலிலும் திறன்படச் செயல்படும் உங்களது திறமையே எங்களுக்கு இப்போது அவசியமானதொன்றாக இருக்கிறது. யூதர்களைப் புறக்கணித்த ஜனங்களின் மரியாதையையும் பெற்றுக்கொள்ளும் திறன் படைத்தவர்கள் நீங்கள் லெவ். எதிரிகளை நண்பர்களாக மாற்றும் வரையிலும், நீங்கள் விடாமுயற்சியுடன் செயல்பட்டீர்கள். மோதல்களையும், எதிர்ப்புகளையும் சமாளிப்பதில், உங்களுடைய திறனை நீங்கள் வெளிப்படுத்தினீர்கள். ரெபெக்காள், நீங்கள் மென்மையானவராகவும், உள்ளுணர்வால் மற்றவர்களை அறியும் திறன் கொண்டவராகவும் இருக்கிறீர்கள். உயிரினங்கள் வளர்வதற்கு உதவுவதில் ஆர்வம் உள்ளவராகவும் இருக்கிறீர்கள். நீங்களும் மோதல்களைச் சமாளிப்பதில் திறன் படைத்தவராகவும், சத்தியத்தையும், அன்பையும் எதிர்த்த இருதயங்களைக் கூட வெல்பவராகவும் இருந்தீர்கள். கிறிஸ்துவும், அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களும் மகிழ்ச்சி அடைகிறார்கள், நாங்களும்தான்" என்றார்.

முற்பிதா ஏனோக்கு எழுந்து நடந்தவாறு தனது பேச்சினைத் தொடர்ந்தார். "மறுசீரமைப்பின் முதல் கால் நூற்றாண்டு பரபரப்பு நிறைந்ததாகவே இருக்கும். யுத்தங்களினாலும், அராஜகத்தினாலும் பெரிய அளவிலான அழிவுகள் ஏற்பட்டிருக்கிறது. பிரச்சனை செய்வதிலிருந்து ஜனங்களைத் தடுத்து அதற்குப் பதிலாக, அவர்களை வீடுகளைக் கட்டுவதற்கும், மரங்களை நடுவதற்கும் தொடர்ந்து ஊக்கப்படுத்துவதும் சவாலானக் காரியமாகவே இருக்கும். ஜனங்களுக்குத் தேவையானவைகளை வழங்குவதில் தொழில்நுட்பக்காரணிகள் நன்கு முன்னேற்றம் கண்டுள்ளன. ஒவ்வொரு தேசமும் இக்காரியங்களை ஏற்றுக்கொள்வதற்கு இப்போது

தயாராக இருக்கின்றன. குறிப்பாகச் சில சந்தர்ப்பங்களில், ஜனங்கள் ஏற்கெனவே கொண்டிருக்கும், அவர்களின் நிலைப்பாட்டிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்து, கிறிஸ்துவை நேசிக்கவைப்பதும், சக மனிதர்களை நேசிக்கவைப்பதும் கடினமான பணியாக இருக்கும்'' என்றார்.

சுவரை முழுவதுமாக மறைப்பதுபோல் தொங்கிக்கொண்டிருந்த, புதிய பூமியின் வரைபடத்தை நோக்கி முற்பிதா யோவான் நடந்தார். தடிமனானப் பேனாவைக் கொண்டு சில பகுதிகளைச் சுற்றிலும் வட்டமிட்டார்.

''நீங்கள் இருவரும் திரும்பவும் பிரான்சிற்குச் செல்ல நாங்கள் விரும்புகிறோம். ஹைட்ரஜன் எரிசக்தியைக் கொண்டு செயல்படும் ஆலைகள் நன்கு செயல்படுகின்றன. இவைகள் போதுமான அளவு எதிர்-பொருள் (anti-matter) ஆலைகளைக் கட்டும் வரையிலும் செயல்பாட்டில் இருக்கும். தொழிற்சாலையை மேற்பார்வையிடுவதற்கென்று நீங்கள் நியமித்திருந்த அந்த நபர் சிறப்பாகச் செயலாற்றுகிறார். இருப்பினும் கவனம் செலுத்தவேண்டிய சில பிரச்சனைகள் உள்ளன. ரெபெக்காள், நீங்கள் முன்பு மேற்பார்வையிட்டிருந்த அனைத்துச் செயல்பாடுகளையும் மீண்டும் சென்று பார்க்க நாங்கள் விரும்புகிறோம்'' என்றார்.

பின்பு முற்பிதா யோவான் சில அடிகள் முன்பாக அவர்களை நோக்கி நடந்தார். ''எப்படியாய் இருந்தாலும்'' என்று கூறியவாறு, ''நீங்கள் ஐரோப்பாவிற்குச் செல்ல நாங்கள் விரும்புவதற்கு இது மட்டும் காரணம் அல்ல. எங்கள் கோரிக்கையை நீங்கள் கேட்பதற்கு முன்பாக, நாம் அனைவரும் கிறிஸ்துவிற்கே சேவைசெய்கிறோம் என்பதை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர வேண்டியக் கட்டாயத்தில் இருப்பதாக நான் உணர்கிறேன். கிறிஸ்து, நம்மில் யாரிடமாவது எந்த வேலையைச் செய்வதற்குக் கேட்டுக்கொண்டாலும், அவர் நமக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்கும் பதிலாக, நாம் அவருக்கு செய்யும் நியாயமானச் சேவையாகவே இருக்கும். நம்முடைய உதவியுடனோ அல்லது உதவி இல்லாமலோ, அவருடைய நோக்கத்தை அவரால் நிறைவேற்ற முடியும். எந்தப் பணியாக இருந்தாலும் உதவ விரும்புபவராக இருப்பதே நமக்கு ஆசீர்வாதமானதாக இருக்கும்'' என்றார்.

முற்பிதா யோவான் பேசுவதை நிறுத்தினார். அவரைத் தொடர்ந்து முற்பிதாவாகிய ஏனோக்குத் தொடர்ந்து பேசினார்.

''உங்களுக்கான எங்களது பணியானது சற்று வித்தியாசமானதாக இருக்கும். நீங்கள் செய்யும்படியாக நாங்கள் கேட்டுக்கொண்ட மற்ற எந்தப் பணியைக்காட்டிலும் சற்றுக் கடினமானப் பணியாகவே இப்போது நாங்கள் கொடுக்கப்போகும் பணி இருக்கும்'' என்றார்.

லெவ்வும், ரெபெக்காளும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

''லெவ், அடால்ஃப் ஹிட்லர் ஜீவனுக்குத் திரும்பும்போது, நீங்கள் அவரை வரவேற்க உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். ரெபெக்காள், உங்களை ஹிட்லரின் அன்புக்குரியவர்களில் ஒருவரான ஈவா ப்ரான்னை வரவேற்கக் கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் ஜீவனுக்குத் திரும்பும்போது அவர்களை மரியாதையுடன் வரவேற்க, உங்கள் இருவரையும் அனுப்புவதற்கு நாங்கள் பிரியப்படுகிறோம் என்பதை உங்களிடம் தெரிவிக்கிறோம்'' என்றார்.

லெவ், தனது நாற்காலியின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான். பலவிதக் கொடுமையான காட்சிகள் அவனது சிந்தைக்குள் தோன்ற ஆரம்பித்தன. கீட்டோவில் (யூதர்களின் குடியிருப்பு) இருந்து, ட்ரெப்ளிக்கா, ஆஸ்விட்ஸ் மற்றும் டச்சாவுக்குச் சென்ற நெரிசலான ரயில்களின் ஒவ்வொரு படுக்கையிலும் சுமார் நான்கு அல்லது ஐந்து நபர்களுடன், வரிசையாகப் போடப்பட்டிருந்த கனமான மரப்பெஞ்சுகள், பயம் மற்றும் விரக்தி நிறைந்த கண்கள், ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த எலும்பும் தோலுமான நிர்வாணமான உடல்கள், அவ்வுடல்களை எரிப்பதற்காக் கொண்டுச் செல்லப்பட்ட சக்கர வண்டிகள், நாசி ஸ்வஸ்திகா கொடி காற்றில் அசையும்போது, கறுப்பு மீசையைக் கொண்டிருந்த அந்த நபர், ஜெர்மனியச் சிப்பாய்களின் அணிவகுப்பில் கலந்துகொண்டிருந்த வெறித்தனமானப் பார்வையாளர்களுக்கு முன்பாக, தனது நீண்ட வலது கரத்தை நீட்டி, குதிங்கால்களைத் தூக்கி ''கிளிக்'' என்னும் சத்தத்தை எழுப்பியவாறு கொடிக்கு சல்யூட் செய்யும் காட்சி. இவைகள் அனைத்தும் லெவ்வின் மணக்கண்ணில் தோன்றின.

ரெபெக்காள், தனது முழங்கையை நாற்காலியில் வைத்து அமர்ந்தவாறு, நிமிர்ந்து முற்பிதாவாகிய யோவானைப் பார்த்தாள். பின்பு அமைதி காக்கும் எண்ணத்தோடு தனது இரு கரங்களையும் சேர்த்து இணைத்து தனது மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்தாள்.

"நாங்கள் யூதர்கள், ஹிட்லரோ யூதர்களைப் பன்றிகளைப்போல் நினைக்கிறவர். அவர் நமது ஜனங்களில் சுமார் ஐந்து மில்லியன் ஜனங்களைக் கொன்றிருக்கிறார். அவர் உயிர்த்தெழும்போது நாங்கள் அவர்களுடன் இருந்தால், ஹிட்லரும், ஈவாவும் எங்களைப் பிரச்சனைக்குரிய நபர்களாகவே கருத வாய்ப்பிருக்கலாம் அல்லவா?" என்று லெவ் கேள்வி எழுப்பினான்.

"நீங்கள் செல்லவேண்டும் என்பது கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் விருப்பம். அவர்கள் நன்கு யோசித்தே இந்த முடிவை எடுத்திருப்பார்கள் என்று எங்களுக்குத் தெரியும்" என்று முற்பிதா யோவான் கூறினார்.

ரெபெக்காள் பதிலாக எதுவும் கூறவில்லை. தனது நாற்காலியை இறுகப் பற்றியவாறு அமர்ந்திருந்ததால், லெவ்வினுடைய விரல்கள் இரத்த ஓட்டமின்றி வெளிரிப்போய் இருந்தன.

"ஹிட்லர் பிறந்த ஊரான ஆஸ்ட்ரியாவில் இருக்கும் பிரானாவ் என்ற நகரத்திலேயே, அவர் மீண்டும் ஜீவனுக்குள் உயிர்த்தெழுப்பப்படுவார். வெறுப்புணர்வு என்ற நச்சுத்தன்மைக்கு அவர் அடிமையாய் இருப்பதால், அப்படிப்பட்ட மனநிலையைக் கொண்டிருக்கும் ஜெர்மனியர்களையும், அவரது நச்சுத்தன்மை எளிதில் பாதிப்படையச் செய்யலாம். அதனால் நாங்கள் அவர் ஜெர்மனியில் உயிர்த்தெழுவதை விரும்பவில்லை. அவர் மாறுவதற்கான முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்பட்டால்தான் அவருடைய கல்லான இருதயம் சதையான இருதயமாக மாறுவதற்கான சாத்தியங்களைப் பெறமுடியும். அவர் மிகக் கொடுமையானத் தீமைகளை செய்திருந்தபோதிலும், அவரால் தனது ஜீவனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளமுடியும். அவருக்கு மிகுந்த கசப்புணர்வு கொண்ட மனசாட்சி இருப்பதினால், அதுவே அவருக்கு கடினமானதொன்றாக இருக்கும்" என்று முற்பிதாவாகிய யோவான் தொடர்ந்தார்.

இந்தப் பணியை நீங்கள் ஏற்க விரும்பினால், இன்றிலிருந்து ஒன்பது மாதங்களுக்குப் பிறகு, உங்கள் முதல் பயணத்தின்போது முன்பு நீங்கள் சந்தித்த நபர்களையும், மேற்கொண்ட திட்டங்களையும் மீண்டும் பார்வையிடுவதற்குச் செல்வீர்கள். அடுத்த இரண்டு மாதங்கள் கழித்து பிரானாவிற்குப் பயணம் செய்வீர்கள். அங்கு ஹிட்லர் மற்றும் ஈவாவிற்கு வீடுகளைக் கட்டுவீர்கள். ஆனால் இந்தக் கோரிக்கையை ஏற்க உங்களை யாரும் வற்புறுத்தமாட்டோம். இது உங்களது தனிப்பட்ட விருப்பமே" என்று முற்பிதா ஏனோக்குக் கூறினார்.

"தங்களது கைகளில் அதிக அளவிலான இரத்தக் கரையோடு உள்ள அவர்களைக் கையாளுவதற்கு, நான் தகுதியானவள் அல்ல என்பதுபோல் உணர்கிறேன். அநேகவற்றில் நாங்கள் அவர்களைவிட வித்தியாசமானவர்கள். அவர்களை எப்படிச் சமாளிப்பது என்று எனக்குத் தெரியாது" என்று ரெபெக்காள் பெருமூச்சு விட்டவாறு கூறினாள்.

"ஒருவேளை அவர்கள் தோற்றுவிட்டால், நீங்கள் தகுதியானவர்களாக இல்லை என்பதாலேயே அவர்கள் தோற்றுவிட்டார்கள் என்று அர்த்தப்படாது. அவர்களின் பாவங்களை அவர்கள் ஒத்துக்கொள்வதற்கும், தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள நாடுவதற்கும், மேலும் அவர்கள் யாருடைய ஜீவனை அழித்தார்களோ அவர்களின் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும், அவர்களுக்கு நியாயமான வாய்ப்பைக் கொடுக்கும் பொறுப்பு மட்டுமே உங்களுடையதாயிருக்கும். கிறிஸ்துவினுடைய அன்பின் ஆழம் நமக்குள் கடந்துச்செல்வதைப் போலவே, அவர்களுக்குள்ளும் செல்கிறது."

"நீங்கள் தீர்மானம் எடுக்க ஒருவார கால அவகாசம் இருக்கிறது. ஷாலோம்" என்று கூறியவாறு முற்பிதா ஏனோக்கு அமைதியாக நீண்ட நடைபாதையை நோக்கி நடந்தார்.

*"உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்."*
**(மத்தேயு 23:11)**

# அத்தியாயம் - 31

ஒரு வாரத்திற்குப் பிறகு லெவ்வும், ரெபெக்காளும் முற்பிதாவாகிய ஏனோக்கைச் சந்தித்தனர். "நீங்கள் எங்களிடம் செய்யும்படிக் கேட்டுக்கொண்ட பணியை ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் முடிவெடுத்துள்ளோம்" என்று தங்களது விருப்பத்தை முற்பிதா ஏனோக்கிடம் தெரிவித்தனர்.

## அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கங்கள்

"நீண்ட காலமாகவே நாங்கள் இதைக் குறித்து யோசித்து வருகிறோம்" என்று முற்பிதா ஏனோக்குக் கூறினார். "முதலாவதாக ஹிட்லர் உயிர்த்தெழுந்து வரும்போது, அவருக்கு உதவ ஜெர்மனியர்களில் ஒருவரும் ஆர்வமாக இல்லை. அவரை மறைமுகமாக விரும்பக் கூடியவர்கள் இன்னும் இருக்கின்றனர். அவ்வாறு விரும்புபவர்கள் ஹிட்லருக்காக அனுதாபம் கொள்ளுவார்கள். சிலர் அவருடன் தொடர்பு வைத்துக்கொள்ளுவதற்கு வெளிப்படையாகவே விரும்பலாம். ஜெர்மன் ஜனங்களுக்கு, அவர் சொல்லொணாத் துன்பங்களை ஏற்படுத்தினார் என்ற உண்மை அனைவருக்கும் தெரிந்துவிட்டதால், இப்போது அவர் ஒரு வீழ்ந்த மாவீரனாகவே இருக்கிறார். உலகத்தை ஆள வேண்டும் என்பதற்கான, அவரது கொடூரமானச் சதித்திட்டத்தின் விளைவாக மில்லியன் கணக்கானோர் மரித்தனர். அவர் தன்னையே கட்டுப்படுத்த முடியாத ஒரு நபராகவே இருந்தார். பிறர் மீது வெறுப்பும், கோபமும் அவர் கொண்டிருந்தார். போரில் அவர் தோற்று விடுவார் என்பதை அவரது படைத் தளபதிகள் அறிந்திருந்தனர். அவர் வெற்றிபெறுவதற்கான நம்பிக்கை இல்லாதபோதிலும், ஜெர்மன் இளைஞர்களின் வாழ்வை வீணாக்குகிறார் என்பதையும் அறிந்திருந்தனர். சரணடைவதற்குப் பதிலாக ஹிட்லர், ஜெர்மனியின் கடைசி நபரைக்கூட இழப்பதற்குத் தயாராக இருந்தார். இப்போது பிரகாசிக்கும் சத்திய வெளிச்சத்தில் அவர் ஒரு முட்டாளாகவே தெரிகிறார்."

இந்தப் பணியைச் செய்வதற்கு மற்றவர்களைக் கேட்டிருக்க முடியும். எங்களை மகிழ்விப்பதற்காகச் சிலர் தன்னார்வத் தொண்டு செய்வதற்கு முன்வந்திருக்கலாம். வீடுகளைக் கட்டுவதில் சிக்கல்கள் ஏற்படாது, அவைகளை சுலபமாகவே கட்டிமுடித்து விடலாம். தான் செய்த பாவங்களால் பாதிப்படைந்தவர்களை எதிர்கொள்வதற்கு, பயந்து வாழ்பவராகவே ஹிட்லர் இருப்பார். ஏனென்றால் தன்னுடைய வழியில் குறுக்கிடும் யார்மீதும் அவர் பரிதாபம் காட்டியதில்லை. சிறிதளவுகூட இரக்கமில்லாமல் தனது சொந்த ஜனங்களையே கொன்றிருந்தார். அநேக சர்வாதிகாரிகள் நடந்துகொள்வதைப் போலவே, அவரும் மற்றவர்களின் கழுத்தை அறுப்பதன் மூலமும், முதுகில் குத்துவதன் மூலமுமே அதிகாரத்தில் உயர்ந்த நிலையை எட்டி இருந்தார்" என்று முற்பிதா யோவான் தெரிவித்தார்.

"உலக சரித்திரத்தில் ஹிட்லரைப்போல வேறு எந்த ஒரு தலைவரும், ஒரு தேசத்தினை இந்தளவு மதிமயக்கித் தனக்குச் சாதகமாக இருக்கும்படி வைத்திருந்தது இல்லை. மதரீதியாகவும், சிலரைப் பொறுத்தவரை இது ஒரு சாதாரணமானக் காரியமாகவே இருந்தது. ஏனெனில் அவர்கள் பரலோக ஸ்தானம் தங்களுக்கு மட்டுமே உரியது என்று மற்றவர்களை மதிமயக்கி வைத்திருந்தனர். தங்களுக்கே எல்லா விதமான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கற்பனைகளைக் கொண்டிருந்தவர்கள், ஜீவனுக்குத் திரும்பும்போது கடுமையான சிக்கல்களைச் சந்திக்க நேரிடும். அவர்கள் தங்களது அதிகாரம், கௌரவம், செல்வாக்கு மற்றும் சலுகைகள் அனைத்தையும் இழந்தவர்களாக, தங்களது பாவங்களைத் தாங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் உள்ளவர்களாகவே, ஜீவனுக்குத் திரும்புவார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். மற்றவர்களால் போற்றப்பட்டதிலிருந்து, மற்றவர்களால் இழிவாகக் கருதப்பட்டது வரை அனைத்தையும் உணர்ந்தவர்களாகவே ஜீவனுக்குள் திரும்புவார்கள். "கர்த்தருடைய வழிகள் அனைவருக்கும் சமமானவை" என்பதை நினைவில்கொள்ளுங்கள்" என்றார்.

"அவர்கள் இருவரும் நாங்கள் யூதர்கள் என்பதைத் தெரிந்துகொண்டால், அவர்களுக்கு உதவுவதிலிருந்து எங்களை திரும்பிச் செல்லவேண்டும் என்று கோரிக்கை எழுப்ப மாட்டார்களா?

அவர்களது வாழ்க்கையில் அவர்களுக்கு இருந்த குணாதிசயமான வெறுப்புணர்ச்சியோடேதான் அவர்கள் ஜீவனுக்குத் திரும்புவார்கள். கல்லறையில் உறங்கிக்கொண்டிருந்த வேளையில் அவர்களுக்குள் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பில்லை அல்லவா?'' என்று லெவ் கேள்வி எழுப்பினான்.

''உண்மைதான், அவர்கள் கல்லறையில் இருக்கும்போது மாறியிருக்க முடியாது'' என்று முற்பிதா ஏனோக்கு ஒப்புக்கொண்டார். ''இருப்பினும் அவர்கள் மரிப்பதற்கு முன்பாகவே, அவர்களின் சதித்திட்டங்கள் மற்றும் கொடூரமானக் காரியங்களே, அவர்களைச் சிதைத்து சாம்பல் ஆக்கியதை, தங்களது கண்களுக்கு முன்பாகவே அவர்கள் கண்டிருக்கிறார்கள். ஹிட்லரின் தளபதிகள் ஜெர்மனியிலிருந்து தப்பிப்பதற்காக, சாதாரண ஜனங்களின் உடைகளை அணிந்துகொண்டு தப்பித்தனர். ஹிட்லருடைய இராஜ்யம் அழிவுக்கு உள்ளாகியிருந்தது. மேலும் சரணடைவதற்கு அவர் மறுத்தது, ஜனங்களின் மீது இன்னும் பேரழிவினைக் கொண்டு வந்தது என்பதை அநேகர் அறிந்துகொண்டனர். வீரர்கள் போர் நெறிமுறைகளை மீற அறிவுறுத்தப்பட்டிருந்தனர் மற்றும் தனது புகழ்பெற்ற ஆரிய இனம் எப்படியேனும் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கையில் ஹிட்லர், பல ஜெர்மனியர்களை அழித்துவிட்டார். அது மட்டுமல்லாமல் தான் செய்ததை ஒப்புக்கொள்ள விரும்பாத, தைரியமில்லாத கோழை அவர். ஹிட்லர் மற்றும் ஈவா இருவருமே தற்கொலை செய்துகொண்டனர். ஜனங்களில் பலர் அவர்களை வெறுத்தனர்; செம்படையால் தாங்கள் தெருக்களில் இழுத்துச் செல்லப்படுவோம் என்று நன்கு அறிந்திருந்ததால், அவர்கள் தற்கொலை முடிவிற்கு வந்தார்கள்'' என்றார்.

''சரிதான். சில நேரங்களில் நாம் எவ்வாறு இறக்க விரும்புகிறோம் என்பதை நாமே தேர்ந்தெடுப்பது போன்றக் காரியமாகவே இந்த நிகழ்வு இருக்கிறது. பற்றி எரிந்துகொண்டிருக்கும் ஒரு கட்டடத்தினுள் ஜன்னலின் அருகில் நின்றுகொண்டிருக்கும் ஒரு நபர், ஜன்னலில் இருந்து குதித்து இறந்தால் நாம் அதை தற்கொலை என்று கூறமாட்டோம். அவனுக்கோ அல்லது அவளுக்கோ தங்களது மரணம் குதிப்பதினால் நிகழ வேண்டுமா அல்லது நெருப்பினால் சுட்டெறிக்கப்பட்டு நிகழ வேண்டுமா என்பதைத் தீர்மானிக்கும் வாய்ப்பு இருக்கிறது. ரோமானியர்களின் கைகளில் சிக்கி சித்தரவதைப்பட்டோ அல்லது சிலுவையில் அறையப்பட்டோ, மெதுவாக மரணத்திற்குள் செல்வதைவிட உடனடி மரணமே சிறந்தது என்றுதானே யார் வேண்டுமானாலும் நினைப்பார்கள். தற்கொலையை அதனாலேயே அவர்கள் தேர்ந்தெடுத்தனர், அதனாலேயே அவர்கள் சரணடைவதற்கு மறுத்து, தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டனர். ஹிட்லர் தப்பித்துக்கொள்வதற்கு எளிமையான வழிமுறையைத் தேர்ந்தெடுத்ததாக நான் நினைக்கிறேன். அவர் செய்தக் குற்றங்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பை உயிர்த்தெழுதல் ஏற்படுத்திக் கொடுக்கும் என்று அவர் அறிந்திராததினாலேயே அவ்வாறு செய்திருக்கிறார். ஒருவேளை பெர்லினை, அமெரிக்கர்கள் கைப்பற்றி இருந்தால் ஹிட்லரும், ஈவாவும் அவர்களிடம் சரணடைவதைச் சாத்தியமாகியிருக்கலாம். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. ரஷ்யா, பெர்லினைக் கைப்பற்றியது. ரஷ்யர்கள் மிதமான தண்டனைகளைத் தங்களுக்கு அளிக்கப் போவதில்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். ரஷ்யர்கள் இரக்கத்துடன் செயல்படுவதற்கான மனநிலையில் இல்லை'' என்று லெவ் கூறினான்.

''சிறந்த ஒப்புமை, லெவ்'' என்று முற்பிதா யோவான் தொடர்ந்தார். ''அதனாலேயே ஹிட்லருடைய கட்டுப்படுத்த முடியாத கோபத்தையும், ஆவேசத்தையும் கையாளக்கூடிய, பகுத்தறியும் திறன்கொண்ட சிந்தை, உங்களுக்கு இருப்பதாக நாங்கள் கருதினோம். அவர் இனி ஒரு சர்வாதிகாரி அல்ல என்பதை உணரத் தொடங்கியவுடன், ஒருவேளை அவர் தெளிவாகச் சிந்திக்கக் கூடியவராக மாறலாம். அநேகமாக முதலில் தற்கொலைச் செய்து கொள்ளும் எண்ணம் கூட அவருக்கு இருக்கலாம். அவர் கொன்ற பல மில்லியன் கணக்கான ஜனங்களைச் சந்திக்க ஹிட்லர் கண்டிப்பாக விரும்ப மாட்டார். அவருடைய எண்ணங்களின் படி, அவரைப் பொறுத்தவரையில் உலகில் நடந்த அனைத்துத் தீமைகளுக்கும் காரணமானவர்கள் யூதர்களே! தன்னோடு இருந்து, தன்னைக் கவனித்துக்கொள்பவர் ஒரு யூதன் மற்றும் அந்த யூதன் தன்னைப் பொது ஜனங்களுக்கு முன்பாக அழைத்துச்சென்று பொது ஜனங்களின் வெறுப்பையும், கோபத்தையும் தான் பெற்றுக்கொள்ளுமாறு செய்யவில்லை என்பதை அறியத் தொடங்கும் வேளையில் ஹிட்லர் சற்று அமைதி அடையலாம். இனி அவரது தொண்டர்களாகச் செயல்படப் பாதுகாப்பாளர்கள் இருக்கப்போவதில்லை. அவர் சிறகுகள் பிடுங்கப்பட்ட பறவைபோலவும், நகங்கள் வெட்டப்பட்ட விலங்குபோலவுமே இருப்பார். அவருடைய சத்தம் வெறும் சத்தமாக மட்டுமே இருக்கும்'' என்று முற்பிதா ஏனோக்குக் கூறினார்.

“ஹிட்லர் திரும்பவும் ஜீவனோடு வாழ்வதற்கானச் சிறந்ததொரு வாய்ப்பை வழங்குவதே நமது நோக்கம் ஆகும்” என்று முற்பிதா ஏனோக்கு மேலும் கூறினார். அவர் வெறுப்புணர்ச்சி மிகுந்த மனிதராக இருந்தார். அதனால் அவரது நிலை பரிதாபகரமானதாகவே இருந்தது. அவர் அதிகாரம் செலுத்துபவராகவும் ஒருவரின் முழுமையான அன்பையும், கவனத்தையும் தான் மட்டுமே பெற்றுக்கொள்ள விரும்புகிறவராகவுமே இருந்தார். பயமுறுத்துபவராக, மற்றவர்களைத் தவறான முறையில் பயன்படுத்துபவராக இருந்தார். ஹிட்லர் எவ்வாறு பிரேதக் குழிக்குள் சென்றாரோ, அவ்வாறே திரும்பி வருவார் என்பது நமக்குத் தெரியும். மரணத்தில் அவர் நித்திரைக் கொள்ளும்போது, எந்த மாற்றமும் நிகழாது” என்றார்.

“நாங்கள் உங்கள் இருவரையும் தேர்ந்தெடுத்ததற்கானக் காரணம், அன்புடனும், அதே வேலையில் கண்டிப்புடனும் ஒருவரை எவ்வாறு கையாள்வது என்பது உங்களுக்குத் தெரியும் என்பதாலேயே ஆகும். நீங்கள் கடினமானச் சூழ்நிலையில் இருந்த நூற்றுக்கணக்கானவர்களையும் கையாண்டு இருக்கிறீர்கள். உங்களை வெறுத்த மற்றும் துன்புறுத்த நினைத்தவர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற்று வெற்றி கண்டுள்ளீர்கள். ஹிட்லரும், ஈவாவும் ஜீவனுக்குத் திரும்பும் ஆரம்பவேளையில், நீங்கள் புதிய வழிமுறைகளைக் கையாள வேண்டி வரலாம். அவர்கள் இருவரும் எதையும் உங்களுக்குக் கட்டளையிட நீங்கள் அனுமதிக்கக்கூடாது. அவர்கள் கிறிஸ்துவின் இரக்கத்தினாலேயே ஜீவனோடு இருக்கிறார்கள் என்பதை, எவ்வளவு விரைவாக உணர்ந்துகொள்கிறார்களோ அவ்வளவு நன்மையாக அமையும். பிற ஜனங்களைத் தவறானமுறையில் பயன்படுத்தி, அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பழைய அணுகுமுறை இனி வேலைசெய்யாது” என்று முற்பிதா யோவான் கூறினார்.

“இந்தச் சவாலை வெற்றிகரமாக முடிப்பதற்கு மனித சுபாவங்களைக் குறித்துப் போதுமான அளவு அறிவினை, நீங்கள் இருவரும் பெற்றிருக்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள் இதைச் சவால் என்றே கூறுகிறோம். ஏனென்றால் ஹிட்லர் போன்ற ஒருவருக்கு யதார்த்தமான வாழ்க்கைக்குள் வருவதற்கு உதவுவதற்கு நீங்கள் உங்களின் முழுத் திறமையையும், பொறுமையையும் செலவிட வேண்டியதிருக்கும். இப்போது எந்த அதிகாரமும் இல்லாமல், உதவிக்கும், வழிகாட்டுதலுக்கும் உங்களைச் சார்ந்திருப்பது என்பது அவருக்கு வேதனையான ஒன்றாகவே இருக்கும். பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் அவரை வெறுப்பதையே தங்களது சந்தோஷமாக கருதுகிறார்கள் என்பதையும், அவரைக் காயப்படுத்துவதற்காகவோ, கொலை செய்வதற்காகவோ சந்தோஷமாகத் தங்களின் உயிரையும் கொடுப்பார்கள் என்பதையும் அவர் கட்டாயம் அறிந்துகொள்வார். ஆவிக்குரிய வல்லமைகள் மற்றவர்களைப் பாதுகாப்பதைப் போலவே, எந்தச் சேதமும் ஏற்படாமல் இவர்களையும் பாதுகாக்கும் என்பதை ஹிட்லர் மற்றும் ஈவா ஆரம்பத்தில் அறிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. விரைவிலேயே அவர்கள் அதை அறிந்து கொள்வார்கள். ஆரம்பத்தில் அவர்களை, ஓர் ஆக்ரோஷமான நாயை எவ்வாறு குட்டையான கயிற்றில் கட்டி இறுக்கப் பிடித்துக்கொண்டு வழிநடத்த வேண்டுமோ, அவ்வாறே வழிநடத்த வேண்டும். அமைதியானவராகவும், மற்றவர்களுடன் நாகரிகமாக நடந்துகொள்பவராகவும் ஹிட்லர் மாறுவார் என்று நம்புகிறேன்” என்று முற்பிதா ஏனோக்கு மேலும் கூறினார்.

## ஈவாவைப் பற்றி என்ன?

“ஹிட்லருடைய மந்திரச் சக்திக்குக் கட்டுண்டவர் போலவே ஈவா இருந்தார். ஹிட்லரின் உண்மைக் காதலாக, தான் இல்லை என்பது அவருக்குத் தெரியும். இருப்பினும் ஹிட்லரின் துணை என்ற பாத்திரத்தை ஏற்றுக்கொண்டார். ஈவா ஏறக்குறைய ஹிட்லரைப் போலவே செயல்பட்டார். ஆனால் அதற்கானக் காரணம் ஜெர்மனி தேசத்தை ஆளுபவரும் மற்றும் விரைவில் முழு உலகையே ஆளுகை செய்பவராக மாறுவேன் என்ற நம்பிக்கையை ஹிட்லர் பெற்றிருந்தார். இத்தகைய நம்பிக்கையைப் பெற்றிருந்த மனிதருடன் இணைந்து இருப்பதின் மேல் உண்டானக் கவர்ச்சியே ஈவாவை அவ்வாறு செய்யத் தூண்டியது. கெலி என்ற பெண்ணே ஹிட்லரின் வாழ்க்கையில் அவரது காதலியாக இருந்தவர் என்பது ஈவாவிற்குத் தெரியும். கெலி இளவயதுப் பெண்ணாக இருந்தார். அதிகாரம் மிக்க அரசியல் பிரமுகரின் ஆதரவில் இருப்பதை கெலி விரும்பினாலும், அவர் இளம் வயதுடைய ஆண்களுடன் உல்லாசமாக இருப்பதையே அதிகம் விரும்பினார். இது ஹிட்லர், கெலியின் மீது பொறாமை கொள்வதற்கானக் காரணமாக அமைந்தது. அதனால் அவர் கெலியை முழு நேரமும் கண்காணிப்பதற்காக, SA நாசி அமைப்பைச் சேர்ந்தவர்களைப் பணியில் அமர்த்தினார். கெலி, தான் சிக்கிக் கொண்டதாக உணர்ந்தார். ஒரு முறை ஹிட்லர் வேறு ஒரு இடத்திற்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, கெலி வீட்டை விட்டு

வெளியேறுவதற்கு ஹிட்லர் தடை விதித்திருந்தார். இதனால் கெலி, தனது இருதயத்தில் தானே சுட்டுக் கொண்டு மரித்தார். அதனால் ஹிட்லர் மனம் உடைந்தார். இதுவே ஹிட்லரைச் சோர்வடையச் செய்தது. அதனால் கெலியின் நிழலாக, ஈவா வாழும் படியானது. ஹிட்லர் போன்று தொல்லை கொடுப்பவராக ஈவா இருக்க மாட்டார். இருப்பினும் ஈவா தானாகவே சிந்தித்து செயலாற்றுவதற்கு, சிறந்த ஒழுக்க நெறிமுறைகளில் அதிகமாக வளர்ச்சியடைய வேண்டும் என்று நினைக்கிறேன்" என்று முற்பிதா ஏனோக்குக் கூறினார்.

"ஹிட்லர் ஒரு நோய்வாய்பட்ட மனிதர் என்று உங்களுக்கு தெரியும், லெவ். அவர் முழுமையான ஜீவனோடும், ஆரோக்கியத்தோடும் திரும்புவார். ஆனால் அவருடைய குணலட்சணத்தைப் பொறுத்தவரைச் சற்றுக் கடினத்தன்மை கொண்டவராகவே இருப்பார். இன்னும் முக்கியமாகச் சொல்லவேண்டுமென்றால் அவருடைய வாழ்க்கையில், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் அவர் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார். ஹிட்லருடைய செயல்கள் சாத்தானின் செயல்களோடு இணக்கமாகக் காணப்பட்டதினாலேயே, சாத்தான் ஹிட்லருக்குள் வேரூன்றி ஆழமாக ஆட்கொண்டான். இப்படியானச் செயல்கள் மிக அரிதாகவே நடக்கும். உதாரணமாக "இயேசு துணிக்கையை யூதாஸிற்குக் கொடுத்தப் பிறகு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான்" (யோவான் 13:27). அதேபோல இன்னும் சிலரையும் சாத்தான் ஆட்கொண்டிருந்தான்" என்று முற்பிதா ஏனோக்கு மேலும் கூறினார்.

"ஆஸ்திரியாவில் உள்ள, அவர் பிறந்த ஊரான, பிரானாவ் என்னும் கிராமத்திலேயே ஹிட்லர் ஜீவனுக்குள் திரும்புவார். அவர் மீது பரிதாபம்கொள்ளும் அநேக ஆதரவாளர்களை அவர் பெற்றிருக்கிறார். ஆனால் அவர்களில் பலர் இப்போது ஆஸ்திரியாவில் இல்லை. ஹிட்லர், ஜெர்மனியில் ஜீவனுக்குள் திரும்பினார் என்றால், தங்களது அதிகாரத்தைத் தீய வழிகளில் பயன்படுத்தி, மற்றவர்களை வெறுக்கவும், துன்பப்படுத்துவும் அவரால் தவறாக வழிநடத்தப்பட்ட, அவரது பின்னடியாளர்கள் பலரை அவர் காண நேரிடலாம். மேலும் எந்தவொரு தீமையானச் செயலிலிருந்தும் அவரை எளிதில் தடுக்கமுடியும் என்றாலும், மற்றவர்களை வெறுக்கும் அவரது நச்சுத்தன்மையுள்ளப் பழக்கமானது, இந்த ஆரோக்கியமான சமூகச் சூழ்நிலையில் அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, இந்தத் தீய குணங்கள் தலைதூக்காமல் இருக்க வேண்டுமெனில் ஹிட்லர், ஜெர்மனியில் ஜீவனுக்குள் திரும்பாமல் இருப்பதே நல்லது. அவரது கல்லான இருதயத்தைச் சதையான இருதயமாக மாற்றுவதற்கு, அவருக்கு முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அவரால் மாறமுடியும் என்றாலும், அவர் உணர்வற்ற மனசாட்சியைக் கொண்டிருப்பதால், மனம் மாறுவது என்பது கடினமானதொன்றாக இருக்கும். நீங்கள் விரோதம், கோபம் போன்ற குணங்களை உடையவர்களைச் சமாளிப்பதில் தனித்தன்மை பெற்றிருப்பதை வெளிப்படுத்தியுள்ளீர்கள், லெவ். அதனாலேயே நாங்கள் இந்த வேலையைச் செய்வதற்கு உங்களைத் தேர்ந்தெடுத்தோம்" என்று முற்பிதா யோவான் தொடர்ந்தார்.

"நாங்கள் இதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும்? ஹிட்லர், ஜீவனுக்குள் திரும்பியுள்ளார் என்ற செய்தி அவரை வெறுப்பவர்களையும், அவர் மீது அனுதாபம் காட்டுபவர்களையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வரும். தங்களது கைகளால் ஹிட்லரின் கழுத்தை நெரித்து, அவரைக் கொல்லுவதைத் தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியமாகவும், அதற்காக மகிழ்ச்சியுடன் மரிப்பதற்கும் கூடத் தயாராக இருக்கும் ஜனங்களும் இன்னும் உள்ளனர். அந்த ஜனங்கள் அத்தகையக் கொடூரமான, இரக்கமற்ற வழிகளில் தங்களின் முழுக்குடும்பத்தையும் இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஹிட்லர் போன்ற அயோக்கியன் மீண்டும் ஜீவன் பெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நன்கு திட்டமிடப்பட்ட மரண முகாம்களை உருவாக்கியிருந்த, மிகக்கொடிய மனிதனை எப்படி இந்தப் பூமியில் மீண்டும் ஜீவிக்க அனுமதிக்க முடியும்? இவ்வளவு கொடிய எண்ணம் கொண்டவர்களை இதுவரை நான் கையாண்டதில்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக நான் ஒரு யூதன், இதை அவர் அறிந்துகொள்ளும்போது கோபத்தில் அவரது இரத்தநாளங்கள் வெடிக்க நேரிடலாம்" என்று லெவ் தன் கேள்விகளை முன்வைத்தான்.

"லெவ், நீங்கள்தான் அவரது வீட்டைக் கட்ட உதவினீர்கள் என்பதை ஹிட்லர் அறிந்துகொள்ளும்போது, அவர் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளதாக எண்ணுவார். அவருக்கான வீட்டை இரகசியமாகக் கட்டுவதாக இருந்தால், பல தன்னார்வலர்களை அவர் பெற்றிருக்கக் கூடும் என்பது உண்மைதான் என்றாலும், இப்படிப்பட்ட மோசமான நபருக்காக வீட்டினைக் கட்ட முன்வந்தது ஆணா அல்லது பெண்ணா என்பதை அறிந்துகொள்ளுவதற்கும் சிலர் விரும்புவார்கள். அதைப்போலவே நீங்கள் ஒரு யூதன் என்று ஈவா பிரான் சந்தேகிக்க மாட்டார். சிறிது

நாட்களுக்காவது சந்தேகிக்க மாட்டார். என்ன நடந்தது என்பதையும், நாசித் திட்டத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு கீழ்த்தரமாக செயல்பட்டார்கள் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். ஹிட்லர் பதவிக்கு வந்தவுடன், அவர் முதலில் செய்தது வைமர் குடியரசின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்ததே என்பது அவருக்குத் தெரியும். அனைத்துச் சட்டத் திட்டங்களையும் விட தானே உயர்ந்தவர் என்று ஹிட்லர் தன்னைக் கற்பனை செய்திருந்தார். ஆனால் தேவன் தன் சொந்த நீதியைக் கொண்டு ஆளுமைசெய்கிறார் என்பதை அவர் மறந்திருந்தார். இப்படிப்பட்ட கொடூரமான மனிதனால், எப்படி அனைத்துச் சட்டங்களும் தனக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் என்று விரும்பமுடியும். இதுவே இரக்கமற்ற பேரரசர்கள் மற்றும் அரசர்களின் ஆளுமைதன்மையாக இருந்தது. இருதயத்தில் சற்றேனும் பெருந்தன்மை கொண்ட யாரொருவரும் இத்தகையத் தீயச் செயல்களைச் செய்யமுடியாது. அவர்கள் சாத்தானோடு இணக்கத்தில் இருந்தார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். தங்களுடைய தீயச் செயல்களை ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை வரும்போது, தங்களை மறைத்துக்கொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள். சொல்லப்போனால் இன்னும்கூட அநேகர் தங்களது தீயச்செயல்களை ஒத்துக்கொள்வதிலிருந்து தங்களை மறைத்துக் கொள்கிறார்கள்" என்று முற்பிதா ஏனோக்குக் கூறினார்.

"அனைவருமே தங்களது கடந்த காலத்திலிருந்து இவ்வளவு பெரிய மாற்றத்திற்குள் உடனடியாக வரமுடியாது. அவர்கள் தோல்வியுற்றால், அது உங்களுடைய தவறு அல்ல. பாவங்களை ஒத்துக்கொண்டு தேவனுடைய மன்னிப்பைப் பெறுவதற்கும், ஹிட்லரது தீயச்செயல்களால் மரித்துப் பல மில்லியன் கணக்கானோரின் மன்னிப்பைப் பெறுவதற்கும், ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குவதற்கு மட்டுமே நீங்கள் பொறுப்பாவீர்கள். ஹிட்லரைப் போன்றவர்கள் ஆரம்பத்திலேயே, புதியச் சூழலுக்கு கண்டிப்பாக எதிர்த்து நிற்பார்கள் என்பது உங்களுக்கு முன்பே தெரிந்த ஒரு காரியமாகத்தான் இருக்கிறது. அவர்கள் இடைவிடாது பொய் கூறுபவர்களாகவும், ஜனங்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்களாகவும், மிகவும் பெருமை வாய்ந்தவர்களாகவும், தங்களது தீயச் செயல்களை ஆதரிக்காத எவருக்கும் அக்கறையோ, இரக்கமோ காட்டாதவர்களாகவும் - மொத்தச் சீரழிவுக்கும் முடிவாக இருந்தனர். ஹிட்லர் தன்னுடைய குடும்பப் பெயரான, ஸ்கிக்ல் க்ரூபர் என்ற பெயரிலேயே உயிர்த்தெழுவார். விரைவிலேயே அவர் ஹிட்லர் என்பது தெரியவரும். ஆனால் இவ்வாறு உயிர்த்தெழுவது, புதிய சூழ்நிலைக்குள் தன்னைப் புகுத்திக்கொள்வதற்கு ஹிட்லக்கு வாய்ப்பாக அமையும். நாம் அனைவரும் அறிந்தபடி ஒருவர் ஜீவனுக்குத் திரும்பும்போது அவருக்கு சில சரிசெய்தல்கள் அவசியம். அனைத்தும் புதியதாகவும், பழக்கம் இல்லாததாகவும் இருக்கும். கூறப்போனால் பூரணராக இருந்த எங்களுக்கே புதிய உலகத்தின் தொழில்நுட்பத்தோடு இணங்குவதற்குச் சில நாட்கள் ஆனது" என்று முற்பிதா யோவான் தொடர்ந்தார்.

லெவ்வும், ரெபெக்காளும் சில நாட்களில் கிளம்புவதற்கு தயாராகும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்கள் முதலில் தங்களது முந்தைய வேலைகளில் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களைச் சமாளிப்பதற்குச் செல்வார்கள். லெவ்வின் பணியானது தொழில்நுட்பத் திட்டங்களைச் சரியான நேரத்தில் பெற உதவுவதும், புதிதாகத் தலைமை ஏற்றிருப்பவருக்கு அவர் ஒரு முதலாளியாக செயல்படாமல், ஜனங்களுடன் இணைந்து ஒரு குழுவாகப் பணியாற்றுவதற்குக் கற்றுக்கொடுப்பதாக இருந்தது. ரெபெக்காள் பல்வேறு செயல்பாடுகளில் உண்டாயிருந்த சிக்கல்களைச் சரிசெய்து அவர்களுக்கிடையேயான உறவினை மேம்படுத்த உதவ வேண்டும். இருப்பினும், இப்பணிகள் அவர்களது முக்கியப் பணிகளல்ல. இந்த இலக்குகளை அவர்கள் நிறைவேற்றியவுடன், ஹிட்லர் மற்றும் ஈவாவிற்கான வீடுகளைக் கட்டத் தொடங்குவார்கள். அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் தான் உயிர்த்தெழுவார்கள். ஹிட்லர் மற்றும் ஈவா இருவரும் சந்திப்பதைச் சில நாட்கள் தள்ளிப்போட வேண்டியிருக்கும்.

## அறிவியல் நிலையத்தை மீண்டும் பார்வையிடல்

அனைவரிடமும் விடைபெற்றப் பிறகு லெவ்வும், ரெபெக்காளும் இஸ்ரயேலுக்குப் பறந்தனர். ஒருவரும் அவர்கள் எங்குச் செல்கிறார்கள் என்பதைப் பற்றி, எதுவும் கேட்காதது அவர்களுக்கு நிம்மதியாக இருந்தது. பிரான்ஸ் ஸ்லீச்சர், அவர்களை விமான நிலையத்திலிருந்து அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தார். இவர்களை மீண்டும் சந்தித்ததில் அவர் மகிழ்ச்சியுடன் இருந்ததைக் காணமுடிந்தது. சென்றமுறை வந்தபோது லெவ் தங்கியிருந்த ஹோட்டலுக்கு அவர்களை, ஸ்லீச்சர் அழைத்துச்சென்றார்.

மறுநாள் காலையில் ரெபெக்காளை அழைத்துச் செல்வதற்கு அறிவியல் நிலையத்திலிருந்து ஒருவர் வந்தார். லூயிஸ் விக்னெட்தான் இங்கு மத குருவாக இன்னும் செயல்படுகிறாரா என்று எண்ணியவாறு, லெவ் தேவாலயத்தை அடைந்தான். அவன் உள்ளே நுழைந்ததும் பலர் அவனை அடையாளம் கண்டுகொண்டு அவனை வரவேற்றனர். அந்த வரவேற்பு அன்பான வரவேற்பாக இருந்தது. வழிபாட்டுச் சேவை தொடங்கியபோது, லூயிஸ் விக்னெட் அங்கு மத குருவாகச் சேவை செய்யவில்லை என்பது லெவ்விற்குத் தெரியவந்தது. அவன் அதைக் குறித்து எதுவும் கேட்காமல் துதிப் பாடல்களில் இதயப்பூர்வமாக கலந்துகொண்டான். அப்போது அங்கு இருந்த மதகுரு மிகச் சிறந்த பேச்சாளராக இருந்தார். அவர் கற்றிருந்தச் சத்திய வார்த்தைகளில் வேரூன்றி இருப்பவராகக் காணப்பட்டார். வழிபாட்டுச் சேவை அருமையாகவும், ஊக்கம் அளிக்கக்கூடியதாகவும் இருந்தது. அருமையான சேவைக்கு நன்றி கூறுவதற்காக லெவ் அவரிடம் சென்றார்.

"இவர்தான் லெவ் ஆரோன் என்று ஒருவர் என்னிடம் கூறினார். உங்களை மீண்டும் இங்கு வரவேற்கிறேன். இதுவரை உங்களைப் புகழ்வதைப் போல் வேறொருவரை இவர்கள் புகழ்வதை நான் கேட்டதில்லை. என்னுடைய பெயர் ஆண்ட்ரூ கான்ஸ்" என்றார்.

"உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி ஆண்ட்ரூ. லூயிஸ் விக்னெட்டிற்கு என்ன ஆயிற்று? நான் இங்கிருந்து கிளம்பும்போது, அவர்தான் இங்கு வழிபாட்டுச் சேவையை நடத்தினார்" என்று வினவினான்.

"ம்ம்ம்.. அவருடைய வழிபாட்டுச் சேவையை விரும்பும் ஆதரவாளர்களை அவர் இழந்து கொண்டே போனார். அதனால் யாரோ ஒருவர் தனக்குத் தண்ணீரில் விஷம் வைத்துக் கொடுத்துவிட்டதாக, அவரே பொய்யாகக் குற்றம் சாட்டிவிட்டு வெளியேறிவிட்டார். அவர் அநேகத் தேவாலயங்களில் வழிபாட்டுச் சேவையை நடத்துவதற்காக, மற்றவர்களின் ஆதரவைப் பெற முயன்றார். ஆனால் அது வெற்றிகரமாக ஒருபோதும் அமையவில்லை. அவர் இப்போது எந்த ஒரு வழிபாட்டுச் சேவைக்கும் செல்வதில்லை மற்றும் ஜனங்கள் அவருடையத் தலைமைத்துவத்தை விரும்பாததால் சற்று விரக்தியடைந்துள்ளார்" என்றார்.

"ஓஓ.. அவர் "ஜான் ரெயின் ஹார்ட்" என்பவரைத் தோற்கடித்தே வெற்றிபெற்றிருந்தார். ஜான் ரெயின் ஹார்ட், மிகச்சிறந்த மதகுரு. ஜான் இப்போது வேறு ஒரு தேவாலயத்தில் வேலை செய்துகொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். உங்களுக்கு அவரைத் தெரியுமா?" என்று லெவ் கேட்டான்.

"ம்ம்.... தெரியும். அவர் தேவனை அறிந்த மனிதர். தேவனுடைய வார்த்தைகளை நன்கு கற்று அறிந்தவர். அவர் தற்போது பணிபுரியும் தேவாலயம், இந்தப் பகுதியில் மிகப்பெரியது மற்றும் வளர்ந்து வரும் தேவாலயம் ஆகும். லூயிஸ் விக்னெட், முன்னாள் போதகர்களின் குழுவுடன் இணைந்து சில வீட்டுப் பிரார்த்தனைகளை நடத்துகிறார் என்று கேள்விப்பட்டேன். அவர்களில் ஒருவரும் மதகுரு என்ற அந்தஸ்தைப் பெறுவதில் வெற்றியடையவில்லை. அதனால் அவர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்தின் பேரிலான கூட்டங்களை நடத்துவதைத் தேர்வு செய்துள்ளார்கள். சில முன்னாள் போதகர்களின் பிரச்சனை என்னவென்றால், அவர்கள் அநேகரைத் தவறாக வழிநடத்திவிட்டார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளாததே ஆகும். அவர்கள் தேவனுக்குச் சேவைசெய்வதாகவே நினைத்தாலும், இந்த அற்புதமான திரும்பக்கொடுத்தலின் காலங்களைப் பற்றின ஆசீர்வாதங்களைக் குறித்து, அவர்களில் யாரும் ஜனங்களுக்குக் கற்பிக்கவில்லை. தேவனின் திட்டம் என்ன என்பதில் அவர்கள் தெளிவாக இல்லை என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஒருவேளை இனி ஒப்புக்கொள்ளலாம்" என்றார்.

சிறந்ததொரு ஐக்கியத்தைப் புதுப்பித்துக் கொண்டதற்குப் பிறகு, லெவ் அறிவியல் நிலையத்திற்குச் சென்றான். அந்தக் காலை வேளையின் அழகை ரசித்தவாறே வேலை இடத்தை நோக்கி நடந்தான். அங்கிருந்த ஒவ்வொன்றும் உயிரோட்டம் உடையதாய் இருந்தது. அநேகப் பழைய நகரங்கள் அகற்றப்பட்டிருந்தன. அவைகள் தோட்டத்துடன் கூடிய தனி வீடுகளாக மாறியிருந்தன. நகரத்தின் புகைமூட்டமும், அழுக்கும் நீங்கியிருந்தது. நிலப்பரப்பு முழுவதையும் பல மரங்களும், பூக்களும் நிரப்பியிருந்ததால் அனைத்தும் மிகவும் சுத்தமாகக் காட்சியளித்தன. ஹைட்ரஜனைக் கொண்டு ஓடும் புதிய கார்களும், டிரக்குகளும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக்கி இருந்தன. எஃகு அல்லது உலோகம் தயாரிப்பதில்கூட அதிக வெப்பநிலையைக் கொண்ட

ஹைட்ரோ ஆக்ஸி சக்தி பயன்படுத்தப்பட்டது. பழைய புகைமூட்டங்களும், மாசுபிடித்திருக்கும் மேகங்களும் மறைந்து இருந்தன. இருதயங்களை இவ்வளவு எளிமையாக தூய்மையாக்க முடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நினைத்தவாறே லெவ் நடந்தான்.

## ஜெஸி கோமர்

லெவ், சரியான நேரத்திற்கு அறிவியல் நிலையத்தை அடைந்தான். அலுவலக அறையை நோக்கி நடந்தபோது பலரால் இன்முகத்துடன் வரவேற்கப்பட்டான். ஒவ்வொருவரும் அவனிடம் வந்து, அவனது கைகளைப் பற்றிக் குலுக்கி, அவர்களுடைய அன்பை வெளிப்படுத்தினார்கள். சுமார் அரை மணி நேரத்திற்குப் பிறகு வரவேற்பு நிறைவுபெறத் தொடங்கியது. அதன் பின்பாக லெவ் பொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடுவித்தான். லெவ் மீண்டும் வந்திருப்பதில் பிரான்ஸ் ஸ்லீச்சர் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

லெவ் முன்பு அவரைக் கவனித்துப் பார்த்திருந்ததினால், பிரான்ஸிற்கு எவ்வாறு ஒரு நபரைக் கையாள்வது என்று தெரியும் என்பதை லெவ் அறிந்திருந்தான். இருப்பினும், அவரால் கல்வியறிவை வளர்த்துக்கொள்வதற்கான படிப்பினை தொடர முடியவில்லை என்பதால், மிகவும் சிக்கலானப் பிரச்சனை ஏற்படும்போது, அதனைச் சமாளிப்பதற்கான தொழில்நுட்ப அறிவு அவருக்கு இல்லாதிருந்தது. அவரது உதவியாளர் ஜெஸ்ஸி கோமரே தொழில்நுட்ப தேவைகளைச் சந்திப்பதில் முதலிடத்தைப் பெற்றிருந்தார். அதனால் அவர் முதலாளியாகுவதற்கு விரும்பினார். மேலும் அவர் ஜனங்களை முரட்டுத்தனமாக நடத்தினார். முற்பிதாக்கள் இதனைக் கவனித்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்குமாறு லெவ்வை இங்கு அனுப்பினர். லெவ் அறிவியல் நிலையத்திற்குள் நுழைந்த தருணமே, அங்கிருக்கும் பிரச்சனையை அவனால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

கூட்டத்தினரிடையே, அவர்கள் இதுவரையிலும் செய்த குறிப்பிடத்தக்கப் பணியை முதலில் பாராட்டுவதிலிருந்து லெவ் தனது பேச்சைத் தொடங்கினான்.

"அனைத்து விசுவாசிகளிடமும் காணப்பட வேண்டியதொன்றான, ஆசாரியத்துவத்தைப் பற்றி மார்ட்டின் லூதர் பிரசங்கித்தபோது, அது அவருடைய காலத்தில் இருந்த மத உலகத்தை ஆட்டம் காணச்செய்தது என்பது உங்களுக்குத் தெரியும். "ஒவ்வொரு தொழிலாளியுமே, முதலாளிதான்" என்று கூறுவதன் மூலமாக, நான் உங்கள் அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்கின்றேன். இன்னும் சில வருடங்களில் நீங்கள் அனைவருமே இந்தத் தொழிற்சாலையைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டியவைகளைத் தெரிந்துகொள்வீர்கள். அப்போது நீங்கள் தொழிற்சாலையை இயக்குவதற்கான உங்களது முறைகளைப் மாறி மாறிப் பெற்றுக்கொள்வீர்கள். நமக்குள் எந்தவிதமான போட்டியும் ஏற்படாது. அநாவசியமாக விமானங்களை நாம் உற்பத்திச் செய்ய வேண்டிய அவசியம் அப்போது இருக்காது. நம்மிடம் போதுமான அளவு விமானங்கள் இருக்கும் என்பதால், நாம் அவ்வப்போது தொழிற்சாலையின் செயல்பாடுகளை நிறுத்துவோம் அல்லது வேலை நேரத்தைக் குறைத்துக்கொள்ளலாம். வரமும், சாபமும் வரலாற்றின் ஒரு பகுதியாக இருந்தது. அனைத்துக் காரியங்களையும் செய்வதற்கான, சிறந்ததொரு அறிவைப் பரிசாகப் பெற்றவர்களாக அனைவரும் இருப்பதில்லை. ஆனால் இனி அனைவருமே சிறந்ததொரு அறிவைப் பெற்றுக்கொள்வார்கள். இன்னும் ஒரு வருடத்திற்குள் ஒவ்வொருவருமே, திரு. ஸ்லீச்சர் மற்றும் திரு. கோமர் அவர்களின் வேலையைச் செய்யும் திறனை நீங்களும் பெறமுடியும். ஆனால் இந்தச் செயல்பாட்டினைப் பற்றின அனைத்துப் பாடங்களுக்கும் நேரம் கொடுத்துப் படித்தால் மட்டுமே, அந்தத் திறனைப் பெறமுடியும். இன்று உலகில் இயங்கும் அனைத்துத் தொழிற்சாலைகளும், ஜனங்களின் வசதிக்கும், பொது நலனுக்கும் தேவையானவற்றைத் தயாரிக்கப் பயன்படுகின்றது. ஒவ்வொருவரும் தன்னிறைவு பெற்றவர்களாக இருக்கிறார்கள். அடிப்படைத் தேவைகளில் குறைவுள்ளவர்களோ ஏழைகளோ, நோய்வாய்பட்டவர்களோ, பலவீனமானவர்களோ, எவருமே இங்கு இல்லை" என்று லெவ் கூறினான்.

"தேவன் மனிதனைப் படைக்கும்போது, அவனை பூமியின் இராஜாவாகவும், கீழான உயிரினங்கள் அனைத்தையும் ஆண்டுகொண்டு அவைகளுக்கு அதிபதியாகவும் இருக்கும் படியாகவே உண்டாக்கினார். அவர் மனிதனைச் சக மனிதர்களுக்கு அதிபதியாக உண்டாக்கவில்லை. பாவ நிலைமையே மலைகளுக்கு மேலாக அரண்மனைகளையும் மற்றும் பள்ளத்தாக்கில் வெறும் காலுடன் நடக்கும் விவசாயிகளையும் - செல்வந்தர்களையும், ஏழைகளையும், பிரபுக்களையும், வேலைக்காரர்களையும் கொண்டுவந்தன. இப்போது மலைகள்

உருகிப்போய், பள்ளத்தாக்குகள் உயர்ந்துள்ளன. இப்போதைய சமுதாயத்தில் மிகப்பெரிய அளவில் சரியான விதத்தில் சமன்பாடு ஏற்பட்டுள்ளது. இது அனைவரும் தேவனுடைய சிங்காசனத்தின் முன்பாக, தேவனுடைய பிள்ளைகளாக நிற்கும் வரைக்கும் தொடரும்'' என்று லெவ் கூறினான்.

''நான் இங்கு ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோதான் இருப்பேன். நான் இங்கிருந்து சென்றதிலிருந்து, நீங்கள் உண்டாக்கியிருக்கும் முன்னேற்றங்களைப் பார்க்கவும், மேம்படுத்தக்கூடிய பகுதிகள் இன்னும் ஏதேனும் உள்ளதா என்பதைச் சரிப்பார்க்கவுமே, இப்போது இங்கு வந்துள்ளேன். நீங்கள் திறந்த மனதோடு உங்களின் பரிந்துரைகளைக் கூறுவீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் இங்கு இருந்தபோது உங்களில் பலருடன் இணைந்துப் பணியாற்றியிருக்கிறேன். எனக்குக் கீழாகவே நீங்கள் பணிபுரிகிறீர்கள் என்ற எண்ணம் உங்களில் யாருக்கும் தோன்றும் விதமாக நான் நடந்துகொண்டதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் அனைவரும் உங்களுடன் இருக்கும் சக மனிதர்களுக்காகவும், பொதுவான நன்மைகளை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக தானாகவே முன்வந்து சேவை செய்கிறீர்கள் - நாம் அனைவரும் கிறிஸ்துவுக்கே சேவைசெய்கிறோம். ''உங்களில் பெரியவனாய் இருக்கிறவன், உங்களுக்கு ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்'' என்று இயேசு பிரசங்கித்தக் கொள்கை இன்னும் உண்மையாய் இருக்கிறது. இந்தப் போதனையை இன்று ஒரு நாள் மட்டும், நான் செயல்படுத்திப் பார்க்க விரும்புகிறேன் என்றான்.

''மேரி அன், நீங்கள் இங்கு அதிக நாட்களாக வேலைசெய்கிறீர்கள். அதனால் மற்ற எவரையும் விட, உங்களுக்கு இந்தத் தொழிற்சாலையின் செயல்பாடுகளைப் பற்றி நன்கு தெரியும். இன்று நீங்கள் நிர்வாகப் பகுதியில் வேலைசெய்ய நான் விரும்புகிறேன். திரு. கோமர், நீங்கள் இன்று ஒரு நாள் மட்டும், மேரி அன்னின் வேலையைச் செய்யலாம் என்று நான் எண்ணுகிறேன். மேரி அன் இதுவரை செய்த வேலையில், நீங்கள் இன்னும் ஏதேனும் முன்னேற்றங்களைச் செய்யலாமா என்று பாருங்கள். மேரி அன், திரு. ஸ்லீச்சர் மற்றும் நான், நாங்கள் இருவருமே, நீங்கள் செய்யும் பணியை மேற்பார்வையிடுவோம். உங்களின் முடிவுகள் இருமுறை பரிசோதிக்கப்படும். ஏனென்றால் இந்தச் செயல்பாட்டில், எந்தவிதமானப் பிரச்சனைகளும் ஏற்படும்படியாக எங்களால் விடமுடியாது. நீங்கள், மேரி அன்னின் பணியான மற்றவர்களுக்கான வேலைகளை நியமிப்பதை எவ்வாறு நிர்வகிக்கிறீர்கள் என்பதை மட்டும் அல்லாமல், பணியாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதில் உங்களது திறமையையும், நீங்கள் மற்றவர்களுடன் பேசும் முறையையும் கண்காணிப்போம், இன்று ஒரு நாள் மட்டுமே இந்த மாற்றம் இருக்கும். உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருக்கிறதா? என்று திரு. கோமரிடம், லெவ் வினவினான்.

தன்னுடைய உயர் பதவியில் இருந்து விலகிச்சென்று, அதைவிட வரவேற்பு குறைவானப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்பதை ஜெசி கோமர் விரும்பவில்லை என்பதை லெவ்வால் உணரமுடிந்தது. ஜெஸ்ஸியின் முகம் சிவந்தது. மற்றப் பணியாளர்களின் கண்களில், தான் கீழானவனாக காணப்படுவார் என்பது போன்ற எண்ணம் அவரில் தோன்றிக்கொண்டிருந்தது. ஜெஸ்ஸி தன் வேலையிலிருந்து விலகுவதற்கு, அரை மனதோடு இருப்பதைக்கண்டு லெவ் ஆச்சரியப்பட்டான். ஜெஸ்ஸி மற்றவர்களுக்கு கட்டளைகளைக் கொடுக்கக் கூடிய இப்பதவிக்கு இப்போதுதான் வந்திருந்தார். இந்த ஒரு நாள் பதவி இறக்கத்தைக்கூட அவர் விரும்பவில்லை என்று லெவ் கருதினான்.

''மேரி அன் இதுவரை செய்த வேலையில், நீங்கள் இன்னும் ஏதேனும் முன்னேற்றங்களைச் செய்யலாமா என்று பாருங்கள், ஜெஸ்ஸி'' என்று லெவ் கூறினான்.

அவர் முணுமுணுத்தவாறு, மேரி அன்னுடைய இருக்கைக்குச் சென்றார். லெவ் கொடுத்த வேலையைச் செய்வதில் மேரி அன் முதலில் கொஞ்சம் குழப்பத்துடன் காணப்பட்டார். ஏனென்றால் எந்தெந்த வேலைகளை முதலில் முடிக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியவில்லை. ஆனால் பிரான்ஸ் ஸ்லீச்சர் எவ்வாறு செய்ய வேண்டும் என்று அறிந்திருந்ததால், அவர் மேரி அன்னிற்கு உதவினார். அன்னிற்கு தொழில்நுட்பம் சார்ந்த அனைத்து விவரங்களும் தெரியாது. அதனால் அதன் விவரங்களை லெவ் அவருக்கு எடுத்துரைத்தார். ஒரு சில மணி நேரங்களுக்குள் அனைத்து விஷயங்களையும் புரிந்துகொண்டு, அன் வேலைகளைச் சீராகச் செய்யத் தொடங்கினார்.

மதிய உணவு இடைவேளையின் போது, லெவ், ஜெஸ்ஸியை தன்னுடனும், பிரான்ஸுடனும் இணைந்துகொள்ளுமாறு அழைத்தான். ஜெஸ்ஸி தனது விரக்தியை அடக்கிக்கொண்டு,

வெறுப்போடு சம்மதித்தார். இந்த வேலையை விட்டுச்சென்று, தனது மனதிற்கு நிம்மதியைத் தேடிக் கொள்ளலாமா என்ற ரீதியிலான போராட்டம், அவரது சிந்தையில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை லெவ்வால் காணமுடிந்தது. இது ஒரு நாள் மட்டுமே என்ற காரியமே, அவரை வேலையில் தக்கவைத்துக் கொண்டிருந்தது. அவர் பெற்றிருந்த உயர் பதவி அவருக்கு மிகவும் பிடித்திருந்தது.

## எவ்வாறு அன்போடு வேலை செய்ய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளல்

மதிய உணவு இடைவேளையில் லெவ், ஜெஸ்ஸிக்குக் கொடுக்கப்பட்ட பணியின் தொழில்நுட்பத்தை ஜெஸ்ஸி புரிந்துகொண்டதற்காக அவரைப் பாராட்டினான்.

"அவர் நிமிர்ந்து லெவ்வைப் பார்த்து திரு. ஆரோன், இன்று நீங்கள் என்னைப் பெரிய அளவில் சிறுமைப்படுத்தி உள்ளீர்கள். இந்தச் சிறிய பாராட்டினால், நீங்கள் என்னைச் சமாதானப்படுத்திவிட முடியும் என்று நினைக்கிறீர்களா? நான் இன்றே இங்கிருந்து சென்றிருப்பேன். மேலும் திரும்பிவருவதைப் பற்றி யோசித்திருந்திருக்கக்கூட மாட்டேன் என்பதை நான் உங்களிடம் தெரிவித்தே ஆக வேண்டும்" என்றார்.

"ஏன், உங்களோடு வேலைசெய்யும் சக மனிதர்களுக்குச் சேவைசெய்ய நீங்கள் விரும்பவில்லையா? பின்பு எதற்காக தொழில்நுட்பத்தில் இருக்கும் ஒவ்வொரு விபரங்களையும் கற்றுக்கொள்வதற்கு அதிக நேரம் செலவுசெய்தீர்கள்? இப்போது உங்களது திறமையையும், அறிவையும் காட்டுவதற்கான வாய்ப்பைப் பெறும்போது, ஏன் இங்கிருந்து கிளம்ப நினைக்கிறீர்கள்?" என்று லெவ் கேட்டான்.

"காரணம் இருக்கிறது, திரு. லெவ் ஆரோன். அறிவுத்திறனுக்கு இங்கு அவசியம் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் என்னுடைய அறிவையும், திறனையும் குறையச் செய்கிறீர்கள்" என்றார்.

"நல்லது, இதுதான் உங்களது இறுதி முடிவு என்றால் அதற்காக நான் வருந்துகிறேன். உண்மையை விடச் சிறந்தது எதுவும் இருக்க முடியாது. இந்தத் தொழில்நுட்பச் செயல்பாட்டினை நடத்துவதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் எனக்குத் தெரிந்திருந்தது மட்டுமே, நான் இங்கு வந்ததற்கான ஒரே காரணமாகும். அனைத்துத் தகவல்களையும் தெரிந்துகொள்வதற்கான சிலாக்கியத்தை இங்கிருக்கும் ஒருவரும் பெற்றிருக்கவில்லை. இந்தத் தொழில்நுட்பமே அனைத்திலும் முன்னணித் தொழில்நுட்பமாக உள்ளது மற்றும் மிகச் சிலருக்கு மட்டுமே இது குறித்துத் தெரியும். அத்தகைய சிலாக்கியம் பெற்றவர்களில் நானும் ஒருவன். நான் இஸ்ரயேலில் உள்ள எனது வசதியான வீட்டை விட்டுவிட்டு, எந்தவித ஊதியமோ, வெகுமதியோ இல்லாமல் இங்கு வந்துள்ளேன். என்னுடைய சக மனிதர்களுக்குச் சேவைசெய்வது, எனக்குக் கிடைத்தச் சிலாக்கியமாகும். திரு. ஸ்லீச்சர், உங்களிடமோ அல்லது இந்தச் செயல்பாட்டில் இருப்பவர்களிடமோ எப்போதாவது நான் இரக்கமற்றவனாகவோ அல்லது நியாயமற்றவனாகவோ நடந்து இருக்கிறேனா?" என்று ஸ்லீச்சரைப் பார்த்து லெவ் கேட்டான்.

"கண்டிப்பாக இல்லை, லெவ். நியாயமற்றவனாக, இரக்கமற்றவனாக நான்தான் உங்களிடத்தில் நடந்திருக்கிறேன். ஆனால் என் தவறிலிருந்து நான் பாடம் கற்றுக்கொண்டேன். அன்றிலிருந்து, இதுவரையிலும் நான் ஏதேனும் நியாயமற்றவனாகவோ, இரக்கமற்றவனாகவோ நடந்திருக்கிறேனா என்பதைச் சரிபார்க்காமல் ஒருநாளும் இருந்ததில்லை என்பதை உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். நித்தியக் காலம் என்பது முடிவில்லாமல் நீண்டதாய் இருப்பதால், பழைய உலகின் தீமைகளைத் தொடர்ந்து இங்குச் செய்துகொண்டிருக்க முடியாது" என்றார்.

"நான் கேட்கலாம் என்றால் உங்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன், ஜெஸ்ஸி. மேரி அன் இதுவரைச் செய்த வேலையில், இன்னும் மேம்படுத்த வேண்டும் என்ற வகையில் நீங்கள் ஏதாவது கண்டுபிடித்தீர்களா?" என்று லெவ் கேட்டான்.

"உண்மையில் இல்லை, நான்தான் சில விஷயங்களைக் குழப்பிக்கொண்டேன் என்று நினைக்கிறேன். காலை வேளையின் பெரும்பாலான நேரத்தை அதைச் சரிசெய்வதற்கே நான் செலவிட்டேன். எப்படியாயினும், என்னை அந்த வேலையில் உட்படுத்தியது நியாயமற்றது, அந்த வேலையை மேம்படுத்துவதற்கான வழிமுறையைக் கண்டறிவது மிகக் கடினம். நான் அந்த

வேலையினைக் கற்றுக்கொள்வதற்குச் சிரமப்படலாம் என்பது உங்களுக்குத் தெரியும். இப்படி என்னைத் தாழ்த்துவதில் உங்களுக்கு என்ன மகிழ்ச்சி என்று எனக்குத் தெரியவில்லை" என்று ஜெஸ்ஸி கூறினார்.

"ஜெஸ்ஸி, இவ்வுலகில் நான் செய்ய விரும்பும் கடைசி வேலை இதுதான். யார் ஒருவரையும் தாழ்த்திப் பார்ப்பது என்பது மோசமான செயல் என்று எனக்குத் தெரியும். நான் ஏன் அதைப் போன்றதொரு பயங்கரமானச் செயலைச் செய்ய வேண்டும்? மேரி அன்னின் வேலையைச் செய்யவோ அல்லது அதை மேம்படுத்தவோ உங்களால் முடியாது என்பதை நன்கு அறிந்தே, நான் உங்களை அதைச் செய்ய முயற்சிக்குமாறு கேட்டுக்கொண்டேன். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் இந்த வேலையைப் பல நாட்களாகச் செய்துகொண்டிருக்கிறார் மற்றும் அவரது வேலையில் அவர் மிகவும் திறமையானவர். இருப்பினும், மேரி அன் இதுவரை செய்த வேலையை நீங்கள் பாராட்டுவதற்காவது கற்றுக்கொண்டீர்களா என்று நான், உங்களிடம் கேட்கலாம் அல்லவா?" என்று லெவ் வினவினான்.

"ஆமாம், அவர் என்ன செய்திருக்கிறார் என்பதையும், எவ்வளவு நன்றாகச் செய்திருக்கிறார் என்பதையும் இப்போது நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்" என்று ஜெஸ்ஸி கூறினார்.

"ஒவ்வொருவரும் அவரவர் வேலையைச் செய்வதே, இந்தச் செயல்பாட்டின் அனைத்துக் காரியங்களும் நிறைவேறுகிறதற்குக் காரணமாய் இருக்கிறது. ஒவ்வொருவரும் முக்கியமானவர்களே. குதிரைக்காலனி ஆணியின் கதையை நினைத்துப் பாருங்கள். ஓர் ஆணித் தொகுப்பின் இழப்பானது, சங்கிலித் தொடரான இழப்பினை உண்டாக்கி, அதன் முடிவில் பேரழிவிற்க்கு வழிவகுக்கும். உங்களது தலைமைத்துவத்தின் கீழாகப் பணியாற்றிய பத்து மதிப்புமிக்க நபர்கள் பணியிலிருந்து வெளியேறியுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியுமா ஜெஸ்ஸி. இது பணியில் இடையூறையும், மற்றவர்கள் மீது பெரும் சுமையையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த வேலைகளைச் செய்வதற்கு தகுந்த அறிவுக் கூர்மையானவர்களை, திறமையானவர்களை கண்டுபிடிப்பதற்குச் சில காலங்கள் எடுக்கும். ஜனங்கள் நாளுக்கு நாள் அதிக அறிவுத்திறன் உள்ளவர்களாக மாறிக்கொண்டிருந்தாலும், உடனடியாக அறிவுத்திறனை பெற்றுக்கொள்ளும் நபர் ஒருவரும் நம்மிடம் இல்லை. மேலும் ஒரே நாளில் உடனடியாக ஒருவரது அறிவுத்திறனை நாம் மேம்படுத்தவும் முடியாது. ஜெஸ்ஸி, உங்கள் தலைமைக்குக் கீழாகப் பணியாற்றிய பத்து நபர்கள் இந்த ஆலையிலிருந்து ஏன் வெளியேறினார்கள் என்று இப்போது உங்களால் கூற முடியுமா?" என்று லெவ் வினவினான்.

## பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல்

ஜெஸ்ஸி எச்சிலை விழுங்கியவாறு, "அது எனக்கு எப்படித் தெரியும், அவர்கள் வேண்டாம் என்று வெளியேறிச் செல்வதற்கான சுதந்திரம் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் அனைவரும் தன்னார்வத் தொண்டுச் செய்பவர்கள் தானே, அவர்கள் செல்கிறோம் என்று கூறினால் நான் என்ன சொல்ல முடியும்" என்றார்.

"நல்லது, பணியிலிருந்து விலகும்போது, அவர்கள் உங்களிடம் என்ன சொன்னார்கள்?" என்று லெவ் கேட்டான்.

"சரி, நான் உங்களிடம் உண்மையைக் கூறுகிறேன். அநேகர் இங்கே அவர்கள் பெற்றுக் கொள்ளும் எரிச்சலூட்டும் சூழ்நிலைகள் தங்களுக்குத் தேவையில்லை என்றனர். சிலர் அவர்களது பரிந்துரைகளும், கண்ணோட்டங்களும் மதிக்கப்படுவதாக, அவர்களால் உணர முடியவில்லை என்றனர். இன்னும் சிலர் இந்த இடத்திலிருந்து வெளியேறினால்தான், தங்களால் மூச்சுவிட முடியும் என்பது போன்ற நொண்டிச் சாக்குகளைக் கூறிவிட்டு வெளியேறினர். இதற்கானப் பொறுப்பினை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். நான் ஒரு சுமூகமான உறவு வைத்துக்கொள்ளும் விதமான செயல்பாட்டாளர் அல்ல என்று எனக்குத் தெரியும். ஜனங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்வதிலும், அவர்களைக் கையாள்வதிலும் குறைவான திறன் பெற்றவனாகவே இருந்திருக்கிறேன். நான் கூறிய அல்லது செய்த ஏதாவது ஒரு காரியம், அவர்களைக் கஷ்டப்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இங்குத் தொடர்ந்து வேலைசெய்வதற்கு எனது மன்னிப்பு மட்டும் போதுமானதாக இருக்காது என்றார். முதல் நபர் வெளியேறியபோதே, இங்கு நம்முடைய வேலையில் சிறிதளவிலான

சலசலப்பினை ஏற்படுத்தியது. ஆனால் ஒருவர் பின் ஒருவராக வெளியேறத் தொடங்கியபோது, நான் எனது கட்டுப்பாட்டை இழந்துகொண்டிருப்பதை உணர்ந்தேன். அவர்கள் இல்லாமல் என்னால் இந்த வேலையைச் செய்ய இயலுமா என்ற விரக்தியும், பதற்றமும் அடைந்தேன். நான் அவர்களுடன் நடந்துகொண்ட விதத்தின் காரணமாகவே அவர்கள் பணியிலிருந்து வெளியேறுகிறார்கள் என்பதையும் நான் உணர்ந்துகொண்டேன்'' என்றார்.

''ஊழியர்களுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளுதல் போன்ற, உங்களால் முடியாத அனைத்துக் காரியங்களையும் பிரான்ஸ் கையாளுவதற்கு நீங்கள் ஏன் அனுமதிக்கவில்லை? பணியாளர்களைக் கையாளுவதில் அவர் கைதேர்ந்தவர் என்பது உங்களுக்குத் தெரியும்தானே. யாரையும் எரிச்சலூட்டாமல் அவரால் திட்டமிடல்களைச் செய்யமுடியும் மற்றும் மற்றப் பணியாளர்களுடன் சுமூகமான உறவையும் தக்கவைத்துக் கொள்ள அவரால் முடியும்'' என்று லெவ் கூறினான்.

''பிரான்ஸ் இந்தச் சூழ்நிலையைக் கையாளுவதற்கு நான் அனுமதித்திருந்திருக்க வேண்டும். நான் தலைக்கனம் பிடித்தவனாக இருந்திருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன். இவ்வளவு பெரிய செயல்பாட்டினைக் கையாளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பது இதுவே முதல்முறை என்று உங்களுக்குத் தெரியும். தொழில்நுட்பக் காரியங்களில் நான் பெற்றிருந்த, எனது புத்திக்கூர்மையே என்னை முதலாளி என்ற பொறுப்பிற்குத் தகுதியுள்ளவனாக்கியது என்று நான் நினைத்தேன்'' என்று ஜெஸ்ஸி கூறினார்.

''முதலாளி என்று யாரும் இனிமேல் இங்கு இல்லை, ஜெஸ்ஸி. அவர்கள் பழைய உலகத்தோடு மறைந்துவிட்டனர். ''நீங்களோ ரபீ என்று அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராய் இருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராய் இருக்கிறீர்கள் (மத். 23:8).'' நாம் ஒருவருக்கொருவர் அன்புடன் ஊழியம்செய்ய வேண்டும். அவர்கள் அனைவரும் வெளியேறியதற்கான எளிமையான காரணம் என்ன தெரியுமா, நீங்கள் அவர்களுடன் அன்புடன் நடந்துகொள்ளாததே. ஒருவர் தவறு செய்யும்போது நாம் அவரிடம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்துகொண்டிருக்கும் போது கடுமையாக நடப்பது என்பது சரியல்ல'' என்று லெவ் கூறினான்.

''லெவ் கூறுவது சரிதான்,'' என்று கூறியவாறு பிரான்ஸும் பேச்சில் இணைந்துகொண்டார். ''நான் இங்குப் பணிபுரிபவர்களை ஏமாற்ற முயன்றபோதுதான், லெவ் என்னிடம் கடுமையாக நடந்துகொண்டார் என்பதை உங்களிடம் கட்டாயம் தெரிவிக்கவேண்டும். அவ்வாறு லெவ் செய்தது சரிதான். ஏனென்றால் நான் மிகவும் மோசமாக நடந்துகொண்டேன். என்னுடைய தவறான நடத்தையிலிருந்து நான் மாறுவதற்கு அவர் உதவினதன் காரணமாகவே, லெவ் எனக்கு சிறந்த நண்பனாக மாறினார். நான் என்னுடைய தவறுகளைத் திருத்திக்கொண்டபோது, லெவ்வினுடைய தயவினாலேயே நான் மீண்டும் இங்குப் பணிபுரிவதற்கு அழைக்கப்பட்டேன். அவர் இங்கிருந்து கிளம்பியபோது எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் நிறைந்திருந்தது. லெவ் ஒரு புத்திசாலி மற்றும் அவர் அனைவருடைய உணர்வுகளின் மீதும் அக்கறை கொண்டிருந்தார். அவர் தொழிற்சாலைக்குள் நுழையும்போது, அனைவரிடமும் காணப்பட்ட மகிழ்ச்சியை நீங்கள் கவனித்தீர்களா? அவர்கள் உண்மையாகவே மகிழ்ந்தார்கள். ஒரு நண்பனைப் பெறவேண்டும் என்றால் நீங்கள் ஒரு நண்பனாக இருக்கவும் வேண்டும். ஒருவர் தவறுகள் இழைக்கும்போது லெவ் ஒருபோதும் கோபம்கொண்டதில்லை. யார் மீதும் பழிசுமத்தவும் முயன்றதில்லை. எல்லாத் தவறுகளையும், அவரே ஏற்றுக்கொள்வார். எல்லாப் புகழ்ச்சியையும் மற்றவர்களிடம் கொடுத்து விடுவார்'' என்றார்.

ஜெஸ்ஸி தன்னுடைய சுயத்தை விட்டுவிடவும், தான் மற்றவர்களிடம் மோசமாக நடந்து கொண்டதையும் முதன்முறையாக உணர ஆரம்பித்தார். ''லெவ், மற்றவர்களோடு எவ்வாறு பழக வேண்டும் என்பதை நான் சரியாக அறிந்துகொள்ளவில்லை. ஆனால் நான் அதை அறிந்திருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எனக்கு எதிராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களிலிருந்து, எப்படி என்னை நான் காத்துக்கொள்வது என்பதிலேயே நான் கவனமாக இருந்தேன். அதனாலேயே என் மீதான குற்றங்களைப் புறந்தள்ளிவிட்டேன் என்பதை நான் அறிவேன். நான் செய்தது தவறு என்று எனக்குத் தெரியும். இவர்கள் அனைவரும் வெளியேறுவதற்கு நான்தான் காரணம் என்று ஓரளவிற்கு எனக்குத் தெரிந்திருந்தாலும், என் நடத்தையை மாற்றிக்கொள்ள முடியாத அளவிற்கு நான் மிகவும்

பிடிவாதமாய் இருந்தேன். முதலாளியாக இருக்க வேண்டும் என்று மிகவும் விரும்பியவனாக நான் இருந்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். முதலாளியாக இருக்க எனக்குத் தகுதியில்லை என்று கூறுமளவிற்கு, என்னை நானே கீழிறக்கிக் கொண்டேன். லெவ், நீங்கள் விரும்பினால் நான் என் ஸ்தானத்திலிருந்து விலகி விடுகிறேன். நான் குற்றம் சுமத்தப்பட வேண்டியவன்தான். என்னைத் தற்காத்துக் கொள்வதற்கு என்ன கூறமுடியும்?" என்று ஜெஸ்ஸி கேள்வியோடு நிறுத்தினார்.

"ஜெஸ்ஸி, உங்களது ராஜினாமாவை நான் ஏற்றுக் கொண்டால், நீங்கள் செய்தத் தவறை விட பெரிய தவறை நான் செய்தவன் ஆவேன். உங்களிடம் இருக்கும் தொழில்நுட்ப அறிவு இப்போது இங்கே அதிகம் தேவைப்படுகிறது. இன்னும் ஆறு மாதங்களுக்குப் பிறகு இங்கு வேலை செய்பவர்கள் கற்றுக்கொள்வதற்குத் தங்களை உட்படுத்தினால், உங்கள் அளவிற்கோ அல்லது அதற்கும் மேலாகவோ தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது உங்களது அறிவு எங்களுக்கு மிகவும் அவசியமான ஒன்று. இங்குப் பணியிலிருந்து சென்றவர்களும் நமக்குத் தேவை. நீங்கள் சில மாற்று வேலையாட்களைப் பெற்றிருக்கிறீர்கள். இருப்பினும் இன்னும் சில புதிய வேலையாட்களைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. நான் அவர்களைத் திரும்பவும் பணிக்கு வரும்படி அழைத்தால், நிர்வாகத் திறன்களைக் கற்றுக்கொள்வதற்கு நீங்கள் கூடுதலாக முயற்சிசெய்வீர்கள் அல்லவா? அதனைவிடவும் முக்கியமாக, நீங்கள் செய்யவேண்டியது என்னவென்றால், சேவை செய்பவர்களை நேசிப்பதும், அவர்களை மதிப்பதும், பாராட்டுவதும்தான். நீங்கள் அவ்வாறு செய்கிறீர்கள் என்பதை அவர்களுக்குக் காட்டுவதே மிகச்சிறந்ததொரு செயலாகும். நீங்கள் சரியான மனநிலையில் இல்லையென்றால், பிரான்ஸிடம் சூழ்நிலைகளைக் கையாள கேட்டுக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருங்கள். நமக்கு இங்கு முதலாளிகள் தேவையில்லை. இங்குப் பணிபுரிபவர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் நண்பர்கள்போல் பழகவேண்டும். அனைவரும் ஒன்றாக முன்னேற வேண்டும்." என்றான்.

"அவர்களிடம் இங்கிருந்து செல்ல வேண்டாம் என்று நான் கூறினேன். ஆனால் அவர்களைக் கருத்தில்கொள்ளாமல், என்னை நல்லவனாகக் காட்டிக்கொள்வதற்காகவே நான் அவ்வாறு கூறினேன் என்பது அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். ஆனால் பல தன்னார்வலர்கள் வெளியேறிய போது, நான் மோசமானவனாக இருக்கிறேன் என்பதைத் தெரிந்துகொண்டேன். அவர்களை இருக்கும்படி கேட்டுக்கொண்டதற்கான உண்மையான காரணம், என்னைப் பற்றிய மற்றவர்களின் அபிப்ராயத்தைக் காத்துக்கொள்வதற்காகவே ஆகும். நான் இவர்களைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். லெவ், என் பெற்றோர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். நான் பிளவுபட்ட குடும்பத்திலிருந்து வந்தவன். எனக்கு ஆறு வயது இருக்கும்போதே, என் பெற்றோர்கள் விவகாரத்துச் செய்துகொண்டனர். என் அப்பா, என் அம்மாவை மட்டுமல்ல, என்னையும் சேர்த்தே விவகாரத்துச் செய்துவிட்டார் என்று நினைக்கிறேன். ஒரு தந்தையாக, அவர் தனது பிள்ளைக்குக் கொடுக்கவேண்டிய அனைத்திலிருந்தும் தவறிவிட்டார். நான் வளர்ந்தபோதும், அவர் என்னை அழைத்ததும் இல்லை, எனக்குக் கவனம் கொடுத்ததும் இல்லை. என் அம்மா ஒரு சிறந்த பெண்மணி. ஆனால் எனக்குத் தேவையானவற்றை எனக்கு வழங்குவதற்காகக் கடினமான வேலையைச் செய்துகொண்டிருந்தார். அதனால் அவரால் எனக்காக நேரம் செலவிட முடியவில்லை. அதனால் என்னை நானே வளர்த்துக்கொண்டேன். எனக்கு சமூக நலன்கள் குறித்த அறிவு குறைவு என்று தெரியும்" என்றார்.

## ஜனங்களைக் கையாளுவதற்கான சிறந்த புத்தகம்

"ஜனங்களை எப்படிக் கையாள்வது என்பதை அறிந்துகொள்வதற்கு, நான் உங்களுக்கு ஒரு புத்தகத்தைப் பரிந்துரைக்கலாமா?" என்று லெவ் வினவினான்.

"என்ன? நான் அதனைக் கண்டிப்பாக வாசிக்கிறேன்" என்று ஜெஸ்ஸி கூறினார்.

"வேதாகமம்" என்று லெவ் பதிலளித்தான்.

ஜெஸ்ஸி சற்று திடுக்கிட்டுப் பார்த்தார்.

"ஆமாம், குறிப்பாகப் புதிய ஏற்பாடு" என்று லெவ் கூறினான். அனைவரும் நமக்கு நண்பர்களாக இருக்கவேண்டும் என்று நாம் விரும்பினால், நாம் அனைவரையும் நேசிக்க வேண்டும் என்று நான் புதிய ஏற்பாட்டில் தான் கற்றுக்கொண்டேன். இப்போது, எப்போதேனும் உங்களைப்

பதிலுக்கு நேசிக்காதவர்களையும், நீங்கள் நேசிக்கும் நிலை வரலாம். அன்பை பலவீனமானதாகவும், பெருந்தன்மையை முட்டாள்தனமாகவும் பார்க்கும் யூதாஸ் போன்றவர்கள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கிறார்கள். எப்போதாவதுதான் அவர்களைப் போன்றவர்களை நீங்கள் சந்திப்பீர்கள். இந்த யுகத்தில் அவர்களைப் போன்றவர்கள் குறைய ஆரம்பித்துவிட்டனர். ஜனங்களைக் குழப்புவதற்குச் சாத்தான் இங்கு இல்லை. நீங்கள் ஒருவரை நாயைப்போல் நடத்தினால், அவர் உங்களைக் கடித்தால் ஆச்சரியப்பட வேண்டாம்" என்று லெவ் கூறினான்.

"பைபிள் எனக்கு எந்தத் தீங்கும் செய்யாது" என்று ஜெஸ்ஸி சந்தோஷத்துடன் பதில் அளித்தார். இன்றே நான் பைபிளைப் படிக்கவும், அதனை அறிந்துகொள்ளவும் ஆரம்பிக்கிறேன். எந்த ஒரு மதத்தைப் பற்றிய அறிவும் இல்லாதவனாகவே நான் வளர்ந்தேன். "அறிவே ஆற்றல்" என்று எண்ணியதால், என்னால் எவ்வளவு முடியமோ அவ்வளவையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது சிந்தனையாக இருந்தது. அது எனக்குக் கைகொடுத்தது. நான் பள்ளியில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றேன். மற்றவர்களிடம் இருந்து நான் என்னை தனித்துவமாகக் காட்ட, எனக்குத் தெரிந்த வழி இதுதான். எனக்குத் தெரிந்த வழியில் என்னை வேறுபடுத்திக் காட்டவே நான் இன்னும் விரும்புகிறேன். எப்படி அன்புசெய்வது என்று எனக்குத் தெரியவில்லை என்று நான் நினைக்கிறேன்" என்றார்.

"1 கொரிந்தியர் 13:1-ஐ வாசியுங்கள் என்று லெவ் கூறினான்." நான் ஒரு யூதனாகவே வளர்க்கப்பட்டேன். என் வாழ்நாளில் நான் அந்தப் புத்தகத்தைப் படித்ததே இல்லை. பழைய ஏற்பாட்டைத்தான் படித்திருக்கிறேன். யூதர்கள் புதிய ஏற்பாட்டைப் படிப்பதில்லை. அந்தப் புத்தகத்தில் அன்புபற்றிய அதிகாரத்தைப் படித்தபோது, அது என் வாழ்க்கையில் மூடப்பட்டிருந்த ஜன்னலைத் திறந்தது. அன்றிலிருந்து என் வாழ்க்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வெளிச்சம் அதிகமாகியது" என்றான்.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற வெளிப்படையான பேச்சுவார்த்தையையும், மதிய உணவினையும் ஒன்றாக நிறைவுசெய்தனர். "இன்று மதியத்திலிருந்தே பணியிலிருந்து சென்றவர்களை அழைத்துப் பேச முடிந்தால் பேசுகிறேன். அனைத்துக் காரியங்களும் மீண்டும் சீராக இயங்குவதற்கு அவர்கள் நமக்கு அவசியம்" என்றும் லெவ் கூறினான்.

அந்த வாரத்திற்குள்ளாகவே வேலையிலிருந்து வெளியேறிய பத்து தன்னார்வத் தொண்டு செய்பவர்களை, லெவ்வால் தொடர்புகொள்ள முடிந்தது. லெவ்விடம் இருந்து அழைப்பு வந்ததில் அவர்கள் மகிழ்ந்தார்கள். பலர் அவரைச் சந்திக்க விரும்பினர். நெருக்கடியில் இருக்கும் நிறுவனத்திற்கு உதவ முன்வருமாறு லெவ் அவர்களுக்குப் பரிந்துரைத்தார். அவர் அலுவலகத்தை நிர்வகிக்கும் வரை தாங்கள் வருகிறோம் என்று கூறி, ஒருவர் பின் ஒருவராக அனைவரும் வேலைக்குத் திரும்பினர். அதற்கு அடுத்த வாரம் லெவ் அவர்கள் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையில் சந்தித்து அவர்களுக்கு வாழ்த்துக் கூறினான். அனைவரும் உற்சாகத்துடன் காணப்பட்டனர். அதிலும் ஜெஸ்ஸி அதிகமான உற்சாகத்துடன் காணப்பட்டார்.

"அவர்கள் திரும்பவும் வருகைப்புரிவதை வரவேற்கும் விதமாக, கேக்குகள் மற்றும் குளிர்பானங்களுடன் ஒரு மணி நேரம் தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டனர். கொண்டாட்டம் முடியும் தருவாயில் ஜெஸ்ஸி எழுந்து நின்று, நான் உங்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்க வேண்டும். பணியிலிருந்து விலகிச்சென்று மீண்டும் வந்திருப்பவர்களிடம் மட்டுமல்ல, என்னுடைய அன்பற்ற நடத்தையைப் பொறுத்துக்கொண்டு, இப்போது பணியில் இருப்பவர்களிடமும் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாதவனாகவே நான் இருந்திருக்கிறேன். அதற்காக நான் உண்மையிலேயே வருந்துகிறேன். நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்றார்.

தொழில் ரீதியாகச் சரியான உதவிகளைப் பெற ஆரம்பித்தவுடன் வேலையில் காணப்பட்ட பிரச்சனைகள் குறைய ஆரம்பித்தன. ஒரு மாதத்திற்குள்ளாகவே உற்பத்தியும், அதன் தரமும்கூடப் பழைய நிலைக்குத் திரும்பியது. வேலையின் அனைத்துப் பணிகளிலும் மற்றும் தீர்க்கப்படாத பிரச்சனைகள் உள்ள ஒவ்வொரு இடத்திற்கும் லெவ், ஜெஸ்ஸியைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். அதில் சம்மந்தப்பட்டிருக்கும் குழுவினருடன் லெவ் எவ்வாறு உரையாடுகிறான் மற்றும் பிரச்சனைகளைச் சமாளிப்பதில் அவர்களை எவ்வாறு ஈடுபடுத்துகிறான் என்பதை ஜெஸ்ஸி கற்றுக்கொண்டார். ஒருவன் எவ்வளவுதான் அறிந்திருந்தாலும், மற்றவர்களுக்கு ஆலோசனை

கொடுத்து அவர்களை வழிநடத்துவதில் தான் ஞானம் இருக்கின்றது என்பதை ஜெஸ்ஸி கற்றுக்கொண்டார். அநேகர் நுண்ணறிவு கொண்டவர்களாகவும், புத்திசாலித்தனமானத் தீர்வைக் கொண்டு வருபவர்களாகவும் இருந்ததைக் கண்டு ஜெஸ்ஸி ஆச்சரியமடைந்தார்.

## பிரானாவ்வுக்குச் செல்வதற்கான நேரம்

லெவ்விற்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிவடையும் தருணம் வந்தபோது, வேலைகளை எவ்வாறு வெற்றிகரமாகச் செய்துமுடிப்பது என்பதை விளக்கிக் காட்டியதற்காக ஜெஸ்ஸி, லெவ்விற்கு நன்றி கூறினார். ஆலோசனைகளின் தேவையையும், ஒருவருக்கொருவர் உதவுவதின் அவசியத்தையும் ஜெஸ்ஸி உணர ஆரம்பித்திருந்தார். தன்னிச்சையாகச் செயல்படுவதை ஜெஸ்ஸி நிறுத்தியிருந்தார். குழுவாகச் சேர்ந்து செயல்படுபவராக மாறியிருந்தார். தன்னுடைய பெருமையை, பொறுமையோடு சகித்துக்கொண்டிருந்த பிரான்ஸை பாராட்டவும் கற்றுக்கொண்டார்.

லெவ்வினுடைய இந்தப் பணி முடிவுக்கு வந்தது. அவன் எந்தப் பணியைச் செய்வதற்காக ஐரோப்பாவிற்கு வந்தானோ, அந்த வேலையைச் செய்யத் திரும்புவதற்கான நேரம் வந்தது. சக ஊழியர்களிடம் லெவ் விடை பெற்றுக்கொண்டான். அது அன்பின் விருந்தாகவும், அவர்களுடைய அன்பு உண்மையிலேயே கனிவுடனும் இருந்தது. ஜெஸ்ஸி முன்வந்து லெவ்வைத் தழுவிக் கொண்டார். அவர் இடைவிடாது தனது நன்றியை லெவ்விடம் தெரிவித்தார்.

லெவ், பிரான்ஸினுடைய காரைப் பயன்படுத்துவதற்கு பிரான்ஸ் ஏற்பாடு செய்திருந்தார். அது ஹைட்ரஜனை எரிசக்தியாகக் கொண்டு செயல்படும் ஒரு புதிய வாகனம். அதை ஓட்டுவதற்கு மகிழ்ச்சியாக இருந்தது. அருகில் உள்ள இடங்களுக்குச் செல்வதற்கு ஒரு வாகனம் அவசியம் தான் என்பது போல் லெவ் உணர்ந்தான்.

ஆஸ்திரியாவிலிருந்து, பிரானாவ்வை நோக்கி, லெவ் மெதுவாகக் காரைச் செலுத்தினான். அவன் எதற்காக அங்குச் செல்கிறான் என்பதைக் குறித்து ஒருவரும் அவனிடம் கேட்காமல் இருந்ததற்காக லெவ் நன்றியோடு காணப்பட்டான். ஒருவிதமான தயக்கத்துடன் தன்னுடைய புதிய பணியைச் செய்வதற்காக, லெவ் கிராமப்புறங்களின் அழகை இரசித்தவாறு மெதுவாகக் காரைச் செலுத்தினான்.

* * *

"*விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும்.*" (பிரசங்கி 11:3)

# அத்தியாயம் - 32

லெவ், பிரானாவ் நகரத்தை அடைந்தான். அவன் அந்த நகரத்தை வந்தடைந்தபோது, அந்த நகரைப் பார்க்கும் ஒருவராலும், உலகில் இவ்வளவு பெரிதான பேரழிவை ஏற்படுத்தியிருந்த நபர், இந்த நகரில்தான் பிறந்திருந்தார் என்று சந்தேகிக்க முடியாது என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டான். இத்தகைய சொல்லொனாத் துன்பங்களுக்கும், பெரிய அளவிலான மரணங்கள் சம்பவித்ததற்கும் காரணமான ஹிட்லர் போன்ற மனிதர்கள் வரலாற்றில் அரிதாகவே இடம் பெற்றிருந்தனர். பல இலட்சக்கணக்கான மரணங்கள் குறித்து நம்முடைய சிந்தையினால் யோசிக்கவே முடியாது. மிகப்பெரிதான காரியங்களை நாம் கிரகிக்கும் திறன்கொண்டவர்களாக நாம் படைக்கப்படவில்லை. அத்தகைய பெரிய எண்ணிக்கையை உள்ளடக்கிய சம்பவமாக அது இருந்தது. அவர்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் எத்தகையதோர் துயரமான முடிவைச் சந்தித்தது என்பதை நாம் நம்முடைய மனக்கண்களால் பார்க்க முடிந்தால் மட்டுமே, நம்மால் அந்த மிகப்பெரிய அளவிலானத் துயரத்தைக் கிரகித்துக்கொள்ள முடியும்.

இதுவரையிலும் வாழ்ந்த ஒவ்வொரு மனிதனையும், தேவன் முழுவதுமாக நினைவுகூருகிறார். ஒவ்வொருவரும் அவர்களுடைய வாழ்க்கை முழுவதிலும் பெற்றிருந்த அவர்களது அனுபவங்கள், வார்த்தைகள், எண்ணங்கள் பற்றியதான முழுமையான பதிவினையும் வைத்துள்ளார். மேலும் ஒவ்வொருவருடைய மரபணுக் குறியீட்டின் பதிவுகளையும்கூட தன்னிடத்தே வைத்துள்ளார் என்பதைக் கிரகிக்கும் திறன் கொண்டவர்களாக இருப்பது என்பது நம்மால் கூடாத காரியம். இருப்பினும், அதனைக் கிரகிக்கும் திறன் நமக்கு உள்ளதா அல்லது இல்லையா என்பது முக்கியமானதொன்றல்ல. தேவனுடைய இந்த வல்லமையை உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்தியுள்ளது. ஒவ்வொருவருடைய அடையாளத்தைப் பாதுகாப்பதும், அவர்களுடைய சிந்தையின் முழுமையான நினைவுகளையும் பாதுகாத்து வைத்துக்கொள்வது என்பது அவசியமான ஒன்றாக இருந்தது. இல்லையெனில், அந்த நபரின் அடையாளம் மறக்கப்படலாம் அல்லது சிதைந்து விடலாம். தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 15:35).

லெவ், ஜோஹனன் க்ரூக் என்பவருடைய வீட்டிலேயே தங்கியிருந்தான். வாகன விபத்தில் மரித்திருந்த, அவரது மகனை மீண்டும் ஜீவனுக்குள் திருப்புவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஜோஹனன், அமெரிக்காவிற்குச் சென்றிருந்தார். புதிய வடிவமைப்பில் கட்டப்பட்ட வீடுகளில் ஒன்றாக அவருடைய வீடு இருந்தது. லெவ்வினுடைய வீட்டைவிடக் கூடுதல் வசதிகளைக் கொண்ட வீடாக, அவருடைய வீடு இருந்ததை லெவ்வால் காணமுடிந்தது. அன்றன்றைய நாளுக்குத் தேவையான உணவினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்த அழகான பரதீஸ் போன்றதான தோட்டம் லெவ்வினைக் கவர்ந்தது. அங்கிருந்த அநேக மரங்கள் பூத்துக் குலுங்கின. ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு வகையான மரங்கள், கனிந்த பழங்களைத் தந்தன. தோட்டத்தைச் சுற்றிலும் வேலி அடைக்கப்பட்டிருந்ததால், பூக்களின் வாசனை அதிகமாக வீசியது.

லெவ்வின் பணியைக் குறித்து அருகில் இருப்பவர்கள் யாரும் அறிந்திருக்கவில்லை. யாரொருவரும் தன்னார்வத் தொண்டு செய்ய முன்வராத ஒரு நபருக்கு வீட்டினைக் கட்டுவதற்காகவே, தான் இங்கு வந்திருப்பதாக லெவ் தன்னுடைய அண்டை வீட்டுக்காரர்களிடம் கூறியிருந்தான். அனைவரும் லெவ்வினுடைய செயல் உன்னதமானது என்று நினைத்தனர். லெவ் ஆச்சரியப்படும்படியாக அநேகர் அவனுக்கு உதவ முன்வந்தார்கள். ஜீவனுக்குத் திரும்பியிருந்த அவர்களது பெற்றோர்களுக்கு ஏற்கெனவே வீடுகளைக் கட்டியிருந்ததாகக் கூறினார்கள் மற்றும் இதைப்போன்ற சில திட்டப் பணிகளிலும் ஈடுபட்டிருந்தனர். லெவ், அவர்களிடம் தன் நன்றியினைத் தெரிவித்தான் மற்றும் அவர்களது முழுமையான ஒத்துழைப்பைத் தான் பாராட்டுவதாகவும் கூறினான். தேவையான அனைத்துத் தகவல்களும் கிடைத்தவுடன், அவர்களின் உதவியைத் தான் பெற்றுக்கொள்வதாகவும் அவர்களிடம் தெரிவித்தான். அவனுக்கு உதவுவதற்கு, அவர்கள் ஆர்வத்துடன் இருப்பதுபோல லெவ்விற்குத் தோன்றியது.

இது வரையிலும் யாருக்கு இந்த வீட்டினைக் கட்டுகிறான் என்பதை அக்கம்பக்கத்தினரிடம் லெவ் தெரிவிக்கவில்லை. தெருவில் செல்லுகையில் யாரேனும் இதைக் குறித்து விசாரித்தால், ஸ்கிக்ல் க்ரூபரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்காகக் கட்டுவதாகவே அவர்களிடம்

பதிலளிப்பான். அங்கு அநேகக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஒரே பெயர் இருந்ததால், யாரொருவராலும் உடனடியாக எந்த ஒரு கேள்வியும் எழுப்ப முடியவில்லை. லெவ், தன்னால் இயன்றவரை அதற்கும் மேலாக எதுவும் கூறாதவாறு பார்த்துக்கொண்டான். குறைந்தபட்சம் இதற்கான சரியான நேரம் வரும் வரையிலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று எண்ணினான். ஹிட்லர், அவருக்கே உரிய அவரது அடையாளமாகக் காணப்பட்ட அவருடைய மீசையோடு ஜீவனுக்குள் திரும்பமாட்டார் என்றும், ஹிட்லர் தோற்றத்தில் இளமையானவராகவும், சற்றுக் கூடுதல் உயரம் கொண்டவராகவும் இருக்கலாம் என்றும் லெவ் எண்ணினான். அதைத்தவிர அவர் அதேவிதமான ஆதிக்கம் செலுத்தும் தன்மைகொண்டவராகவும், கொள்கைவாதியாகவுமே உயிர்த்தெழுவார் என்றும் நினைத்தான்.

## ஹிட்லருக்கான வீட்டைக் கட்டுதல்

ஹிட்லரின் சொந்த இடத்திலேயே விரைவாக, அவரது வீட்டிற்கான அஸ்திவாரம் போடவேண்டும் என்ற தகவலை லெவ், முற்பிதாக்கள் இடமிருந்து பெற்றுக்கொண்டான். மேலும் மரங்கள் ஏற்கெனவே நடப்பட்டிருந்தன. மரங்களைச் சுற்றிலும் கண்ணாடியைக் கொண்டு மூடுவதற்கான பணி விரைவில் தொடங்கப்படும் என்றும் அவனிடம் கூறப்பட்டது. மறுநாள் லெவ் அந்த இடத்தைப் பார்வையிடுவதற்காகச் சென்றான். அந்த இடமானது அவன் தற்காலிகமாகக் குடியிருந்த வீட்டிலிருந்து நடந்துசெல்லும் தூரத்திலேயே அமைந்திருந்தது. அஸ்திவாரம் போடப்பட்டவுடன், வீட்டினைக் கட்டுவதற்குத் தேவையானப் பொருள்களை வழங்குமாறு முற்பிதாக்கள் தங்களிடம் ஏற்கெனவே தெரிவித்துவிட்டார்கள் என்ற தகவலைத் தொழிற்சாலை நிர்வாகம் உறுதிப்படுத்தியது.

அனைத்துக் காரியங்களும் திறன்படச் செய்யப்பட்டிருந்ததைக் கண்டு லெவ் ஆச்சரியமடைந்தான். எங்குமே அதிகப்படியான அதிகாரத்தையோ, வேலையில் காலதாமதத்தையோ லெவ்வால் காணமுடியவில்லை. அனைத்து வேலைகளும் விரைவாகவும், தாமதமின்றியும் நடந்தன. உடனுக்குடனான நெறிப்படுத்தப்பட்ட அனைத்துச் செயல்முறைகள், இதமான மற்றும் நட்புடன் கூடிய சூழ்நிலைகள் சேவைசெய்யும் ஆர்வத்தைத் தூண்டின. அடால்ஃப் ஸ்கிக்ல் க்ரூபரின் வீட்டைப் பற்றி விசாரிக்க லெவ்வை அப்பகுதியினர் அழைத்தபோது, ஒருவரும் சந்தேகத்துடன் புருவத்தை உயர்த்தி அவனைப் பார்க்கவில்லை. எனவே அந்தப் பகுதியில், அந்தப் பெயர் பொதுவானதே என்று லெவ் அறிந்து கொண்டான். லெவ்வுடன் தொலைபேசியில் பேசிய ஒருவர், "எங்களது இன்னொரு சகோதரர் ஜீவனுக்குள் திரும்பப்போகிறார். தேவனுக்கு மகிமை உண்டாவதாக. அவருடைய வீட்டைக் கட்ட உதவுவதற்கு நாங்கள் இருக்கிறோம். நீங்கள் அவரது உறவினரா?" என்று வினவினார்.

"இல்லை" என்று லெவ் பதிலளித்தான். "அவர் ஒரு துரதிருஷ்டமான மனிதர். அவருக்கான வீட்டைக் கட்டுவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. எனக்கு சற்று ஓய்வு கிடைத்ததால், நான் உதவ முன் வந்தேன்" என்றான்.

"இது உங்களின் நல்ல குணத்தைக் காட்டுகிறது. உங்கள் பலியைத் தேவன் ஆசீர்வதிப்பார். அஸ்திவாரம் போட்டவுடன் எங்களிடம் கூறுங்கள். கட்டுமானத்திற்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அப்போதுதான் தயாராக முடியும். வீட்டின் உள்பகுதி கட்டுமான வேலை செய்வதற்குத் தேவையானவைகளை, அவர்கள் அனுப்பத் தயாராக இருக்கும்போது எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். அதன்பின்பு வீட்டினைக் கட்டிமுடித்து, அதனை ஒப்படைக்கப் பல நாட்கள் ஆகும். இந்த வீட்டின் முகவரி எங்களிடம் இருக்கிறது. உங்களது அழைப்பினை நாங்கள் எதிர்பார்க்கிறோம், லெவ்" என்றார்.

அன்றைய நாளின் மாலை வேளையில் லெவ், ரெபெக்காளைத் தொலைப்பேசியில் அழைத்தான். அவள், அவனது அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் மற்றும் அவனைச் சந்திப்பதற்கு ஆவலோடு காத்திருந்தாள். மறுநாள் ஹிட்லரின் வீட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போதே, இடைவெளி நேரத்தில் லெவ், ரெபெக்காளின் வீட்டை நோக்கித் தனது காரைச் செலுத்தினான். ரெபெக்காள், ஈவா ப்ரான்னுக்கான வீட்டைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தாள். ஈவாவின் வீட்டைக் கட்டும் பணியில் லெவ்வை விட, ரெபெக்காள் சற்று முன்னேறி இருந்தாள். அவளுக்கு உதவிசெய்வதற்குப் பலர் இருந்தார்கள் மற்றும் ஈவாவின் வீட்டைக் கட்டும் பணியானது நன்கு முன்னேறிக் கொண்டிருந்தது. ஈவா, ஜீவனுக்குத் திரும்புவதில்

ரெபெக்காள் அதிக அக்கறையோடு காணப்படுவதை லெவ்வால் உணரமுடிந்தது. ஈவா, ஹிட்லரைப் போல தீயவைகளை விரும்பும் கிளர்ச்சியாளர் அல்ல. ஆனால் அவர் உணர்ச்சிகளைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியாதவராக இருந்தார். ஒருமுறை ஹிட்லரின் கவனத்தைத் தன் மீது திருப்பவேண்டும் என்பதற்காகத் தன்னுடைய கழுத்தின் பின்பகுதியில் தானே சுட்டுக் கொண்டார், பிறகு மற்றுமொரு தற்கொலை முயற்சியிலும் ஈடுபட்டிருந்தார்.

ஈவா மற்றும் ஹிட்லரினுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பான முதல் சில மணி நேரங்களில், தாங்கள் எவ்விதமான உத்திகளைக் கையாள வேண்டும் என்பதைப் பற்றிப் பேசியவாறே லெவ்வும், ரெபெக்காளும் மாலை நேரத்தைக் கழித்தனர். ஈவா, ஹிட்லர் இருவரும் ஒரே நாளில் ஜீவனுக்குள் திரும்புவார்கள் என்று அவர்களிடம் கூறப்பட்டிருந்தது.

அஸ்திவாரத்தைத் தோண்டுவதற்கு என்று லெவ் கனரக உபகரணங்களைப் பெற்றிருந்தான். ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட கான்கிரீட் சுவர்களையும் பெற்றிருந்தான். அதனால் அஸ்திவாரம் போடப்பட்டவுடன், சுவர்களை அந்தந்த இடத்தில் பொருத்துவது மட்டுமே அவர்கள் செய்ய வேண்டிய பணியாக இருந்தது. இரண்டு உதவியாளர்களின் உதவியுடன், லெவ் ஒரே நாளில் சுவர்களை அதன் இடத்தில் பொருத்திவிட்டு, மறுநாள் கான்கிரீட் கலவையை அதில் ஊற்றினான். அவைகள் ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைய சில நாட்கள் தேவைப்படும். பின்பு அவன் முன்பே சொல்லி வைத்திருந்த பொருட்களை, அவன் பெற்றுக்கொள்ளப்போகும் தேதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, தொழிற்சாலையை அழைத்துப்பேசினான். அவைகளை விநியோகம் செய்வதற்கு ஒரு வார காலம் எடுக்கும் என்று அறிந்துகொண்டான். இதுவும் நல்லதுதான், கான்கிரீட் ஒருங்கிணைவதற்கு எடுத்துக்கொள்ளும் காலத்திற்கும், பொருட்கள் வந்து சேரும் காலத்திற்கும் சரியாக இருக்கும் என்று தனக்குள்ளே எண்ணினான்.

லெவ் இங்கு வந்தபின்பு, தன்னுடைய வேலைகளுக்கு மத்தியிலும் அங்கிருந்த தேவாலயத்தைக் கண்டுபிடித்திருந்தான். லெவ் அன்று, துதிப்பாடல்கள் தொடங்கும் வேளையில்தான் ஆலயத்திற்கு வந்தடைந்தான். அதனால் அவன் பின் வரிசையில் அமர வேண்டியிருந்தது. பாடல்கள் அருமையாக இருந்தது மற்றும் அப்பாடல் வரிகள், பரலோகத்திற்குச் செல்லும் ஜெபத்தைப் போல இருந்தது.

வேதாகமம் பற்றித் தெளிவான விளக்கம் அளிப்பவராகப் போதகர் இருந்தார். மேலும் நீண்ட காலமாக திரும்பக்கொடுத்தலைப் பற்றின சத்தியமானது ஏன் இழக்கப்பட்டிருந்தது? என்பதைக் குறித்தும் சுருக்கமாகப் பேசினார்.

"உலகமானது, வேதாகமங்களினாலும் மற்றும் கற்றறிந்த அறிஞர்களினாலும் நிரம்பிய நிலையை அடைந்தபோது, மனுக்குலத்திற்கான தேவனின் உண்மையான நோக்கமானது மறக்கப்பட்டுப் போனது. தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று இப்போது நாம் அறிவோம். ஏனென்றால் நம்மைச் சுற்றிலும் நடந்து கொண்டிருக்கிறவைகளைக் காண்கிறோம். முற்காலத்தில், இப்போது நடந்துகொண்டிருக்கும் காரியங்களை அவர்கள் முன்னறிந்திருக்கவில்லை. வேதாகமம் இவற்றைக் குறித்து வெளிப்படையாகப் பேசியிருந்த போதிலும், அவர்கள் அறிந்திருக்கவில்லை. இருப்பினும், அப்போதும் தேவனுடைய திட்டத்தின் இந்த அம்சத்தைப்பற்றி வெளிப்படையாகக் கூறிய ஆண்களும் பெண்களும் இருந்தனர். அவர்களுக்கே இத்திட்டம் உண்மையானதாகத் தெரிந்தது, ஆனால் அவர்கள் கற்பனைத் திறன் கொண்டவர்கள் என்று நிராகரிக்கப்பட்டனர். யார் சத்தியத்தைக் கூறினார்கள், யார் சத்தியத்தைக் கூறவில்லை என்று இப்போது நமக்குத் தெரிகிறது. கடந்துபோகும் காலமானது, சத்தியம் எது என்றும், அசத்தியம் எது என்றும் மெய்ப்பித்துக் காட்டும்" என்று போதகர் போதித்தார்.

அவரது பிரசங்கம் சுருக்கமாக இருந்தது மற்றும் முடிவில் அவர் ஆசீர்வாதமான திரும்பக்கொடுத்தலின் காலத்தை முன்னறிவிக்கும் வேதவசனங்களை மேற்கோள்காட்டினார்.

முடிவுப் பாடல் மற்றும் ஜெபத்திற்குப் பிறகு, உத்வேகம் அளிக்கக்கூடிய வகையில் இருந்த அவருடைய விளக்கவுரைக்கு நன்றி செலுத்துவதற்காக லெவ் முன்பகுதிக்குச் சென்றான். லெவ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். "என் பெயர் லெவ் ஆரோன், நான் இங்கு வழிபாட்டுச் சேவைக்கு வந்தேன். உங்கள் பிரசங்கத்தைக் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்பதை உங்களிடம் நான் கட்டாயம் தெரிவிக்க வேண்டும். நான் எப்போதும் தேவனுடைய வார்த்தையை

மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பிரசங்கிக்கப்படும் பிரசங்கத்தையே கேட்க விரும்புவேன். நீங்கள் நீண்ட காலமாகவே போதகராக இருக்கிறீர்களா? என்று கேட்டான்.

## அலோயிஸ் ஹைதர் தனது கதையைக் கூறுதல்

"என்னுடைய பெயர் அலொயிஸ் ஹைதர். நான் எருசலேமைக் கைப்பற்றுவதற்கு எதிரானப் போரில் மரித்தேன். உயிர்த்தெழுந்தபோது, நான் தவறாக வழிநடத்தப்பட்டிருந்ததை உணர்ந்துகொண்டேன். தேவனுடைய வார்த்தையில் இருந்த சத்தியத்தை இப்போது நான் புரிந்துகொண்ட பின்பு, இனி தவறாக வழிநடத்தப்படுவதற்கு என்னை நான் ஒப்புக்கொடுக்கக் கூடாது என்று முடிவெடுத்தேன். தற்போதைய நிகழ்வுகளின் யதார்த்தத்தை உணர்ந்தபோது, மதம் சம்பந்தமாக நான் கற்றுக்கொண்ட பெரும் பகுதியானது, கிறிஸ்துவின் திரும்பி வருதலின் நோக்கத்தில் இருந்த உண்மையை முற்றிலும் மறைத்திருக்கிறது என்பதைக் கண்டுகொண்டேன். முன்பு என்னுடைய கண்களுக்கு குருடாக்கப்பட்டிருந்த, அனைத்துக் காரியங்களையும் இப்போது முற்பிதாக்களின் தலைமையின் கீழ் நான் தொடர்ந்து கற்று வருகிறேன்" என்றார்.

"அலோயிஸ், நானும் எருசலேமுக்கு எதிராக நடந்த போரிலேயே மரித்திருந்தேன். ஆனால் நான் மறுமுனையிலிருந்து போர்செய்தேன். மதம் சம்பந்தமாக நான் கற்றுக்கொண்ட பெரும் பகுதியும் கிறிஸ்துவைக் குறித்த உண்மையிலிருந்து, என் கண்களைக் குருடாக்கியிருந்ததை, நான் உயிர்த்தெழுந்தபோது கண்டுகொண்டேன். உங்களைப்போலவே நானும் வேதாகமத்தைப் படிக்கத் தொடங்கினேன் மற்றும் உங்களுடைய முடிவுக்கு நானும் வந்தேன். இங்கே நாம் இருவரும் இரண்டு வேறுபட்ட மதப் பின்னணியிலிருந்து வந்தவர்களாக நிற்கிறோம். இருவருமே குழப்பமானப் போதனைகளிலிருந்து வந்திருக்கிறோம். இப்போது அனைத்தும் எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது. நாம் இருவரும் முற்றிலும் மாறுபட்ட இரண்டு வெவ்வேறு கோணங்களிலிருந்து, ஒரே விதமானப் புரிதலுக்குள் இப்போது வந்திருக்கிறோம். தேவன் மகிமைப்படுவாராக" என்று லெவ் கூறினான்.

இந்தச் சந்திப்பு அலோயிஸ் உடனான நெருங்கிய நட்பிற்கு வித்திட்டது. அவர் மிகவும் நேர்மையானவராகவும், ஊக்கம் நிறைந்த மனிதராகவும் காணப்பட்டார். லெவ், அவருடைய நேர்மையையும், தாழ்மையையும் விரும்பினான். மேலும் அவர் வேதாகமத்தை நன்கு அறிந்தவராக இருந்தார். அவருடைய போதனைகள் எப்போதும் நன்கு ஆராயப்பட்டு பிரசங்கிக்கப்பட்டதாக இருந்தது. அவருடனான சகோதர ஐக்கியத்தை ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொள்வதில் லெவ் மகிழ்ச்சியடைந்தான்.

ஒருநாள் அலோயிஸ், லெவ் என்ன செய்கிறார் என்பதைப் பற்றிக் கேட்டார். தான் ஒருவர் வீட்டினைக் கட்டுவதற்கு உதவுவதாகவும், அவர் ஜீவனுக்குள் திரும்புவதற்கான ஏற்பாடுகளில் தன்னார்வத் தொண்டு செய்வதற்கு ஒருவரும் அவருக்காகப் பொறுப்பெடுத்துக்கொள்ள முன்வரவில்லை என்றும் மற்றும் தனக்கும் சில மாதங்கள் தன்னார்வத் தொண்டு செய்வதற்கான நேரம் கிடைத்ததால் தான் உதவிசெய்வதாகவும் லெவ் கூறினான்.

அதைக் கேட்டதில் அவர் மிகவும் மகிழ்ந்தார். "உங்களுக்கு உதவுவதில் நானும் மகிழ்ச்சி அடைவேன். உங்களுடைய முகவரியை என்னிடம் தாருங்கள் லெவ். நாளைய வழிபாட்டிற்குப் பிறகு நான் அங்கு வருகிறேன்" என்றார்.

அன்றைய நாளின் காலை உணவிற்காக லெவ் வீட்டுற்குத் திரும்பினான். அவன் பெற்றுக்கொள்ளப்போகும் கூடுதல் உதவியால் ஈர்க்கப்பட்டிருந்தான் மற்றும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். அது அவனுடைய பணியை எளிதாக்கும் என்று நினைத்தான். தன்னோடு போர் புரிந்த ஒருவரோடு இணைந்து பணியாற்றப் போவதை நினைத்துப்பார்ப்பதற்கு அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்தப் போர் எவ்வளவு தீமைகளை உண்டாக்கியது என்று இப்போது தெளிவாகத் தெரிகிறது. போரைப் பற்றிக் கூறப்பட்டிருந்தவைகள் எல்லாம் மிகைப்படுத்தப்பட்டு கூறப்பட்ட பிரச்சாரங்களாகவே இருந்தன. இருப்பினும், நவீன காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த ஏமாற்றுக்காரருக்குத் தேவையானதை வழங்குவதற்காகவே, தான் இப்போது பணியாற்றி வருகிறான் என்பதை லெவ் அறிந்திருந்தான். இது விசித்திரமான உணர்வைத் தந்தது. உண்மையில் அவன் இந்தப் பணியைச் செய்வதற்கு எதிர்பார்ப்போடு காத்திருக்கவில்லை. லெவ், தனது முந்தைய மற்றும் தற்போதைய வாழ்க்கையிலும் வெறுப்புணர்வையும், தவறான எண்ணங்களையும் கொண்டிருந்த ஜனங்களையும் கையாண்டிருக்கிறான்.

மனிதனால் சாத்தியம் என்று நினைத்ததைவிட அதிகமான வன்முறை மற்றும் வெறுப்புணர்வை திட்டமிடுவதில், தானாக முன்வந்து விருப்பத்துடன் சாத்தானின் கருவியாக மாறியிருந்த மனிதர் ஒருவர் இங்கே இருந்தான். லெவ், ஹிட்லரைப் பற்றிச் சேகரித்த அனைத்துத் தகவல்களிலும் இருந்து அவர் முற்றிலும் உணர்ச்சியற்ற மனிதர் அல்ல என்பதைப் புரிந்துகொண்டிருந்தான். யூதர்கள் இயந்திரத் துப்பாக்கியில் சுட்டு வீழ்த்தப்படுவதை காண்பதற்கான ஒரு சிறப்பு அமர்வுக்கு, அவருடைய தளபதிகள் அவரை அழைத்தபோது ஹிட்லர் அங்குச் சென்றிருந்தார். ஆனால் அவர் அங்கு நடந்ததைக் கண்டபோது, அது அவரது வயிற்றைப் பிசைவது போல இருந்தது. அது அவரின் உடல் நலத்தைப் பாதிக்கச்செய்தது. இந்த வகையான கொலை நடவடிக்கைகள் ஜெர்மனியப் படை வீரர்களை, மிருகத்தனமாக மாற்றி இருக்கிறது என்று நினைத்தார். கொலை செய்வதை நிறுத்தவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லை. ஆனால் அதனுடைய கொடூரத்தன்மை குறைவானதாக இருக்க வேண்டும் என்று எண்ணினார்.

மனோதத்துவ நிபுணர்களின் உதவியோடு, விஷவாயு நிறைந்த அறையோடு இணைந்திருக்கும் தகன அறையைப் பயன்படுத்தலாம் என்று தீர்மானித்தார். ஜனங்கள் அதற்குள்ளாக பலவந்தமாக அனுப்பப்பட்ட போது, அவர்கள் மெல்லிய அழகான இசையை இசைத்தனர். உண்மையில் அது ஒரு கொடூரமான மரணத்தைத் தருவிக்கும், விஷ வாயு நிறைந்த அறையாக இருந்தது. கொலை செய்வதற்காக இதை விடச் சிறந்ததொரு கருவியை சாத்தான் உருவாக்கியிருக்க முடியாது.

வீட்டினைக் கட்டுவதற்குத் தேவையான உதிரிப் பொருட்கள் ட்ரக்குகளில் வந்திறங்கியது. அவற்றை ட்ரக்குகளிலிருந்து இறக்கி, எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்த உதவுவதற்கு இருவர் அங்கு இருந்தனர். அன்று லெவ்விற்கு, அலோயிஸ் உதவினார். அந்த உதவி மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாக இருந்தது. திறமைமிக்கவராகவும் மற்றும் கட்டுமானத்தைப் பற்றி அதிகம் தெரிந்தவராகவும் அவர் இருந்தார். ஏற்கெனவே அநேக வீடுகளைக் கட்டுவதற்கு உதவியிருந்தார். அவர் பயபக்தியுள்ள மனிதராக இருந்தார். பகல் வேளையில் அவர் அவ்வப்போது பாடல்களைப் பாடுவதை லெவ் கேட்டான். அவர் வேலை செய்யும்போது கடிகாரத்தைப் பார்ப்பதே இல்லை. சராசரி வேலை நேரத்திற்குப் பிறகும் அவர், லெவ்வுடன் தொடர்ந்து பல மணி நேரங்கள் வேலை செய்தார். அவர் அஸ்திவாரத்தின் மீது சுவர்களைப் பொருத்துவதற்குத் தேவையானப் பொருட்களை, உயர் பளுதூக்கியில் (cranes) எடுத்துச் செல்வதற்கு வசதியாக பொருட்களை வரிசைப்படுத்துவதற்கு உதவினார். வீட்டினுடைய முக்கியமான கட்டமைப்புகளைக் கட்டும் பெரும்பாலான பணி ஒரு நாளிலேயே முடிவடைந்தது. வீட்டின் மேற்கூரையை மறுநாள் போடலாம் என்று எண்ணினர். இந்த வீட்டினைக் கட்டுவதற்கான வேலைகள் மிக வேகமாக நடந்தன. ஏனென்றால் அவற்றில் பெரும்பாலானவைகள் முன்கூட்டியே செய்யப்பட்டிருந்தன.

மறுநாள் அவர்கள் மேற்கூரையைப் பொருத்தினார்கள். மேற்கூரையைப் பொருத்தியதால் இனி மற்ற வேலைகளைப் பொறுமையாக நேரம் எடுத்துச் செய்யலாம் என எண்ணினர். அனைத்து மின்கம்பி அமைத்தல் (wiring), வெப்பமூட்டும் அமைப்புகள் (Heating system) மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு (septic) ஆகியவைகளைப் பொருத்தும் வேலைகளுக்கு அதிக நேரம் எடுக்கலாம். வீட்டினுடைய வடிவமைப்பு நுட்பத்துடன் அருமையாக இருந்தது. இப்போதெல்லாம் வீட்டைக் கட்டுவது எவ்வளவு எளிதானதாக உள்ளது என்று லெவ் ஆச்சரியப்பட்டான். எப்போதாவது அவனுக்குக் கூடுதல் உதவியும் கிடைத்தது. ஆனால் அலோயிஸ் ஒவ்வொரு நாளும் தவறாமல் அங்கு வந்தார். உயிர்த்தெழுப்பப்படப் போகும் நபர், முந்தைய நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதை அலோயிஸ் அறிந்திருந்தார். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களுள் பலர் ஜீவனுக்குள் திரும்பத் தொடங்கியிருந்தனர். மேலும் உலகம் மிகவும் மாறிவிட்டிருந்ததைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்படுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கை எளிமையாக இருந்தது மட்டுமல்லாமல் எவ்வளவு பாதுகாப்பானதாகவும், எவ்வளவு சமாதானமாகவும் இருக்கிறது என்று எண்ணி வியந்தனர். அனைவரும் பொருளாதாரத்திலும், வாழ்க்கைத் தரத்திலும் உயர்ந்த நிலைக்குத் திரும்பியிருந்தனர். கடந்த காலங்களில் அவர்கள் வேண்டி தேடிக்கொண்டிருந்த பாதுகாப்பு, பற்றாக்குறையற்ற உணவு, போதுமான அளவு ஆற்றல் மற்றும் அவர்களுக்குச் சொந்தமான பரதீஸ் போன்றதான ஒரு பகுதி, இவை அனைத்தும் அனைவருக்கும் இப்போது கிடைத்திருப்பதைக் கண்டு வியந்தனர்.

## கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது

ஆறு வாரங்களுக்குப் பிறகு கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டது. அவர்கள் திட்டமிட்டிருந்ததை விட இரண்டு வாரங்கள் முன்னதாகவே முடிந்திருந்தது. லெவ் வீட்டிற்குத் தேவையான

பொருட்களையும், ஹிட்லருக்குத் தேவையான ஆடைகளையும் தேர்ந்தெடுத்துச் சேகரித்திருந்தான். ஒரு வசதியான வீட்டிற்குத் தேவையான அனைத்தையும் சேர்த்திருந்தான். கார் வைத்திருந்தது அவசியமான, பல்வேறு வகையானப் பொருட்களை வாங்கிவருவதற்கு லெவ்விற்கு உதவியது. லெவ், இன்றைய உலகத்தின் யதார்த்தத்தைக் கூறும் சில நல்ல புத்தகங்களையும், ஒரு வேதாகமத்தையும்கூட வாங்கி வைத்திருந்தான். மழைக் காலங்களின்போது ஹிட்லர் படிப்பதற்காக, இவற்றை வீட்டில் இருந்த ஒரு சிறிய நூலக அறையில் வைத்துவிடலாம் என்று லெவ் நினைத்திருந்தான். லெவ், முற்பிதாக்களுக்கு, குறிப்பாக யோவான்ஸ்நானன் அவர்களுக்கு அழைத்து ஹிட்லர் உயிர்த்தெழுவதற்குத் தேவையான அனைத்தும் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்தான்.

ஈவா ப்ரானுடைய வீட்டிற்குத் தேவையான அனைத்தையும் ரெபெக்காளும், அவளுடைய உதவியாளர்களும் செய்துமுடித்துவிட்டனர் என்பதை லெவ் அறிந்துகொண்டான். இஸ்ரயேலில் இருந்த முற்பிதாக்களை அழைத்து, அனைத்து வேலைகளும் முடிந்துவிட்டதாக ரெபெக்காளும் கூறியிருந்தாள். அடுத்த வாரத்தின் முதல் நாளில் ஈவா ப்ரான் உயிர்த்தெழுப்பப்படுவார் என்பதை ரெபெக்காளும் தெரிந்துகொண்டாள். ஏதேனின் தேநீரும், சிற்றுண்டிக்குச் சிறிய அளவிலான திண்பண்டங்களும் இருக்கின்றன என்பதை ரெபெக்காள் உறுதிசெய்து கொண்டாள். இரண்டு உயிர்த்தெழுதல் கேக்குகளையும் தயார்செய்தாள். ஒன்று ஈவாவுக்கும், மற்றொன்று அன்றைய தினத்திலேயே உயிர்த்தெழும் ஹிட்லருக்குமாகத் தயார்செய்தாள். அவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்து ஜீவனுக்குள் திரும்புவதைக் கொண்டாடுவார்கள் என்பதற்காக அல்ல. மாறாக உண்மை என்னவென்றால், அவர்களை நிலைநிறுத்திக் கொள்ளவும் மற்றும் அவர்கள் ஜீவனோடு இருந்த காலத்தில், அவர்களது வாழ்க்கையில் இருந்த மிகப்பெரிதான தவறினால் உண்டான காரியங்களைக் குறித்த அதிர்ச்சியிலிருந்து மீளும் வரையிலும், இருவருமே ஜீவனுக்குள் திரும்பிய விஷயத்தை லெவ்வும், ரெபெக்காளும் அவர்களிடம் தெரிவிக்கமாட்டார்கள்.

ஹிட்லர் மற்றும் ஈவா, உயிர்த்தெழுவதற்கு முதல் நாள் மாலையில் ரெபெக்காள், லெவ்வை தொலைபேசியில் அழைத்தாள். காரியங்கள் எவ்வாறு இருக்கும் என்பதைக் குறித்து அவள் பயந்திருந்தாள். ஈவா ஜீவனுக்குள் திரும்பிய பின் முதல் சில மணி நேரங்களைத் தன்னால் சமாளிக்க முடியும் என்று ரெபெக்காள் நினைத்தாள், ஏனென்றால் ஈவா அந்த நேரத்தில் தகவல்களை அறிந்துகொள்வதற்கும், வழிகாட்டுதலுக்கும் தன்னையே முற்றிலும் சார்ந்திருப்பார். இருப்பினும் ஈவா தன்னை நிலைப்படுத்திக் கொண்ட பிறகு, தன்னுடைய வாழ்க்கையைத் தானே பார்த்துக்கொள்ள ஆரம்பிக்கும்போது, ஈவாவுடன் இணைந்திருப்பது என்பது ரெபெக்காளுக்கு மன உளைச்சலைத் தரும் ஒன்றாகவே இருக்கும். அவள் லெவ்வை அழைத்து, அவளது வீட்டிற்கு அவனை வரச் சொன்னாள்.

அன்றைய மாலைவேளையை ரெபெக்காளுடன் கழிப்பதற்காகவும், ஹிட்லருக்கான உயிர்த்தெழுதலின் கேக்கை அவளிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காகவும் லெவ் ரெபெக்காளின் வீட்டை நோக்கிக் காரைச் செலுத்தினான். லெவ் இதைப் போன்றக் காரியங்களை அவன் செய்வான் என்று முன்பு யாராவது கூறியிருந்தால், அவன் கடுமையான கோபத்திற்குள்ளாகி இருப்பான். லெவ் தானாகவே முன்வந்து ஒருவருடைய உயிர்த்தெழுதலுக்கு தன்னார்வத் தொண்டு செய்ய விரும்பி கையை உயர்த்திக் காட்டவேண்டுமானால், லெவ் தேர்ந்தெடுக்கும் கடைசி மனிதர் ஹிட்லராகத்தான் இருப்பார். இருப்பினும், ஹிட்லர் மீது முன்பு அவனுக்கிருந்த வெறுப்பானது, இப்போது ஹிட்லர் என்ற தனி மனிதரின் மீதான வெறுப்பாக இல்லாமல், அவர் செய்த செயல்களின் மீதான வெறுப்பாக மாறியிருந்ததை லெவ் உணர்ந்தான். ஒருவேளை அந்த நபரும், அவரது செயல்களும் பிரிக்க முடியாதவைகளாக இருக்கலாம். ஆனால் இரண்டும் வெவ்வேறு என்பதைக் காலம் வெளிப்படுத்தும்.

ஹிட்லரின் முன்னாள் காதலி கெலி, சில நாட்களுக்கு முன்பாகவே ஜீவனுக்குள் திரும்பியிருந்தார் என்பதை லெவ் அறிந்திருந்தான். அவர் பிரானாவ்விற்குச் சற்று அருகில் தான் வசித்தார். நகரத்தில் இருந்து கிட்டத்தட்ட முப்பத்தி ஐந்து மைல் தொலைவில் வசித்தார். ஹிட்லர் அவரை ஓர் அடுக்குமாடிக் கட்டடக் குடியிருப்பில் தனிமைப்படுத்தி வைத்திருந்தபோது, கெலி தன் உயிரை மாய்த்துக் கொண்டார். கெலி அந்தப் பகுதியில் வசித்த மற்ற இளைஞர்களுடன் ஊர் சுற்றச் செல்வதைத் தடுக்கவேண்டும் என்பதற்காக இரண்டு SA அதிகாரிகளை நியமித்திருந்தார். கெலி உயிர்த்தெழுந்தத் தகவலை அடால்ஃப் ஹிட்லரிடம் தக்கதருணம் வரும்போது லெவ் தெரிவிப்பான் மற்றும் ஈவாவைப் பற்றியும் சரியான நேரம் வரும்போது கூறுவான்.

அந்த நாளின் மாலை வேளையில், ரெபெக்காளும், லெவ்வும் தங்களுக்கிருந்த பயத்தைக் குறித்து ஒருவரோடொருவர் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் இருவரும் பதற்றத்துடன் காணப்பட்டனர். அவர்கள் செய்யும்படியாக கொடுக்கப்பட்ட வேலையின்மீது அவர்களுக்கு வெறுப்பு இருந்தது. முற்பிதாக்களைத் தவிர வேறு யாராலும் இவர்களை இந்தப் பணியை செய்வதற்குக் கேட்டிருந்திருக்க முடியாது. இயேசு, யோவான்ஸ்நானனைப் பார்த்து "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவன் எழும்பினதில்லை (மத்தேயு 11:11) என்று கூறியிருக்கிறார். அப்பேற்பட்டவர் தங்களிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்ததாலேயே, இவர்கள் இணங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

லெவ்வும், ரெபெக்காளும் அனைத்து முற்பிதாக்களின் மீதும் மதிப்பும், பயபக்தியும் கொண்டிருந்தனர். ஆனால் மற்றவர்களை விட, முற்பிதா யோவான்ஸ்நானனிடமிருந்து வந்த இந்தக் கட்டளை, அவர் மீது இன்னும் அதிக பயபக்தியை லெவ்விற்கும், ரெபெக்காளிற்கும் உண்டாக்கியிருந்தது. தேவனையும், கிறிஸ்துவையும் ஒரு மனிதன் உணர்ந்துகொள்ளும்போது எப்படி இருக்குமோ, முற்பிதா யோவான்ஸ்நானனுடனானத் தொடர்பு, அந்த உணர்வை அவர்களுக்குத் தந்தது. அவரிடமிருந்து வெளிப்பட்ட அரவணைப்பு அவர்களைத் திணறடிக்கச் செய்தது. ஹிட்லரினால் பாதிக்கப்பட்டவர்கள் பலர், அவர் செய்தவற்றிற்காக ஹிட்லரை வெறுக்ககூடியவர்களாக இருக்கலாம் என்பதை முற்பிதாக்கள் அறிந்திருந்தனர். இருப்பினும், அவர்கள் அவற்றைக் குறித்து கவலைகொள்ளப் போவதில்லை. முற்பிதாக்கள், தீமைக்குப் பதிலாக நன்மையையே கைமாறாகக் கொடுக்கின்றனர் மற்றும் இதுவே மறுசீரமைப்பின் காலத்தில் இருக்கவேண்டிய சரியான வழிமுறையும் ஆகும்.

லெவ் வழக்கத்தைவிட அதிகமான நேரம் ரெபெக்காளின் வீட்டில் தங்கியிருந்தான். அவர்கள் இருவருமே தூங்குவதற்குச் சற்று சிரமம் இருக்கலாம் என்று நினைத்ததால், விரைவாக உறங்கச் செல்வதை விரும்பவில்லை. லெவ்வினுடைய வீட்டிற்குத் திரும்புவதற்கு அரை மணி நேரத்திற்கும் குறைவான நேரமே எடுக்கும். அதனால் அவன் நள்ளிரவு வரை ரெபெக்காளின் வீட்டில் தங்கியிருந்தான். இறுதியில் ஒரு மென்மையான முத்தம் மற்றும் தழுவுதலோடு அன்றைய நாளின் இரவில் இருவரும் பிரிந்தனர். லெவ் தன்னுடைய வீட்டை அடைந்ததும், ரெபெக்காளிடம் இருந்து வாங்கி வந்திருந்த உயிர்த்தெழுதலின் கேக்கை குளிர்சாதனப் பெட்டியில் வைத்தான்.

அன்றைய நாளின் இரவில், லெவ் அதிகமான நேரத்தை ஜெபத்தில் கழித்தான். ரெபெக்காளும் அதைத் தான் செய்திருப்பாள் என்று லெவ் நினைத்தான். அதன் பிறகு அவன் நன்றாகத் தூங்கினான். இருப்பினும், காலை கண் விழிக்கையில் பயத்துடனேயே விழித்தான். பொதுவாகவே அவன் படுக்கையில் இருந்து எழும்புவதற்கு ஆர்வமுள்ளவனாக இருப்பான். ஆனால் இன்றோ தன்னைப் போர்வைக்குள்ளாக மறைத்துக்கொள்ளவே விரும்பினான். இருப்பினும், சூரிய வெளிச்சம் ஜன்னல் வழியாக வரத் தொடங்கியதும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுந்தான். பின்பு வெளியே சென்று அன்றைய நாளிற்கான ஏதேன் பழத்தைச் சேகரித்தான். ஹிட்லர் தன் வாழ்நாளின் பெரும்பாலான நாட்களில் சைவ உணவை உண்பவராகவே இருந்தார் என்று லெவ் கேள்விப்பட்டிருந்ததால், அவர் ஏதேன் பழத்தை உண்பதற்குத் தயாராக இருப்பார் என்று எண்ணினான்.

* * *

*"துன்மார்க்கனுக்குத் தயை செய்தாலும் நீதியைக் கற்றுக் கொள்ளான்; நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதே போகிறான்."*
**(ஏசாயா 26:10)**

# அத்தியாயம் - 33

லெவ் அமைதியாக அமர்ந்தவாறு, தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு முயன்று கொண்டிருந்தான். ஆனால் அவனால் அதில் கவனத்தைச் செலுத்தமுடியாததை உணர்ந்தான். அவன் ஜீவனுக்குள் திரும்பியதிலிருந்து இதுவரையிலும் இதைப் போன்றதான ஒரு பதட்டத்துடன் இருந்ததே இல்லை. ஹிட்லர் விழித்துக்கொள்வதற்கு என்று குறிக்கப்பட்ட நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவர் ஜீவன் பெற்றுக்கொண்டார் என்பதற்கான அடையாளமாக ஏதேனும் சத்தம் கேட்கின்றதா என்று லெவ் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தான். சில இழுப்பறைகளைத் (டிராவை) திறப்பதுபோன்ற ஏதோ சத்தம் கேட்டது. ஹிட்லர் தனக்கான உடைகளைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்று லெவ் யூகித்தான். ஒருவேளை அவர் உடைகளை அணிந்துகொண்டால், ஜன்னல் வழியாகவோ அல்லது வீட்டின் முன்புறக் கதவு வழியாகவோ வேகமாக வெளியே சென்று விடுவார் என்பதால், அதனைத் தடுப்பதற்காக லெவ் வேண்டுமென்றே உடைகளை ஹிட்லரின் பார்வைக்குப் படாதவாறு வைத்திருந்தான். அவர் நாகரீகமான மனிதரானதால் தனது உடலை மறைத்துக் கொள்வதற்கு எதையாவது செய்ய முயல்வார் என்று லெவ் எண்ணினான்.

சில நிமிடங்களுக்குப் பிறகு கதவுகளைத் திறந்து ஹிட்லர் எட்டிப் பார்ப்பதை லெவ் கண்டான். ஹிட்லர் தனது இடுப்பில் ஒரு டவலைச் சுற்றி இருப்பதைக் கண்டான். பின்பு, "அடால்ஃப் காலை வணக்கம், நீங்கள் அணிவதற்கென்று சில உடைகளை, நான் கதவுக்கு வெளியே வைத்திருக்கிறேன்" என்றான். கதவை நன்றாகத் திறந்து, தனது கைகளை நீட்டி உடைகளை எடுத்துக்கொண்டு கதவுகளை அறைந்து சாத்தினார். அவர் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

விரைவாக அவர் வெளியே வந்தார். லெவ் அவரிடம் வணக்கத்தைத் தெரிவித்தான். அவர் பதிலுக்கு எதுவும் கூறவில்லை. குழப்பமாகவும், நிச்சயமற்றவராகவும் அவர் இருப்பதுபோல் லெவ்விற்குத் தோன்றியது. இறுதியில் கரகரப்பான குரலில், "நான் எங்கே இருக்கிறேன்?" என்று அதிகாரத்துடன் கேள்வி எழுப்பினார்.

ஹிட்லர் இப்போது எவ்வித அதிகாரத்திலும் இல்லை என்பதை அவருக்குத் தெரிவிக்கும் விதமாக, லெவ் அவரை நிதானமாக நீண்ட நேரம் பார்த்துக்கொண்டே நின்றான்.

"நான் எங்கே இருக்கிறேன்?" என்று அகந்தையுடன், உரத்த குரலில் வினவினார்.

அவருடைய குரலில் இருந்து, அவர் மற்றவர்களை அடக்கி ஆளும் மனிதர் என்பதை லெவ்வால் உணரமுடிந்தது. லெவ் பதிலேதும் கூறாமல் தொடர்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

பின்பு "நீங்கள் தான் அடால்ஃப் ஹிட்லர் ஸ்கிக்ல் க்ரூபரா?" என்று லெவ் கேட்டான்.

லெவ் அவ்வாறு கேட்டது ஹிட்லரை அதிர்ச்சியடையச் செய்தது.

"உனக்கு எவ்வாறு என் பெயர் தெரியும்? எனக்கு உன்னைத் தெரியாது, உன்னுடைய தொலைபேசியை நான் உபயோகிக்க நீ அனுமதித்தால், நான் என்னுடைய தலைமையகத்தை அழைத்து உன் வீட்டிலிருந்து என்னை அழைத்துச் செல்லக் கூறுவேன்" என்று அதே அதிகாரத் தொனியில் மீண்டும் கூறினார்.

"இதோ தொலைபேசி" என்று கூறியவாறு லெவ் தனது கையடக்கத் தொலைபேசியை அவரிடம் நீட்டினான்.

ஹிட்லர் கோபமாக "நீ என்ன கேலி செய்கிறாயா? இந்தத் தொலைபேசியில் கம்பி இணைப்பு இல்லையே?" என்றார்.

"இப்போது கம்பி இணைப்புத் தேவை இல்லை. நீங்கள் எண்களை டயல் செய்துவிட்டு மறுமுனையில் என்ன சொல்கிறார்கள் என்று பாருங்கள். நீங்கள் உபயோகிக்கும் தொலைபேசியையும், உங்களது சௌகரியத்துக்காக நான் இங்கே வைத்திருக்கிறேன்" என்றான்.

ஹிட்லர் விரைவாக அவருக்குப் பழக்கமான எண்களை டயல் செய்தார். தொலைபேசி ஒலிப்பதைக் கேட்டதில் ஹிட்லரின் கோபம் சற்று தணிந்தது. இறுதியில் மறுமுனையில் இருந்து, இந்த எண் இப்போது செயலில் இல்லை என்ற பதிலே வந்தது. அவர் மீண்டும் கோபமாகி தொலைபேசியைத் தரையில் வீசினார்.

ஹிட்லர் தன்னைத் தாக்க முற்பட்டால், அவ்வப்போது தேவ தூதர்கள் அவரைத் தடுத்து நிறுத்துவார்கள் என்று லெவ் அறிந்திருந்தான். அது ஹிட்லருக்கு நன்மையாகத்தான் இருக்கும் என்றும் நினைத்தான். லெவ் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக நின்று கொண்டிருந்தான்.

ஹிட்லர் மீண்டும் தொலைபேசியை எடுத்து மற்றொரு எண்ணிற்கு டயல் செய்வதற்கு முன்னதாகவே, இந்த எண்ணும் செயலில் இருக்காது என்று லெவ் கூறினான்.

ஹிட்லர் கோபத்துடன் குனிந்து தொலைபேசியை எடுத்து இரண்டாவது எண்ணைச் சுழற்றினார். அப்போதும் அவருக்கு அதே பதிலே கிடைத்தது. உடனடியாகத் தனக்கு எங்குமே உதவி கிடைக்காது என்பதை ஹிட்லர் உணர்ந்துகொண்டார். நம்பமுடியாமல் சில நொடிகள் வெறித்துப் பார்த்தார். இந்தப் பெரிய உலகத்தில், அவர் ஒரு சாதாரண மனிதனாகவே இருக்கிறார் என்ற எண்ணம் அவரை ஆட்கொள்ளத் தொடங்கியது. அவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாதவாறு தனிமைப்படுத்தப்பட்டிருப்பதை உணர்ந்துபோது, தன்னுடைய நடத்தையை மாற்றிக்கொண்டார். லெவ்வை மிரட்டியோ அல்லது ஏதேனும் சூழ்ச்சிசெய்தோ, தான் விரும்புவதைச் செய்யமுடியாது என்பதை ஹிட்லர் உணர்ந்துகொண்டார். மெதுவாக அவர் அமைதியாகி, சாதாரணமான குரலில் பேசத்தொடங்கினார்.

லெவ், ஹிட்லருக்காகப் பரிதாபப்பட்டான். முன்போ, கோடிக்கணக்கான ஜனங்கள் இவருக்கு முன்பாக நின்று, இவரைப் பணிந்து, இவரையே அவர்களது தெய்வமாக வணங்கினார்கள். இவர் கூறும் ஒரு வார்த்தை மட்டுமே, அவர்களுடைய ஜீவனையோ அல்லது மரணத்தையோ தீர்மானித்தது. இப்போது திடீரென்று அவரைச் சுற்றி ஒருவர்கூட இல்லாத தனிநபராக நிற்கிறார். ஒரு நொடியில் அதிகாரத்தையும், மதிப்பையும் இழந்தது அவருக்கு அவமானகரமாக இருக்கும். ஆனால் எல்லாம் முடிந்துவிட்டன. அவரால் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்று லெவ் எண்ணினான்.

## ஹிட்லர் தனது அணுகுமுறையை மாற்றிக்கொள்ளுதல்

ஹிட்லருடன் நடந்த முதல் கட்டப் போட்டியில் வெற்றி பெற்றதில் லெவ் திருப்தியுற்றான். இனி தனது புத்திசாலித்தனத்தினாலும், சூழ்ச்சியினாலும் மட்டுமே வாழமுடியும் என்று எண்ணியவாறு ஹிட்லர் தனது அணுகுமுறையைச் சற்று மாற்றிக்கொண்டார். லெவ்வின் உதவியின்றி தன்னால் எதுவும் செய்யமுடியாது, அதே நேரத்தில் தனது அதிகாரத்தை லெவ்வின் மேல் செலுத்தவும் முடியாது என்பதை அறிந்தவுடன், ஹிட்லர் தனது உத்திகளை மாற்றிக் கொண்டார். அவர் ஒரு சாதாரண மனிதனாக, மென்மையாகப் பேசுவதற்கு முடிவுசெய்தார். ஏனென்றால் இனி யார்மீதும் தான் அதிகாரம் செலுத்தமுடியாது என்பதை ஹிட்லர் அறிந்துகொண்டதால், ஒரு சாதாரண மனிதனாக மாறியிருந்தார். அவரது இந்த மாற்றத்தை லெவ் வரவேற்றான்.

தான் இருந்த வீடு மற்றும் அதனைச் சுற்றிலும் இருந்த அழகான சுற்றுச்சூழலுக்காக ஹிட்லர், லெவ்வைப் பாராட்டினார். லெவ் அன்புடன் தனது நன்றியைத் தெரிவித்தான். ஆனால் அப்போதைக்கு அது அவருடைய வீடு என்பதை ஹிட்லரிடம் கூறுவதை லெவ் விரும்பவில்லை.

ஒருவேளை அவன் உண்மையைக் கூறினால், ஹிட்லர் அவனை வீட்டைவிட்டு வெளியேறுமாறு கூறிவிடுவாரோ என்று லெவ் அஞ்சினான்.

"ஹிட்லருடனான இந்த முதல் சுற்றைக் கடந்து, அடுத்தக் கட்டமாக லெவ் அவரை அன்பினால் வெற்றிகொள்வதற்கு முயன்றான். லெவ், ஹிட்லரைத் தன்னுடன் சமையலறைக்கு வருமாறு அழைத்தான். மேலும் குடிப்பதற்கு என்ன விரும்புகிறார் என்றும் அவரிடம் கேட்டான். "பொதுவாக நான் காபி அருந்துவதில்லை. ஆனால் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், இன்று சிறிது காபி அருந்த விரும்புகிறேன், நான் மிகவும் எரிச்சலடைந்துள்ளேன். இது எந்த இடம் என்று எனக்குத் தெரியவில்லை, நீங்கள் யார் என்றும் எனக்குத் தெரியவில்லை. நான் ஏன் முற்றிலும் புதுமையான சூழலில் இருக்கிறேன். என்னைச் சற்று பொறுத்துக்கொள்ளுங்கள். நான் மிகவும் விரக்தியில் இருக்கின்றேன். என்னுடைய மீசையை யார் எடுத்தது?" என்று ஹிட்லர் வினவினார்.

"உங்களுக்கு நிறைய கேள்விகள் இருக்கும். இங்கே காபி இல்லை என்பதற்காக வருந்துகிறேன். ஆனால் நல்ல ஆரோக்கியம் மற்றும் ஊக்கம் கொடுக்கக்கூடியதுமான புதுவகை தேநீரையே நாங்கள் இங்கு அருந்துகிறோம்" என்று லெவ் கூறினான்.

லெவ் சிறிது தேநீரைக் கோப்பையில் ஊற்றி ஹிட்லருக்கு முன்பாக வைத்தான். ஹிட்லர் ஒரு சாதாரண மனிதனாக நடந்து கொள்வதற்கான இரண்டாவது முயற்சியாக லெவ்விடம் நன்றி கூறினார். பல வருடங்களாக மரணத்திற்குள் இருக்கும் நபரே, ஜீவனுக்குள் திரும்பியவுடன் விரக்தி அடைவார். ஹிட்லரோ ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகளாக மரணத்திற்குள் இருந்து, இப்போது தான் ஜீவன் பெற்றுள்ளார். அதனால் அவருடைய விரக்தி நிலை இன்னும் அதிகமாக இருக்கும் என்று லெவ் அறிந்திருந்தான். லெவ், தோட்டத்திலிருந்து பறித்த ஏதேன் பழங்களை அவருக்கு உண்பதற்குக் கொடுத்தான், இன்னும் சிலவற்றை எடுத்து உண்ணுமாறு அவரை உற்சாகப்படுத்தினான். அவைகள் உண்பதற்கு ஏற்ற பழங்கள்தான் என்ற உறுதியை ஹிட்லருக்குக் கொடுப்பதற்காக, தானும் ஒரு பழத்தை எடுத்துக் கடித்தான். பின்னர் ஹிட்லர் சற்று தயங்கியவாறு, ஒரு பழத்தை எடுத்துக் கடித்தார். அவரது கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. "மிகவும் சுவையாக இருக்கிறது. எனக்குப் பழங்கள் மற்றும் காய்கறிகள் மிகவும் பிடிக்கும். ஆனால் இந்தப் பழத்தை நான் இதுவரையிலும் சுவைத்தது இல்லை. அருமையாக இருக்கிறது. இப்பழம் ஏதாவது வெப்ப மண்டலத் தீவிலிருந்து வருவிக்கப்பட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை, இது இந்த வீட்டின் பின்புறத்தில் உள்ள பழத்தோட்டத்திலேயே இருக்கிறது. இங்கு அனைவரும் இதையே முக்கிய உணவாக உண்கிறோம். நீங்கள் இந்தப் பழத்தைச் சாப்பிடும்போது, இது உங்கள் உடலையும், மனதையும் படிப்படியாகப் பரிபூரணத்திற்குள் கொண்டுவரும். நான் நீண்ட நாட்களாக இப்பழத்தைச் சாப்பிட்டு வருகின்றேன்" என்றான்.

"நீங்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது, ஆனால் இந்தப் பழம் சுவையாக இருப்பதாலும், நான் சைவம் மட்டுமே உண்பவனாக இருப்பதாலும், இதை அனுதினமும் சாப்பிடுவதில் எனக்கு எந்த ஒரு ஆட்சேபனையும் இல்லை. நான் இன்னொரு பழம் எடுத்துக் கொள்ளலாமா? சரி, எவ்வாறாயினும் இது எந்த இடம்? நான் எப்படி இங்கே வந்தேன்? என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும். நீ துணிச்சலான இளைஞனாக இருக்கிறாய், என்னுடைய கேள்விகளைப் புறக்கணித்துவிட்டாய். நான் கேள்விகளைக் கேட்கும்போது அதற்கான பதிலை எதிர்பார்ப்பேன் என்று உனக்குப் புரிகிறதா? மனிதர்களைப் பேசவைப்பதற்கு என்னிடம் நாசியின் உள்நாட்டு பாதுகாப்புப் படை (SS-Schutzstaffel Squads) உள்ளது. நீ யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறாய் என்று உனக்குத் தெரியுமா?" என்று ஹிட்லர் கேட்டார்.

## கெஸ்டபோ (நாசிக் கட்சியின் இரகசிய காவல்துறை) மூலம் பயமுறுத்துதல்

"நீங்கள் யார் என்பதையும், மில்லியன் கணக்கான ஜனங்களை எப்படிக் கொன்றீர்கள் என்பதையும் நான் நிச்சயமாக அறிவேன். உங்களது உள்நாட்டு பாதுகாப்புப் படை (SS) இப்போது இங்கு இல்லை. இந்த உலகத்தில் நீங்கள் தனியாக இருக்கிறீர்கள். என்னுடைய உதவியை மட்டுமே சார்ந்துள்ளீர்கள். உங்களுடைய ஆணவமான அச்சுறுத்தல்களை நிறுத்திக்கொள்ளுங்கள். பல மில்லியன் கணக்கான ஜனங்கள் உங்களுடைய கழுத்தை, முடிந்தால் தங்களுடைய கைகளினாலேயே நெறித்துக் கொல்வதற்குக் காத்திருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர்

ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் உங்களுக்கு தெரிவித்தே ஆக வேண்டும். நான், உங்களுடன் இங்கே இருப்பது உங்களது அதிர்ஷ்டம்தான். உங்கள் மீசையோடு நீங்கள் இங்கிருந்து வெளியே சென்றால், உடனடியாக உங்களை அடையாளம் கண்டுகொள்வார்கள். எப்படி இருந்தாலும் நீங்கள் யார் என்று ஜனங்கள் சந்தேகிக்காமல் இருப்பதற்காக நான் மிகவும் கடினமாக முயன்றேன். இன்று உலகில் மிகவும் வெறுக்கப்படும் மற்றும் இழிவாகக் கருதப்படும் மனிதராக நீங்கள் இருக்கிறீர்கள். மற்றவர்கள் உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாதவாறு, நான் உங்களை அவர்களிடமிருந்து மறைப்பதற்கு முயல்கிறேன். உங்களை அடையாளம் கண்டு கொண்டார்களானால் அது மிகப்பெரிய வன்முறையை, பல மில்லியன் கணக்கான ஜனங்களின் இருதயத்தில் உண்டாக்கும்'' என்றான்.

ஹிட்லர் மிகுந்த கோபத்துடன் அமைதியாக இருந்தார். அவர் ஒரு தைரியமான மனிதர் அல்ல.

''இன்னொரு கோப்பை தேநீர் அருந்துகிறீர்களா? நன்றாக இருக்கிறது. நான் உங்களுக்காக விசேஷமான கேக் ஒன்றை தயாரித்து வைத்துள்ளேன். இதற்கு முன்பு நீங்கள் இதைப் போன்றதான சுவையான கேக்கை சுவைத்திருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்'' என்று லெவ் கூறினான்.

அவருடைய பதிலுக்காகக் காத்திராமல், லெவ் கேக்கை வெட்டி, தேநீரைக் கோப்பையில் ஊற்றி அவர் முன்பாக வைத்தான்.

ஹிட்லர் தன்னுடைய அனைத்து அச்சுறுத்தல்களையும் திடீரென நிறுத்திக்கொண்டார். மிரட்டி அடிபணிய வைப்பவர்களில் ஒருவராக லெவ் இருக்கமுடியாது என்றும், அவரைப்போன்று உள்ள எவரையும்கூட நிச்சயமாகத் தன்னால் மிரட்டி அடிபணிய வைக்கமுடியாது என்பதையும் ஹிட்லர் உணர்ந்துகொண்டார். ஆழ்ந்த சிந்தனைகளுடன் மேலே பார்த்தவாறே அமர்ந்திருந்தார். சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு, லெவ்வுடன் நல்லவிதமாகப் பழகுவதற்கு ஹிட்லர் முடிவுசெய்தார்.

நீண்ட இடைவேளைக்குப் பிறகு, அவர் கேக்கின் பக்கமாகத் திரும்பி முட்கரண்டியால் கேக்கை எடுத்து சுவைத்தார். ''இதுவரை நான் சாப்பிட்ட கேக்குகளிலேயே மிகச்சிறந்த கேக் இதுதான்'' என்று சந்தோஷமான குரலில் கூறினார்.

ஹிட்லர் சாப்பிட்டு முடித்தவுடன், வரவேற்பறையில் சென்று அமருவதற்கு லெவ் பரிந்துரைத்தான். நீண்ட மற்றும் வெளிப்படையான உரையாடல் அவசியம் என்பதால் லெவ் அவரை வசதியாக இருக்கையில் அமர்ந்துகொள்ளுமாறு கூறினான்.

அடால்ஃப், பல வருடங்களாக உங்களுக்கிருந்த தலைவலியில் இருந்து, இன்று நீங்கள் ஏதேனும் வித்தியாசத்தை உணர்கிறீர்களா?'' என்று லெவ் முதலில் கேட்டான்.

''நீங்கள் கேட்ட பின்பு தான், எனக்கிருக்கும் வித்தியாசத்தை உணருகிறேன். பல வருடங்களுக்குப் பிறகு, முதல் முறையாக தலைக்குள் பஞ்சை வைத்து அடைத்திருப்பது போன்ற மிதமானதொரு தலைவலியை நான் உணரவில்லை. ஏன் கேட்கிறீர்கள்?'' என்றார்.

''நான் உங்களிடம் வெளிப்படையாகப் பேசுவதற்கு விரும்புகிறேன்'' என்று லெவ் கூறினான். பின்பு, ''நீங்கள் பல வருடங்களாக பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தீர்கள் என்பதை நான் அறிந்துகொண்டேன். இப்போது முதல் முறையாக பிசாசினுடைய பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளீர்கள். வேதாகமம் கூறியிருப்பதுபோல சாத்தான் இப்போது முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டு, பாதாளத்தில் தள்ளி சங்கிலியால் கட்டப்பட்டுள்ளார் (வெளி. 20:2, 3). இறுதியாக, உங்கள் மீதான அவரது கட்டுப்பாட்டில் இருந்து நீங்கள் விடுதலைப் பெற்றுள்ளீர்கள். ஆனால் உங்கள் எஜமானாகிய சாத்தானுக்கு நீங்கள் சேவைசெய்ததால், நீங்கள் உங்கள் மீது குவித்துக் கொண்ட குற்ற உணர்விலிருந்தும், அவமானங்களிலிருந்தும், இன்னும் நீங்கள் விடுதலை பெறவில்லை. அடால்ஃப், உங்களின் உயிரை மாய்த்துக் கொள்வதற்கு முன்பாக, பதுங்கு குழியில் நீங்கள் இருந்த கடைசி நாட்களைப் பற்றிக் கூறுங்கள்'' என்று லெவ் கேட்டான்.

"நான் என் உயிரை மாய்த்துக் கொள்ளவில்லை. அதற்குச் சாட்சியாக நான் இங்கு ஜீவனோடு அமர்ந்திருக்கிறேன். நீங்கள் மரித்த மனிதரைப் பார்த்துக் கொண்டிருக்க வில்லை. இப்போது நான் ஜீவனோடு இருக்கிறேன். இதைப் பற்றி இன்னும் அதிகமாகவே நான் கூறவேண்டும். இதைப்போல் ஆரோக்கியத்துடன் நான் இதுவரை உணர்ந்ததே இல்லை" என்றார்.

"ஜெர்மனியர்கள் போரில் தோற்றுவிட்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் நீங்கள் உங்களுடைய மூன்றாம் பேரரசு அழிவுக்குள்ளாகப் போகிறது என்று முழுமையாகத் தெரிந்த பின்னரும், பல மில்லியன் கணக்கான ஜெர்மனியர்களைப் போருக்கு அனுப்பினீர்கள். நேச நாடுகளின் ஆயிரக்கணக்கான குண்டுவீச்சாளர்களும்கூட, உங்களது ஜனங்களுக்காக ஒவ்வொரு நாளும் தேவையில்லாமல் மரணத்தைத் தழுவினர். நீங்கள் ஏன் சரணடைந்து, அந்தத் தேவையில்லாத படுகொலைகளை முடிவுக்குக் கொண்டு வரவில்லை?" என்று கேட்டான்.

ஹிட்லர் கோபத்தில் துள்ளி எழுந்தார்.

"என்னிடம் கேள்விகேட்பதற்கு நீ யார்? ஜெர்மனியர்கள், என்னுடைய ஜனங்கள். நாங்கள் உயரிய இனத்தைச் சேர்ந்தவர்கள். எங்களால் ஆயுதங்களை எறிந்துவிட்டு சரணடைந்திருக்க முடியாது. இந்தப் போரில் நாங்கள் உலகை வெல்வோம் என்றும், உலகை ஆளுகைசெய்வோம் என்றும் நான் நம்பினேன். ஆனால் நாங்கள் இந்தப் போரில் தோற்றுவிட்டோம் என்று நீ என்னிடம் கூறுகிறாய், நான் அதை நம்பமாட்டேன். புகழ்பெற்ற ஜெர்மனியப்படை ஏதேனும் ஒரு கட்டத்தில் ரஷ்ய படைகளையும், மேற்கத்திய படைகளையும் தோற்கடித்துவிடும் என்றும் நான் நம்பினேன். எவ்வாறாயினும், கூடுதலான இரண்டு வருடங்கள் இன்னும் பல மில்லியன் கணக்கான யூதர்களை, இந்த உலகத்தில் இருந்து அகற்றுவதற்கு ஜெர்மனியர்களுக்கு உதவியதே. நாங்கள் சரணடைந்திருந்தால் இந்தப் பன்றி கூட்டங்கள் தப்பியிருக்கும்" என்றார்.

## இப்போது உலகை வழிநடத்தும் நாடு எது?

"இன்றைய நாளின் மிகவும் வல்லமை வாய்ந்த நாடு எது என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று லெவ் கேட்டான்.

"அநேகமாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் (United states) ஆகத்தான் இருக்கக்கூடும், ஏனென்றால் அந்த நாட்டில்தான் ஜெர்மனியர்கள் இருந்தார்கள்" என்று ஹிட்லர் பதிலளித்தார்.

"உங்களிடம் இதை எப்படிக் கூறுவது என்று எனக்குத் தெரியவில்லை, நீங்கள் சொன்னது மிகத் தவறு, இப்போதைய பூமியில் வல்லமை வாய்ந்த நாடாக யூத நாடே திகழ்கிறது" என்றான்.

ஹிட்லரின் முகம் கோபத்தால் சிவந்தது. "பொய், பொய், பொய்! ஏன் என்னிடம் பொய்யைக் கூறி என்னை வேதனைக்குள்ளாக்குகிறீர்கள்? யூத தேசம் என்ற ஒன்று இல்லை. புகழ்பெற்ற ஜெர்மனியப் படை, யூதப் பன்றிகளை அழித்துவிட்டது. இரண்டு வருடங்கள் போரினால் உண்டான உபத்திரவங்களை ஜெர்மனி தேசம் தாங்கிக்கொண்டது. இந்தப் பன்றிக் கூட்டங்களை அழிப்பதற்காகவே நாங்கள் அத்தகைய வலியைத் தாங்கிக்கொண்டோம். இந்த யூதப் பன்றிகளை உலகத்தின் எதிரிகளாக நீங்கள் கருதவில்லையா? அழித்தொழிக்க வேண்டியவர்களாக நீங்கள் அவர்களைப் பார்க்கவில்லையா?" என்று ஹிட்லர் கேட்டார்.

"அடால்ஃப் கூச்சலிடுவதையும், ஆவேசப்படுவதையும் நிறுத்துங்கள், தயவுசெய்து உட்காருகிறீர்களா? உங்களுக்கு அநேகக் காரியங்கள் தெரியாது. நான் கூறுவதை நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். உண்மையை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நீங்கள் ஒரு முட்டாள்போல நடந்துகொள்கிறீர்கள். இப்போது உட்கார்ந்து, நான் கூறுவதைக் கேளுங்கள். இப்போது இந்த முழு உலகிலும் நீங்கள் பெற்றிருக்கும் ஒரே நண்பனாக இருந்து, நான் உங்களுக்குச் சேவைசெய்கிறேன். நான் உங்களிடம் கூறியதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். பல மில்லியன் கணக்கான ஜனங்கள் உங்களுடைய கழுத்தைத் தங்களுடைய கைகளினாலேயே நெறித்துக் கொல்வதற்குக் காத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் மரிக்க நேர்ந்தாலும்கூட, அதை தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியமாகக் கருதுகிறார்கள். இது உங்களுக்குப் புரிகிறதா?" என்று லெவ் கேட்டான்.

லெவ் கூறுவதைக் கேட்க ஹிட்லர் விரும்பவில்லை என்பதை லெவ்வால் உணரமுடிந்தது. ஹிட்லர் தனது ஆவேசத்தை மீண்டும் ஒரு முறை கட்டுப்படுத்த முயன்றதால், அவரது முகம் சிவந்தது.

இறுதியாக ஹிட்லர் ஆவேசத்துடன் கத்தியவாறு, "என்னுடைய அனைத்து வீரர்களும் எங்கு இருக்கிறார்கள்? புகழ்பெற்ற ஜெர்மன் இராணுவம் எங்கே? எனது தளபதிகளும், உதவியாளர்களும் எங்கே? நான் எங்கே இருக்கிறேன்? முட்டாளே சொல்! உன்னிடமிருந்து உத்தரவுகளைப் பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. நான் அனைத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று அதிகாரத்தோடு ஹிட்லர் கேட்டார்.

ஹிட்லரின் முகம் கடுஞ்சினத்தினால் நிறைந்திருந்ததை லெவ்வால் காணமுடிந்தது. தன்னுடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்களிடமிருந்து, தான் முற்றிலும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார் என்ற உண்மையை அவர் சந்தேகித்தார். ஆனால் அவரால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் தன்னுடைய கோபத்தால் ஜனங்களைத் திணறடித்து, அவர் முன்னே அவர்கள் நடுங்குவதற்கு அவர்களைப் பழக்கியிருந்தார். ஆனால் லெவ் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் புத்தரைப்போல அமர்ந்திருந்தான். லெவ்வைத் தன்னுடைய அதிகாரத்திற்கு அடிபணியச் செய்யவேண்டும் என்று ஹிட்லர் தீர்மானமாக இருந்தார். ஆனால் அதுவே ஹிட்லர் செய்வதற்கு லெவ் அனுமதித்த கடைசிக் காரியமாக இருந்தது.

லெவ், தான் கற்றுக்கொண்டவைகளின் மூலமாக ஹிட்லரை, தனது வழிக்குக் கொண்டுவர முடிவெடுத்தான். அவரது அதிகாரத்தை முற்றிலும் இழந்தவராகவும், அவரது தற்போதைய உண்மையான நிலைப்பாட்டைப் பற்றி முற்றிலும் அறியாதவராகவும் ஹிட்லர் இருந்தார். லெவ்வை மட்டுமே முழுவதுமாகச் சார்ந்திருந்தார். அவருக்குக் கண்டிப்பாக லெவ் தேவை. ஆனால் லெவ்விற்கு ஹிட்லர் தேவையில்லை. ஹிட்லர் விரும்பப்படுவதற்கு மட்டுமல்லாமல், சகித்துக் கொள்வதற்கும் கூட கடினமான மனிதராகவே இருக்கிறார் என்பதை லெவ்வால் உணரமுடிந்தது. அவர் லெவ்வின் பொறுமையை மிகவும் சோதித்தார். லெவ்விற்கு ஹிட்லரைச் சமாளிப்பதற்குக் கடினமாகத்தான் இருக்கும் என்பது முன்னமே தெரியும். தனது புகழ்பெற்ற கடந்த காலத்தில் தன்னோடு தொடர்பில் இருந்தவர்களுடன், எப்படியாவது தொடர்பைக் கண்டுபிடிப்பதற்கு, ஹிட்லர் தீவிரமாக முயற்சி செய்வதை லெவ் அறிந்திருந்தான். தனது முந்தைய அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு, சிலரோடு தொடர்பு வைத்துக்கொள்வது ஹிட்லருக்கு அவசியமாய் இருந்தது.

நாசி இயக்கத்தின் செயல்பாடுகள் முற்றிலும் அழிந்துவிட்டதால், லெவ்வால் நாசி இயக்கத்தின் ஒரு புதிய செயல்பாட்டுத் தளத்தை கண்டுபிடித்துக் கொடுத்து, ஹிட்லருக்கு உதவ இயலாது. அவர் இனி ஒருபோதும் ஜனங்களைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவோ அல்லது தவறாகப் பயன்படுத்தவோ முடியாது. தாழ்மையான வாழ்க்கையை வாழ்வதற்கு ஹிட்லர் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் விருப்பம் போல காரியங்களைச் செயல்படுத்துவதும், தந்திரமாகச் செயல்படுவதுமாகிய, அவருக்கே உரியதாய் இருந்த அவருடைய நாட்கள் முடிந்துவிட்டன. இப்போது அடால்ஃப் ஒரு சாதாரண மனிதனாக, அவரை வெறுக்கும் ஒரு கூட்டத்தைப் பெற்றிருப்பவராக இருக்கிறார். அவருக்கு உதவுவதற்கு என்று ஒருவரும் இல்லை, சாத்தான்கூட அவரோடு இல்லை. மறுசீரமைப்பின் இந்தப் புதிய ஏற்பாட்டில் அவர் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டுமானால், அவர் தனது பாவங்களை விட்டுவிட வேண்டும். அவரது இருதயத்தில் இருக்கும் வெறுப்பை, அன்பாக மாற்றவேண்டும். உதவி தேவைப்படும் மற்றவர்களுக்குச் சேவைசெய்வதற்கு அவர் விரும்பவேண்டும்.

ஹிட்லருடைய ஒவ்வொரு ஆவேசமான நடத்தையும், லெவ்விடமிருந்து எவற்றை அறிந்துகொள்ள விரும்புகிறாரோ அவற்றை லெவ், ஹிட்லரிடம் கூறுவதைத் தாமதப்படுத்தும். அவர் வாழ்ந்த உலகத்திற்கும், தற்போதைய உலகத்திற்கும் இடையே ஒரு நூற்றாண்டு இடைவெளி இருந்ததே, ஹிட்லர் தான் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாக உணர்வதற்கு ஒரு காரணமாக இருந்தது. மிக உயர்ந்த அதிகாரத்தில் இருப்பவர்கள் தனிமையில் இருப்பதுபோல் உணருவார்கள். எதுவுமே இல்லாமல் இருப்பது - அதாவது அதிகாரமின்றி, ஆதரவின்றி, வேலைகளை இழந்து, எல்லாவற்றிற்கும் மேலாக தன்னுடைய பாதுகாப்பிற்காக, அவர் சேர்த்துவைத்திருந்த எல்லாவற்றையும் இழந்திருப்பது என்பது தனிமையில் உள்ளதைக்காட்டிலும் மோசமானது என்பதை லெவ்வால் உணரமுடிந்தது. இந்த உண்மைகளை ஹிட்லர் உணர்ந்தபோது, அவருக்குப் பைத்தியம்

பிடிப்பதுபோல் இருந்தது. இதனைவிட மோசமாக, பல மில்லியன் கணக்கான ஜனங்கள் உங்களுடைய கழுத்தைத் தங்களுடைய கைகளினாலேயே நெறித்துக் கொல்வதற்குக் காத்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் மரிக்க நேர்ந்தாலும்கூட, அது தங்களுக்குக் கிடைத்த சிலாக்கியமாகக் கருதுகிறார்கள் என்று லெவ் கூறியது அவரை பயமுறுத்தியிருந்தது.

## அடால்ஃப் தனது உதவியற்ற நிலையை உணர்ந்துகொள்ளுதல்

இறுதியாக "அடால்ஃப் நீங்கள் கூச்சலிடுவதையும், ஆரவாரம் செய்வதையும் முடித்துவிட்டீர்களா? நீங்கள் கூறுவதை நான் கேட்க வேண்டியதில்லை, கேட்கவும் மாட்டேன் என்று உங்களுக்குத் தெரியும். இன்னொரு முறை ஆவேசமாகக் கூச்சலிட்டீர்கள் என்றால் நான் இங்கிருந்து சென்றுவிடுவேன். பின்பு நீங்கள் தனியாகத்தான் இருக்க வேண்டும். மேலும் உங்களது மரணத்திற்குப் பிறகு என்ன நிகழ்ந்தது என்பதை முற்றிலும் அறியாதவராகவே இருப்பீர்கள். நீங்கள் எவ்வாறு ஜீவனோடு இங்கு இருக்கிறீர்கள் என்றும், நீங்கள் ஜீவனோடு இருக்கும் நிலையைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்கு மேலும் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியும் தெரியாதவராகவே இருப்பீர்கள். இப்போது நீங்கள் முற்றிலும் எந்த ஒரு அதிகாரமும் இல்லாதவராகவே இருக்கிறீர்கள். ஹட்லரின் நாசிப் பேரரசு இனி இல்லை மற்றும் அது ஒருபோதும் திரும்பவராது. தேவனுக்கு நன்றி. பூமியில் உள்ள எந்த ஒரு மனிதனும் செய்யாத தீமையைச் செய்வதற்கு, சாத்தான் உங்களைத் தனது கருவியாகப் பயன்படுத்தினார். இஸ்ரயேலை ஆட்சி செய்யும் கிறிஸ்து மற்றும் முற்பிதாக்களின் இரக்கத்தினாலேயே நீங்கள் ஜீவனோடு இருக்கிறீர்கள். நீங்கள் என் பொறுமையை கடுமையாகச் சோதிக்கிறீர்கள்" என்று லெவ் கூறினான்.

லெவ், ஹிட்லரின் கண்களை நேருக்கு நேராக உற்று நோக்கினான். ஹிட்லர் விரைவாக தன்னுடைய பார்வையை விலக்கிக்கொண்டார். இறுதியில், தான் உயரிய அதிகாரத்தில் இருந்த நாட்கள் முடிந்துவிட்டன என்ற உண்மையை ஹிட்லர் மெதுவாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார்.

"இப்போது நீங்கள் உயரிய அதிகாரத்தில் இல்லை" என்பதை லெவ்வும், ஹிட்லருக்கு நினைப்பூட்டினான். உங்களின் புகழ்பெற்ற நாட்கள் முடிந்துவிட்டன. இப்போது நீங்கள் சித்திரவதை செய்து கொன்ற பல மில்லியன் கணக்கான ஜனங்கள் உங்களைக் கொல்வதற்கு திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள். பூமியில் வாழ்ந்த ஒவ்வொருவரும், மீண்டும் ஜீவனுக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள். மீண்டும் ஜீவனுக்குள் வராமல் எவரும் இருக்கப்போவதில்லை. இதன் அர்த்தமாவது, நீங்கள் சித்திரவதை செய்து கொன்ற ஒவ்வொருவரையும் கட்டாயம் சந்திக்க வேண்டும். அதாவது உங்களது சொந்தப் படைகளைப் போரிலிருந்து வெளியேற நீங்கள் அனுமதி அளிப்பதற்கு மறுத்த காரணத்தினால், அவர்கள் மரிப்பதற்கு நீங்களே காரணமாக இருந்தீர்கள். இப்போது அவர்கள் அனைவரும் உங்களைத் தேடலாம். சரணடைவதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்ற இறுதி நிலை வரும் வரை, நீங்கள் சரணடையாமலேயே இருந்தீர்கள். அதனால் ஜெர்மனியர்கள் அனைவரும் தேவையில்லாமல் கொல்லப்பட்டனர். இப்போது அவர்கள் அனைவரும் உங்களைத் தேடலாம். நீங்கள் மிகவும் வெறுத்து, சித்தரவதை செய்து பேரார்வத்துடன் கொன்ற அனைத்து யூதர்களும் இப்போது உங்களுக்கு மிகப்பெரிய நன்மைசெய்கிறவர்களாக இருக்கிறார்கள். அடால்ஃப் ஹிட்லர் என்ற மனிதனைத் தேடுவார்கள். நீங்கள் தான் அந்த அடால்ஃப்பா?" என்று லெவ் கேட்டான்.

லெவ் பேசுவதைக் கேட்ட ஹிட்லரின் முகம் வெளிறியது. இறுதியில் ஹிட்லர் பேசினார். "இது என்ன பயங்கரக் கனவா? எனது கடைசி அனுபவங்கள் ஒரு கெட்ட கனவைப் போல இருந்தது. எங்களுடைய ஜெர்மன் இராணுவம் ஒன்றுமில்லாமல் சின்னா பின்னமாகிவிட்டது. எனது தளபதிகள் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு, சாதாரண மனிதர்கள் போல, தங்களைக் காட்டிக்கொள்வதற்கு முயன்றனர். ரஷ்ய இராணுவம் எங்களை நெருங்கியபோது, நாங்கள் பதுங்கு குழியில் இருந்தோம். அவர்கள் எங்களை உயிரோடு கைதுசெய்தார்கள் என்றால், எங்களைச் சித்திரைவதைப்படுத்தி மரணத்திற்கு உள்ளாக்குவார்கள் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய உயிரை மாய்த்துக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை. ஈவாவும், என்னுடன் மரிப்பதற்கு விரும்பினாள். என் உடலை எரித்துவிடுமாறு, நான் கட்டளை கொடுத்திருந்தேன். என்னுடைய உடலை தெருக்களில் இழுத்துச்செல்வதன் மூலமாகவோ, முசோலினிக்கு நடந்ததுபோல பொதுச்சதுக்கத்தில் என் உடலைத் தொங்கவிடுவதன் மூலமாகவோ, அவர்கள் என்னை அவமதிக்கக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு அறிவுறுத்தினேன்."

"வெற்றிக்கும், எங்களுக்கும் இடையில் மயிரிழையில் தான் வித்தியாசம் இருந்தது என்பது உங்களுக்குத் தெரியுமா? இங்கிலாந்தை ஆக்கிரமிக்க, கடற்கரையில் ஆயுதத்துடன் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல்களை நிறுத்தாமல் இருந்திருந்தால் நாங்கள் வெற்றி அடைந்திருப்போம். ஜெர்மனின் விமானப்படை (Luftwaffe), பிரிட்டனின் மீது நடத்திய ஆகாய வழித்தாக்குதலில் வெற்றியடையக் காத்திருந்தேன். எங்களின் விமானப்படையால், பிரிட்டனின் ஒற்றை இருக்கை கொண்ட போர் விமானங்களை (Spitfires) அழிக்க முடியவில்லை. நாங்கள் சண்டையைத் தற்காலிகமாக நிறுத்தியபோது, நேச நாட்டு விமானங்கள் எங்களது கப்பல்களையும், தரையிரங்கும் விமானங்களையும் அழித்தன. அமெரிக்கா தனது ஆயுதங்களை வாரி இறைக்கும் முக்கியத் தளமாக இங்கிலாந்து இருந்தது. அப்போதிருந்துதான் போரின் போக்கு எங்கள் பக்கமாகத் திரும்ப ஆரம்பித்தது. நாங்கள் பிரிட்டனைக் கைப்பற்றியிருந்தால், ரஷ்யாவை முற்றிலுமாக வீழ்த்தியிருக்கலாம். புகழ்பெற்ற ஹிட்லரின் நாசிப் பேரரசின் கொடியானது ரஷ்யா மற்றும் பிரிட்டனின் மீது பறந்திருக்கும். ஜெர்மனின் விமானப்படை (Luftwaffe), பிரிட்டனின் மீது நடத்திய ஆகாய வழிதாக்குதலில் நாங்கள், அவர்களை அழித்தொழிப்போம் என்று நான் காத்திருந்ததே எங்களின் தோல்விக்கான காரணமாகும்" என்றார்.

இறுதியாக, ஹிட்லர் தனது கடந்த காலத்தைக் குறித்துக் கூற ஆரம்பித்தார். தன்னுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த சில வேதனையான விஷயங்களையும் ஹிட்லர், லெவ்விடம் பகிர்ந்துகொண்டார். "நீங்கள் போரில் வெற்றிபெற்றிருந்தால், இன்று நலமாக இருந்திருப்பீர்கள் என்று கருதுகிறீர்களா? நீங்கள் விரும்பியபடி ஜனங்களை தவறாகப் பயன்படுத்தி, அவர்களைக் கொலைசெய்வதைத் தொடர்ந்திருப்பீர்களா? இப்போது நீங்கள் எண்ணிக்கையிலடங்காத ஆயிரக்கணக்கான, மில்லியன் கணக்கான ஜனங்களை நேரில் சந்தித்து, அவர்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்கும்" என்றான்.

## ஹிட்லர் தன்னுடைய நிலையை உணர்ந்துகொள்ளத் தொடங்குதல்

"ஜனங்கள் ஜீவனுக்குத் திரும்புவார்கள்" என்று லெவ் கூறியது ஹிட்லரின் சிந்தையில் அழுத்தத்தைக் கூட்டியது. அவர் அந்த எண்ணத்தை அகற்றுவதற்குப் பலமுறை முயன்றார். அவர் எப்படி இங்கு வந்தார்? எங்கே இருக்கிறார்? என்பதைப் பற்றிய எந்த ஒரு தகவலும் அவருக்குத் தெரியவில்லை. இவை அனைத்தும் கனவாக இருக்குமோ என்றும், ரஷ்யர்கள் அவரை நெருங்கியபோது, அவர் மறுபடியும் பதுங்கு குழியிலிருந்து விழிக்க நேரிடுமோ என்றும் அவருக்குப் பயமாக இருந்தது. இருப்பினும், அவர் எவ்வாறு போரில் தோற்றார் என்பதை லெவ்விடம் கூறிய போது, அவர் தனது முரட்டுக் குணத்தை இழந்திருந்தார். அவரது முகம் வெளிறியிருந்தது.

அழகான வீடு மற்றும் தோட்டத்தில் இருந்த ஜீவவிருட்சத்துப் பூக்களின் நறுமணம் போன்றவைகளால் ஹிட்லர் சூழப்பட்டிருந்தாலும், அவரது முந்தைய வாழ்க்கையில் அவர் செய்த மறைவான பாவங்களுக்கு அவரே பொறுப்பாளியாகவும், அது அவருக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்துவதாயும் இருக்கும். அதிலிருந்து அவர் தப்பிவிட முடியாது. அவரது ஜீவனை எடுப்பதற்கான வாய்ப்புக்காகக் காத்திருக்கும் அநேக ஜனங்கள் இருக்கிறார்கள் என்பதை நம்புவதற்கு அவருக்கு எந்தவொரு சிரமமும் இருக்கவில்லை. ஆவிக்குரிய வல்லமைகளால், அவர் உடல் ரீதியான தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படுவார் என்பதை லெவ் இன்னும் அவரிடம் தெரிவிக்கவில்லை. லெவ் அவரை சிறிது நேரம் பயத்திலேயே விட்டுவிட நினைத்தான். வேறொரு விதமான தற்கொலைக்குள் செல்வது ஹிட்லர் போல் உணர்வார் என்று லெவ் அறிந்திருந்தான், ஏனெனில் மனுக்குலத்திற்கு எதிராக முன்பு அவர் செய்த கொடூரமானக் குற்றங்களுக்கும், மற்ற அனைத்திற்கும் இப்போது அவர் பொறுப்பேற்க வேண்டும். அப்படிச் செய்வதென்பது ஜீவனுடன் இருக்கும்போதே மரிப்பது போலாகும்.

இறுதியாக லெவ் "இவ்வளவு நேரம் நீங்கள், உங்களைப் பற்றி என்னிடம் கூறினீர்கள். நாம் சற்று நேரம் உங்களைப் பற்றியும், நீங்கள் மனுக்குலத்திற்குச் செய்த கொடுமைகளைப் பற்றியும் மறந்துவிட்டால் எப்படி இருக்கும்? நான் இப்போது என்னைப் பற்றி உங்களிடம் கூறுவதற்கு அனுமதியுங்கள்" என்றான். பின்பு, "என் பெயர் லெவ் ஆரோன். கிறிஸ்தவ உலகம் என்று அழைக்கப்படுபவர்களால் அனுப்பப்பட்ட பெரிதான படைகளிடமிருந்து, எருசலேமைப் பாதுகாப்பதற்காக போரிட்டபோது நான் மரித்தேன். எருசலேமைக் கைப்பற்றுவதற்கான அந்த மாபெரும் போரில் இஸ்ரயேலுக்கு எதிராகப் படையெடுத்து வந்த திரளான படைகளை ஜெர்மனி பிரதிநிதித்துவப்படுத்தி போரிட்டது. அதுவே பூமியில் யூதர்களுக்கு எதிரான கடைசிப் போராக

இருந்தது. யூதர்களாகிய நாங்கள் முதல் நாள் தைரியத்தோடு போராடினோம். முதல் கட்டப் போரில் மரித்தவர்களில் நானும் ஒருவன். மறுநாள் வானம் மப்பும், மந்தாரமுமாக இருந்தது. காற்றில் வெப்பத்தை உணரமுடிந்தது. ஜனங்கள் பயத்தில் உறைந்திருந்தார்கள். ஏதோ விபரீதம் நடக்கப்போவதை எதிரிப்படை உணர்ந்துகொண்டது. வீரர்கள் தங்களுக்கான கட்டளைகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் டாங்கிகளையும், விமானங்களையும் பயத்தோடு செலுத்தினர். அன்றைய தினத்தில் தங்கள் படைகள் தாக்குதல்களை நடத்தவேண்டாம் என்று கூறுவதற்கு அதிகாரிகள் முயன்றனர். ஆனால் காலம் கடந்துவிட்டது. படைகள் தகவல் தொடர்பை இழந்துவிட்டிருந்தனர். அதனால் இராணுவ வீரர்கள் உதவியில்லாமல் இருந்தனர். விரைவில் முழு வானமும் நெருப்பால் ஒளிர்ந்தது. பல மில்லியன் கணக்கானோர் அந்த நாளில் கொல்லப்பட்டனர். படையெடுத்து வந்த முழு இராணுவமும் தேவனுடைய வல்லமையால் அழிக்கப்பட்டது.''

''அது போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. பின்னர் மில்லியன் கணக்கானோர் மரிப்பதற்குக் காரணமாயிருந்த மதத் தலைவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். போரிடச் செல்வதற்காக ஆசீர்வாதம்கூறி ஆதரித்த அனைத்து மதத் தலைவர்களும், மந்திரிகளும், பிரெஞ்சுப் புரட்சி நிகழ்ந்தபோது தாக்குதலுக்கு உள்ளாகியிருந்த அதிகாரிகளைப் போலவே இருந்தனர். அதன்பிறகு அனைத்து தேசங்களும் அராஜகத்தால் பிளவுபட்டன. இப்போது, முழுமையாக தப்பிப்பிழைத்திருக்கும் ஒரே நாடு இஸ்ரயேல்தான். இப்போது பூமியில் முன்னணி தேசமாக உள்ளது. தேவ மனிதர்களான ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு போன்றவர்கள் ஜீவனுக்குள் திரும்பிவிட்டார்கள். அவர்களே இஸ்ரயேலையும், முழு உலகத்தையும் வழிநடத்துகிறார்கள். இங்கு வந்து, உங்களுடைய உயிர்த்தெழுதலுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் என்னிடம் கேட்டுக்கொண்டார். இல்லையெனில் நான் இதைச் செய்திருப்பேனோ? உங்களுடைய ஜீவனுக்காகக் கண்டிப்பாகச் செய்திருக்க மாட்டேன். நீங்கள் முழுவதுமாகச் சீர்பொருந்துவதற்கு உங்களுக்கு ஒரு நியாயமான வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். நீங்கள் திரும்பிவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவர்கள் விசேஷ வேண்டுகோளை என்னிடம் விடுத்தனர்'' என்றான்.

''அப்படியென்றால் நீங்கள் ஒரு யூதனா?'' என்று ஹிட்லர் கேட்டார்.

''ம்ம்.. சரி தான். உங்களுக்குள்ளும் யூத இரத்தமே ஓடுகிறது என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். உங்களுடைய தாத்தா ஒரு யூதன்'' என்றான்.

''நீங்கள் கூறுவது உண்மை அல்ல, பொய், பொய், எல்லாமே பொய்…'' என்று கத்தியவாறு இருக்கையிலிருந்து துள்ளி எழுந்தார்.

''நல்லது அடால்ஃப், இன்னும் சில வருடங்களில், நீங்கள் உங்கள் தாத்தாவைச் சந்திப்பீர்கள் நீங்கள் இதனை அவரிடம் கூறுங்கள்'' என்று சொல்லியவாறு, லெவ் தொடர்ந்தான். ''நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் உண்மை மட்டுமே பேசப்படுகின்றன. உங்களது நாசிப் பேரரசு முழுவதுமே பொய்யினால் உண்டாக்கப்பட்டிருந்தது. நீங்கள் அதிகாரத்திற்கு வருவதற்காக வெறுப்புணர்வை பயன்படுத்தினீர்கள். வெறுப்பினை அஸ்திவாரமாகக் கொண்டு கட்டப்படும் எதுவும் நிலைக்காது. இறுதியில் உண்மை தெரியவரும். ஏமாற்றுவதில் வல்லவர் நீங்கள். இனி அவ்வாறு இல்லை, ஏமாற்றுவது என்பது முடிவுக்கு வந்துவிட்டது. தேவனுடைய வழிகள் சமமானவை. எண்ணற்ற மில்லியன் கணக்கான ஜனங்களுக்கு நீங்கள் ஏற்படுத்திய வலிகளோடும், துன்பங்களோடும் இப்போது நீங்கள் வாழவேண்டும். நீங்கள் வெறுப்பை விதைத்தீர்கள், ஆனால் இப்போது இரக்கத்தை விரும்புகிறீர்கள். நீங்கள் தேவையில்லாமல் ஜனங்களைக் கொன்றீர்கள், இப்போது உங்களது ஜீவனை விரும்புகிறீர்கள். நீங்கள் கொடூரமானவராகவும், இரக்கமற்றவராகவும் நடந்துகொண்டீர்கள், ஆனால் இப்போது உங்களை மற்றவர்கள் அன்பாக நடத்தவேண்டும் என்று விரும்புகிறீர்கள். நீங்கள் கொன்ற, ஊனப்படுத்திய துஷ்பிரயோகம் செய்த, தவறாக நடத்திய அனைவரையும் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறீர்கள்? உங்களது இந்த நிலையில் இருப்பதற்கு நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். நீங்கள் துஷ்பிரயோகம் செய்த மற்றும் தவறாக வழிநடத்திய அனைவரும் ஜீவனுடன் திரும்பி வருவார்கள் என்று நினைத்திருக்க மாட்டீர்கள் அல்லவா? அப்படித்தானே?'' என்று லெவ் கேட்டான்.

''இப்போது சாத்தான் கட்டப்பட்டு பாதாளத்தில் இருக்கிறார். உங்கள் சிந்தை தெளிவாக இருக்கிறது, உங்கள் தலையில் பஞ்சைவைத்து அழுத்துவது போன்று உணர்வு இப்போது

உங்களுக்குள் இல்லை. நீங்கள் செய்த அனைத்துத் தீய செயல்களையும் குறித்து இப்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது” என்று லெவ் கேட்டான்.

“நான் என்ன சொல்ல முடியும்?” என்று கூறியவாறு ஹிட்லர் தொடர்ந்தார். “நான் ஒரு கெட்ட கனவு கண்டிருக்கிறேன் என்றுதான் சொல்ல முடியும். நீங்கள் கூறியவைகள் எனக்கு ஒரு தேவதைக் கதையைக் கேட்டதுபோல் இருக்கிறது. உங்களை நான் எவ்வாறு நம்புவது? நீங்கள் யார் என்று எனக்குத் தெரியாது. முற்பிதாக்கள் என்று நீங்கள் கூறுபவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது. நான் எப்படி இங்கே இருக்கிறேன் என்று என்னால் கூறமுடியவில்லை. பெர்லினில் உள்ள பதுங்கு குழியில் நான் முற்றுகையிடப்பட்டிருந்த நிலையில் இருந்ததே எனது கடைசி நினைவாக இருக்கிறது. நான் சயனைடு சாப்பிட்ட பின்பு, என்னை நானே சுட்டுக்கொண்டேன். நான் கண்டிப்பாக மரித்திருக்க வேண்டும். ஆனால் இங்கே ஜீவனோடு இருக்கிறேன். பீரங்கி முழங்கும் சத்தம் இங்கு இல்லை. மரங்களில் பறவைகள் கீச்சிடுவதைக் கேட்கிறேன். முதலில் நான் இது ஒரு மருத்துவமனை என்று நினைத்தேன். ஆனால் இது மிகவும் அழகான வீடாக இருக்கின்றது. நான் என்னைக் கண்ணாடியில் பார்த்தேன், முன்பை விட மிகவும் ஆரோக்கியமாக இருக்கிறேன். முன்பு நான் ஒரு ஆரோக்கியமற்ற மனிதனாகவே இருந்தேன். இப்போது எனக்கு எந்தவிதமான வேதனைகளோ அல்லது வலிகளோ, தழும்புகளோ கூட இல்லை. நீங்கள் கூறியது போல், என் தலைக்குள் பஞ்சு இருப்பதுபோல் முன்பெல்லாம் நான் உணர்வேன். என்னைச் சுற்றி நடப்பவைகளை அறியக்கூடிய சக்தி எனக்கு இருப்பதாக அநேகர் கூறுவர், ஆமாம் எனக்கும் அது தெரிந்திருந்தது. அது எல்லா நேரத்திலும் மனச்சோர்வைக் கொடுத்தது. நான் எங்கே இருக்கிறேன்? எப்படி இங்கே வந்தேன்? என்று எனக்குக் கூறமுடியுமா?” என்று கேட்டார்.

## ஒரு சாதாரண மனிதனாக ஹிட்லர்

குறைந்தபட்சம் சாதாரணமான குரலில் பேசுவதற்கு ஹிட்லர் முற்பட்டிருப்பதை லெவ் கவனித்தான் மற்றும் அவர் சில நியாயமான காரியங்களைத் தெரிந்துகொள்வதற்கும் ஆர்வமாக இருந்தார். பின்னர் லெவ், “நான் கூறுவதை நம்புவதற்கு உங்களுக்கு கடினமாகத்தான் இருக்கும். ஆனால் நான் கூறுவது அனைத்தும் உண்மையே. நீங்கள் உண்மையிலேயே மரித்துவிட்டீர்கள். ஈவா ப்ரானும் மரித்துவிட்டார்” என்றான்.

ஈவாவின் பெயரை லெவ் குறிப்பிட்டது ஹிட்லரின் முகத்தில் பிரகாசத்தை வருவித்தது.

“அவர்கள், உங்கள் உடலைப் பெட்ரோலை ஊற்றி எரித்தனர். உங்கள் உடல் அடையாளம் காண முடியாத அளவுக்கு எரிந்தது. இது 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதியில் நிகழ்ந்தது. நீங்கள் நூற்றுக்கணக்கான நாசி குற்றவாளிகளுடன், வாடிக்கன் அலுவலகங்கள் வழியாக தென் அமெரிக்காவிற்குத் தப்பிவிட்டதாகப் பலர் நினைத்தார்கள். இருப்பினும், ரஷ்யர்கள் உங்களது மீதமிருந்த உடலைக் கண்டறிந்தனர் மற்றும் இந்தத் தகவலை ஓரளவிற்கு மறைமுகமாகவே வைத்திருந்தனர். ஜெர்மனி அழிவிற்குள்ளாகியிருந்தது. ரஷ்யர்கள் டிரக்குகளைக் கொண்டு வந்து, அனைத்துத் தொழிற்சாலைகளிலும் இருந்த ஒவ்வொரு இயந்திரங்களையும் எடுத்துச் சென்று தொழிற்சாலைகளை வெறுமையாக்கினர். கட்டடங்களை எடுத்துச் செல்ல முடியும் என்றால் அவர்கள் அதையும் செய்திருப்பார்கள். ஜெர்மனியர்கள், ரஷ்யர்களைக் கொடூரமாக நடத்துவதைப் பேரார்வத்தோடு செய்ததால், ஜெர்மனியர்களை ரஷ்யர்கள் வெறுத்தனர். எண்ணிலடங்காத ஆயிரக்கணக்கான ரஷ்ய ஆடவர்களும், பெண்களும், குழந்தைகளும் திறந்த வெளியில், கடும் குளிரில் உணவு, உறைவிடம் இல்லாமல் மரிப்பதற்கு ஜெர்மனியர்கள் காரணமாய் இருந்தனர். கைதிகளை எப்படிக் கண்ணியமாக நடத்த வேண்டும் என்பதற்கான ஒவ்வொரு விதிமுறையும் மீறப்பட்டிருந்தது. அவர்கள் உங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்பாகவே நீங்கள் மரித்தது உங்களது மிகப்பெரிய அதிர்ஷ்டம். இப்போது நீங்கள் ஜீவனுடன் திரும்பியிருப்பீர்கள் என்று அறிந்து, அவர்கள் உங்களைத் தேடுவார்கள்” என்றான்.

“ஜனங்கள் உங்களைக் காயப்படுத்த முயற்சிப்பார்கள் என்பதால் நாங்கள் அதைத் தடுப்பதற்காக உங்கள் பெயரை வேண்டுமென்றே யாரிடமும் குறிப்பிடாமல், உங்கள் குடும்பப் பெயரான ஸ்கிக்ல் க்ரூபர் என்ற பெயரையே உங்களுக்கான பெயராகப் பயன்படுத்துகிறோம். கூடிய விரைவில் உண்மை தெரியவரும். ஆனால் நீங்கள் சித்திரவதை செய்து கொன்ற பல மில்லியன் கணக்கானவர்களை, நீங்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறீர்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்க உங்களுக்கு வாய்ப்பளிக்கும் காலமாக இது இருக்கும். உங்களுக்கு ஒரு நியாயமான காரணம்

இருக்கிறது. அந்தக் காரணம் சாத்தான் உங்களின் சிந்தையை ஆட்கொண்டிருந்தான். யூதாசின் சிந்தையையும்கூட ஆட்கொண்டிருந்தான். அதனால் நீங்கள் கெட்ட சகவாசத்துடன் இருந்திருக்கிறீர்கள்" என்றான்.

"யூதாஸோடு, என்னை இணைத்துப் பேசுவதற்கு உனக்கு எவ்வளவு தைரியம் இருக்கும்? நான் ஜெர்மன் மக்களுக்கு உண்மையாகத்தான் இருந்தேன். நான் அவர்களுக்காகவே உழைத்து, அவர்களுக்காகவே என்னை தியாகம்செய்தேன். நான் என் ஜனங்களை திவால்நிலையில் இருந்து காப்பாற்றி, ஜெர்மனி தேசத்திற்குச் செழிப்பைக் கொண்டுவந்தேன். ஜெர்மனியர்களுக்கு நான் நல்லவனாகவே இருந்தேன்" என்றார்.

"அப்படி நினைப்பதற்கே நீங்கள் விரும்புவீர்கள். நீங்களே உங்களுக்கு நியாயாதிபதியாகச் செயல்பட்டால், கண்டிப்பாக உங்களை நீங்களே கண்டிக்க மாட்டீர்கள். ம்ம்.. சரிதான். மற்ற தொழில்களைப் போலவே போர் என்கிற தொழிலையும், நீங்கள் ஜெர்மனிக்கு கொண்டுவந்து அதனை செழித்தோங்கச் செய்தீர்கள். அதன் பிறகு நீங்கள் உங்கள் ஜனங்களை பெருமளவில் வேதனையிலும், துன்பத்திலும் ஆழ்த்தினீர்கள். உங்களது முட்டாள் தனத்தினால் மரித்த அனைத்து ஜெர்மனியர்களையும் உங்களால் எண்ண முடியுமா? ஜெர்மனியின் அனைத்துப் பட்டணங்களும், நகரங்களும் எவ்வாறு இடிந்துகிடந்தன என்பதை நீங்கள் பார்த்தீர்களா? போரின் இறுதியிலும் மற்றும் அதற்குப் பின்னரும் உணவு கிடைக்காமல் பசியால் வாடிய ஜெர்மனியர்களின் நிலையை உணர்ந்திருக்கிறீர்களா? நீங்கள் ஜெர்மனியர்களின் மீட்பர் அல்ல. நீங்கள் அவர்களிடம் பொய் கூறினீர்கள். அவர்கள்தான் உயரிய ஜனம் என்றும், வெற்றியே அவர்களைப் பின்தொடரும் என்றும் பொய்கூறி அவர்களை நம்பவைத்தீர்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. போர் முடிந்த பிறகு, இக்கட்டானச் சூழ்நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் ஜெர்மனி இருந்தது. அமெரிக்கா இரக்கம் பாராட்டி மார்சல் திட்டத்தின் கீழாக ஜெர்மனிக்கு நிதி உதவி அளிக்காமல் இருந்திருந்தால், ஜெர்மனி அதிலிருந்து மீளுவதற்கு அரை நூற்றாண்டுகள் எடுத்திருக்கும்" என்றான்.

## ஜெர்மனியர்கள் தங்கள் தலைவரைத் தேடுவார்கள்

"உங்கள் முட்டாள்தனத்தைக் கண்டித்த ஜெர்மனியரிடம், நீங்கள் சிறிதளவும் இரக்கம் காட்டவில்லை. நீங்கள் எப்போதும் உங்களைச் சுற்றி "ஆமாம்" போடும் கூட்டதைச் சூழ்ந்திருக்கச் செய்திருந்தீர்கள். ஏனென்றால் அவர்கள் மட்டுமே நீங்கள் கூறுவதைக் கேட்பார்கள். அதனால் அவர்கள் மட்டுமே உங்களைச் சுற்றி நிற்கமுடியும். உங்களைப் போன்ற நண்பர்கள் இருந்தால் ஜெர்மனியர்களுக்கு எதிரிகளே தேவையில்லை, இல்லையா, அடால்ஃப். நீங்கள் அவர்களுக்கு எல்லாவற்றையும் உறுதியளித்தீர்கள். ஆனால் எதையும் வழங்கவில்லை. புகழ்பெற்ற ஆயிரம் ஆண்டு அரசாட்சியைக் கொடுப்பதற்குப் பதிலாக, சாம்பல் நிறைந்த தேசத்தையே கொடுத்தீர்கள். அநேக ஜெர்மனியர்களும் உங்களைத் தேடிக் கொண்டிருப்பார்கள். அநேகர் நீங்கள் ஜீவனோடு இருப்பதை விட மரித்த நிலையில் இருப்பதையே விரும்புவார்கள். அவர்களை எப்படி எதிர்கொள்வீர்கள்? உடனடியாகவோ அல்லது பின்னரோ, உங்கள் கடந்த காலத்தையும், அப்போது நீங்கள் உரைத்த பொய்கள் மற்றும் வஞ்சகங்கள், நீங்கள் போட்ட இரட்டை வேடங்கள் மற்றும் துரோகங்களை நீங்கள் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும், அடால்ஃப்" என்றான்.

ஹிட்லருக்கு இதுபோன்றதான வெளிப்படையான உரையாடல்கள் பழக்கமில்லாத ஒன்று என்று லெவ் அறிந்திருந்தான். இங்கே ஒரு யூதன் அவரைக் கீழ்த்தரமாகப் பேசுகிறார். ஆனால் அதற்கு எதிராக எதுவொன்றையும் அவரால் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் நாசியின் உள்நாட்டு பாதுகாப்புப் படை (SS-Schutzstaffel Squads), அவர்களுக்கே உரிய தனித்துவமான வழியில் ஹிட்லரைக் கவனித்துக் கொள்வதற்கு அவர் ஏங்குவார் என்று லெவ் அறிவான். ஆனால் லெவ்வின் வழியாக மட்டுமே ஹிட்லரால் உலகைக் காணமுடியும். லெவ், அவரைப் பற்றிக் கூறியதெல்லாம் உண்மையாக இருக்குமோ என்று ஹிட்லர் பயந்தார். இவ்வளவு காலதாமதமாக உண்மையை அறிந்துகொள்வது என்பது எவ்வளவு கொடுமையானது. இவைகள் எல்லாம் அவருக்கு முன்னமே தெரிந்திருந்தால், ஒருவேளை அவர் தன்னுடைய வழிகளை மாற்றி இருந்திருப்பார். அவர் கொன்ற ஒவ்வொரு நபரும் திரும்பி வருவார்கள் என்றும், அவர் செய்த தீயச் செயல்கள் அனைத்தும் வெளியரங்கமாகும் என்றும் அவர் எவ்வாறு அறிந்திருக்க முடியும்? மறைந்து கொள்வதற்கு இடமில்லை. எந்தப் பொய்யையும் கூறி உலகத்தின் முன்பு தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முடியாது. கிறிஸ்துவிற்கு முன்பு சிறிதளவு பொய் கூட கூற இயலாது.

லெவ், அடால்ஃபிற்கு சற்று இடைவெளி கொடுப்பதற்கு முடிவெடுத்தான். ‘‘நாங்கள் இங்கு வீடுகளை எப்படிக் கட்டியுள்ளோம் என்றும், அற்புதமான ஜீவ விருட்சத்தினை எவ்வாறு நாட்டியுள்ளோம் என்றும் நான் உங்களுக்குக் காட்டுகிறேன்’’ என்று லெவ் கூறினான்.

ஹிட்லரும், தனது கடந்த காலத்தைக் குறித்த லெவ்வின் இடைவிடாத நினைவூட்டல்களில் இருந்து ஓய்வு பெற ஆர்வமாக இருப்பதாகத் தோன்றியது. அதனால் லெவ் எழுந்தவுடன் ஹிட்லரும் எழுந்து அவனைப் பின் தொடர்ந்தார்.

‘‘ஹிட்லர் இதுவரையிலும் கனவிலும் கண்டிராத வசதிகள் அனைத்து அறைகளிலும் இருப்பதைக் கண்டார். லெவ் அவரை வீட்டின் எல்லாப் பகுதிக்கும் அழைத்துச் சென்றான். வீட்டிற்குத் தேவையான ஆற்றல்களில் (எரிவாயு, மின்சாரம்) எப்படி தன்னிறைவு பெற்றிருக்கின்றது’’ என்பதையும் லெவ் அவருக்குக் காட்டினான்.

‘‘இந்த வீட்டிற்கு ஒரு சிறு துளி கூட எரிவாயுவோ அல்லது எண்ணெய்யோ தேவையில்லை. ஹைட்ரோ-ஆக்சி எரிபொருள் செல் (Hydro-oxy fuel cell) உங்களுக்குத் தேவையான அனைத்து ஆற்றல்களையும் வழங்குகிறது’’ என்றான்.

பின்பு லெவ், பெரிதான பசுமை வீடு போன்று தோற்றமளித்த இடத்திற்கு அவரை அழைத்துச் சென்றான். ஆனால் அது ஒரு வீடாக இல்லாமல் ஏதேன் மரங்களால் நிறைந்திருந்த தோட்டமாக இருந்தது. அந்தத் தோட்டம் நாலா பக்கமும் வேலி அடைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்ததால், அங்கிருக்கும் ஏதேன் மரங்கள் எப்போதும் தாராளமாகப் பழங்களைக் கொடுக்கக் கூடியதாய் இருந்தது. ‘‘யார் ஒருவருக்கும் தேவைப்படும் அனைத்து விதமான உணவும் இதுதான்’’ என்று லெவ் விளக்கினான்.

‘‘நோய்வாய்ப்பட்டவர்கள் இந்தப் பழத்தை உண்பதால் விரைவில் குணமடைகிறார்கள். மேலும் நலமுடன் இருப்பவர்கள் இந்தப் பழத்தைச் சாப்பிடும்போது, படிப்படியாக மனித பரிபூரணத்தைப் பெறுவார்கள்’’ என்று லெவ் கூறினான்.

‘‘பூத்துக் குலுங்கும் மரங்களிலிருந்தும், தாராளமாக பூக்கும் பூச்செடிகளிலிருந்தும், காய்கறிகளிலிருந்தும் வீசிய நறுமணமானது பரலோகத்தில் வீசும் நறுமணத்தைப் போன்று இருந்தது. ஒவ்வொன்றும் அழகாக இருந்தது. மீண்டும் ஜீவனுடன் இருப்பது என்பது அற்புதமானதொன்றாகத் தோன்றவில்லையா?’’ என்று லெவ் வினவினான்.

ஹிட்லர் மெதுவாக ஏதோ முணுமுணுத்தார். லெவ்வால் அதனைக் கேட்க முடியவில்லை. ஹிட்லர் ஓவியர் ஆகுவதற்கு முயன்றார் என்பது லெவ்விற்குத் தெரியும். அதனால் அழகினை ரசிக்கும் கண்கள் அவருக்கு இருந்தன. ஹிட்லர் எளிதில் பாதிப்படைகிற தன்மையைக் கொண்டிருந்திருக்கலாம், தனது கொடூரமானச் செயல்களைக் கேட்டதனால் அவரால் மகிழ்ச்சி அடைய முடியவில்லை. ஒரு மந்திரக்கோல் வந்து அவருடைய கடந்த காலத்தை அவரிடம் இருந்து எடுத்து விட வேண்டும் என்றும், தற்போது அவர் சுமந்து கொண்டிருக்கும் அனைத்துப் பாவ சுமையும் இல்லாதபடிக்கு, இப்போதைய இனிமையான நிலையை அனுபவிக்கும்படி அவரைத் தனியாக விட்டுவிட வேண்டும் என்பதே அவரின் விருப்பமாய் இருந்தது.

அவர்கள் வெளியே நடந்தபோது ஒரு மெர்சிடிஸ் பென்ஸ் வெளியில் நிற்பதை ஹிட்லர் கண்டார். அதைப் பார்ப்பதற்கு அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

‘‘ஆஹா! இது எங்களது சிறந்த ஜெர்மன் தொழில்நுட்பத்தால் உருவானது’’ என்றார்.

‘‘இல்லை, உண்மை அதுவல்ல. இது சிறந்த யூத தொழில்நுட்பத்தால் உருவானது. இந்த ஆட்டோ மொபைல் ஹைட்ரஜனை மின்சாரமாக மாற்றும் எரிபொருளைக் கொண்டு இயங்குகிறது. வண்டியில் ஏறுங்கள் நான் உங்களுக்கு இப்பகுதியைச் சுற்றிக் காட்டுகிறேன்’’ என்றான்.

மின்சார மோட்டாரால் இயக்கப்பட்டதால் கார் அமைதியாக ஓடியது. அவர்கள் அப்பகுதியைச் சுற்றி ஓட்டும்போது, கடந்த காலங்களில் இதுபோலச் சென்றது குறித்த சில

நினைவுகளால் ஹிட்லர் ஏக்கமடைந்தார். இறுதியில் ஹிட்லர், "இந்த இடம் எனது சொந்த ஊரான ஆஸ்ட்ரியாவில் இருக்கும் பிரானாவ்வை என்னுடைய நினைவிற்குக் கொண்டு வருகிறது. மிகவும் அழகிய நாடு அது. இந்த இடம் எனக்கு சிறுவயதில் பழக்கப்பட்டிருந்த நகரத்தைப் போலவே இருக்கிறது. நான் கனவு காண்கிறேனா அல்லது இது உண்மையிலேயே நான் பிறந்த அந்த அழகிய சிறுநகரம் தானா? நான் அங்கிருந்து இரண்டு வயதிலேயே வெளியேறிவிட்டேன். ஆனால் பலமுறை மீண்டும் சென்று பார்த்திருக்கிறேன். இங்குள்ள அனைத்தும் மிகவும் அழகாக இருக்கின்றன. ஆனால் நான் இதற்கு முன்பு இதுபோன்ற விரக்தியான நிலையில் இருந்ததில்லை. இந்த இடம் மிகவும் அமைதியாக இருக்கிறது ஆனால் எனக்குள் அமைதி இல்லை" என்றார்.

"நீங்கள் பிரானாவ்வில் தான் இருக்கிறீர்கள். நீங்கள் இங்குதான் வசிக்கவும் போகிறீர்கள். உங்களுக்கு இந்த இடம் பிடித்திருப்பதில் எனக்கு மகிழ்ச்சி. இந்த இடம் மிகவும் அழகாகவும், அமைதியாகவும் இருக்கிறது. இவ்வளவு அழகான இடத்திலிருந்து தனது வாழ்க்கையைத் தொடங்கிய இளைஞன் எப்படி கோபமான அடால்ஃப் ஹிட்லராக மாறியிருக்க முடியும்?" என்று லெவ் கேள்வி எழுப்பினான்.

தான் ஹிட்லரிடம் கொஞ்சம் கடுமையாக நடந்துகொண்டோமோ என்று லெவ் எண்ணினான். அதனால் தனது பேச்சினைத் தற்காலிகமாக திசைதிருப்பினான். அந்தப் பகுதியில் உள்ள ஏதேனும் அம்சங்களை ஹிட்லரால் அடையாளம் காணமுடிகிறதா என்று கேட்டான். ஆச்சரியப்படும் விதமாக ஹிட்லர் அங்குச் சென்றபோதெல்லாம், அவர் பார்த்திருந்த இயற்கைக் காட்சிகளை நினைவுப்படுத்தி அவற்றை லெவ்விடம் கூறினார். இந்த சம்பாஷனைகள் அவரது வார்த்தையையும், தோரணையையும் மாற்றியிருந்தது. அவரின் சுயநலமான அரசியல் சுரண்டல்களை மறப்பதற்கும், சிறிது நேரம் அவரது இளமைக் காலங்களுக்குள் திரும்பிச் செல்வதற்கும் இது வழிவகுத்தது. கூறப்போனால் தனது தந்தையைப் பின்பற்றி தானும் ஓர் அரசு ஊழியர் ஆகியிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று கூட நினைத்தார். அவ்வாறு செய்திருந்தால் காரியங்கள் இப்போது எவ்வளவு வேறுபட்டதாக அவருக்கு இருந்திருக்கும். அவர் அனுபவித்த அனைத்து ஆடம்பரமும், புகழும் சில காலங்கள் மட்டுமே நிலைத்திருந்தன. இப்போது அவர் ஒரு தோற்கடிக்கப்பட்ட மற்றும் உடைந்த மனிதராகவே இருக்கிறார்.

"வெற்றிக்கு வாழ்த்துக்கள்! (Seig Hei- Heil Victory) என்று போற்றி வணங்குகின்ற கூட்டம் எங்கே? அந்த உலகத்தின் மகிமை விரைவாக முடியக்கூடியது. எவ்வளவு சீக்கிரமாக அது மறைந்து விட்டது. அவர் அதிகாரத்தில் இருந்தபோது அவர் அனுபவித்த ஆடம்பரமும், பகட்டும் இப்போது அவர் எதிர்கொள்ளும் வலிக்கும் மற்றும் துயரத்திற்கும் சமமானது அல்ல. மேலும் அவர் தனது கனவான நாசிப் பேரரசு முற்றிலுமாக அழிந்துவிட்டதைக் கண்டார். இப்படியான முடிவுகளை ஒருவேளை அவர் முன்னமே அறிந்திருந்தால், நச்சுத்தன்மையுடன் கூடிய வெறுப்புணர்வு தனிந்திருக்கலாம். அவரது பொறுப்பற்ற செயலுக்கும், கொடூரமான அழிவிற்கும் அவர் செலுத்த வேண்டிய விலையானது, சில காலங்கள் அவர் அனுபவித்த கனமிக்க வாழ்க்கையில் அவர் பெற்றுக்கொண்ட உணர்வுகளைவிட மிகவும் அதிகமானது. சாத்தான் எவ்வளவு மோசமான ஊதியத்தை அளிக்கிறவராக இருக்கிறார். சாத்தானோடு உறவு வைத்துக்கொண்ட யாரொருவரும் மகிழ்ச்சியான அனுபவத்தை இதுவரையிலும் பெற்றுக்கொண்டதில்லை" என்றான்.

## கதிரவனுக்குக் கீழான காலைப் பொழுதிற்குப் பிறகு

அழகான சுற்று வட்டாரத்தில் காரைச் செலுத்திய பின்னர், இப்போது பிரானாவ் கிராமத்தில் இருந்த 15 சார்ல்ஸ்பர்கர் வோர்க் ஸ்டாட் என்ற முகவரிக்கு ஹிட்லரை அழைத்துச் செல்வதற்கு லெவ் எண்ணினான். ஹிட்லர் பிறந்த அந்த அடுக்கு மாடிக் கட்டிடத்தின் பெயரை "சர்வதேச சந்திப்பு இடம்" (House of Responsibility) என்று மாற்றியிருந்தார்கள். அப்பகுதியில் குடியிருந்த ஜனங்கள் அந்த இடத்திற்கு ஒரு தனிப்பட்ட அடையாளம் கொடுக்க விரும்பினர். ஏனென்றால் இதுபோன்ற சம்பவம் இனி ஒருபோதும் நடக்காது என்பதை அவர்கள் உலகத்திற்குத் தெரிவிக்க விரும்பினர். அந்தப் பகுதியிலிருந்து ஹிட்லர் சென்றபோது அவருக்கு இரண்டு வயது தான் ஆகியிருந்தது. அதனால் அவரால் அவருடைய குழந்தைப் பருவத்தில் அங்கிருந்த நாட்களை நினைவுபடுத்த முடியவில்லை. ஆனால் அவர் அதன் பிறகு அந்தப் பகுதிக்குப் பலமுறை சென்றிருந்ததால் வெள்ளம் போன்ற நினைவுகள் அவருக்குள் எழுந்தன.

வாழ்க்கையை வாழ்வதற்கும், நேசிப்பதற்குமாக இருந்த அந்தப் பொன்னான தருணங்களை இனி ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்று ஹிட்லர் இப்போது விரும்பினார். எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல், பொறுப்பற்று அநேகரின் வாழ்க்கையை அழிப்பதற்கும், கொல்லுவதற்கும் வெறுப்புணர்வினால் தூண்டப்பட்ட அரக்கனாக அவரை மாற்றியது எது? இது தவறு என்று கூறுவதற்கு அவரிடம் மனசாட்சியின் குரல் இல்லையா? மரணத்திற்குள் செல்லும் நம்பிக்கையற்ற பாதிக்கப்பட்டவர்களின் கண்களைப் பார்த்தபோது, இந்தப் பைத்தியக்காரத்தனத்தை நிறுத்த வேண்டும் என்று எண்ணுவதற்கேதுவான இரக்க உணர்வு அவருக்குள் சிறிய அளவில் கூட தோன்றவில்லையா? துன்பத்தில் இருக்கும் ஒருவர் மீது உண்டாகும் இரக்க உணர்வையும் கூட சாத்தான் அவருடைய இருதயத்திலிருந்து முழுவதுமாக அழித்துவிட்டாரா? யூதர்கள் மற்றும் குறவர் கூட்டத்தை (ஜிப்ஸிகள்) கொல்வதன் மூலமாக இந்த உலகத்தின் அனைத்துத் தீமைகளையும் சரி செய்யமுடியும் என்று அவர் எப்படி நம்பினார் மற்றும் மற்றவர்களையும் எப்படி நம்பவைத்திருக்க முடியும்? மிகப்பெரிய புத்திசாலிகளும், கல்வியறிவு பெற்றவர்களும்கூட எப்படி அவ்வளவு காலம் ஏமாற்றப்பட்டிருக்க முடியும்? தேவனின் அனந்த வல்லமையால் ஆதரிக்கப்பட்டிருந்த தாவீதின் விடிவெள்ளி நட்சத்திரத்தின் எழுச்சியை அவரால் தடுத்துநிறுத்த முடியுமா? இஸ்ரயேலைக் குறித்து வேதாகமத்தில் சொல்லப்பட்டிருந்த தீர்க்கத்தரிசனங்களை அவரால் தோல்வியடையச் செய்ய முடியுமா? "உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடு இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும் முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்." (எரேமியா 30:11)

ஹிட்லர் வீடு திரும்பும்போது மிகவும் அமைதியாக இருந்தார். அவர் விரக்தியடைந்திருப்பதை லெவ்வால் காணமுடிந்தது. மிக உயரிய அதிகாரத்தில் அவர் இருந்திருந்ததால், ஜீவனையும் - மரணத்தையும் நிர்ணயிக்கும் அதிகாரம் அவரின் கரத்தில் இருந்திருந்ததால், அவர் முரட்டுத்தனமான ஆளுமையைப் பெற்றவராய் இருந்தார். ஜனங்கள் ஒருவரது விரல் அசைவிற்குக் கீழாக இருப்பது ஒரு விஷயம் என்றால், உண்மையிலேயே உங்களை நேசிக்கவும், அக்கறைகொள்ளவும் விரும்பும் நபர்களைப் பெற்றிருப்பது என்பது முற்றிலும் வேறுபட்ட விஷயம். இயேசுவை அழிக்கும் நம்பிக்கையில் இரண்டு வயதுக்குட்பட்ட அனைத்து ஆண்குழந்தைகளையும் கொல்லுவதற்கு உத்தரவிட்ட பெரிய ஏரோது தான் மரித்தபோது, தனக்குக் கீழாகப் பணிபுரிந்த அனைத்து அதிகாரிகளையும் கொல்லுமாறு தனது நம்பகமான தளபதியிடம் கூறினார். அப்படிச் செய்தால், அவர் மரிக்கும் போது உண்மையான துக்கம் இருக்கும் என்று கூறினார். துரதிஷ்டவசமாக அன்றைய சோகமும், துக்கமும் அவருக்கானதாக இல்லாமல், அவர் கொன்ற தளபதிகளுக்கானதாகவே இருந்தது.

அவர்கள் வீட்டிற்குத் திரும்பியதும் தாங்கள் வழக்கமாக உண்ணும் ருசியான ஏதேன் பழங்களையும் மற்றும் உயிர்த்தெழுதலின் கேக்கையும் உட்கொண்டனர். எவ்வளவு சிறப்பாகத் தன்னை உணர்கிறார் என்று ஹிட்லர் ஒளிவுமறைவின்றி கூறினார். "நான் இப்போது இருப்பது போல் எப்போதும் இருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. நான் மரிப்பதற்குச் சில வருடங்கள் முன்பிலிருந்தே சாப்பிடுவதில் எனக்கு நிறையப் பிரச்சனைகள் இருந்தன. பழங்களைக் கொண்டிருக்கும் இந்த தற்போதைய உணவுமுறை எனக்கு எல்லையில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. இந்த உணவு எவ்வளவு திருப்திகரமாக இருக்கிறது என்றும், என் மனதை சிந்திக்கும்படி எவ்வளவு தூண்டுகிறது என்றும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது" என்றார்.

"முற்பிதாக்கள் ஏதேன் தோட்டத்து மரங்களின் விதையோடு ஜீவனுக்குள் திரும்பினார்கள். ஒருவேளை ஆதாமும், ஏவாளும் தொடர்ந்து இந்த உணவை சாப்பிட்டிருந்தால் அவர்கள் என்றென்றும் ஜீவனோடு வாழ்ந்திருக்க முடியும். இருப்பினும் பாவத்தின் காரணமாக அவர்கள் ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டப்பட்டனர் மற்றும் சுடரொளிப் பட்டயத்தைக் கையில் கொண்டிருக்கும் தேவதூதன் ஒருவர், ஏதேன் தோட்டத்திற்குள் ஒருவரும் நுழையாதவாறு பாதுகாத்தார். அதன் விதைகள் பாதுகாக்கப்பட்டன, இப்போது உலகம் முழுவதும் பயிரிடப்படுகின்றன" என்று லெவ் விளக்கினான்.

"நம்மைப் போல உயிர்த்தெழுந்து வரும் ஒவ்வொருவருக்கும், உயிர் சக்தியினைப் புதுப்பிக்கச் செய்யும் இந்தப் பழத்தைச் சில மாதங்கள் சாப்பிட்ட உடனேயே, நம்முடைய சிந்தனைத் திறன் வியக்கத்தக்க அளவில் அதிகரிப்பதைக் காண முடியும். வயதான மற்றும் பலவீனமானவர்கள்

இந்தப் பழத்தை உண்ணும்போது அவர்களுடைய பலவீனங்கள் நீங்கப்பெற்று வாலிபத்திற்குத் திரும்பத் தொடங்குவர்'' என்று லெவ் கூறினான்.

''நீங்கள் கூறுவது தேவதைக் கதைபோல் உள்ளது, ஆனால் இந்தப் பழம் எவ்வளவு நல்லது என்பது பற்றி நீங்கள் கூறுவதை என்னால் மறுக்கமுடியாது. என்னுடைய கடைசி காலங்களில் நான் நோய்வாய்ப்பட்ட மனிதனாகவே இருந்தேன் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். என்னுடைய மருத்துவர்களால் எனக்கு எதையும் செய்யமுடியவில்லை. வலியையும், வேதனையையும் கொண்டிருந்த ஒருவர், அது இல்லாமல் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதை உணரும்போது அது எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று உங்களால் கற்பனைசெய்து பார்க்க முடியாது. சரி, உங்களுக்கு விருப்பமிருந்தால் நான் இந்த உலகைவிட்டுச் சென்ற வருடமான 1945-ம் வருடத்திற்குப் பிறகு என்ன நடந்தது என்று கூறுங்கள்'' என்று ஹிட்லர் கேட்டார்.

## ஜெர்மனியின் வரலாற்றிலிருந்து ஒரு பாடம்

இதற்காகத்தான் லெவ் காத்துக்கொண்டிருந்தான். இங்கே, ஹிட்லர் இதனை ஒரு கட்டளையாகவோ, கோரிக்கையாகவோ கேட்கவில்லை. ஹிட்லர் உண்மையிலேயே தன்னுடைய கடைசி நாட்களுக்குப் பிறகு நிகழ்ந்த மாற்றங்களை அறிந்துகொள்ள விரும்பினார். ''உண்மையிலேயே இவைகளை நீங்கள் அறிந்துகொள்ள விரும்பினால், நான் கூறுகிறேன்'' என்றான்.

''நிஜமாகவே நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீங்களும் என்னைப்போல் தான் ஜீவனுக்குள் திரும்பி வந்தீர்கள் என்று கூறினீர்கள் என்றால், நாம் மரித்த பிறகு என்ன நடந்தது என்பது பற்றி அறிந்துகொள்ளாமல் இருப்பது, எவ்வளவு மனஉளைச்சலை உண்டாக்கும் என்று நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள் தானே. ஜீவனோடு இருப்பது மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், நம் வாழ்க்கையில் மிகப்பெரிய இடைவெளியுடன் நாம் இருப்பது என்பது விரக்தியைக் கொடுக்கிறது. நாம் ஜீவனுக்குள் திரும்பும்போது ஒரு நூற்றாண்டின் அனுபவங்களை இழந்து திரும்புவதால் உண்டாகும் விரக்தியை அனுபவிக்காமல் இருக்கவே முடியாது. எனது போராட்டம் எவ்வளவு கடினமாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்'' என்று ஹிட்லர் கூறினார்.

''ம்ம்...எனக்குத் தெரியும், இப்போது நீங்கள் என்னவிதமான உணர்வுக்குள் சென்றீர்களோ, அதே விதமான உணர்வுக்குள் தான் நானும் சென்றேன். நீங்கள் ஜீவனுடன் தான் இருக்கிறீர்கள் என்ற உண்மைக்கு உங்களை நீங்கள் பழக்கப்படுத்திக் கொள்வதற்கு ஒரு வார காலம் எடுக்கும். இங்கு நடப்பது கனவு அல்ல என்று நம்புவதற்கும், மறுபடியும் கண்விழித்தால் அந்த மோசமான பதுங்கு குழிக்குள் இருப்பீர்களோ என்ற எண்ணம் மறைவதற்கும் சில நாட்கள் ஆகும். நீங்கள் உண்மையாகவே மீண்டும் ஜீவனோடு இருக்கிறீர்கள். உங்களின் தீமையான செயல்களுக்கான, பாவ பாரத்தை நீங்கள் சுதந்தரிக்காமல் இருந்திருந்தால், நீங்கள் பூரண ஆரோக்கியத்தையும், நித்திய ஜீவனுக்கான வாய்ப்புகளை மிகவும் மகிழ்ச்சியோடு எளிதில் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். சரி.. போருக்குப் பின்னர் என்ன நடந்தது என்பதைக் கூறுகிறேன்'' என்றான்.

''உங்களின் மரணத்திற்குப் பிறகு ஜெர்மனி நிபந்தனையின்றி சரணடைந்தது. உங்கள் தொழிற்சாலைகளில் இருந்த அனைத்து இயந்திரங்களையும் ரஷ்யா கொள்ளையடித்தது. உங்களின் தொழிற்சாலைகள் வெறுமையாகும் வரைக்கும், அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாக டிரக்குகளைக் கொண்டுவந்து அவைகளை இயந்திரங்களால் நிரப்பி எடுத்துச் சென்றனர். ஜெர்மனியின் நகரங்கள் அனைத்தும் இடிந்துகிடந்தன. ஐரோப்பா முழுவதிலும் உணவுப்பஞ்சம் பரவியது. அமெரிக்கா தங்களால் இயன்ற அளவு வேகமாக ஐரோப்பாவிற்கு உணவுப் பொருட்களை அனுப்பியது. ஆனால் ஐரோப்பாவில் பஞ்சத்தைத் தவிர்க்க முடிந்ததைப்போல ஜெர்மனியில் பஞ்சத்தைத் தவிர்க்க முடியவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால், ஜெர்மனியர்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருந்தனர். இவை அனைத்தும் தேவையற்ற துன்பங்கள். ஏனென்றால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நீங்கள் தோற்றுவிட்டீர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். நீங்கள் முன்பே சரணடைந்திருந்தால் போரின் கொடூரத்தையும், உங்கள் நகரங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் நிகழ்ந்த குண்டு வீச்சினையும் முடிவுக்கு கொண்டு வந்திருப்பீர்கள். ஜெர்மனியர்கள் அனுபவிக்கும் வேதனையிலிருந்து அவர்களை விடுவிப்பதை விட, யூதர்களைக் கொல்வதுதான் சாத்தானுக்கு முக்கியமானதாக இருந்திருக்கும்.''

“எப்படி இருந்தாலும் இறுதியில் ஜெர்மனிக்கு உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்தன. அமெரிக்கா மார்சல் திட்டத்தைத் துவக்கியது. இதன் மூலமாக ஜெர்மனி மற்றும் ஐரோப்பா முழுவதையும் தங்களுக்கு கீழாகக் கொண்டுவர எண்ணினர். அதற்காக பெரும் தொகையையும், உணவுப் பொருட்களையும் அவர்களுக்கு வழங்கினர். விரைவிலேயே ஜெர்மனியும், மேற்கு ஐரோப்பாவும் மீண்டும் செழிப்பான தேசங்களாக மாறின. ரஷ்யர்களால் கைப்பற்றப்பட்ட கிழக்கு ஜெர்மனி மட்டுமே பின்தங்கிய நிலையில் இருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு சோவியத் ஒன்றியத்தால், ரஷ்யா முழுவதிலும் போடப்பட்டிருந்த இரும்புத் திரை - அரசியல், இராணுவம் மற்றும் கருத்துச் சுதந்திரம் இவைகளின் மேல் இருந்த தடை 1989-ம் ஆண்டு நீக்கப்பட்டு, பிரிவினைச் சுவரும் இடிக்கப்பட்டது. கிழக்கு ஜெர்மனி, மீண்டும் ஜெர்மனியுடன் இணைந்தது. அதற்காக மேற்கு ஜெர்மனியின் தரப்பிலிருந்து மகத்தான தியாகங்கள் கோரப்பட்டது. பாழுந்தோற்றமுடைய வீடுகள் மற்றும் நிலங்களை மறுகட்டமைப்பதற்காக, வெளிப்படையாகத் தெரியக்கூடிய வகையில் பல பில்லியன்களைச் செலவிட வேண்டியிருந்தது. எப்படி இருந்தாலும் இந்த வேலைகள் செய்துமுடிக்கப்பட்டன. விரைவில் ஜெர்மனி, ஐரோப்பா முழுவதையும் ஒரு கூட்டணியில் கொண்டுவந்தது. ஒரு பொதுவான நாணயத்தை உருவாக்கியது. இந்தக் கூட்டணியில் இருந்த அனைத்து நாடுகளுக்கும் ஒரு சோஷலிச அரசாங்க வடிவமைப்பை பெற்றுக் கொள்வதற்கான ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கியது.”

“சுருக்கமாகக் கூறவேண்டுமென்றால், 1948-ம் ஆண்டு இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இஸ்ரயேல் தேசம் பிறந்தது. பல யுத்தங்களுக்குப் பிறகும் தொடர்ந்து வளர்ந்து வந்தது. உலக தொழில்நுட்பத்தில் முன்னணி வகித்தது. இறுதியாக கிறிஸ்தவ அமைப்புகளால் ஊக்குவிக்கப்பட்ட தேசங்கள், அடால்ஃப் நீங்கள் கூறியதைப் போலவே, யூத தேசத்திற்கு முடிவினைக் கொண்டுவர நினைத்தனர். யூதர்களிடமிருந்து எருசலேமைக் கைப்பற்ற யூத அரசுக்கு எதிராக மிகப்பெரிய அளவில், திணறடிக்கச் செய்யும்படியாக இராணுவம் வந்தது. அவர்கள் வெற்றி பெற்றிருந்தால் என்ன செய்திருப்பார்கள் என்பது தேவனுக்கே தெரியும். இஸ்ரயேலியப் படையெடுப்பில் முன்னணி வகித்தவர்களில் நானும் ஒருவன். முதல் நாள் போரிலேயே நான் கொல்லப்பட்டேன். படையெடுப்பாளர்கள் அநேகரைக் கொன்றனர் மற்றும் எருசலேமிலிருந்து அநேகரைச் சிறைபிடித்தும் சென்றனர். மறுநாள் தேவன் தலையிட்டார். காற்றில் மரண வாசனை இருப்பதை உணரமுடிந்தது என்று எதிரிகள் கூறினர். எருசலேமுக்கு எதிராகத் திரண்டிருந்த படைகள் அனைத்தும் அன்று அதிசயத்தக்க வகையில் கொல்லப்பட்டன. மரித்த இலட்சக்கணக்கான வீரர்களின் உடல்கள் இஸ்ரயேலெங்கும் சிதறிக்கிடந்தன. இஸ்ரயேலுக்கு எதிராகத் தங்கள் படைகளை அனுப்பிய அனைத்து தேசங்களும், அவர்களது படைகள் கொன்று குவிக்கப்பட்டு இருப்பதைக் காணும்படிக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டது. அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பியபோது அவர்கள், தேவனே அனைத்துப் படைகளையும் அழித்தார் என்பதைத் தெரிந்துகொண்டனர். இந்தப் போரினை நடத்த அனுமதித்த அரசியல் மற்றும் மதத்தலைவர்களை வீதி, வீதியாக இழுத்துச் சென்றனர். இதனைத் தொடர்ந்து அனைத்து இடங்களிலும் வன்முறை வெடித்தது மற்றும் தேசங்களில் இருந்த முந்தைய அரசாங்க அமைப்புகள் அனைத்தும் அழிந்தன” என்றான்.

## பூமியின் புதிய ஆட்சியாளர்கள்

“இதனைத் தொடர்ந்து முற்பிதாக்கள் இஸ்ரயேலில் உயிர்த்தெழுந்தனர், அவர்கள் ஏதேன் தோட்டத்து மரங்களின் விதைகளோடு திரும்பினர். இஸ்ரயேலர்கள் தங்களது மேசியாவை ஏற்றுக் கொண்டனர். இத்தகைய பேரழிவிற்குப் பின்பும் பூமியில் அப்படியே எஞ்சியிருக்கும் ஒரே தேசமாக இஸ்ரயேல் இருந்தது. அப்போதிலிருந்து மரித்தவர்களை ஜீவனோடு பெற்றுக்கொள்ளும் முதல் நாடாக இஸ்ரயேல் இருந்தது. இந்தச் செயல்பாட்டில் பெரும்பாலான மற்ற தேசங்களைவிட இஸ்ரயேல் பல ஆண்டுகள் முன்னிலையில் உள்ளது. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் இப்போது உயிர்த்தெழுந்து வந்துகொண்டிருக்கின்றனர். முற்பிதாக்கள் என்னிடம் உங்களுக்காக வீட்டினைக் கட்டுவதற்கு தன்னார்வத் தொண்டு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். உண்மையிலேயே நான் இதைச் செய்வதற்கு விரும்பவில்லை என்பதை உங்களிடம் கண்டிப்பாகக் கூறவேண்டும். உங்களுக்கான வீட்டினைக் கட்டுவதற்கும், நீங்கள் ஜீவனோடு திரும்பிவருவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதற்கும் நான் தன்னார்வத் தொண்டு செய்ய விரும்பிய பூமியின் கடைசி நபர் நீங்கள்தான். இருப்பினும், இஸ்ரயேலின் தலைமையை ஏற்கத் தயங்கிய பலரைக் கையாள்வதில் நான் தொடர் வெற்றிகளைப் பெற்றுள்ளதால், மற்றவர்களைவிட என்னால் உங்களுடன் சிறப்பாகச் செயல்பட முடியும் என்று கூறி முற்பிதாக்கள் என்னைச்

சம்மதிக்க வைத்தனர். ஏனென்றால் இஸ்ரயேலின் தொழில்நுட்பம் மற்ற தேசங்களைவிட மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. இறுதியில் அவர்களால் அதனை மறுக்க முடியவில்லை. எப்படியாய் இருந்தாலும் உங்களின் உயிர்த்தெழுதலில், உங்களுடைய வழிகாட்டியாகச் செயல்படும் பொறுப்பு என்னிடம் இருந்தது. இவைகள் தான் இதுவரை நடந்தவைகள் அடால்ஃப். இந்த தகவல்கள் உங்களுக்கு உதவியாய் இருந்தனவா?" என்று லெவ் கேட்டான்.

"ஆமாம்.. உங்களின் தகவல்கள் எனக்கு உதவியது, நன்றி" என்றார். "நீங்கள் கூறிய அனைத்தையும் நம்புவதற்கு எனக்குக் கடினமாக இருக்கிறது. ஆனால் குறைந்தபட்சம் முன்பைவிட இப்போது சற்று தெளிவானப் புரிதல் உள்ளது. நான் நம்பிக்கையின்றி மிகுந்த குழப்பத்தில் இருந்தேன். நீங்கள் என்னைப் பற்றிக் கூறியவைகள் முழுமையாக இல்லாவிட்டாலும், அது என்னுடைய வாழ்க்கையில் உள்ள இந்த இடைவெளியைப் பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள எனக்கு உதவியிருக்கின்றது. நீங்கள் தான் இந்த வீட்டை எனக்காகக் கட்டியுள்ளீர்கள், நான் சரியாகத்தான் கேட்டுள்ளேனா?" என்று கேட்டார்.

"ஆமாம், சரிதான். உங்கள் சார்பிலிருந்து எந்தவொரு வேலையும் செய்யாமலேயே நீங்கள் இந்த வீட்டினைப் பெற்றுள்ளீர்கள். எப்படியாயினும், இதைப் போன்றதான ஒரு வீட்டை உங்களின் பெற்றோர்களுக்காக நீங்கள் கட்டவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவீர்கள். உங்கள் இருதயத்தில் கொஞ்சமேனும் நல்ல நோக்கங்கள் இருந்தால், மற்றவர்களுக்கும் வீடுகளைக் கட்டுவதற்கு நீங்கள் உதவலாம்" என்றான்.

## ஹிட்லர் தனது பெற்றோருக்கான வீட்டினைக் கட்டுவதை நிராகரித்தல்

ஹிட்லர் சிறிது நேரம் யோசித்துவிட்டு, "எனக்கு உடல் உழைப்பில் அதிகப் பழக்கம் இல்லை, ஆனால் இதற்காக என்னால் வேறு சில உதவிகளைச் செய்யமுடியும் என்று நினைக்கிறேன். என்னிடம் சுவிட்சர்லாந்து வங்கியில் கையிருப்பாக பணமும், தங்கமும் இருக்கின்றன என்பதை உங்களிடம் தெரிவித்தாக வேண்டும். அவர்களுக்காக வீடுகளை என்னால் எளிதில் கட்டமுடியும். என் பெற்றோருக்குத் தேவையானதைச் செய்யாமல் நான் இருக்கமாட்டேன்" என்றார்.

"சுவிட்சர்லாந்தில் எந்த வங்கியும் இப்போது இல்லை. அங்கு மட்டுமல்ல உலகமெங்கிலும் இப்போது வங்கிகள் கிடையாது என்பதை உங்களுக்கு நான் கட்டாயம் தெரிவித்தாக வேண்டும், அடால்ஃப். இந்த உலகம் பணத்தாலோ அல்லது அதைப்போன்ற வேறு எது ஒன்றினாலோ இயங்கவில்லை. உங்கள் பெற்றோருக்கான வீடுகளைக் கட்டுவதற்கு உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் மற்றவர்கள் அதைச் செய்யும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வார்கள்" என்று லெவ் கூறினான்.

"அது அவர்களுடைய நல்ல மனதைக் காட்டுகிறது. இத்தகையப் பெருந்தன்மையை நான் நிச்சயமாகப் பாராட்டுகிறேன்" என்று ஹிட்லர் பதிலளித்தார்.

ஹிட்லர் அவ்வாறு கூறியது லெவ்விற்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. யாருக்காகவும், எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு ஹிட்லர் தயாராயில்லை. ஹிட்லர், யூதர்களின் வீடுகளைக் கொள்ளையடித்து, அவர்களின் வீடுகளையும், சொத்துக்களையும் அவர்களுடைய ஜீவனையும் அபகரித்துப் பின்னரும் கூட, யூதர் ஒருவரால் கட்டப்பட்ட தன்னிறைவு கொண்ட புதிய வீட்டினைப் பெற்றிருக்கிறார். இருந்தபோதிலும் அவர் மற்றவர்களுக்குக் கடன்பட்டிருப்பதையும், தனக்கு மற்றவர்கள் அளித்த உதவிக்கு நன்றியாகத் தானும் ஏதாவது ஒரு வகையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எந்த ஒரு சிந்தையும் அவருக்கு வரவேயில்லை. அவர் தனது பெற்றோருக்கு வீடுகளைக் கட்டுவதற்கு மறுத்தார். மேலும் யூதர்களுக்குச் சிறிதளவுகூட உதவுவதற்கு அவர் தயாராக இல்லை. லெவ் அவருடைய அணுகுமுறையில் ஒழுங்குபடுத்துதல் தேவைப்படுவதை உணர்ந்தான்.

இரவு வந்ததும் அனைத்துக் கல்வித் திட்டங்களோடும் தொடர்புடையதாய் இருந்த அற்புதமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை லெவ், ஹிட்லருக்குக் காட்டினான். பழைய உலகில் பொழுதுபோக்கிற்காக மணிக்கணக்கில் ஜனங்கள் பார்த்துக்கொண்டிருந்த புத்தியை மழுங்கச் செய்கின்ற குப்பையான நிகழ்ச்சிகளை இப்போது தொலைக்காட்சியில் காணமுடியவில்லை. எல்லா நிகழ்ச்சிகளும் நம்மை மேம்படச் செய்யும் மதிப்புமிக்கவைகளாகவே இருந்தன. பெரும்பாலான

தகவல்கள் கல்வித் திட்டங்களின் வடிவத்தில் ஒளிபரப்பாகின. ஒருவர் கற்க விரும்பும் எதையும் கற்றுக்கொள்ளும் விதமாக ஒவ்வொரு நிகழ்ச்சியும் இருந்தது. ஒரு மணி நேர அளவில் ஒளிபரப்பாகிய நவீன வரலாறு என்ற நிகழ்ச்சியைப் பார்த்தப் பிறகு, இவ்வகைப் பாடத்தை ஒருவர் எவ்வளவு எளிதாகக் கற்றுக்கொள்ளமுடியும் என்பதை ஹிட்லர் ஒத்துக்கொண்டார். ஹிட்லருக்கு வரலாற்றில் ஆர்வம் இருந்ததினாலேயே, லெவ் இந்த நிகழ்ச்சியைத் தேர்ந்தெடுத்திருந்தான். பின்பு லெவ் தான் சற்று முன்பு பகிர்ந்துகொண்ட, எருசலேமிற்கு எதிராக நடந்தப் போரின் காட்சிகளை ஹிட்லருக்குக் காட்டினான். அந்தப் போரில் நிகழ்ந்த படுகொலைகளைக் கண்டு ஹிட்லர் திகைத்தார். நிலப்பரப்பு முழுவதிலும் சிதறிக் கிடந்த மில்லியன் கணக்கான சடலங்களையும், உடைந்து நொறுங்கியிருந்த டாங்கிகளையும், போராயுதங்களையும் மற்றும் வானத்திலிருந்து விழுந்த விமானங்களையும் கண்டார். அவர் இதுவரையிலும் இதைப் போன்றதான முழுமையானதொரு பேரழிவைப் பார்த்ததில்லை.

லெவ் கூறிய அனைத்தையும் இக்காட்சிகள் உறுதிப்படுத்தின. ஹிட்லரை இது மிகவும் வேதனைப்படுத்தியதை லெவ்வால் உணரமுடிந்தது. இன்னமும் அவர் யூதர்கள் மீது வெறுப்புணர்வைக் கொண்டிருந்தார். தேவன் வியக்கத்தக்க வகையில், படையெடுத்து வந்த எதிரி இராணுவத்தை எவ்வாறு அழித்தார் என்பதையும், இந்த தற்போதைய ஏற்பாட்டுடன் அவர் எவ்வளவு இணக்கமற்றவராக இருக்கிறார் என்பதையும் அவர் உணர்ந்துகொள்ளவுமே லெவ் அவருக்கு இக்காட்சிகளைக் காட்டினான். நாம் விரும்பும் எந்த வகையான தகவல்களையும் பெற்றுக் கொள்ளும்படியாக வடிவமைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு ஹிட்லர் ஆச்சரியப்பட்டார். அவர் பார்த்திருந்த பழைய படங்களைவிட, இப்போதுள்ளவைகளில் வண்ணங்களும், ஒளிபரப்புகளைத் குறித்த தெளிவான விளக்கங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. ஒலியில் இருந்த துல்லியத் தன்மை அவரை ஆச்சரியப்படுத்தியது. அவரை மகிழ்விப்பதற்காக லெவ் பீத்தோவனின் இசையை இசைக்கச் செய்தான்.

இறுதியில், "இந்த வீடும், தோட்டமும் என்னுடையவைகள் என்று கூறுகிறீர்களா?" என்று ஹிட்லர் கேட்டார்.

"ம்ம்... அதுதான் உண்மை. அவ்வப்போது எனக்கு உதவிய மற்றவர்களுடன் இணைந்து, நான் உங்களுக்காக இந்த வீட்டைக் கட்டினேன். மற்றவர்கள் உங்களுக்காகப் பரதீசின் தோட்டத்தை உருவாக்கினார்கள்" என்றான்.

பின்பு ஹிட்லர் "இந்த வீட்டிற்குத் தேவையான எரிபொருளைப் பெறுவதற்கு, நான் எங்கும் வெளியில் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது அல்லவா?" என்று கேட்டார்.

"நீங்கள் கூறுவது சரிதான், யூதர்கள் தண்ணீரை ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனாக திறம்பட மாற்றுவதை சாத்தியமாக்கியுள்ளனர். பின்பு நாம் எரிபொருள் செல்களைப் பயன்படுத்தி ஹைட்ரஜனை மின்சாரமாக மாற்றுகிறோம் அல்லது குளிர் காலத்தில் ஹைட்ரஜனை எரித்து நாம் வெப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதனால் இப்போது ஒவ்வொரு வீடும் தன்னிறைவு பெற்றதாக இருக்கிறது. மின்சாரத்தை உற்பத்திசெய்யும் ஆலைகளோ அல்லது பூமியின் அழகைக் கெடுக்கும் மின்சாரக் கம்பங்களோ இனி தேவையில்லை. இன்று நீங்கள் எங்காவது மின்சாரக் கம்பங்களைப் பார்க்கிறீர்களா?" என்று லெவ் கேட்டான்.

"மின்சாரக் கம்பங்களை நான் எங்குமே பார்க்கவில்லை. இப்போதுதான் நீங்கள் அதைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள். மரங்கள் வருடத்தின் பன்னிரண்டு மாதங்களிலும் தொடர்ந்து கனிகளைத் தருகின்றனவா?" என்று ஹிட்லர் கேட்டார்.

"ஆமாம், உண்மையாகவே தருகின்றன. உணவு, நிலக்கரி, எண்ணெய் அல்லது பெட்ரோல் போன்றவைகளை விநியோகிக்கும் டிரக்குகள் மற்றும் ரயில்கள் பூமியின் மீது வேகமாகச் செல்வதை நீங்கள் இனி பார்க்கமுடியாது. ஒவ்வொருவரும் அவரவருக்குத் தேவையான உணவைப் பெற்றிருப்பார்கள். மேலும் இது நம் ஜீவனைக் காக்கும் உணவாகும். பிற தேவையானப் பொருட்கள் உள்ளூர்த் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் கொஞ்சமேனும் வேலை செய்யவேண்டும். நாளொன்றுக்கு சுமார் மூன்று மணிநேரங்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்தாலே, ஒவ்வொருவருக்குமானத் தேவைகள் பூர்த்திசெய்யப்படும். ஏனென்றால்

ஜனங்கள் சீரான முறையில் ஜீவனுக்குத் திரும்புவதால், அவர்கள் ஒவ்வொருவருக்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அதிகமான கூடுதல் வேலை நேரம் தேவைப்படுகிறது.

## வேலை பார்த்தல் மதிப்பினைக் குறைப்பதாகவுள்ளது

"நான் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரமாவது வேலை பார்க்க வேண்டும் என்று கூறுகிறீர்களா?" என்று ஹிட்லர் விசாரித்தார்.

"இல்லை, அனைத்து வேலைகளுக்குமே தன்னார்வத் தொண்டுதான் செய்கிறார்கள். ஒருவர் தன்னார்வத் தொண்டு செய்வதற்கு விருப்பமின்மையைத் தேர்ந்தெடுத்தால், அவர் தான் விரும்புகிற வழியில் தனது நேரத்தை செலவழிக்கும் சுதந்திரம் பெறுகிறார். இருப்பினும் பொதுவாக, நடந்துகொண்டிருக்கும் வேலையில் ஜனங்கள் தங்களை இணைத்துக் கொள்வதையே விரும்புவர். அனைத்துத் தானியங்கி தொழிற்சாலைகளையும் பார்ப்பது சிறந்ததொரு கற்றல் அனுபவமாக இருக்கும். இந்தத் தொழிற்சாலைகளைப் பராமரிக்கவும், இயக்கவும் திறமையான மற்றும் அறிவார்ந்த நபர்கள் தேவைப்படுகின்றனர். இருப்பினும் யார் ஒருவரும் ஒரு வாரத்திற்குள்ளாகவே எந்தவொரு வேலையையும் செய்வதற்குக் கற்றுக்கொள்ள முடியும் அல்லது தொலைக்காட்சியில் வழங்கப்படும் ஏதாவது இரண்டு படிப்புகளைப் படிக்க முடியும். இதுதான் உண்மையாகவே மூளையின் செயல்திறனை முழுமையாகப் பயன்படுத்தும் காலம் ஆகும். ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கும் ஜனங்கள் மாதந்தோறும் தங்கள் கற்றல் திறனில் அபரிதமான வளர்ச்சியைப் பெறுகிறார்கள். முன்பு, சில குறிப்பிட்ட வல்லுநர்களால் மட்டுமே செய்யமுடிந்த வேலைகளை, இப்போது எவராலும் செய்ய முடியும். முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கான அறிவும், தகவல்களும் இப்போது கொட்டிக் கிடக்கின்றன. ஒருவர் ஒன்று அல்லது இரண்டு மணி நேரமாவது ஈடுபாட்டுடன் படிக்கும்போது மட்டுமே இந்த அனைத்து மாற்றங்களையும் பெற முடியும்" என்றான்.

"தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்களை உருவாக்குவதற்காக சில ஜனங்கள் இன்னும் பல மணி நேரங்களைச் செலவிடுகிறார்கள். எவ்வாறாயினும், முழு மனுக்குலத்தையும் மீண்டும் உயிர்த்தெழுப்புவதற்குக் கண்டிப்பாகச் செய்யவேண்டிய முக்கியமான முன்னேற்றங்கள் அனைத்தையும் நாம் உருவாக்கியவுடன் அனைத்துமே எளிதாகிவிடும். ஓய்வாக இருந்து எல்லாவற்றையும் கற்றுக்கொள்வது என்பது முழு மனுக்குலத்திற்கும் உயரிய அனுபவமாக இருக்கும். காலை முதல் இரவு வரை உண்பதற்கும், உடுத்துவதற்கும் என்று ஆண்களும், பெண்களும் ஓய்வில்லாமல் உழைத்த கடந்த காலம் இங்கு இல்லை. இப்போது ஆண்களும், பெண்களும் முழுமையானச் சிந்தனைத் திறனை வளர்த்துக்கொள்வதற்கு நேரத்தைச் செலவிடுகிறார்கள். இப்போது நோயுற்றவர்களோ, உடல்நலக் குறைவு உள்ளவர்களோ இல்லை. குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகள் மட்டுமே பராமரிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளனர். நமது உலகம் முன்பை விட இப்போது இருபது மடங்கு கூடுதலான செயல்திறனைப் பெற்றுள்ளது. நமது வளங்கள் எதுவும் போருக்காகவோ, சிறை, சூதாட்டம் குடிபோதை போன்றவைகளுக்காகவோ வீணடிக்கப்படுவதில்லை. எல்லோரும் வீட்டினைக் கட்டுகின்றனர். மரங்களை நடுகின்றனர். மற்றவர்களின் வேலையை ஒருவரும் சீர்குலைப்பதோ அல்லது அழிப்பதோ இல்லை. எந்த ஆற்றலும் வீணடிக்கப்படுவதில்லை" என்றான்.

இறுதியாக, "நீங்கள் இரவு நேர உறக்கத்திற்குச் செல்ல விரும்புகிறீர்களா? பகல்பொழுது முழுவதையும் கழித்திருக்கிறீர்கள், மேலும் நீங்கள் சோர்வுற்று இருப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். நாளையும் மற்றும் அதன்பின்பு வரும் ஒவ்வொரு நாட்களும் உங்களுக்குச் சிறப்பாக அமையும். இவை அனைத்தும் கனவு என்றும், கண் விழிக்கும்போது நீங்கள் சிக்கியிருந்த மோசமான படுகுழியில் இருப்பீர்கள் என்றும் எண்ணுவதை நிறுத்துங்கள். மரித்தவர்களின் மரணத்தில் தேவனுக்கு மகிழ்ச்சியில்லை என்று உங்களுக்குத் தெரியும். அனைவரும் ஜீவனைத் தெரிந்துகொண்டு வாழ்வதற்காக அவர் அழைக்கிறார். எவ்வாறாயினும், இந்த உலகத்தில் அன்பே ஆட்சிசெய்கின்றது. அன்பு செய்யக் கற்றுக்கொள்ளாத எவரும் இந்த நூற்றாண்டைக் கடக்க மாட்டார்கள்" என்று லெவ் கூறினான்.

ஹிட்லர் அங்கிருந்து செல்வதற்கு முடிவு செய்தார். ஒரு வார்த்தையும் கூறாமல், அவர் தனது படுக்கையறைக்கு விரைந்தார். அன்றைய நாளில் லெவ் எடுத்த எந்த முயற்சிக்கும் ஹிட்லர் எந்தவொரு நன்றியையும் தெரிவிக்கவில்லை. ஹிட்லர் அதிகம் பேசாத நபர் என்று லெவ்விற்குத் தெரிந்ததால், அவரின் முரட்டுத்தனத்தை லெவ் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவர் ஒரு

சாதாரணமான மனிதனாக மாறுவதற்கு, இன்னும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று லெவ் நினைத்தான். ஹிட்லர் சர்வாதிகாரியாக இருந்தபோது, எந்தத் தவறும் செய்யாத வீரனாகக் கருதப்பட்டார். அவரோடு எப்போதுமே உடன்படும் ஆண்களால் சூழப்பட்டிருந்தார். தனது ஆத்திரத்தை வெளிப்படுத்துவதற்காக அவர்களிடம் கத்தலாம், அவர்களைத் தவறாக உபயோகப்படுத்தலாம் மற்றும் பணிநீக்கம் செய்யலாம் அல்லது அவர்களைக் கொலைசெய்யவும் ஹிட்லரால் முடியும். கொடூரமாக நடந்துகொள்ளும் ஆற்றல் அவருக்கு இருந்தது, அவரை யாராலும் கண்டிக்க முடியாது. அவர் தனது கோபத்தை வெளிப்படுத்தியும், லெவ்வைப் பயமுறுத்த முடியாததால் சற்று பதற்றம் அடைந்திருந்தார்.

லெவ்வும், ஹிட்லரை அன்று முழுவதும் சமாளித்ததில் களைப்படைந்திருந்ததால் ஓய்வெடுப்பதற்காக தனது அறைக்குச் சென்றான். அன்றைய தினத்தில் நடந்த அனைத்து நிகழ்வுகளையும் பதிவுசெய்வதற்காக லெவ் ஒரு டைரியை எடுத்து வந்திருந்தான். லெவ்விற்கு இப்போது மிகச்சிறந்த நினைவாற்றல் உள்ளது. அவனால் சிறு காரியங்களைக்கூட நினைவில் வைத்திருக்க முடியும் என்றாலும், நடந்த ஒவ்வொரு நிகழ்வுகளின் விவரத்தையும் பிற்பாடு அறிந்து கொள்ளுவதற்கு டைரியில் பதிவுசெய்வது உதவும் என்று அவன் நினைத்தான். ஆகவே அன்றிரவு லெவ் வேதாகமத்தை வாசிப்பதற்கு முன்பாக, ஹிட்லருடனான தனது முதல் நாள் அனுபவங்களைப் பற்றிய ஒரு சிறிய பதிவை எழுதினான்.

மறுநாள் லெவ், தான் வழக்கமாக விழிக்கும் வேளையில் கண்விழித்தான். ஹிட்லர் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தார். லெவ் அனுதினமும் செய்வதைப் போலவே, அன்றைய நாளின் காலைவேளையிலும் அந்நாளுக்குத் தேவையானவைகளைத் தயார்செய்தான். பின்னர் அன்றைய தினத்திற்கான பழங்களைச் சேகரித்தான் மற்றும் காலை உணவிற்காகப் புதிதாக பழச்சாறையும் தயாரித்தான். பின்பு தான் வழிபாட்டுச் சேவைக்குச் செல்வதாகவும், ஒரு மணி நேரத்தில் திரும்புவதாகவும் ஒரு குறிப்பை எழுதி வைத்தான். ஹிட்லர் விரும்பினால் அவருடைய காலை உணவை அவர் உண்ணலாம் என்று நினைத்தான்.

## ஹிட்லர் தனிமையில் விடப்பட்டார்

லெவ் காரிலேயே தேவாலயத்திற்குச் சென்றான். அவன் காரை வீட்டில் விட்டுச் சென்றால், ஒருவேளை ஹிட்லர் அதனை எங்கேனும் எடுத்துச் சென்றுவிடலாம் என்று எண்ணினான். அதனாலேயே காரை வீட்டில் விட்டுச் செல்வதற்கு லெவ் விரும்பவில்லை. மீண்டும் சாதாரணமான ஜனங்களைச் சந்தித்ததில் லெவ்விற்கு மகிழ்ச்சியாக இருந்தது. மிகச் சிலரால் மட்டுமே முழுமையான அதிகாரத்தைக் கையாள முடியும். ஏனென்றால் அவர்கள் சொல்வதுபோல "அதிகாரம் சீரழிவைக் கொடுக்கிறது, முழுமையான அதிகாரம் முழுமையான சீரழிவைக் கொடுக்கிறது." ஹிட்லரின் முந்தைய வாழ்க்கையில் மிகப்பெரிய சாதனையாக அவருக்குத் தோன்றியது எது - மிக உயரிய அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதாகும், ஆனால் உண்மையில் நித்திய ஜீவனை அடைவதற்கான சாத்தியக்கூறுகளுக்கு, மிகவும் தீங்குவிளைவிக்கும் அனுபவமாகவே இது இருந்தது.

வழிபாட்டுச் சேவை லெவ்விற்குப் புத்துணர்வை அளித்தது. கிட்டத்தட்ட அவனது இருதயத்திற்கு மருந்தாக இருந்தது. காலைவேளைக்கான துதிப்பாடல்களை ஆர்வத்தோடு பாடினான். தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதில் மகிழ்ச்சி அடைந்தான். அங்கிருந்த அனைவரும் நட்புடன் பழகினார்கள். அன்புடனும், உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் திறன் கொண்டவர்களுடன் பழகுவது லெவ்விற்கு மகிழ்ச்சியாக இருந்தது. பரிபூரண நிலையை அடைவதற்கு வெகு தொலைவில் இருந்தபோதிலும், அவர்கள் அந்த இலக்கை அடைவதற்கு கடுமையாய் முயன்றுகொண்டிருந்தனர். மனித பலவீனங்களை மேற்கொண்டு தேவனுடைய அன்பினை முழுமையாகப் பெற்றுக்கொள்வதற்கு ஒருவர் செய்யும் கடினமான முயற்சிகளை, மற்றவர்கள் காணும்போது அது அவர்களுக்கும் மிகவும் ஊக்கம் அளிப்பதாக இருக்கும். லெவ் இங்கு வந்திருப்பதற்கான நோக்கத்தை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. அவன் ஓர் ஆலையை இயக்குவதற்கான செயல்முறையில் ஈடுபட்டிருக்கிறான் என எண்ணினர். லெவ்வும் அதையே விரும்பினான். மிகவும் சவாலான ஒரு நபரைத் தான் கையாளுவதை லெவ் அறிந்திருந்ததால், மேற்கொண்டு என்ன செய்யவேண்டும் என்பதை அறிவதற்கான ஞானத்திற்காக லெவ் ஜெபித்தான்.

லெவ் வீட்டிற்குத் திரும்பியபோது, ஹிட்லர் விழித்திருப்பதைக் கண்டான். அவர் தனது காலை உணவை ஆர்வத்தோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தார். லெவ் ஹிட்லரிடம் "காலை வணக்கம்" என்று அன்புடன் கூறினான். லெவ் புரிந்துகொள்ள முடியாத வகையில் ஹிட்லர் முணுமுணுப்பை மட்டுமே பதிலாக வெளிப்படுத்தினார். அதனால் அவர் சரியான மனநிலையில் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. லெவ் அவரின் போக்கிலேயே அவரை விட்டுவிட்டான். அவருக்குத் தோன்றும்போதோ அல்லது எப்போதெல்லாம் அவருக்கு தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கான தேவை இருக்குமோ அப்போது மட்டுமே அவர் ஒரு சாதாரண மனிதனாக நடந்துகொள்வது போன்று லெவ்விற்குத் தோன்றியது. ஹிட்லர் தன்னை வீட்டை விட்டு வெளியேறும்படிக் கூறமாட்டார் என்று லெவ் நினைத்தான். ஏனெனில் அவர் தன்னைச் சார்ந்து இருப்பதையும் மற்றும் தான் அடால்ஃப் ஹிட்லர் என்று மற்றவர்கள் அடையாளம் கண்டு பிடித்துவிடுவார்களோ என்ற பயமும் அவருக்கு இருந்தது. தன் கழுத்தை நெரித்துக் கொல்லும் சிலாக்கியத்திற்காக மில்லியன் கணக்கான ஜனங்கள், மரிக்கவும் தயாராக இருக்கிறார்கள் என்று லெவ் கூறியதை அவர் தீவிரமானதொன்றாக எடுத்துக்கொண்டார். அத்தகைய சூழ்நிலைகளில் இருந்து அவர் கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய வல்லமைகளால் பாதுகாக்கப்படுவார் என்பது அவருக்கு இன்னும் தெரியாது. மேலும் லெவ் அதை அவரிடம் இப்போது தெரிவிக்க வேண்டாம் என்று தீர்மானித்திருந்தான்.

## ஹிட்லர் ஈவாவைக் குறித்து விசாரித்தல்

ஹிட்லரின் குரல் இனிமையாக மாறியபோது, அவர் மேலும் சில தகவல்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறார் என்று லெவ் அறிந்து கொண்டான். இறுதியாக அவர் "லெவ், ஈவா எப்போது ஜீவனுக்குள் திரும்புவாள்?" என்று கேட்டார்.

"நீங்கள் ஏன் அதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்? ஈவா இப்போதும் உங்களுடன் பழக விரும்புவார் என்று எது உங்களை  நினைக்க வைத்தது?" என்று லெவ் கேட்டான்.

இந்தப் பதில் அவரை வருத்தம் அடையச்செய்தது. அவரது முகம் இருண்டது.

"ஈவா என்னை நேசித்தாள்! அவள் என்னை நேசித்தாள்! அவள் எப்போதும் என்னை நேசிப்பாள;! இந்த உலகத்தில் என்னை அன்பு செய்யும் ஒரு நபராவது எனக்குத் தேவை. ஜெர்மனிக்காக நான் என்னையே கொடுத்தேன். அதற்குப் பதில் நன்றியாக எனக்கு என்ன செய்தார்கள்? நான் ஜீவனுக்குத் திரும்புவதற்கான ஏற்பாடுகளை ஒரு யூதன் செய்கிறார். என்னை வணங்கினவர்களும், என் நாமத்தை மந்திரமாக மகிழ்ச்சியுடன் உச்சரித்தவர்களும் எங்கே? நன்றியில்லாத பன்றிகள், அவர்கள் பன்றிகள்தான்" என்றார்.

முன்பு ஒருதடவை லெவ், ஈவாவின் பெயரை ஹிட்லரின் முன்பாகக் குறிப்பிட்டிருந்தான். அது அவரின் ஆர்வத்தைத் தூண்டுகின்றதா என்று துல்லியமாகக் கவனித்துக் கொண்டிருந்தான். அந்த உத்தி வேலைசெய்தது. இருதயம் எப்போதும் அன்பினால் தொடப்பட்டவர்களிடத்திற்குத் திரும்பும்.

"கெலியைப் பற்றி உங்களுக்குத் தெரிந்துகொள்ள வேண்டாமா? உங்களுக்கு அவரிடம் ஆர்வம் இல்லையா?" என்று லெவ் கேட்டான்.

கெலியை ஹிட்லர் விரும்பி இருந்தார் என்பது லெவ்விற்குத் தெரியும். ஹிட்லர் எவ்வாறு அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பார் என்பதை அறிய லெவ் விரும்பினான்.

அதற்கு அவர் "நீங்கள் இதற்கு முன்பு ஈவாவைப் பற்றி மட்டுமே என்னிடம் குறிப்பிட்டீர்கள். ஏன் கெலியைப் பற்றிக் கூறவில்லை? சொல்லுங்கள் கெலி ஜீவனுடன் இருக்கிறாளா? உங்களுக்கு எல்லாம் தெரிவதுபோல் தோன்றுகிறது. கெலி ஜீவனுடன் இருக்கிறாளா என்பதை நான் அறிய விரும்புகிறேன்" என்றார்.

லெவ் வேண்டுமென்றே பதிலளிப்பதற்கு நீண்ட நேரம் எடுத்துக்கொண்டான். இது ஹிட்லரை மிகவும் எரிச்சலூட்டியது. வற்புறுத்தியாவது பதில்களை உடனடியாகப் பெற்றுக்கொள்வது அவரின்

பழக்கமாக எப்போதும் இருந்தது. அவர் சிறந்த அடால்ஃப் ஹிட்லர் அல்லவா? ஒரு நிமிடம்கூட அதிகாரத்தில் இருப்பதாக ஹிட்லர் எண்ணிவிடக்கூடாது என்பதில் லெவ் கவனமாக இருந்தான்.

“இறுதியாக லெவ், இந்தத் தகவல்களை எல்லாம் உங்களிடம் கூறவேண்டும் என்று எனக்கு எந்தக் கட்டாயமும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும் அடால்ஃப். ஈவா மற்றும் கெலியிடம் நீங்கள் எந்த நோக்கத்தில் பழகினீர்கள் என்பது குறித்து எனக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் இருவரின் மரணத்திற்கும் நீங்கள்தான் காரணம் என்று தோன்றுகிறது. முன்பு நீங்கள் காயப்படுத்தியவர்களைப் பற்றின தகவல்களை, நான் ஏன் உங்களுக்குக் கூறவேண்டும்?” என்று லெவ் கேட்டான்.

ஹிட்லரின் முகம் சிவந்தது. அவர் கோபத்தில் வெடிக்கப்போவது போல் தோன்றியது. இறுதியில் அவர் சில அவதூறான வார்த்தைகளைக் கோபத்துடன் உபயோகித்துவிட்டு கதவை நோக்கி நடந்து வெளியேறினார்.

அவர் வெளியேறும்போது “ஒருவரும் உங்களை அடையாளம் கண்டுகொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் யாராவது உங்களை அடையாளம் கண்டுகொண்டால் கலவரம் வெடிக்கும்” என்று லெவ் கூறினான்.

லெவ் ஜன்னல் வழியாக அவர் எங்கே செல்கிறார் என்பதைப் பார்த்தான். அவர் தனது வீட்டினைச் சுற்றி வந்தார். நிச்சயமாக அவர் பயத்தினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தார். உண்மையிலேயே, அவர் தன்னை யாராவது அடையாளம் கண்டுகொள்ளக் கூடுமோ என்று பயந்தார். அன்றைய நாளின் காலைவேளையில் ஹிட்லர் தனது மீசை வளராமல் இருப்பதற்காக அதனை ஷேவ் செய்வதை லெவ் பார்த்தான். லெவ் செய்வதற்கு எந்த வேலையும் இல்லாததால், ஹிட்லர் திரும்புவதற்காகக் காத்திருந்தான். நேற்றும் ஹிட்லர் இதைப் போன்று செய்ய முற்பட்டிருந்தார். இன்றும் லெவ்வைக் கொடுஞ்சொற்களால் அதட்டி, தனக்குக் கீழ்ப்படிய வைப்பதற்கு முயன்றார். இந்த முறையும் தோற்றுவிட்டார்.

சுமார் இருபது நிமிடங்களுக்குப் பின்பு ஹிட்லர் திரும்பினார். அவர் தனது காலைச் சிற்றுண்டி தட்டுகளை மேசையிலேயே விட்டுவிட்டிருந்தார். அவர் திரும்பியதும் லெவ் அவரை அவற்றைச் சுத்தம் செய்யுமாறு கூறினான். தன்னால் இன்றும் அவருக்கான வேலையைத் தொடர முடியாது என்றும் கூறினான். மதிப்பு குறைவான வேலையைச் செய்யச் சொல்லி, லெவ் தன்னை இழிவுபடுத்துகிறார் என்று ஹிட்லர் மறுபடியும் கடுங்கோபம் அடைந்தார். இன்று அவரைச் சமாளிப்பது சற்று கடினமாக இருக்கும் என்று லெவ் எண்ணினான். அதனால் லெவ் வேதாகமத்தைப் படிப்பதற்காக தனது அறைக்குச் சென்றான். ஹிட்லரைச் சமையலறையிலேயே விட்டுவிட்டான்.

லெவ் தனது அறையின் கதவைத் திறந்தே வைத்திருந்தார். விரைவிலேயே ஹிட்லர் சில சாமான்களை உருட்டும் சத்தம் கேட்டது. ஹிட்லர் ஒரு முதலாளியாக இருப்பதற்கான தனது முயற்சிகள் நேற்று வேலைசெய்யாதது போலவே, இன்றும் அவரது முயற்சிகள் வெற்றி பெறப் போவதில்லை என்பதையும் உணர்ந்துகொண்டார். அவர் கற்றுக்கொள்கிறார், ஆனால் மெதுவாகவே கற்றுக்கொள்கிறார். உண்மையில் சுத்தமாக வைத்திருப்பது அவருக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் தான் ஒரு வேலைக்காரன்போல் நடத்தப்படுவதாக அவர் எண்ணினார். அவர் ஒரு மோசமான மனநிலைக்குள் வருவதற்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

## மரங்களைச் சுத்திகரிக்கும் ஒரு புதிய அனுபவம்

சில மணி நேரங்களுக்குப் பிறகு, வீட்டின் கூடத்தில் தன்னுடைய அடித்தொண்டையில் ஏதோ முணுமுணுத்தவாறு ஹிட்லர் குறுக்கும் நெடுக்குமாக நடப்பதை லெவ் பார்த்தான். லெவ் சந்தோஷத்துடன் அறைக்குள் நுழைந்தவாறு பழத்தோட்டத்தில் உள்ள மரங்களைக் கத்தரிக்கும் வேலையைக் கற்றுக்கொள்ள ஹிட்லர் விருப்பப்படுகிறாரா என்று கேட்டான். அவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார், ஆனாலும் இந்த முறை அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு, எவ்வாறு கத்தரிப்பு வேலை செய்யப்படுகிறது என்பதைப் பார்க்க ஒப்புக்கொண்டார். பழத்தோட்டம் மிகவும் அழகான மற்றும் அமைதியான இடமாக இருந்தது. பூக்களின் நறுமணம் காற்றில் நிரம்பியிருந்தது. லெவ் அவருக்கு, உறிஞ்சுகளாக மாறக்கூடிய கிளைகள் எவைகள் என்றும், அவைகளை எவ்வாறு

வெட்ட வேண்டும் என்றும் கத்திரிக்கோலால் வெட்டிக் காட்டினான். ஹிட்லர் அதனை நன்கு புரிந்துகொண்டு, விரைவாகக் கற்றுக்கொண்டார்.

லெவ் அவரிடம் கத்தரிக்கோலைக் கொடுத்து அடுத்த மரத்தை கத்தரிக்கச் சொன்னார். உண்மையில் அந்த வேலையை ஹிட்லர் விரும்பினார். இது போன்ற உடல் உழைப்பைச் செய்வது அவமானகரமானது என்று அவர் நினைத்தாலும், யாரேனும் ஒருவர் காண இப்படியான வேலைகளைச் செய்வதற்கு அவர் விரும்பவில்லை. லெவ், அவரிடம் கத்தரித்தவைகளிலிருந்து இலைகளைச் சேகரிக்குமாறு கூறினார். அதை உலர்த்தி அவர்கள் தேநீர் தயாரிப்பார்கள் என்னும் விவரத்தையும் அவரிடம் கூறினார். லெவ் அந்த வேலையைச் செய்யச் சொன்னது ஹிட்லருக்குக் கோபமூட்டியது. ஆனால் லெவ் கூறியபடியே செய்வதற்கு முடிவுசெய்தார். ஏனென்றால் அவர் கெலி மற்றும் ஈவாவைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பினார்.

மதிய உணவிற்கு இருவரும் அமர்ந்தனர். லெவ் தனது தலையைத் தாழ்த்தி ஜெபம் ஏறெடுத்தான். ஹிட்லர், லெவ் ஜெபித்து முடிப்பது வரையிலும் காத்திருக்காமல் சாப்பிடத் தொடங்கினார். ஹிட்லர் பழத்தை மெல்லும் சத்தம் லெவ்விற்குக் கேட்டது. அந்த உணவு அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் முற்றிலும் சுவையான உணவாக இருந்தது மட்டுமல்லாமல், திருப்திகரமாகவும் இருந்தது. நீங்கள் அதிகம் சாப்பிட வேண்டிய தேவையில்லை, ஒன்று அல்லது இரண்டு துண்டு பழங்களே ஒரு முழுமையான உணவின் போஷாக்கைத் தரும் என்று லெவ் கூறினான். அவர்கள் சாப்பிடுவதற்கு இன்னும் உயிர்த்தெழுதல் கேக் இருந்தது. ஹிட்லர் அதனை மிகவும் விரும்பிச் சாப்பிட்டார். யார் தனக்காக அன்புடன் இந்தக் கேக்கைச் செய்தது என்பதைக் குறித்து ஹிட்லர் எதுவும் கேட்கவில்லை. அவர்கள் சாப்பிடும்போது கெலி மற்றும் ஈவாவைப் பற்றித் தெரிந்துகொள்வதில் ஹிட்லருக்கு அதிக ஆர்வம் இருந்தது தெரிந்தது. லெவ் ஒரு வார்த்தைகூட அவர்களைக் குறித்துப் பேசவில்லை. இறுதியில் ஹிட்லர் மிகவும் இனிமையான குரலில், "லெவ், கெலி மற்றும் ஈவாவைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எனது ஆழ்ந்த விருப்பத்தை உங்களால் நிறைவேற்ற முடியுமா?" என்று கேட்டார்.

"சரி சொல்கிறேன்" என்று லெவ் பதிலளித்தான். "இப்போது நீங்கள் உயரிய அதிகாரத்தில் இல்லை என்பதைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும்" என்பதை லெவ் அவருக்கு நினைப்பூட்டினான். "உங்களிடத்தில் எந்தவொரு செல்வாக்கும், அதிகாரமும் இல்லை. உங்களிடம் ஒன்றுமே இல்லை. நீங்கள் ஓர் அதிகாரி அல்ல. அதைவிட மிகவும் மோசமாக, நீங்கள் மிகவும் கொடிதான தீயக் காரியங்களைச் செய்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எப்போதும் ஒரு சாதாரண மனிதனாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு நீங்கள் இருப்பீர்கள் என்றால், நீங்கள் அறிய விரும்பும் தகவல்களை உங்களுக்கு வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைவேன்" என்றான்.

லெவ் தன்னைக் குறித்துக் கூறிய காரியங்களை ஹிட்லர் விரும்பவில்லை. ஆனாலும் பற்களைக் கடித்துக்கொண்டு, அவர் அதை சகித்துக்கொண்டார். ஏனெனில் அவர் விரும்பும் தகவலைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அவர் சாப்பிட்டு முடித்த பிறகு மேசை மற்றும் பாத்திரங்களைச் சுத்தம்செய்வதை லெவ் கவனித்தான். லெவ்வினுடைய தட்டையும்கூட எடுத்து சுத்தம்செய்து வைத்தார். இறுதியில் லெவ், "அடால்ஃப், கெலி மற்றும் ஈவா இருவருமே ஜீவனோடு உள்ளனர். நான் அவர்கள் இருவரையும் ஒன்றாக இங்கு அழைக்க வேண்டுமா?" என்று கேட்டான். ஈவா மற்றும் கெலியை ஒன்றாகச் சந்திப்பதற்கு ஹிட்லர் விரும்பமாட்டார் என்று வெவ் அறிந்திருந்தான். இருப்பினும், சில வேடிக்கையான கேள்விகளைக் கேட்டு ஹிட்லரிடம் லெவ் விளையாட விரும்பினான்.

"இல்லை, இல்லை... அவர்கள் இருவரையும் ஒன்றாகச் சந்திப்பதை நான் விரும்பவில்லை" என்றார்.

"நீங்கள் யாரை முதலில் சந்திக்க விரும்புகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் கெலியைச் சந்திக்க விரும்புகிறேன், கண்டிப்பாகக் கெலியைச் சந்திக்கவேண்டும்" என்று கூறினார்.

"சரி, நான் இப்போது அவரை அழைத்து, இன்றோ அல்லது நாளையோ, அவர் உங்களைச் சந்திக்க விரும்புகிறாரா என்று கேட்கிறேன். அநேகமாக அவர் தனது தன்னார்வ வேலையிலிருந்து திரும்பியிருக்கலாம். நான் கெலியை அழைக்கவா அல்லது நீங்கள் கெலியை அழைக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டான்.

"தயவுசெய்து நீங்களே அழையுங்கள். ஆனால் என்னைப் பற்றி அவளிடம் இப்போது எதுவும் கூறவேண்டாம். நான் அவளை ஆச்சரியப்படுத்த விரும்புகிறேன்" என்று உற்சாகத்துடன் கூறினார்.

"நல்லது" என்று கூறியவாறே, லெவ் தொலைபேசியை எடுத்து தனது நினைவிலிருந்த அவளது எண்ணிற்குத் தொடர்பு கொண்டான். "மதிய வணக்கம், நான் கெலி பேசுகிறேன்" என்ற இனிமையான குரல் தொலைபேசியில் கேட்டது.

"உங்கள் குரலைக் கேட்பதில் மகிழ்கிறேன். நான் யார் என்று உங்களுக்குத் தெரியாது. என்னுடைய பெயர் லெவ். உங்களிடம் கூறுவதற்கு ஒரு முக்கியமான விஷயம் என்னிடம் உள்ளது. ஆனால் அதை நான் தனிமையில் உங்களைச் சந்தித்துதான் கூறவேண்டும். நீங்கள் அதிக ஆர்வம் கொண்டிருக்கும் விஷயம் அது. நீங்கள் இன்றோ அல்லது நாளையோ ஓய்வாக இருந்தால் உங்களைச் சந்திக்க நான் வருகிறேன். என்னிடம் கார் உள்ளதால் உங்கள் வீட்டிற்கு அரை மணி நேரத்திற்குள்ளாக என்னால் வர முடியும்" என்றான்.

"சரி, நிச்சயமாக, இன்று மதியம் நான் ஓய்வாக இருப்பேன். அதனால் நீங்கள் ஏன் இன்று மதியம் வரக்கூடாது? நீங்கள் நல்ல செய்தியைக் கொண்டு வருகிறீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் எங்கு வசிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியும், உங்களின் விலாசம் என்னிடம் இருக்கிறது மற்றும் அந்த வட்டாரப் பகுதி எனக்கு நன்கு தெரியும். இன்னும் சிறிது நேரத்தில் நான் அங்கு இருப்பேன். உங்களைச் சந்திப்பதற்கு ஆவலுடன் இருக்கிறேன். குறுகிய கால அறிவிப்பில் உங்களைச் சந்திப்பதற்கு, நீங்கள் எனக்காக நேரம் ஒதுக்கியதற்காக நன்றி" என்று கூறி லெவ் தொலைபேசியை வைத்தான்.

ஹிட்லர் தன்னால் முடிந்தவரை அவர்கள் பேசியதைப் புரிந்துகொண்டார். அவரது வாழ்வின் அன்பாக இருந்த கெலியைச் சந்திக்கப்போகும் இந்த வாய்ப்பிற்காக ஹிட்லர் உற்சாகமாகக் காணப்பட்டார். அவர்கள் காரில் ஏறி கெலியின் வீட்டை நோக்கிச் சென்றனர். அவர்கள் சென்ற வழியில் இருந்த இயற்கை காட்சிகள் மிகவும் அழகாக இருந்தன. அது மிகவும் அழகிய நாடாக இருந்தது. அடால்ஃப் யோசனையில் இருந்தார். அவர் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார் என்பதை லெவ்வால் உணரமுடிந்தது. ஹிட்லர், கெலியின் சுதந்திரத்தைப் பறித்ததாலேயே, கெலி தற்கொலை செய்துகொண்டார் என்பது லெவ்விற்குத் தெரியும். அது அவரை மிகவும் தொந்தரவு செய்தது. வேண்டுமென்றே அவர் கொன்றிருந்த பல மில்லியன் கணக்கான ஜனங்களின் மரணம், அவரது சிந்தையில் எந்த விதத்திலும் சிறு பாதிப்பைக்கூட ஏற்படுத்தாதது விசித்திரமாக இருந்தது. அவர்கள் அனைவரும் வெறும் புள்ளி விபரங்கள் மட்டுமே. பெயரும், முகமும் அறியாதவர்கள். மிகப் பிரம்மாண்டமான மூன்றாம் பேரரசின் திட்டங்களுக்கு எதிரான பாதையில் அவர்கள் நின்றதால் அகற்றப்பட வேண்டிய சாதாரண உயிரினங்களாகவே ஹிட்லர் அவர்களைப் பார்த்தார். "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?" என்று எரேமியா 17:9-ல் மிகச்சரியாகக் கூறியுள்ளார்.

* * *

*"ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்." (பிரசங்கி 12:14)*

# அத்தியாயம் - 34

அவர்கள் கெலி இருந்த இடத்திற்கு வந்தார்கள், இருவரும் அங்கிருந்த நடைபாதையின் வழியாகக் கெலியின் வீட்டிற்குச் சென்றனர். வீடு மிகவும் அழகாகவும், அருமையான சூழலின் மத்தியிலும் இருந்தது. லெவ் அழைப்பு மணியை அழுத்தினான், விரைவில் கெலி பிரகாசமான புன்னகையுடன் வந்து கதவைத் திறந்தார். அவர் மற்றவர்களிடம் மிகவும் நன்கு பழகக்கூடிய சுபாவமுடையவளாக இருந்தார். லெவ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான், பிறகு தன்னுடன் இருக்கும் நபரைக் கெலியால் அடையாளம் காண முடிகிறதா என்று கேட்டான். கெலி, ஹிட்லரின் முகத்தை ஒரு கணம் நன்றாகப் பார்த்துவிட்டு, "ஆமாம், நிச்சயமாகத் தெரிகிறது, ஆனால் மீசை இல்லாமல் உங்களை என்னால் அடையாளம் காண முடியவில்லை. எனது உயிரை மாய்த்துக் கொண்டதில், நான் செய்த முட்டாள்தனத்தை நினைவுபடுத்த நீங்கள் வந்திருக்க வேண்டும்" என்றார்.

"இல்லை, அப்படி இல்லை, என் அன்புக்குரியவளே. நடந்த அனைத்துக் காரியங்களுக்குமான பழி என் மீதுதான் உள்ளது. என்னால், என்னையே மன்னிக்க முடியாது. உன் மரணம் என் வாழ்க்கையில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்திச் சென்றது, அது என்னைத் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டிருந்தது" என்று ஹிட்லர் கூறினார்.

"அப்போது நான் மிகவும் இளவயதுள்ளவளாக, முட்டாள்தனமாக இருந்தேன். நான் உங்களுடன் இன்னும் வெளிப்படையாக பேசியிருந்திருக்க வேண்டும், நான் உங்களைக் காதலிக்கவில்லை என்று சொல்லியிருக்க வேண்டும். நான் முட்டாள்தனமாக நிறைய ஆண்களுடன் உல்லாசமாக இருந்தேன். முதன்முதலில், ஒரு வளரும் அரசியல்வாதியின் கவனத்தைப் பெற்றதற்காக நான் மகிழ்ச்சியடைந்தேன். நான் ஜீவனுக்குள் திரும்பி வந்தபோது, நீங்கள் எப்படிப்பட்ட கொடுங்கோலனாக மாறிவிட்டிருந்தீர்கள் என்பதை அறிந்துகொண்டேன். அத்தகைய தீமையான ஒருவனுக்குத் துணைவியாக ஒருபோதும் என்னால் இருந்திருக்க முடியாது" என்று கெலி கூறினார்.

இப்போது பரிதாபமான நிலையில் இருந்த அடால்ஃப்பைக் கெலியின் வார்த்தைகள் சோகத்தில் ஆழ்த்தியது. அவள் மீண்டும் தன்னிடம் வந்துவிடுவாள் என்றும், எதுவும் நடக்காததுபோல மீண்டும் தங்களின் பழைய உறவைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என்றும் அவர் நிச்சயமாக நினைத்தார். அவர் அழுது விடுவார் போல இருந்தது. அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நிதானமாக, "கெலி, நீ இன்னும் என் மீது கோபமாக இருக்கிறாய், ஆனால் நான் உனக்குச் செய்த எல்லாவற்றையும் சரிசெய்வதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கொடு என்று கேட்டார். இப்போதுதான் நான் ஜீவனுக்குத் திரும்பியிருக்கிறேன், எனக்கான வழியினைக் கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். விரைவிலேயே, நான் மீண்டும் எனக்கான முக்கியத்துவத்தைப் பெற்றுக்கொள்வேன். இதற்கிடையில் நான், உன்னுடைய பழைய நண்பனாக மட்டும் இருந்து கொள்கிறேன்" என்று கேட்டார்.

"உல்லாசமாக ஊர்சுற்றிய முந்தைய நாட்களுக்கு இப்போது என்னால் திரும்பமுடியாது. நான் இப்போது மிகவும் முதிர்ச்சியடைந்துள்ளேன், நான் யாருடன் பழகவேண்டும் என்பதை மிகவும் கவனமாகத் தேர்வுசெய்கிறேன். நமது காலத்தில் வாழ்ந்த, ஒரு மோசமான கொலைகாரனுடன் சகவாசம் வைத்துக்கொள்ளவதில், நான் எப்படி மகிழ்ச்சியாக இருக்கமுடியும்? நீங்கள் பைத்தியமாக இருந்திருக்க வேண்டும் அல்லது நீங்கள் உங்களை பிசாசுக்கு ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும், அல்லது இரண்டுமே நடந்திருக்கலாம். புகழ்பெற்ற ஹிட்லரின் நாசிப் பேரரசை உருவாக்குவதற்கான உங்களது தோல்வியுற்ற முயற்சியில், மில்லியன் கணக்கான ஜனங்கள் மரித்தனர் என்பதை அறிந்தவுடன், அந்த ஈடு இணையற்ற தீமையில் யாரேனும் என்னை உங்களுடன் தொடர்புபடுத்துவதற்கு முன்பே நான் மரித்துவிட்டேன் என்பதில் மகிழ்ச்சியடைந்தேன். இல்லை, அடால்ஃப், நீங்கள் என் மீது காட்டும் அன்பை, என்னால் உங்களுக்கு இப்போது திருப்பித் தரமுடியாது, நிச்சயமாக நீங்கள் செய்த குற்றங்களால், உங்கள் மீது சிறிதளவான அனுதாபம்கூட இல்லாமல் போய்விட்டது. நான் மிகவும் இரக்கமற்ற வகையில் வெளிப்படையாக இருப்பதற்காக வருந்துகிறேன். ஆனால் என் இதயத்தில் உங்களுக்கென்று எந்த ஒரு சிறப்பான இடமும் இல்லை.

மேலும் மனுக்குலத்திற்கு எதிரான உங்களது குற்றங்களை, அவர்கள் மறந்துபோகச் செய்வதில் நீங்கள் வெற்றிபெறுவதற்கான தைரியம் உங்களுக்கு இருப்பதாக நான் நம்புகிறேன். அதற்காக நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று கெலி கூறினார்.

அடால்ஃப் திகைத்து எழுந்து நின்றான், "கெலி கூறியது அனைத்தும் பொய்" என்று கூறிவிடமாட்டாளா என்று மனதிற்குள் எண்ணினான்.

இதற்கிடையில் கெலி, லெவ்வின் பக்கம் திரும்பியவாறு, "எங்கள் ஜனங்கள் மிகவும் விரும்பும் லெவ் ஆரோனா நீங்கள்?" என்று கேட்டாள். "இங்குள்ள எங்களது ஜனங்களுக்கு நீங்கள் உண்மையான நண்பராக இருந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எங்களுக்காக அயராது உழைத்து, எங்கள் அனைவருக்கும் ஓர் உன்னதமான முன்மாதிரியாக இருக்கின்றீர்கள். அதற்காக உங்களுக்கு நன்றி. அடால்ஃப் உடன் உங்களுக்கு எப்படித் தொடர்பு ஏற்பட்டது? வெவ்வேறான பின்னணியைக் கொண்ட இரண்டு நபர்கள் - ஒருவரிடத்திலிருந்து ஒளியும், மற்றவரிடத்திலிருந்து இருளும் வருகிறது" என்று கூறினாள்.

## கெலி, ஹிட்லரை விட்டுவிலகுதல்

தனது இதயப்பூர்வமான அன்பினைப் பெற்றிருந்த கெலி, இருளின் இராஜ்யத்தினுடைய கொலைகாரனாகத் தன்னைப் பார்ப்பதை ஹிட்லரால் நம்பமுடியவில்லை. அவர் மனமுடைந்து போனார். வாழ்க்கை எப்படி ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு மாறமுடியும்? ஜெர்மன் குடிகளுடைய அன்பினைப் பெற்றவராக முன்பு இருந்தார், ஆனால் இப்போதோ ஹிட்லர் உலகின் மிகப்பெரிய கொலைக்காரர்களில் ஒருவர். ஹிட்லருக்கு ஆதரவாக இருந்தவர்கள் மகிழ்ச்சியுடன் மரித்தனர். இப்போது யாரும் அவரைப் பார்க்கக்கூட விரும்பவில்லை, இதைவிட இன்னும் மோசமாக அவர் கல்லறையிலேயே இருந்திருக்கலாம் என்று பலர் விரும்பினர்.

கெலி தன்னை ஏற்க மறுத்ததால் உண்டான பெரும் அதிர்ச்சியினால் "நீ எப்படி என்னிடம் இவ்வளவு கொடூரமாக நடந்துகொள்கிறாய், நான் எப்போதும் உன்னை விரும்பினேன் அல்லவா!" என்று ஹிட்லர் கேட்டார்.

ஹிட்லர் பேசியது கெலியின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. "அடால்ஃப், உங்களைக் காயப்படுத்துவது எனக்கும் வலிக்கின்றது. மேலும் நீங்கள் என்னிடம் காட்டும் இந்த அன்பை, என்னால் உங்களுக்குத் திருப்பித்தர முடியாது என்பதற்காக வருந்துகின்றேன். நான் எனக்கும், உங்களுக்கும் கூட உண்மையாக இருக்க வேண்டும். நீங்கள் செய்த அனைத்துத் தீமைகளையும் நான் வெறுக்கின்றேன். தனிப்பட்ட முறையில் நான் உங்களை வெறுக்கவில்லை, ஆனால் அதிகாரத்தின் ஊழல் செல்வாக்கிற்கு நீங்கள் ஒரு வகையில் பலியாகிவிட்டீர்கள் என்பதாக நான் உணர்கின்றேன். அதிகாரத்தை சரியான முறையில் கையாளுவதற்கு அற்புதமான வளர்ச்சியின் மூலமாக நல்லதொரு மதிப்பினைக் பெற்றுக்கொண்ட மனிதன் தேவை. நீங்கள் அதிகாரத்தை சுயநலமாகப் பயன்படுத்தினதாக நான் காண்கின்றேன். உங்களது எதிரிகளைப் போலவே, இப்போது உங்கள் நண்பர்களும் உங்களை வெறுக்கிறார்கள். உங்களது தீயச் செயல்களுக்கு இரகசியமாக ஆதரவளிப்பவர்கள் எங்காவது இருக்கலாம். ஆனால் அவர்கள் இந்த நீதியுள்ள உலகிற்குச் சற்றும் பொருந்தாத நோயுற்றவர்கள் ஆவார்கள்" என்று கெலி கூறினார்.

கெலியின் வார்த்தைகள் மிகவும் நேர்மையானதாக இருந்தது, ஹிட்லர் மீது அனுதாபம் கொண்டு அவரை அரவணைப்பதற்குக் கெலி விரும்பவில்லை. எவ்வளவு விரைவாக அவரது தீயச் செயல்களுக்கானப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொள்கிறாரோ, அவ்வளவு விரைவாக குணமடைதல் அவருக்குள் ஆரம்பம் ஆகும். அப்பாவி மக்களைத் திட்டமிட்டுக் கொலைசெய்யும் முறையை மாற்றிக் கொண்டபோதிலும், தனது இருதயத்தை அவர் கடினப்படுத்திக் கொண்டேதான் இருந்தார். மனந்திரும்புதலுக்கான முதல் தேவை பாவத்தை அறிக்கையிடுவதே ஆகும். பாவம், தான் செய்த தவறை ஒப்புக்கொள்ளாத வரையிலும், அது சரி என்று நிரூபிப்பதற்கான முயற்சிகளை எடுத்து, தவறை நியாயப்படுத்தி, அந்தப் பாவத்தையே நிராகரித்து விடும். இதுவரையிலும் தான் செய்த எந்த விதமான குற்றத்தையும் ஒப்புக்கொள்ளுவதற்கு அவர் விருப்பம் காட்டவில்லை என்று தோன்றியது.

## தான் நிராகரிக்கப்பட்டதற்கு ஹிட்லரின் எதிர்வினை

ஹிட்லரின் முகம் திடீரென்று கோபத்தால் நிறைந்தது. அவர் உடனே திரும்பி காருக்குச் சென்று கதவை அடித்துச் சாற்றினார். கெலியின் நீண்ட நேர பேச்சும் மற்றும் தன்னை ஏதோ ஒரு

அரக்கனைப் போல எண்ணி கேவலமாகப் பேசியதும் ஹிட்லருக்குப் பிடிக்கவில்லை. கெலி தன்னைத் தழுவி, பாசத்தால் அணைக்க வேண்டும் என்ற தனது கனவு தூள் தூளானது. தான் படுகொலை செய்து கொன்று குவித்தவர்களுக்காக ஹிட்லர் இன்னும் ஒரு துளிகூட வருத்தம் தெரிவிக்கவில்லை. கடினமான மனசாட்சி உள்ள ஒரு நபர் குணமடைவது மிகவும் கடினம் என்பதற்கு ஹிட்லர் ஒரு சாட்சியாக இருந்தார்.

லெவ் திரும்பிச் செல்வதற்கு முன், கெலி அவரிடம் "ஹிட்லர் என்னை ஆச்சரியப்படுத்த விரும்பினார் என்று நினைக்கிறேன், உண்மையில் அவரை மீண்டும் பார்த்ததில் நானும் ஆச்சரியப்பட்டேன். மிகவும் கொடூரமாக நடந்துகொண்டதற்காக என்னை மன்னியுங்கள், ஆனால் "நான் ஜீவனுக்குத் திரும்பியதிலிருந்து ஹிட்லர் எப்படிப்பட்ட மனிதராக மாறியிருந்தார் என்பதை நான் அறிந்துகொண்டேன். அவரது தீமையான உலகத்திற்குள் என்னையும் இழுத்துச்செல்ல முடியாதவாறு, அதற்கு முன்பாகவே எனது வாழ்க்கையை முடித்துக் கொண்டதில் நான் ஆசீர்வதிக்கப்பட்டவளாக உணர்கிறேன். ஏதேனும் ஒரு உறவின் அடிப்படையில் நான் அவருடன் வாழ்ந்திருந்தால், ஜனங்கள் மீது அவருக்கிருந்த முட்டாள்தனமான வெறுப்புணர்வினால் நிச்சயமாக என் இருதயத்தையும் கறைப்படுத்தியிருப்பார். இப்போது வரலாற்றின் ஒருபகுதியாக இருக்கும் வார்த்தைகளால் விவரிக்கமுடியாத அவரது பைத்தியக்காரத்தனத்தை வெளியில் சொல்லமுடியாதபடி, செல்வமும், அதிகாரமும் என் கண்களை மூடிக்கொள்ளச் செய்திருக்குமோ என்று நான் பயப்படுகிறேன். இதுபோன்ற விரும்பத்தகாத சகவாசத்தில் இருந்து நான் விடுபட்டது எனக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. சிறிதளவாவது தன்னை கறைப்படுத்திக் கொள்ளாமல், யாரொருவரும் தீமையின் பிரதிநிதிகளுடன் தோழமை வைத்துக்கொள்வது என்பது கூடாத காரியம். நீங்கள் எப்படி அவருக்கு வழிகாட்டியாக இருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் எல்லா வகையிலும் அப்படியே உங்களுக்கு நேர் எதிரானவராகத் தெரிகிறார்" என்று கெலி கூறினார்.

லெவ் புன்னகைத்தவாறு, "கெலி நீங்கள், என்னிடம் மிகவும் அன்பாக இருக்கின்றீர்கள். உங்களின் தைரியத்தை நான் பாராட்டுகிறேன். உங்களிடம் உள்ள இக்குணம், ஜீவனுக்கான பாதையில் சில நன்மையான பலன்களைத் தரக்கூடும். ஹிட்லர் செய்ததை நீங்கள் கடுமையாகக் கண்டித்ததால் அவர் அதிர்ச்சி அடைந்திருக்கிறார், அவருடன் வீட்டிற்குத் திரும்பிச்செல்வதற்கு சற்று கடினமாக இருக்கும் என்று நினைக்கிறேன். அவர் மிகுந்த கோபத்துடன் காரில் அமர்ந்திருக்கிறார், அவர் இங்கு நடந்தவைகளைப் பற்றி ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறார் என்று இங்கிருந்தே என்னால் கூறமுடியும். ஹிட்லர், சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார், அதனால் அவர் சாத்தானுக்கு மிக நன்றாகவே சேவைசெய்தார் என்பதைத் தயவுசெய்து நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். இப்போது சாத்தான் பாதாளத்தில் தள்ளி அடைக்கப்பட்டு உள்ளான், ஆனால் ஹிட்லரின் இருதயத்தில் தீமையின் செல்வாக்குகளின் தாக்கம் இன்னும் உள்ளது. கிறிஸ்து மட்டுமே அவரின் அந்த நிலையைக் குணப்படுத்த முடியும், ஆனால் ஹிட்லர் தனது பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட விரும்புகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. உங்களைத் தெரிந்துகொண்ட சிலாக்கியத்திற்காக நன்றி, ஷாலோம்" என்று கூறி லெவ் விடைபெற்றான்.

லெவ் காருக்குத் திரும்பியபின், அவர் கெலியை நோக்கித் தனது கையை அசைத்து தான் விடை பெறுவதைத் தெரிவித்தான். கெலியும் அங்கே தைரியமாக நின்றுகொண்டு, தனது கையை அசைத்து விடைகொடுத்தார். அவரது வாழ்க்கையின் மகிழ்ச்சியற்ற அத்தியாயத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அவர் விரும்புவதை லெவ்வால் உணரமுடிந்தது. அடால்ஃப் சரியான மனநிலையில் இல்லை என்று லெவ் அறிந்திருந்தான். அவர்கள் கெலியைச் சந்திக்கச் சென்றபோது இருந்த அவரது இனிமையான நடத்தை, இப்போது திடீரென்று கடினமானதாக மாறியிருந்தது. விஷயத்தை மோசமாக்கியது என்னவென்றால், ஹிட்லரின் தீமையானச் செயல்களை மனதில் வைத்துக் கொண்டே, கெலி ஹிட்லரைப் பற்றி நல்லவிதமாகப் பேசியது தான். வீட்டிற்குச் செல்லும் வழியெங்கும் ஹிட்லர் தன்னை மறந்து அமைதியாக அமர்ந்திருந்தார். தான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று லெவ்வுக்கும் தெரியவில்லை, ஆனால் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கான சிறிய அளவிலான ஆதாரம்கூட அவரிடம் காணப்படவில்லை என்று லெவ் எண்ணினான்.

அவர்கள் வீட்டிற்கு வந்ததும், ஹிட்லர் காரில் இருந்து வேகமாக வெளியேறி, கதவை அறைந்து சாத்தினார். மதியத்திற்குப் பின்பும் அவர் அறையை விட்டு வெளியே வரவில்லை, அதிகநேரம் அறையிலேயே ஆழ்ந்து யோசனை செய்தபடி அமர்ந்திருந்தார். ஹிட்லர் சிந்திப்பதற்காக நேரம் கொடுப்பதற்கு லெவ் முடிவுசெய்தான். ஒருவேளை கெலி கூறிய ஏதோ ஒரு

விசயத்தைக் குறித்து அவர் ஆழ்ந்து சிந்திக்கலாம். ஹிட்லர், கெலியிடம் எப்போதும் கூறும் - "நான் எப்போதும் உன்னை நேசிப்பேன்" என்ற வார்த்தையை அவர் நினைத்துப் பார்த்திருப்பார். கெலியின் மீதான அவரது நீண்ட காலமான மற்றும் இரகசியமான காதல் முற்றிலும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. முன்பு ஹிட்லர் கெலியைக் கட்டுப்படுத்த முயன்றிருக்காவிட்டால், இப்போது இந்த வாழ்க்கைக்குத் திரும்பியிருக்கையில், ஒருவேளை அவர், ஹிட்லரின் காதலை ஏற்றுக்கொண்டு அவரோடு வாழ்ந்திருக்கலாம் என்று லெவ் நினைத்தான். இன்று அந்தக் கனவு சிதைந்ததால் ஹிட்லருக்கு உண்டாகியிருக்கும் வலியை லெவ்வால் உணரமுடிந்தது. காதல் எப்போதும் வாகனங்கள் செல்லக்கூடிய இருவழிப் பாதையாக இருப்பதில்லை. எண்ணிலடங்கா இலட்சக்கணக்கானோர் காதலைத் தாங்கள் கொடுப்பவர்களாக இருந்தார்கள், ஆனால் அவர்கள் கொடுத்த காதல் அவர்களுக்கு திரும்பக் கிடைக்கவில்லை என்பது புதிதல்ல. இதனால் அவர்கள் பெற்றுக்கொண்ட வலியானது, ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமே ஒரே மாதியான வலியாகவே இருந்தது. சில காதல் மறைக்கப்பட வேண்டியிருந்தது, ஏனெனில் அது ஒருபோதும் வளருவதற்கு வாய்ப்பே இல்லாத ஒன்றாய் இருந்தது.

லெவ் ஆவிக்குரிய காரியங்கள் மற்றும் தொழில்நுட்ப விஷயங்களைப் படிப்பதில் மதிய நேரத்தைச் செலவிட்டான். இரவு உணவு நேரத்தில், ஹிட்லர் தனது அறையை விட்டு வெளியே வந்தார். அவரது கோபம் தணிந்திருந்தது, ஆனால் அவர் வழக்கத்திற்கு மாறாக அமைதியாக இருந்தார். ஹிட்லர் சாப்பிடுவதற்கு ஆர்வமாக இருப்பதாகத் தோன்றியது, ஆனாலும் தனது உணர்வுகளைத் தனக்குள்ளேயே வைத்துக்கொண்டார். ஏதேன் பழத்தையும் மற்றும் வேறு சில காய்கறிகளையும் சேர்த்து மிகுந்த சுவையுடையதாக லெவ் தயாரித்து வைத்திருந்த இரவு உணவை ஹிட்லர் மகிழ்ச்சியுடன் உண்டார். லெவ் பலவகையான பழச்சாறுகளையும் செய்திருந்தான். மேலும் அவர்கள் ஹிட்லரது உயிர்த்தெழுதல் கேக்கின் கடைசிப் பகுதியையும் சாப்பிட்டனர். இது அவருக்குப் புத்துயிர் அளித்தது போலத் தோன்றியது.

விரைவில் ஹிட்லர் தனது மௌனத்தைக் கலைத்து, ஈவா ப்ரான்னைப் பற்றி விசாரிக்கத் தொடங்கினார். "நான் ஈவாவைச் சந்திப்பதற்கு உங்களால் ஏற்பாடு செய்து தர முடியுமா?" என்று அவர் கேட்டார்.

## இப்போது ஈவா தேடப்பட்டார்

"ஈவாவை முன்பே அழைத்துப் பேசாமல், நேரடியாகச் சென்று அவரை ஆச்சரியப்படுத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது ஏற்ற தருணத்தில் நீங்களே ஈவாவிற்கு அழைத்து, அவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறீர்களா?" என்று லெவ் கேட்டான்.

கெலியுடனான, ஹிட்லரின் எதிர்பாராத சந்திப்பு பெருந்துன்பத்தையே ஏற்படுத்தியிருந்தது. அதனாலேயே அவர்கள் ஈவாவைச் சந்திக்கச் செல்வதற்கு முன்பே, அவரை அழைத்துப் பேசுவதற்கு லெவ் பரிந்துரைத்தான். இரவு உணவுக்குப் பிறகு, லெவ் தொலைபேசியை எடுத்து ரெபெக்காளை அழைத்தான். எப்படியும் அவளை அழைத்துப் பேசவேண்டும் என நினைத்திருந்தான். அவளுடன் பேசுவது எப்போதும் லெவ்விற்கு மகிழ்ச்சியாக இருக்கும். இருவரும் எபிரெய மொழியில் பேசினர். அதனால் அவர்கள் இருவரைத் தவிர வேறு யாருக்கும் அவர்கள் என்ன பேசினார்கள் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. ஹிட்லரைச் சமாளிப்பதில் பிரச்சனை இருந்ததுபோல, ஈவாவைச் சமாளிப்பதில் பிரச்சினை இல்லை என்பதையும், ஆனால் உண்மையில் ஈவாவிற்குச் சந்தோஷமான வாழ்க்கை இருக்கவில்லை, அவர் கொஞ்சம் மனச்சோர்வில்தான் இருந்தார் என்பதையும், ஹிட்லரின் நாசிப் பேரரசின் தீமைகளுக்கு ஈவா உடந்தையாக இருந்ததால், அவரும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதையும் லெவ் அறிந்துகொண்டான். ஒரு சுருக்கமான கருத்துப் பரிமாற்றத்திற்குப் பிறகு, ஈவாவைத் தொலைபேசியில் பேச அழைக்குமாறு லெவ், ரெபெக்காளிடம் கூறினான். ஈவா பேசத் துவங்கும்போதே "உங்களுக்காக ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது. தொடர்பில் காத்திருங்கள், சிலகாலம் நீங்கள் பேசாத ஒருவருடன் பேசுவதற்காக, அவரைத் தொடர்பில் இணைய அழைக்கிறேன்" என்று லெவ் கூறினான்.

லெவ், ஹிட்லரிடம் போனை எடுத்துப் பேசும்படி சைகை செய்தான். "ஈவாவுக்கு நீங்கள்தான் பேசுகிறீர்கள் என்று தெரியாது" என்று லெவ் ஹிட்லரது காதில் கிசுகிசுத்தான்.

“ஈவா, என் அன்புக்குரியவளே, நான்தான் பேசுகிறேன். உனக்கு என்னை நினைவிலிருக்கிறதா?” என்று ஹிட்லர் கேட்டார். ஈவா உடனே ஹிட்லரின் குரலை அடையாளம் கண்டுகொண்டார்.

“ஓ, அடால்ஃப், நீங்களா!. உங்களது குரலைக் கேட்பதற்கு எவ்வளவு இனிமையாக உள்ளது. நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா? நான் உங்களைப் பற்றி அடிக்கடி நினைப்பேன். நாம் ஒன்றாக இருந்த அந்தக் கடைசி மணிநேரங்கள் இன்னும் என் நினைவிலிருக்கிறது. அந்த உலகம் மிகவும் இருளாகவும், மப்பும் மந்தாரமுமாக இருந்தது. நான் கண் விழித்தபோதோ ஒரு பிரகாசமான மற்றும் அழகான உலகத்தில் இருந்தேன். இது ஒரு கனவு போன்று உள்ளது” என்றாள்.

“ஆமாம், ஆமாம்” என்று அடால்ஃப்பும் கூறினார். “உனக்கு வசதியாக இருக்கும்போது நாம் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யலாமா?” என்று கேட்டார்.

“நிச்சயமாக, என் அன்புக்குரிய அடால்ஃப். இந்தப் புதிய மாற்றங்களை எல்லாம் நான் ஏற்றுக்கொள்வதற்கு எனக்கு ரெபெக்காள் உதவினார். உங்களை இங்கு அழைப்பதற்கு அவருக்கு ஏற்ற நேரம் எதுவாக இருக்கும் என்று நான் அவரிடம் கேட்கின்றேன்” என்றாள். சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு, “நாளை அல்லது அதற்கு மறுநாளின் மதியவேளை வசதியாக இருக்கும்” என்று ஈவா கூறினார்.

ஹிட்லர், லெவ்வின் பக்கமாகத் திரும்பி, “நாளை மதியம் என்னை ஈவாவின் வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு உங்களால் முடியுமா?” என்று கேட்டார்.

“சரி, நிச்சயமாகச் செல்லலாம். உங்களை அங்கு அழைத்துச் செல்வது எனக்கும் மகிழ்ச்சி தான்” என்று லெவ் கூறினான். ரெபெக்காளைச் சந்திக்கப்போவதே லெவ்வின் மகிழ்ச்சிக்கான காரணம் என்று ஹிட்லருக்குத் தெரியாது.

“நல்லது, நாளை மதியம் நாங்கள் அங்கே இருப்போம்” என்று ஹிட்லர் சொன்னார். பின்னர் சிறிது நேரம் அவர்கள் உரையாடிவிட்டு, விடை பெற்றவாறு தொலைபேசியை வைத்தனர்.

ஹிட்லரின் மனநிலை உடனடியாக மாறுவதை லெவ் கண்டான். நாளைய தினத்தை எதிர்பார்த்து காத்திருப்பதற்கான ஏதோவொரு காரணம் அவருக்கு இருந்தது. மேலும் இங்கே உள்ள ஈவா, அவரை வேண்டாமென்று மறுக்கவோ அல்லது அவமானப்படுத்தவோ மாட்டார். தான் ஒரு இராஜாவாக இருந்து அதிகாரம் செய்த மற்றும் தனது பேரரசாட்சிக்கு அனைவரும் கீழ்ப்பட்டிருந்த தனது பழைய உலகத்தை, மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு ஹிட்லர் உண்மையாகவே ஏங்கினார். ஆட்சி அதிகாரத்தில் இருப்பது அவருக்கு மிகவும் இனிமையாக இருந்தது. ஜனங்கள் அவரை நேசித்தார்களா என்பது பற்றி அவருக்கு முக்கியமில்லை; மற்றவர்கள் பெரும்பாலும் தனது கட்டுப்பாட்டில் இருப்பதையே ஹிட்லர் விரும்பினார். அவர் முரண்பாடுகள் நிறைந்த மனிதராய் இருந்தார், மேலும் அவரை முழுமையாகப் புரிந்துகொள்வது என்பது மிகவும் கடினமாக இருந்தது. பெரும்பாலான ஜனங்களைப் போலவே, அவரும் ஒரு மென்மையான பக்கத்தைக் கொண்டிருந்தார். ஆனால் இரக்க உணர்வு அவருக்குள் நுழைவதை, நம்பமுடியாத வகையில் எளிதாகத் தடுத்து விட்டார். அவரது வழியில் அல்லது அவரது இலக்குகளுக்கு இடையூறாக நின்ற எதையும் பொறுத்துக் கொள்ள ஹிட்லரால் முடியவில்லை. அவர் தீமையானவைகளைக் கைக்கொள்பவராகவும், நல்லொழுக்கத்தைப் பெரிய அளவில் விரும்பாதவராகவும் இருந்த போதிலும், அவர் நம்பமுடியாத அளவிற்கு வெற்றியடைந்தார். நல்லொழுக்கம் இல்லாமல் ஹிட்லர் உலகின் உச்சத்திற்குச் சென்றிருந்தார், ஆனால் இதுவே சாத்தானுடைய விஷயத்திலும் உண்மையாய் இருந்தது.

கல்வி சார்ந்த சில திட்டங்களில் ஹிட்லர் ஆர்வமாக இருக்கலாம் என்று லெவ் நினைத்தான். அவர் பெரும்பாலும் நவீன வரலாறு மற்றும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் காரியங்களில் ஆர்வம்கொண்டிருந்தார். தொலைக்காட்சியின் வாயிலாக வந்து கற்பித்த ஆசிரியர்களால் அவர் மிகவும் ஈர்க்கப்பட்டார், அவர்களில் பெரும்பாலானோர் முற்பிதாக்களே. அதிர்ஷ்டவசமாக, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை எந்த மொழியில் வேண்டுமானாலும் மொழிப்பெயர்க்கலாம். அவர்களுடைய மேன்மையான அறிவையும், ஆசிரியர்களாக அவர்கள் நமக்கு அளிக்கும் உயரிய பரிசையும் ஹிட்லர் உணர்ந்துகொண்டார். எந்த விஷயமாக இருந்தாலும்,

முற்பிதாக்கள் அதனை வியத்தகு அளவிற்கு சுவாரஸ்யமாக்கி இருந்தனர். ஜெர்மனி சரணடைந்த பிறகு நடந்தவைகளைக் குறித்து ஹிட்லர் ஆச்சரியப்பட்டார். போரினால் ஏற்பட்ட அழிவிலிருந்து ஜெர்மனி மீண்டும் எவ்வாறு கட்டமைக்கப்பட்டது என்பதைக் கண்டு ஹிட்லர் இதயப்பூர்வமாக மகிழ்ந்தார். இருப்பினும், எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது, இம்முறை தேவனால் அத்தேசம் பாதுகாக்கப்பட்டதைக் குறித்த சில கூடுதல் காட்சிகளைக் கண்டபோது ஹிட்லரின் மகிழ்ச்சி முடிவுக்கு வந்தது. படையெடுத்து வந்த எதிரிப் படைகளைத் தேவன் அழித்ததைத் தொடர்ந்து ஏராளமான ஜனங்கள் மரித்ததையும் மற்றும் நாடுகளிடையே உண்டான பெருங்குழப்பத்தையும் கண்டபோது, அவர் மிகவும் சங்கடமாக உணர்ந்தார். அதனால் விரைவாக இரவு ஓய்வுக்குத் தான் செல்ல வேண்டும் என்று ஹிட்லர் முடிவுசெய்தார்.

## கெலியுடனான சந்திப்பு லெவ்வின் நாட்குறிப்பில் (டைரி) பதிவுசெய்யப்பட்டது

சிறிது நேரம் தனது படிப்பினைத் தொடர்ந்த பின்பு உறங்குவதற்குச் செல்லலாம் என்று லெவ் முடிவுசெய்தான். கெலியுடனான அடால்ஃப்பின் சந்திப்பைப் பதிவுசெய்ய அவன் விரும்பினான். அதனைக் குறித்து லெவ் தனது நாட்குறிப்பில் எழுதினான். அதிர்ஷ்டவசமாக கெலிக்கும், ஹிட்லருக்கும் இடையில் நடந்த உரையாடலின் ஒவ்வொரு வார்த்தைகளையும் லெவ் நினைவில் வைத்திருந்தான். பதிவுசெய்தவைகள் சரியானதுதானா என்பதை உறுதிப்படுத்த, லெவ் அதனை ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துக் கொண்டான். அதன் பின்பே லெவ் தூங்குவதற்குச் சென்றான். லெவ், ஒவ்வொரு கதாபாத்திரங்களைக் குறித்தும் ஆய்வுகளைச் செய்வதற்கு விரும்பினான். ஹிட்லர் வழக்கத்திற்கு மாறான குணங்களைக் கொண்டவர். சில நேரங்களில் அவர் உணர்வுள்ள மனிதராக இருப்பார், ஆனால் எந்த நேரம் வேண்டுமானாலும் வெடிப்பதற்குத் தயாராயிருக்கும் வெடிகுண்டைப் போல மாறுவார்.

வழக்கமான நேரத்திற்கு அடுத்த நாள் லெவ் விழித்தெழுந்தான். தன்னுடைய காலை வேலைகளை முடித்துவிட்டு, அன்றைய தினத்திற்கானப் பழங்களைச் சேகரிப்பதற்காக லெவ் தோட்டத்திற்குச் சென்றான். இரவு உணவிற்காகச் சில காய்கறிகளையும், பழரசம் தயாரிப்பதற்காக சில பழங்களையும் சேகரித்தான். சில அத்திப்பழங்கள் உண்பதற்குத் தயாராக இருந்ததாலும், உண்ணத் தூண்டும் வகையில் அலங்கரிப்பதற்காக அவைகளையும் லெவ் சேகரித்தான். பழச்சாறைத் தயார்செய்து அதில் சிறிது அருந்திவிட்டு, தேவாலய வழிபாட்டிற்கு விரைந்து சென்றான்.

அடால்ஃப் முன்பே எழுந்திருந்ததையும், ஆனால் தான் வீட்டை விட்டுச் செல்லும் வரையிலும், அவர் தனது அறையை விட்டு வெளியே வரமாட்டார் என்பதையும் லெவ் அறிந்திருந்தான். லெவ் இல்லாதபோது, தன்னுடைய வீட்டிற்குத் தான் எஜமானாக இருக்க ஹிட்லர் விரும்பினார். அவருக்கு இன்னும் லெவ்வின் உதவி தேவைப்பட்டது, எனவே ஹிட்லர் இன்னும் லெவ்வை வீட்டை விட்டு வெளியேறச் சொல்லவில்லை. லெவ் ஒரு யூதன் என்பது ஹிட்லரைப் பாதித்ததாகத் தெரியவில்லை. ஹிட்லரின் நாசிப் பேரரசின் அதிகாரிகள், ஹிட்லருடன் இருக்கும் லெவ்வைப் பார்க்க நேர்ந்தால், அவனை ஒரு யூத சமையல்காரனாகவோ அல்லது ஓட்டுநராகவோ அல்லது வேறு ஏதேனும் வேலை செய்பவனாகவோதான் நினைக்க முடியும்.

புத்துணர்ச்சி அடைவதற்காக லெவ் தேவாலயத்திற்கு வந்தான். ஜனங்கள் தேவனைத் துதிப்பதையும், தேவன் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி சொல்வதையும் காண்பதற்கு மிகவும் அருமையாக இருந்தது. பிறரை நேசிப்பவர்களையும் மற்றும் தங்களது சொந்தத் தேவைகளுக்காகப் பிறரைப் பயன்படுத்தாதவர்களைப் பார்க்கும்போது அழகாக இருந்தது.

வழிபாட்டுச் சேவையில் இருந்து வழக்கத்தை விட தாமதமாகத்தான் லெவ் வீட்டிற்குத் திரும்பினான், ஏனெனில் மற்றப் புதியவர்களுடனான ஐக்கியத்திற்காக அவன் கொஞ்சம் கூடுதலான நேரம் எடுத்துக்கொண்டான். புதியவர்கள் அநேகர் ஜீவனுக்குத் திரும்பியிருந்தார்கள், அவர்கள் வாழ்வதற்கும், நேசிப்பதற்கும், மகிழ்ச்சியாக இருப்பதற்கும் ஆவலுடன் இருந்ததைப் பார்ப்பதற்கு அழகாக இருந்தது. கடந்த காலத்தின் இருள் இன்னும் நினைவில் இருந்தாலும், அது மகிழ்ச்சி மற்றும் அன்பால் விரைவாக ஈடுசெய்யப்பட்டது.

லெவ் வீட்டிற்கு வந்தபோது, அவருக்கு ஆச்சரியம் அளிக்கும் வகையில், ஹிட்லரை எங்கும் காணமுடியவில்லை. ஒரு நீண்ட நடைபயணத்திற்குச் செல்லும் அளவிற்கு ஹிட்லருக்கு தைரியம் வந்திருக்க வேண்டும் என்று லெவ் எண்ணினான். அவர் மற்ற நபர்களோடு பேசி, பழகும் சுபாவமுடையவராய் இருப்பதை விரும்பாதவராகையால், அவர் வழியில் சந்திக்கும் நபர்களுடன் நின்று பேசமாட்டார் என்று லெவ் நினைத்தான். ஜனங்கள் அவரை மோசமான அடால்ஃப் ஹிட்லராக அடையாளம் காணவில்லை என்பதைக் கண்டபோது, அவர் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாகத் தோன்றியது. தனது அடையாளம் வெளிப்படுத்தப்படும் நாள் வரும் என்று ஹிட்லர் சந்தேகித்தார், ஆனால் அதுவரையிலும் பிறரால் அறியப்படாத ஒருவனாக சந்தோஷமாக இருக்கலாம் என்று எண்ணினார்.

நண்பகல் நேரத்தில் ஹிட்லர் வேகமாக வீட்டிற்குள் நுழைந்தார். அவர் ஈவாவைச் சந்திப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதையும், கெலியைவிட ஈவா தன்னைப் பார்ப்பதில் மகிழ்ச்சியாக இருப்பாள் என்று ஹிட்லர் நம்புவதையும் லெவ்வால் பார்க்க முடிந்தது. எந்த வேலையையும் செய்வதற்கு உடன்படுபவராக இருந்தார். அதனால் கோப்பைகளில் பழச்சாறினை ஊற்றுவதற்கும், எளிமையான ஆனால் சுவையான உணவுக்கு மேசையை ஒழுங்குபடுத்துவதற்கும் உதவியாக இருக்க முயன்றார். ஹிட்லர் பழங்களையும், புதிய உணவு முறைகளையும் கண்டு மகிழ்ந்தார். தனது உணவை எவ்வளவு கவனமாகத் தேர்ந்தெடுத்தாலும் அவ்வப்போது அஜீரணத்தால் அவதிப்படுவார் என்றும், ஆனால் இப்போது அவரது வயிறு எந்தவிதமான தொந்தரவுமின்றி, நன்றாக இருப்பதை அவரால் நம்பமுடியவில்லை என்றும் ஹிட்லர் கூறினார்.

"நல்லது, அடால்ஃப், தேவன் உங்களுக்குச் செய்தவைகளுக்காக நீங்கள் நன்றியுள்ளவராக இருக்கின்றீர்களா? நாளைக்கு நீங்கள் என்னுடன் ஆராதனைக்கு வரலாம் இல்லையா?" என்று லெவ் கேட்டான்.

ஹிட்லர் தனது ஆரோக்கியத்தை வெளிப்படுத்தியதற்காக வருந்துவதாக லெவ்வுக்குத் தோன்றியது. அவர் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களுக்காக, தேவனைப் போற்றுவதற்கு அவர் இன்னும் முழுமையாகத் தயாராகவில்லை. அவர்கள் மதிய உணவைச் சாப்பிட்ட பிறகு, ஹிட்லர் மேசையை சுத்தம்செய்ய உதவினார். மேலும் தன்னிடம் உள்ள மாற்றத்தைக் காட்டும் வண்ணமாக, தான் இந்த வேலைகளை வழக்கமாகவே செய்ய விரும்புவதுபோலக் காட்டிக்கொண்டார். ஹிட்லர் புறப்பட்டு வந்தவுடன், ஈவாவைப் பார்க்கச் செல்லலாம் என்று லெவ் அவரிடம் கூறினார். அவர் தன் அறைக்குச் சென்று கொஞ்சம் கூடுதல் கவனத்துடன் தன்னை அழகுபடுத்திக் கொண்டு தயாராகி வெளியே வந்தார்.

அவர்கள் அழகான கிராமப்புறங்களின் வழியாக வண்டியை ஓட்டிச்சென்றனர். அடால்ஃப் இயற்கை அழகை இரசித்தபடியே வந்தார். "ஓவியம் வரைவதற்கு சில தூரிகைகள் மற்றும் தேவையானப் பொருட்களை வாங்கலாமா?" என்று ஹிட்லர் விருப்பத்தோடு கேட்டார்.

"ஆமாம், இங்கு அருகில் ஓர் இடம் உள்ளது, அங்குச் சென்று, நீங்கள் உங்களது ஓவியக் கலைப் பயிற்சிக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் வாங்கலாம். நாளைக்கு நாம் அங்குச் செல்லலாம். அந்த இடத்திற்குச் செல்லும் வழியில் சில மலைகளைக் கடந்து செல்லும்போது, நீங்கள் கிராமப்புறத்தின் அழகை இன்னும் அதிகமாக இரசிக்கலாம்" என்று லெவ் கூறினான்.

மீண்டும் தனது ஓவியக் கலைக்குத் திரும்பப் போவதை நினைத்து ஹிட்லர் மகிழ்ச்சி அடைந்தார். உண்மையில் ஓர் ஓவியர் ஆகுவதற்கே ஹிட்லர் முதலில் விரும்பியிருந்தார். அவர் ஓர் ஓவியனாக வாழ முடிந்திருந்தால், ஒரு நிறைவான வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் அனுபவித்திருந்திருப்பார். தனது வாழ்க்கை ஓவியக் கலையைச் சார்ந்து இருந்திருந்தால், வரலாற்றில் தன்மீது இருக்கும் களங்கத்தைத் தவிர்த்திருந்திருக்கலாம் என்று ஹிட்லர் யோசித்தார்.

மனிதகுலத்திற்கு எதிரான அவரது குற்றங்களுக்குச் சுற்றுச்சூழ்நிலைகள் மட்டுமே காரணம் என்றால், ஒரு நல்ல பரிசுத்தமான சூழல், சாதகமற்ற ஒன்றால் உருவாக்கப்பட்ட தவறுகளை மாற்றிப்போடும். "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப் பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்" (1 கொரிந்தியர் 3:13). தேவனுடைய

வழிகள் சமமானவைகள் என்பதைக் குறித்து லெவ் பாராட்டத் தொடங்கினான். சுற்றுச்சூழ்நிலைகள் மட்டுமே ஒருவருடைய நித்திய ஜீவனுக்கான இலக்கைத் தீர்மானிக்காது. அதற்கு முதலில் விருப்பமுள்ள மனமும், இருதயமும் இருந்தால் மட்டுமே, சுற்றுச்சூழலால் தூண்டப்படும் அனைத்துத் தீமைகளும், ஆரோக்கியமான சூழ்நிலைகளால் சரிசெய்யப்படலாம்.

## ஹிட்லர் ஈவாவைச் சந்தித்தல்

அன்று மதியம் அவர்கள் ஈவா ப்ரான்னின் இல்லத்தை வந்தடைந்தனர். ஈவாவின் வீடும் ஹிட்லரின் வீட்டைப் போலவே இருந்தது, சில வித்தியாசமான வடிவமைப்புகளினால் வெளிப்புறம் மட்டும் ஹிட்லரின் வீட்டை விட வித்தியாசமாக இருந்தது. இருப்பினும், பெண்களுக்கே உரிய அழகுப்படுத்தும் தன்மையினால் ரெபெக்காள் அந்த வீட்டை ஓர் அன்பான மற்றும் அழகான வீடாக மாற்றி இருந்தாள். ரெபெக்காள் அவர்களை வீட்டு வாசலுக்குச் சென்று வரவேற்றாள். ஹிட்லர் இன்று நன்றாக நடந்துகொண்டார். ஈவாவுக்குக் கொடுப்பதற்காக அவர் அழகான மலர்களைக் கொண்ட பூங்கொத்தைத் தேர்ந்தெடுத்து இருந்தார். ஈவா தனது அறையிலிருந்து வெளிவருவதற்காக அவர்கள் வரவேற்பறையில் காத்திருந்தனர்.

ஈவா வெளியே வந்துபோது, ஹிட்லரைச் சந்திப்பதற்கு அவளும் மகிழ்ச்சியுடன் இருப்பது தெரிந்தது. ஹிட்லர் எழுந்து ஈவாவை அணைத்து தனது முத்தத்துடன் வரவேற்றார். "என் அன்பான ஈவா, உனது அழகான முகத்தை மீண்டும் பார்ப்பதற்கு மிகவும் வியப்பாக உள்ளது." ஈவாவின் முகமும் ஹிட்லரின் முகத்தைப் போலவே பிரகாசமாக இருந்தது. மற்ற எந்த ஒரு நேரத்தைக் காட்டிலும், இத்தருணத்தில் அவர் மகிழ்ச்சியாக இருப்பதாகத் தோன்றியது. அவர் சில தருணங்களில் மட்டுமே மிகவும் நாகரீகமாகவும், உண்மையான அன்போடும் நடந்துகொள்வார். அதனைப் பார்ப்பதற்கு நன்றாக இருந்தது, ஏனென்றால் அவருக்குள் புதைந்திருக்கும் ஒரு கண்ணியமான நபர் வெளிவர முயற்சி செய்து கொண்டிருந்தார்.

ஈவாவும், அடால்ஃப்பும் தங்களது உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கு அவர்களுக்கான நேரத்தைக் கொடுக்க லெவ் விரும்பினான். அதனால் இருவரும் நடப்பதற்கு வெளியே செல்லலாம் என்று லெவ் பரிந்துரைக்க, ரெபெக்காளும் அந்த யோசனைக்கு ஒப்புக்கொண்டாள்.

லெவ்வும், ரெபெக்காளுடன் தனியாக இருப்பதற்கு ஆர்வமாக இருந்தான். தாங்கள் பழைய உலகில் கணவன்-மனைவியாக இருந்திருந்தனர் என்று அவர்களிடம் சொல்லவில்லை. ரெபெக்காள், ஈவாவைச் சமாளிப்பதில் எப்படி வெற்றி கண்டாள் என்பதை அறிந்துகொள்ள லெவ் விரும்பினான். இவர்கள் இருவரும் வெளியேறிய பின்பு, ஈவாவும், அடால்ஃப்பும் ஒருவருக்கொருவர் தங்களது கரங்களைப் பிடித்துக் கொண்டனர், அவர்களும் தனியாக இருப்பதில் மகிழ்ச்சி அடைந்திருந்தனர்.

"ஈவாவைச் சமாளிப்பதில் அதிக அளவு பிரச்சனை இல்லை. அவரது உலகம் சிறியது. அவருடைய வாழ்க்கை அடால்ஃப்பைச் சுற்றியே இருந்தது. அவர் அதிகமாகக் கோபம்கொள்ளும் குணம் கொண்டவராக இருந்ததால், அவரது ஏற்ற இறக்கமான மனநிலையை ஈவா சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது, ஆனால் ஹிட்லர் மற்றவர்களைவிட ஈவாவை தன்மையாகவே நடத்தினார். ஜெர்மனுடைய நம்பிக்கைகள் தோல்வியடையத் தொடங்கியதும், அவர் ஈவாவுடன் இன்னும் நெருங்கிப் பழகினார். ஈவா, ஹிட்லர் இருவருமே தாங்கள் கண்ட பயங்கரமான கனவை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டனர். ஈவா அவருக்கு ஆறுதல்கூற முயன்றார். ஈவாவினுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ஹிட்லர் தன்னை விட்டுச் செல்லும்படி ஈவாவை ஊக்கப்படுத்தியதாக நான் அறிந்துகொண்டேன். கசப்பான முடிவாக இருந்தபோதிலும், அவரோடு இருக்கும் முடிவையே ஈவா தேர்வுசெய்தார். "வாழும்போது ஒன்றாக இருந்ததைப் போலவே, மரணத்திலும் அவருடன் ஒன்றாக இருக்க விரும்பினேன்" என்று ஈவா தன்னிடம் கூறினார்" என்று ரெபெக்காள் சொன்னாள்.

"ஹிட்லரின் தீமையானச் செயல்கள் இரவும், பகலும் ஈவாவை நிச்சயமாகப் பின்தொடரும் என்றும், அப்படிப்பட்டவரைச் சார்ந்திருப்பதைத் தாண்டி அவரின் உலகத்தை இன்னும் பெரிதாக்க நான் முயற்சித்தேன். அடால்ஃப்புடன் சேர்ந்து இருப்பதற்கான வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. அப்படியே ஒருவேளை ஈவா, ஹிட்லருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று இருந்தாலும், ஜனங்கள் அவர் செய்த பாவங்களை மறந்து அவரை ஏற்றுக்கொள்ளும் வரை, அவரது பாவத்திற்கான

வெறுப்புகளை அவர் எதிர்கொள்ள வேண்டும். அப்படி அவர் எதிர்கொள்ளும் வெறுப்புகளை, ஈவாவும் சேர்ந்தே எதிர்கொள்ள வேண்டும் என்பதை நான் ஈவாவிற்கு நினைவூட்டினேன். உண்மையைக் கண்டும் காணாமல் இருக்கும் திறன் ஈவாவுக்கு முன்பும் இருந்தது, இப்போதும் இருக்கிறது. யூத இரத்தத்தின் மீதான ஹிட்லரின் மோகத்தால் கொல்லப்பட்ட மில்லியன் கணக்கானவர்கள் ஈவாவுக்குப் பெரியதாகத் தெரியவில்லை. அதை அவர் தன் சிந்தையிலிருந்து விலக்கியிருந்தார். அந்த அளவிற்கு அது ஈவாவுக்கு மிகவும் எளிமையானதாக இருந்தது. விஷவாயு நிரப்பப்பட்ட அறைகளுக்கு அனுப்பப்பட்ட மில்லியன் கணக்கான ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை அவரால் நினைக்காமல் எப்படி இருக்க முடிந்தது? என்று நான் ஈவாவிடம் கேட்டேன்'' என்று ரெபெக்காள் கூறினாள்.

''என்னைப் பற்றின இம்மாதிரியான கிசுகிசுப்புகளை நானும்தான் கேள்விப்பட்டேன், ஆனால் அடால்ஃப் இந்த மோசமான காரியத்தைச் செய்வதில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டதாக நினைத்தேன். அவருக்கு உதவியாளர்களாக (சிப்பாய்கள்) இருந்தவர்களே தொடர்ந்து நடந்துகொண்டிருந்த இந்த இனப்படுகொலையை முடிவில்லாமல் ஆர்வத்துடன் நடத்தினர். ஹிட்லர் இவை அனைத்தையும் ஒழுங்கமைத்தார், ஆனால் தனிப்பட்ட முறையில் எப்போதும் தனது கைகளை இரத்தக் கறைபடாமல் வைத்திருந்தார். சிறிய காரியங்களில் கூட மிகுந்த அக்கறை கொண்டவராக இருந்தார்'' என்று ஈவா பதிலளித்தார்.

''உண்மை என்னவெனில், ஆரம்ப காலத்தில் யூதர்களைப் பெரிய குழிகளில் தள்ளி விழும்போது, இயந்திரத் துப்பாக்கியால் அவர்களைச் சுட்டு எவ்வாறு கொலை செய்கிறார்கள் என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஹிட்லருக்குக் காட்டப்பட்டது. இதைப் பார்த்த அவர் வெளிப்படையாகத் தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தினார். இக்காட்சியைப் பார்த்த பின்பு ஹிட்லரால் தனது மதிய உணவைக்கூட எடுத்துக்கொள்ள முடியவில்லை. வீடு திரும்பிய அவர், இதுபோன்ற கொலைகளைக் கட்டாயமாக நிறுத்தவேண்டும் என்று என்னிடம் கூறினார். வீரர்கள் இப்படியானக் காரியங்களைச் செய்வது மனிதத் தன்மையற்ற செயல் என்று அவர் நினைத்தார். பின்னர் அவர் ஜெர்மனியின் அறிவியல் விஞ்ஞானிகளுடன் இணைந்து உடல் சிதறி அதன் பாகங்கள் மற்றும் இரத்தம் காற்றில் பறக்காமல் இதைச் செய்வதற்கான வழியைக் கண்டுபிடித்தார். விரைவிலேயே விஞ்ஞானிகள் மகிழ்ச்சியுடன் இதற்கான மாற்றாக, அவரிடத்தில் விஷவாயு அறைகளுடன் கூடிய எரிவாயு தொட்டிகளை வழங்கினர். எரிவாயு தகனமேடைகள் மிகவும் குறைவாக இரத்தம் சிந்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அதேவேளையில் இனப்படுகொலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய விஷவாயுவை உருவாக்குவதற்கான நிறுவனங்களை ஏலம் எடுக்கும் யோசனைகளையும் வழங்கினார்கள்'' என்று ஈவா தொடர்ந்து கூறினார்.

ஈவாவைச் சிந்திக்க வைப்பதற்காக ''ஈவா, இந்த முட்டாள்தனத்தை நிறுத்தும்படிக்கு நீங்கள் எப்போதாவது ஹிட்லரிடம் வருந்திக் கேட்டுள்ளீர்களா?'' என்று தான், ஈவாவிடம் கேட்டதாக ரெபெக்காள், லெவ்விடம் கூறினாள்.

''வருந்திக் கேட்டிருந்தாலும் அது அவரது மனதை மாற்றியிருந்திருக்காது. ஏனெனில் ஆரிய இனத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான நாசியின் முழுத் திட்டங்களில் இந்த இனப்படுகொலைத் திட்டமும் ஒரு பகுதியாகும். மனுக்குலத்தை விட உயர் நிலையில் உள்ள ஒருவரால் இந்தத் திட்டம் தந்திரமாகக் கையாளப்பட்டது. மரணத்திற்கேதுவான இந்தக் கொடிய திட்டத்தை சாத்தானே உருவாக்கியது போல இருந்தது. சாத்தான் ஜெர்மனியின் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களின் சிந்தையில், தனது முழு ஆதிக்கத்தையும் செலுத்தி, அவர்களைச் சில குறிப்பிட்ட வரையறைகளுக்குள்ளேயே அடைத்து வைத்திருந்தான். இது நாசி கட்சியிடமிருந்து வந்த புனித அழைப்பைப் போன்றது, ஹிட்லரால் கூட இதனை மாற்றி இருந்திருக்க முடியாது'' என்று ஈவா கூறினார்.

''இந்த முழு இனப்படுகொலைத் திட்டமும் தவறானது மற்றும் முட்டாள்தனமானது என்று எனக்குத் தெரியும். ஆனால் ஈவா, அடால்ஃப்பை நேசித்ததாகவும், அவருக்கும் ஈவா தேவைப்பட்டதாகவும் ஈவா கூறினார். குறிப்பாக இறுதியில், அவரது நம்பகமான அதிகாரிகள் அனைவரும் தங்களது சீருடைகளைக் கழற்றிவிட்டு, சாதாரணமான எளிய குடிமக்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முயற்சித்தார்கள். ஹிட்லருடைய நாசி ஆட்சியின் தீய செயல்களுக்கான பழிச்சொல்லை ஏற்றுக்கொள்ள அவர்கள் விரும்பவில்லை. தோல்வியடையும் ஒரு அமைப்பினை ஜனங்கள் புறக்கணிப்பதுபோல, அவர்கள் நாசி அமைப்பைப் புறக்கணித்து

ஒவ்வொருவரும் தங்களைக் காத்துக்கொள்வதற்கு முயன்றார்கள். ஹிட்லர் தனக்கு நம்பிக்கை துரோகம் நிகழ்ந்ததாகவும், தான் கைவிடப்பட்ட நிலையில் இருந்ததாகவும் உணர்ந்தார். அவரது புகழ்பெற்ற ஜெர்மன் இராணுவம் உடைக்கப்பட்டு, தோற்கடிக்கப்பட்டதை அவரால் நம்பமுடியவில்லை. ரஷ்யர்களைத் தோற்கடித்து வெகு தொலைவிற்கு விரட்டியடிப்பதற்குத் தங்களது இராணுவம் வியக்கத்தக்க வகையில் திடீரென்று தோன்றுவார்கள் என்று அவர் கற்பனைச் செய்திருந்தார். இவர்களுடைய பதுங்கு குழிகளை நோக்கி ரஷ்யர்கள் நெருங்கி வந்துவிட்டதால், இவர்களின் அழிவிற்கான வாய்ப்பு அதிகரித்திருந்தது. ரஷ்யர்கள், ஹிட்லரை தெருக்களில் இழுத்துச் செல்வதைப் போன்ற கனவுகள் அவருக்கு வந்தன. அப்படியானதொரு சந்தோஷத்தை அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்பதில் ஹிட்லர் உறுதியாக இருந்தார். அவர்கள் தப்பிப்பதற்கு எந்த ஒரு வழியும் அப்போது இல்லை என்பதை அறிந்த அவர், சயனைடு மாத்திரையை ஈவாவிற்குச் சாப்பிட வழங்கினார். அவருடைய மரித்த உடலுடன், ஈவாவின் உடலையும் அவர்கள் தெருக்களில் இழுத்துச் செல்வதை ஹிட்லர் விரும்பவில்லை."

"தப்பிச்செல்வதற்கு முடியாது என்று ஈவாவிற்குத் தெரியும். ஆரம்பத்திலேயே ஹிட்லருடன் தனது விதியைப் பகிர்ந்துகொள்ள அவர் முடிவுசெய்திருந்தார். மேலும் இவர்களின் முடிவு ரோமியோ, ஜூலியட்டைப் போல இருக்க வேண்டும் என்று ஈவா விரும்பினார். கடைசி நாளில் ரஷ்யர்கள், இவர்கள் இருந்த இடங்களைச் சுற்றி பீரங்கித் தாக்குதல் நடத்தியபோது, தனக்கான நேரம் வந்துவிட்டது என்பதை அறிந்த ஹிட்லர் மிகவும் கவலையாக இருந்தார். எடுத்துக் கொள்வதற்கு மாத்திரையையும், தண்ணீரையும் ஹிட்லர் ஈவாவிடம் கொடுத்தார். பின்பு ஈவாவை மென்மையாக முத்தமிட்டு அணைத்தார். அவர்கள் சயனைடு மாத்திரைகளை எடுத்துக் கொண்ட பின்னர், உடனடியாக தலையில் சுட்டுக்கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டிருந்தனர், ஆனால் ஈவா விஷத்தை மட்டுமே உட்கொண்டார். அவர்களது உடல்களை எரிக்கும்படி ஹிட்லர் தனது கடைசி உத்தரவை பிறப்பித்தார். ஆனால் அவ்வேலையை முழுமையாகச் செய்யப் போதுமான அளவு எரிபொருள் இல்லை" என்று அவர்கள் கூறினர்.

## மீண்டும் ஜீவனுடன் இருப்பதற்கான எதிர்வினை

"ஈவா மீண்டும் ஜீவனுடன் திரும்பி வந்தபோது எப்படி நடந்துகொண்டார்? விசித்திரமான சூழல்களின் மத்தியில் மீண்டும் ஜீவனுடன் இருப்பது என்பது அதிர்ச்சியாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரியும்" என்று லெவ் கூறினான்.

"ஈவா, எப்படி நடந்துகொள்வார் என்று என்னாலும் யூகிக்க முடியாததால், நீங்கள் எனக்குப் பரிந்துரைத்தபடி நான் செய்தேன். அவர் அங்கிருந்த ஜன்னலின் வழியாக எப்படியாவது தப்பி வெளியே போய்விடுவாரோ என்ற பயத்தில், நான் அவருக்கான ஆடைகளை அங்கே வைக்கவில்லை. அவர் அறைக்குள் நடக்கத் தொடங்கிய போது, எனக்கு மெல்லிய சத்தம் கேட்டது. இறுதியாக அவர் ஒரு துண்டைச் சுற்றியவாறு, அவரது அறையின் கதவைத் திறந்தார். அப்போது அவரை வரவேற்று, அவருக்கான ஆடைகளைக் கொடுத்தேன். ஏதோ ஒரு வகையில் நான் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி இல்லை என்பதைக் கண்டு ஈவா மகிழ்ச்சியடைந்தார். இறுதியாக அவர் உடைகளை அணிந்துகொண்டு வெளியே வந்தபோது, மிகவும் பயந்தவாறு பாதுகாப்பற்றவராக இருந்தார். நான் அவருடைய பயத்தைப் போக்க முயற்சித்தேன். தற்போது ஈவா பிரச்சனைக்குரிய இடத்தில் இல்லை என்றும், எல்லா ஆபத்துகளும் முடிந்துவிட்டன என்றும் நான் அவருக்கு உறுதியளித்தேன். அது அவரை அமைதிப்படுத்தியது, ஏனென்றால் தன்னைக் கைதுசெய்து விடுவார்களோ என்று அவர் பயந்திருந்தார் என்று எனக்குத் தெரிந்தது. தற்போது உள்ள அவரது சுற்றுப்புறம் அமைதியாக இருந்தபோதிலும், ஈவா மரித்தபோது இருந்த அதே கொந்தளிப்பின் தன்மையுடன் அவரது மனம் விழித்துக்கொண்டுதான் இருந்தது."

"ஈவா என்னை நம்புவதற்குச் சிறிது நேரம் எடுத்தது. அவர் தப்பித்து விடக்கூடாது என்பதற்காக நான் இங்கு அனுப்பப்பட்ட முகவர் (ஏஜென்ட்) என்று அவர் நம்பினார். பின்னர் கதவுகள் பூட்டப்பட்டிருக்கவில்லை என்பதையும், இது ஒருவித சிறை அல்ல என்பதையும் அவர் விரைவில் கண்டுகொண்டார். கொஞ்சம் கொஞ்சமாக அவர் என்னிடம் நம்பிக்கை வைக்கத் தொடங்கினார். நான் ஒரு யூதன் என்று ஈவா அறிந்த பின்பு, அவருக்காக இந்த வீட்டினைக் கட்டுவதற்கு நான் உதவியிருக்கிறேன் என்பதையும், அவருடைய முந்தைய வாழ்க்கையிலிருந்து, தற்போதைய வாழ்க்கைக்கு மாறுவதற்காக அவருக்கு உதவவே நான் இங்கு வந்திருக்கிறேன் என்பதையும் அவரால் நம்ப முடியவில்லை" என்று ரெபெக்காள் கூறினாள்.

"ஹிட்லர் முதலில் விரும்பிய கெலியைப் பார்க்கச் சென்றுவிட்டாரா?" என்று ரெபெக்காள், அடால்ஃபைப் பற்றி லெவ்விடம் கேட்டாள்.

"ஆமாம் பார்த்துவிட்டார். அவர் யாரை முதலில் பார்க்க விரும்புகிறார் என்பதை அவரே முடிவு செய்யுமாறு நான், ஹிட்லரிடம் கூறினேன். அவருடைய பதில் என்னவாக இருக்கும் என்பதைப் பார்ப்பதற்காகவே, இருவரையும் ஒன்றாகப் பார்க்க விரும்புகிறீர்களா? என்று கேட்டேன். இந்தக் கேள்வி அவரை திடுக்கிட வைத்தது, ஹிட்லர், அவர்கள் இருவரையும் தனித்தனியாகப் பார்க்க விரும்புவதாகவும், முதலில் கெலியைப் பார்க்க விரும்புவதாகவும் உடனடியாக தெளிவாகப் பதிலளித்தார். அவர் கெலியைக் காண்பதற்கு மிகவும் உற்சாகமாக இருந்தார். அவரது உத்தரவின் பேரில் மரித்த மில்லியன் கணக்கான ஜனங்களைப் பற்றிய குற்ற உணர்ச்சி, ஹிட்லருக்கு கொஞ்சம்கூட இல்லை என்று தோன்றியது. ஆனால் கெலியின் மரணம், அவருடைய இதயத்தின் ஆழம்வரை சென்று பாதித்திருப்பதைக் காணமுடிந்தது. கெலி, ஹிட்லரை ஒருபோதும் காதலிக்கவில்லை என்று சொன்னபோது, அவர் மிகுந்த ஏமாற்றமடைந்தார். ஹிட்லர் எத்தனை பேரைக் கொன்றிருந்தார் என்பதை கெலி இப்போது அறிந்துகொண்டபோது, அவர் தற்கொலை செய்துகொண்டு மரித்ததில் மகிழ்ச்சி அடைவதாகவும், அதனால் அந்த பாவங்கள் எதுவும் அவர் மீது விழவில்லை என்றும் கூறினார். கெலியின் வெளிப்படையான வெறுத்து ஒதுக்கும் செயல்களால், ஹிட்லர் கடுமையான வேதனைக்கு உள்ளானார். "நான் எப்போதும் உன்னை நேசித்தேன்" என்று ஹிட்லர், கெலியிடம் சொல்லும்போது கிட்டத்தட்ட அவர் அழுதுவிட்டார்" என்று நடந்தவைகளை லெவ், ரெபெக்காளுக்குக் கூறினான்.

"அவர் மனுக்குலத்தின் மீது கொஞ்சமாவது அன்பைக் காட்டியிருந்தால், அற்புதமாக இருந்திருக்கும். அவர் கொண்டிருந்த பாசம் மிகவும் குறுகியதாகவும், வரையறைக்கு உட்பட்டதாகவும் எப்படி இருந்தது என்பது ஒரு மர்மமாகவே இருக்கின்றது. இது அவருடைய சுயத்தை மட்டுமே திருப்திபடுத்தும் தன்னலமான அன்பு ஆகும், அவருடைய அன்பு அவரை மட்டுமே மையமாகக் கொண்டிருந்தது. ஹிட்லர் மகிழ்ச்சியற்ற குழந்தைப் பருவத்தைக் கொண்டிருந்தார், எனவே அவர் ஒருபோதும் மற்றவர்களிடம் முழுமையான அன்பை காட்டுவதற்குக் கற்றுக்கொள்ளவில்லை. ஜனங்களின் மீது ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதில் அவர் வெறித்தனமாக இருந்தார். ஹிட்லர், சாத்தானுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். மன்னிக்க முடியாத கொடூரத்தைச் செய்ததற்காக, இப்போது அவர் அவமானத்தை அனுபவிக்க வேண்டி இருக்கிறது" என்று லெவ் கூறினான்.

சுமார் ஒரு மணிநேர நடை பயிற்சிக்குப் பின்னர் லெவ்வும், ரெபெக்காளும் வீட்டிற்குத் திரும்பினர். அவர்கள் இருவரும் வீட்டிற்குத் திரும்பியபோது, ஹிட்லரும், ஈவாவும் சந்தோஷமான மனநிலையில் உற்சாகமாக இருப்பதைக் கண்டனர். லெவ் இதுவரையிலும் ஹிட்லரை இதுபோன்றதொரு சந்தோஷமான மனநிலையில் பார்த்ததில்லை. ஈவாவும் மகிழ்ச்சியோடு காணப்பட்டார். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் புத்துயிரூட்டும் மருந்தைப் போல இருந்தனர். ரெபெக்காள் அவர்களை இரவு உணவினை உண்டு விட்டு வீட்டிற்குச் செல்லும்படி கூறினாள். இந்தச் சிறப்பானச் சந்திப்பைக் கொண்டாடும் வகையில் விசேஷமான கேக் ஒன்றைத் தான் செய்திருப்பதாகவும் ரெபெக்காள் சொன்னாள்.

## ஹிட்லர் தனது உயிர்த்தெழுதல் கேக்கை உருவாக்கியது யார் என்பதை அறிந்து-கொள்ளுதல்

"ஓ, நீங்கள்தான் அந்த உயிர்த்தெழுதல் கேக்கைச் செய்தீர்களா?" என்று அடால்ஃப் கேட்டார்.

"நீங்கள் ஜீவனுக்குள் திரும்பி வரும்போது உங்களுக்கு உற்சாகமூட்டுதல் அவசியமாக இருக்கலாம் என்று நான் நினைத்தேன், அதனாலேயே இந்த வழியைத் தேர்ந்தெடுத்து நான் அதற்கு முயற்சித்தேன். உங்களுக்குப் பிடித்திருந்ததா?" என்று ரெபெக்காள் கேட்டாள்.

அதற்கு ஹிட்லர், "ரெபெக்காள், இதுவரையிலும் இவ்வளவு சுவையான கேக்கை நான் சாப்பிட்டதில்லை. உங்களுக்கு மிகவும் நன்றி, இது உங்களது அன்பைக் காட்டுகிறது. இவ்வுலகில்

உள்ள எல்லோருமே என்னை வெறுக்கவில்லை என்பது என் மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.

"அடால்ஃப், நீங்கள் செய்ததையே நாங்கள் அனைவரும் வெறுக்கிறோம், ஆனால் கிறிஸ்து மட்டுமே உங்களை நியாயந்தீர்க்கும் வல்லமை பெற்றவர், ஏனென்றால் அவர் ஒவ்வொருவருடைய இருதயத்தையும் ஆராய்ந்து அறிகிறவர். நீங்கள் செய்த செயல்களை நீங்களும் வெறுக்கக் கற்றுக் கொள்ளும்போது, நீங்கள் மீட்பிற்கான பாதையில் இருப்பதை நாங்கள் அறிவோம். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு உங்களது குற்றங்களை மறுக்கின்றீர்களோ அல்லது போரில் நீங்கள் செய்த குற்றங்களுக்கானப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாத வரையிலும், எந்த விதமானத் தீர்வும் கிடைக்காது. தாவீது ராஜா பாவம்செய்தார் என்பது உங்களுக்குத் தெரியும். அவர் தனது பாவங்களைவிட்டு விட்டு வாழ்வதில் மிகுந்த உண்மை தன்மையைக் காட்டினார். அதனால் தாவீது, தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற ஒரு மனிதரானார்" என்று லெவ் கூறினான்.

"நான் செய்த குற்றத்திற்காக யாரும் என்னை மன்னிக்கமாட்டார்கள், கிறிஸ்துவும் என்னை மன்னிக்க மாட்டார்" என்று ஹிட்லர் சொன்னார்.

"கிறிஸ்து உங்களது இருதயத்தின் தற்போதைய நிலையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கின்றார். நீங்கள் செய்தது தீயச்செயல் என்பது அனைவருக்கும் தெரியும். உங்கள் செயல்கள் எல்லாம் மிகவும் தவறானவை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். பின்னர் கிறிஸ்துவின் இரக்கத்திற்கு, உங்களைத் தாழ்த்தி ஒப்புக்கொடுங்கள். உங்களது தவறுகளை நீங்கள் ஒப்புக்கொள்ளாத வரையிலும் எந்த ஒரு தீர்வும் கிடைக்காது" என்று லெவ் கூறினான்.

அதன் பிறகு சிறிது நேரம் ஹிட்லர் அமைதியாக இருந்தார். அவர்களின் நடைப்பயணம் அவர்களுக்கு எப்படி இருந்தது என்று கேள்வி எழுப்பியதன் மூலமாக, ஈவா வேகமாக பேச்சை மாற்றினார். "எருசலேமைக் காப்பாற்றுவதற்கான போரில் லெவ் மரிப்பதற்கு முன்பே, நாங்கள் ஒருவரையொருவர் ஆழமாக காதலித்தோம். இப்போது அவர் ஜீவனுக்குள் திரும்பிவந்ததும் எங்கள் காதல் மீண்டும் வளர்ந்து வருகின்றது. லெவ் ஓர் உன்னதமான நபர். அவர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறவர். அடால்ஃப், இந்தப் புதிய ஏற்பாட்டிற்கு உங்களை அனுசரித்துப் போகச் செய்வதற்காக, உங்களுக்கு உதவுவதற்கு லெவ்வைத் தவிர வேறு ஒரு நல்ல மனிதர் இருக்க முடியாது" என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

ஹிட்லருக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. ஏதேனும் உள்நோக்கம் இருந்தால் ஒழிய, ஹிட்லருக்கு யாரையும் பாராட்டும் பழக்கம் இருந்ததில்லை. "ஆமாம், ஹிட்லரை லெவ் நியாயமாக நடத்தினதாகவே ஹிட்லர் என்னிடம் கூறினார்" என்று ஈவா, ரெபெக்காளுக்குப் பதிலளித்தார்.

ஹிட்லரிடம் இதுவரை கூறியிருந்த வார்த்தைகளிலேயே, இந்த வார்த்தைதான் கொஞ்சமாவது பாராட்டுதலை வெளிப்படுத்தி இருந்தது. ஹிட்லரிடமிருந்து இது போன்ற வார்த்தைகளை லெவ் இதற்கு முன்பு பெற்றதில்லை. சிறிது நேரத்திற்குப் பின்னர் ரெபெக்காள் அவர்களை இரவு உணவு உண்பதற்காக மேசையினிடத்திற்கு அழைத்தாள். அவர்கள் சாப்பிடும் முன் லெவ் நன்றியறிதலான ஜெபத்தை ஏறெடுத்தான், ஹிட்லர் பிரார்த்தனையின் போது அமைதியாக இருந்தார். ஆமென் என்று கூறும்போது ஈவா இணைந்துகொண்டார். "ஈவா, நீங்கள் ரெபெக்காளுடன் சேர்ந்துதான் தேவாலயத்திற்குச் செல்கின்றீர்களா?" என்று லெவ் அவரிடம் கேட்டான்.

## ஈவா வழிபாட்டு ஆராதனையில் கலந்துகொள்ளுதல்

"ஆமாம் லெவ், வழிபாட்டு ஆராதனையை நான் மகிழ்ச்சியுடன் அனுபவித்ததை கண்டிப்பாக உங்களிடம் சொல்ல வேண்டும்" என்று லெவ் ஆச்சரியப்படும் விதத்தில் ஈவா பதிலளித்தார். "என்னுடைய வாழ்நாள் முழுவதிலும் நான் தேவனுடைய திட்டத்தைப் பற்றி கற்றுக்கொண்டதை விட, இப்போது நான் அதிகமாகக் கற்றுக்கொண்டிருக்கிறேன். நான் வேதாகமத்தைப் பற்றி எப்படி இவ்வளவு அறியாமையில் இருந்திருந்தேன் என்று எனக்குத் தெரியவில்லை. வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளவைகள் எப்படி நிறைவேறி உள்ளன என்பதைப் புரிந்துகொள்வதற்கு போதகர் உதவிசெய்கிறார். அவர் சொல்வதெல்லாம் மிகவும் எளிமையானதாகவும் மற்றும்

நியாயமானதாகவும் உள்ளது. அங்குள்ள ஜனங்கள் மிகவும் நல்லவர்களாக இருக்கிறார்கள். நிச்சயமாக, நான் இன்னும் எனது உண்மையான பெயரைக்கூட அவர்களிடம் சொல்லவில்லை. ஒருவேளை அவர்களுக்குத் தெரிந்ததும் என்னை ஒதுக்கிவிடுவார்கள்" என்று ஈவா கூறினார்.

"அதனைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். ரெபெக்காளுக்கும், எனக்கும் மட்டுமே நீங்கள் இருவரும் யார் என்று தெரியும். நாங்கள் இருவரும் உங்களை எந்த விதத்திலாவது புண்படுத்தியிருக்கிறோமா அல்லது உங்களிடம் இரக்கமற்றவர்களாக நடந்து கொண்டு இருக்கிறோமா?" என்று லெவ் கேட்டான்.

"இல்லை" என்று ஈவா பதிலளித்தார். "ஒரு யூதனாக நீங்கள் எங்களை வெறுப்பதற்கு எல்லாக் காரணங்களும் இருந்தன. ஆயினும்கூட, யூத தேசமே எங்களுக்கு ஒரு தன்னிறைவான வீட்டையும், இப்போது எங்களிடம் உள்ள அனைத்தையும், கிறிஸ்துவிடமிருந்து வரும் ஜீவனையும் கூட எங்களுக்கு வழங்கியிருக்கிறது. எங்களது தகுதியை விட சிறப்பாகவே நாங்கள் நடத்தப்பட்டுள்ளோம்" என்றார்.

இந்த உரையாடலின்போது அடால்ஃப் உறைந்துபோனார். எதையும் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவதற்கு அவர் தயாராக இல்லை. வேறு எதனைப் பற்றியாவது உரையாடல் மாறும் என்று நம்பினார்.

அவர்களது இரவு உணவிற்கு வழக்கமாக உண்ணும் ருசியான பழங்களுடன், ஹிட்லருக்குப் பிடிக்கும் என்று ரெபெக்காளுக்குத் தெரிந்திருந்த சில காய்கறிகளையும் உணவில் சேர்த்திருந்தாள். பின்பு ரெபெக்காள் தான் தயாரித்த கேக்கினைக் கொண்டு வந்தாள். ஹிட்லர் மகிழ்ச்சியுடன் புன்னகைத்தார். முன்பு ஹிட்லருக்குச் செரிமானம் சம்பந்தமான வயிற்றுப் பிரச்சனை இருந்தது. இப்பொழுதெல்லாம் அவர் உட்கொள்ளும் அனைத்து உணவுகளும் அவருக்கு எந்தவிதமான வலியையோ அல்லது அசௌகரியத்தையோ, வேறு எந்தத் தொந்தரவையோ ஏற்படுத்தாத நிறைவான உணவாக இருந்தது. ரெபெக்காள், ஹிட்லருக்கு ஒரு பெரிய துண்டு கேக்கினைப் பரிமாறினாள். அவர் புன்னகையுடன் "நன்றி, இந்த கேக் மிகவும் சுவையாக இருக்கிறது; இதைவிடச் சுவையானதொன்றை நான் என் வாழ்நாளில் சுவைத்ததில்லை" என்று கூறினார்.

ஈவாவும் சேர்ந்து "ஆமாம், ரெபெக்காள், இதனை எப்படிச் செய்வது என்று நீங்கள் எனக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். ஒருவேளை நானும் விரைவில் அடால்ஃப்புக்காக இதனைப் போன்றதொரு கேக்கைச் செய்யலாம்" என்றாள்.

"உங்களுடைய இராணுவத்தின் உயர் அதிகாரிகள் ஒருவரைப் பற்றியும் கூட நீங்கள் இதுவரை விசாரிக்கவில்லை. போருக்குப் பிறகு அவர்கள் எப்படி சமாளித்தார்கள் என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா?" என்று லெவ், அடால்ஃப்பிடம் கேட்டான்.

ஐச்மேனுக்கு என்ன நேர்ந்தது?

"நான் ஏன் அவர்களைப் பற்றி விசாரிக்க வேண்டும்?" என்று அவர் பதிலளித்தார். "அவர்கள் என்னை விரும்பியதால் எனக்குச் சேவகம் செய்யவில்லை. எனக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்க வேண்டும் என்று அவர்களில் யாரேனும் நினைத்திருந்தால், அவர்கள் அதை ஒரு நொடியில் செய்திருந்திருப்பார்கள். அவர்கள் நன்றாகப் பணியாற்றியதற்கான ஒரே காரணம் என்னவென்றால், நான் அவர்களுக்குக் கொடுத்திருந்த அதிகாரத்தை அவர்கள் விரும்பியதாலும், என்னைப் பார்த்துப் பயந்ததாலும்தான். அடியோடு அழிக்கும் தனது வேலையை ஐச்மேன் அனுபவித்துச் செய்தார். அவர் அன்பற்றவராகவும், இரக்கமற்றவராகவும் இருந்தார். மேலும் ஜனங்களின் மீதான மரணம் மற்றும் ஜீவனுக்கான அதிகாரத்தைத் தான் பெற்றிருப்பதை அவர் விரும்பினார். யூதர்களை அடியோடு அழிப்பதை நம்பமுடியாத அளவு ஆர்வத்துடன் மேற்கொண்டார். அத்தகைய வேலையில் ஈடுபட்டிருந்த மற்றவர்கள் வேண்டுமானால் இடையில் சற்று நிறுத்தியிருக்கலாம் அல்லது மயங்கியிருக்கலாம். ஆனால் ஐச்மேன் அப்படிச் செய்யவில்லை என்று அவரைப் பற்றிக் கூறிவிட்டு, அவருக்கு என்ன ஆனது?" என்று கடைசியாக ஹிட்லர் கேட்டார்.

"சர்ச் ராட்லைன்கள் (நாசிக்கள் போர்க் குற்றவாளிகள் தப்பிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிலத்தடி இரயில் பாதை) மூலம் அவரால் தென் அமெரிக்காவிற்கு தப்பிக்க முடிந்தது. அங்கு அவர் பல ஆண்டுகள் சமாதானத்துடன் வாழ்ந்தார். இருப்பினும், யூதர்கள் அவர் இருக்கும் இடத்தை அறிந்து, அவரைக் கடத்தி இஸ்ரயேலுக்குக் கொண்டு வந்தனர். அங்கு மனுக்குலத்திற்கு எதிராக, அவர் செய்த குற்றங்களுக்காக விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். "நான் சிரித்துக்கொண்டே எனது கல்லறைக்குச் செல்வேன்" என்று அவர் ஒருமுறை சொன்னார். ஆனால் அவர்கள் அவரை தூக்கிலிடும்போது அவரால் சிரிக்க முடியவில்லை" என்று லெவ் விளக்கினான்.

லெவ்வினுடைய இந்தப் பதில் தனது படைத்தலைவர்களைப் (ஜெனரல்கள்) பற்றிய அடால்ஃப்பின் விசாரணையை முடிவிற்குக் கொண்டு வந்தது. ஐச்மேன் எவ்வாறு கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார் என்பதை அறிந்துகொள்வதற்கு ஹிட்லருக்குச் சங்கடமாக இருந்தது. இலட்சக்கணக்கான ஜனங்களின் மரணத்திற்குக் காரணமான கருணையில்லாத ஒருவன், எப்படி ஒரு தனிமனிதனின் மரணத்தினால் பாதிப்பிற்கு உள்ளாக முடியும்?

இரவு உணவிற்குப் பிறகும் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தனர். ஈவா மற்றும் ஹிட்லர் இருவருமே, லெவ் மற்றும் ரெபெக்காளுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி அடைவது போலத் தோன்றியது. யூதர்களுக்கு எதிரான அவர்களது தப்பெண்ணங்கள் அனைத்தும் கணப்பொழுதில் மறந்துவிட்டன. இறுதியாக புறப்பட வேண்டிய நேரம் வந்தபோது, அவர்கள் இருவரும் மீண்டும் ஒன்றாக இருப்பதற்கான இந்தச் சந்திப்பை சாத்தியப்படுத்திக் கொடுத்ததற்காக லெவ்விற்கும், ரெபெக்காளுக்கும் தங்களது நன்றியைத் தெரிவித்தனர். ஹிட்லர், ஈவாவின் தொலைபேசி எண்ணைக் குறித்துக்கொண்டு, இனி அவருடன் தொடர்பில் இருப்பதாக உறுதியளித்தார். அவர்கள் விடைபெறும்போது லெவ், ரெபெக்காளை முத்தமிட்டான். அதுபோலவே ஹிட்லரும், ஈவாவை மிகவும் மென்மையாக முத்தமிட்டார்.

இன்றைய தினத்தில் ஹிட்லர் மகிழ்ச்சியாக இருந்ததைப் போல இதற்கு முன்பு அவர் மகிழ்ச்சியாக இருந்ததை லெவ் கண்டதில்லை. ஆனால் இந்தப் புதிய வாழ்க்கைக்குப் பழகி, எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து, உண்மையான மகிழ்ச்சியை ஹிட்லர் அனுபவிக்கத் தொடங்கி இருக்கிறார். எவ்வளவு விரைவாக அவரை ஜனங்கள் அடையாளம் கண்டுகொள்கின்றார்களோ, அவ்வளவு விரைவாக ஒரு கொலைகாரக் கும்பல் அவரது வீட்டைச் சூழ்ந்துவிடும் என்று எண்ணி லெவ் கவலைப்பட்டான். சரீரப் பிரகாரமாக அவரை யாரும் தாக்கமுடியாது என்பதை இதுவரையிலும் லெவ், ஹிட்லருக்குச் சொல்லவில்லை. வன்முறையில் ஈடுபடும் எந்தவொரு செயலைச் செய்யும் யாரையும், உடனடியாக தண்டிப்பதற்கு ஆவிக்குரிய வல்லமைகள் இப்போது பணியமர்த்தப்பட்டுள்ளன என்பதை லெவ், ஹிட்லரிடம் கூறுவதற்கு முடிவுசெய்தார். "அடால்ஃப் இங்கு உங்களின் வாழ்க்கை ஆவிக்குரிய வல்லமைகளால் பாதுகாக்கப்படுகின்றது என்று கண்டிப்பாக உங்களிடம் நான் சொல்லவேண்டும். வன்முறையான எந்த ஒரு செயலைச் செய்தாலும், அது யாருக்கு எதிராக இருந்தாலும் பரவாயில்லை, ஆவிக்குரிய வல்லமைகள் உடனடியாகத் தலையிட்டு வன்முறையில் ஈடுபடுகிறவர்களைத் தண்டிப்பார்கள்" என்று லெவ் கூறினான்.

எனக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்று நீங்கள் ஏன் என்னிடம் சொல்லவில்லை?

"என்னிடம் இதனைச் சொல்வதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் செய்தீர்கள்? என்னை அடையாளம் கண்டுகொண்டால் வன்முறைக் கும்பல் எனது வீட்டையோ அல்லது காரையோ சூழ்ந்துகொள்ளுமோ என்று நான் எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா? வன்முறைக் கும்பல் என்னை அடையாளம் கண்டுகொண்டு, என்னைத் தாக்க ஆரம்பித்தால் என்ன நடக்கும் என்பதை நினைத்து நான் பயந்திருந்தேன்" என்று ஹிட்லர் கூறினார்.

"நீங்கள் வெளியில் சுற்றும்போது, உங்களை யாரேனும் அடையாளம் கண்டுகொள்வதை நான் விரும்பவில்லை. உங்களை யாரேனும் அடையாளம் கண்டுகொள்ளப்படுவதற்கு முன்பு, குறைந்தபட்சம் சில வாரங்களாவது இந்தப் பகுதியில் உங்களால் எவ்விதமான பிரச்சனையும் ஏற்படவில்லை என்றால், அது இங்கு வசிப்பவர்களின் ஆற்றாமையை அமைதிப்படுத்துவதாய் இருக்கும். நீங்கள் இங்கு இருப்பது, இந்தச் சமூகத்தினுடைய நலனுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று அவர்கள் உணரமாட்டார்கள். நீங்கள், வெளியில் காணும் ஜனங்களிடம் தவறாகப் பேசத்

தொடங்கினால், நீங்கள் பேசமுடியாமல் போகலாம். மேலும் அவர்கள் உங்களை அடையாளம் காணவும் முற்படலாம். அப்படி ஒரு நிலை வரும்போது முற்பிதாக்கள், உங்களின் உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்தும் பொறுப்பினை ஏற்று இருக்கின்றார்கள். பொதுவாக அவர்கள் ஜீவனுக்குத் திரும்பியவர்களின் பட்டியலை வெளியிடுவார்கள், ஆனால் உங்களின் விஷயத்தில் அப்படி வெளியிடுவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தி இருக்கிறார்கள், ஏனெனில் நீங்கள் நன்முறையில் நடந்துகொள்வதை இந்தச் சமூகம் பார்க்க வேண்டும் என்பதற்காகவே தாமதப்படுத்தி இருக்கிறார்கள். நீங்கள் மனந்திரும்புவதற்கும், சீர்பொருந்துவதற்கும் தேவையான முழுமையான மற்றும் நியாயமான வாய்ப்புகளை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு முற்பிதாக்கள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டுள்ளனர்'' என்று லெவ் கூறினான்.

''இன்று நாம் ஈவாவின் வீட்டிற்குச் சென்றபோது, ஒருவர் உங்களைக் கவனித்தார். ஈவாவையும் சிலர் சந்தேகிக்கிறார்கள் என்று ரெபெக்காள் பயப்படுகிறாள், ஆனால் ரெபெக்காளின் மீதான மரியாதையின் நிமித்தமாக, அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு அவளை வற்புறுத்தவில்லை. விரைவிலோ அல்லது சற்று தாமதமாகவோ உங்களின் முகத்திரை அகற்றப்படும், அப்போது உங்களின் வீட்டிற்கு வெளியேவோ அல்லது எனது காருக்கு முன்பாகவோ கோபமான ஜனக்கூட்டம் நிற்கும். அவர்களால் உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்யமுடியாது என்பதை நான் முன்கூட்டியே உங்களுக்குச் சொல்லவேண்டும். சிலர் அவ்வாறு தாக்குவதற்கு முயன்றால், அவர்களின் கையோ அல்லது காலோ அந்த இடத்திலேயே செயலிழந்து தண்டிக்கப்படுவார்கள். இவ்வாறு நடக்கும்போது நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். ஜனக் கூட்டத்தைச் சமாளிப்பதற்கு என்னை விட்டுவிடுங்கள். என்னை இங்குள்ளவர்கள் நன்கு மதிக்கின்றார்கள். எனக்கு இருக்கும் மரியாதையின் நிமித்தம், அவர்கள் நான் கூறுவதைக் கேட்பார்கள் என்று நான் நம்புகிறேன். இருப்பினும், சரீரப் பிரகாரமான வன்முறை குறித்து நீங்கள் பயப்பட தேவை இல்லை. ஒருவேளை சிலர் உங்களைத் தாக்குவதற்கு முயற்சிப்பார்கள், ஆனால் ஆவிக்குரிய வல்லமைகள் அவற்றிலிருந்து உங்களைப் பாதுகாப்பார்கள்'' என்று லெவ் தொடர்ந்தான்.

தன் சார்பில் இருந்து ஆவிக்குரிய வல்லமைகள் தலையிட்டுத் தன்னைப் பாதுகாக்கும் என்று லெவ் கூறியதை ஹிட்லர் சந்தேகித்தார். ஆனாலும் லெவ் உறுதியாகக் கூறியதால் அவர் நிம்மதியடைந்ததாகத் தோன்றியது. வெளியில் உள்ள ஜனங்கள் தன்னைக் கண்டு பிடிக்க முடியாதபடி மிகவும் கவனமாக நடந்து கொள்வதுதான் நல்ல வழி என்று ஹிட்லர் எண்ணினார். இருப்பினும் அவர் செய்த செயல்களுக்கு அவர் பொறுப்பேற்க வேண்டியிருந்தது. உலகத்தின் மீது அவர் கொண்டு வந்த அனைத்துத் தீமைகளிலும், அவர் பிசாசினால் வழிநடத்தப்பட்டதை உலகிற்கு முன்னால் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது. இவைகளுக்குப் பின்னால் ''ஆகாயத்தின் அதிகார பிரபு'' இல்லையென்றால் அது எப்படி இவ்வளவு வெற்றிகரமாக நடந்திருக்க முடியும்? எப்படியிருந்தாலும், அவர் செய்துள்ள எந்தவிதமானக் குற்றத்தையும் ஒப்புக் கொள்வதற்கு தற்போது அவர் விரும்பவில்லை. ஆவிக்குரிய வல்லமைகளால் அவர் பாதுகாக்கப்படுகிறார் என்பதை அறிந்த பின்பு அவர், அவரைக் குறித்து மிகுந்த மனநிம்மதி அடைந்தார். நிச்சயமாகவே, கோபமானக் கூட்டத்தினரை நேருக்குநேராக எதிர்கொள்வதான இந்தத் திட்டம் ஹிட்லருக்குப் பிடிக்கவில்லை. கெஸ்டபோ என்று அழைக்கப்பட்ட நாசிக் கட்சியின் இரகசியப் போலீஸார், ஜனங்கள் தன்னை நெருங்காதவாறு கவனித்துக்கொள்வதை எப்போதும் ஹிட்லர் வழக்கமாக வைத்திருந்தார், ஆனால் இனிமேல் அத்தகையதொரு பாதுகாப்பு இருக்கப்போவதில்லை என்பதை அறிந்து, தன்னைப் பாதுகாப்பதற்காக இருப்பார்கள் என்று அவர் நம்பிய ஆவிக்குரிய வல்லமைகளுக்கு நன்றியுள்ளவராக இருந்தார்.

பிறரைக் குறித்து கீழான எண்ணங்களைக் கொண்டிருந்த அவரது சிந்தையைப் பற்றி எண்ணாமல், தன்னை யாரும் எதுவும் செய்துவிடக் கூடாது என்று தன்னைக் குறித்து மட்டுமே கவலை கொண்டிருந்த ஹிட்லரின் சிந்தையால் லெவ் ஏமாற்றமடைந்தான். அவர் இன்னும் அவரது இதயத்தில் வெறுப்பு பற்றின தனது சொந்தக் கொள்கைகளையே வைத்துக் கொண்டிருந்தார். மேலும் ஹிட்லரின் நாசியப் பேரரசு பற்றிய அவரது கனவுகளின் மேல் இன்னும் அக்கறை கொண்டு இருந்தார். அன்றைய தினத்தில் லெவ் வீட்டிற்கு வந்தபோது, அவர் தனது நாட்குறிப்பேட்டில் எழுதிக் கொண்டிருந்தார். அதில், ஈவாவுடன் இணைந்ததால் உண்டான மகிழ்ச்சியையும், ஆவிக்குரிய வல்லமைகளால் கொடுக்கப்படும் பாதுகாப்பைக் குறித்து ஹிட்லருக்கு இருந்த தீவிர ஆர்வத்தைப் பற்றியும் எழுதினார்.

மறுநாள் காலை லெவ் வழக்கமான நேரத்தில் எழுந்து, ஒவ்வொரு நாளும் வழக்கமாகத் தான் செய்யும் வேலைகளைச் செய்த பின்னர், பழங்கள் மற்றும் சில காய்கறிகளைச் சேகரித்தான். லெவ் பழரசத்தைப் பிழியும் போது, ஹிட்லர் வெளியே வந்து தனது காலை உணவை உண்ணத் துவங்கினார். லெவ் அவருக்கு வழக்கமான வாழ்த்தைத் தெரிவித்தான், லெவ் ஆச்சரியப்படும் விதமாக ஹிட்லரும் லெவ்விற்கு வாழ்த்தைக் கூறினார். வழிபாட்டிற்குச் செல்வதற்காகப் புறப்பட்டபோது, பலர் கூட்டமாகச் சேர்ந்து தனது வீட்டு வாசலை நோக்கி வருவதை லெவ் கவனித்தான்.

## கோபமான கூட்டம் ஹிட்லரைத் தேடியது

"தயவுசெய்து அமைதியாக இருங்கள், அடால்ஃப் இங்கிருக்கும் ஜனங்கள் கோபமாக இருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு விரோதமாக எது ஒன்றையும் செய்யாதீர்கள். ஒருவேளை என்னால் அவர்களை அமைதிப்படுத்த முடியும்" என்று லெவ் கூறினான்.

வெளியில் கேட்டக் கூச்சலினால் ஹிட்லரின் முகம் வெளிறியதை லெவ் கண்டான். லெவ் கதவைத் திறந்தான். ஆக்ரோஷமான ஜனங்கள், அரக்கனான அடால்ஃப் ஹிட்லருக்கு லெவ்தான் அடைக்கலம் கொடுத்திருக்கின்றாரா என்பதைக் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக லெவ்வை நோக்கி கேள்வி எழுப்பினார்கள்.

லெவ், அவர்களிடம் அமைதியாகப் பேசினான். "இந்த மனிதனுக்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்குவதற்காக நான் கிறிஸ்துவால், முற்பிதாக்களின் மூலம் நியமிக்கப்பட்டுள்ளேன். ஆமாம், இவர் அடால்ஃப் ஹிட்லர்தான். நான் இந்த வேலையைத் தேர்ந்தெடுக்கவில்லை, ஆனால் முற்பிதாவாகிய யோவான் ஸ்நானகன் அவர்கள் இந்த வேலைக்கான பொறுப்பை எடுத்துக்கொள்ளும்படிக் கேட்டபோது, என்னால் மறுக்க முடியவில்லை. உங்களது உணர்வுகளை நான் அறிவேன், இப்படிப்பட்ட ஒரு மனிதனை உங்களுக்கு அருகில் வைத்திருப்பதற்காக, நீங்கள் கொண்டிருக்கும் கோபம் நியாயமானதுதான். எந்தப் பகுதியில் வசிப்பவர்களாய் இருந்தாலும் யாருமே ஹிட்லரை வரவேற்று ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. முற்பிதாக்கள், இப்பகுதியில் உள்ளவர்கள் அவர்களது முடிவிற்கு மரியாதை கொடுப்பார்கள் என்று எண்ணினர். அதனாலேயே அவர்கள் ஹிட்லர் மீண்டும் ஜீவனுக்குத் திரும்பி வருவதற்கு இந்த இடம்தான் சிறந்தது என்று நினைத்தனர். மனந்திரும்புவதற்கும், சீர்திருந்துவதற்கும் ஹிட்லருக்குச் சாதகமான வாய்ப்புகள் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று முற்பிதாக்கள் கருதினர். ஹிட்லர் இந்த ஏற்பாட்டிற்குக் கீழ்ப்படிந்தால், கிறிஸ்து அவரது பாவங்களை மன்னிப்பார், இல்லையென்றால் அவர் இந்த நூற்றாண்டுக்குள் அழிக்கப்படுவார். தயவுசெய்து நீதியை உங்கள் கையில் எடுத்துக் கொள்ளாதீர்கள். கிறிஸ்துவே நீதியுள்ள நியாயாதிபதி, அடால்ஃப் ஹிட்லர் நல்லவராக மாறுவார் அல்லது தவறும் பட்சத்தில் அவர் அழிக்கப்படுவார் என்பதில் நீங்கள் உறுதியாக இருக்கலாம். அவருடைய சொந்த குணலட்சணங்களே அவரது முடிவினைத் தீர்மானிக்கும்" என்று லெவ் பதிலளித்தான்.

ஜனக்கூட்டத்தில் இருந்த ஒருவர் "எங்களுக்கு அந்த ஆள் இங்கே இருக்க வேண்டாம். அவர் மனிதகுலத்திற்கே அவமானம். முற்பிதாக்களுக்கு வேண்டுமானால், அவர்கள் அவரை வைத்துக் கொள்ளட்டும். இந்தப் பூமியின் குப்பையாக இருந்த ஹிட்லர் எங்களுக்கு இங்கே வேண்டாம்" என்றார்.

ஜனங்கள் மிகப்பெரிய கூச்சலை எழுப்பினார்கள். லெவ், அவர்களிடம் பேசுவதற்கு முயன்றார், ஆனால் அவர்களின் கவனத்தை ஈர்க்க முயற்சிப்பது பயனற்றதாக இருந்தது. இரண்டு பேர் லெவ்வை நோக்கி வந்து, அவரைத் தள்ளிவிட்டு வீட்டிற்குள்ளே ஓடினார்கள். லெவ் எந்த எதிர்ப்பையும் காண்பிக்கவில்லை, மேலும் இந்த விஷயத்தை ஆவிக்குரிய வல்லமைகள் கவனித்துக் கொள்ளும் என்று முடிவு செய்து விட்டுவிட்டான். மேஜையில் அமர்ந்திருந்த ஹிட்லர் தனது படுக்கையறையை நோக்கிச் செல்வதற்கு முயன்றார். ஆனால் அப்படி செய்வதற்கு அவர் சற்று தாமதப்படுத்தியதால், அவ்விருவரில் ஒருவர் ஹிட்லரைப் பிடித்துக்கொண்டார், மற்றவர் அவரைத் தாக்குவதற்கு முயற்சி செய்தார். உடனேயே தாக்க முயன்றவரின் வலது கை செயலிழந்துவிட்டது. ஹிட்லரைப் பிடித்திருந்த மற்றொருவர், அவரை வேகமாக உதைத்துத் தாக்குவதற்கு முயன்றார், உடனடியாக அவரது காலும் செயலிழந்துவிட்டது. வெளியே நின்ற மற்றவர்கள் உள்ளே

வந்துவிட்டார்கள், அவர்கள் இருவரும் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டதும், ஜனங்கள் சற்று நேரம் திகைத்து நின்றனர்.

லெவ்வால் அவர்களின் கவனத்தைத் தன்னிடம் ஈர்க்க முடிந்தது.

"நான் சொல்வதைக் கேளுங்கள். இந்தத் தாக்குதலை நீங்கள் தொடர்ந்தால், அனைவருமே பக்கவாதத்தால் பாதிப்படைவீர்கள். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் யாரொருவரும் மற்றவர்களைக் காயப்படுத்தவோ, அழிக்கவோ முடியாது. இன்றைக்கு நீங்கள் செய்ததை நானும் முன்பு செய்துள்ளேன், அப்போது எனது கையும் பக்கவாதத்தால் செயலிழந்தது, எனவே முடங்கிப்போவது என்றால் என்னவென்று எனக்கும் தெரியும். இந்த விஷயத்தைக் குறித்து நீங்கள் உண்மையாகவே கவலைப்படுகிறீர்கள் என்றால், இதோ எனது தொலைபேசி இங்கே உள்ளது. நான் முற்பிதாக்களின் அலுவலகத்தைத் தொடர்பு கொள்கின்றேன். உங்களின் சார்பாகப் பேசுவதற்கு செய்தித் தொடர்பாளராக ஒருவரை நீங்களே தேர்வு செய்யுங்கள். முற்பிதாக்கள் நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள், ஆனால் நீங்களும் அவர்கள் சொல்வதைக் கண்டிப்பாகக் கேட்கவேண்டும். முற்பிதாக்கள் பரிபூரணமானவர்கள், உங்களைவிட மிகவும் புத்திசாலிகள், இன்னும் சில நிமிடங்களில் நீங்கள் அவர்களிடம் பேசுவீர்கள். நினைவில் கொள்ளுங்கள், அவர்கள் முதலாளிகள் அல்ல, அவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள். மிகவும் கவனமாக இருங்கள், முற்பிதாக்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்பதை அறிந்து மிகவும் பயபக்தியுடன் இருங்கள்" என்று லெவ் அவர்களை வழிநடத்தினான்.

ஜனக்கூட்டம் அமைதியானது. யாரோ ஒருவர் "ஃபிரெட்ரிக் மிட்லர் எங்களின் செய்தித் தொடர்பாளராக இருக்கட்டும்" என்றார்.

## முற்பிதாக்களைத் தொடர்புகொள்ளுதல்

"நல்லது" என்று லெவ் கூறினான். "ஃபிரெட்ரிக் தயவுசெய்து இந்தத் தொலைபேசியின் அருகே வாருங்கள். இது ஒரு ஸ்பீக்கர் போன், அதனால் முற்பிதாக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை நீங்கள் அனைவருமே கேட்கலாம். தயவுசெய்து மற்றவர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள். முற்பிதாக்கள், கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதால், எந்த முட்டாள்தனத்தையும் அவர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். உங்களது காரியங்களைத் தெரிவிப்பதில் மிகவும் வெளிப்படையாக இருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவுக்கான கனத்தைக் கொடுங்கள் அல்லது நீங்கள் அனைவரும் பக்கவாதத்தால் முடங்கிப்போகலாம்" என்று லெவ் அறிவுறுத்தினான்.

இம்மாதிரியான சந்தர்ப்பச் சூழ்நிலைகள் ஏற்படும்போது தன்னை அழைக்கும்படி, முற்பிதா யோவான்ஸ்நானன் அவர்கள் லெவ்விற்குக் கொடுத்த தனிப்பட்ட எண்ணை அவன் தொடர்புகொண்டான். அவர் தொலைபேசியில் பதிலளித்தபோது, "நான் லெவ் பேசுகின்றேன். ஹிட்லர், தங்கள் மத்தியில் இருப்பதைக் கண்டு, கவலை கொண்டுள்ள ஆக்ரோஷமான ஜனங்கள் கூட்டமாக இங்கு வந்துள்ளார்கள். ஃப்ரெட்ரிக் இந்த ஜனங்களின் செய்தித் தொடர்பாளராக இருக்க ஒப்புக்கொண்டுள்ளார். தயவுகூர்ந்து நீங்கள் அவருடன் பேசுகிறீர்களா?" என்று லெவ் கேட்டான்.

"சரி, பேசுகின்றேன்" என்ற முற்பிதா யோவான் ஸ்நானனின் குரலை அவர்கள் அனைவரும் கேட்டனர்.

லெவ் தொலைபேசியை ஃப்ரெட்ரிக்கிடம் கொடுத்தான். அவரது கோபம் அவரை விட்டு விலகியிருந்ததை லெவ்வால் காணமுடிந்தது. ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களிலேயே பெரியவரான முற்பிதாவாகிய யோவான்ஸ்நானனுடன் பேச இருப்பதால், ஃபிரெட்ரிக் மிட்லர் இப்போது நடுங்கினார். "கனம் பொருந்தியவரே, இப்போது ஹிட்லர் எங்கள் மத்தியில் இருக்கின்றார் என்பதை அறிந்துகொண்டோம். அதனால் நாங்கள் அனைவரும் கோபத்துடன் ஒன்றுசேர்ந்து இங்கு வந்திருக்கிறோம். நீங்கள், எங்களுக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளீர்கள். லெவ் ஆரோன் எங்களை நன்றாக கவனித்துக்கொள்கிறார், அவர் ஒரு நல்ல மனிதர் என்பது எங்களுக்குத் தெரியும். நாங்கள், ஹிட்லரை மனுக்குலத்திற்கே அவமானமாகக் கருதுகிறோம், அதனால் அவரை இங்கிருந்து அகற்றவேண்டும் என்று உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம். நாங்கள் உங்களை எதிர்த்துக் குரல் கொடுத்ததற்காக வருந்துகிறோம்.

ஆனால் இந்த ஹிட்லரின் கைகளால் அநியாயமாகவும், மிகவும் கொடூரமாகவும் பாதிக்கப்பட்டவர்கள் எங்களது மத்தியில் உள்ளனர். அவரை சைபீரியாவிற்கோ அல்லது யாருமே வசிக்காததொரு இடத்திற்கோ அனுப்புவதுதான் நல்லதாக இருக்கும் அல்லவா? இந்த மனிதன் ஒரு அரக்கன், இப்படிப்பட்ட விரும்பத்தகாத நபர் எங்களது பகுதியில் இருப்பதைக் குறித்து நாங்கள் வாதிடுவதை நியாயமாகத்தான் உணர்கின்றோம்'' என்று ஃபிரெட்ரிக் கூறினார்.

முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் மிகவும் அன்புடன் அவர்களது கருத்துக்களைக் கேட்டார். இறுதியாக அவர், ''ஃபிரெட்ரிக் மற்றும் இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும், எண்ணற்ற மில்லியன் கணக்கான ஜனங்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள், துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இத்தகையச் செயல்களால் நீங்கள் அனைவரும் நியாயமான கோபத்தை உணருகிறீர்கள். ஹிட்லரால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரைக்கூட கிறிஸ்து மறந்துவிடவில்லை என்றும், அவர்கள் ஒவ்வொருவரையும் இந்த அற்புதமான உலகத்தில் மகிழ்ச்சியாக வாழும்படியாக, அவர்களைத் திரும்பவும் ஜீவனுக்குக் கொண்டுவருவார் என்பதும் உங்களுக்குத் தெரியாதா? ஹிட்லர் மற்றவர்களை நடத்தியதுபோல கிறிஸ்து, அவரை நடத்தமாட்டார். எல்லா நீதியையும் நிறைவேற்றும் வகையில்தான் ஹிட்லர் நடத்தப்பட வேண்டும். சவுல் என்ற ஒரு மனிதன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, ஆண்களையும், பெண்களையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தான். பின்னர் அவர் கிறிஸ்தவராக மாறினார். பின்னர் அவரது பெயர் பவுல் என்று மாற்றப்பட்டது. பரிசுத்தவான்களைத் துன்புறுத்தியதற்காக அவரது வாழ்நாள் முழுவதும் அவர் தொடர்ச்சியான துக்கத்தை அனுபவித்தார். ஹிட்லர் வாழ்ந்தால், அவரால் மரணமடைந்த மில்லியன் கணக்கான ஜனங்களை அவர் எதிர்கொள்ள நேரிடும். அவர் மனந்திரும்பி, மனமாற்றம் அடைந்தாலும் அவருக்கு மலைப்பூட்டும் விதத்தில் பாரமான குற்ற உணர்வு இருக்கும். தயவுசெய்து ஹிட்லருக்கான தண்டனையைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். கிறிஸ்து நீதியுள்ள நியாயாதிபதியாய் இருக்கின்றார். தீர்ப்பை உங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு பாவம் செய்யாதீர்கள். உங்களுக்கு வேறு ஏதாவது கருத்து உள்ளதா, ஃப்ரெட்ரிக்?'' என்று முற்பிதா யோவான்ஸ்நானன் கேட்டார்.

ஃப்ரெட்ரிக் கடுமையான கண்டிப்பைப் பெற்றுக்கொண்டார். மேலும் அங்கிருந்த ஜனங்கள் மிகவும் அமைதலாய் நின்றுகொண்டிருந்தனர். அங்கு நின்றுகொண்டிருந்த ஹிட்லர்கூட, உண்மையாகவே மகத்தான மனிதரான முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஹிட்லரின் முகம் வெளிறி, அவரின் உடல் நடுங்கியது. ''நன்றி, கனம்பொருந்தியவரே. எங்களது மன்னிப்பை ஏற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் இராஜாவை வணங்குகிறோம்'' என்று ஃப்ரெட்ரிக் பதில் அளித்தார்.

தொலைபேசியின் இணைப்பைத் துண்டிக்க வேண்டாம் என்றும், தான் முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் அவர்களிடம் மேலும் பேச விரும்புவதாகவும் லெவ் கூறினான். ''நான் லெவ் பேசுகிறேன். இங்குள்ளவர்களில் ஒருவர் கை செயலிழந்தும், மற்றொருவர் கால் செயலிழந்தும் உள்ளனர். நீங்கள் அவர்களிடம் பேசுகிறீர்களா அல்லது வேறு யாரேனும் எங்களைத் தொடர்பு கொண்டு பேசுவார்களா?'' என்று லெவ் வினவினான்.

''அவர்கள் இருவரையும், ஒவ்வொருவராக என்னுடன் பேசச் சொல்லுங்கள், ஸ்பீக்கரை அணைத்துவிடுங்கள்'' என்று முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் கூறினார்.

லெவ் முதலில் செயலிழந்த கையுடன் இருந்தவரிடம் தொலைபேசியைக் கொடுத்தான். அவர் தன் இக்கட்டான நிலையைப் பற்றி விளக்கிக் கூறியதை முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் கேட்டார். அவரிடம் பேசியதிலேயே அம்மனிதனுடைய கோபம் எல்லாம் போய்விட்டது. நடந்தவைகளைப் பற்றி, அவரால் முடிந்தவரை உண்மையைத்தான் சொல்கிறார் என்பதை, அவரின் கூற்றிலிருந்து லெவ் அறிந்துகொண்டான். அம்மனிதனின் கை விரைவில் செயல்பாட்டிற்கு வரும் என்றும், ஒரு மணி நேரத்தில் அவர் குணமாகிவிடுவார் என்றும் அவருக்குக் கூறப்பட்டது. அடுத்து கால் செயலிழந்த நபர் தொலைபேசியில் பேசினார், அவரும் விரைவிலேயே ஒரு மணி நேரத்தில் குணமடைவார் என்று கூறப்பட்டது. இந்த மாதிரியான நடத்தையை மீண்டும் செய்யவேண்டாம் என்று இருவருக்கும் கூறப்பட்டிருந்திருக்கும் என்று லெவ் அறிந்திருந்தான், ஏனென்றால் அடுத்த முறை இப்படி நடந்தால் அவர்களின் தண்டனை அதிக நேரத்திற்கு நீடிக்கும்.

சிறிது நேரத்தில் ஜனக்கூட்டம் கலைந்துசென்றது. லெவ் கால் செயலிழந்த நபரை, அவரது கால் சரியாகும் வரையிலும் முன்அறையில் அமருவதற்கு அழைத்துச்சென்றான். அவர் லெவ்விற்கு நன்றி கூறிவிட்டு, சிறிது வெட்கத்துடன் அங்கு அமர்ந்தார்.

லெவ் அவருக்குப் பழரசம் கொடுத்தான், அவர் மகிழ்ச்சியுடன் அதனை ஏற்றுக்கொண்டார். இந்த அனுபவம் அவரை சிறிது மயக்கத்திலும், அதிகமான அதிர்ச்சியிலும் வைத்திருந்தது. அங்கிருந்தவர்களில் சிலருக்கு இப்படி ஒருவர் செயலிழந்து போவதைப் பார்ப்பது, இதுவே முதல் அனுபவமாக இருந்தது. சிலர் இதைப் பற்றி முன்பே கேள்விப்பட்டிருந்தாலும், அதனை இதுவரையிலும் நேரில் பார்த்ததில்லை. ஹிட்லர் இன்று நடந்த இந்த நிகழ்வுகளை மிகவும் உன்னிப்பாகக் கவனித்தார். இருப்பினும், அவர் தனது படுக்கையறைக்குச் சென்று ஒதுங்கிக் கொள்ள முடிவுசெய்தார். உண்மையில் அவர், மற்றவர்களின் பார்வையில் படாமால் இருப்பதையே விரும்பினார். எதிர்பாராதவிதமான ஆவிக்குரிய வல்லமைகளின் பாதுகாப்பால் ஹிட்லர் மகிழ்ச்சியடைந்தார் இரகசியக் காவல் படையினரை (கெஸ்டபோ) விட பல வழிகளில், இந்த ஆவிக்குரிய வல்லமைகள் மிகவும் திறன் உள்ளதாக இருந்தன. ஆவிக்குரிய வல்லமைகள் நூறு சதவிகிதம் திறமையானவை என்றும், ஒருவர்கூட தன்னை சரீரப் பிரகாரமாகத் தாக்கிக் காயப்படுத்தும் செயலில் வெற்றிபெறுவதற்கு எந்த ஒரு வழியையும், அவர்கள் கொடுக்கவில்லை என்றும் ஹிட்லர் தெரிந்துகொண்டார். ஹிட்லர் தனது பழைய வழிகளை விட்டுக்கொடுக்காமல், எளிதாக அதிலேயே நிலைத்திருக்க இச்செயல் காரணமாகிவிடுமோ என்று லெவ் பயந்தான்.

சிறிது நேரத்தில், கால் செயலிழந்த அந்த நபர் குணமடைந்து அவருடைய வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானார். அவர் பயந்ததால் இன்னும் கொஞ்சம் அதிர்ச்சியில் இருக்கக்கூடும் என்று எண்ணி, தான் வந்து அவரை, அவரது வீட்டில் விட்டுவிட்டு வருவதாக லெவ் வலியுறுத்திக் கூறினான்.

"உங்களின் இந்த அன்பை நான் பாராட்டுகிறேன், ஆனால் அது என் மனதை மாற்றவில்லை. எல்லாக் காலங்களிலுமே மிகவும் மோசமான குற்றவாளிகளில் ஒருவரான, இந்தத் தீய மனிதனை நீங்கள் எப்படி பாதுகாக்க முடியும்?" என்று அவர் கேட்டார்.

## ஹிட்லருடன், தான் ஏன் இருக்கிறார் என்பதை லெவ் விளக்குதல்

"நல்லது, தனிப்பட்ட முறையில் நான் எனது செயல்களை நியாயப்படுத்த விரும்பவில்லை, ஏனென்றால் தனிப்பட்ட முறையில் இந்த வேலையைச் செய்வதற்கு நான் இதனைத் தேர்வு செய்யவில்லை. நீங்கள் கேள்விப்பட்டிருக்கின்றபடி முற்பிதாக்கள், கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள். அவர்கள் இந்த வேலையை நான் ஏற்றுக்கொண்டு செய்வதற்கு விரும்பினார்கள். அது முதலில் என்னைப் புண்படுத்துவதாக இருந்தது. நான் தொடர்ந்து இந்த வேலையை ஏற்கத் தயங்கியிருந்தால், முற்பிதாக்கள் இந்தப் பணியிலிருந்து என்னை விடுவித்திருப்பார்கள். இருப்பினும் அவர்களின் இந்த நியாயமான தீர்ப்பிற்கு உரிய கனத்தைக் கொடுக்காமல் என்னால் இருக்க முடியவில்லை. வெறிபிடித்த கொலைகாரனுக்கு, அவனது வாழ்க்கையை மாற்றுவதற்கான முழுமையான வாய்ப்பினை வழங்குவதற்காக, முற்பிதாக்கள் அவர்களுடைய வழிமுறையைப் பின்பற்றுகிறார்கள். இதெல்லாம் எப்பொழுது முடிவடையும் என்று யாராலும் சொல்லமுடியாது, இதுவரையிலும் அவர் செய்த தவற்றிலிருந்து மீண்டு வருவதற்கான எந்த ஒரு நியாயமான வாய்ப்பும் வழங்கப்படவில்லை. இப்போது மனந்திரும்புவதற்கும், சீர்திருந்துவதற்கும் அவருக்கு முழுமையான வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கின்றது. இதிலிருந்து ஹிட்லர் தவறினால் "அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 3:23) என்று அனைவருக்கும் சொல்லப்பட்டிருக்கின்றதன்படி ஆகும்" என்றார்.

"இதுவரையிலும் ஹிட்லர் சரியான முறையில் நடந்துகொள்ள ஆரம்பிக்கவில்லை. நான் இதுவரையிலும் அநேகரை சமாளித்திருக்கின்றேன், ஆனால் நான் இதுவரை சமாளித்தவர்களிலேயே மிகவும் பிடிவாதமான நபர் ஹிட்லர்தான், நான் அவரை இன்னமும் சரியாகக் கையாளவேண்டும். அவருக்கு ஒரு நல்ல பக்கமும் உள்ளது, மேலும் அவர் எதையாவது பெறவேண்டும் என்று விரும்பும்போது, அந்த நல்ல பக்கத்தை எவ்வாறு காண்பிக்கவேண்டும் என்பது அவருக்குத் தெரியும். இருப்பினும், அவரது சிந்திக்கும் செயல்முறையை மாற்ற அவருக்கு கணிசமான நேரம் கொடுக்கப்பட வேண்டும். ஒரு கொடியவனாக இருந்ததன் மூலம் அவர்

அதிகாரத்திலும், புகழிலும் உலகின் உச்சியை அடைந்திருந்தார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஹிட்லர் நீதியின் வழியைக் கற்றுக்கொள்வதற்கு முன்னர், அவரிடம் மலைபோன்று குவிந்துள்ள அநீதியை முதலில் அகற்ற வேண்டும். அவரால் அதைச் செய்ய முடியும், ஆனால் அவர் உண்மையிலேயே அவரது இருதயத்தையும், சிந்தையையும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டால் வெற்றி பெறலாம். அவரால் பாதிக்கப்பட்ட மில்லியன் கணக்கான ஜனங்களை அவர் எதிர்கொள்ளவும், அவர்களோடு சமாதானமாகவும் வேண்டும். ஹிட்லரால் இதைச் செய்ய முடியுமா? ஆமாம், அவரால் இதைச் செய்ய முடியும். ஹிட்லர் இதனைச் செய்வாரா? அது எனக்குத் தெரியாது. இதனை நிறைவேற்றி முடிக்க, உண்மையாகவே அவர் ஒரு பரிசுத்தவானாக மாற வேண்டும்" என்று லெவ் கூறினான்.

லெவ் அந்த நபரை இறக்கிவிட்டபோது, அவர் நன்றி கூறினார் "லெவ், நான் இன்று காலை உங்களின் வீட்டிற்கு மிகவும் கோபமாக வந்தேன், ஆனால் இப்போது அங்கிருந்து திரும்பும்போது சமாதானமாக இருக்கின்றேன். உங்களைப் போலவே நானும், கிறிஸ்து மற்றும் முற்பிதாக்களின் மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். எங்களின் செயல்களைத் தடுக்க நீங்கள் மிகவும் தைரியமாக இருந்தீர்கள். நாங்கள் ஒரு கொலைகாரக் கூட்டம் செயல்படுவது போல் செயல்பட்டால், எங்களுக்கு என்ன நடக்கும் என்பது உங்களுக்கு முன்பே தெரியும். கிறிஸ்துவே ஆட்சி செய்கின்றார் என்பதை நான் உணர்கின்றேன், மேலும் விஷயங்களை நான் என் கைகளில் எடுத்துக்கொள்ளக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும், மீண்டும் நிகழாமல் எப்படித் தடுக்கப்போகின்றீர்கள்? ஜனங்கள், ஹிட்லரை வெறுப்பதற்கு எல்லா வகையிலும் காரணங்கள் உண்டு. வரலாற்றில் சில மனிதர்கள் அதிக இரக்கமற்றவர்களாக இருந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவனைக் கொல்லும் சிலாக்கியத்திற்காகப் பலர் தங்களது ஜீவனையும் கொடுப்பார்கள். எவ்விதக் குறுக்கீடும் இல்லாதிருந்திருந்தால், நாங்கள் அனைவரும் நிச்சயமாகவே அந்த மனிதனை அடித்துக் கொன்றிருப்போம் என்று நான் அஞ்சுகின்றேன். எப்படியிருந்தாலும், கர்த்தராகிய கிறிஸ்து, ஹிட்லரை நியாயந்தீர்ப்பார்" என்று அம்மனிதர் கூறினார்.

"இப்போதுதான் நீங்கள் சரியான முறையில் சிந்திக்கின்றீர்கள். நாம் பழைய உலகத்தில் இருந்திருந்து, ஹிட்லரைப் பிடித்துக் கொன்றிருந்தால், அவரைத் தண்டிப்பதில் தவறேதும் இருந்திருக்காது. இருப்பினும், இப்போது கிறிஸ்துவே அரசாளுகின்றார். நாம் அவருடைய பரிபூரணமான நீதிக்கு, விஷயங்களைக் கண்டிப்பாக விட்டுவிட வேண்டும். நான் இப்போது உங்களிடம் கூறியவைகளை நீங்களும், மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதில் உறுதியாக இருங்கள்"என்று லெவ் கூறினான்.

* * *

"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்." (யாக்கோபு 4:6)

# அத்தியாயம் - 35

விஷயங்கள் அவருக்குச் சாதகமாக மாறியிருந்ததில் அடால்ஃப் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதை லெவ் அடுத்த நாள் கண்டான். ஹிட்லரின் நடத்தையில் கொஞ்சம் தைரியம் தெரிந்தது. லெவ், அவரிடம் ஓவியப் பொருட்களை வாங்குவதற்கு விரும்புகிறாரா? என்று கேட்டான்.

"ஆமாம்" என்று அவர் பதிலளித்தார். "நான் ஒரு கலைஞனாக இருந்திருந்தால், நான் ஒரு மகிழ்ச்சியான மனிதனாக இருந்திருக்கலாம். நான் ஜனங்களுக்குச் செய்த அனைத்திற்கும் ஜனங்கள் நன்றியுள்ளவர்களாக இல்லை. புகழ்பெற்ற ஹிட்லரின் நாசிப் பேரரசின் மீது ஜனங்கள் விருப்பம் கொண்டிருந்தனர். ஆனால் காரியங்கள் எவ்வளவுக்கெவ்வளவு கடினமாக மாறியதோ அவ்வளவு விரைவாக ஜனங்கள் அதன் மீதான விருப்பத்தை இழந்தனர். அவர்கள் நன்றியற்றப் பன்றிகள் என்பதை நிரூபித்தார்கள்" என்றார்.

தனது சொந்த மக்களுக்கு எதிராக ஹிட்லர் பகைமைக் கொண்டிருந்ததைக் கண்டு லெவ் அதிர்ச்சியடைந்தான். ஜனங்கள் இன்னும் அதிக தியாகங்களைச் செய்திருந்தால், உலகத்தின் வல்லரசாகும் தேடலில் வெற்றி பெற்றிருந்திருக்க முடியும் என்று ஹிட்லர் எண்ணியதாக லெவ் உணர்ந்தான். "அடால்ஃப், நீங்கள் இன்னும் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்வதில் குறைவுபட்டுள்ளீர்கள் என்று லெவ் கூறினான். உங்களின் அற்பத்தனமும், மிருகத்தனமும்தான், ரஷ்யர்களை உக்கிரமான உணர்வுடன் போராடத் தூண்டியது. போரில் சிறைப்பிடிக்கப்பட்ட ஜனங்களுக்கு உணவு அல்லது தங்குமிடம் என்று நீங்கள் எந்த ஒரு ஏற்பாட்டையும் செய்யவில்லை என்பதை அவர்கள் பார்த்தபோது, எண்ணற்ற ஆயிரக் கணக்கானவர்கள் தண்ணீர் இல்லாமலும் மற்றும் பட்டினியாலும் இறக்க நேரிட்டபோது, ஜெர்மனின் சட்டங்களுக்கு இனிமேலும் அடிபணிய முடியாது என்று அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். ஸ்டாலின்கிராட் போர் உங்களுக்கு எதிராக, யுத்தத்தின் போக்கைத் திருப்பியது. ரஷ்யர்கள் தைரியமாகப் போராடினர். அவர்கள் சரணடைய விரும்பவில்லை. ஜெர்மனியர்களால் மோசமாக நடத்தப்பட்டு அவதிக்கப்படுவதை விட, மரிப்பதே நல்லது என்று பலர் நினைத்தார்கள். நீங்கள் மனித நேயத்துடன் இருந்திருந்தால், அவர்கள் சரணடைந்திருக்கலாம்" என்று லெவ் கூறினான்.

"நாங்கள் மனிதாபிமானத்துடன் நடந்திருக்க முடியாது; எங்களின் சொந்த வீரர்களுக்கே போதுமான அளவு உணவு அல்லது தேவையான பொருட்கள் எங்களிடம் இல்லாதபோது, நாங்கள் ஏன் எதிரிகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? எப்படியிருந்தாலும் ரஷ்யர்கள் பன்றிகள்தான். ஜெர்மனியர்களிடமிருந்து எந்த ஒரு உதவியையும் பெறுவதற்கு ரஷ்யர்கள் தகுதியற்றவர்கள்" என்று ஹிட்லர் கூறினார்.

"உங்களது சிந்திக்கும் முறையில் பிரச்சனை இருப்பதாக நான் அஞ்சுகிறேன்" என்று லெவ் பதிலளித்தான். "மற்ற ஜனங்களைவிட நீங்கள்தான் உயர்ந்தவர் என்ற எண்ணம் உங்களுக்கு எங்கிருந்து வந்தது? நீங்கள் ஒரு காட்டுமிராண்டியாக நடந்துகொண்டீர்கள். இருந்தபோதிலும், எப்படியேனும் நீங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர் என்று நினைக்கின்றீர்கள். ஜனங்களை இவ்வளவு வெறுப்பதற்கு எங்கிருந்து கற்றுக்கொண்டீர்கள்? அன்பு இல்லாமல், தேவனுடைய பார்வையில் நீங்கள் ஒன்றும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? இந்த அணுகுமுறையை நீங்கள் சரிசெய்ய வேண்டும் அல்லது இரண்டாவது மரணத்திற்கு நீங்கள் பாத்திரராக இருப்பீர்கள்" என்று லெவ் கூறினான்.

"எனக்கு என்ன தேவை என்பதைப் பற்றி ஒரு யூதன் எனக்கு விரிவுரை ஆற்றுகின்றான்" என்று ஹிட்லர் சீறினார்.

ஹிட்லருக்கு வரக்கூடிய தீங்குகளில் இருந்து அவரைப் பாதுகாப்பதில் வெளிப்பட்ட கர்த்தருடைய இரக்கம், அதிகாரத்தின் உச்சநிலையை எட்டுவதற்கான வாய்ப்பு மீண்டும் தனக்கு இருக்கின்றது என்ற ஹிட்லரின் எண்ணத்தை வலுப்படுத்தியதாக லெவ்வுக்குத் தோன்றியது. இது லெவ்விற்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. ஹிட்லருக்குக் காட்டப்பட்ட இரக்கத்திற்கு அவர் எந்த ஒரு நன்றியையும் காட்டவில்லை.

வழக்கமாகவே ஹிட்லர், ஜனங்களைச் சமமாக எண்ணி அவர்களுடன் தொடர்புகொள்ளும் பழக்கமில்லாதவர். சமமாக நடத்துவதைக் காட்டிலும் தன்னைக் குறைவானதாகத்தான் நடத்துகிறார்கள் என்ற எண்ணத்தால் ஹிட்லர் மூர்க்கத்தனமான கோபத்தை வெளிப்படுத்தினார்.

## ஹிட்லர் தனது கலைப் பொருட்களினன் தேவைகளுக்காகக் கட்டாயம் நடக்க வேண்டும்

"பாருங்கள், உங்களுக்குத் தேவையான கலைப் பொருட்களை நீங்களே நடந்துசென்று வாங்கிக்கொள்ளலாம். உங்களுக்கு உதவுவதற்கான எந்த ஒரு காரணத்தையும் என்னால் காணமுடியவில்லை. நான் உங்களுக்குச் செய்த அநேகமான காரியங்களில், ஒரு காரியத்திற்காகக்கூட நீங்கள் நன்றியுள்ளவராக நடந்துகொள்ளவில்லை. மற்றவர்களின் அன்பினை மதிக்க நீங்கள் கற்றுக்கொள்ளாத வரையிலும், உங்களுக்கு நீங்களேகூட அன்பான நபராக ஒருபோதும் இருக்கமாட்டீர்கள். நீங்கள் எவ்வளவு மோசமான நபர் என்று உங்களுக்குத் தெரியாது. நான், உங்களிடம் காட்டும் அன்பே உங்களது பலவீனத்தை மேலும் வலுவடையச் செய்கிறது என்றால், உங்களுக்கு நான் அன்புகாட்டுவதில் அர்த்தமில்லை" என்று லெவ் கூறினான்.

"அப்படியானால் காரின் சாவியை என்னிடம் கொடுங்கள், நானே ஓட்டிச் செல்கிறேன். இது ஜெர்மனைச் சேர்ந்த ஒரு நல்ல மெர்சிடிஸ் ரக கார், இதை எப்படி ஓட்டுவது என்று எனக்குத் தெரியும்" என்று ஹிட்லர், லெவ்விடம் கூறினார்.

"உங்களுக்கான ஒரு செய்தி என்னிடம் இருக்கிறது. அந்தக் காரில் மெர்சிடிஸ் என்ற ஜெர்மன் மொழியின் பெயரைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. பொறியியல் சம்பந்தமான அனைத்தும் இஸ்ரயேலில்தான் செய்யப்பட்டது. இது முதன்முதலில் பிரான்சில் தான் உருவாக்கப்பட்டது, பின்னர் ஜெர்மனியிலும் உருவாக்கப்பட்டது. நான் இஸ்ரயேலில் இருக்கும் தொழிற்சாலைகளில் இருந்தே அனைத்துத் தொழில்நுட்பங்களையும் இங்குக் கொண்டு வந்தேன். மேலும் தனிப்பட்ட முறையிலும் இங்கு நான் இவ்வகையான கார் கட்டுமானத்திற்கான மேற்பார்வையாளராக இருந்தேன். இதற்குப் பிறகு உங்களுடைய சிந்திக்கும் மனப்பான்மையை மாற்றிக் கொண்டால்தான், உங்களுக்கான உதவிகள் கிடைக்கும். உங்களுடைய ஆணவத்தையும், அடாவடித்தனத்தையும் நான் சில காலம் சகித்துக்கொண்டேன். இதனை நான் உங்களுக்கு கண்டிப்பாகச் சொல்லவேண்டும்; முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் அவர்கள் மீதுள்ள மரியாதையின் நிமித்தமாக மட்டுமே நான் இங்கு இருக்கிறேன். உங்களைக் கவனித்துக் கொள்ளும்படி அவர் என்னிடம் கேட்கவில்லை என்றால், நான் நிச்சயமாக இங்கு வந்திருக்க மாட்டேன்" என்று லெவ் கூறினான்.

லெவ்வுடன் அதிகமான முரண்பாடுகள் திடீரென்று ஏற்பட்டதாக ஹிட்லர் உணர்ந்தார். அவர் மற்றவர்களைக் குற்றவாளியாக்கிவிட்டு, அதிலிருந்து தான் தப்பித்துக்கொண்ட பழைய நாட்களைப் போல இந்த நாட்கள் இல்லை. ஹிட்லர் மன்னிப்புக் கோரவில்லை, ஆனால் அதனைக் குறித்து தனது மனதில் சிந்திக்க ஆரம்பித்தார்.

தனது கோபமான குரல் ஹிட்லரை அமைதியடையச் செய்ததை லெவ் உணர்ந்தான். லெவ்வின் மீது இருக்கும் அன்பினால் ஹிட்லர் அமைதி அடையவில்லை, மாறாக லெவ்வோ அல்லது வேறு யாரோ ஒருவரின் உதவியின்றி, இனி ஹிட்லர் எங்கும் செல்லமுடியாது என்பது அவருக்குத் தெரியும். தனது அடாவடித்தனத்தை இனி லெவ் பொறுத்துக்கொள்ள முடியாது என்பதை லெவ், ஹிட்லருக்கு மிகத் தெளிவாகப் புரியவைத்திருந்தான்.

லெவ் கூறும் எதையும் ஒப்புக்கொள்வதை எந்த அளவிற்கு ஹிட்லர் வெறுக்கின்றாரோ, அந்த அளவிற்கு லெவ்தான் இங்கு எல்லாவற்றின் மேலும் பொறுப்பில் இருக்கிறார் என்பதையும் ஹிட்லர் உணர்ந்திருந்தார். பெருமதிப்பிற்குரிய அடால்ஃப் ஹிட்லர், இனி இங்கு இருக்கும் யாருக்கும் அல்லது எதற்கும் பொறுப்பானவராக இல்லை. லெவ் பின்னர் ஹிட்லரிடம், "அடால்ஃப், இனி உங்களுடைய பொறுப்பில் யாரும் இருக்கமாட்டார்கள். உங்களை நீங்களே வழிநடத்தக் கற்றுக்கொள்ளும் வரையிலும், ஜனங்களை வழிநடத்தும் தகுதி உங்களுக்கு இல்லை" என்று லெவ் கூறினான்.

"உங்களுக்கு வேண்டுமென்றால் நீங்களே நடந்துசென்று, உங்களுக்குத் தேவையான கலைப் பொருட்களை வாங்கிக்கொள்ளுங்கள். அங்குச் செல்வதற்கு ஒன்றரை மணிநேரம் ஆகும், திரும்பிவருவதற்கும் அதே நேரம் ஆகும். நான் உங்களுக்கு ஒரு வரைபடத்தை தருகிறேன். அநேகர் உங்களைத் தேடிக் கொண்டிருந்தாலும், இப்போது யாரும் உங்களை அடையாளம் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று நம்புகிறேன், ஏனென்றால் நீங்கள் மீண்டும் ஜீவனுக்குத் திரும்பியுள்ளதை இப்போதுதான் பலரும் அறிந்து வருகின்றனர். அடுத்த முறை ஜனங்கள் கூட்டமாக உங்களைச் சூழ்ந்துகொள்ளும்போது, நான் உங்களின் அருகில் இருக்கமாட்டேன். துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் உங்களைத் தாக்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை. ஏனென்றால் உங்களுக்குத் தெரிந்த ஒரே மொழி வன்முறைதான்" என்று லெவ் கூறினான்.

ஹிட்லர், லெவ்விடம் வழியைக் கேட்டு அறிந்துகொண்டார். பின்னர் அவர் ஆவேசமாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார். ஒரு நல்ல நீண்ட நடைபயணம் ஹிட்லரது மனதைத் தெளிவுபடுத்தும் என்று லெவ் நினைத்தான். அந்த நாளை நல்லவிதமாகக் கழிப்பதற்கான வேலைகளில் லெவ் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். மதிய நேரத்திற்குப் பின் தொலைபேசி ஒலித்தது. ஹிட்லர், அங்கிருந்த மற்ற ஜனங்களால் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டதை லெவ் உணர்ந்துகொண்டான். கோபமான ஜனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர், ஆனால் அக்கூட்டத்தில் உள்ள யாரோ ஒருவர், ஹிட்லரைத் தாக்க முடியாது என்று அறிந்திருந்தார். அதனால் அவர்கள் அனைவரும் அவரைச் சுற்றி ஒரு வட்டத்தை உருவாக்கி, மேலும் ஹிட்லர் எந்தத் திசையிலும் தப்பிச்செல்லாமல் பார்த்துக்கொண்டனர். மற்றவர்களைத் தாக்கினால் உண்டாகும் விளைவுகளைப் பற்றி ஹிட்லர் மறந்துவிட்டு, அவரது வழியில் நின்ற நபரைக் கீழே தள்ளுவதற்கு முயன்றார். உடனே ஹிட்லரது இரு கைகளும் செயலிழந்தன. உடனடியாக யாரையாவது லெவ்வின் எண்ணுக்கு அழைக்குமாறு ஹிட்லர் கெஞ்சினார். யாரோ ஒருவர் லெவ்விற்கு அழைத்து, என்ன நடந்தது என்றும், அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்றும் லெவ்விடம் கூறினார்.

## லெவ், ஹிட்லருக்கு உதவுவதற்கு அழைக்கப்பட்டார்

லெவ் எவ்வித அவசரமும் காட்டாமல், தான் செய்துகொண்டிருந்த வேலைகளை முடித்துவிட்டு அவர்கள் கூறிய இடத்திற்குப் புறப்பட்டுச்சென்றான். தனது காரை ஓட்டிச் செல்லும்போதே, இந்நேரம் ஜனங்கள் கலைந்து சென்றிருப்பார்கள் என்றும், ஹிட்லரை விடுவித்து இருப்பார்கள் என்றும் லெவ் எண்ணினான். ஆனால் ஜனங்கள் ஹிட்லரை இன்னும் சுற்றிவளைத்து நின்றுகொண்டிருந்தனர். லெவ், ஹிட்லரின் சார்பாக பேசுவதற்கு அவசரப்படவில்லை. லெவ் காரில் அமர்ந்திருந்தான். ஜனங்கள், ஹிட்லரை சுற்றிவளைத்து இருப்பதிலிருந்து சோர்ந்துபோகும் வரையிலும் காத்திருந்தான். சுமார் இருபது நிமிடங்களுக்குப் பிறகு, அக்கூட்டத்தில் இருந்த ஒருவர் "இந்த அரக்கனை விட்டுவிட்டு நாம் நமது வீட்டிற்குச் செல்வோம். மற்றொரு நாள் நாம் இவனைப் பிடிக்கலாம். ஒருவேளை என்றாவது ஒரு நாள், இவனைத் தூக்கிலிட முற்பிதாக்கள் அனுமதிப்பார்கள்" என்று கூறியதால், ஜனங்கள் கலைந்துசென்றனர். இரண்டு கைகளும் செயலிழந்த நிலையில் பரிதாபமாக நடுங்கிக்கொண்டிருந்த ஹிட்லர், தன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி லெவ்விடம் கெஞ்சிக் கொண்டு காரின் அருகே வந்தார்.

ஹிட்லர் காரினுள்ளே ஏறுவதற்காக லெவ் காரின் கதவைத் திறந்தான். கோபமான ஜனங்களால் மட்டுமல்ல, தனது இரண்டு கைகளும் செயலிழந்துவிட்டதாலும் ஹிட்லர் பயந்திருந்தார். முற்பிதாக்களால் மட்டுமே, தன்னைக் குணப்படுத்த முடியும் என்பதை ஹிட்லர் அறிந்திருந்தார். இப்போது தான் அகப்பட்டுள்ள உதவியற்ற சூழ்நிலையைக் குறித்து ஹிட்லர் வேதனையடைந்தார். தான் முற்பிதாக்களினுடைய இரக்கத்திற்காகக் கெஞ்சி மன்றாட வேண்டியிருந்தது அவருக்கு மிகவும் இழிவானதாகத் தோன்றியது. ஆவிக்குரிய வல்லமைகள் தன்மீது இருவிதத்திலும் செயல்படுவதை ஹிட்லர் அறிந்துகொண்டார். பாதுகாக்கவும் செய்தன, அதே நேரத்தில் தண்டனை அளிக்கவும்கூடச் செய்தன. ஆவிக்குரிய வல்லமைகள் முன்பு ஹிட்லரைப் பாதுகாத்தனர், ஆனால் இப்போது அவர் தண்டிக்கப்படுகிறார். ஹிட்லர் நீதியின் நிமித்தமான ஒழுக்கங்களை உணர்ந்துகொண்டார். இந்த உலகம் தனது பொறுப்பின்கீழ் இனி இல்லை என்றும், நீதியினால் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் ஹிட்லர் கற்றுக்கொண்டார்.

ஹிட்லர் அவரின் பிடிவாதமான அணுகுமுறைக்கு அதிக விலை கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதை லெவ் உணர்ந்தான். முந்தைய நாளில் ஆவிக்குரிய வல்லமைகள் தலையிட்டு அவரைப் பாதுகாத்தபோது, ஹிட்லர் தவறான பாடத்தைக் கற்றுக்கொண்டார். தான் செய்த தீமையானச் செயல்களை ஜனங்கள் நினைவில் வைத்துக்கொள்ளாமல் இருப்பதற்காக ஆவிக்குரிய வல்லமைகளைத் தனது சார்பாகப் பணியமர்த்திக் கொள்ளலாம் என்று ஹிட்லர் நினைத்தார். அவர்கள் அப்படிச் செய்யவில்லை. ஹிட்லர் சரீர ரீதியாக மட்டுமே பாதிப்படையாமல் பாதுகாக்கப்பட்டார். அவர் செய்த பாவங்களுக்காக ஏற்படும் விளைவுகளிலிருந்து, மனரீதியாக அவர் பாதிப்படைவதில் இருந்து ஹிட்லர் பாதுகாக்கப்படமாட்டார். விரைவிலோ அல்லது பிற்பாடோ அவர் கொன்ற ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அனைவரையும் எதிர்கொள்ள வேண்டும். இப்படியான மோசமான நடத்தையை நீதியுள்ள உலகில் நீங்கள் எவ்வாறு நியாயப்படுத்த முடியும்? அத்தகையத் தீமைகளை நியாயப்படுத்த எப்படிப்பட்ட பகுத்தறிவாலும் முடியாது. மனுக்குலத்திற்கு எதிரான இந்தக் குற்றங்கள் அனைத்தும் இப்போது மிகவும் வெறுக்கத்தக்கதாகவும், மோசமானதாகவும் தோன்றுகின்றன. அவர் செய்த கொடூரமானச் செயல்களில் வெளிப்பட்டக் கொடூரத்தைக் குறைவாகக் காட்டுவதற்கு, எவ்விதமான மென்மையானச் சொற்களை உபயோகித்தாலும் கூட, அதுவும் பயனற்றதாகத்தான் இருக்கும். அதுதான் இப்போது ஹிட்லரை சித்ரவதைச் செய்துகொண்டிருந்தது. இதனை மறைக்கவோ அல்லது இரகசியமாக வைத்துக்கொள்ளவோ முடியாது. ஹிட்லரின் இத்தகையச் செயல்கள் ஒருபோதும் மறக்கப்பட்டுப் போகாது. குற்ற உணர்வுடன் கூடிய பாரமானச் சுமையாகவே இந்த எண்ணங்கள் அவருக்கு எப்போதும் இருக்கும்.

தான் ஏன் இவர்களிடம் சென்று இரக்கத்தைத் தேடவேண்டும் என்பதில் ஹிட்லர் மிகவும் பெருமிதம் கொண்டவராகவும், அதிகமான குற்ற உணர்வோடு இருப்பதற்குப் பதிலாக, தான் எந்த ஒரு தவறையுமே செய்யாதவர் போலவும் தன்னைக் காட்டிக்கொண்டார். மேலும் ஹிட்லர் அவரது தவறுகளுக்கான உண்மையான மனவருத்தத்துடன், பல மில்லியன் ஜனங்களை எதிர்கொள்ள வேண்டும் என்ற காரியத்தைக் கவனிக்கத்தவறி இழிவான நிலையில் இருக்கிறார்.

லெவ் எதுவும் பேசாமல் அமைதியாகவே ஹிட்லரை வீட்டிற்கு அழைத்துச் சென்றான். லெவ், அவரிடம் எதுவும் பேசாததுடன், ஹிட்லரின் இந்தத் துயர நிலைக்கு அனுதாபமும் தெரிவிக்கவில்லை. இவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாக இருக்கிறது. மேலும் அவர் தனது பாவங்களிலிருந்து வெளியே வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து முற்பிதாக்களின் ஆலோசனையைப் பெறுவது லெவ்வுக்கு நல்லதாகப்பட்டது. சமூகத்திற்கும், மனித குலத்திற்கும் எதிராக அவர் செய்த குற்றங்களுக்குப் பதிலாக ஹிட்லர் எண்ணத்தை திருப்பிச் செலுத்தி விட முடியும்?

அவர்கள் வீட்டிற்கு வந்த பிறகும், லெவ் எதுவும் பேசவில்லை. லெவ் வெறுமனே கதவைத் திறந்து ஹிட்லர் இறங்குவதற்கு உதவினார். தன்னை லெவ் அழைத்து வந்ததற்காக ஹிட்லர் நன்றி கூறவில்லை, மேலும் லெவ்விடம் ஒரு வார்த்தை கூட ஹிட்லர் பேசவில்லை. தான் லெவ்வை அவமானப்படுத்தியதையும், புண்படுத்தியதையும் ஹிட்லர் அறிந்தேதான் இருந்தார். லெவ், அவருக்கு தீமைக்குப் பதிலாக நன்மையையே செய்தார். ஹிட்லருக்கு அது பிடிக்கவில்லை, ஆனால் அவருக்கு இப்போது லெவ்வின் உதவி கண்டிப்பாகத் தேவைப்பட்டது. முற்பிதாக்களைத் தொலைபேசியில் அழைக்கக் கூட இப்போது ஹிட்லரால் முடியாது.

ஹிட்லர் தனது செயல்களுக்கான விளைவினை எண்ணி வருந்தி, உண்மையாகவே தனது உதவியை நாடி வரும்வரை ஒன்றும் செய்யக்கூடாது என்பதில் லெவ் உறுதியாக இருந்தான்.

அவர்கள் இரவு உணவிற்கு அமர்ந்தபோது, லெவ் பழத்தை ஹிட்லர் முன்பாக வைத்தான். ஆனால் ஹிட்லரால் தனது கரங்களைப் பயன்படுத்தி அப்பழங்களைச் சாப்பிட முடியவில்லை. தான் உதவியற்ற நிலையில் இருந்ததால் ஹிட்லர் சங்கடமாக உணர்ந்தார். லெவ் தனது பிரார்த்தனையை முடித்துவிட்டு சாப்பிட ஆரம்பித்தான். ஹிட்லர் பழத்தை ஏக்கத்துடன் பார்த்தவாறு, அங்கேயே அமர்ந்திருந்தார். அவர் மன்னிப்புக் கேட்கும் வரையிலும் லெவ், அவருக்கு உதவிசெய்யப் போவதுமில்லை, முற்பிதாக்களைத் தொலைபேசியில் அழைக்கப் போவதுமில்லை. தான் குணமடைய வேண்டும் என்று ஹிட்லருக்கு இருந்தது, ஆனால் அவருடைய பெருமை, லெவ்விடம் தொலைபேசியில் முற்பிதாக்களைத் தொடர்பு கொள்ளக் கேட்பதற்குத் தடையாக இருந்தது. எந்த நிமிடமும் அழுதுவிடப் போகும் மனநிலையில் ஹிட்லர் அங்கேயே அமர்ந்திருந்தார். லெவ் அவரைப் புறக்கணித்துவிட்டு சாப்பிட்டு முடித்த பிறகு, மேசையைச் சுத்தம் செய்துவிட்டு படிப்பதற்காகச்

சென்றான். மிக உயரிய அதிகாரி ஒருவர் தனது சொந்த நடவடிக்கைகளாலேயே, இப்போது உதவியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். இப்படியானதொரு நிலை ஹிட்லரின் மனதைச் சரியான வழியில் சிந்திக்கத் தூண்டும் என்று லெவ் நம்பினான். ஆனால் இன்னும் ஹிட்லர், தனது உதவியைக் கேட்பதற்கு அவரது பெருமையை விட்டுவிட்டு வருவதற்குத் தயாராக இல்லை. விரைவாகவே ஹிட்லர் உணவு மேசையை விட்டு வெளியேறினார். அவரின் காலணிகளைக் கழட்டுவதற்கு அவர் முயற்சிசெய்து தோல்வியுற்றதை லெவ் கண்டான். லெவ் அப்போதும் எதுவும் பேசவில்லை.

## ஹிட்லர் மன்னிப்புக் கேட்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகுதல்

ஹிட்லரால் தனது கோட்டைக் கழற்றவோ அல்லது தனது தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யவோ முடியவில்லை. கடைசியில் ஹிட்லர் "லெவ், தேவனின் நாமத்தால், எனக்கு உதவுங்கள் என்று குளறலாகக் கேட்டார். நான், எனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எனக்குச் செய்த அனைத்து உபகாரங்களுக்கும் பதிலாக, நான் உங்களை மிகவும் மோசமாக நடத்தினேன். நானே ஏற்படுத்திக் கொண்ட இந்தக் குழப்பத்தினூடேயே இருக்கும்படி என்னை விட்டுவிட்ட, உங்களின் செய்கைக்கு நான் தகுதியானவன்தான். தயவுசெய்து முற்பிதாக்களை அழைத்து, நான் பேசுவதற்கு உதவியாக எனக்காகத் தொலைபேசியை பிடித்துக் கொள்வீர்களா?" என்று ஹிட்லர் கேட்டார்.

"சரி, இப்போது நீங்கள் ஒரு நாகரீகமுள்ள மனிதனாக நடந்துகொள்கிறீர்கள். வன்முறையான உங்களின் எந்த ஒரு நடத்தையையும் நான் ஏற்கமாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் நாகரீகம் உள்ள மனிதனாக இருக்க முடியாவிட்டால், உங்களுக்கு உதவி கிடைக்காது என்பது தெளிவாகப் புரிகின்றதா? இதனை எவ்வளவு சீக்கிரம் கற்றுக் கொள்கிறீர்களோ, அவ்வளவு சீக்கிரம் இந்தப் புதிய ஏற்பாட்டில் முன்னேறுவீர்கள். இனி நீங்கள் யாருக்கும் முதலாளி இல்லை என்பது உங்களுக்குத் தெளிவாகப் புரிகிறதா?" என்று லெவ் கேட்டான்.

ஹிட்லர் பணிவுடன் "சரி, நான் இப்பொழுதுதான் சூழ்நிலைகளைப் பற்றி புரிந்துகொள்கிறேன். தயவுசெய்து முற்பிதாக்களை அழையுங்கள்" என்று கூறினார்.

"நீங்கள் முற்றிலும் நேர்மையாக இருக்க வேண்டும், ஏனென்றால் முற்பிதாக்கள் உங்களின் கைகளைச் செயலிழக்கச் செய்த ஆவிக்குரிய வல்லமைகளுடன், நீங்கள் கூறுவது உண்மைதானா என்று சரிபார்ப்பார்கள். நீங்கள் உண்மையை மாற்றி, உங்களுக்குச் சாதகமாக இருக்கும்படி காட்டுவதற்காக உங்களது செயல்களுக்கு வண்ணம் தீட்ட முயற்சித்தால், நீங்கள் இன்னும் அதிக நாட்களுக்கு, இரண்டு வாரங்கள் வரையிலும்கூட தண்டிக்கப்படுவீர்கள். என்ன நடந்தது என்பதைப் பற்றி இப்போது கவனமாகச் சிந்தித்து, உங்களால் முடிந்தவரை துல்லியமாகச் சொல்லுங்கள். உண்மையைச் சொல்வதில் உங்களுக்கு சிரமம் இருக்கும் என்று எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் உண்மையைத்தான் கூறவேண்டும், இல்லையெனில் உங்களின் இந்த நிலை சரியாகாது. நடந்த உண்மைகளை முழுவதுமாக முற்பிதாக்களிடம் கூறுவதற்கு நீங்கள் எப்போது தயாராக இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று லெவ் கூறினான்.

ஹிட்லர் சில நிமிடங்கள் ஆழ்ந்து யோசித்துவிட்டு "சரி, தயவுசெய்து முற்பிதாக்களைத் தொலைபேசியில் அழையுங்கள்" என்றார்.

லெவ் தனக்கு மிகவும் பரிச்சயமான எண்ணிற்கு அழைத்தான். அலுவலகத்தில் இருந்த ஒருவர் பதிலளித்தார். "இரண்டு கைகளும் செயலிழந்த நிலையில் உள்ள ஒருவருக்கு உதவுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, முற்பிதாக்களிடம் பேச வேண்டும்" என்று லெவ் கூறினான். சிறிதுநேரத்தில் ஒரு உற்சாகமான குரல் கேட்டது "நான் சாராள், நான் உங்களுக்கு எப்படி உதவ முடியும்?" என்று கேட்டார்.

"நான் லெவ் ஆரோன், இந்த அழைப்பு அடால்ஃப் ஹிட்லருக்கானது. அவரின் இரண்டு கைகளும் செயலிழந்து பாதிக்கப்பட்டுள்ளார். நீங்கள் அவரிடம் பேசும்போது, நான் போனை அவரின் காதில் வைக்கின்றேன்" என்று லெவ் கூறினான்.

ஹிட்லரிடம், முற்பிதாவாகிய சாராள் கூறிய பெரும்பாலான செய்திகள் லெவ்வின் காதில் லேசாகத்தான் விழுந்தது. லெவ், ஹிட்லரிடம் கூறியதைப் போன்றே முற்பிதாவாகிய சாராளும்

கூறினார். விரைவிலேயே அன்றைய நாளில் நடந்தவைகளைப் பற்றி ஹிட்லர் விளக்க வேண்டிய நேரம் வந்தது. "நான் சில ஓவியப் பொருட்களை வாங்குவதற்காக ஓர் இடத்திற்குச் செல்வதற்குத் தெருவில் நடந்து கொண்டிருந்தேன். யாரோ ஒருவர் என்னை அடையாளம் கண்டுகொண்டு "இதோ அடால்ஃப் ஹிட்லர், எல்லாக் காலங்களிலும் இவனே மிகப்பெரிய கொலைகாரன்" என்று கூச்சலிட ஆரம்பித்தார். நான் அவரைக் கடந்துசெல்வதற்கு முயன்றேன். ஆனால் அவர் அதே வார்த்தைகளை மீண்டும், மீண்டும் கத்தியவாறு, என்னைப் பின்தொடர்ந்து வந்தார். அப்பகுதியில் நிறைய ஜனங்கள் இருந்ததால், விரைவில் அவர்கள் அனைவரும் ஒரு கூட்டமாக என்னைச் சூழ்ந்துகொண்டனர். ஒருவர் என் முகத்திற்கு நேராக வந்து நின்றவாறு, என்னை நோக்கிக் கத்தினார். நான் அவரை எனது வழியிலிருந்து விலக்குவதற்காக தள்ளிவிட்டேன். எனது இரு கைகளும் உடனேயே செயலிழந்து விட்டன. நான் அவரை அடிக்கவில்லை, ஆனால் நான் அவரைத் தள்ளிவிட்டேன். கடைசியாக, யாரோ ஒருவர் லெவ்வை அழைத்திருக்க வேண்டும். அவர் வந்து என்னைக் கூட்டத்திலிருந்து மீட்டார். எனது கைகள் ஏன் செயலிழந்தது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் என்னைக் கேலிசெய்த கூட்டத்தில் இருந்த யாரும் ஆவிக்குரிய வல்லமைகளால் எந்த வகையிலும் பாதிப்படையவில்லை" என்று ஹிட்லர் பேசினார்.

"ஜனங்கள், உங்களை எந்த விதத்திலும் காயப்படுத்தவில்லை, இல்லையா?" என்று முற்பிதாவாகிய சாராள் கேட்டார்.

"இல்லை, சரீரப் பிரகாரமாக அல்ல, வார்த்தைகளால் மட்டுமே என்னைக் காயப்படுத்தினார்கள்" என்று ஹிட்லர் பதிலளித்தார்.

"நீங்கள் கூறியதை நான் சரிபார்த்து வருகிறேன், அதுவரையிலும் சற்று காத்திருங்கள்" என்றார். சில நிமிடங்களுக்குப் பிறகு முற்பிதாவாகிய சாராள் திரும்பி வந்தார். "ஒரு மணி நேரத்திற்குள் உங்களது கைகள் குணமாகிவிடும். நீங்கள் உண்மையில் இதற்குத் தகுதியானவர் அல்ல. உங்களைக் கவனித்துக் கொள்ளும் வேலையை நான் லெவ்விற்குத் தந்து, அவரைத் தண்டித்துக் கொண்டிருக்கின்றேனோ என்று உண்மையில் அஞ்சுகிறேன். உங்களின் கடந்த காலத் தவறுகளுக்காக நீங்கள் பாதுகாக்கப்பட மாட்டீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். யாரும் உங்களைச் சரீர ரீதியாக காயப்படுத்தாத வரையிலும், உங்களின் கடந்தகாலத் தவறுகளுக்கான அவமானத்தையும், அவமதிப்பையும் நீங்கள் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். உங்களின் கடந்தகால தீயச் செயல்களை நினைவுகூரும் ஜனங்களை, நாங்கள் குறைசொல்ல முடியாது. நீங்கள் யார் மீதும் உங்கள் கைகளை வைக்காமல் பார்த்துக்கொள்ளுங்கள், இல்லாவிட்டால் அடுத்த முறை உங்களின் தண்டனை மிகவும் மோசமாக இருக்கும். இது உங்களுக்குத் தெளிவாகப் புரிகிறதா?" என்று முற்பிதாவாகிய சாராள் கேட்டார்.

"ஆமாம், ஆமாம், எனக்குப் புரிகிறது" என்று ஹிட்லர் பதிலளித்தார்.

நீங்கள் வன்முறையைக் கையாண்டதற்காக இன்று தண்டிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உங்களின் முந்தைய வாழ்க்கையின் அனைத்துத் தீமைகளுக்குமான தண்டனை இதுவல்ல. நீங்கள் அழித்தொழித்த எண்ணற்ற லட்சக்கணக்கானோரிடம் மன்னிப்புக் கேட்பதன் மூலமாகவே, நீங்கள் உங்களது தவறுகளைக் குறைத்து வாழமுடியும். அதுமட்டுமல்லாமல், நீங்கள் மனந்திரும்பி இருப்பதையும், உங்கள் இதயத்தில் நல்லெண்ணம் இருப்பதையும் காட்டுவதற்கு, மற்றவர்களுக்கு ஏதேனும் ஒரு வழியில் சிறிய நன்மையாவது செய்வதற்கு அயராது உழைக்க வேண்டும். பலர் உங்களை வெறுப்பதற்கு நியாயமான காரணங்களைக் கொண்டுள்ளார்கள். நீங்கள் ஒரு முழுமையான அரக்கனாக இன்னமும் நடந்துகொண்டிருக்கிறீர்கள். நான் வருத்தத்தோடு இதனைக் கூறுகிறேன், உங்கள் இருதயத்தில் உண்மையான மனந்திரும்புதலை நான் இன்னும் காணவில்லை, மாறாக வசதியாக இருக்க வேண்டும் என்ற ஆசை மட்டுமே உங்களிடம் உள்ளது. நீங்கள் உங்களைப் பற்றி மட்டுமே சிந்திப்பதை நிறுத்தவில்லை என்றால், நான் கூறியவைகளை நீங்கள் எப்படிச் செய்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. லெவ்வின் பொருட்டு நீங்கள் ஒரு மணி நேரத்தில் குணமடையப் போகிறீர்கள். ஷாலோம்" என்று முற்பிதாவாகிய சாராள் கூறினார்.

## குணப்படுத்துவதற்கான வாக்குறுதி

ஹிட்லர் விரைவில் குணமடைந்துவிடுவார் என்று கேள்விப்பட்ட உடனேயே அவர் உற்சாகமடைந்தார். முற்பிதாவாகிய சாராளின் உண்மையான வாக்குறுதிக்கு ஏற்ப, சுமார் இருபது நிமிடங்களில் ஹிட்லரின் கைகளில் உணர்வு வர ஆரம்பித்து, மீண்டும் இயக்கத்திற்கு வந்தன.

பின்னர் அவர் உணவு மேசைக்குத் திரும்பி இரவு உணவைச் சாப்பிட்டார். அவர் அந்த இடத்தைச் சுத்தம்செய்து திரும்பிவந்து "நன்றி, லெவ்" என்றார்.

பின்னர் அவர் தனது அறைக்குள் சென்று தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார். அவர் சில சமயங்களில் ஒரு மோசமான மனநிலையைக் கொண்டிருந்தார். ஆட்சி அதிகாரத்தில் ஹிட்லர் இருந்தபோது, அவரைச் சமாளிப்பது என்பது மிகவும் கடினமாக இருந்ததை லெவ்வால் காணமுடிந்தது. ஹிட்லரைத் தவிர்ப்பதற்காகவே, லெவ் தனது அறையிலேயே இருந்துகொண்டான். ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மாறிக்கொண்டே இருக்கும் ஹிட்லரின் மனநிலைக்கு லெவ் பழக்கம் அடைந்திருந்தான். ஹிட்லருக்கு ஏதாவது வேண்டுமென்கையில் அவர் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பார், இல்லையெனில் அவர் சற்றே கோபமாக இருப்பார்.

ஹிட்லர் சீக்கிரமே படுக்கைக்குச் சென்றுவிட்டார், குறைந்தபட்சம் அவரது அறையின் விளக்கை அணைத்துவிட்டு படுத்திருக்கலாம் என்று லெவ் எண்ணினான். ஹிட்லரைச் சகித்துக் கொள்வதில் தான் சோர்வடைந்து இருப்பதை லெவ் உணர்ந்தான். இருப்பினும், அவரை மாற்றுவதற்குத் தன்னால் முடிந்த சிறந்தவற்றைச் செய்வதற்கு லெவ் தீர்மானித்தான். தனது கடந்த காலத்திலிருந்து மீண்டு முழுமையாக வெளியே வந்துவிடலாம் என்று நம்பினால், ஜனங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு ஹிட்லர் கண்டிப்பாக முயற்சிக்க வேண்டும். லெவ்வும் வழக்கத்தைவிட முன்னதாகவே படுக்கைக்குச் சென்றான், ஆனாலும் அந்த நாளின் நிகழ்வுகளை லெவ் தனது நாட்குறிப்பில் பதிவுசெய்துவிட்டே உறங்கச்சென்றான்.

மறுநாள் காலை லெவ் தனியாக தனது காலை உணவைச் சாப்பிட்டுவிட்டு, தேவாலய ஆராதனைக்குச் சென்றான். லெவ் ஆலயத்திற்கு வந்து சேர்ந்ததும், அடால்ஃப் ஹிட்லர் ஜீவனுடன் இருக்கிறார் என்ற செய்தியையும், ஹிட்லருக்கு இப்புதிய வாழ்வினை அணுகுவதற்கான வழிமுறையைக் கண்டுபிடிக்க உதவுவதற்காக லெவ் நியமிக்கப்பட்டு இருக்கிறார் என்பதையும் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள் என்று லெவ் தெரிந்துகொண்டான். அவர்களில் பெரும்பாலான ஜனங்கள் லெவ்வுடன் மிகவும் நட்பாக இருந்தனர். அவர்களில் சிலர் லெவ்வின் வீட்டிற்கு அருகிலேயே வசித்தார்கள். அனைத்திற்கும் கிறிஸ்துவே பொறுப்பேற்று உள்ளார் என்பதையும், அவர் காரியங்களை வித்தியாசமான முறையில் எப்படிக் கையாளுகின்றார் என்பதையும் கண்ட ஜனங்கள் ஆச்சரியமடைந்தனர். பெரும்பாலான ஜனங்கள் ஹிட்லருடன் சேர்ந்து வாழ்வதை லெவ் எப்படிச் சமாளிக்கின்றார் என்பதை அறிந்துகொள்ள விரும்பினர்.

"ஹிட்லருடன் வாழ முடியாத அளவுக்கு அவர் அவ்வளவு மோசமானவர் அல்ல. அவரின் மனநிலை மாறிக்கொண்டே இருக்கும் மற்றும் ஜனங்களுக்கு எதிராக மோசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவார். மற்றவர்களை எப்படிச் சமமாக நடத்துவது என்று அவருக்குத் தெரியாது, மேலும் மற்றவர்களிடம் உயர்ந்த திறமைகள் உள்ளது என்பதை அவர் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டார். அவர் சமீபத்தில்தான் ஜீவனுக்குத் திரும்பியிருக்கிறார். ஒருவேளை இன்னும் சில ஆண்டுகள் செல்லுகையில், ஹிட்லர் ஒரு முழுமையான மனிதனாக மாறுவார்" என்று லெவ் கூறினான்.

"ஆமாம், ஆனால் பலரை சித்திரவதைசெய்து கொன்ற ஒரு மனிதனுக்கு உதவியாக நிற்க உங்களால் எப்படி முடிகிறது? அது உங்களுக்குச் சிரமமாக இல்லையா? நீங்கள் அவரை வெறுக்கவில்லையா? அவரின் மீது கோபமும், வெறுப்பும் வரவில்லையா?" என்று ஒரு நபர் கேள்வி எழுப்பினார்.

"நீதியை வழங்கும் பொறுப்பில் கிறிஸ்துவே உள்ளார், நான் அல்ல. இந்த மனிதன், அவரின் வாழ்க்கையை மாற்றிக்கொள்வதற்கு, என்னால் முடிந்த அனைத்தையும் செய்து உதவுவதே எனது பணியும், எனக்கு வழங்கப்பட்ட பணியும் ஆகும். அவர் ஒழுக்க ரீதியாகவும், மன ரீதியாகவும் வளர வேண்டும். மேலும் அவர் குற்றப் பின்னணியில் இருந்தாலும், சீர்திருத்தம் அடைந்து நல்லவற்றைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை அவருக்குக் கொடுப்பதற்கானச் சூழலை உருவாக்க நான் முயற்சிக்க வேண்டும். யாரையும் நண்பர்களாக ஆக்க விரும்பும் நபராக அவர் இருக்கவில்லை. ஒரு நண்பனாக எப்படி இருக்க வேண்டும் என்றும் அவருக்குத் தெரியவில்லை. அவர் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை மனுக்குலத்திடமிருந்து விலகி, தன்னை அந்நியப்படுத்திக் கொண்டார். அவரிடத்தில் ஆவிக்குரிய குணங்கள் இல்லை. அவருக்கு எப்படி ஜெபிப்பது என்று கூடத் தெரியவில்லை அல்லது ஜெபத் தொடர்பிற்கான அவசியத்தையும் அவர் இதுவரை உணரவில்லை. அவரைப் பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு விஷயத்தை நான்

உங்களுக்குச் சொல்ல வேண்டும். ஹிட்லர், சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டு இருந்தார். உண்மையில் தேவனுடைய ஜனங்களான மாம்சத்தில் உள்ள இஸ்ரயேலர்களையும் மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களையும் அழிப்பதற்காக, சாத்தான் மேற்கொண்ட நீண்ட போரின் காரணமாகவே அவர் செய்தவைகளில் பெரும்பாலானக் காரியங்கள் நடந்தது" என்று லெவ் கூறினான்.

## வழிபாட்டு ஆராதனை லெவ்விற்குப் புத்துணர்ச்சியூட்டியது

கீர்த்தனைப் பாடல் பாட ஆராதனை துவங்கியது. அனைவரும் இருதயப்பூர்வமாகக் கலந்துகொண்டனர். பரிசுத்தமான உலகில், ஆரோக்கியமான மனநிலை கொண்டவர்களுடன் இருப்பது நன்றாக இருந்தது. இங்குள்ள ஜனங்கள் தேவனைத் தேடி, மேலானதொரு ஜீவியம், ஜீவிக்க முயன்றனர். இப்படி வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி எந்த ஒரு வழிகாட்டுதல்களும் ஹிட்லருக்கு இல்லை அல்லது அவருக்கு இன்னும் அத்தகையதொரு ஆசை உண்டாகவில்லை. தனது அதிகாரத்தையும், பதவியையும் இழந்துவிட்டதான வருத்தத்துடன் ஹிட்லர் தனது சொந்த உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறார். அதனை மீண்டும் பெற முடியாது என்று அவர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. சில சமயங்களில் தனது பழைய உலகின் ஒரு பகுதியையாவது, இங்கு மீண்டும் எவ்வாறு உருவாக்கலாம் என்பதற்கான விஷயங்களைக் குறித்து, அவர் தந்திரமாகத் திட்டமிட்டு வருகிறார் என்று நம்பும்படி லெவ்விற்கு இருந்தது.

ஆராதனை புத்துணர்ச்சியூட்டுவதாக இருந்தது, வழிபாட்டின் ஒவ்வொரு பகுதியையும் லெவ் அனுபவித்து மகிழ்ந்தான். வழிபாடு முடிந்ததும் போதகர் வந்து "ஏதேனும் ஒரு வகையில் என்னால் உங்களுக்கு உதவ முடியுமென்றால் அதனை எனக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களால் ஹிட்லரைச் சமாளிக்க முடியாததாக இருந்தால், பகலில் எந்த நேரமானாலும் அல்லது இரவிலும் கூட நான் வருகின்றேன். இதுவரை நீங்கள் பெற்றுக்கொண்ட பணிகளில், இதுதான் உங்களுக்கு கடினமானப் பணியாக இருக்கும் என்று எனக்குத் தெரியும். நீங்கள் பெற்றுக்கொண்ட பணிகளில், ஒன்றன்பின் ஒன்றாக வெற்றிபெற்று வந்திருக்கின்றீர்கள். ஆனால் நீங்கள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்புக் குறைவாக உள்ள காரியத்தையே இப்போது எதிர்கொண்டு உள்ளீர்கள். ஹிட்லரைப் பரிசுத்தமாக்குவதில் நீங்கள் செய்யும் எதுவும் வெற்றியடையாது. இதுவரை உங்களால் அவரை மனிதனாகக் கூட மாற்ற முடியவில்லை" என்றார்.

"நிச்சயமாக நீங்கள் இதனை மிகச் சரியாகவே கண்டுபிடித்துள்ளீர்கள். நான் வெற்றிகரமாக முடித்த அனைத்துப் பணிகளிலுமே, நான் எதிர்ப்புகளைச் சந்தித்துள்ளேன். சிலநேரங்களில் கோபமான மனிதர்களையும் கூட நான் எதிர் கொண்டிருக்கின்றேன். இருந்தபோதிலும் ஹிட்லரைச் சரியான பாதையில் கொண்டு வருவதற்கு, என்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது அறிய முடியாமல், நான் முற்றிலும் சோர்வுற்று இருப்பது இதுவே முதல் முறை. ஏதேனும் வேண்டும் என்று விரும்பும்போது ஹிட்லர் மகிழ்ச்சியாக இருக்கின்றார். அவர் விரும்பியது கிடைக்காதபோது, ஹிட்லர் முகத்தை தூக்கிவைத்துக் கொள்கிறார். ஹிட்லர் கோபமாக இருக்கும்போது, வன்முறையில் ஈடுபடுகிறார்" என்று லெவ் கூறினான்.

லெவ் வீட்டிற்கு வந்தபோது, ஹிட்லர் தனது காலை உணவை உண்டு முடித்திருப்பதைக் கண்டான். மேலும் ஹிட்லர் வரவேற்பு அறையில் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவர் எதுவும் சொல்லவில்லை, அதனால் லெவ் தனது சொந்த வேலைகளைப் பார்ப்பதற்குச் சென்றான். ஹிட்லருக்கு ஏதோ தேவைப்படுகின்றது என்று லெவ்வுக்குத் தெரிந்தது, ஆனாலும் ஹிட்லர் அவராகவே முன்வந்து அதனைக் கேட்கும் வரையிலும், எந்தவொரு உதவியையும் தானாகச் சென்று செய்யப்போவதில்லை என்று லெவ் எண்ணிக்கொண்டான். விரைவில் மிகவும் நாகரீகமான தொனியில், "கலைப் பொருட்களை விநியோகம் செய்யும் இடத்திற்கு இன்று என்னை அழைத்துச் சென்று, திரும்பும் வழியில் ஈவாவைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா? அந்த உதவிக்காக நான் நன்றியுள்ளவனாக இருப்பேன் லெவ்" என்று ஹிட்லர் கூறினார்.

## ஓர் உதவி கோரப்பட்டது

"ஏன் என்னால் அழைத்துச் செல்ல முடியாது? முதலில் ஈவாவைத் தொலைபேசியில் அழைத்து, இன்று ஈவாவைச் சந்திப்பதற்கு அவருக்கு வசதியாக இருக்கின்றதா என்று கேட்போம்"

என்று லெவ் கூறினான். ஹிட்லரே, ஈவாவைத் தொடர்பு கொள்ளும்படி தொலைபேசி எண்ணையும் லெவ், ஹிட்லருக்குக் கொடுத்தான்.

ஹிட்லர் தொடர்பு கொண்டு "காலை வணக்கம், நான் அடால்ஃப் பேசுகின்றேன், ஈவாவைச் சந்திப்பதற்காக நானும், லெவ்வும் இன்று அங்கு வருவது உங்களுக்கு வசதியாக இருக்குமா? நிச்சயமாக, லெவ்வும் உங்களைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைவார் என்று எனக்குத் தெரியும்" என்றார்.

ரெபெக்காள், ஹிட்லரைச் சற்று நேரம் காத்திருக்கச் சொன்னாள். அவள், ஈவாவை தொலைபேசியில் பேசுமாறு அழைத்திருக்க வேண்டும். பின்பு ஈவாவும், ஹிட்லரும் பேசினார்கள். லெவ், ஹிட்லர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான். "நல்லது, இன்று காலைவேளைக்குப் பிறகு உங்களைச் சந்திக்க வருகின்றோம். இன்று அருமையான நாள், என் ஈவா" என்று ஹிட்லர் கூறினார்.

நான் காரை ஓட்டலாமா? என்று ஹிட்லர் கேட்டார். ஹிட்லரது இந்தக் கோரிக்கை தைரியமானது என்று லெவ் நினைத்தான். "இல்லை, உங்களால் முடியாது என்று நான் நினைக்கின்றேன். நீங்கள் முன்பு ஓட்டிய காரை விட இது ஒரு வித்தியாசமான கார். உங்களுக்கு ஓட்டுநர் பயிற்சி தேவைப்படும். இந்தக் கார் எரிபொருள் கலன்களால் இயங்குகின்றது, இது காரின் மின் மோட்டார்களை இயக்கத் தேவையான மின்சாரத்தை உருவாக்குகிறது. நீங்கள் இந்தக் காரை ஓட்டுவதற்கு எளிதாகக் கற்றுக்கொள்ளலாம், ஆனால் நீங்கள் அந்தச் சலுகையைப் பெற தகுதியடைய வேண்டும். முற்பிதாக்கள், அனைவருக்கும் கார்களை வழங்குவதில்லை என்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். சமுதாயக் கார்கள் இங்கு எளிதாகக் கிடைக்கும். பின்பு ஏதேனும் ஒரு நாள் நீங்கள் அதனைப் பயன்படுத்தலாம்" என்று லெவ் கூறினான்.

அவருக்குத் தேவையான ஓவியப் பொருட்களை வாங்கும் இடத்திற்கு அவர்கள் சென்றனர். "பணத்திற்காக நான் என்ன செய்வது. என்னிடத்தில் பணம் இல்லை, எனக்குத் தேவையான இந்தப் பொருட்களை நான் எவ்வாறு வாங்குவது?" என்று ஹிட்லர் கேட்டார்.

"அவைகளை இலவசமாகவே பெற்றுக்கொள்ளலாம். இந்த உலகில் அனைத்தும் இலவசமாகக் கிடைக்கும். உங்கள் வீடும்கூட உங்களுக்கு இலவசமாகவே வழங்கப்பட்டு உள்ளது. உங்களுக்கான ஆடைகளும் அப்படியாகவே வழங்கப்படுகின்றன. இங்கு நாங்கள் அனைவருமே ஒருவருக்கொருவர் சேவை செய்துகொள்கிறோம். அடுத்த வாரம், நீங்கள் இங்குள்ள ஓர் உள்ளூர் தொழிற்சாலையில் உங்களின் நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும். உங்களுக்கான முதல் வாரத்தின் கற்பித்தல் பயிற்சி முடிந்துவிடும், அதன்பிறகு நீங்கள் ஏதேனும் ஒரு வகையில் இந்தச் சமூகத்திற்கான உங்களது சேவையை வழங்க வேண்டும். ஏற்ற தருணம் வரும்போது உங்களின் அப்பா, அம்மாவிற்கான வீடுகளைக் கட்டுவதற்கு உங்களால் முடியும். நாள் முழுவதும் யார் ஒருவரும் எந்த ஒரு வேலையையும் செய்யாமல் வெறுமனே அமர்ந்திருப்பதை இங்கு நீங்கள் காணமுடியாது. இந்தத் தொழில்நுட்ப யுகத்தில் ஆக்கப்பூர்வமாக என்ன செய்யமுடியும் என்பதை அறிய நாங்கள் மாலை வேளைகளில் கற்கின்றோம். ஏதேன் பழத்தை உண்ணும் ஒவ்வொருவரும் மிக விரைவாகக் கற்றுக்கொள்கிறார்கள். நீங்கள் எந்த வகையில் சேவைசெய்யலாம் என்பதை அறிந்துகொள்வதற்கு ஒவ்வொரு நாளின் இரவிலும் படிக்க வேண்டும்" என்று லெவ் கூறினான்.

ஹிட்லர் படிக்க வேண்டும் என்று லெவ் கூறியது அவருக்குப் பிடிக்கவில்லை என்பது லெவ்வுக்கு அப்போதே தெரிந்தது. அவர் தனது பழைய மகிமையில் ஒரு பகுதியையேனும், மீண்டும் பெறுவதற்காக என்ன செய்யலாம் என்பது குறித்துத் திட்டமிடவே விரும்பினார். துரதிர்ஷ்டவசமாக, ஹிட்லர் அத்தகைய முயற்சியில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறவில்லை, அதனால் அவர் வருத்தமுற்றார். எப்படியிருந்தாலும், அவருக்குத் தேவையானப் பொருட்களை வாங்கும் இடத்திற்குச் சென்று, தனது ஓவியக் கலையைத் தொடர்வதற்குத் தேவையானவைகளை அவர் தேர்ந்தெடுத்தார். மேலாளராக இருந்தவருக்கு நன்றிகூறினார். அவர் வாங்கினப் பொருட்களுடன் காருக்குத் திரும்பி ஈவாவையும், ரெபெக்காளையும் பார்ப்பதற்காகக் கிளம்பினார்கள்.

அவருக்குத் தேவையானவைகளை ஹிட்லர் பெற்றுக்கொண்டது நல்லதொரு மனநிலையை மீண்டும் அவருக்குத் தந்தது. அவர்கள் ஈவாவின் வீட்டை அடைந்ததும், ஹிட்லர் காரை விட்டு வேகமாக இறங்கிச்சென்று வீட்டின் கதவைத் தட்டினார். ஈவா கதவைத் திறந்தபோது,

ஒருவரையொருவர் முத்தமிட்டு வாழ்த்துக்களைக் கூறிக்கொண்டார்கள். ஈவாவின் முகம் பிரகாசமாக இருந்தது. அவர் ஹிட்லரைப் பார்ப்பதற்கு ஆவலாக இருந்தார். இந்த உலகில் அவரை நேசிப்பவள் அவள் மட்டுமே என்று தோன்றியது அல்லது குறைந்தபட்சம் பார்ப்பதற்கு அப்படித் தோன்றியதாக லெவ் எண்ணினான்.

## ஈவாவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது

ரெபெக்காள் விரைவாக வெளியே வந்து லெவ்வை வரவேற்றாள். லெவ், ரெபெக்காளை முத்தமிட்டான். அவளைப் பார்ப்பது என்பது லெவ்விற்கு எப்போதும் மகிழ்ச்சியையே தந்தது. ரெபெக்காள் முன் எப்போதையும் விட அழகாகவும், மிகவும் கனிவாகவும், வசீகரமாகவும் இருந்தாள். "இங்கே நீ, ஈவாவை எப்படி சமாளித்துக் கொண்டிருக்கிறாய்? ஈவா உயிர்த்தெழுந்து திரும்பியது தொடர்பாக, சமூகத்தில் இருந்து உனக்கு ஏதேனும் பிரச்சனைகள் ஏற்பட்டதா?" என்று லெவ் கேட்டான்.

"ஆமாம், ஹிட்லர் திரும்பி வந்துவிட்டார் என்று தெரிந்த பிறகு, உயிர்த்தெழுதல் பட்டியலில் ஈவாவின் பெயர் இருப்பதை நேற்று ஒருவர் கண்டுபிடித்துவிட்டார். நீங்கள் ஹிட்லருக்கு உதவி செய்கிறீர்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்ததால், நான்தான் ஈவாவுக்கு அடைக்கலம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும், அவர்கள் விரைவில் சரியாக யூகித்துவிட்டனர்."

"வீட்டின் வாசலுக்கு வெளியே ஜனங்கள் கூடினர். எந்த ஒரு வகையான வன்முறைக்கும் உடனடியாகத் தண்டனை கிடைக்கும் என்று அவர்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தார்கள், எனவே அவர்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டனர். யாரும் வன்முறையைக் கையாளவில்லை; இருப்பினும், ஈவா இங்கு இருப்பதற்கு அவர்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். இந்த உன்னதமான சமூகத்தில் இருப்பதற்கு ஈவா தகுதியற்றவர் என்று அவர்கள் எண்ணினார்கள். ஈவா நடந்துகொண்டிருந்தவைகள் அனைத்தையும் கண்டு மிகவும் பயந்தார். இதுவரையிலும் நடந்திருந்த எல்லாவிதமான தீமைகளுக்கும் ஈவா பொறுப்பேற்றுக்கொள்வதில் இருந்து, ஏமாற்றி தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணியிருந்தார். எல்லாக் காலத்திற்குமான மிகப்பெரிய கொலைகாரர்களில் ஒருவருடன் தொடர்பு கொண்டிருந்ததன் மூலம் அவளும் குற்றவாளி என்று ஜனங்கள் உணர்ந்திருந்தனர்" என்று ரெபெக்காள் கூறினாள்.

இவர்கள் இருவரும் உயிர்த்தெழுந்து வருவதற்கு இவ்வளவு அழகான இடமா? என்று லெவ்வும் கூட யோசித்திருந்தான். இருப்பினும், ஒவ்வொரு இடமும் இப்போது அதனதன் அழகைக் கொண்டிருக்கிறது மற்றும் அனைத்து இடங்களும் கிறிஸ்துவின் ஆட்சியின் கீழ் இருக்கின்றன, எனவே அவர்கள் ஹிட்லருக்கும், ஈவாவிற்கும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும். மனுக்குலத்திற்கு எதிரான ஹிட்லரின் பாவங்களை ஜனங்கள் சரியாக நினைவில் கொண்டிருந்தாலும், குறைந்தபட்சம் அவர்கள் இருவரையும் ஞானமாக அணுகும் கிறிஸ்துவின் வழிமுறைக்கு விட்டுவிடுவதற்கு ஜனங்கள் தயாராக இருந்தனர். அனைவருமே ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும்; தாங்கள் செய்த பாவங்களுக்காகத் தங்களது சொந்த வாழ்க்கையையே அர்ப்பணிக்க வேண்டியிருக்கும். அப்படி அர்ப்பணித்தாலும், அவர்கள் செய்திருந்த மலையத்தனையானப் பாவங்கள் துடைத்தொழிக்கப்படும் என்று எண்ணிவிடக் கூடாது.

ஹிட்லரும், ஈவாவும் தாங்கள் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டதில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தனர். இருப்பினும் அவர்கள் இருவரும் சமூகத்தின் நிராகரிப்பினால் சிரமப்பட்டனர். நாசி அதிகாரிகள் தங்களின் சீருடைகளை அகற்றிவிட்டு, சாதாரண ஜனங்களைப் போல சமூகத்துடன் கலந்துவிட்டால் தங்களை யாரும் கண்டுகொள்ள மாட்டார்கள் என்று நம்பி அவ்வாறு செய்திருந்தார்கள். அதனைப் போலவே தாங்கள் செய்த மோசமானக் குற்றங்களை ஜனங்கள் மறந்துவிடுவார்கள் என்று ஹிட்லரும், ஈவாவும் நம்பினர். ஆனால் "மனிதர்கள் செய்யும் தீமை, அவர்களுக்குப் பிறகும் நீண்ட காலங்கள் வாழ்கின்றன" என்ற உண்மையை அவர்கள் மறந்துபோயினர்.

ஹிட்லரும், ஈவாவும் பெருமை மற்றும் மகிமையோடு வாழ்ந்துகொண்டிருந்த அவர்களுடைய கடந்தகாலத்தில், பிற்காலத்தில் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவர்கள் உயிர்த்தெழுந்து ஜீவனுக்குத் திரும்புவார்கள் என்றும், அவர்கள் செய்த பாவங்களுக்கான அவமானத்தையும், கேவலமான நிலையையும் சுமக்க வேண்டியிருக்கும் என்று கற்பனைகூட செய்து பார்த்திருக்க மாட்டார்கள்.

உயிர்த்தெழுதலைப் பற்றியும், அதன் பின்பு அவர்களது பாவங்கள் அவர்களைப் பின்தொடர்ந்து வரும் என்ற உண்மையைப் பற்றியும் அவர்கள் அறிந்திருந்தால், அது அவர்கள் வாழ்க்கையின் போக்கை மாற்றியிருக்கலாம். ஒருவேளை இப்போதும் அவர்களுக்கு விருப்பமானதைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் நித்திரையாகிய மரணத்திலேயே நிரந்தரமாக இருக்க விரும்பியிருக்கலாம். ஆனால் "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" என்ற தேவனுடைய வார்த்தையானது நிறைவேறி வருகின்றது.

## லெவ் மற்றும் ரெபெக்காள் நடப்பதற்கு வெளியே செல்லுதல்

ரெபெக்காளும், லெவ்வும் மற்றொரு நடைபயணத்தை மேற்கொள்ளவும், அடால்ஃப் மற்றும் ஈவாவிற்குமான தனிப்பட்ட நேரத்தை வழங்கவும் முடிவுசெய்து, சற்று நேரம் வெளியே சென்று நடப்பதற்குப் புறப்பட்டார்கள். சமுதாயம் அழகாக இருந்தது மற்றும் சாலையில் நடந்து செல்வது புத்துணர்ச்சியூட்டுவதாக இருந்தது. லெவ், ரெபெக்காளிடம் "நாம் இருவரும் கடைசியாக சந்தித்துச் சென்ற பின்பிருந்து, ஈவா உன்னிடம் சரியாக நடந்து கொள்கின்றாரா?" என்று கேட்டான்.

"தன்னை அதிகமாகத் தற்காத்துக் கொள்ளும் பழைய மனநிலையே இன்னும் அவருக்கு இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஜனங்கள் மீண்டும் முந்தின பரிபூரண நிலைக்குத் திரும்பும்போது (மீளுருவாக்கம்) ஒரு முழுமையான வாழ்க்கையை அடைகிறார்கள். மனுக்குலம் முதலில் ஒருவரோடு ஒருவர் ஒப்புரவாகுதலுக்குள் வரவேண்டும். இக்காரியம் மனுக்குலத்திற்கு ஒரு பெரும் சவாலாக இருக்கும். இறுதியாக மனுக்குலம் தேவனோடு ஒப்பரவாக வேண்டும். எப்படி இருப்பினும், கடந்த காலத்தில் பாதுகாப்பான சூழ்நிலையில் ஈவா இருந்ததைப் போலவே இப்போதும் இருக்க விரும்புகிறார். அடால்ஃப் உடனான வாழ்க்கையிலேயே தனது சுயத்தைத் திருப்திபடுத்த முயற்சிக்கிறார். முந்தைய உலகில் ஈவா, ஹிட்லருடன் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்ற அவரது ஆசை நிராசையானது. அப்போது ஈவா இழந்திருந்த மகிழ்ச்சியானத் தருணங்களை, இப்போதைய உலகில் ஹிட்லருடன் உருவாக்க முயற்சிப்பதில் மட்டுமே நிகழ்காலம் அவருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது" என்று ரெபெக்காள் கூறினாள்.

"பல நாட்களாக மாட்டு வண்டிகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த மில்லியன் கணக்கான ஜனங்களையும், பேன், பட்டினி, வெயில் மற்றும் குளிர் போன்றவைகளால் நிரம்பிய மனிதாபிமானமற்ற வதை முகாம்களையும், கால்நடைகளைவிட மோசமாக ஜனங்களை நடத்தினதையும் நினைக்கும்போது - ஹிட்லரது வழிகாட்டுதலின் கீழ் நடந்த மனிதர்களின் மீதான பரிசோதனைகள் விவரிக்க முடியாத அளவுக்குக் கொடூரமானது. இந்த அனைத்து நினைவுகளும் இந்த மனிதனுடன் நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ளன. இது மனுக்குல வரலாற்றில் ஈடு இணையற்ற வகையில் உணர்வுகளை வெளிப்படுத்தாத, குறிப்பாக அன்பினை வெளிப்படுத்தாதபடி, திட்டமிடப்பட்ட கொலையாக இருக்க வேண்டும்" என்று ரெபெக்காள் தொடர்ந்து பேசினாள்.

"போர் முடிந்த பிறகும்கூட, எதிரிப் படைகள் வந்து யூதர்களை விடுதலைசெய்யும் வரையிலும், ஜெர்மனியர்கள் இந்த மரண முகாம்களை இயக்கத்தில் வைத்திருந்தனர். மேலும் யூதர்கள் கொல்லப்பட்டு, தகனம்செய்யப்படாமல் இருப்பதற்கு ஒரு நாளைக்கூட அவர்கள் விட்டுவிடத் தயாராக இல்லை. இன்னும் அதிகமான யூதர்களை அந்த ஒரு நாளில் கொன்றுவிட முடியும் என்றே நினைத்தனர்" என்று லெவ் கூறினான்.

"நான் சகித்துக்கொண்டு இங்கிருப்பதை ஒரு காரணம், ஒரே ஒரு காரணம் மட்டுமே, சாத்தியமாக்கியது. அது என்னவென்றால் ஹிட்லர், சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டிருந்தார் என்பது மட்டுமே. இதன் அர்த்தம், ஹிட்லருடைய விருப்பத்திற்குச் சாத்தான் மட்டுமே பொறுப்பல்ல. மாறாக ஹிட்லரும் சிரம் தாழ்த்தி முழுவதுமாக, தன் எஜமானாகிய சாத்தானுக்கு முன்பாக தன்னை விற்றுவிட்டார். இருப்பினும் ஒரு முறை சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டால், அவருடைய சொந்த மனிதநேயமானது வேறொரு போக்கை அவருக்குக் கட்டளையிட்டு இருந்தாலும்கூட, சாத்தானின் தீமையான வழியையே தொடர்ந்து பின்பற்றி இருப்பார்" என்று லெவ் விளக்கினான்.

லெவ்வும், ரெபெக்காளும் வீட்டிற்குத் திரும்பிய பிறகு, சிலர் கூட்டமாக ஈவாவின் வீட்டை நோக்கி வருவதை லெவ் பார்த்தான். ஜனங்கள் வீட்டைச் சூழ்ந்து கொள்வதற்கு முன்பாகவே, ஹிட்லரை அந்த இடத்திலிருந்து அகற்றவேண்டும் என்று லெவ் முடிவெடுத்தான். பின்பு இருவரும்

அங்கிருந்து வெளியேறி காருக்குச் சென்றனர். கார் கண்ணாடியின் வழியாக, ஜனங்கள் ஈவாவின் வீட்டு வாசலில் நிற்பதை லெவ் கண்டான். ஜனங்கள், ரெபெக்காளிடம் தாங்கள் அவர்களை கண்காணித்துக் கொண்டு இருப்பதாகவும், ஈவா இங்கு இருப்பதையும், ஹிட்லர் அவரைச் சந்திப்பதற்கு இங்கு வருவதையும் தாங்கள் விரும்பவில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க மட்டுமே இங்கு வந்ததாகக் கூறினர்.

லெவ் அவர்களைக் குற்றம்சாட்டினார் என்று சொல்லமுடியாது. தனது முந்தைய வாழ்க்கையின் அநேகத் தருணங்களில், ஹிட்லர் யூதர்களுக்குச் செய்த எண்ணற்ற தீமைகளில், சிலவற்றையாவது அவருக்குத் திருப்பித் தரவேண்டும் என்று லெவ் விரும்பியிருக்கிறான். எப்படியாயினும் இப்போது எல்லாக் காரியங்களையும் கிறிஸ்து சிறப்பாகக் கையாளுவார் என்று லெவ் அறிந்திருந்தான். ஹிட்லருக்கு எதிரான கிளர்ச்சிகளோ, கூச்சல்களோ எதுவுமே இல்லை. ஆனாலும் வெறுப்புணர்வு இன்னும் அவரை இறுக்கமாக பற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. மற்றவர்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்துகொண்டிருக்கையில், ஹிட்லரால் அவரது கடந்த காலத்தின் குற்ற உணர்ச்சியிலிருந்து விடுபட இயலவில்லை. மில்லியன் கணக்கானோர் அவரை நோக்கிப்பார்க்கக் கூடும். இவரே தங்களது பிள்ளைகளைக் கொன்றவர் என்பதையும், தங்களது குடும்பங்களை அழித்தவர் என்பதையும், தங்களின் வாழ்க்கையைக் கொடூரமாகவும், வஞ்சகமாகவும் முடிவுக்குக் கொண்டுவந்தவர் என்பதையும் தெரிந்துகொண்டிருப்பர். ஹிட்லரது கொலை நடவடிக்கைகளில் அவருடன் மகிழ்ச்சியுடன் இணைந்து பணியாற்றியவர்கள்கூட, இப்போது அதிலிருந்து விலகியிருப்பதையே, எல்லாவற்றிற்கும் மேலாக ஹிட்லரிடமிருந்து விலகியிருப்பதையே விரும்புவார்கள். ஹிட்லர் எவ்வாறு அவரது எல்லாப் பாவங்களையும் குறைத்துக்கொண்டு, அவரது வாழ்க்கையை வாழ்வார் என்று லெவ் ஆச்சரியப்பட்டான். அவரால், அவரது பாவங்களைக் குறைத்துக்கொண்டு கண்டிப்பாக வாழமுடியும், ஆனால் இதுவரையிலும் அவரிடம் மனம் திரும்புவதற்கு ஏதுவான எந்த ஒரு மனமாற்றத்தையும் காணமுடியவில்லை.

சிறிது நேரத்தில் லெவ்வும், ஹிட்லரும் வீட்டிற்குத் திரும்ப எண்ணினர். கூட்டம் கலைந்துவிட்டதா என்று அறிந்துகொள்வதற்காக லெவ், ரெபெக்காளை அழைத்தான். அவர்கள் எந்தவொரு வன்முறையிலும் ஈடுபடாமல் கலைந்துசென்றிருந்தனர் என்பதை அறிந்து லெவ் நன்றியுடன் காணப்பட்டான். அவர்கள் வன்முறையில் ஈடுபடாமல் சென்றிருந்தாலும், ஹிட்லரின் செயல்பாடுகளிலும், அவர் ஈவாவைச் சந்திப்பதற்கு இங்கு வருவதையும் அவர்கள் வெறுக்கின்றனர் என்பதைத் தெளிவுபடுத்தி இருந்தனர். இது ஈவாவை அதிர்ச்சிக்குள்ளாக்கி, அவளைக் கவலையடையச் செய்திருந்தது. இதுவே அவரது முதலாம் வாரம் என்பதாலும், ஏற்கெனவே குற்றவுணர்வினால் உண்டானச் சுமையே கூடுதல் கனத்தை ஈவாவிற்குக் கொடுப்பதாக இருந்தது. அந்தப் பகுதியில் நாசிய அமைப்பின் மீது பரிதாபம் காட்டும் சிலர் இருக்கலாம், ஆனால் அவர்கள் யாரும் அதை விளம்பரப்படுத்தவில்லை. இந்தப் புதிய சமூகத்தில் ஹிட்லர் நண்பர்களைப் பெறுவது என்பது கடினமாக இருக்கும். மேலும் அதற்கு அதிக நாட்கள்கூட எடுக்கலாம். இருப்பினும் தான் விரும்பும் காரியங்களை நடப்பிப்பதற்காக, தன்மீது பரிதாபப்படும் இரகசிய ஆதரவாளர்களைப் பெறும் தனக்கான நேரம் வரும்வரையிலும், எப்படிக் காத்திருப்பது என்பது ஹிட்லருக்கு நன்றாகவே தெரியும். நண்பர்களைப் பெறுவது என்பதும் அவரது யுத்திகளில் ஒன்றாகவே இருக்கும் என்று லெவ் எண்ணினான். தான் அடைய விரும்பும் இடத்தை அடைவதற்கு ஜனங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது அவரது உறுதியான ஆசையாக இருந்தது. அவரது யுத்திகளில் எந்த ஒரு மாற்றத்தையும் லெவ் இதுவரை காணவில்லை. இவைகளே ஹிட்லரைக் குறித்து லெவ் வருந்துவதற்கான காரணமாக இருந்தது.

அதற்கடுத்த வாரம், ஹிட்லர் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் தன்னார்வத் தொண்டு செய்யவிருந்தார். லெவ் வற்புறுத்தியும் ஹிட்லர் அந்த வேலைக்குத் தேவையான எந்த ஒரு படிப்பையும் படிக்கவில்லை. ஹிட்லர் அந்த வேலையைச் செய்வதில் தோல்வி அடைந்தால், மற்ற எந்த ஒரு வேலையையும் செய்யாமல் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார் என்று அவர் எண்ணுவதாக லெவ் நினைத்தான். இப்படியான வேலைகளைச் செய்வது தன்னுடைய கௌரவத்திற்குக் கீழானது என்று ஹிட்லர் நினைத்தார்.

வேலையிடத்தில் எந்தவொரு அசம்பாவிதமும் நடக்காது பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக லெவ், முதல் சில நாட்கள் வரையிலும் ஹிட்லரைத் தானே அழைத்துச் செல்லுவதற்கு முடிவெடுத்தான். அவர்கள் இருவரும் தொழிற்சாலையை அடைந்தனர். ஹிட்லர் இனி அங்குதான் பணியாற்றப் போகிறார் என்பது முன்பே அங்கிருந்தவர்களுக்கு எச்சரிக்கையாகக்

கூறப்பட்டிருந்தது. அநேகக் கோபம் நிறைந்த முகங்களைப் பார்த்தபோது ஹிட்லர் பதட்டமடைந்தார். அந்தத் தொழிற்சாலையை நிர்வகிப்பவர், தயாரிக்கப்பட்ட ஆடைகளை ஆலையின் மற்றொரு பகுதிக்கு எடுத்துச்செல்ல பயன்படுத்தும், போர்க் லிப்டை (பாரமான சுமைகளை எடுத்துச் செல்லும் வண்டி) இயக்கும் வேலையை ஹிட்லருக்குக் கொடுப்பதற்குத் தீர்மானித்திருந்தார். பெரும்பாலான நபர்களுடன் தொடர்புக்குள் வரும் தேவை, இந்த வேலையில் ஹிட்லருக்கு இருக்காது என்று அவர் எண்ணினார். மேலும் சில நாட்கள் கழித்து அந்தப் பகுதியில் வேலைசெய்பவர் ஹிட்லர் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடும் என்றும் எண்ணினார்.

## ஹிட்லருக்கான பணி நியமிக்கப்படுதல்

ஹிட்லருக்கான வேலை கொடுக்கப்பட்டதும், லெவ் தொழிற்சாலை மேலாளரிடம் பேசினான். முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் அவர்கள் தன்னைத் தொடர்புகொண்டு ஹிட்லரை எவ்வாறு நடத்தவேண்டும் என்பது குறித்த சில முக்கிய வழிமுறைகளைக் கூறியதாக அந்தப் பெண்மணி லெவ்விடம் கூறினார். மேலும் ஹிட்லரின் மீது ஏதேனும் தாக்குதல் நடத்த யாராவது முற்பட்டால், தாக்குதல் நடத்துபவர்களின் கைகள் அல்லது கால்கள் செயலிழக்க நேரிடும் என்றும் பணியாளர்களுக்கு அறிவுரை கூறியிருப்பதாகவும் அப்பெண்மணி லெவ்விடம் கூறினார். ஹிட்லருக்கு அவருடைய பணியைச் செய்வதற்கான முழுமையான வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். அவருக்கான நியாயத்தீர்ப்பானது யாருடைய கைகளிலும் இல்லை, அது கிறிஸ்துவிடமே உள்ளது. எந்த ஒரு அசம்பாவிதமும் நடக்காமல் இந்த நாள் அமைதியாகச் செல்வதற்கு இத்தகைய முன்னேற்பாடுகளே உதவியது என்று லெவ் நினைத்தான். இந்த முன்னேற்பாடுகளைச் செய்யாமல் இருந்திருந்தால் ஹிட்லர் இந்தக் கட்டடத்திற்குள் காலடிவைத்த மறுக்கணமே வன்முறை வெடித்திருக்கும்.

ஹிட்லர் இப்போது வழக்கமான ஒரு வாழ்க்கை முறைக்கு வந்துவிட்டதால், அவருடன் தான் இருக்கப்போகும் நாட்கள் மிகக் குறைவாகவே இருக்கும் என்பதை லெவ் உணர்ந்துகொண்டான். ஹிட்லரது முதல் வார வாழ்க்கை முழுவதையும் லெவ் அவருடன் செலவிட்டிருந்தான். இத்தகையச் சூழ்நிலையிலும் இராஜாவுக்குச் சேவைசெய்வது சிறந்த சிலாக்கியமாக லெவ்விற்கு இருந்தது. லெவ் தன் சார்பிலிருந்து சிறந்தவற்றைக் கொடுப்பதற்குக் கடினமாக உழைத்திருந்தான். இருப்பினும் பல தருணங்களில் லெவ்வினுடைய பொறுமையானது இழந்துபோகும் வரைக்கும் சோதிக்கப்பட்டிருந்தது.

அன்று மதியம் ஹிட்லர் வீட்டிற்குத் திரும்பியதும், தோட்டத்தில் தன்னுடைய நேரத்தை வீணாக்காமல் தனது அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டார். சிறிது நேரம் சென்றப் பின்னர் "உங்கள் முதல் நாள் வேலை எவ்வாறு சென்றது?" என்று லெவ், ஹிட்லரிடம் கேட்டான்.

"கண்டிப்பாக மோசமாகத்தான் இருந்தது. அனைவரும் என்னை வெறுக்கின்றனர் என்று நான் நம்புகிறேன். தீவிரமாக என்னை உற்சாகப்படுத்திய மில்லியன் கணக்கான ஜனங்கள் இப்போது எங்கே? மில்லியன் கணக்கானவர்களின் செல்லப் பிள்ளையாக இருந்த நான், இப்போது இந்தப் பூமியில் மிகவும் மோசமான மனிதனாக வீழ்ந்து கிடக்கிறேன். இது எப்படிச் சாத்தியமாகும்? என்னுடைய கடந்தகால வாழ்க்கைக்கும், இப்போதைய வாழ்க்கைக்கும் இடையில் என்ன நிகழ்ந்தது? நான் என்னுடைய முந்தைய நாட்களுக்குத் திரும்பிச்செல்வதையே விரும்புகிறேன்" என்றார்.

"இப்போது நீங்கள் கற்றுக்கொண்ட எல்லாவற்றையும் பற்றின அறிவோடு முந்தைய நாட்களுக்குள் திரும்பிச்செல்ல முடிந்தால், அது உங்களை ஒரு சாதாரண மனிதனாக வாழவைக்கும் என்று நினைக்கின்றீர்களா? யூதர்களுக்கு எதிரான உங்களது தீமைகளை நிறுத்துவீர்களா?" என்று லெவ் கேட்டான்.

இந்தக் கேள்வி ஹிட்லரை தடுமாற்றத்திற்குள்ளாகியது. அவர் திக்கியவாறு "இந்த அறிவு என் மீது எந்த வகையானத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை நான் எப்படி அறிவேன்" என்று கேட்டார்.

"ம்ம்... சரிதான், இப்போது உங்கள் மீது காட்டப்பட்ட இரக்கம் மற்றும் அன்பிலிருந்து, நீங்கள் எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றால் அது மிகவும் வருத்தத்திற்குரியது. நீங்கள் என்ன

சொல்கிறீர்கள் என்றால், இன்னமும் நீங்கள் உங்களது தீயச்செயல்கள் மீது உடன்பாடு கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் செய்தவைகள் எல்லாம் தீமையானவைகள் என்று உங்களுக்குத் தெரியும், உங்கள் அதிகாரிகளுக்கும் தெரியும், முழு ஜெர்மனிய தேசத்திற்கும்கூடத் தெரியும், அவைகள் எல்லாம் தீமையானவைகள் என்று. ஆனாலும் உங்களால் முடியும் என்றால்கூட, நீங்கள் உங்களது கடந்தகாலத்தின் தீமையான செயல்களை மாற்றிக்கொள்ள மாட்டீர்கள். எவ்வளவு பரிதாபத்திற்குரியது அடால்ஃப். இப்போது சாத்தான் பாதாளத்தில் தள்ளி அடைக்கப்பட்டு உள்ளான். ஆனால் அவனுடைய இருதயத்தை உங்களிடம் விட்டுச் சென்றுவிட்டான். உங்களின் இருதயத்தில் இரக்கமோ அல்லது அன்போ இல்லையா? யாரோ ஒருவர் உங்களின் குழந்தையையோ, குடும்பத்தினரையோ அல்லது ஈவாவையோ கொன்றுபோடுவதற்காக மாட்டுவண்டியில் அழைத்துச்சென்றால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்? நீங்கள் செய்த குற்றங்கள் எப்பேர்ப்பட்ட இழப்பினை உண்டாக்கியுள்ளது என்றும், அதனால் உங்களுக்கு இருக்கவேண்டிய குற்றவுணர்வினையும் பற்றி உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையா?" என்று லெவ் கேட்டான்.

"நீங்கள் ஏன் நான் செய்த குற்றத்தைப் பற்றி மட்டும் கூறுகிறீர்கள். யூதர்கள் எங்களது தேசத்திற்குத் தீமைகளைச் செய்யவில்லையா?" என்று ஹிட்லர் கேள்வி எழுப்பினார்.

"யூதர்கள் என்ன தீமைசெய்தார்கள். ஒரு சில யூதர்கள் வேண்டுமென்றால் தங்களது வாழ்க்கையில் சரியானதைச் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் அது அனைவரையும் - அனைத்து ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் குற்றவாளிகளாக்காது, அப்படித்தானே?" என்றான்.

"குழந்தைகளாய் இருந்தாலும் அவர்கள் அனைவரும் யூதர்கள்தானே, எனக்கு அறிவுரைக் கூறுவதை நிறுத்துகிறீர்களா? எப்போது இங்கிருந்து கிளம்புகிறீர்கள்?" என்று ஹிட்லர் கோபமாக லெவ்விடம் கேட்டான்.

"நீங்கள் கேட்பது சரிதான். நான் முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் அவர்களின் அழைப்பிற்காகக் காத்திருக்கிறேன். எப்போது வேண்டுமானாலும் அவர் என்னை அழைக்கலாம். என்னால் இயன்றவரை நான் உங்களுக்கு உதவிவிட்டேன் என்று நினைக்கிறேன். உங்களால் கற்பனைசெய்து பார்க்கமுடியாத அளவிற்கு சிறந்ததொரு வழிநடத்துதலை நீங்கள் பெற்றுள்ளீர்கள். முற்பிதாக்கள் உங்களுக்கு வழங்கிய ஆவிக்குரிய வல்லமைகளால் நீங்கள் பாதுகாக்கப்பட்டீர்கள். ஜனங்கள், உங்களைக் கொன்றுவிடுவார்களோ என்று நான் அஞ்சினேன். அவர்களில் பெரும்பாலானவர்களின் அன்புக்குரியவர்களையும் நீங்கள் கொலைசெய்திருக்கிறீர்கள். நீங்கள் கொலைசெய்தவர்களில் சிலர் ஜீவனுக்குள் திரும்பியுள்ளனர். அவர்கள் அனைவரும் உங்களைத் தேடி வருவார்கள். உங்களது அணுகுமுறையை நீங்கள் மாற்றிக்கொள்ளவில்லை என்றால், இந்த நூற்றாண்டில் நீங்கள் நீடித்திருக்க மாட்டீர்கள் என்று நான் அஞ்சுகிறேன்" என்றான்.

"நல்லது, ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். ஜீவனுக்குள் திரும்பவேண்டும் என்று நான் கேட்கவில்லை. அப்படித் திரும்புவதில் எனக்கு விருப்பமும் இல்லை. என் விருப்பத்திற்கு மாறாகவே, நான் ஜீவனுக்குள் திரும்பியிருக்கிறேன். நான் மரித்த நிலையில் இருந்தாலே நன்றாக இருந்திருக்கும். அப்படி இருந்திருந்தால் என்னை வெறுக்க விரும்புகிறவர்கள், வெறுத்துக் கொண்டே இருந்திருக்கலாம். நான் மரித்த நிலையில் இருப்பதால் அதைப்பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை" என்று ஹிட்லர் கூறினார்.

"மற்றவர்களால் வெறுக்கப்படுவது எத்தகைய உணர்வினைக் கொடுக்கும் என்று உங்களுக்குத் தெரியாது, லெவ். அனைவரும் உங்களை நேசிக்கிறார்கள், அதனால் நான் எவ்வாறு உணர்கிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றான்.

"ஜனங்கள் உங்களை வெறுக்கமாட்டார்கள், அடால்ஃப். அது உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்கின்ற கட்டுக்கதை. நீங்கள் செய்த தீமையான செயல்களையே அவர்கள் வெறுக்கிறார்கள். நீங்களும் அத்தகைய செயல்களை வெறுக்கவேண்டும். நீங்கள் நீதியை நேசித்து, அக்கிரமத்தை வெறுக்கக் கற்றுக்கொள்ளத் தொடங்குவீர்களானால், ஜனங்களும் உங்களை நேசிக்கக் கற்றுக்கொள்வார்கள். உங்களை மற்றவர்கள் நேசிக்க வேண்டுமென்றால், நீங்களும் மற்றவர்களை நேசிக்கவேண்டும். பாம்பு தோலை உரிப்பதுபோல், நீங்களும் உங்களது தீயச் செயல்களை உங்களை விட்டகற்றிவிட வேண்டும். உங்களது கடந்த காலத்தை

எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் நியாயப்படுத்துகின்றீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு இங்கே நீங்கள் மகிழ்ச்சியற்றவராகவே இருப்பீர்கள்" என்று லெவ் கூறினான்.

இரவு உணவிற்குப் பிறகு, தொலைபேசி மணி ஒலித்தது. லெவ் தொலைபேசியை எடுத்தான். அவனை மகிழ்விக்கும் வகையில் முற்பிதாவாகிய யோவான்ஸ்நானன் அவர்கள் இணைப்பில் வந்தார். "மாலை வணக்கம் லெவ், நீங்கள் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் சிறப்பாகச் செய்துள்ளீர்கள். அனைத்து முற்பிதாக்களின் சார்பாகவும் நான் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஹிட்லர் நல்லதொரு மாற்றத்தை அடையத் தவறியதற்கானப் பொறுப்பினை, தயவுசெய்து நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டாம். அவர் இந்த வழியையே தேர்ந்தெடுக்க விரும்பினால், நீதியை எதிர்ப்பதற்கு அவருக்கு இன்னும் அதிகமான கால அவகாசம் இருக்கிறது. நாளை, நீங்கள் ரெபெக்காளை உங்களுடன் அழைத்துக் கொண்ட பிறகு, காரை திருப்பித் தந்து விடுங்கள். அதன் பிறகு நீங்கள் இஸ்ரயேலுக்கு விமானத்தில் திரும்பலாம். இங்கு ஒருவார கால விடுமுறையில் இருப்பீர்கள். நீங்கள் இருவரும் இராஜாவுக்குத் தொடர்ந்து சேவைசெய்ய விரும்பினால், மற்றொரு பணி உங்களுக்கு அளிக்கப்படும், ஷாலோம்" என்றார்.

* * *

*"சீயோனைக் குறித்து, இன்னான் இன்னான், அதிலே பிறந்தானென்றும் சொல்லப்படும் உன்னதமானவர் தாமே அதை ஸ்திரப்படுத்துவார். கர்த்தர் ஜனங்களைப் பேரெழுதும்போது, இன்னான் அதிலே பிறந்தான் என்று அவர்களைத் தொகையிடுவார்."* **(சங்கீதம் 87:5-6)**

# அத்தியாயம் - 36

## முடிவுரை

### "சீயோனில் பிறந்தவர்கள்"

ஜனங்கள் தங்கள் காலங்களில் தங்களோடு வாழ்ந்த சிலரைக் "காணவில்லை" என்பதை விரைவிலேயே உணர்ந்துகொண்டார்கள். காணாமல் போயிருந்தவர்களில் சிலர் அவர்களது நண்பர்களாக இருந்தனர். சிலர், அவர்களை எதிரிகளாக எண்ணிக் கொண்டிருந்தவர்களாக இருந்தனர். வாழ்க்கைத் துணைகளாகவோ, பிள்ளைகளாகவோ, சகோதரர்களாகவோ, சகோதரிகளாகவோ, தந்தையாகவோ, தாயாகவோ இருந்தவர்களுள் சிலரும் காணாமல் போயிருந்தனர். நாளடைவில் காணாமல் போயிருந்தவர்கள் உண்மையில் "சீயோனில் பிறந்திருந்தார்கள்" என்பது தெரியவந்தது. "ஆட்டுக்குட்டியானவருக்கு" உண்மையாயிருந்து மரணபரியந்தம் அவரைப் பின்பற்றினவர்கள், கிறிஸ்துவின் மணவாட்டியாக, அபிஷேகிக்கப்பட்டவர்களாக, அழியாமைக்கு எழுப்பப்பட்டிருந்தார்கள்.

"சீயோனில் பிறந்தவர்கள்" உலகத்தின் ஜனத்தொகையின் பில்லியன் கணக்கானவர்களின் மத்தியில், வெகு சிலராக - "சிறு மந்தையினராக" மாத்திரமே இருந்தனர். இருப்பினும், உலகத்தில் உயிர்த்தெழுந்திருந்த அத்தனை ஜனங்களின் மத்தியிலும், இந்தச் சிறுமந்தையில் உள்ள ஒவ்வொருவரையும் பூமியில் எங்கும் காண இயலவில்லை என்பது நிச்சயமானது.

முற்பிதாக்காக்களின் அலுவலகத்திற்கு தொடர்ந்து கேள்விகள் வந்துகொண்டிருந்தன. ஒன்றன் பின் ஒன்றாக, இணையத்தில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டது. இந்த உண்மையுள்ள பரிசுத்தவான்களில் சிலர் மருத்துவர்களாகவோ, வழக்கறிஞர்களாகவோ, ஆசிரியர்களாகவோ மற்றும் பூமியின் உயர்ந்த நிலைமையிலிருந்த மனிதர்களாகவோ இருந்தாலும், பெரும்பான்மையானோர் மதிப்பற்ற நிலையில் மூடர்களாகவும், படிப்பறிவற்றவர்களாகவும், ஏழைகள் மற்றும் இழிவுபடுத்தப்பட்டவர்களாகவும் இருந்ததைக் குறித்த ஆச்சரியமளிக்கும் வகையிலான சாட்சியங்கள் வெளிவந்தன. உண்மையில் பரலோக மகிமைக்கு உயர்த்தப்படுவார்கள் என்று எதிர்பார்த்த பல போதகர்கள் மற்றும் தேவாலய உறுப்பினர்கள் தங்களை மீண்டும் பூமியில் கண்டனர். அவர்கள் கேலிசெய்து, துன்புறுத்திக் கொலைசெய்த சிலரைக் காணவில்லை என்பது அவர்களுக்கு ஆச்சரியத்தையும், வருத்தத்தையும் கொடுத்தது.

ஆனால் இதில் எந்தத் தவறும் இல்லை. கிறிஸ்துவினுடைய மணவாட்டியின் ஒவ்வொரு அங்கத்தினரையும் தேவனே தேர்ந்தெடுத்துள்ளார். பரிபூரண அன்பு மற்றும் நீதியில் அவர்கள் எட்டியுள்ள உயர்ந்த தராதரங்களின் அடிப்படையில் கவனமாகத் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இப்படிக் கனம்பெற்றவர்களுடைய இருதயங்களைத் தேவன் சோதித்தறிந்தார். பல கடுமையானச் சோதனைகள் மூலம், இவர்கள் மேலான ஜெயம்கொண்ட வகுப்பினராகக் காணப்பட்டனர்.

உயிர்த்தெழுப்பப்படும் பூமியின் மனுக்குல அங்கத்தினர் ஒவ்வொருவரும் கடந்துவரும் அனுபவங்களை, அபிஷேகம்பண்ணப்பட்ட கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பினர் அனைவரும் முன்பே கடந்துவந்ததாகக் கூறப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் ஜீவனுக்குத் திரும்பிவரும் ஒவ்வொருவரும் எதிர்கொள்ளும் எல்லாவிதமான போராட்டத்தையும் அபிஷேகம் செய்யப்பட்டவர்கள் புரிந்துகொண்டு, மனுக்குலத்திற்கு இரக்கம் காட்டி உதவுவதற்கு ஏதுவாக இருக்கும். தங்களின் முந்தைய வாழ்க்கையில் "சீயோனில் பிறந்தவர்கள்" இந்த வகுப்பாரை அறிந்திருந்தவர்களுடைய சாட்சியங்கள் இதை உறுதிப்படுத்தின.

ஜான். எ. மெகிசன் (John.A.Meggison)

கலேனா, கன்சாஸ் (Galena, Kansas)

ஜான் அவர்கள், அவர் வாழ்ந்த சமூகத்தில் ஒரு வேதாகம அறிஞராகவும் (Bible scholar), விரிவுரையாளராகவும் (lecturer) அறியப்பட்டார். வேதாகமத்தைப் பற்றிய அவரது ஆழ்ந்த அறிவு, அவரைப் பல்வேறு தேவாலயங்களில் விருப்பமான பேச்சாளராக மாற்றியது. பெரும்பாலும் போதகர்கள் தங்களது உடல் சுகவீனத்தின் காரணமாகவோ அல்லது வெளியூர் பிரயாணங்களின் காரணமாகவோ சேவைசெய்ய முடியாதபோது, தங்களது இடத்தில் சேவைசெய்ய ஜான் அவர்களை ஈடுபடுத்துவார்கள். ஜான் தன் இளம் பிராயத்தில், நியூ இங்கிலாந்தில் இருந்த எண்ணற்ற வீடுகளில் வேதாகம விளக்கவுரைகள் என்ற புத்தகத் தொகுப்பினை விற்பனைசெய்பவராக (colporteur) இருந்தார்.

பிறகு அவர் மசாசுசெட்ஸ் (Massachusetts Institute of Technology) என்ற பல்கலைக்கழகத்தில் மூன்று ஆண்டுகள் மின் பொறியியல் (Electrical engineering) படிப்பதற்காகச் சென்றார். தனது படிப்பின்போது கிரேக்க மொழியையும் கற்றுக்கொண்டார். அதனால் புதிய ஏற்பாட்டை அதன் மூலபாஷையிலேயே படித்து மகிழ்ந்தார். அவர் தேசிய அளவில் விரிவுரையாளரானார். வேதாகம வசனங்களுக்கு விளக்கவுரை எழுதினார். வேதத்தைத் தியானிப்பவர்கள் அதனைப் பயன்படுத்தினர். விளக்கவுரை அவர்களுக்கு விலைமதிப்புமிக்கதொன்றாக இருந்ததை அவர்கள் நிரூபித்தனர்.

அவர் ஒரு வேதமாணவராக இருந்த காரணத்தினால், அவரது பலியின் ஒரு பகுதியாக தாம் செய்யும் ஊழியத்திற்கு ஊதியம் பெற மறுத்தார். ஆகவே அவர் தனது வாழ்வாதாரத்திற்காக ஒரு சாதாரணமான தொழிலைச் செய்துவந்தார். அதே நேரத்தில் அவரது மாலை மற்றும் வார இறுதிகளில் தான் நேசித்து, முன்னுரிமை கொடுக்கும், வேதவசனங்களைப் போதிப்பதில் ஆசையாய் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.

அவர் பணிபுரிந்த மின் உற்பத்தி நிலையத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO) இறந்துவிட்டதால், அவருக்கு அந்தப் பதவியை வழங்கினர். இந்த வேலை தனது நேரத்தை அதிகம் எடுக்கும் என்று அவர் அறிந்தார். எனவே நிறுவனத்தின் மற்றொரு பணியாளருக்கு அந்த வேலையை கொடுக்கப் பரிந்துரைத்தார். அவர்கள் அவருடைய ஆலோசனையை ஏற்றனர். வேதாகமச் சத்தியங்களைப் பற்றிய அவருடைய பார்வை, வேதாகமச் சொற்பொழிவுகளை வழங்குவதிலும், ஆழமான ஆய்வுகளை நடத்துவதிலும் அவரை ஈடுபடுத்தியது. ஆழமான சத்தியங்களை இவர் மற்றவர்களுக்குப் பகிர்ந்துகொடுப்பதில் எப்போதும் ஆர்வமுள்ளவராய் இருந்தார். அவருடைய மென்மையான பழக்கவழக்கங்களும், தேவவசனங்களைப் பற்றியதான ஆழ்ந்த அறிவும் இணைந்து அவரை ஒரு மதிப்புமிக்க பேச்சாளராக மாற்றியது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர், தேவனைத் தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தார். மேலும் அவர் பெற்றுக்கொண்ட சத்தியங்களை "கேட்கும் காதுகள்" உள்ள எவருடனும் பகிர்ந்துகொள்ள ஆர்வமாக இருந்தார்.

அவரைப் பற்றியும், அவரைப்போலவே அர்ப்பணித்த அவரது மனைவி கிளாடிஸைப் பற்றியும் விசாரித்த பலர், பூமியில் உயிர்த்தெழுந்தவர்கள் மத்தியில் அவர்கள் காணப்படவில்லை என்று அறிந்து முதலில் ஏமாற்றமடைந்தனர். பின்பு ஜான் மற்றும் கிளாடிஸ் இருவரும் "சீயோனில் பிறந்தவர்கள்" என்பதை அவர்கள் அறிந்து மகிழ்ச்சியடைந்தனர்.

சாரா ஃபெரி, கிளாஸ்கோ, ஸ்காட்லாந்து (Sarah Ferrie, Glasgow, Scotland)

பீட்டர் மார்கென், சாராவின் கணவர் (By her fiance Peter Morgan)

அவள் எங்களுக்கு நடந்த நிச்சயதார்த்த பந்தத்தையும், என் இதயத்தையும் உடைத்துவிட்டாள். ஏனென்றால் அவள் "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்பட" மனதில்லாமல் இருந்தாள். ஆனால் நான் சாரா ஃபெரியை எப்போதும் நேசித்தேன், தொடர்ந்து நேசிப்பேன். சாராவின் உறவினர்களில் அநேகம் குழந்தைகள் இருந்ததால், அவள் "சாரா அத்தை" என்றே அழைக்கப்பட்டாள். நீங்கள் இதுவரையிலும் சந்தித்திராத மிகவும் அன்பான மற்றும் வெளிப்படையான பெண்மணியாக சாரா ஃபெரி இருந்தார்.

நான் அவளது புன்னகைக்கும் கண்களை ஒரு நொடியேனும் காணமாட்டேனோ என்று கிளாஸ்கோவின் தெருக்களில் தேடினேன். அவளது மெத்தைக் கடையில் பல வருடங்களாக வாராந்திர வேத வகுப்புகள் நடத்தப்பட்டுவந்தன. இப்போது அந்தக் கடையில்கூட அவள் இல்லை. நான் சந்தித்த அனைவரிடமும் சாராவை அவர்கள் ஞாபகம் வைத்துள்ளார்களா என்று கேட்டேன். பலர் அவளை ஞாபகத்தில் வைத்திருப்பதாக அறிந்துகொண்டேன். சாரா அத்தை ஒரு வைராக்கியமுள்ள கிறிஸ்தவப் பெண்மணியாக இருந்தாள். உற்சாகமூட்டும் வகையில் பலருக்கு சாட்சிகொடுத்தாள்.

அவள், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிற்பாடு, சாராவின் நண்பர்கள் சிலர் அவள் மனநலம் பாதிக்கப்பட்டுவிட்டதாக எண்ணி, அவளை டாக்டர். ஜான் எட்கரிடம் அழைத்துச்சென்றார்கள். டாக்டர். எட்கர், சாரா முழுமையான மனநலத்தைப் பெற்றிருப்பதாக அறிவித்தது மட்டுமல்லாமல், காலப்போக்கில் அவர் சாராவின் மத நம்பிக்கைகளையும் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

சாரா எப்பொழுதும் இனிப்பு மற்றும் பைபிள் துண்டுப் பிரதிகள் உள்ள பளபளப்பான ஒரு பட்டுப்பையை தன்னுடன் எடுத்துச்செல்வாள். அவள் செல்லும் பாதையில் உள்ள அனைவருக்கும், ரயில்களில் பயணிக்கும் பயணிகள் உட்பட அனைவருக்கும் அதனைக் கொடுப்பாள் என்று சாராவைப் பற்றிக் கூறினார்கள். தனது 54-ஆவது வயதில் சாரா, தனது மெத்தைக் கடையை விற்று விட்டாள். அதனால் அவள் தனது முழு நேரத்தையும் மிஷினரி ஊழியத்திற்கென அர்ப்பணித்தாள். வேதாகமத் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் "கோல்போர்ட்டர்" (colporteur) வேலை செய்தாள். அவள் ஊர், ஊராகப் பயணம் செய்து, சிறிய அறைகளில் வாழ்ந்துவந்தாள். தன் சாமான்கள் அனைத்தையும் ஒரு டிரங்கு பெட்டியில் வைத்திருந்தாள். தனது ஊழியங்களைத் தொடருவதற்குத் தேவையான நிதிக்காக நகைகளை விற்றுவிட்டாள். அவளது உறவினரில் ஒருவர், ஐந்து வைரங்கள் கொண்ட அவரது மோதிரத்தை விற்றதாகவும், சாராவின் ஊழியத்திற்குத் தேவையான நிதிக்காக, அதிலிருந்து ஒரு பகுதியை அவர் கொடுத்ததாகவும் ஒருவர் கூறினார். ஐந்து வைரங்களில் இருந்து, ஐந்து பேரைக் கிறிஸ்தவர்களாக மாற்றினாள்.

சாரா தனது 66-வது வயதில் இருந்தபோது, பனிமழை மற்றும் புயல் போன்றவற்றிற்கு மத்தியில், தனது மிஷினரி ஊழியங்களை மேற்கொண்டாள். அதன் விளைவாகக் கடுமையான சளி ஏற்பட்டு, அது நிமோனியாவாக மாறியது என்பதை நான் அறிந்துகொண்டேன். சிறிது நாட்களில் அவளுடைய பூமிக்குரிய ஓட்டம் நிறைவுபெற்றது. ஒரு நீண்ட தேடலுக்குப் பின், சாரா ஃபெரியை பூமியில் காணமுடியாது என்பதை உணர்ந்துகொண்டேன். சாரா தனது பரலோக மணவாளனுடன் இருந்தாள்.

டாக்டர். ஜான் எட்கர், கிளாஸ்கோ ஸ்காட்லாந்து (Doctor John Edgar, Glasgow, Scotland)

அவர் சகோதரர் ஜேம்ஸ் எட்கர் (By his brother James Edgar)

நான் மீண்டும் ஜீவனுக்குத் திரும்பியபோது, என் குடும்பத்தில் ஐந்து பேர் காணாமல் போயிருந்ததைக் கண்டேன். என் தந்தை ஜான் எட்கர், என் சகோதரர்கள் டாக்டர். ஜான் எட்கர் மற்றும் மார்ட்டன் எட்கர் மற்றும் என் சகோதரிகள் ஈவா மற்றும் மின்னா ஆகியோரைக் காணவில்லை.

கடுமையாக நோய்வாய்ப்பட்டு இரண்டரை ஆண்டுகள் என்ற குறுகிய காலப்பகுதியிலேயே மரித்துவிட்டேன். நான் என் குடும்பத்தில் நான்காவது உறுப்பினராக இருந்தேன். இதனால் எங்கள் குடும்பத்திற்கு மிகுந்த வருத்தமும், வேதனையும் ஏற்பட்டது. என் இறப்பிற்கு முன்னர் நான் கிறிஸ்தவனாக மாற விரும்பவில்லை என்பதால், என் சகோதரி மின்னா, என் மீது மிகுந்த கோபத்தோடு இருந்தார். மின்னா ஒரு நேர்மையான பிரஸ்பைடிரியன் என்ற கிறிஸ்தவப் பிரிவைச் சார்ந்தவராக இருந்தார். நான் நித்தியமாக நரக வேதனைக்குள்ளாவேன் என்று உறுதியாக நம்பினார். மேலும் என்னை மாற்றுவதற்கு எல்லா வழிகளிலும் முயற்சிசெய்தார். ஆனால் பலன் இல்லாமல் போயிற்று.

நான் உயிர்த்தெழுந்து வந்தபோது, மின்னாவையோ அல்லது மற்ற நால்வரையோ எங்கும் காண இயலவில்லை. சாரா ஃபெரி, என் தந்தையைச் சந்தித்தார். என் தந்தையையும், என் சகோதர,

சகோதரிகள் அனைவரையும் அவள் மதம் மாற்றிவிட்டதாக, என் குடும்பத்து உறுப்பினர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

என் சகோதரர் டாக்டர். ஜான் எட்கர் ஒரு பிரபலமான அறுவை சிகிச்சை நிபுணராக இருந்தார். ஜூன் 10, 1910 வெள்ளியன்று "கிளாஸ்கோ ஹெரால்டில்" அவர் மறைந்த செய்தியைக் கண்டேன்.

"கிளாஸ்கோவிலுள்ள (Clairmont Gardens) கிளார்மான்ட் கார்டன்ஸ்ஸை சேர்ந்த டாக்டர். ஜான் எட்கர் (Dr.John Edgar)-ன் மரணம் நேற்று மாலை ஒரு நர்சிங் ஹோமில் நிகழ்ந்ததை அறிவிப்பதில் வருந்துகிறோம். டாக்டர். எட்கர் கடந்த வார இறுதியில் திடீரென நோய்வாய்ப்பட்டார். திங்கட்கிழமை அன்று அறுவைசிகிச்சை செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது, இது துரதிர்ஷ்டவசமாக பயனளிக்கவில்லை. டாக்டர். எட்கர் என்பவர் மான்ஸ்வுட், பொலோக்ஷாவில் (Mansewood, Pollokshaws) மறைந்த திரு. ஜான் எட்கரின் மகன் ஆவார். மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவத் துறைகளில் ஒரு சிறந்த நிபுணராக இருந்தவர் மற்றும் தொழில்முறை வட்டாரங்களில் நன்கு அறியப்பட்டவர். அவர் 48 ஆண்டுகளுக்கு முன்பு கிளாஸ்கோவில் பிறந்தார். மேலும் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் கலை, அறிவியல் மற்றும் மருத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் பட்டம்பெற்றிருந்தார். மருத்துவத்தில் தகுதிபெற்ற பிறகு, அவர் வெளிநாட்டில் சிறப்பு முதுகலைப் படிப்புகளைப் படித்தார். மேலும் கிளாஸ்கோவுக்குத் திரும்பியவுடன், அவர் தன்னைத் தனித்துவப்படுத்திக் காட்டும் துறைகளைச் சார்ந்த மருத்துவமனைகளில் சிறப்புப் படிப்பைத் தொடங்கினார்.

"1896-ஆம் ஆண்டில் அவர், பெண்களுக்கான நல்ல சமாரியன் மருத்துவமனையில் (Royal Samaritan Hospital for Women) அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டார். அவர் இறக்கும் வரை, அவர் ஏற்றுக்கொண்ட பதவியை வகித்தார். ஆண்டர்சன் கல்லூரி மருத்துவப் பள்ளியிலிருந்து (Anderson's medical college) டாக்டர். டபிள்யூ. எல். ரெய்ட் (Doctor W.L.Reid) ஓய்வு பெற்ற பிறகு, அவருக்குப் பதிலாக டாக்டர். எட்கர் மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்தின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அங்கு அவர் கற்றுக்கொடுக்கும் முறை மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டது."

டாக்டர். எட்கர், கிளாஸ்கோ மருத்துவச் சங்கங்களின் பணிகளில் அதிக ஆர்வம் காட்டினார். அதில் அவர் அடிக்கடி கலந்துகொண்டார். மேலும் அதன் இரண்டு கிளை இடங்களில் அவர் துணைத் தலைவராக இருந்தார். இந்தச் சங்கங்களின் நடவடிக்கைகளுக்கும் மற்றும் மருத்துவப் பத்திரிக்கைகளுக்கும் பல முக்கியமான பங்களிப்புகளின் ஆசிரியராக இருந்தார். பல ஆண்டுகளாக அவர் கிளாஸ்கோவிலும், அக்கம் பக்கத்திலும் ஒரு பெரிய ஆலோசகராக இருந்தார். அவர் தனது தொழில்முறை சகோதரர்களிடம் மிகவும் பிரியமானவராகவும், கணிசமான திறமைவாய்ந்த மனிதராகவும் கருதப்பட்டார். இளம் வயதிலேயே நிகழ்ந்த அவரது அகால மரணமானது மிகவும் ஆழ்ந்த வருந்தத்திற்குரியது.

"அவரது சமீபத்திய ஆண்டுகளில் டாக்டர். எட்கர், கிரேட் பிரிட்டனில் உள்ள மக்கள் தொகை மிகுந்த நகரங்களுக்கும் மற்றும் கண்டத்தின் பல பகுதிகளுக்கும், ஊழியத்தின் நிமித்தமாக பயணம் செய்திருந்தார். அவர் மத போதனைகள் குறித்த சத்தியங்களில் ஒரு பேச்சாளராக கணிசமான புகழைப் பெற்றிருந்தார். "மரித்தவர்கள் எங்கே இருக்கிறார்கள்?" என்ற அவரது விரிவுரை நாற்பதாயிரம் பிரதிகளை எட்டியுள்ளது. சென்ற வருடம் தனது சகோதரர் மார்ட்டனுடன் சேர்ந்து அவர் பாலஸ்தீனத்திற்குச் சென்று எருசலேமில் விரிவுரைகளை வழங்கியிருந்தார். எகிப்தில் உள்ள கிரேட் பிரமிடுக்கும் இவர்கள் பயணம் செய்திருந்தனர். அதன் உட்பாதைகளை ஆராய்ந்து அளவிட சிறிது நேரம் செலவிட்டனர். அவர்களின் அறிவியல் குறியீட்டை (scientific symbolism) விவரிக்கும் ஒரு தொகுதி (volume) தற்போது அச்சிடப்படுகிறது. அதில் வேதாகமக் காலகணக்கு மற்றும் காலங்களைப் பற்றின தீர்க்கதரிசனங்களில் இருந்து குறிப்பிடத்தக்க இணைகள் சுட்டிக்காட்டப்படுகிறது."

அவருடைய மதமாற்றத்திற்குப் பின்னான பதினோரு ஆண்டுகள், அதாவது அவர் மரிக்கும் வரையிலும், ஜான் தான் ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசத்திற்கு முழுமையாகத் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார் என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். ஜான் ஆற்றிய சில

சொற்பொழிவு அரங்குகள் நான்காயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட இருக்கைகளைக் கொண்டிருந்தன என்றும், அவை அனைத்தும் நிரம்பிவிடும் என்றும், இருக்கைகள் காலியாக இல்லாததால் நூற்றுக்கணக்கானோர் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் நான் அறிந்துகொண்டேன். ஜான் மற்றும் மார்ட்டன் வேதாகம அறிஞர்களாக இருந்தனர். வேதாகமம் மற்றும் கிரேட் பிரமிட் பற்றிப் பல விரிவுரைகளை வழங்கியிருந்தனர் மற்றும் அதனைக் குறித்த அநேகப் புத்தகங்களையும் எழுதியுள்ளனர்.

நான் படித்த புத்தகங்கள் மற்றும் கேட்ட எல்லாவற்றில் இருந்தும் காணாமல்போன என் ஐந்து குடும்ப உறுப்பினர்கள், கர்த்தருடைய கிரீடத்தில் வைரங்கள் ஆனார்கள் என்பதை உணர்ந்துகொண்டேன். மேலும் அவர்கள் கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பராக "சீயோனில் பிறந்தார்கள்."

"கிறிஸ்துவின் மணவாட்டிக்கான" இந்தத் தெரிந்தெடுப்பு இயேசுவின் முதல் வருகையிலிருந்து நடந்துவருகிறது. "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்." ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரு சிறிய எண்ணிக்கையிலான "ஜெயம் கொண்டவர்கள்" தங்களது எஜமானை நேசித்தவர்கள், அவருடைய சிங்காசனத்தில் பங்குகொள்வதன் மூலம் வெகுமதி பெறுவதற்காக மறைவான தகுதிகளைப் பூர்த்திசெய்திருக்கிறார்கள். "அவர்கள் உயிர்த்தெழுந்து, அவரோடுகூட ஆயிரம் ஆண்டுகள் அரசாளுவார்கள்."

* * *

**சகோதரர் யூஜின் பர்ன்ஸ்** அவர்கள், அவரது வாழ்நாள் முழுவதிலும் கதைகள் மீது, அதிலும் விசேஷமாக வேதாகமத்தின் கதைகள் மீது ஆர்வம் கொண்டவராக இருந்தவர் ஆவார். மனுஷர் எல்லாருடைய வாழ்க்கையின் கதையானது கல்லறையோடு முடிந்துவிடுகின்றது. ஆனால் மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றின வாக்குத்தத்தமானது இதை மாற்றப்போகின்றது. மறுஜென்ம காலத்தில், அதாவது மரித்தோரின் உயிர்த்தெழுதலின் காலங்களில், எல்லா மனுஷருடைய வாழ்க்கைக் கதையும் மீண்டும் தொடரப்போகின்றது என்பதை நினைக்கும்போதே மேனி சிலிர்க்கின்றது. இந்தப் புத்தகத்தில், வாழ்க்கையை முற்றிலும் புதியதொரு **பரிணாமத்தில்** பார்ப்பதற்கான காட்சித்திரையை ஆசிரியர் திறக்கிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதலானது, **மீண்டும் ஜீவனோடு** வருபவர்களுக்கு வாழ்க்கையை மீண்டும் வாழ்வதற்கான இரண்டாவது மேடையை அமைத்துக்கொடுக்கிறது.



**நீங்கள் உட்பட, ஒவ்வொரு மனுஷனும், சீரான பூமியில் காணப்படும் பரதீசில் மீண்டும் வாழ்வீர்கள்.**

